# தினபூமி

1-1-97 To 31-3-97

J.L
V211m N70TA
N97
16439

# தமிழரசு

1-1-1997 ரூ.3







# இந்த இதழில் ...


☆ பூவைப் போலப் போற்றுவோம் ........ 2
- முதல்வர் உரை

☆ தொழில் வளம் ஓங்கிவளரும் தமிழ்நாடு! ........ 9
- முதல்வர் உரை

☆ புற்றுநோய் ........ 13
- மருத்துவக் கட்டுரை

☆ குழந்தைத் தொழிலாளி முறையை முடிவுக்குக் கொண்டுவருவோம் ........ 20

☆ 1997 ஆம் ஆண்டு நாட்காட்டி ........ 25

☆ எங்கள் ஊர்ப் பிரச்சினை ........ 31

☆ மழைக்கோலம் ........ 37

☆ அறிவியல் துளிகள் ........ 42

☆ உங்களுக்குத் தெரியுமா ?
-மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ........ 45

☆ ஆசிரியர் மடல் ........ 52





## தமிழரசு

திருவள்ளுவராண்டு: 2027
மார்கழித் திங்கள் : 18
மலர்: 27 இதழ்: 13
1.1.1997
விலை: ரூ. 3






முதல் பரிசு பெற்ற கவிதை:

# இன்றுபோல் என்றும் இரும்

-கவிஞர் கே. குப்பமுத்து

வாய்வெடித்த மண்ணில் உன்
வரவைக் கண்ட போது ...
என்னுள் ஒரு சந்தேகம்
எது உண்மை? கடவுளா- மழையா?

216439

வேண்டும்போது வருவதும் இல்லை
வேண்டாமென்றால் போவதும் இல்லை!
உருவமில்லா நீ இல்லையேல் இந்த
உருளும் உருண்டையில் ஒன்றுமே இல்லை!

நீபோடும் பிச்சையில் நிதம்வாழும் மனிதன்
பணத்துக்கும் புகழுக்கும் அடித்துக்கொள்வதேன்?
நிறமில்லா உன்னிடம் வரம்ஒன்று கேட்பேன்.
உன் வயதென்ன? எனக்கு மட்டும் சொல்!

புயலாய் வரும்போது விரும்பவும் முடியவில்லை
வெயிலாய்க் காயும்போது வெறுக்கவும் வழியில்லை;
மழையே! நீஎன்ன கடவுளா? இல்லை!
எதுவாயினும்- "இன்று போல் என்றும் இரும்"!

# "நூலைப் போலப் போற்றுவோம்!"

## முதல்வர் கலைஞர் கருத்துரை

**சி**ந்தனைச் சிற்பி மா. சிங்கார வேலர் அவர்களின் பெயரில் சென்னை ராஜாஜி சாலையில் அமைந்துள்ள சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத் திறப்பு விழா **11.12.1996** அன்று நடைபெற்றது

வருவாய்த்துறையின் செயலாளர் திரு பி.எஸ். பாண்டியன்,இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார். பொதுப் பணித்துறையின் தலைமைப் பொறியாளர் திரு என். தங்க வேலு கட்டட அறிக்கை படித்தார்.

விழாவிற்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் தலைமையேற்று உரையாற்றினர்.

அடுத்து, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சிங்கார வேலர் மாளிகையைத் திறந்து வைத்தார்.

விழாவில் சட்டமன்ற உறுப் பினர் திரு இரா. மதிவாணன், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு மு.க. ஸ்டாலின், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சற்குணபாண்டியன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன், மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் திரு என்.வி.என். சோமு, மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் ஆகியோர் உரையாற்றினர்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தார். சட்டமன்ற உறுப் பினர் திரு இரா. மதிவாணன் அவர்கள் முதல்வருக்கு நினைவுப் பரிசு வழங்கினார். நிறைவாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரையாற்றி, நலிந்தோர்க்கு அரசு நலப்பணித் திட்டத்தின்கீழ் உதவிகள் வழங் கினார்.

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சாந்தினி கபூர், இ.ஆ.ப., நன்றி கூறினார்.

இவ்விழாவில் மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு. பரிதி இளம்வழுதி மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

### மாண்புமிகு முதல்வர் உரை

விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், ஆற்றிய உரையின் சுருக்கம் பின் வருமாறு:

"இன்று திறந்துவைக்கப்படும்



JL
V211,m N70TA. N98

மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகமான இந்த சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மாளிகையில், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சார்புக் கருவூலம், முத்திரைத்தாள் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம், முன்னாள் படைவீரர் துணை இயக்குநர் அலுவலகம், சம்பளப் பட்டியல் வடக்குப் பகுதி அலுவலகம், மாவட்டக் கருவூலம், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அலுவலகம், தமிழ்நாடு விற்பனை வரி சிறப்பு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தினுடைய அலுவலகம் ஆகிய இத்தனை அலுவலகங்களும் இந்தக் கட்டடத்திலேயே இயங்கவிருக்கின்றன.

சென்னை மாவட்டம் என்ற ஒன்று உருவானபோது, மாவட்டத்தினுடைய மக்கள்தொகை அப்பொழுது **10** இலட்சம் பேர்தான். இன்றைக்கு **55** இலட்சம் பேர் என்பதை மறந்துவிடக்கூடாது. இந்த **55** இலட்சம் பேருக்குப் பணியாற்ற வேண்டிய கடமை மாநகராட்சிக்குப் பொறுப்பேற்றிருக்கிற மேயருக்கும், பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும் இருப்பதைப் போல, இந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே இருக்கின்ற அலுவலாளர்களுக்கும், ஆட்சியருக்கும் இருக்கும் என்பதை மறந்துவிடாமல் பணியாற்ற வேண்டும்.

### 'யோக்கியர்' பெயர் தாங்கிய கட்டடம்

சிங்காரவேலர் மறைந்த பொழுது மூதறிஞர் ராஜாஜி "ஒரு யோக்கியனை இழந்துவிட்டோம்" என்று சொன்னதாக இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆகவே இந்தக் கட்டடத்திற்கு நாம் வைத்திருக்கின்ற பெயர் சிங்காரவேலருடைய பெயர். ஒரு யோக்கியருடைய பெயர் வைத்திருக்கிறோம். இந்தக் கட்டடத்திலே இருந்து ஆற்றப்படுகின்ற பணிகளெல்லாம் யோக்கியமாக நடைபெறவேண்டும் என்கிற அந்த நோக்கத்தோடுதான் இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சிங்காரவேலர் மீது எனக்குள்ள பற்று – பாசத்தின் காரணமாக, இராமநாதபுரத்திலே உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக மாளிகைக்கும் "சிங்காரவேலர் மாளிகை" என்றேதான் பெயர் சூட்டியிருக்கிறேன்.

இன்றைக்கும் இந்த மாளிகைக்கு சிங்கார வேலர் மாளிகை என்று பெயர் சூட்டியிருக்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், மீனவர்களுக்காகக் குடியிருப்புகள் கட்டுவது என்று இந்த ஆண்டு திட்டமிட்டு அந்தக் குடியிருப்புகள் கட்டத் தொடங்கப்பட்டுள்ளது. அந்தக் குடியிருப்புகளுக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று மீனவர் நலத்துறையின் சார்பாக என்னைக் கேட்டபொழுது, "சிங்காரவேலர் மீனவர் குடியிருப்பு" என்று பெயர் வைக்கவேண்டும் என்று நான் கூறினேன். அவ்வாறே பெயர் வைக்கப்பட்டு – அந்தக் குடியிருப்புத் துறையும் இயங்கிக் கொண்டிருப்பதை உங்களுக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சிங்காரவேலர் இந்தியாவிலேயே முதன்முதலாக மே தினத்தைக் கொண்டாடிய தொழிலாளர்களின் தோழர். காங்கிரஸ் இயக்கத்திலே இருந்தார். பின்னர் சுயமரியாதை இயக்கத்திலே தன்னை இணைத்துக் கொண்டார். தந்தை பெரியாரோடு இணைந்து சமத்துவ சமதர்மக் கொள்கைக்காகச் சமர் புரிந்தார். சலியாது பாடுபட்டார்.

### சிங்காரவேலருக்குச் சிலை

அத்தகைய மேதைக்குத் தஞ்சை மாவட்டத்திலே ஒரு சிலை அமைக்கப்பட்டிருக்கிறது. அதைப் போல இந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு முன்புறத்திலும் சிங்கார வேலருக்கு ஒரு சிலை அமைக்கப்படும்.

அரசு அதிகாரிகள் இந்த அலுவலகத்திலே இருந்து சிறந்த முறையிலே பணியாற்ற வேண்டும் என்று நான் தொடக்கத்திலே கேட்டுக்கொண்டேன். இன்றைக்கு அரசு அதிகாரிகளிடத்திலே ஒரு வகையான சந்தேகம் கலந்த – அல்லது வேண்டுமென்றே சந்தேகம் கொள்ளவேண்டும் என்று தூண்டி விடப்படுகின்ற ஒரு அச்ச உணர்வு பரவி இருப்பதை நான் உணர்கின்றேன். ஏனென்றால் கடந்த காலத்திலே நடைபெற்ற தவறுகளுக்குத் துணை போன அதிகாரிகள் இன்றைக்குப் பிடிக்கப்படுகிறார்கள், நடவடிக்கைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இதை எல்லாம் பார்க்கும்போது தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் அதிகாரிகள் நமக்கும் இப்படி ஏற்படுமோ என்று அஞ்சத் தேவையில்லை. யார் தவறு செய்தார்களோ, அவர்களுக்குத்தான், அந்த நிலையேதவிர, தவறு செய்யாமல் நல்லமுறையிலே மக்களுக்காகப் பாடுபடுகின்ற எந்த அதிகாரியையும் நாங்கள் பூவைப்போல வைத்துப் போற்றுவோம்.

எனவே, அதிகாரிகள் வீணாக சஞ்சலத்திற்கு ஆளாக வேண்டாம். சபலத்திற்கு ஆளான அதிகாரிகள் தான் இன்றைக்கு சஞ்சலத்திற்கு ஆளாக வேண்டுமேயல்லாமல் வேறு எந்த அதிகாரிகளும் சஞ்சலத்திற்கு ஆளாகத் தேவையில்லை."

– இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.

**-பி.எல்.ஆர்.**



## செய்திச் சரம்

### கன்னியாகுமரியில் - திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி விரைவுபடுத்துதல்

கன்னியாகுமரியில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி 1990இல் தொடங்கப்பட்டது. இப்பணியை நிறைவேற்றி முடிக்கும் பொறுப்பு தமிழ்நாடு அரசின் கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

சிலை வடிக்கும் சிற்பி திரு.வை.கணபதி ஸ்தபதிக்கு அனுமதிக்கப்பட்ட தொகையை உரிய நேரத்தில் வழங்காமையால், சிலை வடிக்கும் பணி 01.03.95 முதல் அறவே நடைபெறவில்லை.

இப்பணியை விரைவுபடுத்துவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உடனடியாக ரூ.15 இலட்சத்தை அனுமதித்து ஆணையிட்டுள்ளார்.

### தூத்துக்குடி சிப்காட் தொழில் மையம்

தொழில் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்ட இந்த அரசு தமிழகத்தில் புதிதாகப் பல தொழில் பேட்டைகளை ஏற்படுத்தியும் மாவட்டத்தின் பல பகுதிகளில் செயல்பட்டுவரும் தொழில் மையங்களை விரிவாக்கியும் வருகின்றது. அந்த அடிப்படையில், தூத்துக்குடி அருகாமையில் அமைந்துள்ள சிப்காட் தொழில் மையத்தை விரிவாக்கம் செய்திட ரூ.35 கோடி செலவில், சுமார் 650 ஹெக்டேர் நிலங்களைக் கையகப்படுத்த தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

### காவல்துறையை நவீனப்படுத்த ரூ.1.97 கோடி ஒதுக்கீடு

தமிழகக் காவல்துறையை நவீனப் படுத்தும் வகையில் ரூ.1.97 கோடி செலவில், வாகனங்கள், இலகுரக ஆயுதங்கள், போக்குவரத்து மற்றும் கூட்டங்களைக் கட்டுப் படுத்தத் தேவையான கருவிகள் மற்றும் கணிப்பொறிகள் வாங்கிட அனுமதித்து தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

### அறிவியல் மற்றும் பொறியியல் நூல்களை தமிழில் வெளியிட ஆணை

தமிழகத்திலுள்ள பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவ, மாணவியர் தங்கள் படிப்பினைத் தாய்மொழித் தமிழிலேயே பயில வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு பட்டப்படிப்புகளுக்கும் மற்றும் பட்டமேற்படிப்பிற்கும் பயனாகும் வகையில் அறிவியல் மற்றும் பொறியியல் துறைகளின் நூல்களைத் தமிழில் புத்தகமாய் வெளியிட ரூ.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

### 'கலாரத்னா' விருது !

கர்நாடக இசை மேதை டாக்டர் எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கு ஆர்.ஆர். சபையின் 4வது ஆண்டு விழாவில் தங்கப்பதக்கம், பாராட்டுப்பத்திரம், ரூ.25,000 ரொக்கம் ஆகியவை கொண்ட 'கலாரத்னா' விருது வழங்கப்பட்டது. அந்தத் தொகையை அடையாறில் உள்ள வி.எச்.எஸ். மருத்துவமனைக்கு நன்கொடையாக அளித்துவிட்டார் அம்மையார்.

## முதல்வரின் வெள்ள நிவாரண நிதி

தமிழகப் புயல் வெள்ள நிதிக்காக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், தனது ஒரு மாத ஊதியத்தை (ரூ.5,000) வழங்கினார். மேலும் மாண்புமிகு அமைச்சர்கள் நாஞ்சில் திரு. சி. மனோகரன், திரு. தமிழ்க் குடிமகன், திரு. முல்லைவேந்தன் ஆகியோரும் மற்ற அமைச்சர் பெருமக்களும் தங்கள் ஒரு மாத ஊதியமான ஐந்தாயிரம் ரூபாயைத் தமிழக வெள்ள நிவாரண நிதிக்காக மாண்புமிகு முதலமைச்சரிடம் வழங்கினார்கள்.

மேலும் சட்டப் பேரவை உறுப்பினர்கள் சிலரும் தங்களுடைய ஒரு மாத ஊதியத்தை வெள்ள நிவாரண நிதிக்காக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் வழங்கினார்கள்.

## தமிழ்த் தட்டச்சுப் பொறிகள்!

தமிழ் ஆட்சிமொழித் திட்டத்தை அரசு அலுவலகங்களில் செம்மையாகவும், முழுமையாகவும் செயற்படுத்த தலைமைச் செயலகத்திலுள்ள ஒவ்வொரு துறைகளின் பயன்பாட்டிற்காக ரூபாய் 50 இலட்சம் செலவில் 500 தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் வாங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார். அதற்கேற்ப 32 மின்னணு தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் உட்பட 500 தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் வாங்கப்பட்டுள்ளன.

## ராகிங் - தடை

'தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிலையங்களில் 'ராகிங்' செய்வோருக்கு இரண்டாண்டு கடுங்காவல் தண்டனையும், ரூ.10,000 வரை அபராதமும் விதிக்கப்படும். இதற்கு ஆளான மாணாக்கர்கள் கல்விக் கூடத்திலிருந்து நீக்கப்படுவர். வேறு எந்தக் கல்வி நிலையத்திலும் சேர்க்கப்படவும் மாட்டார்கள் என்கிற ஆணையை, மேதகு தமிழக ஆளுநர் திரு கிருஷ்ணகாந்த் அவர்கள் பிறப்பித்திருக்கிறார்.

## முதல்வர் கலைஞர் தலைமையில் விடுதலை நாள் பொன்விழாக் குழு

முதல்வர் கலைஞர் தலைமையில் விடுதலை நாள் பொன் விழாக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் விவரம்:

தலைவர்: முதல்வர் கலைஞர், உறுப்பினர்கள்: செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ.முல்லைவேந்தன், திரு. சி. சுப்ரமணியம், திரு. ஜி.கே. மூப்பனார், திரு. டி.செங்கல்வராயன், திரு. கிருஷ்ணசாமிபாரதி, திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி, திரு. கே.டி.கே. தங்கமணி, திரு. சோ. பாலகிருஷ்ணன் (எதிர்க் கட்சித் தலைவர்), திரு. மணவை முஸ்தபா, திரு. இளைய பெருமாள், ஆசிரியர் திரு.சாவி. திரு.கே.பாலச்சந்தர் (இயக்குநர்), டாக்டர் எம். அனந்தகிருஷ்ணன், திருமதி சரோஜினிவரதப்பன், திரு. செ.குப்புசாமி, திரு. ஏ.வி.எம். சரவணன் மற்றும் தலைமைச் செயலாளர், செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலர்.



## கால்நடை இனவிருத்திக்கு ரூ.15 இலட்சம் செலவு

தமிழகத்தில், தொலைதூர கிராமங்களிலும், மலைப்பிரதேசங்களிலும் உள்ள கால்நடைகளுக்கு இனவிருத்தி வசதி கிடைக்கும் வகையில் தரமான 300 கலப்பின பொலிகாளைகளை வாங்கி வழங்குவற்கு நடப்பு ஆண்டில் ரூ.15 இலட்சம் செலவிட தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்.

## தமிழகத்தில் உள்ள 55 அரசு பல்தொழிற் பயிற்சிப் பயிலகங்கள் மேம்பாட்டிற்காக ரூ. 91.60 இலட்சம்

தமிழகத்திலுள்ள 55 அரசு பல்தொழிற் பயிற்சி பயிலகங்களை மேம்படுத்தி, படிக்கும் மாணவ மாணவியர் பலன் பெறும் வகையில் செயல்முறை பயிற்சிக் கருவிகள் மற்றும் புதிய புத்தகங்களை வாங்கிட ரூ.70 இலட்சமும், அத்தொழிற்பயிற்சிப் பயிலகங்களில் பயிற்சி அளிக்கும் சாதனங்களுக்குத் தேவையான பொருட்கள் வாங்கிட ரூ.21.60 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.91.60 இலட்சம் அனுமதித்து தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

## ம. சிங்காரவேலர் நினைவு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு 4000 இலவச வீடுகள்

1996-97-ஆம் ஆண்டில் மீனவர்களுக்கு 4000 இலவச வீடுகள் ம. சிங்காரவேலர் நினைவு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் தமிழக அரசு வழங்கும் என்று முதல்வர் கலைஞர் அறிவித்துள்ளார். ஒவ்வொரு வீட்டின் மதிப்பும் ரூ.32000/- ஆகும். தமிழகத்தில் 13 மாவட்டக் கடலோரப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. அவ்வீடுகள் கட்டுவதற்கு ரூ.12.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்து முதல்வர் கலைஞர் ஆணையிட்டுள்ளார். மேலும் அவ்வீடுகள் அனைத்தும் நடப்பு நிதியாண்டில் கட்டிமுடிக்கப்படும்.

## தமிழகத்தில் இரண்டு சிறப்புத் திட்டங்களுக்கு மத்திய அரசு நிதியுதவி அளித்துள்ளது.

பெரியார் மாவட்டத்திலுள்ள சாலியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் செயல்பட இருக்கும் திட்டத்திற்கு ரூ. 14 கோடியும், திருநெல்வேலி மாவட்டம் குருவிக்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் அமல்படுத்தப்படவிருக்கும் திட்டத்திற்கு ரூ.10.40 இலட்சத்தையும் மத்திய அரசு நிதி ஒதுக்கியுள்ளது. இத்திட்டங்கள் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் செய்து முடிக்கப்படும்.

## காவிரி நடுவர் மன்றத்துக்குப் புதிய நீதிபதி நியமனம்

காவிரி நடுவர் மன்றத் தலைவராக இருந்த சித்ததோஷ் முகர்ஜி ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, அப்பதவிக்கு யாருமே நியமிக்கப்படாத நிலை; தற்போது, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு காவிரி நடுவர் மன்றத்துக்குப் புதிய தலைவராக நீதிபதி திரு.என்.பி.சிங் அவர்களை நியமித்துள்ளது.

**FINANCE (PENSION) DEPARTMENT**

**G.O. No. 488, Dated 12th August 1996**

**(Thadhu, Aadi 28, Thiruvalluvar Aandu 2027)**

RETIREMENT BENEFITS - Encashment of leave at the time of retirement - Encashment of leave on private affairs and payment of full leave salary for the period of earned leave exceeding 180 days - Orders - Issued.

**READ** - the following papers:-

1. G.O. Ms. No.999, Personnel and Administrative Reforms Department, dated 31.10.1987.
2. G.O. Ms. No. 545, Personnel and Administrative Reforms Department, dated 30.9.1989.

**ORDER:**

At present the entire earned leave subject to a maximum of 240 days at the credit of the employees shall be entitled for encashment at the time of retirement and the leave salary for the period of earned leave upto 180 days comprises of Dearness Allowance, House Rent Allowance, City Compensatory Allowance, etc., as admissible under the rules and for the period of earned leave exceeding 180 days, the leave salary comprises of Pay and Dearness Allowance only. Further, at present, the half pay leave on private affairs at the credit of the retiring employees shall lapse.

2. The Government have decided to accept the long pending demand of various associations of employees to surrender half pay leave on private affairs at the time of retirement and also to grant full leave salary for encashment of the entire earned leave at credit of retiring employees. Accordingly, Government pass the following orders:-

(a) At the time of retirement, 50% of the leave on private affairs standing to the credit of the employees, upto a maximum of 90 days, be entitled for full leave salary. The Head of Office shall draw the leave salary on encashment of leave on private affairs, as in the case of encashment of earned leave; and

(b) Full leave salary including Dearness Allowance and all other allowances normally admissible while going on leave during service be allowed for the entire period of earned leave encashment at the time of retirement.

3. The above orders shall apply to All India Service Officers serving under the State Government.

4. These orders shall also apply to the following categories of employees:-

a) those retiring on medical invalidation;
b) those retrenched from Government service;
c) those permitted to retire from service without prejudice to the disciplinary proceedings pending against them;
d) in the case of death of an employee while in service
e) to those going on voluntary retirement; and
f) those sent on compulsory retirement.

5. These orders shall take effect from 1st July 1996.

6. Necessary amendments to Tamil Nadu Leave Rules, 1933 will issue separately from Personnel and Administrative Reforms Department.

(BY ORDER OF THE GOVERNOR)

S. GURUMURTHI,
SECRETARY TO GOVERNMENT



# தொழில் வளம் பெருகும் தமிழ்நாடு!

## முதலமைச்சர் கலைஞர் பெருமிதம்

"கடந்த ஆறு மாத காலத்தில் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு உருவாகியுள்ள தொழிற்சாலைகளை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

550 கோடி ரூபாய் முதலீட்டில் இங்கிலாந்து நாட்டின் "பில்கிங்டன்" நிறுவனம் ஏற்படுத்துகின்ற மிதக்கும் கண்ணாடித் தொழிற்சாலை. அதிலே நமது டிட்கோவிற்கு 11 சதவிகிதம் பங்கு உண்டு.

30 கோடி ரூபாய் முதலீட்டில்- மறைமலை நகரில் ஜப்பானைச் சேர்ந்த "பியூஜி குரா" நிறுவனம் ஏற்படுத்தும் பைபர் கேபிள் தயாரிக்கும் தொழிற்சாலை.

350 கோடி ரூபாய் முதலீட்டில் கொரியாவைச் சேர்ந்த "கும்ஹா" டயர் கம்பெனி ஏற்படுத்தும் ரீடயல் டயர் தொழிற்சாலை.

38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டிட்கோவை அசோசியேட் முகவராகக் கொண்டு பொள்ளாச்சியில் கல்கத்தாவைச் சேர்ந்த "ராய் சுரானா" நிறுவனம் தொடங்கும் தேங்காயை மூலப்பொருளாகக் கொண்ட தொழிற்சாலை.

மேலும், தூத்துக்குடிக்கு அருகில் மீளவிட்டான், தெற்கு வீரபாண்டியபுரம் ஆகிய கிராமங்களில் "சிப்காட்" தொழில் மைய விரிவாக்கத் திட்டத்திற்கு 35 கோடி ரூபாய் மதிப்புடைய 650 எக்டேர் நிலத்தைக் கையகப்படுத்த உரிய ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

அண்ணா மாவட்டத்தில், கீழ்க்கரணை கிராமத்தில் ஆப்டிகல் பைபர் டெலிகாம் கேபிள் திட்டத்திற்கு, டிட்கோவிற்கு முன் நுழைவு வழங்க, அரசு பரிசீலித்து வருகிறது.

## வெளிநாட்டு முதலீடு: நன்மைகள்

"இன்றைய உலகின் நிலையில் ஹென்ரி போர்டின் 1903-ஆம் ஆண்டின் நிலையை அடைவது இயலாது. எனவே நாம் 1996-ஆம் ஆண்டின் நிலையை அடைய தாவிக் குதிக்கவேண்டும். இது நவீன உலகத்தைப் புரிந்து கொள்வதற்கு நமக்கு மிகவும் முக்கியமானது. அதனால்தான் நம்முடைய முயற்சிகளை அதிகரிக்கும்போது வெளிநாட்டு முதலீட்டுடன் நாம் நிதி வளங்களை விரும்புகிறோம். அது இந்தியாவின் வளர்ச்சிக்கு முக்கியத் தேவையாகிவிட்டது. ஏனெனில் வெளிநாட்டு நேரடி முதலீடு நமக்குத்தேவையான மூலதனத்தோடு நவீன தொழில்நுட்பத்தையும், நவீன அமைப்பையும், சந்தை அனுபவத்தையும், திறல்மகளின் வளர்ச்சியையும் கொண்டுவருகிறது.

இந்த நேரத்தில் நாம் ஹூண்டாய் மோட்டார் இந்திய நிறுவனத்தைப் பார்க்கவேண்டும். அவர்கள் எந்தவிதமான சி.கே.டி, எஸ்.கே.டி. இறக்குமதிகளும் இல்லாமல், கார்களை உற்பத்தி செய்யவிருக்கின்றனர். அவர்களுடைய உள்நாட்டுப் பொருட்களின் விகிதம் முதலாண்டு உற்பத்தியின்போது 70 சதவிகிதமாக உள்ளது. 3 அல்லது 4 ஆண்டுகளில் அது 95 சதவிகிதமாக உயரவிருக்கிறது. அவர்கள் 2001 ஆம் ஆண்டில் 100 சதவிகிதம் இந்தியப் பொருட்களைக் கொண்டே காரைத் தயாரிக்கவிருக்கின்றனர் என்பதை அறிய மகிழ்ச்சியாக உள்ளது. அது கொரிய இந்திய வர்த்தக ஒத்துழைப்பின் அடையாளமாக இருக்கும்.

சென்னை பெங்களூர் மங்களூர் நெடுஞ்சாலையை 4 வழிப்பாதையாக மாற்ற ஆசிய வளர்ச்சி வங்கியை அணுகியுள்ளோம். இத்திட்டங்கள் நம்முடைய போக்குவரத்து அமைப்புக்கு உத்வேகத்தை அளிக்கும்.

-திரு. முரசொலி மாறன்

(மாண்புமிகு மத்தியத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய கார் தொழிற்சாலை விழாத் தலைமை உரையிலிருந்து)



**அரசின் அணுகுமுறை**

கடந்த ஆறு மாதத்தில் கழக அரசின் அணுகு முறையைக் கேள்விப்பட்டு ஏராளமான தொழில் முனைவோர் தமிழகத்திற்கு வந்தவண்ணமுள்ளனர்.

இப்பொழுது புகழ்வாய்ந்த வெளிநாட்டு நிறுவனங்களெல்லாம் வந்து தமிழக அரசிடம் பேசிக் கொண்டிருக்கின்றன. நிலக்கரி, இரும்புத்தாது பற்றாக்குறை என்பதால் மோட்டார் தொழிற்சாலைகள் மின்னணு தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் தொடங்க நல்ல வாய்ப்பு உள்ளது. எனவே, மோட்டார் வாகன உற்பத்தித் தொழிலை முதல் கட்டமாக ஊக்குவிக்கப்படவேண்டிய தொழிலாக ஆயிரத்து ஐநூறு கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்யும் தொழில்களை 'சூப்பர் மெகா திட்டம்' எனப் பாகுபாடு செய்து பல்வேறு சலுகைகள் அளிக்கப்படுகின்றன. அந்த அடிப்படையில் ஹுண்டாய் நிறுவனத்திற்குச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. சூப்பர் மெகா திட்டத்திற்கான சலுகைகள் விற்பனை வரியைத் தள்ளிப் போடுதல், வரிவிலக்கு அளித்தல், மின் கட்டணச் சலுகை, முதலீட்டு மானியம் போன்றவைகளாகும். மேலும் அதிக முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் சூப்பர் மெகா திட்டத்திற்காக வரையறுக்கப்பட்ட முதலீட்டு வரம்பினை அண்மையில் நடைபெற்ற தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, ஆயிரத்து ஐநூறு கோடி ரூபாயிலிருந்து ஆயிரம் கோடியாகக் குறைக்கவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திற்கு மேலும் வரவிருக்கின்ற மோட்டார் தொழிற்சாலைகள் நூற்றி எழுபத்தி ஐந்து கோடி ரூபாய் முதலீட்டில் 'நியூ ஹாலண்ட்' என்ற நிறுவனம் டிராக்டர் தொழிற்சாலை நிறுவ முன்வந்துள்ளது. இந்துஸ்தான் மோட்டார் நிறுவனம் 400 கோடி ரூபாய் முதலீட்டில் கார் தொழிற்சாலை அமைக்க இருக்கிறது. 'அசோக் லேலண்ட்' நிறுவனம் ஆயிரத்து எண்ணூறு கோடி ரூபாய் முதலீட்டில் டிரக் தொழிற்சாலை ஒன்றை நிறுவ முன் வந்துள்ளது. 'ஹுண்டாய் மோட்டார் கார் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் கார் உற்பத்தி செய்வதாக அறிவித்துள்ளது. அது எதிர்காலத்தில் இரண்டு இலட்சமாக அதிகரிக்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளது. தென் கொரியாவில் கார் உற்பத்தியில் முதன்மையான இடத்தை வகிப்பது இந்த ஹுண்டாய் நிறுவனமாகும்.

**தன்னம்பிக்கை**

மாபெரும் செயல்களை நிறை
வேற்றிட முதலில் தேவைப்படுவது
தன்னம்பிக்கையே.

**-சாமுவேல் ஜான்சன்**





# ஹுண்டாய் எலக்ட்ரானிக்ஸ்

**தெ**ன்கொரியாவின் திருவாளர்கள் ஹுண்டாய் எலக்ட்ரானிக்ஸ் இன்டஸ்ட்ரீஸ் கம்பெனி லிமிடெட் 1983-ஆம் ஆண்டு நிறுவப்பெற்றது. தற்போதைய தொழிலாளர் திறன் சுமார் 20,000 மற்றும் முதலீடு சுமார் 29.8 கோடி அமெரிக்க டாலர்கள் உள்ள இந்த நிறுவனம் இந்த ஆண்டு உற்பத்தி அளவு சுமார் 600 கோடி அமெரிக்க டாலர் அடைவதற்கான விரிவாக்க திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. மற்றும் தொடர்ந்து அதிநவீன தொழில், துறையான செமிகண்டக்டர்ஸ், டிஎஃப்டி, எல்சிடி, மல்டிமீடியா மற்றும் தொலைத்தொடர்பு ஆகியவற்றிலும் முன்னணி வகிக்கின்றது.

அவர்களின் தொழில் முதலீடு அமையச்செய்ய, வசதி செய்யப்படுகிறது. அரசு நிறுவனமான தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) இந்த முயற்சியில் வெற்றிகண்டு பன்னாட்டுப் புகழ் பெற்ற நிறுவனமான ஹுண்டாய் எலக்ட்ரானிக்ஸ் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்துடன் கூட்டாக உற்பத்தித் தொழில் நிறுவ முடிவுசெய்யப்பட்டுள்ளது.

தொடங்கப்படவிருக்கும் இந்தக் கூட்டு நிறுவனம் முதற்கட்டமாக விற்பனை மற்றும் விற்பனைக்குப்பின் வேண்டிய பழுது நீக்கப்பணிகளை மேற்கொள்ளும்.

**மிகப்பெரும் தொழிற்சாலை**

தமிழ்நாட்டில் இப்போது தொடங்கப்படுகின்ற ஹுண்டாய் தொழிற்சாலைதான், கொரியாவிற்கு வெளியில் தொடங்கப்படும் மிகப்பெரிய தொழிற்சாலையாகும். முதல் கட்டத்திலே இந்தத் தொழிற்சாலை வரும் ஐந்தாண்டுகளில் இரண்டாயிரத்து நானூற்றி ஐம்பது கோடி ரூபாய் முதலீடு செய்ய அனுமதி பெற்றுள்ளது.

அடுத்த ஐந்தாண்டுகளில் விரிவாக்கத் திட்டத்திற்காக ஆயிரத்து நானூறு கோடி ரூபாய் செலவிட இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. ஆக பத்தாண்டுகளில் இந்த நிறுவனத்தின் மொத்த முதலீடு 1.1 மில்லியன் அமெரிக்க டாலராக இருக்கும். இந்தத் தொழிற்சாலை மூலம் இரண்டாயிரம் முதல் மூவாயிரம் பேருக்கு நேரடியாக வேலைவாய்ப்புக் கிடைக்கும். இருபதாயிரம் முதல் முப்பதாயிரம் பேருக்கு இது தொடர்பான வேலைவாய்ப்புகள் கிடைக்கும். இந்தப் பகுதி முழுவதும் செழிப்புள்ள பகுதியாக மாறுவதற்கு இன்று நடைபெறுகிற தொடக்க விழா வழிவகுக்கும்.

**அந்நியச் செலாவணியை உயர்த்தும்**

முதலாண்டு உற்பத்திக் காலத்தில் இத்தொழிற்சாலை 70 சதவிகித அளவிற்கு உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தும். 2001 ஆம் ஆண்டு அது 100 சதவிகிதமாக மாறும். 1999ல் நிறுவனத்தின் ஏற்றுமதி 54.1 மில்லியன் அமெரிக்க டாலராக இருக்கும். 2003ல், அது 267 மில்லியன் டாலராக உயரும். அந்நியச் செலாவணி கையிருப்பை இது கணிசமாக உயர்த்தும். இத்தொழிற்சாலைக்கு உதிரிபாகங்கள் (ஆன்சிலரி) வழங்க் சென்னையில் இந்த நிறுவனத்தைச் சேர்ந்த சுமார் 10 பெரிய நிறுவனங்கள் தொடங்கப்படவிருக்கின்றன. அதன் முதலீடு 370 கோடி ரூபாயாக இருக்கும். இந்தத் தொழிற்சாலைக்காகத் தேவைப்படும் 500 ஏக்கர் நிலத்தை, சுமார் 3 மாத காலத்திலே கையகப்படுத்திச் சாதனை புரிந்துள்ள தமிழக அரசு அதிகாரிகளை எல்லாம் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்".

**-10.12.1996 அன்று, ஸ்ரீபெரும்புதூர் அருகே உள்ள இருங்காட்டுக்கோட்டையில் தென் கொரியாவின் 'ஹுண்டாய் கார் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டிப் பேசியதிலிருந்து.**



இரண்டாம் பரிசு பெற்ற கவிதை

# இன்றுபோல் என்றும் இரும்!



எம்மதமும் சம்மதமாம் ஏற்றமிகு கொள்கையினை
நம்முயிரில் ஊன்றல் நலமன்றோ? - நம்முள்ளே
என்றும் பிரிவினைகள் எள்ளளவும் இன்றியே
இன்றுபோல் என்றும் இரும்!

வீட்டிற் கொருகுழந்தை வீட்டிற் கொருமரமாம்
நாட்டிற் குரிய நலத்திட்டம்! - நாட்டின்கண்
என்றும் ஒருமைப்பா டேற்றமுறத் தொண்டாற்றி
இன்றுபோல் என்றும் இரும்!

அன்புள்ளம் ஆன்ற அறிவுடைமை எவ்வுயிரும்
தன்னுயிர்போல் போற்றும் தனிக்கருணை இன்முகத்தோ(டு)
ஒன்றே குலமென்று உவந்தே உறவாடி
இன்றுபோல் என்றும் இரும்!

உள்ளத்தால் பொய்யா தொழுகி அறமோடு
வள்ளுவன் காட்டும் வழிநின்றே வெள்ளம்போல்
குன்றா மனிதநேயக் குன்றாய் மிகவிளங்கி
இன்றுபோல் என்றும் இரும்!

-மழலைக் கவிமணி அருவி



# புற்று நோய்

டாக்டர்
ஜெயந்தி ஸ்ரீநிவாஸ்

நண்டுப்பிடி என்றொரு வழக்கியல் நம்நாட்டில் உண்டு. எதிரி தப்பிவிடாமல் ஒருவரை முரட்டுத்தனமாகப் பிடிப்பதைக் குறிக்கும் தொடர்தான் அது.

அவ்வாறு, மனித உடலைத் தாக்கக்கூடிய ஆபத்தான நோய்களில் ஒருசில, அத்தகைய தன்மை உடையவையாக உள்ளன. அவற்றில் ஒன்றுதான் கான்சர் அல்லது புற்றுநோய் என்று குறிப்பிடப்படுகிறது.

அந்நிய மொழி ஒன்றில் Cancer என்பதற்கு நண்டு என்று பொருளாம், சொல்கிறார்கள், இதனால் ஆங்கில அகராதிகளும் அவ்வாறே குறிப்பிடுகின்றன. புற்றுநோயானது ஓரிடத்தில் உண்டாகி, அவ்வாறு தாக்கிய உறுப்புகளில் வேகமாகப் பரவுவதோடு, அவற்றைவிட்டு எளிதில் நீங்காது பிடித்திருக்கும். உடலில் வேறு பகுதிகளிலும் தலைதூக்கும். இதனால் தானோ என்னவோ, இந்நோய்க்கு அவ்வாறு பெயர் சூட்டப்பட்டது போலும்.

★ Cancer என்றால் என்ன?

மனித உடலின் மைய அமைப்பான, செல் (Cell) களில், தன்னியக்கத் (exogenous) தினாலோ(endogenous) அல்லது புற இயக்கங்களினாலோ உண்டாகும் மாறுதல்கள் அந்தச் செல்களை எண்ணிக்கையிலும் அளவிலும் கட்டுப்பாடற்று வளரச் செய்வதுதான் புற்றுநோய் எனப்படும். சின்னஞ்சிறு துகள்கள் சேர்ந்து, புற்றுகள் உண்டாவதைப் போல் உண்டாகக்கூடியது இந்தக் கொடிய நோய்.

இந்நோயானது மனித உடலின் தலை முதல் கால் வரையிலுள்ள எந்த உறுப்பினையும் தாக்கக்கூடிய தன்மையுள்ளது. ஏனென்றால், மனித செல்களில் ஏற்படுகின்ற கட்டுப்பாடற்ற வளர்ச்சி தானே அது.

★ எப்படி? யாரை?

Cancer is an enigma என்பார்கள். எப்படி, எதனால், யாரை எதற்கு-என்று ஒரு காரணமுமில்லாமல்-கோட்பாடற்றுத் தாக்கக்கூடிய தன்மை புற்றுநோய்க்கு உண்டு, இருப்பினும், உலகில் உள்ள மருத்துவர்களும் விஞ்ஞானிகளும் தங்கள் நீண்ட, கடின, ஆராய்ச்சிகளில் பயனாக ஒரு சில காரணங்களையும், தன்மைகளையும், கண்டு தெளிவுற்றிருக்கிறார்கள்.

புற்றுநோயானது யாரையும் தாக்கலாம், பிறந்த பச்சிளங்குழந்தை முதல், முதியோர் வரையிலும் இது தாக்கும்.

இருப்பினும், வயதுமுதிர்வடைய அடைய இதன் நிகழ்வு விகிதம் (Incidence Rate) அதிகரிக்கும்.

அதேபோல் குழந்தைப் பருவத்தில் (Paediatric age group) உள்ளவர்க்கு வரக்கூடியவை என்று சிலவகையான புற்றுநோய்கள் உண்டு. உதாரணமாக 1.Retinoblastoma 2. Nephroblastoma 3.Leukimia/Lymphoma ஆகியவை அவற்றுள் சில.

ஆண்-பெண் விகிதாசாரம் மட்டுமே மாறுபடக்கூடும்.

இதற்கு புவியியல் அமைப்பும்கூட (Geographical distribution) உண்டு.

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைய வல்லது புற்றுநோய் அது அமையக்கூடிய உறுப்புகளின் அடிப்படையில் அதற்குப் பெயர் விளக்கம் உண்டு.

மனித உடறுப்புகள் கருவிலேயே மூன்று விதமான தசை மண்டலங்களோடு உருவாக்கப் படுகிறது.(Ectoderm, Endoderm, Mesoderm)

வெளிதசை மண்டலம்_ (Ecto) உ.கு. தோல், நரம்புகள், நடு தசை மண்டலம் (Meso) -எலும்பு, ரத்தநாளங்கள் ரத்தணுக்கள் போன்றவை.

உட்தசை மண்டலம் (Endo) குடல், வயிறு, போன்றன. அவ்வாறு அது உருவாகும் மண்டலத்தைப் பொறுத்து அவைகள் Carcinoma Sarcoma. என்று இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. மேலும், இவற்றிலும் கூட உட்பிரிவுகளும் இருக்கின்றன.

**★ எப்படி ஏற்படுகிறது ?**

கட்டுப்பாடற்ற வளர்ச்சியினால் நிகழும் தசை மாற்றங்கள் இரு வகைப்படும்.

1. Benigm சாதாரண, பரவாத, சிகிச்சை முழுப்பலன் அளிக்கக்கூடியது.
2. Malignant ஆபத்து மிகுந்து, விரைவில் பரவக்கூடிய சிகிச்சைகள் ஓரளவே பயன்தரக் கூடியதாகும்.

கட்டுப்பாடற்ற அசுர வளர்ச்சிக்கு ஆளாகும் செல்கள், ஏன், எவ்வாறு எதனால் என்பது, ஓரளவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முன் சொன்னது போல், புற்றுநோய் இன்னும் புதிராகத்தான் உள்ளது. (Cancer is still an enigma) மேலே சொன்னது போல் இரு பெரும் காரணங்கள் உள்ளன.

★ Exogenous

புற நிகழ்வுகளினால் பாதிப்பு ஏற்படக்கூடியவை. இவற்றினை அறிந்து கொள்வது மிகவும் அவசியம். ஏனென்றால்,






## பேச்சுக்கலை

**பேச்சுக்கு** எட்டு அம்சங்கள் உண்டு. அவை: அ. உண்மை பேசுதல், ஆ. இனிமையாய்ப் பேசுதல், இ. நன்மையைப் பேசுதல், ஈ. சிந்தித்துப் பேசுதல், உ. நிதானமாகப் பேசுதல், ஊ. சமயோசிதமாகப் பேசுதல், எ. அன்பாகப் பேசுதல், ஏ. சபையறிந்து பேசுதல்.

-கிருபானந்த வாரியார்

அப்போதுதான் நோய் தடுக்கத்தக்க வழிமுறைகளை அறியமுடியும்.

**I. தோள்கள்ில் ஏற்படக்கூடிய புற்றுநோய்**
சூரியக் கதிர்களின் அதிக வீச்சின் பாதிப்பால் உண்டாகக்கூடியது. அதிர்ஷ்டவசமாக, இது நம் நாட்டினரை அதிகம் பாதிப்பதில்லை, வெள்ளையர்களையும் மேற்கத்தியர்களையும் தான் (Whiterace) அதிக அளவில் பாதிக்கிறது.

மேலும் தொடர்ந்த உரசல் (Friction) ஏற்படக்கூடிய இடங்களிலும், Caustic Substance தொடர்ந்து உபயோகிப்பதாலும், ஏற்கனவே உள்ள கட்டிகளிலும், புண்களையும் அலட்சியம் செய்வதாலும் சருமத்தில் உண்டாகலாம்.

**★ II. காது, மூக்கு, தொண்டை**

வாய், மற்றும் நாக்கில் உண்டாகக்கூடிய cheeck & tongue நம் நாட்டினை அதிக அளவில் பாதிக்கிறது. இதில் முக்கியமாக வாயில் புகையிலை அடைப்பதாலும், தற்போதைய புதுப்பழக்கமான பான் மசாலா, குட்கா போன்வற்றை மெல்லுவதாலும் ஏற்படக்கூடியது. கூரிய பற்கள் உராய்வதாலும் உண்டாகலாம்.

**★ III. நுரையீரல்**

Bronchogenic-ca

80% காரணமாக விளங்குவது புகை பிடிப்பது.

**★ IV. குடல் மற்றும் வயிறு கல்லீரல்**

உண்ணும் உணவுப் பழக்கங்களினால் ஏற்படக்கூடியவைகள் குறிப்பிடத்தக்கவை.

1. சிலவகைக் காளான்கள்
2. Smoked fish
3. Recycling of used oil
4. Low Fibre diet
5. மருந்து வகைகள் சில கல்லீரல் புற்றுநோய் உண்டாக்கும் தன்மை உடையவை.

**★ V. இரத்தம் மற்றும் சார்புடைய செல்கள்**

கதிர் வீச்சு பாதிப்பு முக்கிய காரணமாகும். இன்னும் Hiroshima இதற்கு கட்டியம் கூறுகிறதே.

**அறிகுறிகள்-சிகிச்சைகள்**

பலர் நினைப்பது போல, இந்நாட்களில் கான்சர் என்றவுடனே, பீதி அடைய வேண்டிய அவசியம் இல்லை. மருத்துவ மற்றும் விஞ்ஞான வளர்ச்சிக்கு நன்றி. நவீன அறுவை சிகிச்சை மற்றும் மருந்து மற்றும் கதிரியக்க இயந்திரங்களினால் எத்தனையோ உயிர்கள், இந்த நண்டுப்பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றன.

புற்றுநோய்க்கான சிகிச்சையை நாம் மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. அறுவை சிகிச்சை (CNCO Surgery)
2. மருத்துவச் சிகிச்சை (Medicaloncology.)
3. கதிரியக்கச் சிகிச்சை (Irradiation)

புற்றுநோய் (Cancer) சிகிச்சையின் தாரக மந்திரம்:

``Sooner the better" எவ்வளவு விரைவில் இந்நோய் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறதோ அவ்வளவு நல்லது.

ஏனென்றால் நோய் ஆழமாகவும் அங்கம் முழுதும் அகன்றும் பரவப் பரவ சிகிச்சை பயனளிக்காமலும், சுகப்படாமலும் போகும் வாய்ப்புண்டு. அது உயிருக்கே ஆபத்தாகவும் கூடும்.





216439

முளையில் கிள்ளுவதுதான் சாலச் சிறந்தது ஆகும்.

**★ தடுக்கும் முறை**

1. நாற்பது வயதுக்கு மேற்பட்டோர் அவசியம் ஆண்டுக்கு ஒருமுறையேனும் Cancer Screening க்குத் தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும்.
2. புகைபிடிப்பது, புகையிலை அடக்குவது, குட்கா உபயோகிப்பது, போன்றவற்றை அறவே அகற்றுவது நல்லது.
3. கூரிய பற்களாலோ, ஆடை ஆபரணங்களினாலோ நிரந்தர உராய்வு ஏற்படாமல் பாத்துக் கொள்ள வேண்டும்.
4. உணவுப் பழக்கங்களில் கவனம் செலுத்துதல் வேண்டும்.
5. புற்றுநோயோ என்று சில சந்தேகம் இருந்தாலும், அலட்சியப்படுத்தாமல், மருத்துவ ஆலோசனை உடனே பெறுதல்.
6. கதிரியக்க மற்றும் இரசாயானப் பொருட்கள் மிகுந்த இடங்களில் வேலை செய்பவர்கள் தகுந்த (Protective Devices) தற்காப்புக் கருவிகள் உபயோகப்படுத்துதல் நலந்தரும்.
7. உடல் மற்றும் மன நலத்தைச் சீராகப் பேணிப் பராமரித்து வரவேண்டும்.

இவைகளின் மூலம் புற்றுநோயிலிருந்து ஓரளவுக்காவது நாம் தப்பிக்கமுடியும் என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

**★ பொது அறிகுறிகள்**

பொதுவானவை (General constitutional symptoms) பசியின்மை, உடல் மெலிதல், சோர்வு, லேசான தொடர்ந்த காய்ச்சல் (Lowgrade fever) அசாதாரண ரத்தக்கசிவு.

குறிப்பானவை (Specific symptoms sighs) கடினமாக வலியில்லாத கட்டிகள் அல்லது மருக்கள் அல்லது கரணைகள் போன்ற புதிதாக முளைத்த அல்லது ஏற்கனவே இருப்பதில் வலி உண்டாகுதல், ரத்தம் கசிதல் போன்றவை.

Ulcers வாய், தொண்டை, காது, மூக்கு பகுதிகளில் உள்ள புண்கள் உடலின் மேற்பரப்பின் ஆறாத வலியில்லாத புண்கள்.

உடலுறுப்பின் செயல்பாட்டில் குறைபாடு, (Brain) மூளைக்கட்டிகளினால்-தலைவலி, கண்பார்வை குறைதல்-வலிப்பு முதலியவை.

1. Pharynx Lerynx Esaphagus உணவுக் குழாயிலோ, மூச்சுக் குழாயிலோ அடைப்பது போன்ற உணர்வு, குரலின் ஒலித் தன்மைமாறுதல முதலியன.
2. வயிறு மற்றும் குடல்: பசியின்மை, வாந்தி, மலச்சிக்கல், மலத்தில் தொடர்ந்து ரத்தம், குடல்-பசியின்மை, வாந்தி, மலச்சிக்கல், மலத்தில் ரத்தம் தெரிதல், மஞ்சள் காமாலை, வயிற்றுவலி போன்றவையாகும்.

Genitals பெண்களைத் தாக்கக்கூடிய கான்சர் மூன்றில் ஒரு பங்கு பிறப்பு உறுப்புகளில் ஏற்படும். அதன் அறிகுறிகள் பின்வருமாறு

1. அசாதாரண ரத்தம் கசிதல் (Menometorhagia)
2. கட்டுப்பாடற்ற மாதவிடாய் சுழற்சி (Menstrual cycle) ஏற்படும்.
3. வெள்ளைப்படுதல்.

இந்த வகையில் மார்பகப் புற்றுநோய் இங்கே அவசியம் குறிப்பிடத்தக்கது ஆகும். மார்பகங்களில் வலியற்ற கரணைகள், மார்புக் காம்புகளில் இரத்தக் கசிவு போன்றவை ஏற்படும்.

ஆண்களுக்கு சிறுநீர் கழிப்பதில் அடைப்பு

சிறுநீரில் ரத்தம் படுதல் (Haematuria)

விரை வீக்கம் போன்றவை.

**★ நுரையீரல்**

ஆண்களை பெரும்பாலும் பாதிக்கக்கூடியது (Bronchigenic ca) தொடர்ந்து இருமல், சளி, சளியில் ரத்தம் வருதல் (Haemoptysis) போன்றவையாகும்.

---

## அப்படியா சேதி!



✲ உலகிலேயே பெண்களுக்குக் கட்டாய இராணுவப் பயிற்சியளிக்கும் ஒரே நாடு இஸ்ரேல்!

✲ நாய்க்கு மோப்ப சக்தி அதிகம்; அதேபோல், ஒட்டகத்தின் பார்வை சக்தி அதிகம் வெகு தொலைவில் இருக்கிற நீர்நிலையைக்கூட அது எளிதாகக் கண்டுபிடித்து விடும்!





✲ சுவிட்சர்லாந்து நாட்டிற்கு எந்த நாட்டுடனும் கூட்டு இல்லை; இதனாலேயே ஐக்கிய நாடுகள் சபையில் அந்த நாடு இன்னமும் உறுப்பு நாடாகவில்லை!

✲ அமெரிக்காவில் உள்ள மக்கள் பத்துப்பேரில் ஒருவர் நீக்ரோவாக இருப்பார்; இதைவிட அதிசயம், அங்கே ஆண்களைவிட ஏறத்தாழ 50 இலட்சம் என்ற அளவில் பெண்கள் அதிகமிருக்கின்றனர்!





✲ புலிகளுக்கு வெள்ளை நிறம் அச்சமுண்டாக்குவதாகும்; யானைக்கோ வெள்ளை நிறம் கோபத்தை உண்டாக்கும். இதனாலேயே வனப் பகுதிகளில், எல்லைக் கல்லைக்கூட பச்சை நிறத்தில் நட்டிருப்பார்கள்!

-'ராஜு'



# தீவிர போலியோ ஒழிப்புத் திட்டத்தில் குழந்தைகளுக்கு ஒரு பவுன் பரிசு!

நாடு தழுவிய தீவிர போலியோ ஒழிப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் டிசம்பர் 7ஆம் தேதி 5 வயதுக்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து போடும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஜனவரி 18ஆம் தேதியும் இத்திட்டம் தொடர உள்ளது.

இந்தத் திட்டம் முழு வெற்றி அடையவேண்டுமானால், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் ஏற்கெனவே முறையாகத் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டிருந்தாலும், இத்திட்டத்தின் அவசியம் கருதியும், தமிழ்நாட்டிலுள்ள 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவரும் இத்திட்டத்தில் கலந்துகொண்டு சொட்டு மருந்து போடுவதை ஊக்குவிக்கும் வகையிலும், தமிழ்நாடு அரசு குழந்தைகளுக்குப் பரிசு வழங்கும் சிறப்புத் திட்டத்தை அறிவித்துள்ளது.

### தங்க நாணயம்

இப் பரிசுத் திட்டத்தின்கீழ், 2 தவணை சொட்டு மருந்து கொடுக்கப்படும். ஒவ்வொரு குழந்தைக்கும் அடையாள எண் கொடுக்கப்படும். அவ்வாறு இரண்டு தவணை சொட்டு மருந்து பெறும் அனைத்துக் குழந்தைகளின் எண்களையும் மாவட்டந்தோறும் தனித்தனியே குலுக்கல் முறையில் தேர்ந்து எடுத்து, அதிர்ஷ்டசாலியான குழந்தைகளுக்கு முதல் பரிசாக ஒரு பவுன் தங்க நாணயம் பரிசு வழங்கப்படும்!

மேலும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டாவது பரிசாக 2 குழந்தைகளுக்கு அரைப் பவுன் தங்க நாணயமும், 3வது பரிசாகத் தலா ரூ.250 மதிப்பில் 20 குழந்தைகளுக்குப் பரிசும் வழங்கப்படும்.

எனவே, பெற்றோர்கள் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவரையும் சொட்டு மருந்து கொடுக்கும் நிலையங்களுக்கு அழைத்துச் சென்று சொட்டு மருந்து கொடுப்பதன் மூலம், தங்கள் குழந்தைகளைக் கொடிய போலியோ நோயிலிருந்து பாதுகாப்பதுடன்- தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள பரிசுத்

> சுறுசுறுப்பாக இருப்பது நல்லது; ஆனால், படபடப்பாக இருப்பது ஆபத்து!
>
> -மாத்யூ கிரீன்

திட்டத்தின் மூலமும் பயனடையலாம்.

சென்ற ஆண்டு தீவிர போலியோ சொட்டு மருந்து திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 5 வயதுக்குட்பட்ட சுமார் 65 இலட்சம் குழந்தைகளுக்கு 'போலியோ' தடுப்பு மருந்து போடப்பட்டதன் பயனாக இந்த ஆண்டு போலியோ நோய் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 130 லிருந்து 5 ஆகக் குறைந்துள்ளது!



இந்த ஆண்டில் டிசம்பர் 7ஆம் தேதி போலியோ சொட்டு மருந்து முகாம் நடத்தப்பட்டது; ஜனவரி 18ஆம் தேதியும் போலியோ தடுப்பு சொட்டு மருந்து போடுவதற்கு முகாம்கள் நடத்தப்படவுள்ளன. இதற்காக சுமார் 40,000 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 5 வயதுக்குட்பட்ட சுமார் 65 இலட்சம் குழந்தைகளுக்கும் போலியோ தடுப்பு சொட்டு மருந்து கொடுக்கப்படும் எனவும், இதன்மூலம் போலியோ நோயை முழுவதுமாக ஒழிக்க முடியும் எனவும், போலியோ ஒழிப்புத் திட்ட மாநில ஆலோசனைக்குழு நம்பிக்கை தெரிவித்திருக்கிறது.

போலியோ தடுப்பு மருந்து முகாம்களுக்குத் தேவையான கூடுதல் பணியாளர்கள் மற்றும் வாகனங்கள் அனைத்து அரசுத் துறைகளிலிருந்து பெற்றுக் கொள்வதெனவும் இதற்காக அந்தந்தத் துறை தலைவர்களுக்குத் தலைமைச் செயலர் மூலம் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்கள் தீவிர போலியோ ஒழிப்புத் திட்டத்தின்போது தங்களை முழுமையாக ஈடுபடுத்தி ஒத்துழைப்புக் கொடுக்கச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

நகராட்சி ஆணையர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி இத்திட்டம் நகர்ப் பகுதிகளில் வெற்றிபெற உதவி செய்யுமாறு, நகராட்சிகளின் கூடுதல் இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

### புதுமுறை விளம்பரம்

போலியோ பற்றி, பேருந்து மற்றும் பால் கவர் மூலம் விளம்பரம் செய்ய, முறையே போக்குவரத்துச் செயலர் மற்றும் கால்நடை பராமரிப்புச் செயலர் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தத் தீவிர போலியோ சொட்டு மருந்து கொடுப்பதற்காகச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளையும், முகாம்களையும் கண்காணிக்கப் பணியாளர்கள் மாவட்ட ஆட்சியாளர் மூலம் அந்தந்த மாவட்டங்களில் நியமிக்கப் பொதுச் சுகாதார இயக்குநர் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தத் தீவிர போலியோ ஒழிப்பு நாட்களில் ஒரு வாரம் முன்பே, தொடர்ந்து மின்சாரம் கிடைப்பதற்குத் தமிழ்நாடு மின்சார வாரியத்தினைக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதிகள், விரிவாக்கப் பகுதிகள் மற்றும் அரசு மருத்துவமனைகள் உள்ள இடங்களில் சென்ற ஆண்டையும்விட தீவிர போலியோ நோய் ஒழிப்பில் அதிகக் கவனம் செலுத்தி குழந்தைகள் யாரும் விடுபடாமல் தடுப்பு மருந்து கொடுக்கத் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் அரசு மருத்துவமனைகளில் புறநோயாளிகளுக்கான சீட்டில் தீவிர போலியோ ஒழிப்பு இயக்கம் பற்றி விளம்பர முத்திரையிட்டு வழங்குமாறும் யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அனைத்து அரசு அலுவலர்களும் ஆங்காங்குள்ள தன்னார்வ அமைப்புகள் மூலம், இத்திட்டத்தினை முழுமையாகச் செயல்படுத்தி போலியோவை ஒழிக்க உதவிட வேண்டும்.



# தொழுநோய் ஒழிப்பு

தொழுநோய் ஒழிப்பு தேசியத் திட்டம், தமிழ்நாட்டில் 1954-55-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. தொடக்கத்தில் தொழுநோயாளிகளுக்கு ஒரே மருந்து கொடுக்கப்பட்டு வந்ததால், சிகிச்சைக்கு நீண்ட காலம் பிடித்தது. 'டேப்சோன்', 'ரிபாமோசின்' மற்றும் 'குளோபாஜிமைன்' ஆகிய மூன்று மருந்துப் பொருள்களைக் கொண்டு சிகிச்சை அளிக்கும் முறையை அறிமுகப்படுத்தியதன் மூலம், தொழுநோயாளிகளின் எண்ணிக்கை கணிசமான அளவிற்குக் குறைந்துள்ளது.

மக்கள் தொகையில் 10,000 பேர்களில் 120 பேர்களுக்குத் தொழுநோய் இருந்தது. இந்த விகிதம் 10,000 பேர்களில் 7 பேர்களாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதிலிருந்தே- இது மிக நன்றாகப் புலனாகும். தொழுநோய் ஒழிப்புப் பணியில் தமிழ்நாடு மிகச் சிறப்பாகப் பணியாற்றியுள்ளது.

உலக சுகாதார நிறுவனமும், இந்திய அரசும் கி.பி. 2000 வாக்கில் தொழுநோயை உலகிலிருந்தே அகற்றுவதுஎன்ற இலக்கு நிர்ணயித்துள்ளன. தொழுநோயாளர் வீதத்தை 10,000 மக்களுக்கு ஒருவர் என்ற அளவில் குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### முனைப்பு முகாம்

இந்த நோயினை முற்றிலும் அகற்றுவதற்கு மாநில அரசு முனைப்புடன் செயல்பட முடிவெடுத்துள்ளது. இதன் முதல்கட்ட நடவடிக்கை தொழுநோயாளர்களைப் பரிசோதனை செய்து, நோய் உள்ளதா என்று கண்டறிவதாகும். தமிழ்நாடு மாநிலத்தில் இன்னும் கண்டறியப்படாதிருக்கும் தொழுநோயாளர்களைக் கண்டறியும் வகையில், 1997 ஜனவரி 27ஆம் தேதி முதல் பிப்ரவரி 2ஆம் நாள் வரையில் ஒரு வார காலத்திற்குத் "தொழுநோய் கண்டறியும் முனைப்பு முகாம்" நடத்தப்படவுள்ளது. இந்த நோக்கத்திற்காகத் தொழுநோய் களப் பணியாளர்கள், மற்றும் 15,000 பல நோக்குச் சுகாதாரப் பணியாளர்கள் ஆகியவர்கள் இப்பணியில் பயன்படுத்தப்படுவார்கள்.

> அரும்பாடு பட்டுப் பெறப்பட்ட வெற்றியில்தான் மென் மேலும் செய்யவேண்டிய முயற்சியைத் தூண்டக்கூடிய சக்தி இருக்கிறது!
>
> -பெட்ரண்ட் ரஸ்ஸல்

தீவிர தொழுநோய்க் கண்டுபிடிப்பு முகாம் தொடங்குவதற்கு முன்னர் கண்டறியப்படாமல் மறைந்து கிடக்கும் தொழுநோயாளர்களைக் கண்டுபிடிப்பதில் இந்தப் பலநோக்குச் சுகாதாரப் பணியாளர்களுக்கு மருத்துவ ஊரக சுகாதாரப் பணி இயக்குநர் பயிற்சி அளிப்பார்.

இந்நோய் அபாயகரமான நோய் என்ற நிலை கடந்துவிட்டது என்றும், இந்நோயைத் தொடக்கத்திலேயே கண்டுபிடித்துவிட்டால், குறுகிய கால அளவில் இந்நோயினைக் குணப்படுத்திவிடலாம் என்கிற தகவலைத் தொழுநோய்க் கண்டுபிடிப்புப் பிரச்சார முனைப்புத் திட்டம் தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்குத் தெரிவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### மூட நம்பிக்கை

மேலும், தொழுநோயுற்றவர்களிடம் தொன்றுதொட்டு இருந்து வருகின்ற மூடநம்பிக்கையை அகற்றி, அவர்களுடைய அச்சத்தைப் போக்கி அவர்கள் பகுத்தறிவுடன் நடத்துகொள்ளுகின்ற பாங்கை வளர்ப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் வாயிலாக இம்மாநிலத்தில் தொழுநோயால் பாதிக்கப்பட்டு, தொழுநோய் கண்டறியப்படாமல் உள்ளவர்களைக் கண்டறிந்து "கூட்டு மருத்துவச் சிகிச்சை" மூலம் அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படும். தொழுநோய் சிகிச்சை பெறுபவர்கள் கணிப்பொறி மூலம் தொடர்ந்து கவனிக்கப்படுவர்.

தொழுநோயை இம்மாநிலத்திலிருந்து அறவே ஒழிக்கப் பொதுமக்களும் அரசுக்கு ஒத்துழைப்புத் தந்து, உதவி புரியவேண்டும்.



# குழந்தைத் தொழிலாளி முறையை முடிவுக்குக் கொண்டுவருதல்

அபாயகரமான தொழில்களிலும், சுய லாபத்துக்கான வேலைகளிலும் குழந்தைகளை ஈடுபடுத்துவது குழந்தை உரிமைகள் சட்டத்தை மீறிய செயலாகும். அத்தகைய
• தொழிலாளி முறையை அகற்றுவது உடனடியாக மேற்கொள்ளும் நடவடிக்கை, குழந்தையின் சிறந்த நலன்களைக் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். குழந்தைகளின் நல வாழ்விற்குப் பாடுபடும் திட்டத்தில் முதியோர்களுக்கு வேலைவாய்ப்புக்களை விரிவாக்கும் முயற்சிகள் சேர்ந்திருக்க வேண்டும்.

அபாயகரமான தொழில்களிலும் சுய லாபத்துக்காகவும் குழந்தைத் தொழிலாளிகளை ஈடுபடுத்துவதை உடனே நிறுத்தச் செய்வது

அபாயகரமான, மற்றும் சுயலாபக் குழந்தை ஊழியத்தில் பிணைத் தொழிலாளர், வர்த்த-கரீதியில் பாலியல் தொழிலுக்குப் பயன்படுத்துவது, குழந்தைகளின் உடல், சமூகம், அறிவுணர்வு, மனம் அல்லது தார்மீக வளர்ச்சி ஆகிவற்றுக்கு இடையூறு செயயும் வேலை ஆகியவை இதில் அடங்கும். இவற்றைப் பொறுத்துக் கொள்ளக்கூடாது. இவற்றை முடிவுக்குக் கொண்டு வர உடனே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கு வகை செய்தல் பொருத்தமான

துவக்கக் கல்வியை எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயமாகக் கிடைக்கச் செய்து கோட்பாட்டின் 28வது ஷரத்து எல்லாக் குழந்தைகளுக்கும் முழுநேர அடிப்படையில் துவக்கப் பள்ளியில் அந்தப் படிப்பு முடியும் வரையில் படிக்கும்படி பார்த்துக் கொள்வதைப் பொறுப்பாளர்கள் நிறைவு செய்யவேண்டும்.

இதற்கெனத் தேவையான பண வசதிகளைச் செய்தாகவேண்டும். போதிய வசதிகளுக்கு, உதவி செய்வோர் உறுதிசெய்ய வேண்டும்.

குழந்தை ஊழியத்துக்கான காரணங்கள் சிக்கலானவையாக இருப்பதாலும், வறுமை, பொருளாதாரச் சுரண்டல், சமூகப் பண்புகள் மற்றும் கலாச்சாரச் சூழ்நிலைகள் ஆகியவை அடங்கியிருப்பதாலும் தீர்வுகள் விரிவானதாக இருக்கவேண்டும். ஒவ்வொரு சமூகத்திலும் மிக விரிவான வகையில் மக்கள் உரிய பங்கெடுத்துக் கொள்வதாக இருக்கவேண்டும்.

அவசரமாகத் தேவைப்படும் சில குறிப்பிட்ட நடவடிக்கைகள் வருமாறு

விவரச் சேகரிப்பும் கண்காணிப்பும்

குழந்தைத் தொழிலாளர் பற்றிய புள்ளி விவரங்கள் அரிதாக உள்ளன. இந்தப் பிரச்சினையைப் பயனுள்ள வகையில் அணுகவேண்டுமானால் குழந்தைத் தொழிலாளி பற்றி உலக ரீதியாக ஒப்பிடக்கூடிய புள்ளி விவரங்களைச் சேகரித்து ஆய்வு நடத்துவதற்குத் தேசிய, சர்வதேச முறைகளைச் செயல்பட வைக்கவேண்டும். மறந்துபோன அல்லது புலனாகாதக் குழந்தைத் தொழிலாளி பகுதிகளில் தனிக் கவனம் செலுத்தவேண்டும். உதாரணமாக, வீட்டுக்குள், குடும்பம் பண்ணையில் அல்லது வீட்டு வேலையில் ஈடுபட்டுள்ளவர்கள் விஷயத்தில், மக்களே கண்காணிப்பது முக்-கியமாகும். வேலை செய்யும் குழந்தைகள் தங்கள் நிலைமைகளை மேம்படுத்துவதற்கான வழிகளை யோசனை கூறுவதிலும் தீவிரமாகப் பங்குகொள்ள வேண்டும்.

விரிவான சட்டப் பாதுகாப்பு

குழந்தைத் தொழிலாளி மற்றும் கல்வி பற்றிய சட்டங்கள் நோக்கத்தில் முரண்படாதபடி கண்காணித்தல் அவசியம். பரஸ்பர ஆதரவு தரும் வகையில் அவற்றைச் செயல்படுத்தவேண்டும். தேசிய குழந்தைத் தொழிலாளிச் சட்டங்கள், கோட்பாட்டுக்குச் சொல்லிலும் கருத்திலும் இணங்கியதாகவும் ஐஎல்ஓ கோட்பாடுகளுக்குப் பொருத்தமாகவும் இருக்க வேண்டும். அத்தகைய சட்டங்கள் தெருக்கள், பண்ணைகள், வீட்டு வேலை அல்லது குடும்பத்துக்குள் வேலை ஆகியவை உட்படப் பொருளாதாரத்தின் முறைசாராத் துறையில் வேலை செய்யும் மிகப் பெரும்பான்மையான குழந்தைகளுக்குப் பொருந்துமாறு நிர்ணயிக்கப்பட வேண்டும்.

எல்லாக் குழந்தைகளுக்கும் பிறப்புப் பதிவு

பிறந்தவுடன் எல்லாக் குழந்தைகளையும் பதிவு செய்ய வேண்டும்.

கோட் பாட்டின் 7வது ஷரத்து குழந்தைகளின் உரிமைகளைப் பயன்படுத்த அனுமதிக்கப் பதிவு



ஒரு நல்ல நூலைப் போலச் சிறந்த நண்பன் வேறு யாருமில்லை!

-அறிஞர் அண்ணா

செய்தல் மிக அவசியமாகும். கல்வி, உடல்நலக் கவனிப்பு மற்ற இதர சேவைகளைப் பெறவும், ஒவ்வொரு குழந்தையின் வயதுச் சான்றை மேற்பார்வையாளர்களுக்கும் இன்ஸ்பெக்டர்க்கும் வழங்குவதற்கும் இது அவசியம்.

நடத்தை நெறிகள் மற்றும் கொள்கைகள் தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகள் தாங்களோ, தங்கள் துணை அமைப்புகளோ குழந்தைகளை அவர்கள் உரிமைகளை மீறும் சூழ்நிலைகளில் வேலைக்கு அமர்த்திக் கொள்வதில்லை என்று உத்திரவாதமளிக்கும் நடத்தை நெறிகளை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்துகின்றன. குழந்தையின் சிறந்த நலன்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாக, திருத்தக் கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும். யுனிசெப் தனது சொந்த கொள்கையை இவ்வகையில் மீண்டும் உறுதிப்படுத்துகிறது. குழந்தைகளே சுய லாபத்திற்காகப் பயனப்டுத்திக் கொள்ளும் எந்த தரகரிடமிருந்தும் எதையும் வாங்குவதில்லை என்றும் உறுதி எடுத்துக் கொள்கிறது.

நன்றி:
யுனிசெப்

# தமிழ் மருத்துவம்

## ஆலமரம்

மூன்று ஆலிலையை மென்றால் போதும்- வாய்ப்புண், வாய் நாற்றம் மாறும். இலையை அரைத்து உடலில் பூசிக் குளித்தால் உடல் எரிச்சல், அரிப்பு போன்றவை நீங்கும். தேமல் நோயும் குணமாகும். ஆட்டம் கண்ட பல்லிடுக்கில் அதிகாலையில் சிறிது ஆலம்பால் விட்டால், ஆடுவது நிற்கும். ஆலம் பாலும் சிறிது தேனும் காய்ச்சி அருந்தினால் உடல் வலுவடையும்!

## அரச மரம்

அரச மரத்தின் காற்றுக்கு, மலடு நீக்கும் சக்தி உண்டு; அரச மரத்தைச் சுற்றும் வழக்கம் இதனால்தான் ஏற்பட்டது. சீனப் பெண்களில் பிள்ளைப்பேறு அற்றோர், அரச மரத்தடியில் உறங்கும் வழக்கம் இன்னமும் உள்ளது. மூன்று அரச இலைக்கொழுந்தோடு சிறிது வெல்லம் சேர்த்துக் காலையில் வெறும் வயிற்றில் உண்டுவந்தால் வயிறு தொடர்பான நோய் நீங்கும்; சூதகக் கோளாறும் குணமாகும்!

## எலுமிச்சை

பழம் உலோகங்களை மடிக்கும். சிறிது கொழுந்தைக் கொத்துமல்லி, கறிவேப்பிலையோடு துவையலாக அரைத்துச் சாப்பிட்டால் பித்தவாந்தி அஜீரணம், வாய்வுப் பிடிப்பு குணமாகும். இலையை அரைத்துத் தடவினால் மூட்டுவலி, கெண்டைக் கால் வலி, தலைவலி ஆகியவை நீங்கும். ஊறுகாய் பித்த மூலம், மலக்கட்டு, இரத்தமூலம் தணிக்கும்!

## இலந்தை

இலந்தைக் கொழுந்தை 5 கிராம் அளவிற்கு அரைத்து, அதை 500 மி.லிட்டர் இளநீரில் காலை மாலை ஒரு வாரம் சாப்பிட்டால் மூலநோய் தணியும். சாப்பிட்ட பிறகு இலந்தைப் பழம் தின்றால், உணவு எளிதில் செறிக்கும்; பித்தம் தணியும்; பித்த மயக்கம் குணமாகும். இம் மரத்தின் பட்டையை வெந்நீரில் போட்டுக் குளித்தால் உடல்வலி நீங்கும்.

## ஈச்சை

ஈச்சம் பழம் பசியைத் தூண்டும்; ஈச்ச ஓலைப்பாயில் படுத்துறங்கிவந்தால், வாத நோய் தணியும்; உடல் சூட்டையும் நீக்கும். ஈச்சங் கள் பெரிதும் உடல் நலத்தைக் கெடுக்கும்!

**(ஆதாரம்: 'மரங்களின் மருத்துவப் பயன்கள்' பூங்கொடி பதிப்பகம், சென்னை - 4)**



# வாசகர் இதயம்

கவிஞர் கா.வேழவேந்தன் கவிதை கட்டி வெல்லமாக இனித்தது. உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் விவரங்களும் தேவையானவை. மொத்தத்தில் தமிழரசு களைகட்டத் தொடங்கிவிட்டது.

-ப.முருகேசபாண்டியன்,
நாகூர் கரப்பாடி.

ஆசிரியர் மடல்கள் சுருக்கமாகவும், சிறப்பாகவும் இருப்பது கண்டுஅகமகிழ்ந்தேன்

-த.பொ.சண்முகசுந்தரம்,
திட்டக்குடி.

ஓய்வூதியம் பெறுவோர்க்கான ஆணை ஒன்றை வெளியிட்டிருந்தீர்கள்; அதேபோல் தொடர்ந்து ஒவ்வொரு ஆணையாக வெளியிடுங்கள்; எல்லோருக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

-எஸ்.எப். சுந்தரராசன்,
திருச்சிராப்பள்ளி.

தமிழரசில் ஆங்காங்கே தாங்கள் வெளியிடும் பொன்மொழிகள் தங்கத்தில் பதித்த வைரமாக ஜொலிக்கின்றன.

-த.நா.அன்புத்துரை,
சிவகங்கை.

தமிழரசு, பத்திரிகை உலகில் தொடங்கியுள்ள புதிய சேவையைச் சிரம் தாழ்த்திப் பணிகின்றேன்.

-கா.நா.ராஜசேகர்,
மங்களாபுரம்

மருத்துவத் தொடர், இலக்கியக் கட்டுரைகள், அறிவியல் துளிகள் போன்றவற்றால்- தமிழரசைப் பாதுகாத்து வைக்கிற ஆர்வம் உண்டாகிவிட்டது.

-ச.சத்தியசீலன்,
ராமானுஜபுரம் - 636112.

அறிஞர் சொற்பொழிவின் சிலேடைகள், துணுக்குகள் எல்லாம் சேர்த்து இன்னும் புதுமலர் மணத்தைத் தமிழரசுக்கு உண்டாக்கலாமே?

-செ.காமராஜ்,
வேப்பூர் செக்கடி.

சிலம்பொலி செல்லப்பன் கட்டுரை, மு.வ. எழுதிய கதை யாவும் அற்புதம். 'தமிழரசின்' பயணம் இதேபோல் தொடரவேண்டும் என்பது எங்கள் ஆவல்.

-புலவர் மு.செல்லமுத்து,
கோவிந்தப்பாளையம்.

ஹோமியோபதி மருத்துவம் பற்றிய கட்டுரை பல உண்மைகளை உணர உதவியது. நன்றி.

-ச.இராமசாமி,
வேலப்பநாயக்கன் பாளையம்.

'அவனிபோற்றும் ஆறுமாத சாதனை' என்கிற தனிப்பகுதி, நாட்டுமக்களெல்லாம் நாம் எவ்வளவு நல்லரசால் ஆளப்படுகிறோம் என்பதை அறிய உதவும் ஒரு நல்ல கணக்கீடு ஆகும்.

-ச.சிவகோபால்,
சேலம்.

மேயர்கள் பற்றிய விவரங்கள் பாதுகாக்கப்பட வேண்டிய கருவூலம் ஆகும்.

-சோலையப்பன்,
திருப்பத்தூர்.



## சீர்திருத்தம்

சீர்திருத்தம் என்பது தேவையற்றதை நீக்கிவிட்டுத் தேவையுள்ளதை மட்டும் வைத்துக் கொள்ளுதலே ஆகும்.

-தந்தை பெரியார்

மாணவர் பக்கம்:

# ஆர்வமே அனைத்துச் சாதனைக்கும் முதல்படி

பாரதத்தில் வெள்ளையர் ஆட்சி செலுத்திய காலம் அது. கைநிறைய பணம், சுகபோக வசதிகள், அரசாங்கத்தின் பாதுகாப்பு என்று அரசாங்கப் பதவி வகிப்பவர்கள் உல்லாச வாழ்வு வாழ முடிந்தது.

அரசாங்க அலுவல் பார்ப்பவர்களை ஏதோ கடவுளைத் தரிசிப்பது போல, சாமானிய மக்கள் கண்ட இடமெல்லாம் கைகூப்பி மரியாதை செய்தனர்.

அந்த இளைஞர் வங்காள மாநிலத்தின் உதவி அகௌண்டெண்டு ஜெனரல் பதவியை வகித்து வந்தார். மாநிலத்தின் மிகவும் உயர்ந்த அரசாங்கப் பதவி அது.

கை நிறைய ஊதியம் கிடைத்தது. நினைத்தபடியெல்லாம் உல்லாச வாழ்வு வாழ்வதற்கு நல்ல வாய்ப்புகள் உண்டு.

அந்த இளைஞர் தமது பதவிப் பொறுப்பினை மிகவும் சிறந்த முறையில் நிறைவேற்றி அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

எதிர் காலத்தில் மேலும் மேலும் உயர் பதவிகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் காத்துக் கொண்டிருந்தன.

அந்த இளைஞருக்குத் தமது பதவியில் பெரிய பிடிப்பும் நாட்டமும் இருக்கவில்லை.

பௌதிக அறிவியல் அறையிலேயே அவருடைய மனம் அளவற்ற பிடிப்பும் ஆர்வமும் கொண்டிருந்தது.

கல்கத்தாவிலுள்ள கல்கத்தா பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடம் ஒன்று அந் நாளில் அமைந்திருந்தது.

அந்த இளைஞர் அதிகாலையிலேயே அந்த அறிவியல் ஆய்வுக் கூடத்துக்குப் போய் பல்வேறு விதமான ஆய்வுச் சோதனைகளில் ஈடுபடுவார்.

அலுவலக நேரத்தில் அலுவலகம் சென்று பதவிப் பொறுப்பை நிறைவேற்றுவார். மாலையில் அலுவலக நேரம் முடிந்த உடனே ஆய்வுக் கூடத்தைச் சரணடைந்துவிடுவார்.

உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் பலவிதமான ஆராய்ச்சிகளிலும், சோதனைகளிலும் ஈடுபட்டு உழைத்த பிறகு, நெடுநேரம் கழித்து வீடு திரும்புவார்.

பெரிய பதவியை வகித்து கை நிறைய ஊதியம் பெறும் இவர் ஓய்வு நேரத்தை உல்லாசமாகக் கழிப்பதற்குப் பதில் இதைப் போல் உடம்பை அலட்டிக் கொள்கிறாரே என்று ஆச்சரியப் படுவார்கள்.

கல்கத்தா பல்கலைக்கழகத்தில் துணை வேந்தர் அந்த இளைஞருக்கு அறிவியல் துறையில் இருக்கும் பேரார்வத்தைக் கூர்ந்து கவனித்து வந்தார்.

முழு நேரமும் அந்த வாலிபர் தம் மனத்தை அறிவியல் துறை மீதே செலுத்தினால் நாட்டுக்கும் மக்களுக்கும் பெருநலம் விளையுமே என்று அவர் நினைத்தார்.

அவர் ஒருநாள் அந்த வாலிபரை நோக்கி, நீங்கள் பார்த்து வரும் பதவியை விட்டு விலகி முழு நேரமும் அறிவியல் பணியில் ஈடுபட விருப்பமா? என்று வினவினார்.

அப்படி ஒரு வாய்ப்பு கிடைத்தால் அதைக் கிடைத்தற்கரிய பெரும்பேறாகக் கருதுவேன் என்று இளைஞர் உற்சாகத்துடன் மறுமொழி புகன்றார்.

நீங்கள் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்துவிடக் கூடாது. நீங்கள் வகிக்கும் பதவி மாநிலத்திலேயே மிகவும் உயர்ந்த பதவிகளில் ஒன்று. நல்ல வருவாய் கிடைக்கிறது. எதிர்காலத்தில் பதவியில் மேலும் மேலும் உயருவதற்கு வாய்ப்புகளுக்குப் பஞ்சமே இல்லை. அறிவியல் ஆராய்ச்சியை வாழ்க்கையெனக் கொண்டு விட்டால் இப்போது கிடைக்கும் வருமானத்தில் கால்பாகம் கூடக் கிடைக்காது.

# தமிழரசு

## நாட்காட்டி 1997



| | ஜனவரி | பிப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 5 12 19 26 | 2 9 16 23 | 30 2 9 16 23 | 6 13 20 27 | 4 11 18 25 | 1 8 15 22 29 |
| திங்கள் | 6 13 20 27 | 3 10 17 24 | 31 3 10 17 24 | 7 14 21 28 | 5 12 19 26 | 2 9 16 23 30 |
| செவ்வாய் | 7 14 21 28 | 4 11 18 25 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 | 3 10 17 24 |
| புதன் | 1 8 15 22 29 | 5 12 19 26 | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 | 4 11 18 25 |
| வியாழன் | 2 9 16 23 30 | 6 13 20 27 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 | 5 12 19 26 |
| வெள்ளி | 3 10 17 24 31 | 7 14 21 28 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 | 6 13 20 27 |
| சனி | 4 11 18 25 | 1 8 15 22 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 | 7 14 21 28 |

| | ஜூலை | ஆகஸ்டு | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 6 13 20 27 | 31 3 10 17 24 | 7 14 21 28 | 5 12 19 26 | 30 2 9 16 23 | 7 14 21 28 |
| திங்கள் | 7 14 21 28 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 |
| செவ்வாய் | 1 8 15 22 29 | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 |
| புதன் | 2 9 16 23 30 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 |
| வியாழன் | 3 10 17 24 31 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 |
| வெள்ளி | 4 11 18 25 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 | 7 14 21 28 | 5 12 19 26 |
| சனி | 5 12 19 26 | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 |

[illegible]தைப் பற்றி எந்தவித உத்தரவாதமும் இல்லை. எதிர்காலத்தில் வறுமையில் கிடந்து உழல வேண்டி நேரிட்டாலும் வியப்படைவதற்கில்லை, என்று துணை வேந்தர் உண்மை நிலையினை விளக்கினார்.

"என் எதிர்கால சொந்த வாழ்க்கையைப் பற்றி நான் கொஞ்சமும் கவலைப்படவில்லை. அறிவியல் துறையில் ஏதாவது சாதிக்க முடிந்தால் அதையே பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன் என்று குதூகலம் பொங்கும் மனத்தினராக அந்த [illegible] உறுதியான குரலி[illegible] கூறினார்.

தமது குரலில் காண்பித்த உறுதியை அந்த வாலிபர் துரித மாக செயற்படுத்திக் காண்பித்து விட்டார்.

வருவாயும், மதிப்பும் மிகுந்திருந்த தமது பதவியை உடனே தூக்கியெறிந்து விட்டு, வருவாய் குறைவான விஞ்ஞான ஆய்வுக் கூட பதவியை ஏற்றுக்கொண்டார்.

இவ்வாறு தமது வாழ்க்கையினைப் பெருஞ்சோதனைக்கு உள்ளாக்கிக் கொண்டதற்காக அந்த வாலிபர் ஒருநாளும் [illegible]ப்பட்டதே கிடையாது.

அந்த வாலிபர் மேற்கொண்ட அந்தத் தியாகம் பௌதிக ஆய்வுத் துறைக்கு ஏற்பட்ட நல்லதிர்ஷ்டமாக அமைந்தது.

உலகம் போற்றும் பௌதிக பேரறிஞராகத் திகழ்ந்து அவர் அரிய பல சாதனைகளையாற்றி மனித குலத்துக்குப் பெருந்தொண்டாற்றினார்.

அவர்தான் பாரதத்தின் புகழை உலகமெங்கும் பரப்பிய பௌதிக இயல் அறிஞரான சர்.சி.வி. இராமன் ஆவார்.






### ஞாயிறு களம்

ஆசிரியர்: பாதாசன்,

வெளியிட்டோர்:
பூவழகி பதிப்பகம்,
292, சீனிவாசப்பெருமாள்
சன்னதி தெரு, சென்னை600014.

பக்கம்: 183 விலை: ரூ.30

'வெண்ணெய் திரள்கிறது' என்பது முதல், 'நினைக்கவுமா கூடாது?' என்பது வரையான 41 கட்டுரைகளின் தொகுப்புநூல் இது.

நூலாசிரியர் மலேசியாவாசி; எனினும் இனிய தமிழில், பல பெரிய செய்திகளையெல்லாம் கூட எளிய நடையில் தெரிவித்திருக்கிறார். அத்தனைக் கட்டுரைகளும் அங்கே வெளிவரும் ஞாயிறு களம் 'தமிழோசை' ஏடுகளில் அவ்வப்போது வெளியானவை.

அங்குள்ள தமிழர்க்கு மட்டுமன்றி, நம் போன்றார்க்கும் ஏற்றபடி இந்நூலில் பல கட்டுரைகள் உள்ளன.

### குறிஞ்சிப் பூக்கள்

ஆசிரியர்:
திருமதி ப. பத்மாதேவி.

இந்நூலும் மேற்கண்ட பதிப்பகத்தின் வெளியீடு.

பக்கம்: 160 விலை: ரூ.25

நூலாசிரியை, மலேசிய நாட்டின் பண்பட்ட எழுத்தாளர்களில் ஒருவர். முப்பதாண்டுக் காலமாகப் பல ஏடுகளிலும் கதை, கட்டுரை, நாடகம் என்று எழுதி வருபவர்.

அப்படி, அவ்வப்போது எழுதப்பட்ட 21 சிறு கதைகளின் தொகுப்பே இந்த நூல் ஆகும். சமுதாயத்தின் எல்லா மட்டத்தில் உள்ளவர்களும் கதைகளின் கதாபாத்திரங்களாக்கப் பட்டுள்ளனர். சில கதைகள் சிறுகதைக்கான வரம்பை மீறியிருந்த போதிலும் படிக்கச் சுவை குன்றாதவைகளாக இருக்கின்றன.

### நீங்களும் நூறாண்டு வாழலாம்

ஆசிரியர்: நலன்கிள்ளி

வெளியிட்டோர்:
கதிர் வெளியீடு,
7, பொன்னம்பலம் தெரு,
சோழபுரம், அம்பத்தூர்,
சென்னை-600053.

பக்கம்:144 விலை: ரூ.23

தலைப்பே பலருக்குப் பிரமிப்பை ஏற்படுத்தக்கூடும்.

ஒரு மனிதன் எவ்வாறான பழக்கவழக்கங்கள் அமையப் பெற்றிருந்தால் எப்படிப்பட்ட உணவு, உடற்பயற்சி மேற்கொள்ளுபவனாக இருந்தால் நீண்டகாலம் வாழமுடியும் என்பதை விளக்குகிறார், நூலாசிரியர்.

குடிக்கும் நீர் எப்படியிருக்க வேண்டும் என்பதுமட்டுமல்ல; குளிப்பது எப்படி? புலனடக்கம் எந்த அளவுக்குத் தேவை? - என்பதெல்லாம் கூட 11 பயன்மிகு கட்டுரைகளின் மூலம் இந்தப் புத்தகத்தில் விளக்கிச் சொல்லப் பட்டிருக்கிறது.

### ஆற்றங்கரை அரசமரம்

ஆசிரியர்:
கவிஞர் வேபிரபாகரன்,

வெளியிட்டோர்:
அழகம்மை பதிப்பகம்,
ஆர்.5611, கோட்டூர்புரம்,
சென்னை-600085.

பக்கம்:124 விலை: ரூ.24

மாணவச் செல்வங்கள் படித்து இன்புறத்தக்க, சிறுவர்க்கேற்ற சிந்தனைக் கதைகள் 21 இந்தப் புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன.

அரசமரத்தின் காற்று, மலட்டுத் தன்மையைப் போக்கும் என்பது யாருக்காவது தெரியுமோ? இப்படிப்பட்ட அரிய செய்திகளையும் தெரிவிக்கும் நூலாசிரியர்-சிறுவர், சிறுமியர் சிந்தனையைத் தூண்டும் வகையிலேயே ஒவ்வொரு கதையையும் எளிய பாடம் போலப் படிக்கப் படைத்திருக்கிறார்.

### தேன்

ஆசிரியர்: க. சுப்பிரமணியம்.

வெளியீடு:
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை - 625 020.

பக்கம்: 28 விலை: ரூ.6

தமிழ்நாடு இயற்கை மருத்துவச் சங்கம் தயாரித்துள்ள இந்நூல், தேனின் மருத்துவக் குணங்களைத் தெரிவிக்கிறது.

அறிவியலால் தேனை ஆராய்ந்து, அதனால் நாம் நலம் பெறுவது எப்படி? அதிலுள்ள சர்க்கரையால் ஏதேனும் பாதிப்பு உண்டா? என்றெல்லாம் எளிய முறையில் அறிவித்திருக்கிறார்கள்.

-'இந்திரன்'




**பிரச்சினை:**

எங்கள் கிராமத்தில் பயணிகள் பஸ் ஏறுமிடத்தில் நிழற்குடை கட்ட வேண்டிப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். இக் கிராமத்தின் பஸ் நிலையத்தில் மூன்று கிராமங்களைச் சேர்ந்த மக்கள், பஸ் ஏறுகின்றனர். வெயில் கொடுமையிலும், மழைக் காலங்களிலும், குழந்தைகளும், பெரியவர்களும் துன்பப்படுகிறார்கள். ஆகவே, பயணிகள் நிழற்குடை கட்டித்தர வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

அடுத்தபடியாக, எங்கள் கிராமத்தில் சுமார் 2000 கிராம மக்கள் வசிக்கின்றோம். குடிநீர் இல்லாமல், கிணற்றில் இறைத்துக் குடித்துவருகின்றோம். இதனால், தொத்து வியாதிகள் வருகின்றன. ஆகவே பாதுகாக்கப் பட்ட குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்ட உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

-கிராம மக்கள், இறைஞ்சி
கள்ளக்குறிச்சி வட்டம், விழுப்புரம்.

**தீர்வு:**

தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம் இறைஞ்சி கிராமத்தில் நிழற்குடை கட்டும் பணி, தற்போது போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால் வருகின்ற 1996-97-ஆம் ஆண்டு ஜே.வி.வி.டி. 80 சதவிகிதத் திட்டத்தில் நிதி வசதி கிடைக்கப் பெற்றதும் எடுத்துச் செய்யப்படும்.

மேலும் இறைஞ்சி கிராமத்தில் 1991-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 1095 நபர்கள் வசித்து வருகின்றனர். கிராமம் மற்றும் காலனியில் 8 குடிநீர் கைப் பம்புகள் (கையிறைப்பான்கள்) நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டி முடித்துச் செயல்படுத்தப்பட்டு வந்தது. அதற்குரிய நீர் ஆதாரம் பொய்த்துவிட்டமையால், தற்போது விசைப் பம்புத் திட்டம் செயல்படவில்லை. புதிய நீர் ஆதாரம் ஏற்படுத்தும் வகையில் நடப்பு நிதியாண்டில் புத்துயிர் ஊட்டி, குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் திட்டம் செயல்படுத்தப்பட வுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

-ஆர். நடராஜன், பி.ஏ.,
ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம், தியாகதுருகம்.

**பிரச்சினை:**

எங்கள் ஊரில் குழாய் இல்லாமல் குளத்தில் தண்ணீர் எடுக்கிறோம். அதனால், குழந்தைகள் பேதி, மஞ்சள்காமாலை, மலேரியா, போன்ற நோய்களால் பாதிக்கப் படுகிறார்கள். இதனால் குழந்தைகள் இறந்துவிடுகின்றன. கிணற்றில், குளத்தில் தண்ணீர் எடுப்பதால், பெரியவர்களுக்கும் நோய்கள் வருகின்றன. குளம் 5 கி.மீ. உள்ளது. இதனால் வேலைக்குப் போகும் நேரம் தாமதமாகிறது. தயவுசெய்து எங்கள் ஊருக்குக் குடிநீர்க் குழாய் அமைத்துத் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

-எம். சசிகலா,
பொதுமக்கள், மலையாங்குளம் அஞ்சல்
மாகரல் (வழி) உத்திரமேரூர் வட்டம்.

**தீர்வு:**

உத்திரமேரூர், ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மலையாங்குளம் கிராமத்திற்குக் குடிநீர் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

-க. புருஷோத்தமன்
ஆணையர், ஊராட்சி ஒன்றியம்
உத்திரமேரூர்.

### பிரச்சினை:

கோவை மாவட்டம், பொள்ளாச்சி வடக்கு நல்லாத்துக்குளி கிராமத்தில் உள்ள பொதுமக்கள் மயானக்காடு இல்லாமல் ஊரில் இருந்து சுமார் 3 கி.மீ. தூரம் சென்று ஒரு ஆற்றங்கரையின் ஓரத்தில் இறந்த உடலைப் புதைத்து வருகிறார்கள். அந்த இடத்தில் இப்போது வயல் நடவு செய்து, நெற்பயிர் செய்கிறார்கள். இப்போதைக்கு எங்கள் ஊர் மக்கள் இறந்து போனோர் உடலைப் புதைக்க இடமில்லாமல் மிகவும் துன்பத்துக்குள்ளாகிறார்கள். இந்தக் கோரிக்கையைப் பல ஆண்டுகளாகப் பல அதிகாரிகளுக்கும், சட்டமன்ற உறுப்பினருக்கும், கொடுத்தும் எந்தப் பலனும் இதுவரை இல்லை. தாங்கள் நல்லாத்துக்குளி மக்களின் இந்த நீண்டநாள் பிரச்சினையைத் தீர்த்து வைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

-எஸ். சிவதாஸ்
நல்லாத்துக்குளி, பொள்ளாச்சி வட்டம்
கோவை மாவட்டம்.

### தீர்வு:

மனுதாரரால் புகார் செய்யப்பட்டுள்ள, பொதுமக்களால் சுடுகாடாகப் பயன்படுத்தி வரப்படும் ஆற்றுப் புறம்போக்கின் தென்புறம், திருமதி அன்னம்மாள் என்பவரால் 6 சென்ட் பரப்புக்கு நெல் நடப்பட்டிருந்தது. தற்போது அகற்றப்பட்டுவிட்டது எனவும், மேற்படியாரையும் இனிமேல் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என்று அறிவுறுத்தப் பட்டுள்ளது. எனவே நல்லாத்துக்குளி கிராமப் பொதுமக்கள் எப்போதும் போல் மேற்படி ஆற்றுப் புறம்போக்கைச் சுடுகாடாகப் பயன்படுத்தலாம் எனவும், பொள்ளாச்சி வட்டாட்சியர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

-அதுல் ஆனந்த், இ.ஆ.ப.,
உதவி ஆட்சியர், பொள்ளாச்சி

### பிரச்சினை:

நாங்கள் பெரியார் மாவட்டம், கோபி தாலுக்கா கிராமம் பாரியூர் நஞ்ச கவுண்டம்பாளையத்தில் வசிக்கின்றோம். இந்திரா காலனி அருந்ததியர்கள். எங்களுக்கு ஆற்றுத் தண்ணீர் ஒழுங்காக வருவதில்லை. வாரம் ஒரு முறை வருவதே கடினம். நாங்கள் கோபி டவுனுக்குப் போய்தான் தண்ணீர் எடுத்து வரவேண்டும். கால்நடையாக இங்கிருந்து போய்விட்டு வந்தால் நேரமாகி விடுகிறது. அதனால் கூலி வேலைக்கு நாங்கள் போகமுடிவதில்லை. எங்கள் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்குப்படி கேட்டுக்கொள்கிறோம்.

-இந்திரா காலனி அருந்ததியர்கள்,
பாரியூர், நஞ்ச கவுண்டம்பாளையம்.

### தீர்வு:

பாரியூர் ஊராட்சி, நஞ்ச கவுண்டம் பாளையம் இந்திரா காலனி அருந்ததியர் காலனியின் மக்கட்தொகை 600 ஆகும். ஊராட்சிகளின் மூலம் அப்பகுதி மக்களுக்கென்றே தரைமட்டத் தொட்டிகள் கட்டப் பட்டு பைப் லைன் போடப்பட்டு குடிநீர் விநியோகம் சீராகச் செய்யப்பட்டு வருகிறது. மேலும், அக் காலனியில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு (கைப்பம்பு) ஒன்றும் உள்ளது. அக் குழாய்க் கிணறு நல்லமுறையில் இயங்கி வருகிறது. குடிநீர் செல்லும் 'பைப் லைன்' ஐந்து இடங்களில் உடைந்து இருந்ததால், அந்தந்தப் பகுதிகளுக்குக் குடிநீர் விநியோகம் தடைப்பட்டது. புகாரில் ஆற்றுநீர் வரவில்லை என்றுதான் குறிப்பிடப் பட்டுள்ளது.

இருப்பினும், தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குத் தகவல் தெரிவிக்கப் பட்டு, குடிநீர் பைப் லைன்கள் சரிசெய்யப் பட்டு, இப்போது குடிநீர் சீராக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதையும் அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

-ஆர்.எஸ். கண்ணன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்
ஈரோடு, பெரியார் மாவட்டம்.



## வணிக நிறுவனங்களின் பெயர்ப்பலகை

# தமிழுக்கு முதல் மரியாதை

(தமிழ் ஆட்சி மொழி - தமிழ்ப் பண்பாட்டுத் துறை சார்பில் தமிழ் வளர்ச்சித் துறை வெளியிட்டுள்ள நூலிலிருந்து)

| | | |
|---|---|---|
| 1. | Accountant | .. கணக்கர், கணக்காய்வாளர், கணக்காளர் |
| 2. | Acknowledgement | .. பெறுகை ஒப்பம், ஒப்புரை |
| 3. | Acid | .. அமிலம் |
| 4. | Acquisition | .. கைப்படுத்துகை, கையகப்படுத்தல் |
| 5. | Additional | .. கூடுதல் |
| 6. | Adhesives | .. பசைமங்கள், ஒட்டிகள் |
| 7. | Adhesives stamp | .. ஒட்டு வில்லை |
| 8. | Advertisers | .. விளம்பர வினைஞர், விளம்பரதாரர் |
| 9. | Agarbathies | .. அகில் மணக்குச்சிகள் |
| 10. | Agency | .. முகவாண்மை, முகவர்கள், முகவாண்மையகம், முகவரமைப்பு |
| 11. | Agent | .. முகவர் |
| 12. | Agro Centre | .. வேளாண்மை நடுவம், வேளாண் மையம் |
| 13. | Agro Industries | .. வேளாண் தொழிலகங்கள், வேளாண் தொழில்கள் |
| 14. | Agro Service | .. உழவுப் பணி, வேளாண்மைப் பணி |
| 15. | Agro Service Centre | .. வேளாண்மைப் பணி மையம் |
| 16. | Air-Conditioner | .. காற்பதனி, குளிர்பதனி, சீர்வளி |
| 17. | Airport | .. வான்நிடல், வானூர்தி நிலையம் |
| 18. | Alarm Time Piece | .. அலறி, மணி அலறி, அலறி மணிப்பொறி |
| 19. | Aluminium Vessel Store | .. அளமியக்கலப் பண்டகம், அலுமினியப் பாத்திரக் கடை |
| 20. | Ambulance | .. மருத்துவ ஊர்தி, உதவுகை ஊர்தி |
| 21. | And Sons | .. மற்றும் மகார், மகாரும் மக்களும், மக்கள், மகன்கள் |
| 22. | Arcade | .. வில் வளைவு |
| 23. | Artisan | .. கைவினைஞர், கைத்திறத் தொழிலாளர் |
| 24. | Artist | .. கலைஞர் |
| 25. | Art Prints | .. கலை அச்சிடுகள், கலை அச்சுக்கள் |
| 26. | Arts | .. கலையகம், கலை, கலைக்கூடம் |
| 27. | Art Service | .. கலைப் பணி |
| 28. | Asbestos | .. கல்நார் |
| 29. | Assistant | .. உதவியாளர் |
| 30. | Associates | .. கூட்டாளி, பங்காளி, துணைமையர், இணைவோர் |
| 31. | Audition | .. கேட்டாய்தல் |
| 32. | Auditor | .. தணிக்கையாளர் |
| 33. | Auditorium | .. கலையரங்கம் |

34. Audio Cassette .. ஒலிப்பேழை, ஒலிநாடா
35. Audio Centre .. கேட்பொலியகம், கேட்பொலி நடுவம், ஒலியகம், ஒலிநாடா மையம்
36. Auto Lining .. தானி-வரிப்பூடு
37. Automatic Watch .. தன்னியக்க மணிப்பொறி
38. Automobiles .. தானியங்கிகள், தானியங்கிகள் விளையகம்
39. Autorickshaw .. தானியங்கிமூவை, தானி, தானியங்கி
40. Auto-Service .. தானிப் பணியகம்
41. Auto Spare Industries .. தானி, உதிரியுறுப்புகள் தொழிலகம், உதிரிப்பொருள்கள் தொழிலகம்
42. Auto-Spare Parts .. தானி-உதிரியுறுப்புகள், உதிரிப்பொருட்கள்
43. Auto-wings .. தானி-சிறகம்
44. Avenue .. நிழற்சாலை, கவின்பாதை, மரம் பயில் சாலை
45. Bakers & Confectioners .. அடுமனையூர் மற்றும் தின் பண்டங்கள்
46. Bakery .. அடுமனை
47. Bamboo Mart .. மூங்கிலங்காடி, மூங்கில் கடை
48. Bankers .. வைப்பகர், வங்கி
49. Bar .. அருந்தகம், மதுக்கூடம், மது அருந்தகம்
50. Bar Soap .. பாளை வழலை, நீள் வழலை, சவர்க்காரம், சவர்க்காரக் கட்டி
51. Battery Service .. மின்கலப் பணியகம்
52. Bazaar .. அங்காடி, கடைத்தெரு, கடைவீதி
53. Beauty Parlour .. அழகு நிலையம், எழில் புனையகம்
54. Beavery .. விலங்குகள் வளர்ப்பிடம்
55. Bedding Mart .. படுக்கை அங்காடி
56. Beeda Stall .. வெற்றிலைச் சுருள் நிலையம், மடி வெற்றிலைக் கடை

57. Beef .. மாட்டிறைச்சி
58. Benefit Fund .. நலநிதி
59. Bhavan .. நிலையம்
60. Binder .. கட்டகர், நூற்கட்டுநர்
61. Binding Works .. கட்டகப் பணியகம், நூற் கட்டகம், நூற் கட்டுப் பணியகம்
62. Biscuits .. ஈரட்டிகள் (உரொட்டிகள்)
63. Block Makers .. அச்சுரு விளைஞரகம், படக்கட்டைத் தொழில், அச்சுருப் பணியகம்
64. Blue Metals .. கருங்கல் நீல மாழைகள், நீல மாழைக் கற்கள், நீலப் பொன்மங்கள், நீல மாழைக் கல்லகம்
65. Boarding & Lodging .. உண்டுறை விடுதி, உணவு உறையுள் விடுதி
66. Body-builders (vehicles) .. உடலம் கட்டுநர் (ஊர்திகள்) ஊர்திகட்டுநர், வண்டி மேற்கூடு கட்டுநர்
67. Boiler .. கொதிகலன்
68. Bore-well Services .. ஆழ்துளைக் கிணறு பணியகம்
69. Breweries .. வடிப்பகம், வடிசாலை
70. Brickfield .. செங்கற் சூளை, காளவாய், காளவாசல்
71. Brick Works .. செங்கல் தொழிற்சாலை-தொழிலகம்
72. Broiler Centre .. இறைச்சிக் கோழி நடுவம் (மையம்) (கடை)
73. Brothers .. உடன்பிறப்புகள்
74. Builders .. கட்டிட அமைப்பாளர், கட்டிடக் கலைஞர், கட்டுநர்
75. Building Society .. கட்டுமானச் சங்கம் - கழகம்
76. Buffet .. எடுத்துண், மகிழ்த்துண், கூட்டுண்
77. Bulb .. குமிழ், குமிழ் விளக்கு
78. Bunk .. பேழுங்கு, மூடிருக்கை, சிறுகடை
79. Bureau .. பிரிவு அறையகம், பேழை, நிலைப்பேழை



80. Business .. வாணிகம்
81. Butcher .. தசை வாணிகர், புலால் விலைஞர், வெட்டுநர், இறைச்சி வெட்டுநர்
82. Button Centre .. பொத்தான் நடுவம், பொத்தான் கடை
83. Cables .. கம்பிவடங்கள், வடக்கம்பி, வடம்
84. Cabs .. வாடகை வண்டி
85. Cafe .. அருந்தகம், உணவகம்
86. Cafeteria .. சிற்றுண்டி நிலையம்
87. Calendar .. நாட்காட்டி
88. Camp .. முகாம்
89. Camphor Works .. கற்பூரப் பணியகம்
90. Campus .. வளாகம்
91. Cane Works .. பிரம்புப் பணிகள், பிரம்பு வினையகம்
92. Canteen .. சிற்றுண்டிச்சாலை, சிற்றுண்டியகம்
93. Canvas .. கித்தான், கிழிச்சீலை, திரட்டு சித்திரப்படம்
94. Carpentry Works .. தச்சுப் பணிகள்
95. Cash Counter .. பணம் ஒப்படைப்பு, பட்டுவாடா அறை, பணம் வழங்குமிடம்
96. Cassette .. பேழல், பேழை, நாடா
97. Ceiling Fan .. முகட்டு விசிறி
98. Cement .. [illegible], பைஞ்சுதை, பைங்காரை
99. Centre .. நடுவம், மையம்
100. Chains .. [illegible] இழை, செயற்கூர் சீட்டு
101. Chalk Industries .. சுண்ணக்கட்டித் தொழிலகம்
102. Chemicals .. வேதிப் பொருள்கள், வேதியல் பொருள்கள்
103. Chicken Centre .. கோழியிறைச்சி நடுவம், கோழியிறைச்சிக் கடை
104. Chit Fund .. சீட்டு நிதி

105. Club .. மன்றகம், சங்கம், விடுதி, உணவகம்
106. Clinic .. மருத்துவகம், மருத்துவ அகம்
107. Coffee Filter .. குளம்பி வடிகட்டி / காப்பி வடிகட்டி
108. Coffee House .. குளம்பியகம் / காப்பி நிலையம்
109. Coffee Mart .. குளம்பித்தூள் அங்காடி, காப்பித்தூள் கடை
110. Coil Industries .. சுருளைத் தொழிலகம், சுருள் தொழிலகம், மின்கம்பிச் சுருளகம்
111. Coir Industries .. கயிற்றுத் தொழிலகம்
112. Collections .. திரட்டுகள்
113. Colour Lab .. வண்ணக்கூடம், வண்ண ஆய்வகம், வண்ணப்பட ஆக்ககம்
114. Colours .. வண்ணங்கள், நிறங்கள்
115. Company .. குழுமம், வணிக நிறுவனம்
116. Complex .. வளாகம்
117. Compound .. அரணகம், சுற்றடைப்பு, சுற்றுச்சுவர்
118. Computer Centre .. கணிப்பொறி நடுவம், கணினி நடுவம், கணிப்பொறி மையம்
119. Concrete Works .. திண்காரைப் பணியகம்
120. Condensed Disc .. செறி தட்டு, செறி தகடு
121. Cone Ice Cream .. கூம்புப் பனிகம்
122. Confectioners .. தின்பண்ட விற்பகம்
123. Constructions .. கட்டுமானங்கள்
124. Consultant .. கலந்துரைஞர், தகவுரைஞர், உசாக்கையர்
125. Containers .. கொள் கலம்
126. Contractor .. ஒப்பந்தகர், ஒப்பந்தக்காரர்
127. Constructor .. கட்டடம் கட்டுநர்
128. Cooker .. பொறியடுப்பு, குட்டடுப்பு, சமைகலம்
129. Cool Drinks .. குளிர்பானங்கள், தண்ணருந்தகம்
130. Corporation .. கட்டிணையம், நிறுவகம், நிறுவனம், கூட்டகம், கூட்டு நிறுவனம்

வாடிக்கையாளர்களுக்கு

எமது

விழாக்கால

மற்றும்

புத்தாண்டு வாழ்த்துக்கள்!

**ஆவின்**

**பால் அருந்தி**

**ஆரோக்கியம் பெறுவீர்!**

நாவின் சுவைக்கு
ஆவின் வெண்ணெய், நெய், பால்பேடா
ஆகியவை அனைத்து பாலகங்களிலும் கிடைக்கின்றது.

ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள்
வாங்கி வளம்பெற வாழ்த்துகின்றோம்.

ஜே.அருமைராஜ், பி.எஸ்சி.,
பொது மேலாளர்

காசி விஸ்வநாதன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்/தலைவர்

**மதுரை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்**
**மதுரை 625 020**

தொலைபேசி 650561-4 தொலையச்சு 0445-210


மறக்க முடியாத

# மழைக் கோரம்!

‘மாரிமழை போற்றுதும்
மாமழை போற்றுதும்’... என்று
பாடிப் பரவசப்பட்டார்
பேராசிரியர் சுந்தரம் பிள்ளை!

‘வானின் றமிழ்வதால் மழையே
அமிழ்தம்’... என்று தம்
எழுத்தோவிய நேர்த்தி
காட்டினார் புரட்சிக் கவிஞர்
பாரதிதாசனார்.

எல்லாம் சரிதான்; ஆனால்
எதுவுமே எல்லை
கடந்துவிடுகிறபோது...?

சரியான காலத்தில்
தொடங்கியிருந்த போதிலும்
ஏழை எளியவர் வாழும்
குடிசைகளைக் காகிதக்
கப்பல்களாக்கிவிடும்அளவிற்கு...

அடுக்கு மாடிகளையும்
அப்பளம் போல் நொறுக்கும்
அளவிற்கு...

அணைக்கட்டைக்கூட
அத்துமீறுகின்ற அளவிற்கு...

தார்ச் சாலைகளையும்,
இரும்புத்
தண்டவாளங்களையும்
மண்புழுக்களாக நெளியச்
செய்கின்ற அளவிற்கு...

ஏரி, குளங்களையெல்லாம்
எல்லை காணமுடியாத
கடல்போல் விரிவாக்குகின்ற
அளவிற்கு...

ஒண்ட ஒதுங்கக்கூட
இடமில்லாத
வறியவர்களுக்கெல்லாம்
உழைக்கவியலா நிலையை
உண்டாக்கியதோடு,
அவர்களில் பலரின்
உயிரையும் குடிக்கின்ற
அளவிற்கு...

விவசாயப்
பெருமக்களையெல்லாம்
வேதனைப்படச் செய்கிற
அளவிற்குத் தமிழ்
நாடெங்கும்... தலைநகரம்



சென்னை மாநகரிலும் சில
நாட்களாகப் பெய்த-அல்ல,
அல்லு கொட்டோ
கொட்டென்று கடும்
காற்றையும் துணைக்கு
அழைத்துக்கொண்டு கொட்டித்
தீர்த்த மழையால் நாம்
அடைந்த, இந்த நாடே
அடைந்த அல்லல்கள் ஒன்றா
இரண்டா எடுத்துச் சொல்ல?

தொடர்ந்து பெய்திட்ட பலத்த
மழை-போதுமடா சாமி இந்தப்
பூமி தாங்காது...
அளவுக்கு மிஞ்சினால்
அமிழ்தமும் நஞ்சு...

விட்டால் போதுமென்று
வேதனைக் குரல்
எழுப்பிடலாயினர்.

ஒருவார காலத்திற்கு
முன்னால் ஒருகை
பார்த்துவிட்டுத்தான்
மறுவேலை என்பது போல்
பெய்த பெருமழை காரணமாக
இலட்சோப லட்சம் பேர்
குந்தக் குடிசையின்றித்
தவித்தார்கள். அவர்கள்
அனைவரையும் பாதுகாப்பான
இடங்களிலே தங்கவைக்கும் பணி
பெரும்பாலும்
அரசினுடையதாயிற்று!

கிராம மக்களுக்கெல்லாம்
உதவிக்கரம் நீட்டி 'யாமிருக்க
பயமேன்' என்று
பாதுகாக்கின்ற பெரியதோர்
சக்தி, அரசுக்குத்
தேவைப்படுவதாயிற்று!

அறுவடையை எதிர்நோக்கிக்
காத்திருந்த
5 இலட்சம் எக்டேருக்குமேல்
நெற்பயிர் நாசம்-
பயிர்களை அடைமழையில்
மூழ்க்விட்டு அரற்றிக்
கொண்டிருந்த
விவசாயிகளைத் தேற்றித்



என்பது போன்ற
பழமொழிகளையெல்லாம்
சொல்லியல்லவா
நம்மையெல்லாம்
புலம்பவைத்துவிட்டது!

குறிப்பாக அண்ணா,
விழுப்புரம் இராமசாமி
படையாட்சியார்,
தென்னார்க்காடு வள்ளலார்,
நாகை காயிதேமில்லத்,
தஞ்சாவூர், ஏடி.
பன்னீர்செல்வம்,
இராமநாதபுரம் மாவட்ட வாழ்
மக்களெல்லாம் மழைக்காகத்
தவம் கிடந்தது போக,

உண்ண உணவின்றி
எண்ணற்றோர்
உயிர்வதைப்பட்டார்கள்;
அவர்களுக்கெல்லாம் நீந்திச்
சென்றும், படகில் போயும்,
ஹெலிகாப்டரில் பறந்தும்
உணவு படைக்கவேண்டிய முக்
கியக் கடமை அரசுக்கு
ஏற்பட்டது.

போக்குவரத்துத்
துண்டிக்கப்பட்ட கிராம
மக்களுக்கு காற்றும், இடியும்,
மின்னலும், மழையும்
கைகோத்துக் கொண்டதால்
கலங்கிப்போன கடலோரக்

தெம்புண்டாக்கும் பெரும்
பொறுப்பு தமிழ்நாடு
அரசினுடையதாயிற்று!

என்ன நேர்ந்தாலும் சரி,
பாசத்தோடு வாக்களித்த
மக்களின் நம்பிக்கை
வீணாகாதபடி நேசக்கரம்
நீட்டுவது நம் கடமை
என்றுணர்ந்து
அங்கிங்கெனாதபடி எங்கும்
பரவலாய் நம் கடமை
உணர்ந்து, கண்ணியம்
கெடாதபடி தமிழ்நாடு அரசின்
காக்கும் கரங்கள் நீண்டன.
தி.மு.கழகத்தை



உருவாக்கியபோது 'ஆபத்துக்
காலத்தில் எங்கள் கழகம்
கட்சி பேதம் பாராது
தீயணைப்புப் படைவீரன்
போல் செயல்படும்!' என்று
அறிஞர் அண்ணா அவர்கள்
சொன்னாரே? அவர் வழி
நடக்கும் மாண்புமிகு முதல்வர்
கலைஞர் அவர்களும் அதன்படி
செயல்படலானார்.

தமிழகத்தில் பெய்த
மழையினால் ஏற்பட்ட
சேதங்களுக்கும், உயிர்
உடைமை இழப்புகளுக்கும்
துயர்துடைப்பு நிதியாக, முதல்
கட்டமாக இருபதுகோடி
ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து
ஆணையிட்டார்.

தமிழகத்தில் ஏற்பட்ட
வெள்ளச் சேதப் பகுதிகளின்
துயர்துடைப்புப் பணிக்குப்
பெரும் நிதி வழங்குமாறு
மாண்புமிகு இந்தியப் பிரதமர்
திரு. தேவகௌடா
அவர்களுக்கு ஒரு கண்ணீர்க்
கடிதம் எழுதினார்.

அன்புள்ள பிரதமர்
அவர்களுக்கு,

தமிழ்நாட்டில் கடந்த ஒரு
மாதமாக தொடர்ந்து மழை-
சுமார் எட்டு மாவட்டங்களில்
ஆயிரக்கணக்கான குடிசைகள்
சேதமுற்றுள்ளன. பயிர்களும்
சேதமுற்றுள்ளன. நாற்பதுக்கு
மேற்பட்டவர்கள்
உயிரிழந்துள்ளனர்.
சென்னையிலும், மற்ற
மாவட்டங்களிலும் எல்லா
சாலைகளும் பெருமளவுக்குப்
பழுதாகிவிட்டிருக்கின்றன.

ஏரிகள் நிரம்பியது
மட்டுமல்லாமல் உடைப்பெடுத்து
ஊருக்குள் புகுந்து கிராமங்கள்
துண்டிக்கப்பட்டு, ஹெலிகாப்டர்
மூலம் உணவுப் பொட்டலங்கள்
வழங்கப்படுகின்றன. சென்னை
குடிசைப் பகுதி மக்கள்
ஒண்டுவதற்கு இடமின்றி

மாநகராட்சிப் பள்ளிகளிலும்,
திருமண மண்டபங்களிலும்
தங்க வைக்கப்பட்டுள்ளனர்.
இன்னமும் மழை
விட்டபாடில்லை. வெள்ளம்
நின்றபாடில்லை.

துயர் துடைப்புப் பணிகளுக்கு
உடனடியாக உதவித்தொகையாக
மத்திய அரசு பெரும் நிதி
வழங்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். மாநில
அரசின் சார்பாக
முதற்கட்டமாக இருபது கோடி
ரூபாய் நிவாரண நிதி ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது
என்பதையும்
தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு மாண்புமிகு முதல்வர்
கலைஞர் அவர்கள் மாண்புமிகு
பிரதமருக்கு எழுதியுள்ள
கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

வெள்ள நிவாரண நிதிக்காக
மத்தியமாநில அமைச்சர்
பெருமக்கள், சட்டப்பேரவை,
நாடாளுமன்ற உறுப்பினர்கள்
தங்களுடைய ஒரு மாதகால
ஊதியத்தையே வழங்கிடுமாறு
உரிமையோடு
கேட்டுக்கொண்டார்.

கொடிய மழை காரணமாக
இனிய உயிரைப்
பறிகொடுத்தோர்
இல்லத்தார்க்குப்
பதினைந்தாயிரம் ரூபாய்
அளிக்க அரசு சார்பில்
ஆணையிட்டார். இது தவிரப்
பிரதமர் நிதியிலிருந்து
இதற்குப் பெரு நிதி
கிடைக்குமென நம்பிக்கை
தெரிவித்தார்.

மாநிலம் முழுதுமுள்ள
மாவட்டங்கள் தோறுமிருந்தும்
மழை காரணமாக துயரச்
செய்திகள் வந்த
வண்ணமிருந்தன. ஆகவே,
அமைச்சர் பெருமக்களை
யெல்லாம் அவ்வப்
பகுதிகளுக்குச் சென்று
ஆறுதல் கூறிடுமாறு
நேரிலேயே அனுப்பிவைத்தார்.
நடந்தும், பேருந்துகளிலும்,
லாரிகளிலும் போய்
அமைச்சர்களே மக்கள்பட்ட
அல்லல்களில் தாமும்
பங்கெடுத்துக்
கொண்டிருக்கிறார்கள்!.

வெள்ள நிவாரணப்
பணிகளுக்காக மேலும் 50
கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு
செய்து ஆணை பிறப்பித்தார்.

பழுதடைந்த சாலைகளைச்
சரிப்படுத்த மட்டுமே 50
கோடி ரூபாய் தேவைப்படும்
நிலை இருப்பதும் இங்கே
நினைவுகூரத்தக்கது.

பெருமழை காரணமாக 75க்கும்
மேலான பாலங்கள் உடைந்து
போக்குவரத்தே இல்லாத
நிலை உண்டாகி, சுமார்
100க்கும் மேலானோர்
உயிரிழந்தனர்.
சுவர் இடிந்து வீழ்ந்தும்
மின் கசிவு, காரணமாகவும்
இன்னுயிர் நீத்திருக்கிறார்கள்.
எண்ணற்ற கால்நடைகள்
மாண்டு மடிந்திருக்கின்றன.
நெடுஞ்சாலைத் துறைக்குச்
சொந்தமான சாலைக
ளெல்லாம், அழிந்த 'சாக்பீஸ்'
கோடுகளாகியுள்ளன



எண்ணற்ற புத்தகங்களைப்
படித்த ஒருவர், பல பெரிய
மனிதர்களின்
வாழ்க்கையைவிட மேலாக
வாழ்ந்து விட்டவராவார்.

[illegible]

வேதாரண்யம் போன்ற பல பகுதிகள், வெள்ளம் சூழ்ந்ததால் தீவுகளாகிவிட்டன. இலட்சக்கணக்கான குடிசைகள் நாசம். மூவாயிரம் குடிசைப் பகுதிகள் தேடிக் கண்டுபிடிக்குமளவிற்கு நீர் தேங்கிச் சிதைந்துள்ளன. சில கிராமங்களையே காணோம். மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் தேர்தல் முடிந்து, போதுமான நிதி ஆதாரத்திற்கு என்ன வழி என்று எதிர்பார்த்திருந்த வேளையில் பெரும் பாதிப்புகளுக்கு ஆளாகியிருக்கின்றன.

சற்றேரக்குறைய 800 ஏரி குளங்கள் கரை கடந்திருக்கின்றன.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்கிற முதுமொழிக்கான முத்தாய்ப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்ற முறையிலே மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சென்னை மாநகரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கெல்லாம் உணவுப் பொட்டலங்கள் வழங்குவதற்காக, சென்னை மாவட்ட தி.மு.க. சார்பாக வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு மு.க. ஸ்டாலின் அவர்களிடம் 150 மூட்டை அரிசி வழங்கியிருக்கிறார்.

அதேபோலத் தமிழ் மாநிலக் கட்சித் தலைவர் திரு ஜி.கே. மூப்பனார் அவர்களும் 250 அரிசி மூட்டைகள் அளித்துத் தம் பெரிய மனதைக் காட்டிக்கொண்டிருக்கிறார்.

டிசம்பர் கடைசியில் பெய்த கனமழையாலும், புயலாலும் கடுமையான சேதத்திற்குள்ளான விழுப்புரம் இராமசாமி படையாட்சியார், தென்னார்க்காடு வள்ளலார், நாகை காயிதேமில்லத் மாவட்டங்களில் நடைபெற்ற நிவாரணப் பணிகளை- சேதமடைந்த சில பகுதிகளை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களே நேரில் சென்று பார்வையிட்டார். நிகரற்ற துன்பங்களுக்கு ஆளான மக்களுக்கு ஆறுதல் கூறினார். அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்களிடம் ஆற்ற வேண்டிய துயர்துடைப்புப் பணிகள் பற்றி அறிவுறுத்தினார்.

இதன் காரணமாகவே, முதல்வர் கலைஞர் அவர்களின் முக்கியமானதோர் டில்லிப் பயணம் ஜனவரிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்தியப் பிரதமரிடம் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 625 கோடி ரூபாய் நிதி கோரப்பட்டுள்ளது. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு நாஞ்சில் கே. மனோகரன் அவர்கள் மூலம் தயாரித்தளிக்கப்பட்ட வெள்ளச் சேத முழு விவர அறிக்கை வெள்ளம் மிகக் கடுமையாகப் பாதித்த பகுதிகளின் புகைப்படங்கள், வீடியோப் படங்கள் ஆகியவை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மூலம் மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 'மழைவிட்டும் தூவானம் விடவில்லை' என்ற கதையாக ஆங்காங்கே தேங்கிக் கிடக்கின்ற மழைநீர் காரணமாக பலவித நோய்கள் பரவிட வழியுண்டு. எனவே, குடிநீரைக் கொதிக்கவைத்து ஆறியபின் அருந்திடுமாறு மக்கள் நல்வாழ்வுத்துறை அறிக்கை விடுத்திருக்கிறது.

சென்னை மாநகரும், அதன் புறநகரும் மழையினாலே மோசமடைந்ததைப் போய்ப் பார்த்துப் போதுமான உதவிகளைச் செய்திடுமாறு மாநகராட்சி அதிகாரிகளை வணக்கத்திற்குரிய சென்னை மேயர் அவர்கள் முடுக்கிவிட்டு வருவது போலவே- தமிழகத்தின் மற்ற மாநகராட்சி மேயர்களும், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களும் பம்பரமாகச் சுழன்று பாடுபட்டு வருகிறார்கள். மழை வெள்ளச் சேதத்திற்குப் பேருதவிபுரிய வேண்டும் என்பதால், திரைப்படத் துறையினரின் வேண்டுகோளின் பேரில் ஒரு நாள் கேளிக்கை வரி மாநில அரசால் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இந்த மாபெரும் பணியில் பாதிக்கப்பட்டோர் வேதனை தீர, நிதிமிகுந்தவர் பொற்குவை தருவீர்...

நிதி குறைந்தவர் காசுகள் அருளுவீர்...

அதுவுமற்றவர் உழைப்பினை நல்குவீர்!

-பி.எல். ராஜேந்திரன்



## சைக்கிள் வீரர்

கரூர் தரன் சின்னமலை மாவட்டம், பசுபதிபாளையம் காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணிபுரியும் திரு.என். சிவாஜி (காவலர் எண்:877) 15.12.1996 அன்று காலை 6 மணிக்கு கரூரில் இருந்து சைக்கிளில் புறப்பட்டு சேலம், கிருஷ்ணகிரி, ஓசூர், பெங்களூர், சித்தூர் வழியாக 668 கிலோ மீட்டர் தூரத்தை விரைவாக 27 மணி நேரத்தில் கடந்து 16.12.96 அன்று காலை 9 மணிக்குச் சென்னை வந்தடைந்தார்.

திரு. என்.சிவாஜி அவர்கள் அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்து, முதல்வர் அவர்களின் வாழ்த்துக்களைப் பெற்றார்.

கடந்த 20 ஆண்டுகளாக சைக்கிளை வேகமாக ஓட்டி அகில இந்திய அளவில் பல சாதனைகளை இவர் செய்திருக்கிறார். இரண்டு காதுகளும் கேளாத இவர், பிரான்சு நாட்டிற்குச் சென்று காது அறுவை சிகிச்சை செய்துகொண்டு, பிரான்சு நாட்டிலும் சைக்கிள் சாதனை நிகழ்ச்சியைச் செய்து காட்ட உள்ளார்.

**வெள்ள நிவாரணப் பணிகள் குறித்து (15.12.96) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்துறை அமைச்சர் திரு. என்.வீராசாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன், மாநகராட்சி மேயர் திரு. மு.க. ஸ்டாலின், உயர் அலுவலர்கள், மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோருடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.**





# அறிவியல் துளிகள்

## மண் அரிப்பு

காற்றினாலும், வெள்ளத்தாலும் பூமியின் மேல்பகுதி பாதிக்கப்பட்டு மண் அரிப்பு ஏற்படுகிறது. இந்த மண் அரிப்பால் பூமி ஆண்டுதோறும் ஒரு சதுர மைலுக்கு 350 டன் மண்ணை இழந்து வருகிறது. இப்படியே போனால் பூமியின் மேல்பகுதி ஒவ்வொரு 22 ஆயிரம் ஆண்டுக்கும் 40 அங்குலம் கீழே போய்க் கொண்டே இருக்கிறது. இன்னும் 2 கோடி ஆண்டுகளில் பூமி கரைந்து கடல்மட்டத்துக்குச் சமமாக வந்துவிடும்.

## கொசு

கொசுவுக்கு 47 பற்கள் இருக்கின்றனவாம். ஆனால் மனிதனுக்கு 32 தான். ஒரு கொசு தன் எடையைப் போல இரண்டு பங்கு இரத்தத்தை உறிஞ்சிக்கொண்டு அதனால் எளிதாகப் பறக்க முடியுமாம்.

## விஷம்

கடல் பாம்புகளில் ஐம்பது வகைகள் இருக்கின்றன. எல்லாமே நச்சுத்தன்மை கொண்டவை. நாகப்பாம்பைப் போலப் பத்து மடங்கு விஷம் உள்ளவை. இதனால் கடிபட்ட மனிதர்கள் 2 மணிநேரத்தில் உயிரிழந்து விடுவார்கள்.

## சிகரெட்

'ஃபில்டர் சிகரெட்டுகள் அதிகம் பாதிக்காது, நச்சுப் பொருளைத் தடுத்து விடுகிறது' என்று பெரும்பாலோர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கையில், பாக்கெட் பாக்கெட்டாகவும் ஊதித் தள்ளுகிறார்கள். ஆனால், சாதா சிகரெட் பிடிக்கிறவர்களைவிட, ஃபில்டர் சிகரெட் பிடிப்பவர்கள் 2 முதல் 4 ஆண்டுகளில் முன்னரே இறந்து விடுகிறார்கள் என்று பென்சில்வேனியாவில் நடத்தப்பட்ட ஓர் ஆராய்ச்சி தெரியப்படுத்தியுள்ளது.

புகை ஆக்ஸிஜனில் கரைவதை, பில்டர் தடை செய்துவிடுகிறது. இதனால், இரத்த ஓட்டத்தில் கார்போக்கி ஹேமகுளோபின் வடிவத்தில் கார்பன் மோனாக்ஸைடு அதிக அளவில் சேர்ந்து விடுகிறது. இதன் காரணமாக இதய இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு, மாரடைப்பு ஏற்படுகிறது.

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட புகை பிடிப்பவர்களில் 50 சதவீதம் பேர் மாரடைப்பாலும், 20 சதவீதம் பேர் புற்றுநோயாலும் பாதிக்கப்பட்டிருந்தனராம்.

## அதிக எண்ணிக்கை

உலகத்தில் விலங்குகளின் எண்ணிக்கையைவிட பூச்சிகளின் எண்ணிக்கை மிக அதிகம். உலகத்தில் உள்ள தாவர இனங்களில் 85 சதவீதம் கடலில் வாழ்கின்றன.

## கடலின் ஆழம்

கடல் மட்டத்திலிருந்து பார்க்கும்பொழுது கடலுக்கு மேலே உள்ள உயரமான பகுதியைவிட, கடலுக்குக் கீழே மிக ஆழமான பகுதியே அதிகம் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். உலகத்தின் மிக உயர்ந்த மலையாகக் கருதப்படும் எவரெஸ்ட்டின் உயரம் 29,028 அடி உயரம்தான். ஆனால் பசிபிக் கடலிலுள்ள மரியானா பள்ளத்தாக்கின் ஆழம் 36,198 அடி.

## தலைக்கு எவ்வளவு நீர் கிடைக்கும்

உலகத்திலுள்ள கடல்நீர் யாவற்றையும், உலகிலுள்ள ஆண், பெண், குழந்தை அனைவருக்கும் பங்கிட்டுத் தருவதென்றால், ஒரு தலைக்கு 11,000 கோடி காலன் தண்ணீர் கிடைக்கும். உலகில் உள்ள தண்ணீரில் 1.6 சதவீதம்தான் பருகுவதற்குரிய நல்ல தண்ணீர் ஆகும். இந்தக் குடிநீரை உலக மக்கள் அனைவருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுத்தால் அப்போது தலைக்கு 4 கோடி காலன் தண்ணீர் கிடைக்கும்.





# இசை கேட்டால் மனம் மகிழ்ந்தாடும்!

"கர்நாடக இசைக்கு நான் விரோதியுமல்ல; பகைவனும் அல்ல; கர்நாடக இசை என்பதே தென்புலத்தில் இருக்கின்ற தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய பகுதிகளிலே புழங்குகின்ற இசைதான் கர்நாடக இசை.

'கர்நாடக இசை என்றதும், அது ஏதோ பழைய காலத்து மைசூர் இசை என்று யாரும் கருதத் தேவையில்லை. அப்படிக் கருதினால், அந்த இசையைக்கூட இங்கே அவர்கள் தருவார்களோ மாட்டார்களோ என்ற அச்சமும் நமக்கு ஏற்படும்.

கர்நாடக இசை, தென்புலத்திலே உள்ளவர்கள் பயின்ற இசை; அவர்கள் இன்றைக்குப் புகழத்தக்க அளவிற்குப் பரப்பியுள்ள இசைதான் இந்த இசை. இன்றைக்கும் அந்த இசையைத் தமிழகத்திலே உள்ளவர்கள் - தென்புலத்திலே உள்ளவர்கள் அதற்குரிய இலக்கண சுத்தமாக அட்சரம் பிசகாமல் தாளம் தவறாமல் ராகம் கெடாமல் பயன்படுத்துகின்ற அறிவொளிகளாகத் திகழ்கின்றார்கள்; இசைச் செல்வங்களாகத் திகழ்கின்றார்கள். சில இசைகளைக் கேட்கிறோம்; வெளிநாட்டிலிருந்தெல்லாம் வருகிறது. ஒரே காட்டுக்கத்தலாக இருக்கிறது. அதற்கும் ஒரு கூட்டம் - விளம்பரம்! ஆனால் மாலியின் புல்லாங்குழல் ஆனாலும், ராஜரத்தினத்தின் நாதஸ்வரம் ஆனாலும் - இவை ஒலித்தால், அவையெல்லாம் இருக்குமிடம் தெரியாமல் போய்விடும்!"

— முதல்வர் கலைஞர்

(15.12.96ல், இசைமன்றத்தின் 70வது ஆண்டு விழாவைத் தொடக்கிவைத்து ஆற்றிய உரையிலிருந்து)

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் (16.12.1996) திருமதி ஏ.வி.எம். ராஜேஸ்வரி அம்மையார் அவர்கள், ஏ.வி.எம். அறக்கட்டளையின் சார்பாக, வெள்ள நிவாரண நிதிக்காக ரூ.2 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார்கள். திரு. ஏ.வி.எம். குமரன் உடன் உள்ளார்.



✲ நீ தாராளமாக இருந்தால் பணக்காரனாக முடியாது; பணக்காரனாக இருந்தால் தாராளமாய் இருக்க முடியாது!



✲ குழந்தை இல்லாதவன் செல்வன் இல்லை; பிள்ளைக்குட்டிக்காரன் ஏழை இல்லை!



✲ பணம் சேர்ப்பவன் ஒருபோதும் களைப்படையமாட்டான்; களைப்படைகிறவன் ஒருபோதும் பணம் சேர்க்க மாட்டான்!





✲ கறியின் ருசி கரண்டிக்குத் தெரியுமோ?

✲ யானையை விழுங்கப் பாம்பு ஆசைப்படலாமோ?





✲ நாணயம் ஒன்றே மதிப்புள்ள நாணயம்!

✲ நாலுபேர் வெட்டும் கேணி நானூறுபேருக்குத் தண்ணீர் தரும்!





✲ வெற்றுக் கைப்பை நிமிர்ந்து நிற்காது!

✲ ஆயிரம் தடவை அளவு எடு; ஒரு தடவை வெட்டு!





✲ பேசுகிறவன் எப்படியிருந்தாலும் சரி; கேட்பவன் புத்திசாலியாக இருக்க வேண்டும்!

✲ எறும்பு போல் இருந்தாலும் சரி; உன் எதிரியை யானைபோல் நினை!





✲ பகைவனையும் நேசிக்கலாம்; ஆனால் வேலியை எடுத்துவிடாதே!

✲ தெரியாத தேவதையைவிட, தெரிந்த பிசாசே மேல்!

தொகுப்பு: பி.எல்.ஆர்.



# உங்களுக்குத் தெரியுமா?

## -மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை-

| திட்டத்தின் பெயர் மற்றும் வழங்கப்படும் சலுகைகள் | தகுதிகள் நிபந்தனைகள் | அணுக வேண்டிய முகவரி |
|---|---|---|
| **மாநில அரசு உதவித் தொகை** | | |
| **அ. பள்ளிப்படிப்பு உதவித்தொகை** அனுமதிக்கப்பட்ட இலவசப் பாடப்புத்தகங்கள் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் வழங்கப்படும். தனிக்கட்டணம், தேர்வுக்கட்டணம் வழங்கப்படும். இச்சலுகைகள் மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு இனத்தவர்களுக்கு 9 மற்றும் 10ம் வகுப்புகளுக்கு மட்டுமே வழங்கப்படும். சீர்மரபினர் இன மக்களுக்கு 6-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை இச்சலுகைகள் வழங்கப்படும். சாதி வருமானச் சான்றிதழ்கள் மட்டுமே அளித்தல் போதுமானது. முறைப்படி உதவித்தொகை விண்ணப்ப மனுவில் விண்ணப்பிக்க வேண்டியதில்லை. | 1. தமிழ்நாட்டைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.<br>2. தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டுள்ள மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு சாதிப்பட்டியலில் உள்ள சாதிகளில் ஏதாவது ஒன்றினை சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.<br>3. இந்து மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு, சீர்மரபினர் வகுப்பிலிருந்து கிறிஸ்துவ மதம் மாறியவர்களுக்கும் இக்கல்விச் சலுகை வழங்கப்படும்.<br>4. தமிழ்நாட்டில் உள்ள அரசு அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனங்களில் பயில வேண்டும்.<br>5. பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.25,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>6. மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவர்கள்/மாணவியர்கள் சென்ற இறுதி தேர்வில் 40 விழுக்காடு மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். சீர்மரபினர் வெறும் தேர்ச்சி பெற்றிருந்தாலே போதுமானது. | சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்/ஆசிரியைகள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்/தனித் துணை ஆட்சியர் (க.சீ.) மதுரை |
| **ஆ. பள்ளி மேற்படிப்பு உதவித்தொகை:** மாணவ, மாணவியர்களுக்கு படிப்புக் கட்டணம் சிறப்புக் கட்டணம், புத்தகக் கட்டணம், இத்துறையால் நிர்ணயிக்கப்பட்ட | மேலே குறிப்பிட்ட நிபந்தனைகள் அனைத்தும் இதற்கும் பொருந்தும். அச்சிடப்பட்ட விண்ணப்ப மனுக்களை கல்வி நிறுவனங்களிலிருந்து பெற்று பூர்த்தி செய்து தேவையான சான்றிதழ்களுடன் இணைத்து நிர்ணயிக்கப்பட்ட காலவரைக்குள் சமர்ப்பிக்கவேண்டும். தமிழ்நாட்டில் உள்ள மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில் பயிலும் தமிழ்நாட்டை சேர்ந்த மிகப் பிற்படுத்தப்பட்டோர் | கல்வி நிறுவனத் தலைவர்கள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள், |

| | | |
|---|---|---|
| விகிதத்திலும், தேர்வுக்கட்டணம், பல்கலைக்கழகம், தேர்வுத்துறை அலுவலர்களால் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்திலும் கல்லூரி விடுதிகளில் தங்கியுள்ள தொலைதூர மாணவ, மாணவியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விகிதத்திலும் உண்டி உறையுள் கட்டணமும் பணமாக வழங்கப்படும். முறைப்படி உதவித்தொகை விண்ணப்பங்களில் கல்வி நிலையங்கள் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். | மற்றும் சீர்மரபினர் மாணவ மாணவியர்களுக்கு இவ்வுதவித் தொகைகள் வழங்கப்படும். | தனித்துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) மதுரை |
| ஆங்கில மொழி வழியில் பள்ளிபடிப்பு பயிலும் மாணவர்களுக்குப் படிப்பு கட்டண விலக்கு சலுகை அளித்தல் (அரசால் நிர்ணயிக்கப்பட்ட படிப்புக் கட்டணம் மாணவ, மாணவியர்களுக்கு அளிக்கப்படும்). முறைப்படி விண்ணப்ப மனுவில் விண்ணப்பிக்க வேண்டியதில்லை. சாதி ஆதாரம் அளித்தால் போதுமானது. | அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் (இதர தனியார் பள்ளிகளுக்குப் பொருந்தாது) 6 முதல் 12-ஆம் வகுப்பு வரை ஆங்கில மொழி வழியில் பயிலும் அனைத்து மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் இன மாணவ மாணவியருக்கு இச்சலுகைகள் பெற்றோர் வருமான வரம்பின்றி வழங்கப்படும். | பள்ளித் தலைமை ஆசிரியர்/ஆசிரியை மற்றும் மாவட்டம் பிற்படுத்தப்படோர் & சிறுபான்மையினர் நல அலுவலர் மற்றும் மதுரை கள்ளர் சீரமைப்பு தனித்துணை ஆட்சியர். |

**3. இலவசக்கல்வி (மூன்றாண்டு பட்டப்படிப்பு)**

| | | |
|---|---|---|
| பி.ஏ., பி.எஸ்.ஸி. மற்றும் பி.காம் போன்ற மூன்றாண்டு பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மற்றும் சீர்மரபினர் இன மாணவ மாணவியருக்கும், பெற்றோர் ஆண்டு வருமான வரம்பின்றி கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்படும்.<br>1. அரசால் நிர்ணயிக்கப்பட்ட படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் (ஆண்டு வருமானம் இல்லை)<br>2. புத்தகக் கட்டணம் இத்துறையால் நிர்ணயிக்கப்பட்ட அளவில் (ஆண்டு வருமானம் ரூ. 25,000)<br>3. கல்வி நிலைய விடுதிகளில் தங்கியுள்ள தொலைதூர மாணவ, மாணவியருக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவில் மாதாந்திர உண்டி உறையுள் கட்டணங்கள் (ஆண்டு வருமானம் ரூ.25,000) | தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற அனைத்து கல்லூரிகளிலும் பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்களும் (கிறிஸ்துவ மதத்திற்கு மதம் மாறியவர்கள் உட்பட) இச்சலுகைகளைப் பெறலாம்.<br>கல்லூரிகளில் பராமரிக்கப்பட்டு வரும் மாணவ/மாணவியரின் சேர்க்கை பதிவேட்டில் உள்ள சாதி விவரங்கள் அடிப்படையில் அவர்கள் பயிலும் கல்வி நிறுவனத் தலைவர்கள் தயாரித்து அனுப்பும் ஒப்பளிப்புப் பட்டியல் அடிப்படையில் இச்சலுகைகள் வழங்கப்படும். தனியே விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டியதில்லை. ஆனால் புத்தகக் கட்டணங்களுக்கும் உண்டி உறையுள் கட்டணங்களுக்கும் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.25,000க்கு உட்பட்ட மாணவ, மாணவியர்கள் மட்டும் முறைப்படி விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்க வேண்டும். | கல்லூரி தலைவர்கள்/மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள், தனித்துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) மதுரை |

**4. இலவசக் கல்வி (தொழிற் பட்டப்படிப்புகள்)**

| | | |
|---|---|---|
| மருத்துவம் பொறியியல், சட்டம் கால்நடை மருத்துவம், விவசாயம் போன்ற தொழிற் பட்டப்படிப்பு பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் & சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துச் சலுகைகளும் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.25,000க்குட்பட்டு வழங்கப்படும். மேலும், குடும்பத்தில் இதற்கு முன்னர் பட்டதாரி எவரும் இருத்தல் கூடாது. | 1. பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.25,000க்கு மிகைப்பட கூடாது.<br>2. மாணவரின் குடும்பத்தில் பட்டதாரிகள் யாரும் இருத்தல் கூடாது.<br>3. தம் குடும்பத்தில் மாணவர் தொழிற் பட்டப்படிப்பு பயிலும் முதல் மாணவராக இருத்தல் வேண்டும். | கல்லூரி தலைவர்கள்/மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள், தனித்துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) மதுரை |

| | | |
|---|---|---|
| **5. இலவச கருவிகள் வழங்கல்** | | |
| சலவைத் தொழிலாளர்களுக்குப் பித்தளை இஸ்திரிப்பெட்டி, முடிதிருத்துவோருக்கு முடி திருத்தும் கருவிகள், போயர் மற்றும் ஒட்டர்களுக்கு கல்லுடைக்கும் கருவிகள் | வருமான வரம்பு ரூ.12,000க்குள் இருத்தல் | சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் |
| **6. குறைந்த வட்டி வீதம் கடன் திட்டங்கள்** | | சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் |
| 1. முடிதிருத்தகம் அமைத்தல் | | |
| 2. சலவையகம் மற்றும் நடமாடும் சலவையகம் அமைத்தல் | வருமான வரம்பு ரூ.12,000க்குள் இருத்தல் | |
| **7. வீட்டுமனை வழங்கல் திட்டம்** | | சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் |
| சொந்த வீட்டுமனை இல்லாத மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மக்களுக்கு வீடு கட்டிக்கொள்ள வீட்டுமனை இலவசமாக 0.03 சென்ட் அளவில் வழங்கப்படும். | மிகவும் பின்தங்கிய/சீர்மரபினராக இருத்தல் வேண்டும் | |
| **விடுதிகள்** | | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், தனித்துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) மதுரை |
| பள்ளி/கல்லூரி/தொழிற்பயிற்சிக் கல்வி நிலையங்களில் பயிலும் தொலைதூர மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியர்களுக்கு அரசு விடுதிகளில் விதிகளுக்குட்பட்டு தங்கும் இடவசதியும், உணவும் இலவசமாக வழங்கப்படும். பள்ளி விடுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கு ஆண்டுக்கு இரண்டு செட் சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும். | பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.15,000க்குள் இருத்தல் வேண்டும். தொலைதூர மாணவ, மாணவியருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ரூ.15,000க்கும் மிகக் குறைந்த ஆண்டு வருமானம் உள்ள மாணவ, மாணவியருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | |
| **8. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்** | | கள்ளர் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் மதுரை (கள்ளர் சீரமைப்பு) தனித்துணை ஆட்சியர் |
| மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் அமைந்துள்ள இத் துறையால் நடத்தப்படும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பிரமலைக் கள்ளர் இன மாணவ, மாணவியருக்கு இலவசக் கல்வி அளிக்கப்படும். ஏனைய இன மாணவ, மாணவியர்களும் இப்பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இவர்கள் அனைவருக்கும் பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மதியஉணவு மற்றும் ஆண்டுக்கு இரண்டு செட் சீருடைகள் முதலியன இலவசமாக வழங்கப்படும். | பிரமலைக் கள்ளர் இன மாணவ, மாணவிகள் முன்னுரிமை அடிப்படையில் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். பெற்றோர் ஆண்டு வருமான வரம்பில்லை. | |
| **9. சுருக்கெழுத்துத் தட்டச்சர் பயிற்சி** | | |
| (சுருக்கெழுத்து - 1 வருடம்) (தட்டச்சு - 6 மாதம்) | கல்வி தகுதி ப்ளஸ் 2 பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.15,000 (தட்டச்சுப் பயிற்சி கீழ்நிலை/உயர்நிலைக்கு) சுருக்கெழுத்து பயிற்சிக்குத் தட்டச்சு தேறியிருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பயிலகத்தில் பயில வேண்டும். | சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் |
| **10. கணிப்பொறி (கம்ப்யூட்டர்) பயிற்சி** (6 மாதங்கள்) | பட்டதாரியாக இருக்க வேண்டும். பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.12,000 | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர், சென்னை-5 செய்தித்தாளில் ஆண்டு விளம்பரம் கண்ணுற்ற பிறகு |

| | | |
|---|---|---|
| **11. கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி** (3 மாதங்கள்) | 10-ஆம் வகுப்பு தேர்ச்சி, எடை 50 கிலோ, உயரம் 160 செ.மீ. வயது 20லிருந்து 28க்குள் ஆண்டு வருமானம் ரூ.12,000 மிதரக வாகனம் உரிமம் பெற்று ஓராண்டு ஆகியிருக்க வேண்டும். கும்மிடிப்பூண்டி சாலை போக்குவரத்து நிறுவன பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படும் | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, இயக்குநர், சென்னை5 செய்தித்தாளில் ஆண்டு விளம்பரம் கண்ணுற்ற பிறகு விண்ணப்பிக்க வேண்டும். மாதிரி விண்ணப்ப படிவம் விளம்பரத்தில் உள்ளவாறு. |
| **12. சட்டப்பட்டதாரிக்கான பயிற்சி** (3 ஆண்டுகள்) | சட்டப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டும். வயது வரம்பு 30. | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, இயக்குநர், சென்னை-5 செய்தித்தாளில் ஆண்டு விளம்பரம் கண்ணுற்ற பிறகு விண்ணப்பிக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவம் விளம்பரத்தில் உள்ளவாறு. |
| **13. ஐ.ஏ.எஸ்/ஐ.பி.எஸ். தேர்வுகளுக்கான பயிற்சி** | தகுதிகள்: பி.ஏ.,பி.எஸ்.ஸி மற்றும் பி.காம்., 80% மதிப்பெண்களுக்குக் குறையாமல் அல்லது எம்.ஏ., எம்.காம் 55% மதிப்பெண்களுக்குக் குறையாமல் அல்லது எம்.எஸ்.ஸி. 65% மதிப்பெண்களுக்குக் குறையாமல் அல்லது தொழிற் கல்வியில் எம்.பி.பி.எஸ்., பி.ஈ.,பி.எஸ்.ஸி. (அக்ரி) பி.வி.எஸ்.ஸி. மற்றும் பி.எல்.<br>சேர்க்கைக்கு ஆண்டு வருமான வரம்பு இல்லை எனினும் விடுதியில் தங்கிப்படிக்க பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.24,000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர், சென்னை-5 செய்தித்தாளில் ஆண்டு விளம்பரம் கண்ணுற்ற பிறகு விண்ணப்பிக்க வேண்டும். மாதிரி விண்ணப்ப படிவம் விளம்பரத்தில் உள்ளவாறு. |
| **14. தொழிற்பட்டப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வுக்கு முன்பயிற்சி (15 நாட்கள்)** | தொழிற்பட்டப்படிப்பிற்கான நுழைவுத் தேர்விற்கு விண்ணப்பித்த அத்தாட்சி சமர்பிக்க வேண்டும். ஆண்டு வருமான வரம்பு இல்லை. | தலைமை ஆசிரியர்கள் அரசு/அரசு உதவி பெறும் உயர்/மேல்நிலைப் பள்ளிகள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித் தலைவரின் பத்திரிக்கைக் குறிப்பு. |
| **15. உணவு மானியம் (தனியார் விடுதிகள்)** | ஆண்டு வருமானம் ரூ.15,000 இத்துறையின் அங்கீகாரம் பெற்ற தனியார் விடுதியாக இருத்தல் வேண்டும். | அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள். |

**முதலாம் அட்டை:**

**செங்கை அண்ணா, விழுப்புரம் ராமசாமி படையாட்சி மாவட்டங்களில் வெள்ளச்சேதப் பகுதிகளைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இவவச வேட்டி, சேலை, அரிசி வழங்கினார்.**

**இரண்டாம் அட்டை:**

தேசிய போலியோ சொட்டு மருந்து நாளையொட்டி எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் போலியோ சொட்டு மருந்து முகாமினைத் தொடங்கிவைத்து, குழந்தைகளுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சொட்டு மருந்து வழங்கினார்.

**நான்காம் அட்டை:**

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சென்னையில் மழையினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று, பார்வையிட்டு அப்பகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, அவற்றைக் களைந்திட அலுவலர்களுக்கு ஆணையிட்டார்.

ஓசூரில் ரூ.630 கோடி மதிப்பீட்டில் அசோக்லேலண்ட் கட்டியுள்ள 2வது ஆலைத் திறப்பு விழாவில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு தேவகௌடா, மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு ப.சிதம்பரம் ஆகியோர் கலந்துகொண்டனர். "தமிழக வெள்ள நிவாரணப் பணிக்கு முதல் கட்டமாக இருபத்தைந்து கோடி ரூபாய் அளிக்கப்படும்" என்று அவ்விழாவில் பிரதமர் குறிப்பிட்டார்.



ஆசிரியரும் வெளியிடுபவரும்: ந.ச. பழனியப்பன். இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
துணை இயக்குநர்: டி.பி.எஸ்.சுந்தரநாதன், உதவி இயக்குநர்: எம்.அண்ணாமலை
ஆசிரியர் குழு: கே.டி. புகழேந்தி, ஜி. லோகநாதன், எம்.வி.எம். அசோகன், அமதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி.பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள்: என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண்: 568926, 568927



# ஆசிரியர் மடல்



இன்று புத்தாண்டு - ஆங்கிலப் புத்தாண்டு! 'நாம் நம்முடைய குழந்தையை அள்ளியெடுத்துக் கொஞ்சுவது, மற்றவர்களுடைய குழந்தைகளை உதாசீனப்படுத்துவது ஆகிவிடாது' என்று கூறினார், பேரறிஞர் அண்ணா அவர்கள்.

அந்த வகையில்_ 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று கூறி நாம் பெருமிதம் கொள்ளுவதானது, மற்றெல்லா மொழிகளையும் துச்சம் எனக் கருதுவதுதாகிவிடாது.

வணிக நிறுவனங்களுக்கேற்ற தமிழ்ச் சொற்கள்பற்றி, தமிழ் வளர்ச்சித் துறையினர் நூல் ஒன்று வெளியிட்டுள்ளனர்; அதில் அணிந்துரை எழுதியுள்ள மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும் அந்தக் கருத்தைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

எனவே, அந்த அடிப்படையில்_ 'தமிழரசு'_ வாசகர்கள், முகவர்கள், விற்பனையாளர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் வாழ்த்தும் வணக்கமும் தெரிவித்து மகிழ்கிறது.

கடந்த ஆண்டில், 'தமிழரசு' இரண்டு கவிதைப் போட்டிகளை நடத்திப் பெருமை கொண்டது: அண்மையில் நாம் நடத்திய போட்டியில் பரிசு பெறும் இரண்டு கவிதைகள், இந்த இதழில் எழிலூட்டிக் கொண்டிருக்கின்றன. பாராட்டுக்குரிய மற்ற சில கவிதைகள், அடுத்த இதழினை அலங்கரிக்கவிருக்கின்றன.

விரைவில்_ சிறுகதைப் போட்டி ஒன்று அறிவிக்கப்படவிருக்கிறது!

அன்பர்கள், தொடர்ந்து நல்லாதரவு நல்கி - நமது 'தமிழரசு' ஏட்டின் தூய தமிழ்ப் பணிக்கு இன்றுபோல் என்றும் இதயபூர்வமான நல்லாதரவு அளித்திட வேண்டுகிறோம்.

-ஆசிரியர்








தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...

செந்தூரப்பூபோல் சிகப்பு...

மங்களகரமான மஞ்சள்...

வான்வெளிபோல் நீலம்...

கற்பனைக் கடங்கா

அற்புத வண்ணங்களில்

நேர்த்தியான பட்டு,

நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.






பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23









## இந்த இதழில் ...


★ வளம் பெறுக! நலம் பெறுக!
- முதல்வரின் பொங்கல் வாழ்த்து ........ 2

★ வெற்றி மேல் வெற்றி
- டாக்டர் ஔவை நடராசன் ........ 5

★ நாடகத் தமிழ்
- இராம. நாராயணன்,
தலைவர், இயல், இசை நாடக மன்றம் ........ 6

★ வானமே வந்து விடு!
- கவிஞர் மு. மேத்தா ........ 9

★ கவின்மிகு தமிழ்க் கலைகள் ........ 10

★ இசையைப் போற்றுவோம்
- முதல்வர் கலைஞர் ........ 16

★ பவளக்கால் நூலான்
- கே.சி.எஸ். அருணாசலம் ........ 20

★ அறிவியல் துளிகள் ........ 28

★ கவிதைச் சோலை ........ 30

★ இசைத் தமிழ்
- இசைப் பேரறிஞர் டி.ஆர். பாப்பா ........ 34

★ வலிப்பு நோய்
- டாக்டர் கே.எஸ். ஜெயராணி ........ 37

★ எங்கள் ஊர் பிரச்சினை ........ 41

★ வேலைவாய்ப்புச் செய்திகள் ........ 45

★ அரசு உதவி பெற யாரை
அணுக் வேண்டும் ........ 46

★ ஆசிரியர் மடல் ........ [illegible]



**தமிழரசு**

திருவள்ளுவராண்டு: 2028
தைத் திங்கள் : 3
மலர்: 27 இதழ்: 14
16.1.1997
விலை: ரூ. 3

மாண்புமிகு முதல்வரின் பொங்கல் வாழ்த்து:



# வளம் பெறுக! நலம் பெறுக!

மஞ்சளும், கரும்பும் நெல்லும் மற்றுள பலவும் தந்து, பஞ்சமும் பசியும் போக்கப் பாரிலே பாடுபடும் உழவர்களின் திருநாளே பொங்கல் திருநாள்; காடுதிருத்திக் கழனிகள் செப்பனிட்டுப் பட்ட பாட்டுக்குப் பலன் கண்டு, அவர்கள் மகிழ்ந்தால் அவனி மகிழ்ந்திடும்; ஆனால் இந்தப் பொங்கல் நாளில்...?

உளந்தளராது உயர்விளைச்சல் தரும் தானிய வகைகளைப் பெரும் பரப்பில் பயிரிட்டு, அதன் பயனை அனுபவித்திடும் நேரத்தில் 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டும் தறுவாயில் தட்டிப் பறிப்பதைப் போல' மழை வெள்ளம் ஏற்பட்டு வெகுவாகச் சேதம் விளைவித்து விட்டது.

இயற்கை தரும் இன்னல்களுக்கு எதிராக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க, விடாமுயற்சியுடன் பாடுபட்டுவரும் தமிழ்நாடு உழவர் பெருமக்களுக்கு என் உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உழவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி 'மேழி பிடிக்கும் கை, மேதினி ஆளும் கை' என்ற நிலைமைக்குக் கொண்டுவர வேண்டுமென்பதற்காக அரசு பல்வேறு வகையிலும் முயன்று வருகிறது. உழவர் திருநாளாம் பொங்கலன்று, உழவர் பெருமக்கள் அனைவரும் 'ஒருமணித் தானியம் விளைந்த இடத்தில் இருமணித் தானியம் விளைவிப்பேன்; ஒருகதிர் விளைந்த இடத்தில் பலகதிர் விளைவிப்பேன்; ஒருபோகம் விளைந்த இடத்தில் இருபோகம் விளைவிப்பேன்' என்ற உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், உங்கள் முயற்சிக்குத் தமிழ்நாடு அரசு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கத் தவறாது என்ற உறுதியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட இடங்களில், நிவாரணப் பணிகள் போர்க்காலப் பணிகளைப் போல் விரைந்து நடைபெற்று வருகின்றன.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்பதற்கொப்ப பசிப்பிணி மருத்துவர்களாக விளங்கும் உழவர் பெருமக்களின் வாழ்வு வளம் பெறுக; நாட்டு மக்கள் அனைவரும் நலம் பெறுக, என இப் பொங்கல் திருநாளில் வாழ்த்துகின்றேன்.











# பெரியார் - திரு.வி.க - பாவேந்தர் விருது

பெரியார், திரு.வி.க., பாவேந்தர் விருது வழங்கும் அரசு விழா 25.12.96 அன்று மாலை சென்னை கலைவாணர் அரங்கத்தில் சிறப்பாக, ஆனால் எளிமையான முறையில் நடைபெற்றது.

விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பெரியார் விருதினைத் திருவாரூர் தங்கராசு அவர்களுக்கு தங்கப் பதக்கம் அணிவித்து, 20 ஆயிரம் ரூபாய்க் கான பொற்கிழியையும் வழங்கி சிறப்பித்தார்.

திரு.வி.க. விருதினைப் பேராசிரியர் முனைவர் மா. நன்னன் அவர்களுக்கு உவந்தளித்து, 20 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையினையும் முதல்வர் வழங்கினார்.

தொடர்ந்து, முதல்வர் அவர்கள் பாவேந்தர் விருதைக் கவியரசு வைரமுத்து அவர்களுக்கு அளித்து, 20 ஆயிரம் ரூபாயையும் அளித்து மகிழ்ந்தார்.

விழாவில், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டு துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையுரையாற்றினார். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் தொடக்கவுரையாற்றினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

விருதுகள் பெற்ற மூவரும் ஏற்புரை ஆற்றினார்கள்.

நிறைவாக முதல்வர் கலைஞர் அவர்கள் விருது பெற்றவர்களை வாழ்த்திப் பேருரையாற்றினார்

அவர் பேசும் போது, "பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் 'பெரியார் ஆய்வு இருக்கை' விரைவில் அமையும் என்று அறிவித்தார்.

முன்னதாக- தமிழ் பண்பாடு மற்றும் வளர்ச்சித்துறை செயலாளர் திரு. வை. பழனிச்சாமி வரவேற்புரையாற்றினார். விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் திரு. ஆர்.எம். வீரப்பன், திரு. ஆனூர் ஜெகதீசன் மற்றும் சான்றோர்கள் பலர் திரளாக வந்து கலந்துகொண்டனர்.

## அட்டைப்பட விளக்கம்

**முதலாம் அட்டை:**

தமிழர் திருநாளாம் பொங்கல் விழா காட்சிகள்

**இரண்டாம் அட்டை:**

பெரியார் - திரு.வி.க. - பாவேந்தர் விருது வழங்கும் விழா.

**நான்காம் அட்டை:**

தமிழகத்தில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட மத்திய நிபுணர் குழுவினர், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களைச்சந்தித்தனர் (30.12.1996).





செங்கதிரோன் தன்னொளியைப் பெற்ற தாலே
செந்நெல்வயல் பொன்னொளியாய் எதிர் ஒளிக்கும்
பொங்கலெனும் மங்கலநாள் வந்த திங்கே!
புது வளத்தால் மாந்தரெலாம் நலமே காண்பார்
எங்களது வாழ்வினொடு நலமும் எல்லாம்
இயலிசையாய் நாடகமாய் இலங்கு கின்ற
மங்காத தமிழென்ற புரட்சிப் பாட்டை
மனங்கொண்டு தமிழ்த்திருநாள் மகிழ்கின் றோமே!

கலைஞர் தமிழ் முதல்வரெனக் காட்சி நல்கி
கருணைக்கோர் நிதியமவர் நீதி யாளர்
தலைவரெனத் தமிழ்காக்கும் தலைமையேற்றர்
தன்னிகரில் அன்பினொடு தறுகண் தாங்கி
நிலைமைபெறும் தமிழ்க்குடிநன் மகனாய் நிற்பார்
நிறைபணிகள் நெஞ்சாரச் செய்ய வல்லார்
அலைகடலாய் ஆர்ப்பரிக்க அனைவர் நெஞ்சும்
அகமகிழ ஆள்கின்றார் அறத்தி னோடு!

தமிழ்காக்கத் தன்னலத்தைத் துறந்த மேலோர்
தன்மானப் பேரியக்கத் தகைமை சான்றார்
தமிழ்நலமும் தமிழுணர்வும் தமிழர் வாழ்வும்
தழைத்திடவே முயல்கின்றார் தடைகள் தாண்டி!
தமிழறிந்தார் முதலமைச்சர் என்ற போது
தமிழ்மனங்கள் தையென்று தாள மிட்டுத்
தமிழகந்தான் உயருமினி உலகு போற்றும்
தன்மைபெறும் என்றுணர்த்த வருக தைநாள்!

முத்தமிழின் புகழ் மணக்கும் தமிழர் நாட்டில்
மூவேந்தர் ஆண்டபுகழ் மீண்டும் தோன்ற
எத்திசையும் புகழ்மணக்கும் ஏற்றம் கொண்டோர்
ஏந்தியநற் கொள்கையினார் ஆட்சி யேற்றார்
தைத்திருநாள் வந்ததின்று மகிழ்ச்சி பொங்கத்
தமிழ்த்திருநாள் மலர்ந்ததின்று புதுமை பொங்க!
வித்தகமே நிறைந்திருக்கும் தமிழர் வாழ்வீர்
வெற்றியின்மேல் வெற்றியினி விளையும் நன்றே!

தைமகளும் வந்துவளம் தரப்போகின்றாள்
தடையாக நின்றபல தகர்ந்து வீழ
பொய்மைகளும் புரட்டுகளும் பொடியாய்ப் போக
புதுமைகளும் பெருமைகளும் பூத்து நிற்கச்
செம்மைதரும் செந்தமிழின் கீர்த்தி தங்கும்
சிந்தையிலே பெருமகிழ்ச்சி வெள்ளம் பாய்த்
தம்மைநிகர் இல்லாத தனிமாண் போடு
தமிழ்த்திருநாள் பூத்ததின்று பொங்கல் நன்னாளாய்!



- டாக்டர் ஔவை நடராஜன்




கூற்கள் காற்றோடு உரசி மண்ணைப் பிரசவிப்பதற்கு முன்பே அன்னையின் கருவில் உருவாகி விட்டான் தமிழ்மகன்.

உலகம் ஊமையாக இருந்த போதே ... பேசிச் சிரித்தவன் பழந்தமிழன்.

ஏனையோர் ஓசைகளை பாஷையாக்க முயற்சிக்கும் முன்னரே... மொழிக்கு எழுத்தைக் கண்டவனும் முன்தோன்றிய மூத்த குடிமகன் தான்!

மூங்கிலோடு பேசும் தென்றலின் மொழியை, தானே ஜதி சொல்லியபடி தாளநயத்தோடு ஓடும் அருவியின் ஓசையை

தேன் வண்டுகளின் தெவிட்டாத ரீங்காரத்தையும் இசையாக மொழி பெயர்ந்தவனும் இன்பத்தமிழன் தான்.

இயலையும் இசையையும் கலந்தொரு புதிய வடிவத்தை உருவாக்கி அதற்கு நாடகம் எனும் நாமதேயம் தந்ததும் நற்றமிழ் நாயகன்தான்.

மூலாதாரமான தமிழ் அன்னையின் மூன்று அவதாரங்கள்தான்... இயல்தமிழ் இசைத் தமிழ் ... நாடகத் தமிழ்.

முத்தமிழால் அன்னை முப்பெருந்தேவியாகி இயல் தமிழால் பேசினாள், இசைத் தமிழால் பாடினாள், நாடகத் தமிழால் ஆடினாள்.

## இராம. நாராயணன்
### தலைவர்
### இயல் இசை நாடக மன்றம்

எனது நெற்றிப் புருவம் மேலும் சுற்றி கேள்விக்குறியாய் வளைந்து நின்று ஒருவினாவை எழுப்புகிறது.

நாடகம் தோன்றி எத்தனைக் காலமாகிறது?

காற்றின் மூலத்தையும் ஒளியின் ஆதாரத்தையும் கண்டறிவதைவிட கடினமான பணி நாடகக் கலை கருவான காலத்தைக் கண்டு பிடிப்பது.

விழுதுகளே வேர்களாகி நின்று தாங்கிக் கொண்டிருக்கும் ஆலவிருட்சத்தின் மூலவித்தைத் தேடினால் மூளைக்கு எட்டாது.

எனினும்- சரித்திரத்தின் கண்ணுக் கெட்டிய தூரத்தை உங்கள் செவிக்கு எட்ட வைக்க வேண்டுமெனச் சில செய்திகளைச் சொல்லுகிறேன்.

அகத்தியன்-

தமிழைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டி தோளிலிட்டுச் சீராட்டி வளர்த்த தமிழ்க் கிழவன்.

தமிழ் வயலுக்கு வரப்புயர்த்தி வாய்க்கால் வெட்டி பாத்திகட்டிய.. மொழி உழவன் அக்த்தியன் தந்த "அகத்தியம்" என்ற அரிய இலக்கண நூல். இயல் இசை நாடகமென்னும் முத்தமிழை முறைப்படுத்தியதால் அந்நூல் .. நாடகம் பற்றிய செய்திகளை நிறையச் சொல்லுகிறது. எனின்.. அதற்கும் முந்தியது அன்றோ நாடகக் கலை..!

தொல்காப்பியத்திற்கும் தொன்மையான நாடகக் கலை ஆரம்பக் காலத்தில்

**அகக்கூத்து**
**புறக்கூத்து**
**வேத்தியல்**
**பொதுவியல்**
**வரிக்கூத்து**
**வரிச்சாந்திக்கூத்து**
**சாந்திக் கூத்து**
**விநோதக்கூத்து**
**இயல்புக்கூத்து**
**தேசியக்கூத்து**

-என்று பலவகைக் கூத்துகள் இருந்ததாக ஆராய்ச்சியாளரின் கூற்றுகள் மூலம் தெரிகிறது.

அதில்-

வேந்தர்க்காக ஆடிய கூத்து வேத்தியல் கூத்து.

பொது ஜனங்களுக்காக ஆடியது பொதுவியல் கூத்து.

அன்று. கோலோச்சுபவர் முதல் குடிமக்கள் வரை கண்டுகளிக்கப் பட்ட அந்தக் கூத்துகள்தான் நாட்டின் அகத்தைப் பிரதிபலிக்கும் நாடகம் ஆகி... இன்று நாடாண்டு கொண்டிருக்கிறது என்றால் அந்தப் பெருமை தஞ்சை மண்ணையே சாரும்.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை தத்தித்தவழ்ந்து நடைபயின்று கொண்டிருந்த நாடகக் கலை சோழப் பேரரசு தோன்றிய காலந் தொட்டு சோர்வு நீங்கி வீறுநடை போட ஆரம்பித்தது.

நெல்லுக்குக் களம் கண்ட சோழர்கள் நல்ல பல நாடகத்திற்கும் மேடை கண்டனர்.

பாட்டாளி மக்களின் உழைப்பை வர்ணிக்கும் 'பள்ளு' நாடகம்...

குறிஞ்சி நிலக் குறவர்களின் மோகத்தை மையப்படுத்திய 'குறவஞ்சி' நாடகம்...

திருடிப் பிழைத்துப் பின் திருந்திவாழும் திருடர்களின் கதை கூறும் 'நொண்டி' நாடகம்...

என்ற மூவகை நாடகங்களும் முன்னோடி நாடகங்களாகும்.

இப்படியெல்லாம் கோவிலிலும் தெருவிலும் ஆடப்பெற்ற நாடகங்களை மேடைக்குக் கொண்டுவந்த முன்னோர்களில் முதன்மையானவர், சீர்காழி அருணாச்சல கவிராயர்.

அவருடைய நாடகத்தில் பாடப் பெற்ற அற்புதமான கீர்த்தனைகள் இன்றும் இசை விழாக்களில் கரவொலி பெறுகிறது.

கவிராயர் காலத்தில் வந்த மேடைக்கு வெள்ளைத் திரைக்குப் பதில் வண்ணத்திரை கட்டி அழகு பார்த்தவர் கோவிந்தசாமி ராவ்.

விடிய விடிய நடந்து வந்த நாடகத்தின் கால அளவை மூன்று மணியாகச் சுருக்கியவர் நாடகத் தந்தை பம்பல் சம்பந்த முதலியார்.

பம்மலார் தம் மேடையில் மேநாட்டு முறையில் நாடகங்களைத் தந்தபோது 'பவளக்கொடி', 'வள்ளித் திருமணம்' என நாட்டுப்புற அம்மானைக் கதைகளையும் தெருக்கூத்துக் கதைகளையும் மேடைக்குக் கொண்டுவந்தவர் சங்கரதாஸ் சுவாமிகள்.

தொடர்ந்து...

-நாட்டுப்பற்றை நாடகமாக்கிய தெ.பொ.கிருஷ்ணசாமிப் பாவலர்.

-நாவல்களுக்கு மேடை வடிவம் தந்த எம்.கந்தசாமி முதலியார்.

-நடிப்பின் சிகரம் எம்.கே.ராதா.

-பிரம்மாண்டத்தை மேடையில் காட்டி பிரமிப்பை உருவாக்கிய நவாப் டி.எஸ்.ராஜமாணிக்கம் பிள்ளை.

-வீரபாண்டிய கட்டபொம்மனை மேடையில் வீரமுழக்கமிட வைத்த சக்தி கிருஷ்ணசாமி.

-சடையர், என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் எள்ளல் நாடகத்தின் வள்ளல் எம்.ஆர். ராதா.

-அறுபது ஆண்டுகளுக்கு முன்பே முப்பரிமாணத்தை (Three Dimension) மேடையில் புகுத்தி அற்புதம் செய்த சி. கன்னையா.

-நாடக உலக சகாப்தமாகப் பேசப்பட்ட நால்வர், டி.கே.எஸ். சகோதரர்கள்.

-சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த கலைவாணர்.

-திரையில் முடிசூட்டப்பட்டாலும் பிறந்த வீட்டிற்குச் சேவை செய்த புரட்சி நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரன்.

-நடிகர் திலகம் சிவாஜி கணேசன்.

நாடகத்தில் வளர்ந்து நாடகத்தையும் வளர்த்தவர்கள் பட்டியல் போட பக்கங்கள் போதாது. அனைத்துக்கும் மேலாக...

அதுவரை பாடிக் கொண்டிருந்த சினிமாவைப் பேசவைத்துப் பெருமை பெற்ற... அறிஞரும், கலைஞரும் 'பகுத்தறிவு' பேசியது நாடக மேடையில்தான். சுயமரியாதையைச் சொல்லித் தந்தது நாடக மேடையில்தான்!

அன்று, நாடகமேடை வழியே பொதுக்கூட்ட மேடைக்குவந்த அறிஞர் அண்ணாவும், கலைஞரும் தாங்கள் செய்த நாடகப் புரட்சியால் நாடாளும் தகுதியைப் பெற்றார்கள் என்றால் மிகையாகாது.

இப்படி எத்தனையோ சிறப்புகள் பெற்ற நாடகக் கலை நேற்று திரைப்படம் தோன்றியபோது திகைத்து வழிவிட்டது.

இன்று சாட்டிலைட் டி.வி. விஞ்ஞானப் புயலில் சிக்கிச் சுழன்று திசை தெரியாமல் தடுமாறுகிறது என்பது கசப்பான உண்மையென்றாலும்-

நாடு வாழ நாடகக்கலை வாழவேண்டும் என்ற அடிப்படையில் அந்த உன்னதமான கலையை வாழவைக்கவேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

அன்று- தஞ்சையை ஆண்ட ஒரு மன்னன் நாடக ஆசிரியர்க்குச் சொர்ணாபிஷேகம் செய்தான்!

அது- நேற்றைய வரலாறு.

தஞ்சைத் தரணியில் பிறந்த தங்கத் தலைவராம் நம் கலைஞர் அவர்கள் பொன்மழைபோல் பொருள்மழை பொழிந்து, நாடகக் கலையை வாழவைக்கிறார்- வாழ வைப்பார்...

இது நாளைய வரலாறு.





## எங்கள் வாழ்த்து!

தமிழர் திருநாளாம் பொங்கல் விழா நாளில் - வாசகர்களுக்கும், முகவர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும், ஏனையோருக்கும் 'தமிழரசு' மனங்கனிந்த நல்வாழ்த்ததைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

-ஆசிரியர்



# வாசகர் இதயம்

மக்களின் நலனில் அக்கறை கொண்டு, தொடர்ந்து மருத்துவக் கட்டுரைகள் வெளியிட்டு வருகிறீர்கள்; இதயநோய் பற்றிய கட்டுரை நன்றாக இருந்தது.

-எஸ். நாகராஜன்,
மேலப்பாதி.

மூதறிஞர் ராஜாஜி பொன்மொழிகளைத் தொகுத்து வெளியிட்டிருந்தது மிக அருமையாக இருந்தது.

-க. சந்திரசேகரன்,
தாராபுரம்.

அரசு உதவிகளைப் பெறத் தக்க வழிமுறைகளை வெளியிடுவது பயனுள்ளதாக இருக்கிறது; இதுபோல் எல்லாத் துறைகள் பற்றியும் வெளியிடுங்கள். நகைச் சுவைத் துணுக்குகளை வரவேற்கிறோம்; நிறுத்திவிடாதீர்கள்.

-வ. செயராமன்,
ஆவணியாபுரம்.

'கம்பனும் பாரதியும்', 'கம்பர் கவிநயம்' இலக்கியக் கட்டுரைகள் கட்டிவெல்லமாக இனித்தன; சிறுவர் முதல் பெரியோர் வரை, இவ்வாறு படித்து மகிழத்தக்க இலக்கியக் கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடுமாறு வேண்டுகிறேன்.

-க. நஞ்சையன்,
பாலசமுத்திரம்.

பயன்மிகுந்த படைப்புகள் பலவரும் 'தமிழரசு' மென்மேலும் வளர்ச்சி பெற வாழ்த்துகிறேன்.

-ந. சரவணன்,
இலுப்பூர்.

நம் நாட்டுத் தலைவர்கள், அறிஞர்கள், மேதைகளின் அறிவுரைகளை மட்டுமன்றிப் பிற நாட்டினரின் அறிவுரைகளையும் மொழி பெயர்த்து நிறைய வெளியிடுங்கள்.

-ஜி. மூர்த்தி,
பழம்பேட்டை-தி.ச.மா.

முன்பு, ஆளும் கட்சியின் விளம்பர ஏடாக மட்டுமே வந்த 'தமிழரசு', தற்போது மிகவும் பயனுள்ள பல நல்ல செய்திகளுடனும், நல்ல திட்டங்களுடனும் வெளிவருகிறது. இது பாராட்டத்தக்கதும், வரவேற்கத் தக்கதும் ஆகும்.

-ஜே. நாகராஜ்,
எடமலைப்பட்டி, புதூர்,
திருச்சி.

'ராகிங்' கொடுமை பற்றி 'ஆசிரியர் மடலில்' கூறப்பட்ட விளக்கங்களின் விளைவே, அதன் மீது தடைபோடப்பட்டது என நினைக்கிறேன்; கடைசிப் பக்கம் கருத்துப் பக்கமாக இருக்கிறது. அதேபோல அரசு ஆணைகளை வெளியிடுவதும் ஆக்கபூர்வமானதாகும்.

-ப. முருகேசபாண்டியன்,
கரப்பாடி.

தமிழனுக்காகவும், தமிழுக்காகவும், தமிழகத்திற்காகவும் 'தமிழரசு' ஆற்றிவருகின்ற தன்னிகரில்லாப் பணிகளுக்குத் தலை வணங்குகிறோம்.

-கா.நா. ராஜசேகர்,
மங்களபுரம்.

இப்போதெல்லாம் 'தமிழரசு' பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷமாகி விட்டது.

-ஆ. ஆத்மநாதன்,
பட்டுக்கோட்டை.

'கோடு தாண்டிய கோதை' கதைபோல் சிறந்த சிறுகதைகள் அடிக்கடி 'தமிழரசில்' இடம்பெற வேண்டுகிறேன்.

-கு. அன்பழகன்,
சின்னசேலம்.





# வானமே வந்துவிடு!

- கவிஞர். மு. மேத்தா

கை வளையல் கிணுகிணுக்கக்
காலமகள் வாசலிலே
தை மகளும் – என்
மை மகளும்
தமிழ்க் கோலம் போடுகிறார்!

கண்ணை இறுக்கிய
கட்டவிழ
காதலென்னும் மொட்டவிழ
பச்சை வயல் பட்டவிழ...
பொன்னை உருக்கிய
புதிய உதயமெனும்
பொங்கல் வருகிறது!

சின்ன மணிக்கொலுசு
சிணுங்க வந்திருக்கும்
கன்னி இளமயிலைக்
காதலுடன் வரவேற்போம்!
வைகறைகள் வருக!
கறைகளில்லாத
வைகறைகள் வருக!

ஆதரவில்லாத
அபலைகள்மீது
அக்கறைகள் கொண்ட
வைகறைகள் வருக!

நாம் மண்ணில் ஏற்படுத்தும்
மகிமைகள்...
வானத்தை இனிமேல்
வருத்தப்பட வைக்கட்டும்!

அந்த வானம்–
போகமுடியாதா
பூமிக்கென்று
புலம்பட்டும்!

நட்சத்திரங்களை
நம் வீட்டுச்
சின்னச் செடிகளில்
புஷ்பங்களாகப்
பொருத்தலாம்!





நம்முடைய
இல்லத்தரசிகளின்
முகங்களோடு
மோதமுடியாமல்
நிலவுகள்
நெளியட்டும்!

நிமிர்ந்த நம் இளைஞரின்
நெருப்பு விழிகளுக்குள்
சூரியனும் வந்து
சுழலட்டும்!

மானுடத்தின்
பளிங்கு மனங்களைப்
பார்த்தபடி
வானம்
கலைந்து கிடக்கும்தன்
மேகக்கூந்தலை
சீவிக் கொள்ளட்டும்!

சொர்க்க சுகங்களெல்லாம்
சுருட்டி எடுத்துவந்து
நிற்க வைப்போம்
நம்முடைய
நேரெதிரே!

வானத்தைத் தொடுவதற்குக்
கனவுகள் கண்ட
காலம் முடிந்தது!
இனி–
வானமே இறங்கி
வந்துவிடு என்று
ஆணையிடுகின்ற
ஆற்றலினை நாம் பெறுவோம்!

# கவின்மிகு தமிழகக் கலைகள்



தமிழர்களின் வாழ்வோடு இணைந்தது இசையும் கலையும். கலைகள் தமிழர்களால் போற்றி வளர்க்கப்பட்டன. அப்படிப்பட்ட



தமிழ்நாட்டின் கலைகள் பற்றிய சில குறிப்புகள்:

## நாதசுரம்

சீர்மிகுந்த விழாக்களைச் செந்தமிழ் மக்கள் நாதசுர இசையோடு தான் நடத்துவார்கள். மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளை இந்த மங்கள இசையுடன் தொடங்குவது நம் முன்னோரின் நடைமுறை.

'நெடுங்குழல்' என்றும் பெருவங்கியம் என்றும் போற்றப்படும் நாதசுரம் அமுத இசை வளர்க்கும் துளைக் கருவி. நாதசுரம் நீண்ட குழலுடன் சீவாளி இணைத்து வாசிக்கும்போது இசைவெள்ளம் பூம்புனல் வெள்ளமாகப் பொங்கிப்பெருகும். நாயன இசைக் கலையில் தமிழ்ப் பெருமக்கள் பேராற்றல் மிக்கவர்களாக விளங்கி வருகிறார்கள்.

## பரத நாட்டியம்

தமிழகத்துக்கே உரிய தன்னிகரற்ற இந்த ஆடற்கலை, தமிழகத்தின் எல்லைகளைத் தாண்டியும் பல்வேறு வடிவங்களை எடுத்து விளக்குகிறது.

கால்கள் ஜதிபோட, கை விரல்கள் பொருள் குறிக்க, கண்கள் உணர்ச்சிகளைக் கொப்பளிக்க, முகம் பலவிதமான மெய்ப்பாடுகளைப் புலப்படுத்தும் இந்த ஆடற்கலை, அழகுக்கலைகளில் அரிய கலையாகும். சிலப்பதிகாரத்தில் பரதத்தைப் பற்றிய சீரிய குறிப்புகள் சிறப்பாகக் காணப்படுகின்றன.

## கோலாட்டம்

கருத்துக்கள் சி[illegible] இசை வடிவில் அமைத்து ஆண், பெ[illegible]ருபாலரும் கையில் ஒன்று அல்லது ஒன்றரை அடி அளவுள்ள குச்சிகளை வைத்துக் கொண்டு, பாடல்களின் சந்தத்திற்கு ஏற்றபடி குச்சிகளால் தாளம் தட்டுவது போல் ஆடிப்பாடுவது கோலாட்டம். இந்த ஆட்டம் உடலுக்கு நல்ல வலுவையும், உள்ளத்திற்குத் தெம்பையும் நல்குவது.

கோலாட்டம் சில மாறுதல்களுடன் பிற மாநிலங்களிலும் திகழ்ந்தாலும் தமிழகத்துக் கோலாட்டம் தனிச் சிறப்புடையது.



## கும்மி

கருத்துக்களை இசையுடன் கூடிய பாடலாக அமைத்து, பெண்கள் கைகளைக் கொட்டிக் கொண்டு பாடிப் பரவிடுவது கும்மி. இது பெரும்பாலும் பெண்கள் மட்டுமே ஆடும் ஆடலாகும்.

உடலுக்கும், உள்ளத்துக்கும் நல்ல பயிற்சி நல்குவது; கருத்துக்களை கவின்மிகு இசைக்கூட்டி, கேட்போர் நெஞ்சை ஈர்த்திட வைக்கும் திறனுடையது.

பக்தி, ஞானம் போன்றவற்றின் அடிப்படையில் அமையும் கும்மிப் பாடல்களும் உண்டு. கும்மி, மக்கள் மனம் கவரும் மகத்தான நாட்டுப்புறக் கலையாகும்.

## நாட்டுப்புறப் பாடல்கள்

கிராமப் பகுதிகளில் சிந்தனை வளமும், கற்பனை நயமும் கொண்டு ஒருவர், தாம் சொல்ல வரும் கருத்துக்களைச் சுவையாகவும், நெஞ்சில் பதியும் வண்ணமும் எளிய பாடல்களாக அமைத்து, தம் சொந்த இசையில் பாடும் பாடல்களே நாட்டுப்புறப் பாடல்களாகும். இதில் கடந்த கால நிகழ்ச்சிகளைப் பற்றிய குறிப்புகளும், விவரங் களும் இருக்கும். நிகழ்காலத்து நிலைமை விளக்கங்களும் இருக்கும். எதிர்காலத்தில் எய்திட வேண்டிய இலக்கும், எழுச்சி நிறை கருத்துகளும் இருக்கும். நாட்டுப்புறப்பாடல் களில் வாழ்க்கை நெறிகள் பலவும் வளமாக விரவிக் கிடக்கும்.



ஏட்டில் எழுதாத கவிதைகள் இந்த நாட்டுப்புறப் பாடல்கள், பெரும்பாலும் இவற்றைப் பாடிய பெருமக்களின் பெயர் தெரியாது.

காடுமேடுகளில் வேலை செய்யும் ஏழை எளிய மக்களின் உள்ளத்து உணர்வுகளின் அற்புதமான வெளிப்பாடே நாட்டுப்புறப் பாடல்கள்.

## ஒயிலாட்டம்

தமிழகத்தின் தென்மாவட்டங்களில் இந்தக் கிராமியக் கலை சிறப்புற்று விளங்குகிறது. கிராமங்களில் நடைபெறும் திருவிழாக்களில் இந்தக் கிராமிய நிகழ்ச்சி இடம் பெறும். தற்போது கோவில் திருவிழா தவிர, பொது நிகழ்ச்சிகளிலும் இடம்பெறக்கூடிய முக்கியக் கிராமிய நிகழ்ச்சியாக இது உள்ளது. ஒரு குழுவில் சுமார் 25 பேர் இடம் பெறுவர். [illegible]



மேளம் என்று அழைக்கப்படும் வாத்தியக் கருவிகளின் இசைக்கு ஏற்ப இவர்களின் நடனம் இருக்கும். கரங்களில் துணியைப் பிடித்து உயர்த்தி ஒய்யாரமாகத் தாளத்தின் வேகத்திற்கு ஏற்ப இவர்கள் ஆடுவது பார்க்க ரம்மியமாக இருக்கும்.

## சேவையாட்டம்

தர்மபுரி மாவட்டத்திற்கு உரிய தனிக்கலை சேவையாட்டம் ஆகும். ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவைப் பகுதியில் சேவையாட்டத்தைப் பற்றிய சிறப்பான செய்தி உள்ளது. மாதரி என்ற பெண் தீக்காயமுற்று துன்பத்தால் தவிக்கும்போது, இடையர்கள் அப்பெண்ணின் துன்பத்தைப் போக்க, கடவுளை வணங்கிக் கையில் கோலோடு ஆடிய ஆட்டமே இந்தச் சேவையாட்டம்.

அருந்தமிழ் வளர்த்திட்ட ஔவைக்கு நெல்லிக்கனி அளித்த வள்ளல் அதியமான் ஆண்ட அன்றைய தகடூர்ப் பகுதியாகிய இன்றைய தர்மபுரி மாவட்டத்தில் மட்டுமே இந்த ஆட்டம் ஆடப்பட்டு வருகிறது. இந்த ஆட்டத்தில் பயன்படுத்தப்படும் கோல், தீப்பந்து முதலான கருவிகள் புனிதக் கருவிகளாகக் கருதப்பட்டுக் கோவிலில் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது.

## கள்ளழகர் ஆட்டம்

தமிழ்நாட்டில் கோவில் நகரம் என்று அழைக்கப்படும் மதுரை மாநகரில் ஒவ்வோர் ஆண்டும் சித்திரைத் திருவிழாவில் கிராம மக்களே வேடம்பூண்டு இந்த ஆட்டத்தை ஆடுவார்கள்.

'கள்ளழகர்' தனது தங்கை அருள்மிகு மீனாட்சியின் திருமண நிகழ்ச்சியில் பங்கேற்க அழகர் மலையிலிருந்து மதுரை நோக்கி வரும்போது மக்கள் இலட்சக்கணக்கில் கூடி வரவேற்பார்கள். தெய்வத்திடம் தங்களது வேண்டுதலை நிறைவேற்ற, இந்த ஆட்டத்தில் ஆடைகளை கள்ளழகர்போல் அணிந்து ஆடி வருவார்கள். கள்ளழகர்மீது தண்ணீர் பீய்ச்சி அடித்து, தங்கள் அன்பை வெளிப்படுத்துவார்கள். அப்போது அவர்கள் ஆடிவரும் பாங்கு மெய்சிலிர்க்க வைக்கும். இந்த ஆட்டத்திற்கும் கிராமிய இசைக்கருவியான நையாண்டி மேளம்தான் பயன்படுத்தப்படுகிறது.

## கரகாட்டம்

கரகம் என்பது, பூரண கும்பம் போன்ற வடிவுடைய அமைப்பு. இதைப் பல்வேறு விதங்களில் அலங்கரித்து வைத்து, தலையில் வைத்துக்கொண்டு ஆடிடுவதாகும். பல்வேறு மெய்ப்பாடுகளைக் காட்டி ஆடும்போது, பக்க வாத்தியங்கள் பலவும் கேட்போரைப் பரவசமூட்டும் வகையில் அமைந்திருக்கும்.

அப்படியெல்லாம் ஆடும்போது கூட, தலையில் வைத்திட்ட அந்தக் கரகம் விழுந்து விடாமல் ஆடிட வேண்டும். நளினமான நாட்டுப்புறக் கலையான கரகம் தமிழகத்தில் கோவில் விழாக்களிலும், பிற சமூக விழாக்களிலும் சிறப்பிடம் பெறுகிறது.





## கவின்மிகு காவடி ஆட்டம்

காவடி என்பது, வளைந்த அரை வடிவமுடைய, சற்றொப்ப, நாணேற்றிய வில்லின் அமைப்புடையது. அதன் நீளம், ஒரு சராசரி மனிதனுடைய தோள் அளவைவிடச் சற்று அதிகமாக இருக்கும். அதன் விட்ட வடிவு இரண்டடி அளவுக்கு இருக்கும். அதை மயில் இறகு மற்றும் சில கண்ணுக்கழகான பொருள்கள் பலவற்றை வைத்து அலங்கரித்திடுவர்.



அதில் தமது வழிபாட்டுக்குரிய தெய்வங்களின் சிறு சிலைகள் அல்லது படங்கள் வைக்கப்பட்டிருப்பதும் உண்டு. பொதுவாகத் தன் வழிபாட்டுக்குரிய தெய்வங்களின் மீதான பாட்டுகள் அமைத்து இசை கூட்டிப் பாடுவார்கள்.

இதனைப் பாடிடும்போது, செவிக்கினிய இசைக் கருவிகளின் இசையும் சேர்த்துக் கொள்ளப்படும்.

## காளையாட்டம்

காளை வீரத்திற்கும் வலிவுக்குமான அடையாளச் சின்னம். ஒரு வீரனின் நடையைக் காளையின் நடைக்கு ஒப்பிடுவது நம் இயல்பு. மயிலின் சாயலைப் பெண்ணுக்கு ஒப்பிடுவது போல ஆணின் செம்மாந்த தோற்றத்துக்குக் காளையை ஒப்பிடுவது தமிழர் மரபு.

காளை போன்ற வேடம் கட்டி இசைக்கேற்ப ஆண்கள் நடனம் ஆடுவார்கள். இதைத்தான் காளை ஆட்டம் என்கிறோம். இதற்குத் துணையாக அமையும் இசை வாத்தியம் நையாண்டி மேளம். தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் குறிப்பாக நாட்டுப்புறக் கோயில் திருவிழாக்களில் காளை ஆட்டம் ஆடப்படுகிறது.

## பொய்க்கால் குதிரை

பயணம் மேற்கொள்ளுவதற்கான விலங்குகளின் காலமைப்புகளில் வித்தியாசமான வடிவங்கள் கொண்டவை ஒட்டகம், குதிரை ஆகியவற்றின் குளம்புகள், பிளவு இல்லாத குளம்புகள். அந்தக் கால் நுனி அமைப்புடைய கட்டையை, மனிதன் தன் பாதங்களில் கட்டிக்கொண்டு நடப்பதே கடினம். நிலைமை அப்படியிருக்க, அதை மனிதனின் பாதங்களில் கட்டிக்கொண்டு பொய்க்கால் கொண்ட குதிரையாக மனிதன் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுவதைக் கண்டால் நாம் ஆச்சரியத்திலாழ்ந்து விடுவோம். கட்டைகளைப் பாதங்களில் கட்டிக் கொண்டு ஆடும் மனிதன், குதிரையின் உடலமைப்பை, பொம்மையால் செய்து, தன் இடுப்பில் கட்டிக் கொண்டு ஆடுவது கவின்மிகு காட்சியாயிருக்கும்.

தவில், உறுமி, நையாண்டி, மேளங்கள் முழங்க அவற்றோடு நாயன இசையொலியுஞ் சேர்ந்து கிளர்வூட்டும் இசைக்கு, அந்தக் குதிரை வடிவத்தைத் தாங்கிய மனிதர்கள் ஆடுவது அனைவரையும் மகிழவைக்கும்.





வியப்புக்குரிய கலை நிகழ்ச்சியாகும். ஆணும் பெண்ணும் இந்த ஆட்டத்தை ஆடுவர். தமிழகத்தில் நிகழ்வுறும் திருவிழாக்கள் சிறக்க, இந்தப் பொய்க்கால் குதிரை ஆட்டமும் ஒரு தவிர்க்க முடியாத அங்கமாகி விட்டது.

**மயிலாட்டம்**

மயிலாட்டம் தமிழகத்தின் தென் மாவட்டக் கிராமங்களில் கோயில் திருவிழாக் களிலும் மற்ற நிகழ்சிகளிலும் இடம்பெறும் நாட்டுப்புறக் கலையாகும்.

இந்த ஆட்டம் ஆண்களும் பெண்களும் மயில்வேடம் அணிந்து இசைக்கருவிகளுக் கேற்ப நளினமாக ஆடப்படுவதாகும். பரத நாட்டியக் கலைஞர்களும் மயிலாட்டம் ஆடுவது தற்போது வழக்கமாகி வருகிறது.



**புலியாட்டம்**

புலி வேடம் புனைந்து வண்ணங்களால் உடம்பில் வரிகளை வரைந்துகொண்டு, ஆடப்படும் புலியாட்டம், கிராமங்களில் மக்கள் மனம் கவர்ந்த ஆட்டம் ஆகும்.

கூட்டமாய் வரும் இந்தப் புலிகள் பாயும் புலிகள் அல்ல; வெறும் பாய்ச்சல் காட்டும் புலிகள். பதுங்குவது போலவும், பாய்வது போலவும் இவை பாவனை காட்டும். கிராமங்களில் மாரியம்மன் திருவிழாக் காலங்களில் புலியாட்டம் நடைபெறும்.

இதற்குரிய இசைக்கருவிகள், தாரை மற்றும் தப்பட்டை ஆகும்.

**வீர விளையாட்டுக்கள்**

தமிழ்நாட்டில் உடல்திறம் காட்டி விளையாடும் வகையைச் சேர்ந்தவை இந்த வீரவிளையாட்டுகள். இதில் குச்சி விளை யாட்டு, கத்திச் சண்டை, சுருள் கத்திச் சண்டை போன்றவையுண்டு.

இந்த விளையாட்டுகளுக்கு, பரத நாட்டியக் கலைபோன்று, முறையான, நெறிமுறைகளும் பயிற்சியும் உண்டு. அவற்றை முறையாக இரு தரப்பினரும் பயிற்சி பெற்று, அதன்பின்னர் விளையாடத் தொடங்கினால், அவற்றைப் பார்ப்பதற்கும் அழகாயிருக்கும். மனிதனுக்குத் தக்க தற்காப்பாகவும் உதவிடும்.

**கொம்பு முழக்கம்**

பண்டைத் தமிழகத்தின் வீரத்தின் வெளிப்பாட்டை அறிவிக்கும் சின்னமாக இது விளங்கியது. தற்போது கிராமங்களில் நடைபெறும் கோவில் திருவிழாக்கள் குடமுழக்கு விழாக்கள், கதிர் அறுப்பு, மஞ்சு விரட்டு, ஊர்வலங்கள் போன்றவற்றில் இது இடம் பெறுகிறது.

மூச்சை உள்ளிழுத்து ஒருவித இசையுடன் இந்த ஒலி எழுப்பப்படுகிறது. அறிவிப்புத் தரும் எழுச்சிக் கருவியாக இது விளங்குகிறது.

**தாரை, தப்பட்டை**

தமிழ்நாட்டின் ஒவ்வொரு கிராமங் களிலும் ஊடுருவி [illegible] இசை ஆட்டம் இது. கிராமங்களில் நடைபெறும் திருவிழாக்கள், ஊர்வலங்கள், ஒவ்வொரு இல்லத்திலும் நடைபெறும் எல்லா [illegible]சடங்களுக்கும் இந்த ஆட்டம் பயன்படுத்தப்படுகிறது. ஒரு குழுவில் 15 பேர் இருப்பார்கள்.

கேட்கக்கேட்க இசையில் தங்களையே மெய் மறந்து ஒன்றச் செய்யும் சக்தி பெற்றது இந்த ஆட்டம் [illegible] வேறுபாடின்றி அனைவரும் இந்த இசைக்கு மயங்குவார்கள்.

**நையாண்டி மேளம்**

தென் மாவட்டங்களில், அதிகம் விரும்பப்படுகின்ற நாட்டுப்புற இசை நையாண்டி மேளமாகும். கோவில் திருவிழாக்களில் நையாண்டி மேளத்தை நாம் நிச்சயம் கேட்கலாம். நற்காரியங்கள், ஊர்வலம் போன்றவற்றிலும் இவை இடம் பெறும்.

இசை நிகழ்ச்சிகள் பொதுவாக மகிழ்ச்சி யூட்டும். ஆனால் நையாண்டி மேளம் கேட்பவர்க்கு ஒரு விதமான களிப்பை உண்டாக்கும்.

நையாண்டி மேளத்தில், தமுக்கு, தவில், நாதசுரம், பம்பை, உறுமி, தாளம் ஆகிய அறுவகை இசைக்கருவிகள் இடம் பெறு கின்றன.

'நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக்கு
எழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும்
இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந்
தமிழணங்கே!
சீரிள்மைத் திறம்வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே.

—மனோன்மணீயம் பெ. சுந்தரம்பிள்ளை.

## நாடகக் கலை!

நாடகக் கலைக்கு ஏனைய கலைகளைக் காட்டிலும் அபூர்வ சக்தியொன்றுண்டு. மக்களை உடனடியாகச் செயலில் இறங்கச் செய்வது நாடகக் கலைதான். இதனால்தான் நாகரிக நாட்டினர், தங்கள் சீர்திருத்தக் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதற்கு நாட கங்களைக் கருவியாக உபயோகித்து வந்தார்கள், வருகிறார்கள், வெற்றியும் கண்டார்கள்.

-கலைவாணர் என்.எஸ். [illegible]





# இசையைப் போற்றுவோம்!

- முதல்வர் கலைஞர்

இசை 2000 ஆண்டுகளுக்கு முன்பே போற்றப்பட்ட ஒன்று, மக்களுக்கு அறிமுகமான ஒன்று. அதனால்தான் திருவள்ளுவருடைய குறளில்

**"குழலினிது யாழ்இனிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர்"** என்ற அந்தக் கருத்தைக் காணுகிறோம். குழலும், யாழும் இனிது என்று யார் சொல்வார்கள்என்றால் நம்முடைய குழந்தைகளின் மழலைச் சொல்லைக் கேட்காதவர்கள் தான் குழலும் யாழும் இனிமையானது என்று சொல்வார்கள் என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறா ரென்றால், அதற்கு என்ன பொருள்? வள்ளுவர் காலத்திற்கு முன்பே குழலும், யாழும் புழக்கத்திலே இருந்தது என்பதுதான் பொருள். 2000, 3000 ஆண்டுகளுக்கு முன்பே, சங்கக் காலத்திலேயே இந்தச் சமுதாயத்திற்கு அறிமுகமான இசை, எப்படி காட்டுமிராண்டிகளாக இருந்த சமுதாயத்தில் இந்த இசைப் பண்பாடு தோன்றியது, வளர்ந்தது என்பதெல்லாம் இயற்கையின் நியதி. இயற்கையாகவே இது கிடைத்தது. இயற்கை தந்த கொடை.

காளிதாசன் குறிப்பிட்டதைப் பற்றி இதே மன்றத்தில் நான் ஆற்றிய ஒரு உரையிலே முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். மூங்கில் மீது வண்டு துளைக்க அப்படி துளைக்கப்பட்ட அந்தத் துளையில், காற்று புக, அதன் காரணமாக ஒலி எழும்ப, அதைப்பார்த்த மனிதன், ஓகோ இப்படி மூங்கில் கம்பை எடுத்து, துளை போட்டு, அதற்குள்



காற்றைச் செலுத்தினால் ஒலி வரும்போலும் என்று கண்டுபிடித்து உருவானது தான் புல்லாங்குழல். அந்தப் புல்லாங்குழல் மூலமாகத்தான் நம்முடைய ரமணி அவர்கள் புகழ்பெற்று இங்கே வீற்றிருக்கிறார்கள்.

அந்தக் காலத்திலே மனிதர்கள் காட்டுமிராண்டிச் சமுதாயத்தில் உணவுக்காக விலங்குகளை வேட்டையாடி அதன் மாமிசத்தை உண்டுவிட்டு அந்த விலங்குகளின் தோல்களை அங்கேயுள்ள மரங்களிலே காயப் போட, அப்படி அந்த, தோல்கள் காய்ந்து கொண்டிருக்கும்போது, காற்றில் அந்த மரத்திலே உள்ள கொம்பு அசைந்து, அசைந்து அந்த தோலிலே பட்டுப் பட்டு, அதிலே ஒரு நாதம் எழும்ப , அதைப் பார்த்த அந்தக் கால மனிதன் ஓகோ, இப்படி தோலைக் கட்டி அதிலே கொம்பினால் அடித்தால் நாதம் கிளம்பும் போலும் என்று எண்ணியதுதான் இன்றைக்கும் நாம் காணுகின்ற மத்தளம், தவில், முரசு இவைகள் எல்லாம். இப்படித்தான் இயற்கை வழங்கிய கொடையாக இசை நமக்குக்கிடைத்தது.





இயல், இசை, கூத்தில், இசை நாட்டியம் இல்லாமல் பிறப்பதில்லை. நா அசைந்தால் தான் இசை, நா அசைந்து நாட்டியமாட வேண்டும். இசை புறப்பட! அதே போல, ஒரு பிடில் வாசிப்பதாக இருந்தால்கூட அந்தப் பிடிலுக்கான நாதத்தை எழுப்ப அதனுடைய கம்பி அசைய வேண்டும். எனவே அசைவு இல்லாமல் இசை இல்லை. ச என்று சுரம் பாடப்படும்போது நாக்கு நம்மை அறியாமலேயே அசைகிறது. ரி எனும்போது நாக்கு அசைகிறது. க எனும்போது நாக்கு அசைகிறது. ம எனும்போது உதடு ஒட்டி, பிரிந்து அசைவதால் தான் ம வே பிறக்கிறது. இப்படி அசைவிலே தான் இசை பிறக்கிறது. எனவே நாட்டியத்திலே தான் இசை பிறக்கிறது. என்பதை நாம் ஒழுங்காக ஒத்துக்கொள்ளவேண்டும்.



இயற்கை, இசையை வழங்கிக் கொண்டிருக்கின்றது. இயற்கையின் மறு உருவம்தான் இசை. திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி பாடினால், அது தென்றல்! இசை, இயற்கை, இசை; அவர்கள் பாடினால் தென்றலாக இருக்கின்றது. எஸ்.ஜி.கிட்டப்பா கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ள வகை கிடைத்த குளிர் தருவே என்று ஓங்கி உரத்த குரலிலே பாடினால், அது இடி! அதுவும் இயற்கை தானே? வலையப்பட்டியும் அரித்துவாரமங்கலமும்தனித்தவிலிலே மோதிக்கொண்டால், அது போரிடி, புயல் எல்லாமே. செம்மங்குடி பாடினால் அது அளவான மழை. இப்பொழுது பொழிகின்ற மழையல்ல ரமணி புல்லாங்குழல் வாசித்தால், அது குற்றால அருவியின் சாரல். இவ்வளவு சிறப்புக்களை சொல்கிற இசையைப் பற்றிச் சொல்கிற நீ இசைவாணனா என்று கேட்டால் நல்லவேளையாக இல்லை. இருந்தால் இங்கேயும் குழப்பம் செய்துகொண்டிருப்பேன். அதனால் நான் இசைவாணனாக இல்லை. ஆனால் இசைக் குடும்பத்திலே நான் பிறந்தவன்.

என்னுடைய தந்தை பெரிய இசைவாணர். சித்த வைத்தியரும்கூட, புலவரும்கூட, வடமொழிப்புலவரும்கூட. ஆனால் நான் இசைத் துறையிலே இல்லாததற்குக் காரணம், என்னை இசை பயில அதிலும் நாதசுரம் பயில என்னுடைய உறவினர் வீட்டிலே தந்தை கொண்டுபோய்விட்டார். அப்பொழுதுதான் ஆரம்பப் பள்ளிக்



கூடத்திலே திருக்குவளையில் படித்துக்கொண்டிருக்கிறேன். அந்த சில நாட்கள் அந்தப் பாடம் கற்கச் சென்றேன். கிட்டத்தட்ட நாதசுரத்திலே வர்ணம் வரை வாசிக்கக்கூடிய அளவிற்கு வந்தேன். ஒருநாள் திடீரென்று இதை வேண்டாமென்று விட்டுவிட்டேன். காரணம், எங்கள் திருக்குவளை கிராமத்தில், தர்மபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான ஒரு மடாலயம் உண்டு. திருக்குவளையிலே உள்ள கோவில், தர்மபுரம் தேவஸ்தானத்திற்குரியது. அந்தக் கோவிலிலே ஒரு தம்பிரான் சாமியார் உண்டு. தர்மபுரம் ஆதீனகர்த்தரின் பிரதிநிதியாக அவர் அங்கேயேயிருந்து காரியங்களை ஆற்றிக் கொண்டிருப்பார். அந்தக் காரியங்களை ஆற்றுவதற்கு, அந்த ஊரைச் சேர்ந்த ஒரு காருவார் மேட்டுக்குடியிலே பிறந்தவர், முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர் இருந்தார் அந்தக் கார்வார் தெருவிலே வந்தால், வண்டியிலே போனால், ஆலயத்திற்குள் நுழைந்தால், இந்த இசைவாணர்கள் யாராக இருந்தாலும், நாதஸ்வரமோ, தவிலிலோ வாசிப்பவர்களாக இருந்தாலும், தங்கள் மேலே போட்டிருக்கின்ற துண்டையெடுத்து, இடுப்பிலே கட்டிக் கொள்ளவேண்டும். இந்தக் காட்சியை ஒரு நாள் நான் பார்த்துவிட்டேன், பார்த்தவுடன் ஓகோ, இதிலே நாம் வித்வானாக ஆனால், துண்டு போட முடியாது போலும் என்று அன்று நான் கருதினேன். அதனால் இப்போது எனக்கு நிறைய துண்டுகள் கிடைத்துக் கொண்டிருக்கிறன.

இரண்டு நாட்கள் என் தந்தை என்னைக் கடிந்துங்கூட அந்த வித்தையைக் கற்றுக்கொள்ள நீ செல்லவேண்டுமென்று கூறியும் கூட, சுயமரியாதை இல்லாத தொழிலுக்கு நான் செல்ல மாட்டேன், அது சுயமரியாதை இழக்கச் செய்கின்ற வித்தையாக இருக்கின்ற காரணத்தால் நான் அதைக் கற்றுக்கொள்ள மாட்டேன் என்று கூறிவிட்டேன். இன்றைக்குத் திடீரென்று நான் முதலமைச்சராக ஆகிவிட்ட காரணத்தால் நான் சொல்வதையெல்லாம் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையிலே இங்கே சொல்கின்ற விஷயமல்ல இது. நான் எழுதியுள்ள 'நெஞ்சுக்கு நீதி' என்ற புத்தகத்திலே என்னுடைய வாழ்க்கை வரலாற்றில் இதனைக் குறிப்பிட்டிருக்கிறேன்.

### சுயமரியாதையை உருவாக்கிய திருவாடுதுறை ராஜரத்தினம்

இந்த இசைவாணர்களுக்கு சுயமரியாதை வரக்கூடிய, அவர்கள் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளக் கூடிய ஒரு சூழ்நிலையை, இந்த இசைவாணர்கள் உலகத்தில் உருவாக்கிய பெருமை திருவாடுதுறை ராஜரத்தினம் அவர்களுக்குத் தான் உண்டு என்பதை நான் இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இப்படி மரியாதைக்குரிய ஒரு காலத்திலே மன்னர்களால் போற்றப்பட்ட சங்க காலந் தொட்டு வழங்கி வருகின்ற பெருமைக் குரிய இந்த இசையை இன்றைக்கு நாம் மேலும் மேலும் போற்றிட வேண்டும். இசையில் குழலிசை என்றால் அதற்கு மொழிப்பாகுபாடு கிடையாது. ஆனால் பாடல்கள், சாகித்தியங்கள், இவைகளுக்கு மொழி தேவைப்படுகிறது. நான் அதற்காக இந்த இடத்தில் தமிழிசைப் பிரச்சாரம் செய்ய வந்திருப்பதாக நீங்கள் கருதக்கூடாது. கர்நாடக இசையைப் போற்றிப் பாராட்டுகின்ற இடம் இந்த இடம் என்பது எனக்குத் தெரியும். அதற்கு நான் விரோதியுமல்ல, பகைவனுமல்ல.



கர்நாடக இசை என்பதே தென்புலத்தில் இருக்கிற தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய பகுதிகளிலே புழங்குகின்ற இசைதான் கர்நாடக இசை. கர்நாடக இசை என்றதும் அது ஏதோ பழைய காலத்து மைசூர் இசை என்று யாரும் கருதத் தேவையில்லை. அப்படிக் கருதினால் அந்த இசையைக் கூட இங்கே அவர்கள் தருவார்களோ தர மாட்டார்களோ என்ற அச்சமும் நமக்கு ஏற்படும்.

கர்நாடக இசை தென் புலத்திலே உள்ளவர்கள் பயின்ற இசை. அவர்கள் இன்றைக்குப் புகழத்தக்க அளவிற்குப் பரப்பியுள்ள இசைதான் இந்த இசை. இன்றைக்கும் இந்த இசையைத்தமிழகத்திலே உள்ளவர்கள், தென்புலத்திலே உள்ளவர்கள், அதற்குரிய இலக்கண சுத்தமாக அச்சரம் பிசகாமல், தாளம் தவறாமல், ராகம் கெடாமல் அவர்கள் பயன்படுத்துகின்ற அந்த அறிவொளிகளாகத் திகழ் கிறார்கள். இசைச் செல்வங்களாகத் திகழ்கிறார்கள்.

சில இசைகளை கேட்கிறோம். வெளிநாட்டிலிருந்து எல்லாம் வருகிறது இசை. மைக்கேல் என்கிறார்கள் ஜாக்சன் என்கிறார்கள் ஒரே காட்டுக் கத்தலாக இருக்கிறது. அதைப் பார்க்க இலட்சக்கணக்கிலே மக்கள் கூடுகிறார்கள். அதற்குப் பெரிய விளம்பரங்கள் எல்லாம் வருகிறது. ஆனால் அந்தக் காட்டுக் கத்தலுக்கு இடையே மாலியின் புல்லாங்குழல் ஆனாலும் ராஜரத்தினம் நாதஸ்வரம் ஆனாலும் ரமணியின் புல்லாங்குழல் ஆனாலும் இவைகள் எல்லாம் ஒலிக்கத் தொடங்கினால் அவை இருக்கும் இடம் தெரியாமல் போய்விடக்கூடிய அளவுக்குச்சிறப்பு வாய்ந்தவை நம்முடைய இசை என்பதை நினைவூட்டி இசைவாணர்கள் பலரும் சூழ்ந்திருக்கின்ற இந்த மாமன்றத்திலே அருமைச் சகோதரர் ரமணி அவர்களை நானும் வாழ்த்தி என்னுடைய தொடக்க உரையை நிறைவு செய்கிறேன்.

***-மியூசிக் அகாடமியின் 70-ஆம் ஆண்டு விழாவில் 15.12.1996 அன்று ஆற்றிய உரையிலிருந்து.***





# பவளக்கால் நூலான்

கே.சி.எஸ். அருணாசலம்

அன்று சனிக்கிழமை, காலை நேரம் - வைகாசி மாதம்.

காலில் ஏதாவது வாதவலிப்பு ஏற்பட்டுச் சனிக்கிழமை வரத் தவறினாலும் தவறலாம். மருதாக் கவுண்டருக்கு எண்ணெய்க் குளிப்பு மட்டும் தவறாது. கடந்த பத்தாண்டுக் காலமாகக் கவுண்டர் வேலப்பன் எண்ணெய் தேய்த்து விட்டுத் தான் குளியலைச் சுகமாக நடத்தி வருகிறார். கிழக்கு வானத்தில் நரை வெளுக்கும்போதே சனிக்கிழமைகளில் அவர் எண்ணெய்க் கிண்ணத்துக்கு எதிரில் தயாராக உட்கார்ந்திருப்பது வழக்கம். மணிக்கணக்காகக் குளிக்கத் தோட்டம் தான் அவருக்கு வசதி.

தோட்டத்துச் சாலையில் சீரகமிட்டுக் காய்ச்சிய கால்படி நல்லெண்ணையைக் கவுண்டரது சேகேறிய உடம்பில் விதவிதமான பிடிகள் போட்டுத் தேய்த்து விட்டு உச்சந்தலையில் பல்வேறு ஜதி வரிசைகளுடன் தட்டிக் கொஞ்சம் கொஞ்சமாகக் கிண்ணத்தைக் காலி செய்து கொண்டிருந்தான் வேலப்பன்.

புருவத்தை நனைத்து இறக்கத்தில் வடியத் தொடங்கிய எண்ணெயை வலக்கையால் வடித்துவிட்டுத் தலைநிமிர்ந்த கவுண்டர் "வேலா! என்ன இன்னிக்கி போடு போடுன்னு போடறியே?" என்று கேட்டார். கச்சேரி மேளம் கட்டிக் கொண்டது போலிருந்த சுகத்தில் வெளுத்துக் கட்டிக் கொண்டிருந்தவன், தன் தாள வரிசைக்கு அவரது உச்சியில் ஒரு முத்தாய்ப்பு வைத்து நிறுத்தினான். ஏதேனும் சில சமயங்களில் இப்படிப் பெரிய ஆவர்த்தனம் நடத்தி விடுவது அவனுக்குப் பழக்கமான வேலை. கண்ணை மூடுவதும் திறப்பதுமான அமர்ந்த கவுண்டரின் தோற்றம், எண்ணெய் அபிஷேகத்திலிருக்கும் பிள்ளையார் சிலைபோல் தோன்றிற்று. இத்யாதி அடிதடியுடன் குளித்தால் தான் கவுண்டருக்கும் எண்ணெய் குளித்த திருப்தி ஏற்படும்!

வேலப்பன் பேசத் தொடங்கினான்!

"ஐயா அவங்களுக்கல்லங்க...."

"ஊம்...."

"இந்த வாரத்திலே தாசில்தார் எஜமான் நம்ப ஊர்ப் பக்கம் வருவாருன்னு மணியக்காரர் சொன்னாருங்க..."

"வந்தா வந்திட்டுப் போறாரு. அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் என்னடா சம்பந்தம்?"

"காட்டிலே ஒரு பக்கம் நல்ல நீரோட்டம் இருக்குமுங்க. அதனாலே கெணறு வெட்டறத்துக்குக் கடன் கேட்டு விண்ணப்பம் போட்டுக் கெடப்பிலே கெடக்குது. நகர மாட்டேங்குது. அவர் வாரப்ப ஒரு வார்த்தை சொல்லி வெச்சா, நிமிஷத்துலே நடந்திடுங்க. கவரு மெண்டிலே கடன் வாங்கறத்துக்குள்ளே நாலு கல்யாணம் செஞ்சிடலாம் போலிருக்குதுங்களே!"

உட்கார்ந்திருந்த கவுண்டர் தரையைப் பார்த்துக் குனிந்தபடி முதுகை வளைத்துக் கொடுத்தார். வேலன் இடுப்புவரை தேய்த்து நெளிவெடுக்கும் பொருட்டு, கைகளைத் தரையில் ஊன்றிய படியே வேலனிடம் பேசத் தொடங்கினார்.

"ஊம்... பண்ணிப்போடுவே நாலு கல்யாணம். பொண்ணு வீட்டுக்கு நாலு நடை நடந்து பரிசம் போட்டு, வெத்திலை பாக்கு மாத்தி ஊர் கூடிச் செக்கு தள்ளாமே கல்யாணம் ஆயிடுமாடா, வேலா? அப்படித்தான் கச்சேரியிலே விண்ணப்பம் போடறதும் போட்டுட்டு வூட்டுத் திண்ணேலே உக்காந்திட்டிருந்தா, குட்டிச் சாத்தான் வந்தா வேலை பண்ணும் கச்சேரியிலே? அங்கங்க போய்ப் பண்ணற சீர் சிறப்பெல்லாம் பண்ணிணாத்தான் விண்ணப்பத்துக்குக் காலு கையெல்லாம் மொளைக்கும், மடப்பயல் தாசில்தாரு வந்தாச் சொல்றேன் போ... அப்புறம் பார்க்கலாம்... என்ன"

கவுண்டர் சொன்னது இப்போது வேலன் காதில் விழவில்லை. அவன் கவனமெல்லாம் சாலைப் பக்கமாக இரையெடுத்துக் கொண்டிருந்த ஓர் அழகான சேவலின் மீது பதிந்திருந்தது. மலர்ச்சி நிறைந்த கண்களோடு அதையே உற்றுப் பார்த்தவனாக, கவுண்டரது பிடரி மேல் கைவைத்தபடி நின்று கொண்டிருந்தான்.

நிமிர்ந்து பார்த்த மருதாக் கவுண்டருக்கு விஷயம் புரிந்து விட்டது. கொண்டையை ஆட்டி ராஜநடை போட்டுக் கொண்டிருந்தது அந்தச் சேவல்.

"அதைச் சொல்லு, தேய்க்கறதை விட்டுட்டுச் சேவலைப் பாத்து முளிச்சிட்டு நிக்கறயா! கெணறு வெட்டறனாம் கெணறு..." என்று எரிச்சலுடன் கூறினார் அவர்.

இந்தப் பேச்சைக் கேட்ட பிறகுதான் வேலப்பனுக்குச் சொரணை வந்தது.

களத்து அடுப்பிலே பண்ணைக் காவலாள் பருத்தி விளாறு போட்டு வெந்நீருக்குச் சொக்கப்பனைக் கொளுத்திக் கொண்டிருந்தான்.

இரண்டு கைகளாலும் பிடரியிலிருந்து தொடங்கி இடுப்புவரை அழுத்திச் சென்றபடியே வேலன் மறுபடியும் பேசத் தொடங்கினான்.

"ஐயா, அவங்களுக்கல்லங்க"

"சொல்லு!"

"அந்தச் சேவல்

கோழி...!"

கவுண்டருக்குச்

சிரிப்பு வந்து விட்டது. அப்படிக் கேட்பான் என்று அவர் எதிர்பார்த்திருந்தார்.

"நீ கண்ணு வெச்ச போதே நெனைச்சேன். உனக்கு வேணுமாக்கும் சேவக்கட்டுக்கு... ஊம்...?"

மசச் சிரிப்புச் சிரித்துத் தன் மனத்தைப் புலப்படுத்தினான் வேலன்.

"எடுத்துக்க, போ!"

குழந்தைபோல் கவுண்டர் முன்னிலையிலேயே மகிழ்ச்சியாய் எகிறிக் குதித்து விட்டான் வேலப்பன். அவர் குளிப்பதற்காக எழுந்தார். வேலன் ஓடிப்போய் லாவகமாக சேவலைப் பிடித்து நோட்டம் பார்த்தான். "நா நெனச்சாப்பலே இது பவளக்கால் நூலான் தானுங்க..." அவரைப் பார்த்துக் கூறினான். 'பவளக்கால் நூலான்' 'பச்சைக்கால் செங்கேரி', 'மரகதப்புள்ளி' என்று சேவல்களில் உள்ள ஜாதிப் பிரிவினை எல்லாம் வேலனுக்கு மனப்பாடம்.

"நூலானோ? காளானோ? எங்கிட்டே என்னத்துக்கு அளக்கிறே? தண்ணி ஊத்த வாடா, முளிக்கிறான் நின்னுக்கிட்டு பொளைக்கத் தெரியாத பசங்க."

குளிப்பதற்கு வெந்நீர் அடுப்பருகே போட்டிருந்த செங்கல் தொட்டியிலே போய்க் கவுண்டர் உட்கார்ந்தார். 'கை பொறுக்காத சூட்டை அவருடல் எப்படித்தான் பொறுக்கிறதோ' என்று நினைத்தவனாக, ஆவி கிளம்பும் வெந்நீரை எடுத்து ஏழெட்டுச் செம்பு அவர் தலையில் கொட்டி அரப்புக் கலந்து தேய்க்கத் தொடங்கினான்.

"நம்ம சின்னம்பிணி புருஷன் இல்லேடா வேலா?"

"ஆமாங்க"....

"அவனும் இப்ப சேவக்கட்டுக்குப் போறானாம். புள்ளே சொல்



லிச்சு... எப்பிடியிருக்குது குடியான வன் பொளப்பு?"

வேலன் அதற்குப் பதில் ஒன்றும் பேசவில்லை. ஒரு வழியாய்க் கவுண்டர் குளித்து எழுந்தபோது, தற்செயலாக வெளியே பார்த்த வேலன் அசந்து போனான். சாலை யோரத்தில் கவுண்டர் குறிப்பிட்ட அவரது சின்ன மருமகன் அந்தச் சேவலைப் பிடித்து நோட்டம் பார்த்துக் கொண்டிருந்தது தெரிந்தது.

"சின்ன மாப்பிள்ளை வந்திருக் காருங்க".

துண்டால் தலை துவட்டிக் கொண்டிருந்தவர் திரும்பிப் பார்த்த போது, அவன் சேவலை விட்டு விட்டு வந்து கொண்டிருந்தான். நல்ல சிவட்ட கிராப், சில்க் சட்டை, வேட்டி, மோதிரம், கடிகாரம் கட்டிய கை, இருபத்தைந்து வயதின் இளமைப் பொலிவு.

"ஆமாம்? வந்து ரெண்டு நாளாச்சு" என்றார் பெரியவர்.

மாமனாருக்கு மரியாதையாகச் சற்று தூரத்திலேயே நின்றபடி பேசத் தொடங்கினான் மாப் பிள்ளை.

"நாளைக்கு ஊருக்குப் போகும் போது, இந்தச் சேவலை நான் புடிச்சிட்டுப் போறேனுங்க மாமா!"

தூரத்தில் நின்றபடியே மிகவும் விநயமாக, ஆனால் நேரடியாகவே சின்ன மாப்பிள்ளை கேட்டு விட்டான். இப்படி அவன் நேருக்கு நேராகத் தன்னைக் கேட்டு விடு வான் என்று கவுண்டர் துளியும் எதிர் பார்க்கவில்லை.

மாப்பிள்ளை பெரிய பணக் காரன், ரொம்பவும் மானியும் கூட, தங்கை மகன்... மாமனாரிடமிருந்து எதையும் எதிர் பார்க்கும் சுபாவம் அவனுக்குக் கிடையாது. இருந் தாலும் இந்த அற்ப விஷயத்தைக் கேட்டு விட்டான்.

பதிலே பேசாமல் ஒரு நிமிடம் கழிந்தது. துவைத்த வேட்டியைக் கட்டிக் கொண்டு சாலையிலிருந்த கயிற்றுக் கட்டிலில் போய் உட் கார்ந்தார், கவுண்டர். தர்ம சங்கடமான ஒரு நிலையில் தான் மாட்டிக் கொண்டதுபோல் தோன் றின்று. ஒரு நிமிடம் ஒருவருமே பேசவில்லை. பிறகு அவரே பதில் கூறினார்.

"பொன்னு! நீ கேட்ட நேரம் சரியில்லை."

மாப்பிள்ளைக்கு அவர் சொன்னது புரியாமல் வியப்புடன் அவர் முகத்தைப் பார்த்தான். தன் மாமனாரா இப்படிச் சொல்லுவது?

"நீ வர்ரத்துக்குக் கொஞ்ச நேரம் மிந்தித்தான் வேலப்பன் இந்தச் சேவலை வேணும்னு கேட்டான். புடிச்சிக்கிட்டுப் போன்னு வார்த்தை சொல்லிட்டேன்".

தன் வார்த்தை செல்லாக் காசாகி விடக்கூடாது என்ற



அழுத்தம் அவர் பதிலில் தெளி வாகப் பதிந்திருந்தாலும், மருமகன் என்பதற்காகக் குரலில் ஓர் இளக் கமும் கலந்து இருந்தது.

வேலப்பன் முகத்தை மாப் பிள்ளை பார்த்தான். அவன் அடித்து வைத்த சிலையைப் போல் நின்று கொண்டிருந்தான். ஓர் எக்கச்சக்கமான நிலையில் அவன் தவித்துக் கொண்டிருந்ததை முகம் பிரதிபலித்தது. இருந்தாலும், மாப்பிள்ளையும் விட்டபாடில்லை. "அவனுக்கு என்னத்துக்கங்க? நான் புடிச்சிட்டுப் போறேனுங்கயா". தலை குனிந்தபடியே சின்ன மாப்பிள்ளை மீண்டுத் தனி அவலை வற்புறுத்தி விட்டான். கவுண்டர் முகம் கறுத்தது. அவனை உற்றுப் பார்த் தார். மறுபடியும் சில நிமிட நேரம் மௌனம் நிலவிற்று.

"பொன்னு!"

மாமனார் கூரலுக்கு அவன் நிமிர்ந்து அவர் முகத்தைப் பார்த் தான்.

"வேலனுக்கு வார்த்தை கொடுத் திட்டேன்னு சொன்னப்புறம், திருப்பிக் கேட்டிருக்கப்படாது. தான் சொன்ன வார்த்தையைத் தானே முதல்லே மதிச்சு நடந்தாத்தான், மத்தவன் அதை மதிப்பானில் லையா? நம்ம காலைச் சுத்திக் கிட்டிருக்கிற கூலி நாலிகிட்ட நாம்ம வார்த்தை செலாவணி யாகாம நடந்திட்டா, குடியான வனுக்கு என்னப்பா மதிப்பிருக்கும்? நீயே சொல்லு? பட்டியிலே இருக்கிற நாய் குலைச்சாக் கூட யாரோ வராங்கண்ணு ஒரு அர்த்தமிருக்கு தில்லே? மனுசன் வார்த்தைக்கு அந்த யோக்யதைகூட இல்லாமப் போனா பொளைச்சென்ன புண்ணியம்? இதெல்லாம் தெரிஞ்சு நம்மதான் நடந்துக்கணும். எதைப் பெரிசா எடுத்துக்கணுமோ அதைத் தான் பெரிசா எடுத்துக்கணும் நாம்".

கவுண்டரது வார்த்தைகள் ஆத்திரமில்லாமல் இதமான குரலில் வெளிப்பட்டாலும் கூட, அசைக்க முடியாத கறார்த்தன்மை தன் மானத்தின் மேல் வைத்திருக்கும் பிடிவாதம் எல்லாம் தெளிவாகத் தெரிந்தன.

தரையைப் பார்த்தபடியே நின்றிருந்த மாப்பிள்ளை முகம் நிமிஷ நேரத்தில் சுண்டிப் போயிற்று. அவரது போக்குகள் அவனுக்குத் தெரியாதவை அல்ல. தன்னையறியாமலேயே கேவலம் ஒரு சேவல் மீது வைத்த ஆசை யினாலே இந்த நிலைக்கு ஆளாகி விட்டான். அனுபவமற்ற வாலிபம். மேலும் பணக்காரப் பெருமை உடன் பிறப்பாக அவனிடம் உண்டு. வேலனது முன்னிலையில் தான் மாட்டிக் கொண்டது அவனுக்குப் பெருத்த மானக்கேடாகப் போய் விட்டது.

தன்னால் அவர்களுக்கு இடை யில் நேர்ந்த மனத்தாங்கலை நினைத்து வேலன் திடுக்கிட்டு ஊமையாக நின்று கொண்டி ருந்தான.



"வேலா, நீ சேவலைப் பிடி கிட்டுப் போ!" இது உத்தரவு போல் தொனித்தது. இனி பேசுவதற்கு ஒன்றுமே இல்லை வேலனுக்கு.

மேட்டிலிருந்து சற்று வழி யிறங்கிச் சேவலுடன் வந்து கொண்டி ருந்தான் வேலன். நெஞ்சோடு அணைத்திருந்த சேவல், அவன் இதயத் துடிப்புபோல அவ்வப் போது படபடத்தது.

சிலுசிலுத்த இளம் பனியோடு கிடந்த ஆற்றிலே கால் வைத்து இறங்கினான், வேலன். அக்கரை தாண்டி நாலெட்டு நடந்தால் வீட்டுக்குப் போய்விடலாம்.

"டேய் வேலா!"

திரும்பினான். சின்ன மாப் பிள்ளைதான் பின்னாலே வந்து கொண்டிருந்தார், விடடபாடில்லை.

"ஏனுங்க?"

"மாமா அவுங்க சொன்னதே போதுமிண்ணு சேவலைத் தூக் கிக்கிட்டு வந்துட்டியா?"

"அவுங்கதானுங்க எடுத்துக் கிட்டுப் போகச் சொன்னாங்க. மாட்டேன்னா அப்புறம் அவுங்க மொகத்திலேயே முழிக்க முடியா துங்களே."

"இதெ வெச்சிக்கிட்டு என்ன பண்ணப் போறே?"

"என்னவோ பிரியத்துக்குத் தானுங்க" குரல் கம்மிப் போய்க் கிடந்தது.

மாப்பிள்ளை தன் இடுப்பில் அணிந்திருந்த பச்சை நிறமுள்ள 'பெல்ட்'டின் பையிலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்துத் தன் வலக்கையில் வைத்துக் கொண்டே கூறினான். "இந்தா, இன்னிக்கு நீ நரி முகத்துலே தான் முழிச்சிட்டு வந்திருக்கிறே. இதை வெச்சிகிட்டு சேவலைக் குடுத்திடு?".

சில விநாடிகள் மௌனமாகவே நின்றான். மனத்தவிப்பை ஒருவாறு அடக்கிக் கொண்டு, "கோவிச்சுக்கப் படாதுங்க, முந்தித் தெரிஞ்சிருந்தா, நான் சத்தியமா கேட்டிருக்கவே மாட்டேனுங்க. என்னமோ எப்படியோ நடந்து போச்சு. இனி நான் இதை உங்களுக்குக் கொடுத் திட்டாலும் விபரீதமாகப் போகு முங்க. ஐயா அவுங்களைச் சமாளிக்க முடியாதுங்க". அழாக் குறையாக அவன் பதில் கூறினான்.

சேவலைத் தன் மார்போடு இறுகப் பிடித்துக் கொண்டான். மாப்பிள்ளை முகம் கோபத்தால் சிவந்தது. "குடுப்பியா, மாட்டியா?"

மறுக்கும் பாவனையில் தலையை அசைத்தான் வேலன், சினத்தால் தன் கையிலிருந்த நூறு ரூபாய் நோட்டை உள்ளங்கையால் கசக்கிக் கொண்டு, "டேய் ஒத்தைக் கண்ணா! உனக்கு இத்தனை ராங்கியாடா? பாத்துக்கறேன் டே!" என்று கறுவி விட்டுத் திரும்பி விடுவிடுவென்று போய்விட்டான் மாப்பிள்ளை.



'ஒத்தைக் கண்ணன்' என்று மாப்பிள்ளை தன்னை ஏசிவிட்டுப் போனது குறித்து வேலனுக்குத் தாங்கல் ஒன்றுமில்லை. அவன் ஒத்தைக் கண்ணன் தான். முது குக்குப் பின்னால் சிலர் தன்னை இப்படிப் பரிகசிப்பதும் அவனுக்குத் தெரியாததல்ல. சின்னக் குழந்தை யாக அவனிருந்தபோது அவனுடல் முழுதும் 'ஆத்தாள்' வந்து 'ஆடு ஆடு'ன்னு ஆடிவிட்டாள். பாயில் படுக்க வைத்தால் உறுத்தும் என்று வாழை இலையில் விளக்கெண்ணெய் தடவி, அதிலே போட்டு வைத் திருந்தார்களாம் அவனை. போகிற போக்கில் தனக்கு இருக்கும் ஆயிரம் கண்ணும் போதாதென்று அந்தப் பேராசைக்காரி அவனுடைய இரு கண்களில் ஒன்றையும் பறித்துக் கொண்டு போய் விட்டாள்! போனால் போகட்டும். ஒரு கண் போதாதா இந்த உலகத்தைப் பார்க்க? உயிரையாவது விட்டு வைத்தாளே, மகராசி!

பரக்கப் பரக்க ஆற்றைத் தாண்டி அக்கரை சேர்ந்து தன் காட்டை நோக்கி ஓடினான் அவன். அந்த நாலு ஏக்கராக் காட்டின் நடுவிலிருந்த வில்லை ஓட்டு வீட்டுக்குள் நுழைந்த பிறகுதான், அவனுக்கு உயிர் வந்தது. அந்தக் காடும் வீடும் அவன் சொந்தம். சின்ன வயசிலே பினாங்குக்குத் தொழில் தேடி ஓடி இருபது வருட காலம் உழைத்து, நாலு காசுடன் திரும்பி வந்து இந்தத் தோட்டத்தை வாங்கினான் வேலனுடைய தகப்பன் பினாங்கு முத்து. பிறந்த மூன்று குழந்தைகளில் எஞ்சி நின்றவன் வேலன்தான். செல்லப் பிள்ளையாக வளர்த்து, மகனது ஏழாம் வயதிலேயே பினாங்கு முத்து கள்ளுக்கடையில் ஒரு நாள் திடீரெனக் கண்ணை மூடி விட்டான்.

சோறு தரும் தெய்வமாகக் காடு இருந்தாலும், வேலனுக்கு இருபத் தைந்தாவது வயதில் மிகுந்த சிரமத்தின் பேரில் கல்யாணம் நடந்தது. அநாதையான தூரத்து உறவுப் பெண் வெள்ளையம்மாள், அவனுக்கு மனைவியாகக் கழுத்தை நீட்டினாள். தன் கணவன் ஒரு கண் இழந்தவனாக இருந்ததற்கு அவள் மனம் குமைந்ததாகவே தெரிய வில்லை. கணவனும் மனைவியும், தாயுமாக அந்தக் குடும்பம் கசப் பின்றி வளர்ந்தது. அவர்களுக்கு வளர்ந்து வந்துள்ள பெருங்குறை பதின்மூன்று வருடங்களாகியும் குலம் விளங்க ஒரு குழந்தை கூட இல்லையே என்ற ஏக்கம்தான். இத்தனைக் காலமாகியும் தன் வயிறு வெறுமையோடிக் கிடக் கிறதே என்று வெள்ளையம்மாள் வேண்டாத தெய்வமில்லை, சுற்றாத அரச மரம் இல்லை. இதை வாய்விட்டுச் சொல்லாமல் மனத்தில் நினைத்துப் புழுங்கியவன் வேலன். [illegible] கோயிலுக்கும் வாழைத் தோட்டத்து [illegible] கோயிலுக்கும் [illegible] மகனும் [illegible] ஜோடி [illegible] கொண்டு நடந்தார்கள். [illegible]

எந்தத் தெய்வம் கண் திறந்ததோ என்னவோ, வெள்ளையம்மாள் இரண்டு மாதம் மசக்கை!

சமீப காலமாகச் சேவல் கட்டுக்குப் போவது, சேவல் வளர்ப்பது அவனுடைய ஒரே பொழுது போக்கு. மனைவி வெள்ளையம்மாள் முகத்தில் புதுமணப் பெண்ணின் பொலிவு. தாய்க்கு நிலை கொள்ளாத மகிழ்ச்சி! தவமாய்த் தவமிருந்து பெறப்போகும் குழந்தையைக் கண்ணாரக் கண்டுவிட வேண்டுமென்ற இன்பத் தவிப்பு வேலனின் மனத்திலே அறுபது நாழிகையும் அடங்குவதே இல்லை. குழந்தை கருவில் இருக்கும் காலம் பத்து மாதம் என்றில்லாமல் நாலு மாதமாக இருந்தால் தேவலை என்று பறந்தது தந்தை மனம்.

பொங்கல் முடிந்து நாலைந்து நாள் இருக்கும். கடந்த ஏழெட்டு மாதமும் பொழுது போகாமல் இருந்த வேலனுக்கு, ஏதோ சிரிச்சுச் சிரிச்சு வெள்ளையம்மாளிடம் பேசுவது, பண்ணை வேலைகளையும் தொழிலையும் கவனிப்பது, மீதியிருந்த நேரமெல்லாம் தன் சேவலைப் பராமரிப்பது இப்படிக் காலம் கழிந்தது. தாதறா விதையும், கருமணலுங் கலந்து சேவலுக்கு ஊட்டம் கொடுப்பான். தானியம் போடுவான். இப்படித் தாது புஷ்டி அடைந்த சேவல், பார்ப்பதற்கே கம்பீரமாகக் 'கொழு கொழு' வென்று மதமேறி நின்றது.

அன்று காலையில் சற்று நேரம். வெள்ளையம்மாளுக்கு இடுப்பு வலி கண்டது. பிறகு சரியாகி விட்டதாகத் தோன்றிற்று. வழக்கம்போல் வீட்டு வேலைகளை மெதுவாகக் கவனிக்கத் தொடங்கி விட்டாள். "உம் பொண்டாட்டிக்கு உடம்பு சரியில்லை. பேசாமே வூட்டோட இரு. அவசரம் ஆத்திரத்தும்போது உன்னை யார் தேடறது? என்று அறிவிப்புக் கொடுத்திருந்தாள் அவன் தாய். அவளே ஒரு மருத்துவச்சிதான். இருந்தாலும்...

தை மாதம் தான் அந்த வட்டாரத்தில் பெரிய சேவல் கட்டு. வெகு காலமாக நடக்கிறது. சேவல் கட்டு நடத்தக் கூடாது என்று சட்டம் உண்டு. அதாவது, அப்படி எழுத்தில் உண்டு. கள்ளிப் பாளையத்தில் நடக்கும் 'பெரிய கட்டு' பெயர் போனது. ஆனானப்பட்ட பெரிய நிபுணர்களும், சாதிச் சேவல்களும், கடையான கடைகளும் வந்து திருவிழாப் போல அந்த கிராமம் காட்சி தரும். அந்தக் கட்டிற்குப் போய்க் கலந்து கொண்டால் சிங்கன் - அதுதான் வேலன் தன் சேவலுக்கு வைத்துள்ள பெயர், தன் புகழை 'ஊரே கேளு நாடே கேளு' என்று பரவச் செய்து விடுமென்ற நம்பிக்கை, ஆசையெல்லாம் அவன் மனத்தில் கூப்பாடு போட்டுக் கொண்டிருந்தது.

பிற்பகல் மூன்று மணியிருக்கும். கோடை வெயிலுக்கு என்ன அவசரமோ; தை மாதமே வந்து கொளுத்தத் தொடங்கி விட்டது



போல் வேக்காடு, நிறை சூலியான வெள்ளையம்மாள் பாயில் படுத்துக் கொண்டிருந்தாள். தூக்கம் பிடிக்காமல், மெதுவாக அவளருகே வந்து நின்ற வேலன் "அம்மா எங்கே!" என்று கேட்டான்.

"உள்ளே தூங்குது."

"உனக்கு ஒடம்புக்கு எப்பிடியிருக்குது. வெள்ளை?" குரலில் பரிவு கலந்து வந்தது.

"நல்லாத்தானிருக்குது. மாமனுக்கு இன்னிக்கு என்ன இத்தனை கரிசனம்?" அவன் முகத்தைப் பார்த்துச் சிரித்தபடியே எதிர்க் கேள்வி கேட்டாள் வெள்ளை.

"சொல்லுன்னா?"

"நெசமாத்தான். நல்லாத்தானிருக்குது. காலமேதான் எப்படியோ இருந்தது. எதுக்குக் கேக்கற மாமா?"

"கள்ளிப் பாளையம் போலாணுனு தான். பொங்கல் கட்டுக்கு."

"போறது."

"உனக்கு நல்லாருக்குதுண்ணாப் போலான்னுப் பாக்கறேன்".

இத்தனை வருடம் பழகிய கணவன் மனம் அவளுக்குத் தெரியாமலா போகும்? வேண்டாம் என்றாலும் இன்று பிடித்துள்ள வைத்தியத்தில் சொல்லாமல் போய் விடுவான் என்பது அவளுக்குத் தெரியும்."

"இல்லேன்னா நீ போகமாட்டியாக்கும்?"

"மாட்டேன்." இப்படிச் சொல்லிட்டு அவள் முகத்தைப் பார்த்ததும் அவனுக்கே சிரிப்பு வந்துவிட்டது. இன்னிக்கு ஒரே ஒரு நாள்தான் வெள்ளை, அப்புறம்...

"அப்புறம்?"

"பையன் பொறந்து கண்ணாலே பார்த்த பிறகுதான் வெளியே காலெடுத்து வைப்பேன். நெசம்மா" என்றான் வேலன்.

"போறதுன்னா அத்தை எந்திரிக்கறதுக்குள்ளே போயிடு. எந்திரிச்சிட்டா சத்தம் போடுவாங்க, நேரத்தோட வந்திடு மாமா. சுத்தப் போயிடாதே!"

அடுத்த நிமிடமே சேவலும் கையுமாக வேலன் கள்ளிப் பாளையம் நோக்கிப் புறப்பட்டு விட்டான்.

முத்தூர் ஜமீனின் பூச்சக்கரக் குடை நிழலில், கள்ளிப் பாளையம் முன்பு இருந்தது. ஜமீன்தாருக்கு மாமியார் ஊர் அது. பத்து, நாற்பது வருடங்களுக்கு முன் தை மாதத்தில் அப்போதிருந்த ஜமீன்தார், மற்போர் சிலம்பு விளையாட்டு, கத்தி வீச்சு, கரகாட்டம், ஒயில் கும்மி இப்படித் திருவிழா நடத்தினாராம். இப்போது வேலை போன ஜமீன்தார் சேவல் கட்டு நடத்துகிறார்.

வேடிக்கையான ஒரு சம்பவத்தோடு அன்று சேவல் கட்டு ஆரம்பமாயிற்று. பரம்பரை வழக்கப்படி ஜமீன்தார்தான் தன் சேவல் ஒன்றைத் தன் கையால் 'களம்புக' விடுவது வழக்கம். இன்றும் அப்படித்தான் சேவலைக் களத்தில் நிறுத்தினார். அடுத்து, முறைப்படி வேறு ஒருவரது சேவல் அதன் எதிரியாக நிறுத்தப்பட்டது. இப்படித்தான் கட்டுக்குப் 'பூசை' போடுவது வழக்கம். சேவல் கட்டு நடக்கும் பரந்த மைதானத்தில் ஏகப்பட்ட கூட்டம். அதன் ஓரத்தில் ஜமீன் பங்களா ஒன்றின் மதில் சுவர் உண்டு. ஜமீன் சேவல் களம் புகுந்தது. காலில் கட்டிய கத்தியுடன், அதே சமயம் பெட்டைக் கோழி ஒன்று தற்செயலாக எப்படியோ அங்குள்ள சுற்று மதிலின் மீது பறந்து நின்று ஏதோ சுயம்வரத்துக்கு நிற்கின்ற ராஜகுமாரி போல உற்றுப் பார்த்தது. அது ஜமீனது அந்தப்புரத்துக் கோழிதான். அதை எப்படியோ கண்டுவிட்ட, களம் புகுந்த ஜமீன் சேவல் 'ஜிவ்' என்று மேலே பறந்து, களம் மறந்து, காலில் கட்டிய கத்தியோடு அந்தப் பெட்டைக் கோழிக்குப் பக்கமாகப் போய் மதில் மேல் நின்றது இரண்டும் சில விநாடிகள் தம்பதிகளாகக் கூட்டத்தினருக்குக் காட்சியளித்ததும், உடனே ஜோடியாகப் பறந்து பங்களாவின் அந்தப்புரம் சென்றுவிட்டன.

கூட்டத்தினர் இதைக் கண்டு 'ஓகோ' என்று கைதட்டிச் சிரித்து ஆரவாரம் செய்து விட்டார்கள். ஜமீன்தாருக்கு முகம் சுண்டிப் போனாலும் அவரும்கூடச் சேர்ந்து சிரித்துவிட்டார்.

சற்று நேரத்தில் சூடு பிடித்துக் கொண்டது. இரு கட்சிக்காரர்களின் ஆரவாரம் நெஞ்சு கிழிந்து சுருளும் சேவல்களும், இரத்தம் வழிய ஓடுவனவும், படபடக்கும் சிறகோடு சாகும்வரை போராடும் சேவல்களும் தோற்ற சேவல் கோச்சையைத் தோளில் போட்டுக் குதிக்கும் ஆரவாரமும் இப்படி ஒரே கொண்டாட்டமாக நடந்தது. அந்தப் பிராணிகளின் கொலை, சாவு, மரணாவஸ்தை இவற்றைப் பார்த்து மனிதர்கள் குதூகலமாகச் சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

பொங்கலுக்கு மருதாக் கவுண்டர் தந்த சோமன் வேட்டி உடுத்து, அரைக்கைச் சட்டையணிந்து, புதுமாப்பிள்ளை போல உற்சாகமாக வந்து இருந்தான் வேலன். உடலிலே கருப்பு நிறம் நிழலோடினாலும் வலிமை நிறைந்த உடற்கட்டினால் கருமையும் மாறிப் பொலிந்தது. அந்த ஒரு கண் மட்டும் ஊனப்படாமல் இருந்திருந்தால் நிச்சயமாக இப்போதும் மாப்பிள்ளைதான். அவனைச் சுற்றி நாலு சகபாடிகளும் வந்திருந்தார்கள்.

தன் 'சிங்கனை'க் கீழே இறக்கி விட்டுக் காலிலே கூர் முனைக் கத்தி கட்டிப் போருக்குத் தயாராக்



கினான், வேலன். கோயமுத்தூர் மாரியப்பன் பேரெடுத்த கட்டுக்காரன், அவன் சேவல் பிடரியைச் சிலிர்த்து நின்றது. கோயமுத்தூர் அலட்சியமாக வேலனைப் பார்த்துச் சொன்னான்.

"இது மரகதப் புள்ளி அப்பனே!"

"தெரிஞ்சுது."

"இருபத்து அஞ்சு ரூபா பந்தயம்?"

"சரி."

இனக் கொலைக்கென்றே வளர்க்கப்பட்டிருந்த தினவு எடுத்த 'சிங்கன்', இறக்கையைப் 'படபட' வென அடித்துப் போருக்குத் தயாராயிற்று. 'கொக், கொக் என ஒரு வகையான எக்காள ஒலி முழக்கம் நடந்தது. 'ஜிவ் ஜிவ்' என்று இரு சேவல்களும் ஒன்றின் மேல் ஒன்று பாய்ந்தன. உடலோடு உடல் மோதும் ஒலி 'நெக்கு நெக்கு' என்று அவ்வப்போது கேட்டது. இரண்டு நிமிடங்கள் இடைவெளியின்றி மோதல். 'கொக்... கொக்!' கடைசியாக ஒரு மோதல். 'மரகதப் புள்ளி சுருண்டு கீழே விழுந்தது. நெஞ்சிலிருந்து பொங்கி வழிந்த ரத்தம் நிலத்தை நனைத்தது. சட்டென்று வேலன் சிங்கனைப் பிடித்துக் கொண்டான். கோயமுத்தூர் மாரி சுளையாக ரூபாயை எண்ணிக் கொடுத்து, குற்றுயிராகத் துடித்துக் கொண்டிருந்த தன் அருமையான மரகதப் புள்ளியை ஏக்கமுடன் பார்த்துவிட்டு நகர்ந்தான். அந்தப் பறவைப் பிராணிகளின் பகையிலும் சாவிலும், என்னத்தைக் கண்டதோ என்னவோ, ஆறறிவு படைத்த உயர்ந்த மனிதப் பிராணிகள் கைகொட்டி ஆரவாரித்து வேலனைப் பாராட்டின. சாகக் கிடந்த மரகதப் புள்ளியை வேலனது சகா ஒருவன் தூக்கி வைத்துக் கொண்டான்.

அடுத்த கால் மணி நேரத்தில் மறுபடி இரண்டு சேவல்கள் சிங்கனது ஆற்றலுக்கு ஆற்றாமல் சரணடைந்தன. எழுபது ரூபாய் பந்தயப் பணமாகவும், மூன்று சேவல் கோச்சைகளும் வேலனுக்கு லாபமாயிற்று. வேலனது மனத்தில் மகிழ்ச்சி பொங்கி வளர்ந்தது. அவனது சேவலுக்கு எதிரியாக அங்கு வந்த கட்டுக்காரர்கள் இனி எவருமே தயாரில்லை என்பது சற்று நேரத்தில் தெளிவாகிவிட்டது. வேலன் நினைத்தது போலவே சிங்கன் ஜெயக்கொடி நாட்டி விட்டான்.

தை மாதத்து மாலை வெயில் பனிக் குளிருடன் இதமாக வீசிற்று. சிங்கன் மூன்று வீரர்களைச் [illegible] நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது. என்றாலும், அதனுடலிலும் பகைவன் கொடுத்த [illegible] இரத்தம் கசிந்தது. வேலன் அது கண்டு மனம் கசிந்தான். பெருமையினாலும், [illegible] அவன் கண்களில் கண்ணீர் [illegible] நின்றது. கையுடன் கொண்டு [illegible]

திருந்த ஏதோ தைலத்தை எடுத்துச் சிங்கனுடலில் தடவிச் சாந்தப் படுத்தினான். "போதும், இனி நேரமே வீடு திரும்பலாம்." சிங்கனை எடுத்துத் தன் மார்புடன் அழுத் தாமல் அப்படியே அணைத்தபடி புறப்பட்டான்.

"டேய் வேலா!"

எரிச்சலுடன் கிளம்பிய குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான் வேலன். கவுண்டரது சின்ன மாப்பிள்ளை, தன் நெஞ்சோடு சேர்த்துப் பிடித்திருந்த சேவலுடன் வந்து கொண்டிருந்தான்.

"ஏண்டா போறே?

"நேரமாச்சுங்க›போறேன்."

"எத்தனைக் கோச்சை கிடைச்சுது?"

"சும்மா மூணுதானுங்க."

"நோஞ்சான் சேவல்களை அடிச்சிட்டுச் சிங்க மாட்டமா பொறப்பட்டிட்டியாக்கும்?

வேலன் பதில் பேசவில்லை. மாப்பிள்ளையின் முகத்தை மட்டும் ஒரு கணம் ஏறிட்டு ஒரு கண்ணால் கவனித்தான்.

பார்வையைத் தன் மார்பி லிருந்த சேவல் மீது திருப்பி மாப்பிள்ளை கேட்டான். "வேலா, இந்தச் சேவலைப் பாத்தியாடா, இது என்ன சாதிடா?"

"பச்சைக்கால் செங்கோரிங்க." வேலன் அச்சேவலின் இனங்கண்டு கொண்ட ஆற்றலோடு சற்று அநாயாசமாகவே பதில் சொல்லி விட்டான்.

"சேவலை இறக்கிக் கட்டுக்கு நிறுத்து பார்க்கலாம்..."

"வேண்டாங்க."

"ஏன் வேண்டாங்கறே?"

"நேரமாச்சுங்க."

இதற்குள் சுற்றிக் கூட்டம் சேர்ந்து கொண்டது. இது போர்க் களம் அல்லவா? தன் வீரனை அவமானத்துக்கு உள்ளாக்க வேலன் மனம் இசையவில்லை. திரும்பி சிங்கனை ஆயுத பாணி யாக்கித் தயாராக்கினான். மீண்டும் ஒரு படு கொலைக்குச் சேவல்கள் பிடரி சிலிர்த்து நின்றன.

மாப்பிள்ளையின் பச்சைக்கால் செங்கோரி 'மத மத' வெனத் திமிரி முகத்தை 'உப்'பென்று வைத்து நிமிர்ந்து நின்றது. கொலை வெறி மிகுந்த வன்மத்துடன் சிங்கனை உற்றுப் பார்த்தது. அதன் சிறகுகள் 'பள பள' வென மாலை வெயிலில் மின்னின. கருஞ் சிவப்பான அதன் நிறம் உலைக்களத்தில் காய்ச்சிய 'கொழு'வைப் போலத் தோன்றியது. சிங்கன் வெள்ளையும் சிவப்பும் கலந்த நிறத்தோடும் எதிரிகளால் ஏற்கெனவே பட்ட விழுப்புண் களில் வழிந்த ரத்தக் கசிவோடும் நின்று எதிரியை நோக்கியது. ஏதோ



காரணத்தால் சற்று நேரம் தாமதித்து வந்ததால், மாப்பிள்ளைச் சேவலுக்கு இதுதான் முதல் போர்.

"எத்தனை ரூபாய் பந்தயம்?" மாப்பிள்ளை கேட்டான்.

"சொல்லுங்க?"

"அம்பது!"

"செரிங்க." வேலன் ஐம்பது ரூபாயை நோட்டாக எடுத்து முன் வைத்தான். நின்ற இடத்திலிருந்து ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்களை இடக்கையால் ஆணவத்தோடு வீசியெறிந்தான் மாப்பிள்ளை. பக்கத்திலிருந்த யாரோ ஒரு புது மனிதன் பந்தயத் தொகையை எடுத்துப் பத்திரப்படுத்தினான்.

"ஜிவ்!"

"கொக், கொக்!" சேவல்கள் தங்கள் எஜமானர்களது பந்தயத் தொகையைக் காப்பாற்றிக் கொடுக்கத் தமது உயிரைச் சாவுக்கு இரையாக்கத் தொடங்கின.

"அடடா, ராஜா"

"அப்படியடி. சிங்கா!"

"அடி சக்கை! சுருளுதடா சிங்கன்!"

"போடு... போடு... அப்படிப் போடு சிங்கா!

எந்தச் சேவலின் சிறகிடையே சாவு மறைந்து கொண்டு இருக்கிறது என்று யாராலும் நிர்ணயிக்க முடியவில்லை. சிங்கனுடலிலிருந்து ரத்தம் பீறிட்டு வழிந்தது. 'பச்சைக் காலும்' ரத்தம் வழியும் நெஞ்சை நிமிர்த்தி மோதிற்று.. ஒரே மூச்சாக அவை சாடிச் சில நிமிடங்கள் கழித்து இரண்டும் பின்வாங்கி நகர்ந்தன!

அவற்றின் எஜமானர்கள் தத்தம் வீரர்களைப் பிடித்துத் தடவிக் கொடுத்துக் களைப்பாற்றினார்கள். மாப்பிள்ளை தன் சேவலைத் தடவிக் கொடுத்தபடியே இளக்கார மாகப் பார்த்து "டேய் வேலா! ரூபா அம்பது பளுத்துப் போச்சு. பாத்துக்கோ" என்றான்.

"பாக்கலாங்க" என்றான் பிடி தராமல் வேலன்.

"போடா சிங்கா, போ!"

"ஒரே சாடு சாடுடா, ராஜா போ!"

சிறகுகளை அகல விரித்து இரு சேவல்களும் வெகுண்டு மோதின. 'சட் சட்' என அடியும் மோதலும் விழுந்தன. மூச்சு விடாமல் ஓர் இறுதிப் போரிலே அவை இறங்கின. 'மரணம் அல்லது வெற்றி' இரண்டில் ஒன்றை முடிவு செய்து கொண்டே தீருவதென இரண்டும் சங்கல்பம் பூண்டனபோல் தோன்றின. கழுத்துக்கள் புடைத்து, சிறகு விரித்து, பிடரி சிலிர்த்து, பயங்கரமான கொலைகாரர்களைப் போலத் தோற்றமளித்தன.

"சிங்கன் சுருளராண்டா..."

"ராசா மயங்குது போய்! தாங்காது".

சிங்கன் உடலிலே ரத்தம் மறுபடியும் வழிந்தது. ராசாவுக்கு வயிற்றின் வலப்புறத்தில் ரத்தம் பீறிட்டது. எது வெல்லும்? சிங்கன் ஒரு கணம் தள்ளாடினான். "போச்சு, தீர்ந்தான் சிங்கன்" என்று எண்ணினான் வேலன். அடுத்த கணம் திடீரென்று எழுந்து மூச்சு விடாமல் மோதிற்று சிங்கன்.

ஆறாவது மோதலிலே எதிரடியாக மறுபடியும் ராசாவும் அப்படியே சாடிற்று. சிங்கனும் சற்றே சுருண்டு தயங்கித் தளர்ந்தது. ஏற்கெனவே மூவருடன் சமராடிப் பட்ட ரணக்காயங்களுடன் சரி நிகர் சமாதானப் பகைவனால் விளைந்த தாக்குதலும், நறுக்கென்று பல இடங்களில் பாய்ந்த கத்திக் காயங் களும், அதன் மரண வேதனையைக் குறிப்புக் காட்டின. கடைசியாகச் சிங்கன் நிமிர்ந்தது. ஒரே கணம் "படார், படார்." மூச்சு விடாமல் மறுபடி சிங்கனது முடிவற்ற ஆங்காரச் சமர் கண்டு கூட்டம் அசந்து திகைத்து நின்றது.

அந்த எதிரடி முடியுமுன்னே மாப்பிள்ளைச் சேவல் நிலத்திலே ரத்தக் கோலம் போட்டுக் கொண்டே ஓடத் தொடங்கிற்று. கழுத்துப் புடைத்து எரித்து விடுவதுபோல் விழித்த சிங்கன் ராசாவைத் துரத்திக் கொண்டே ஓடிற்று. அந்தப் பாய்ச்சலை கண்டு கூட்டமே சற்று ஒதுங்கி நின்றது.

ராசாவின் தோல்வி நிச்சயமான போது, சுற்றி நின்ற பார்வை யாளர்கள் கைதட்டி ஆர்ப்பாட்டம் செய்து விட்டார்கள்.

வேலனுக்குப் பெருமையால் இருப்புக் கொள்ளவில்லை. ராசாவைத் துரத்திச் செல்லும் சிங்கனுக்குப் பின்னால் ஓடி அதைத் தன் கைகளால் எடுக்கக் குனிந்தான்.

சண்டாளத்தனமான மூர்க்கமும் பயங்கரமும் நிறைந்த ஆவேசத்தால் கொதித்துக் கொண்டிருந்த சிங்கன், தன் பின்னால் தன்னைப் பிடிக்க யாரோ வருவது கண்டு திரும்பி வேலன் மீதே காலில் கட்டிய கத்தியுடன் எகிறிப் பாய்ந்தது. அது பாயவும் வேலன் அதைப் பிடிக்கக் குனியவும் சரியாக இருந்தது.

"ஐயோ!" என்று வேலன் அலறினான். அவன் அலறிய போது யாரோ கட கட எனச் சிரித்த பரிகாச ஒலி வேலனது செவியில் விழுந்தது. அது மாப்பிள்ளைதான் என்பது மட்டும் அவன் மனத்திற்குத் தெரியும். அதன்பின் என்ன நடந்தது என்பதே அவனுக்கு நினைவில்லை.

வேலனுக்கு மறுபடி சுய நினைவு வரத் தொடங்கியதும் அவன் மனம் விழிப்படைந்து நடந்தவற்றை எல்லாம் கணப் பொழுதில் வரிசைப்படி அவனுக்கு உரைத்தது. அக்கம் பக்கம் யாரோ பேசியது கேட்டது.

யார் என்பது மட்டும் தெரிய வில்லை. உலகம் முழுவதும் இருட்டிக் கிடப்பது போல் அவனுக்குத் தோன்றிற்று. முகத்தில் யாரோ கட்டுப் போட்டிருந்தார்கள்.



தாள முடியாமல் முகத்தைச் சுற்றி மரண வலி வலித்தது. எழ முயன்றபடி 'யாரு பக்கத்திலே?' என்று கேட்டான். கைகளால் தடவிப்பார்த்ததும் அதுதான் வழக்க மாய் படுக்கும் கயிற்றுக் கட்டில் என்பதும் அவனுக்கு ஸ்பரிச உணர்வே சொல்லியது.

"பேசாமே படுத்துக்கோ வேலா"

பெரிய கவுண்டர் குரல் இரக்கமுடன் அவன் காதில் விழுந்தது. திகைத்தான் வேலன்.

"பண்ணாடி அவுங்களா!" வியப்பு நிறைந்த குரலில் கேட்டான்.

"ஆமா, ஆடாமே அசையாமே படுத்திரு." இன்னும் யார் யாரோ அங்கிருப்பதாக மட்டும் அவனுக்குத் தெரிந்தது.

"இப்ப எங்கிருக்கிறேனுங்க... இது எல்லாம் என்னங்க" கையை நீட்டியே பாவனையுடன் கேட்டான்.

"உன் வீட்டிலேதான் இருக்கே. ஊசி போட்டிருக்குது. கொஞ்சம் நல்லானதும் காலமே கோயமுத்தூர் ஆஸ்பத்திரிக்குப் போலாம்."

ஒரு சில வினாடிகள் அவன் ஊமையாகி எதையோ நினைத்துத் தவித்தான். வலக்கையில் தோள் பட்டையிலே ஏதோ ஊசி குத்தியிருந்ததுபோல் வலி. உள்ளே வீட்டிலிருந்து குழந்தை ஒன்று வாய் மூடாது அழும் குரல் அவனுக்குக் கேட்டது.

"என்ன சத்தங்க அது!" ஒரு பதைபதைப்புடன் கேட்டான் வேலன்.

"உனக்குப் பையன் பொறந் திருக்கிறான். ராசா மாதிரி இருக் குது குழந்தை" என்று பக்கத் திலிருந்து அவனுக்குப் பழக்கமான யாரோ ஒரு பெண் குரல் பதில் கூறிற்று.

"அம்மா எங்கே?"

தான் மயங்கி வீழ்ந்த சமயம் அவ்வழியே தற்செயலாக வண்டியில் வந்த கவுண்டர்தான் தன்னை எடுத்து வந்தார் என்பதும், வேலனின் தாய் தன் அருமை மகனுக்கு நேர்ந்த விபரீதத்தால் நினைவிழந்து கிடக்கிறாள் என்பதும், வெற்றி மாலை சூடிய தன் சிங்கன் அங்கேயே கொஞ்ச நேரத்தில் செத்துப்போன சேதியும், வெள்ளையம்மாளும், தானும், தன் தாயும் தவங்கிடந்து பிறந்துள்ள தன் தலை மகனை அவனது ராஜா போன்ற அழகு முகத்தைக் கண்டு மகிழத் தனக்கு இருந்த அந்த ஒரே ஒரு [illegible]ால் மீளாத குருடாகி [illegible]தும் அப்போது அவனுக்குத் தெரிந் திருக்க முடியாது!

"[illegible] [illegible] [illegible] முத்த தலைமுறைக் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]

# அறிவியல் துளிகள்

## மனிதனின் உடம்பு

மைனஸ் 30 டிகிரி பாரன்ஹீட்டுக்கு குறைவான குளிரில் மனிதனின் உடம்பு விறைத்துவிடும். அதேபோல் 120 டிகிரி பாரன்ஹீட்டுக்கு அதிகமான வெப்பத்தை மனிதனின் உடம்பு தாங்காமல் கருகிவிடும்.

## சேற்றுப்புண்ணுக்கு மருந்து

மழைவெள்ளம் பெருக்கெடுத்து ஓடி தரையெங்கும் சேறும் சகதியுமாக இப்போது இருக்கும். அதில் நடந்தால் கால் விரல்களில் சேற்றுப்புண் உண்டாகும். அதற்காக நாம் வெளியில் போகாமல் முடங்கிக்கிடக்க முடியுமா? சேற்றுப்புண் இருந்தால், கொஞ்சம் மஞ்சளையும், அதேஅளவுக்கு வேப்பிலையையும் எடுத்துக் கொண்டு நன்றாக அரைத்து, அதன் விழுதை புண் உள்ள இடத்தில் தினமும் தடவுங்கள். புண் விரைவில் குணமாகிவிடும்.

## வெள்ளரிக்காயின் வீரியம்

பச்சையாகவே தின்னக்கூடிய காய்கறி களில் வெள்ளரிக்காய் சுவைமிக்கது. இது புகைபிடிப்பவர்களின் வயிற்றில் சுரக்கும் நஞ்சைப் போக்க பெரிதும் பயன்படுகிறது. வெள்ளரிப்பிஞ்சை சாப்பிடும்போது, அது செரிப்பதற்காக நம் இரைப்பை ஒருவித என்ஸைமைச் சுரக்கிறது. அந்த நீர், புகைப் பிடிப்பவர்களின் வயிற்றிலுள்ள நஞ்சைப் போக்கும் மருந்தாகப் பயன்படுகிறது.

## முதல் பல்கலைக்கழகம்

உலகிலேயே முதன்முதலில் தோன்றிய பல்கலைக்கழகம் ஏதென்சில் பிளேட்டோ வால் தொடங்கப்பட்டது. இதில் அரிஸ்டாடில் படித்தார்.

15-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பாரீஸ் பல்கலைக்கழகத்தில் 50 கல்லூரிகளும், 20,000 மாணவர்களும் இருந்தார்கள். அதுதான் அப்போது உலகத்தின் மிகப்பெரிய பல்கலைக் கழகம்.

கல்கத்தா பல்கலைக்கழகம்தான் நம் நாட்டில் முதன்முதலாகத் தொடங்கப்பட்ட பல்கலைக்கழகம். இதுதான் நம் நாட்டிலேயே பழமையானதாகும்.

## நீலத் திமிங்கலம்

பொதுவாக விலங்குகளில் பாலூட்டி இனத்தைச் சேர்ந்தவைகள் குட்டிகளை ஈனும்போது, அந்தக் குட்டிகளின் தலைப் பகுதிதான் முதலில் வெளிவரும். ஆனால் திமிங்கலம், டால்பின் முதலியவற்றின் குட்டிகள் பிறக்கும்போது, அதன் வால் பகுதிகள்தான் முதலில் வெளிவரும். பிறந்தவுடன் தாய் அதை நீர்மட்டத்திற்கு மேல் தள்ளிக்கொண்டு வந்து சுவாசிக்க உதவுகிறது.

திமிங்கலத்தில் நீலத்திமிங்கலம் என்றொரு வகையுண்டு. ஏழரை மீட்டர் நீளமும் இரண்டு டன் எடையும் இருக்குமாம். ஒவ்வொரு நாளும் அதன் தாயிடமிருந்து 600 லிட்டர் பால் குடிக்கும். ஒரே வாரத்தில் அதன் எடை இரண்டு மடங்காகிவிடுமாம்.

## உள்ளத்தை அள்ளித்தா

பெண்ணின் இதயம் ஆணின் இதயத்தை விட பதினைந்து சதவீதம் அளவில் சிறியது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதனால், எந்தப் பெண்ணாவது ஆணிடம் உன் இதயத்தை அள்ளித்தா என்றால் கொடுத்துவிடாதீர்கள். அங்கே இடமிருக்காது. ஏனென்றால் ஆணின் இதயம் பெரியதாயிற்றே!

## டர்பன்டைன் தைலம்

டர்பன்டைன் தைலம் என்பது "சீமைத் தேவதாரு" மரத்திலிருந்து வடித்தெடுக்கப் படும் ஒரு திரவம் ஆகும். இந்தியாவில் இமயமலைப் பகுதிகளில் கடல்மட்டத்துக்கு மேல் 1500-1900 அடி உயரம் வரை உள்ள பகுதிகளில் இந்தச் "சீமைத் தேவதாரு" வளர்கின்றது. இப்பகுதிகளில் இம்மரங்கள் சுமார் 25 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயிராகின்றன.

"சீமைத் தேவதாரு" மரத்தைச் சிறு ஊசியால் குத்திவிட்டால் அதில் பிசின் போன்ற திரவம் வடிகிறது. பின்பு அந்த திரவத்தை ஆவிமுறையில் தைலமாகத் தயாரிக்கின்றனர். இந்தியாவில் தயாரிக்கப் படும் டர்பன்டைன் நாற்றம் போக்கி களாகவும், பூச்சி கொல்லிகளாகவும், பெயிண்ட், வார்னீஷ் முதலியவைகள் தயாரிக்கப் பெரிதும் பயன்படுகின்றன. மேலும் டர்பன்டைன் தைலம் மருத்துவத் துறைக்கும் பெரிதும் பயன்படுகிறது.

## கனநீர்

அணு உலைகளில் பயன்படுத்தப்படும் கனநீர் மிகவும் விலைமதிப்புள்ளதாகும். ஒரு லிட்டரின் விலை 4000 ரூபாய்க்கும் அதிகமாகும். கனநீர் சாதாரண நீரை விட 10 மடங்கு கனமானது. விஷத்தன்மையுள்ளது. இருவகை நீரிலும் ஹைட்ரஜன் மாறுபடுவது தான் இதற்குக் காரணம். ஹைட்ரஜன் அணுக்களைப் பிரித்து கனநீரைத் தயாரிக் கிறார்கள். இதற்கு நிறைய செலவாகும். அதனால்தான் கனநீரின் விலை அதிகம்.

## டயருக்கு காற்றடிக்கப் புதிய கருவி

இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு நிறுவனம் வாகன டயர்களுக்குக் காற்றடிப்பதற்கான நவீன இயந்திரம் ஒன்றைத் தயாரித்து உள்ளது. இந்த இயந்திரம் பல்வேறு வசதிகளைக் கொண்டது. பெட்ரோல் நிரப்பும் நிலையங்கள், வாகனப் பழுது நீக்கும் இடங்களில் வைத்துக் கொள்வதற்கு ஏறப இந்தக் கருவியை இந்நிறுவனம் தயாரித்து உள்ளது. இக்கருவி காற்றை நிரப்பியவுடன், டயரில் அதிகக்காற்று இருந்தால், தானாகவே அதைக் குறைக்கவும் செய்கிறது. இதற்கென தானியங்கிக் கருவியும் பொருத்தப்பட்டுள்ள தாக இந்நிறுவன அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். மேலும் பல நவீன வசதிகளையும் இக்கருவியில் ஏற்படுத்தி உள்ளனர்.

## சீதாபழம் தான் அருமருந்தாச்சு!!

சீதாப்பழம் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒரு பழமாகும். இப்பழம் விலையும் மலிவுதான். எல்லா இடங்களிலும் எளிதில் கிடைக்கக்கூடியது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஆண், பெண் என்ற வித்தியாசமின்றி விரும்பிச் சாப்பிடக் கூடியது. இப்பழம் நல்ல வைட்டமின் சத்துக்கள் நிறைந்தது. உடல் ஆரோக்கியத்தைத் தரவல்லது என்பது நாம் அனைவரும் அறிந்த விஷயம்தான். இதில் நாம் அறியாத விஷயம் என்னவென்றால் நாம் இந்த பழத்தைச் சாப்பிட்டுவிட்டு இதன் விதையை தூக்கி கீழே எறிந்து விடுகின்றோம். அவ்வாறு எறிந்துவிடாமல் இந்த விதையைச் சேகரித்து அப்படியே வெயிலில் காயவைத்து உரலில் போட்டு தூள் செய்து ஒரு பாட்டிலில் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். பின்பு இதில் சிறிது பொடி எடுத்து நீரில் குழைத்து தலையில் தேய்த்து அரை மணி நேரம் ஊறவைத்துப் பின்பு சீகக்காய் போட்டு குளித்து வந்தால் தலையில் உள்ள பேன்கள் அடியோடு ஒழிந்துவிடுவதோடு தலையில் பொடுகும் வராது.

# கவிதைச்சோலை

'இன்றுபோல் என்றும் இரும்' என்ற தலைப்பின் கீழ் நாம் வைத்த போட்டியில் ஏராளமான கவிதைகள் வந்து குவிந்தன; அவற்றுள் பரிசுக்குரிய கவிதைகள் இரண்டைச் சென்ற இதழில் கண்டீர்கள்; பாராட்டுக்குரிய சில கவிதைகளைத் தந்திருக்கிறோம் - சுவையுங்கள்.

## இன்றுபோல் என்றும் இரும்

தூங்கியதும் அதனாலே துயர்கள் யாவும்
தொடர்கதையாய்ச் சூழ்ந்ததுவும் இருண்டு நெஞ்சம்
ஏங்கியதும் ஏமாற்றம் முனைந்து தாக்கி
இழிந்ததுவும் அழிந்ததுவும் போதும்! வெல்லும்
ஒங்குதிறல் பெற்றுள்ளோம்! இனமும் நாடும்
உய்வுபெற மேன்மையுறத் தொண்டு செய்ய
நாங்களெலாம் சூளுரைத்து விட்டோம் என்றே
நாவரங்கில் தேன்வழிய நவின்றான் நண்பன்!

தக்காரை அரியணையில் அமர்த்தி வைத்தும்
தகவிலரை அடியோடு வீழச் செய்தும்
சிக்கலின்றி ஊராட்சி இயங்கச் செய்தும்
செயலாண்மை மிக்கவரை ஆளச் செய்தும்
மக்களாட்சிப் பயிர்செழிக்கச் செய்த அன்ப!
மணக்கட்டும் புகழ்வாழ்க்கை இனிமே லேனும்!
எக்காளம் இடுவோரைச் சாய்த்துத் தள்ளி
இன்றுபோல என்றும்இரும் என்றேன் நானும்!

-கடலூர் மணிமாறன்



அன்னைத் தமிழை அரியணையில் ஏற்றுதற்குத்
தன்னை அர்ப்பணித்த தாழ்விலாச் செல்வர்
தெளிவான சிந்தனையும் திட்டமிடும் பாங்கும்
எளியோரை முன்னேற்றும் எண்ணமும் கொண்டோர்
மொழியால் மதத்தால் முடங்காது என்றும்
விழியாய்த் தேசியம் பேணிடும் சான்றோர்
மனிதத்தை வாழ்விக்கும் மாண்புறு சேவையால்
புனிதத்தைச் செய்கின்ற பொன்மனச் செம்மல்கள்
பொன்மானைத் தேடுகின்ற பொய்மை விலக்கிவைத்து
என்மானம் தன்மானம் என்றுவாழும் நல்லோர்
பகுத்தறிவைப் பக்குவமாய்ப் பாமரரின் உள்ளம்
புகுத்திடவே பாடுபடும் புத்துலகச் சிற்பிகள்
கொண்டிருக்கும் கொள்கை குறையாமல் நீங்களெல்லாம்
தொண்டுசெய்யும் உள்ளத்துத் தூயோராய் எந்நாளும்
குன்றாத வாழ்நாள் குவலயத்தில் பெற்றுயர்ந்து
இன்றுபோல் என்றும் இரும்.

-வார்ப்பட்டு அ. கருப்பையா





கார்கண்டே களித்தாடும் மயிலைப் போலே
கதிர்கண்டே குதித்தாடும் மலரைப் போலே
சீர்கொண்டே சிறந்தோங்கு கவிதை போலே
சிறுமழலை கண்டுவக்கும் தாயைப் போலே
தார்தள்ளித் தழைத்தோங்கும் வாழை போலே
தலைசாய்ந்துச் சதிராடும் கதிரைப் போலே
பார்மீது சிறந்தோங்கி பதவி பெற்ற
பண்பாட்டுப் பெட்டகமே! கலைஞ ரேறே!

வேலைதேடி அலைகின்ற படித்தோ ருக்கும்
வெறுப்பூட்டும் விலையுயர்வால் தவிப்போ ருக்கும்
ஆலைகளில் வேலைசெயும் தொழிலா ளர்க்கும்
அண்ணாந்து வான்பார்க்கும் உழவ ருக்கும்
சீர்மிகு நன்னெறியில் திண்மை யோடு
சிறப்புறவே வாழ்கின்ற சான்றோ ருக்கும்
கோலமிகு வாழ்வுதந்தே ஆட்சி செய்து
கோமகனே! இன்றுபோல இரும்என் றென்றும்!

-அதலை இராமன்



### தாய்க்குலமே

மூன்றிலொரு பங்கினராய் முன்வந்தீர், தாய்க்குலமே!
ஊன்றிடுவீர் நல்லாட்சி, "உள்ளாட்சி" சான்றாக
நின்றிடுவீர்; தொண்டால் நிலைத்திடுவீர்; மாறாமல்
இன்றுபோல் என்றும் இரும்.

### ஆகுமே

தாயறியாச் 'சூல்' இல்லை; தக்கபணி இன்னதென்று
ஆய்ந்தறிதல் உங்களுக்கு ஆகுமே தேய்வின்றி
ஒன்றொன்றாய்ச் செய்திடுவீர்; ஊர்மக்கள் நெஞ்சத்தில்
இன்றுபோல் என்றும் இரும்.

### அதி'காரம்'

அதிகார போதை அதி'கார' மானால்
பதவி பறிபோகும் பார்ப்பீர்; இதுபாடம்
நன்றறிவீர், பக்குவமாய், நாணயமாய்த் தொண்டாற்றி
இன்றுபோல் என்றும் இரும்.

### மீண்டும்

ஆண்டுகள் ஐந்தும் அயராது பாடுபட்டால்
மீண்டும் வரவேற்போம் வெற்றிதந்து ஈண்டினிமேல்
நின்றுயர்வீர் ஆண்டவர்க்கு நேர்சமமாய்; சேவையிலே
இன்றுபோல் என்றும் இரும்.

-கோம்பைச் சீரான்

கற்பனையின் சிறகெடுத்துப் பறந்துபோனேன்!
கண்ணெதிரே கண்டதெலாம் ரசிக்க லானேன்!
அற்புதத்தின் உச்சகட்டம்! என்ன சொல்வேன்!
அண்ணாவே எதிர்வந்தார்; 'தம்பீ' என்றார்!
நற்றவமோ?! நான்பெற்ற பேறு தானோ?!
நற்றமிழின் சொல்லெடுத்தே பேச லானார்!
நெற்பயிரைக் காண்பித்தார்; பணிவைச் சொன்னார்!
நெடியமரம் தனைக்காட்டி நேர்மை சொன்னார்!

கரும்பொன்றைக் காண்பித்தார்; இனிமை சொன்னார்!
கற்பூரம் தனைக்காட்டித் தியாகம் சொன்னார்!
துரும்பாக இருந்தாலும் மதிக்கச் சொன்னார்!
தொண்டாற்றும் உள்ளத்தைத் துதிக்கச் சொன்னார்!
அருமைமிகு அண்ணாவை வணங்கி நானும்
'அறிவுரையைப் பின்பற்றி நடப்பேன்' என்றேன்!
"திருத்தமுற இன்றுபோல் இரும்; என்றென்றும்
தம்பி!" என நெஞ்சார வாழ்த்திச் சென்றார்!

—சி. பாலகிருஷ்ணன்

முத்தமிழின் வித்தகமே!
முக்கனியின் சொற்சுவையே!
எத்திசையும் வாழுகின்ற
எந்தமிழர் உள்ளமெலாம்
ஒத்திசைவாய் உம்வழியில்
ஒற்றுமையாய்ச் சேர்வதற்கு,
உத்தமரே! ஆண்டுநூறு
இன்றுபோல் என்றும்இரும்!

'பா'த்திறத்தில் தோய்ந்தறிவீர்
பத்திரங்கள் சேர்த்தறியீர்
பாத்திரத்தில் போட்டறிவீர்
பார்க்கவுமே கூசுவோர்க்கும்!
முத்தமிழர் பத்திரமாய்
மேன்மைபெற வேண்டுமெனில்,
உத்தமரே! ஆண்டுநூறு
இன்றுபோல என்றும்இரும்!

-ரதிராமன்

## சுயநிதிக் கல்லூரிகள் விரும்பத்தகாதது அல்ல

"கோவில்பட்டியில் ஒரு கல்லூரி தொடங்கப்படுவதற்கு ஒரு மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே அரசாங்கத்தினிடத்திலே வலியுறுத்திக் கேட்டார்கள். அரசு அதற்கு ஒரு குறிப்பிட்ட நிதி தரவேண்டும். அரசுக்கு அல்ல; தனிப்பட்ட முறையில் அப்படியொரு பிரச்சினை ஏற்பட்டு அந்த நிதி தராமல் அந்தக் கல்லூரி தொடங்காமல் தற்போது முறையாக அனுமதி பெற்ற காரணத்தால் கோவில்பட்டியில் உள்ள மக்களே மகிழத்தக்க வகையில் அந்தக் கல்லூரி துவங்கப்பட்டுள்ளது.

ஆகவே சுயநிதிக் கல்லூரி என்பது அடியோடு விரும்பத்தகாததாக இல்லை. தேவைப்படுவதாக இருக்கிறது. அரசு ஏற்கெனவே தொடர்ந்து பல ஆண்டுகளாக நடத்தி வருபவை 65 கல்லூரிகள். உதவி பெறுகிற கல்லூரிகள் 160. அதே நேரத்தில் சுயநிதிக் கல்லூரிகள் அண்மைக் காலத்தில் தொடங்கி நடத்தப்படுவது 98. அரசாங்கம் நடத்துகிற கல்லூரிகள் 65 தான். மக்களின் ஆதரவால், ஒத்துழைப்பால் வளருகிற கல்லூரிகள் இன்றைக்கு மிகப் பெரிய அளவில் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

எல்லா மக்களுக்கும் தேவை என்கிற நிலையில் கல்லூரி என்பது உயர்ந்து நிற்கிறது. தங்களுடைய பிள்ளைகளைப் படிக்க வைக்க, குறிப்பிட்ட அளவு செலவழிக்கவும் பெற்றோர்கள் தயாராக இருக்கிறார்கள். அப்படியாவது கல்வி பரவ வேண்டும் என்பது குறித்து நாம் மகிழ்ச்சி அடைய வேண்டும்."

- பேராசிரியர் க. அன்பழகன்

(மாண்புமிகு முதலவர் அவர்கள் தொடங்கிவைத்த 'டாக்டர் எம்.ஜி.ஆர் ஜானகி அம்மாள் மகளிர் கல்லூரி' விழாவில் பேசியதிலிருந்து)

வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது, மற்றவர்களை மகிழ வைப்பதில்தான் இருக்கிறது!

-மெஹர் பாபா

உயர்ந்த உள்ளங்களுக்கு இடையிலேதான் தூய்மையான தோழமை மலர முடியும்!

-தாகூர்



சென்ற இதழ் தொடர்ச்சி

வணிக நிறுவனங்களின் பெயர்ப்பலகை

# தமிழுக்கு முதல் மரியாதை

| | |
|---|---|
| 131. Cottage Industries .. | குடிசைத் தொழிலகங்கள், குடிசைத் தொழில்கள் |
| 132. Counter .. | எண்ணகம், செயலறை, கல்லா, செலுத்துமிடம் |
| 133. Courier .. | தூதஞ்சல் |
| 134. Covering .. | புனைவு, அணி, முலாமிட்ட, முலாம் பூசிய |
| 135. Crackers .. | பட்டாசுகள் |
| 136. Crafts .. | கைத்தொழில்கள் |
| 137. Cushion .. | மெத்தியம், மெத்தை |
| 138. Cut Piece Centre .. | விடுதுணியகம், வெட்டுத் துணியகம், துண்டுத் துணிக்கடை |
| 139. Cycle Company .. | மிதிவண்டிக் குழுமம், மிதிவண்டி வாடகைக் கடை |
| 140. Cycle-Mart .. | மிதிவண்டி அங்காடி, மிதிவண்டி விற்பனை நிலையம் |
| 141. Cycle rickshaw-manufacturers .. | மிதியிழுவை உருவாக்கம், நரவண்டி உருவாக்கம், மிதியிழுவை உற்பத்தியாளர் |
| 142. Cylinder Press .. | உருளையச்சகம் |
| 143. Data Processing .. | விவர வகைப்பாடு, தகவல் தொகுப்பகம் |
| 144. Dealers .. | விற்பகர், விற்குநர் |
| 145. Decorators .. | அணி செய்பவர், அழகுபடுத்துநர் |
| 146. Deluxe Centre .. | சொகுசு நிலையம் |
| 147. Dental Clinic .. | பல் மருத்துவமனை |
| 148. Dentist .. | பல் மருத்துவர் |
| 149. Departmental Store .. | பாகுறைப் பண்டகம் - பல்பொருள் அங்காடி |
| 150. Deposit .. | இட்டுவைப்பு, சேமிப்பு, ஏமவைப்பு, வைப்பீடு |
| 151. Depot .. | கிடங்ககம், கிட்டங்கி, கிடங்கு, பணிமனை |
| 152. Designers .. | வடிவமைப்பாளர் |
| 153. Detergent .. | சலவைப் பொருள் |
| 154. Die Castings .. | அச்சுரு வார்ப்புகள் |
| 155. Digital Watch .. | எண் கடிகை |
| 156. Distilleries .. | துணிவடி மனை, வடிசாலை |
| 157. Drinks .. | பருகுணா, குளிர்பானம், பானங்கள் |
| 158. Dress Makers .. | ஆடை ஆக்குநர், ஆடை தயாரிப்பாளர் |
| 159. Dress Paradise .. | ஆடை உலகம் |
| 160. Druggists .. | மருந்தாளர் |
| 161. Drug Stores .. | மருந்துப் பண்டகம், மருந்துக் கடை |
| 162. Dry Cleaners .. | உலர் வெளுப்பாளர், உலர் சலவையகம் |
| 163. Duty Paid Shop .. | தீர்வை செலுத்தப்பட்ட பொருள் விற்பனைக் கடை |
| 164. Dye .. | சாயம் |
| 165. Dye-Stuff .. | சாயப் பொருள் |
| 166. Dye-Works .. | சாயத் தொழில் |
| 167. Dyeing .. | சாயப்பூச்சு, சாயம் தோய்த்தல் |
| 168. Edible Oil .. | உண் எண்ணெய், சமையல் எண்ணெய் |
| 169. Electricals .. | மின்பொருளகம் |
| 170. Electronics .. | மின்துகளகம், மின்னகம், மின்னணுப் பொருளகம் |
| 171. Embroidery .. | பூத்தையல், தையல் வேலைப்பாடு |
| 172. Emporium .. | மளிகையகம், கலையகம், விற்பனைப் பெருநிலையம் |
| 173. Emulsion .. | பால்நிறக் குழம்பு |
| 174. Enclave .. | வளாகம் |
| 175. Engineer .. | பொறிஞர், பொறியாளர் |
| 176. Engineering Industries .. | பொறியியல் தொழில்கம் |
| 177. Enlarger .. | பெரிதாக்கும் கருவி, விரிக்கி |
| 178. Enterprises .. | முனைவகம், வணிக மையம் |
| 179. Essences .. | சாரங்கள், நறுமணச் சாரங்கள் |
| 180. Ever Silver .. | நிலைவெள்ளி, எவர்சில்வர் |
| 181. Exhaust Fan .. | உறிஞ்சு விசிறி, காற்றுப்போக்கி |
| 182. Explosive .. | வெடிமருந்து |
| 183. Export .. | ஏற்றுமதி |
| 184. Fabricators .. | கட்டமைப்பாளர் |
| 185. Factory .. | தொழில் மனை, தொழிலகம், தொழிற்சாலை |
| 186. Fancy Stores .. | புதுமைப்பொருளகம், பல்பொருள் அங்காடி |
| 187. Fan Regulator .. | விசிறி கலிங்கு, விசிறி ஒழுங்குபடுத்தி, விசிறி வேக இயக்கி |
| 188. Fashion .. | புதுப்பாணி |
| 189. Fast Food .. | விரைவுணா (உணவு), உடனடி உணவு, விரைவு உணவகம் |
| 190. Fax .. | தொலை எழுதி, தொலை நகல், தொலை நகலி |
| 191. Federation .. | ஒன்றாயம், கூட்டமைப்பு |
| 192. Feeds .. | தீனி, தீவனம் |
| Cattle Feeds .. | கால்நடைத் தீவனம் |
| Poultry Feeds .. | கோழித் தீவனம் |
| 193. [illegible] .. | நாரிழை [illegible] தயாரிப்புப் பொருள்கள் |

இந்த இசைக் கட்டுரையை இசை ஆராய்ச்சியாகக் கருதாமல், இசைக்கு மொழி எவ்வளவு அவசியமோ அதேபோல் மொழிக்கும் இசை மிகவும் முக்கியம் என்ற கருத்தாக எண்ணிப் படிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.



# இசைத்தமிழ்

"இசைக்கு மொழி இல்லை, ஆனால் மொழிக்கு இசை தேவை. அதனால்தான் தமிழிசை இயக்கம் தோன்றியது"- என்று பல ஆண்டுகளுக்கு முன்பே ஒரு கவிதையில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். அது முற்றிலும் உண்மை.

காரணம் ஒரு வித்துவானோ, வித்து வாசினியோ எவ்வளவு நேரம் இராகம் பாடினாலும், ஒரு கட்டத்தில் அதே இராகத்திலோ, மற்ற இராகத்திலோ எப்படியும் ஏதோ ஒரு பாடலைப் பாடித்தான் ஆகவேண்டும். அந்தப் பாட்டு நமக்குப் புரியும் மொழியில் இருந்தால், அதை நாம் இசையோடு சேர்த்து மொழியையும் ரசிக்கின்றோம். அதுவே நமக்குப் புரியாத மொழியானால் பாடும் முறையைப் பார்த்து அந்தப் பாட்டை மிகவும் ரசிக்கின்றோம்.

தமிழ் இசை எப்படி வந்தது என்று ஆராய்ந்தோமானால் இது நன்றாக விளங்கும். இசை, பாடலாக வந்தது எப்படி என்று ஒவ்வொருவர் ஒவ்வொரு காரணத்தையும் தங்களுடைய ஆராய்ச்சியின் மூலமாகவும் சொல்லுகின்றார்கள். இதில் பல வேறுபாடுகளும் பல வேறுபாடுள்ள கருத்துக்களும் வருகின்றது. நான் என்னுடைய கருத்தை மட்டும் சொல்ல ஆசைப் படுகின்றேன். என்னுடைய கருத்தில் யாரையும் எந்த ஆராய்ச்சியாளர்களையும் குறை சொல்லவில்லை. அந்த நோக்கமும் கிடையாது; இது முற்றிலும் எனது சொந்தக் கருத்தாகும்.

3ஆம் நூற்றாண்டிலிருந்து 6ஆம் நூற்றாண்டு வரையிலும் வாழ்ந்த புலவர்களில் சிலபேரை இங்கே நாம் குறிப்பிடலாம்; அவர்கள் இசைபட வாழ்தலே உயிர் என்னும், தமிழ்நெறி திருவள்ளுவர், சிலப்பதிகார இளங்கோவடிகள், சங்கத்தமிழ்-புறநானூறு, காரைக்கால் அம்மையார் இவர்களின் பாடல்கள் எல்லாம் பழமை யான மிகப் பழம்பெரும் பாடல்களாகும். இவர்களின் பாடல்களுக்கு இசை வடிவம் கொடுத்தது யார் என்று தெரியவில்லை. ஆனால் இவர்களின் பாடல்கள் அரும்பெரும் தத்துவங்களும், அறிவிற்குச் சிறந்த அருமை பெருமை உள்ளவைகளாகவும், மனிதனை வளப்படுத்தவும் உள்ள கருத்துக்கள் கொண்டவைகளாகவும் உள்ளன. இந்தப் பாடல்கள் எல்லாம் மக்களிடையே வரா மலும், பிரபலம் அடையாமலும் போனதற்குக் காரணம் இப்பாடல்களில் வரும் தமிழ்ச் சொற்கள் மிகக் கடுமையான தமிழ்ச் சொற்கள் ஆகும்.

## இசைப்பேரறிஞர் டி.ஆர். பாப்பா



மேலும் இப்பாடல்களுக்கு, அர்த்தம் புரிந்துகொள்ளுவது மிகவும் சிரமம். ஆகையினால், இப்படிப்பட்ட பாடல்களை, நல்ல தமிழில் பாண்டித்தியமுள்ள தமிழ் அறிஞர்களைக் கொண்டு, அதில் உள்ள கருத்துக்கள் கொஞ்சமும் சிதையாமல், இன்னும் எளிய தமிழில் ஆக்கி, பொருள் விளங்கும்படி மக்களிடையே பரவச் செய் தால் மிகவும் வரவேற்புப் பெறும்; மக்களுக் கும் நல்ல தூய்மையான குணங்களும், நல்ல பழக்கவழக்கங்களும் உண்டாகும். இதற்கு இரண்டு உதாரணங்களைச் சொல்ல ஆசைப் படுகின்றேன்.

சங்கத் தமிழில் இருந்து சில பாடல்களை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மிக எளிய தமிழில் எல்லோருக்கும் புரியும்படியாகவும், பாடலில் உள்ள அர்த்தம் சிறிதும் குறையாமலும் இனிமையாக, நல்ல தமிழில் எளிமைப்படுத்தி எழுதியுள்ளார்கள். அந்தப் பாடல்கள் இசையோடு கேசட்டாக வந்து மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், அதுவே இசை நாட்டிய நாடகமாகவும் வந்து மிகப் பிரபலமானது.

அதில் ஒரு பாடலில் தாய் தன் மகனைப் போருக்கு அனுப்புகின்றாள். போருக்குப் போனவர்களில் சிலபேர் திரும்பி வந்து விடுகின்றார்கள், அவர்களிடம் அந்தத் தாய் தன் மகனைப் பற்றி விசாரிக்கின்றாள்; அவர்களோ மௌனம் சாதிக்கின்றார்கள், ஒருவன் மட்டும் துணிந்து அந்தத் தாயிடம் உங்கள் மகன் போரில் மடிந்துவிட்டான் என்று உரைக்கின்றான். அந்தத் தாய் அவனிடம் 'எப்படி மடிந்தான்?' என்று கேட்கின்றாள். அவன் போரில் பலபேரைக் கொன்று, வெற்றி வீரனாக, மார்பில் வேல் தாங்கி மடிந்துவிட்டான் என்று உரைக் கின்றான். அந்தத் தாயோ கண்ணீர் வடிக்கின்றாள். அந்தக் கண்ணீர் துக்கமான கண்ணீர் அல்ல. தன் மகன் வீரமரணம் அடைந்ததை நினைத்து ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றாள்.

அந்தக் காட்சியில் வரும் பாட்டும், இசையும் பார்ப்பவர்கள் அனைவரையும், என்னையும் சேர்த்துக் கண்கலங்க வைத்துவிட்டது. காரணம் அந்தத் தமிழிசைப் பாடலும், இசையும், அந்தத் தாயின் நடிப்பும் மிகவும் அற்புதமாக அமைந்து இருந்தது. அந்தப் பாடலும், பாடலுக்கேற்ற இசையும் ஏற்றதாக அமைந்ததுதான் இதற்குக் காரணம். பாடலும், அதற்குத் தகுந்த இசையும் அமைந்தால் தேனும், பாலும் கலந்ததுபோல் இனிக்கும்; இதுதான் தமிழிசை!

மற்றொன்று, செல்வி. டாக்டர் பத்மா சுப்பிரமணியம் நாட்டியத்தில் ஒரு அருமையான தமிழ்ப் பாடலுக்கு அபிநயம் செய்தார்; அந்தப் பாடல் "சின்னஞ்சிறு

பெண்போலே" என்ற பாடல் ஆகும். அந்தப் பாடலில் வரும் ஒரு வரி "பெண்ணவளின் கண்ணழகைப் பேசி முடியாது" என்ற வரிக்கு டாக்டர் பத்மா சுப்பிரமணியம், நாட்டியம் பார்த்த அனைவரையும் கண்கலங்கும்படி செய்து விட்டார். அதன் காரணமும், மொழியும், இசையும் ஒன்றோடொன்று கலந்து இசைக்குத் தகுந்த மொழியும், மொழிக்குத் தகுந்த இசையும் அமைந்ததால் கேட்பவர் செவிக்கு விருந்தாக அமைந்தது. இதுதான் இசைத்தமிழ்.

இசை என்பது எல்லா நாட்டுக்கும் ஒன்றுதான். ஆனால் அவரவர் மொழிக்குத் தகுந்தாற்போல் இசையை அமைத்துக் கொள்கின்றார்கள்.

நமது தமிழ் மொழியில் எத்தனையோ அருமையான பாடல்கள் உள்ளன. அவைகளைத் தொகுத்து, தமிழிசைச் சங்கம் வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

பழம்பெரும் பாடல்களில் தெய்வீகப் பாடல்களும், பல பொதுப் பாடல்களும், பகுத்தறிவுப் பாடல்களும் உள்ளன. அவைகள் அனைத்தும் மனிதனுக்கு நல்ல பழக்கவழக்கங்களை உண்டாக்குவதையும், அறிவுக்கு விருந்தாகவும், நல்ல தூய்மையான எண்ணங்களும், யாருக்கும் தீங்கு நினைக்காத நினைவுகளும், இப்படிப் பல நன்மைகள் நிறைந்த தமிழிசைப் பாடல்கள் ஆயிரக் கணக்காக உள்ளன. அவைகள் எல்லாம் தமிழிசைச் சங்கத்தில் பண் ஆராய்ச்சி செய்வது போல் இவைகளையும் ஆராய்ச்சி செய்து, நல்ல இசையோடு பாமர மக்களிடம் பரவச் செய்யவேண்டுமென்று தாழ்மையுடன் வணங்கிக் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழிசையை வளர்க்க ஒரு தமிழிசைச் சங்கம் வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே சொல்லியிருக்கின்றார். இதைச் செட்டிநாட்டரசர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களும், அவரது மைந்தர், ராஜா சர் வள்ளல் முத்தையா செட்டியார் அவர்களும் தமிழிசை வளர்வதற்கு என்றே ஒரு தமிழிசைச் சங்கத்தை ஆரம்பித்தார்கள். இந்தச் சங்கம் அண்ணாமலை மன்றத்தில் ஒளிவீசிக் கொண்டிருக்கும் தமிழிசைச் சங்கம்தான்! இப்படிப்பட்ட பல தமிழிசைப் பாடல்களை ஆராய்ந்து தொகுத்து, பாமர மக்களிடையேயும் இசைத் தமிழ்ப் பாடல்கள் பாடும் இளைஞர்களிடையேயும் பரவச் செய்து எல்லோரும் இசைத் தமிழை உணர்ந்து பயனடையும்படி செய்யவேண்டும்.

தற்பொழுது இருக்கும் தமிழ் இசைச் சங்கம் நிச்சயமாக இதை நிறைவேற்றும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!

வாழ்க முத்தமிழ், வளர்க இசைத்தமிழ்!



"உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே!"

"தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்"

"இன்பம் எனப்படுதல் - தமிழ் இன்பம்
எனத்தமிழ் நாட்டினர் எண்ணுக!"

"தாய்மொழிக்குப் பழிவந்தால் சகிப்பதுண்டோ?
உமைஒன்று வேண்டுகின்றேன் மாசில்லாத
உயர்தமிழை உயிர்என்று போற்றுமின்கள்!"

-புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்



மருத்துவக் கட்டுரை:

# வலிப்பு நோய்

டாக்டர் கே. எஸ். ஜெயராணி

**சாலையில் போகும்போதே கையும் காலும் வெட்டியிழுத்துக் கீழே விழுந்து, வாயில் நுரை தள்ளச் சிலர் அவதிப்பட நேரிடும் வலிப்புநோய்- அந்நோய்க்கான நிவாரணம் பற்றியெல்லாம் இங்கே விளக்கப்படுகிறது.**

ஆண்டுதோறும் நவம்பர் மாதத்தில் ஒரு நாள் தேசிய வலிப்பு நோய் விழிப்புணர்வு நாளாகக் கொண்டாடப்படுவது வழக்கம். எந்த ஆண்டும் போல இந்த ஆண்டும் அவ்விழா நடைபெற்றது.

அப்படியொன்றும் குணப்படுத்த முடியாத கொடிய நோயல்ல இது. எனினும், தம்பதியரில் ஒருவருக்கு வலிப்பு நோய் இருக்குமானால், அதையே காரணமாக வைத்து, அந்தத் திருமணத்தையே செல்லாது என்று சொல்லிவிடும் அளவிற்கு இந்துத் திருமணச் சட்ட விதிமுறைகள் உள்ளன.

அச்சட்டத்தின் பிதாமகர்கள், இந்நோயை இலேசில் குணப்படுத்த முடியாத மனநோய்க்கு நிகராகவே கருதியதுதான் இதற்குக் காரணம். ஒருவேளை அச்சட்டம் உருவான காலம் அப்படியிருந்திருக்குமோ என்னமோ தெரியாது. ஆனால், மருத்துவ உலகம் பெரிதும் வளர்ச்சி பெற்றுள்ள இந்நாளில் மற்ற நோய்களைப் போல் கட்டுப்படுத்தக் கூடியதே வலிப்பு நோய் என்பது கண்டுணரப்பட்டுள்ளது.

எனவே, திருத்தப்பட வேண்டிய சட்டங்களின் விதிகளில் இதுவும் ஒன்றாகும் இந்திய வலிப்பு நோய்ச் சங்கம் நீண்ட காலமாகவே இக் கோரிக்கையை வலியுறுத்தி வருகிறது.

## நோயும் காரணங்களும்

வேறு எப்படித்தான் இந் நோயைக் குணப்படுத்துவது என்று ஆராயும் முன்பாக, வலிப்பு நோயின் தன்மை- அது வருவதற்கான காரணங்கள் ஆகியவை பற்றிக் கவனிக்கலாம்.

## வலிப்பு நோய்

மனித மூளையை ஒரு கம்ப்யூட்டருடன் ஒப்பிடலாம். உடலின் சீரான இயக்கத்திற்கு மூளையிலிருந்து தெளிவான ஆணைகள் வந்துகொண்டிருக்கும். எதிர்பாராமல் திடீரென ஏற்படும் மூளையின் அதிகப்படியான மின் அதிர்வுகள் தான் (Excessive Electrical Discharge) வலிப்பு நோயை உண்டுபண்ணுகிறது.

சாதாரணமாக வலிப்பு நோயால் எத்தனைப் பேர் அவதிப்படுகிறார்கள் என்று கேட்பீர்களானால், இந் நோயால் நம்மில் ஒன்று அல்லது இரண்டு சதவிகிதம் பேர் மொத்தத்தில் பாதிக்கப்படுகிறோம்.

ஒவ்வொருவரின் வயதிற்கும். ஏற்ப, வலிப்பு நோய்க்கான காரணங்கள் மாறுபடுகின்றன என்பதை இங்கே விளக்கலாம்:

## பிறந்த குழந்தைக்கு

பிறக்கும் போது மூச்சுத் திணறல் ஏற்படும்- பிராணவாயு (Oxygen) குறைவு.

பிரசவத்தின் போது குழந்தையின் தலையில் ஏற்படும் காயங்கள்.

போதுமான மூளை வளர்ச்சியின்மை

-ஆகியவற்றால் வலிப்பு நோய் வரும்.

## 2 முதல் 12 வயதுள்ள குழந்தைகளுக்கு

☆ காய்ச்சல்

☆ நோய்க் கிருமிகள்

☆ தலையில் அடிபடுவதால்

-அல்லது ஒரு காரணமும் இல்லாமலும் இந்த நோய் வரும்.

## இளைஞர்களுக்கு

☆ தலையில் அடிபடுவது

☆ மது அல்லது போதை மருந்து உபயோகப்படுத்துவது

☆ அவ்வாறு இருந்து விட்டு அதைத் திடீரென நிறுத்துவது.

☆ மூளையில் ஏற்படும் கட்டிகள்

-ஆகியவற்றால் வலிப்பு நோய் வரும்.

## வயதானவர்களுக்கு

☆ மூளையில் இரத்த ஓட்டம் குறைவது

☆ இரத்தக் கசிவு

☆ சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்குச் சர்க்கரை

உடலில் மிகவும், அதிகமாவது
அல்லது மிகவும் குறைவது

-போன்ற காரணங்களால் இது வரும்.

பொதுவாக **Idiopathic** எனப்படும்- எவ்விதக் காரணமுமின்றி வரும் வலிப்பு நோயே மிகவும் பரவலாக அதிகம் காணப்படுகிறது.

**காய்ச்சலால் வரும் வலிப்பு நோய்**

ஒருவரின் தாய் தந்தையருக்குக் காய்ச்சலால் வலிப்பு வந்திருந்தால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் இந்நோய் வர அதிகம் வாய்ப்புள்ளது.

குழந்தைகளுக்குக் காய்ச்சல் ஆரம்பமான உடனேயே உடல் வெப்பம் அதிகமாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு உடல் வெப்பத்தைக் குறைக்கும் **Paracetamol** மருந்தை வீட்டிலேயே முன்னெச்சரிக்கையாக வைத்திருந்து உடனே கொடுக்க வேண்டும். அதன் மூலம் இந்நோயைத் தடுக்கலாம்.

திரும்பத் திரும்பக் காய்ச்சலால் வலிப்பு வந்து பாதிக்கப்படும் குழந்தைகளும் உண்டு; அவர்களுக்கு ஜுரம் வந்தவுடன் **Paracetamol** மருந்துடன் **Phenoborbital** மாத்திரையும் வலிப்பு வராதிருக்கக் கொடுக்கலாம்.

ஆனால், சில குழந்தைகளுக்கு வலிப்பும், ஜுரமும் சேர்ந்து வருவது மூளைக் காய்ச்சலாலும் கூட ஏற்படலாம். இவ்வகை நோயாளிகள், பொறுத்துப் பார்க்கலாம் என்றில்லாமல், விரைந்து மருத்துவரின் ஆலோசனையை நாடுவது சிறந்தது.

**வலிப்பு நோயின் வகைகள்**

உடல் முழுவதும் வெட்டி வெட்டியிழுக்கக்கூடிய வகை (Toric Clonic) என்பது ஒன்று.

இந்த நோய் கண்டால், ஒரு நிமிடம் நோயாளியின் தசை நார்கள் எல்லாம் இழுத்துப் பிடிக்கும்; நோயாளி நிலை தடுமாறி வேரற்ற மரம் போல் சாய்வார். பின்பு கை, கால்கள், கழுத்து ஆகியவை வெட்டி வெட்டி இழுக்கும்.

வாயில் நுரை தள்ளும்.

நோயாளி தன்னையறியாமலே சிறுநீர் கழித்திருப்பார்.

நாக்கைப் பற்களால் கடித்திருப்பார்.

வெட்டியிழுப்பது நின்றவுடன், பாதிக்கப்பட்டவர் ஆழ்ந்த மயக்கத்தில் இருந்து விடுவார்.

**ஒரு பகுதியில் மட்டும் வரக் கூடிய வலிப்பு**

இதில் ஒருவகை **Jacksonian March** எனப்படும்; இவ்வகை வலிப்பு நோயை **Hughlings Jackson** என்பவர். விவரித்ததனால் இப்பெயர் வந்தது. பெருவிரலில் ஆரம்பித்து கால், பின்பு கட்டை விரல், கை, பின்பு ஒரு பக்கம் முகம் மட்டும் எனப் பரவக் கூடியது இந்த வகை நோய்.

**மற்றொரு வகையும் (Abscence) இதில் உண்டு.**

இதில் கைகால் இழுப்பு இருக்காது.

நோயாளி கீழே விழமாட்டார்.

இது சில நொடிப்பொழுதே ஒருவருக்கு இருக்கும். ஆகையால், இதைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினம்.

சிறு வயதுள்ள குழந்தைகளுக்கு இவ்வகை வலிப்பு நோயானது சாதாரணமாக வருகிறது.

இந்நோய் வருபவர், சில நொடிப்பொழுது அப்படியே வெறித்துப் பார்ப்பார்; பின்பு மீண்டும் பழைய நிலையினை அடைந்துவிடுவார்.

ஒரே நாளில் இதேபோல் பலமுறை வரக்கூடும்.

இந்நோயில் பாதிக்கப்பட்ட சமயத்தில் நடந்த நிகழ்ச்சிகள் எதுவும் அவரின் நினைவில் இருக்காது.

அந்தக் குறிப்பிட்ட சிறுவன் அல்லது சிறுமியின் வகுப்பு ஆசிரியர்கள் இதனை எளிதில் கண்டுபிடித்துவிடுவார்கள்.

இந்நோயை மருந்தின் மூலம் எளிதில் குணப்படுத்தலாம்.

இந்நோய் வந்தவர்களில் மூன்றில் ஒரு பங்குப்பேர் முற்றிலும் குணம் அடைந்துவிடுவார்கள்.

1/3ல் பங்கு தொடர்ந்து இவ்வியாதி இருக்கும்.

1/3ல் பங்கு பிற்காலத்தில்- **Tonic Clonic Type** வலிப்பும் இதனால் வரலாம்.

**தொடர் வலிப்பு நோய்**

சாதாரணமாக வலிப்பு நோய் சில நிமிடங்களே ஒருவருக்கு இருக்கும்; பின்பு அந்த நோயாளி





மயக்கமடைந்துவிடுவதோடு, எவ்விதச் சலனமுமில்லாமல் இருப்பார்.

ஆனால், தொடர் வலிப்பு நோய் கண்ட நோயாளி அவ்வாறு இருக்க மாட்டார்; பாதிக்கப் பட்டவருக்கு, தொடர்ச்சியாக நினைவு திரும்பாமலேயே, வலிப்பு மீண்டும், மீண்டும் வந்து கொண்டிருக்கும்.

இது பல நேரங்களில் உயிருக்கே கூட ஆபத்தாக முடியலாம். ஆகவே, இந்நோய் கண்டவரை, அலட்சியமாக இராமல் உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுதல் வேண்டும்.

**நோயாளியைக் கவனித்தல்**

வலிப்பு நோய்க்கு ஆளான ஒரு நோயாளியை 'நெருப்பு' போன்ற அபாயகரமான பொருட் களின் அருகிலிருந்து உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.

நோயாளி சுவரில் மோதிக் காயப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கத்தி போன்ற கூர்மையான ஆயுதங்கள் அருகில் இருந்தால் அவற்றை அப்புறப்படுத்தவும் வேண்டும்.

**வலிப்பு நோய் கண்டவரைக் குப்புறவோ, மல்லாந்தோ படுக்க வைக்கக் கூடாது**

நோயாளியின் வாயில் அந்நேரத்தில் வலிந்து எதையும் திணிக்கக் கூடாது; கை, கால்கள் வெட்டியிழுப்பதைத் தடுக்கவும் முடியாது; அது சிறிது நேரத்தில் தானாகவே நின்றுவிடும்.

நோயாளி மயக்கமடைந்தவுடன், சோடாவை வாங்கிச் சிலபேர் அவர் வாயில் பலவந்தப் படுத்தி ஊற்றுவார்கள்; அப்படி ஊற்றக் கூடாது.

நோயாளியின் கைகளில் வெட்டியிழுக்கும் போது சிலர் இரும்பைக் கொடுக்கிறார்கள். இதனால் எந்தப் பலனும் இல்லை; இதனால் எவ்வித நன்மையும் இல்லை!

ஆனால், தீமை உண்டு. அப்படிக் கொடுக்கப்படும் இரும்பினால் நோயாளி தன்னைக் காயம்படுத்திக் கொள்ளக்கூடும். ஆகவே, இரும்புத் துண்டு தருவது நோயாளிக்கு நன்மை செய்வது ஆகாது.

வலிப்பு நோய் உள்ளவர்கள் திருமணம் செய்து கொள்ளலாமா என்றெல்லாம் சிலரால் சந்தேகத்தோடு கேட்கப்படுகிறது.

நிச்சயமாகச் செய்து கொள்ளலாம்; குழந்தைகளும் பெற்றுக் கொள்ளலாம். தாம்பத்ய வாழ்வுக்கு இந்த நோய் ஒரு தடையே இல்லை.

அவ்வாறு மணம் செய்து கொண்டோருக்குப் பிறக்கும் குழந்தைக்கு, இவ்வியாதி வருவதற்கான வாய்ப்புகள் 10 சதவிகிதத்திற்குக் குறைவேயாகும்.

**எவ்வாறு குணப்படுத்துவது?**

**'நோய்நாடி நோய் முதல்நாடி**
**அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்.'**

-என்ற வள்ளுவன் கூற்றுப் போல...

வலிப்பு நோய்க்கான காரணத்தை முதலில் ஆராய்ந்து தெரிந்து கொண்டு அதை அகற்ற வேண்டும்.

உதாரணமாக- சர்க்கரை நோயுள்ளவர்களுக்கு, சர்க்கரை திடீரென உடலில் குறைவதனால் வலிப்பு நோய் வரலாம். ஆகவே, அப்படிப்பட்டவர்கள் உடலில் சர்க்கரையைச் சரியான அளவில் வைத்திருப்பதன் மூலம் இதைத் தடுக்கலாம்.

மூளையில் உண்டான கட்டியினால் வலிப்பு நோய் வருவதுண்டு; அப்படி வந்தால் இந்தக் கட்டியை அறுவைச் சிகிச்சை மூலம் எடுக்கவேண்டும்; வலிப்பு நோய் வராது.

**மருந்தின் மூலம் கட்டுப்படுத்துவது**

மருந்தின் மூலம் வலிப்பு நோயை மிகச் சுலபமாகக் கட்டுப்படுத்திவிட முடியும். அதற்கு, சக்தி வாய்ந்த மருந்துகள் பல உள்ளன. அவற்றின் மூலம் எளிதில் கட்டுப்படுத்திவிடலாம்.

Phenytion: Dilantin Sodium *300-400* எம்.ஜி.முதல், Trimethadion வரை, வலிப்பு நோய்க்கு என்றே நோய் கண்டவுடன் தரவும், வந்தபின் தொடர்ந்து சிலகாலம் சாப்பிடவும் என்று பல மருந்துகள் வந்திருக்கின்றன.

ஆகவே, வலிப்பு நோய்க்கு ஆளானவர், தாமே அவற்றை வாங்கிச் சாப்பிடாமல் தகுந்த மருத்துவரிடம் காட்டி, வந்துள்ள நோய்க்கு ஏற்ற மருந்தை வாங்கிச் சாப்பிட்டு எளிதில் நலம் பெறலாம்.

அவ்வாறில்லாமல், தொடர்ந்து ஏதாவது தாமாக தவறான மருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும் சிலருக்கு வலிப்பு நோய் வரும்.

ஆகையால், வலிப்பு நோயின் தன்மையை அறிந்து, சரியான மருந்து சரியான அளவில் கொடுக்கப்பட்டால் யாருக்கும் இவ்வாறு நேராது.

***அல்லது, அவர் தொடர்ச்சி யாக மருந்து உட்கொள்ளத் தவறியிருந்தாலும், குணம் பெறுவது தாமதமாகக் கூடும்.***

## திருவள்ளுவன்

*புத்தகம் நூறு புரட்டிக் களைப்புற்றுச் சித்தம்*
*கலங்கித் திகைப்பதேன்? - வித்தகன்தெய்வப்*
*புலவன் திருவள் ளுவன்சொன்ன*
*பொய்யில் மொழியிருக்கும் போது !*

**- கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை**

**நோயாளிகள் தவிர்க்க வேண்டியவை**

வலிப்பு நோய்க்கு ஆளான வர்கள், கீழ்க்கண்டவைகளைக் கட்டாயம் தவிர்ப்பது நல்லது.

☆ உயரத்தில் ஏறுவது.

☆ கடலிலோ, ஆற்றிலோ, குளத்திலோ தனியாக நீந்துவது.

☆ தீயின் அருகில் வேலை செய்வது.

☆ வண்டி வாகனம் ஓட்டுவது.

வலிப்பு நோய்க்கு ஆளான வர்கள் வாழ்நாள் முழுவதும் மருந்து சாப்பிட வேண்டுமா எனச் சிலர் கேட்கலாம்; அப்படி யொன்றுமில்லை. நோய்க்கு ஏற்ற படி அதன் காலம் கூடவும், குறையவும் நேரிடும்.

வலிப்பு நோயைத் தூண்டக் கூடிய காரணங்கள் பல இருக் கின்றன; அவற்றில் முக்கிய மானவை சில, பின்வருமாறு:

☆ தூக்கமின்மை

☆ பரிந்துரைக்கப்பட்ட மருந்து உட்கொள்ளாமல் தவறி விடுவது.

☆ அடிக்கடி மது, அல்லது போதை மருந்து உட்கொள்ளுவது

☆ சரியான உணவு இன்றிப் பட்டினி கிடப்பது.

**பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு:**

வலிப்பு நோய் கண்ட சிறுவர் சிறுமியர், பள்ளி செல்லும் பாலகர் களாக இருந்தால் அவர்களைப் பொறுத்து நாம் சில முறைகளைக் கடைப்பிடிக்கலாம்.

☆ அவ்வாறான குழந்தைகளை மற்றவர்களுடன் தாராள மாகப் பழக அனுமதிக்க வேண்டும். அவர்கள் கூச்சப்பட்டாலும், சேர்ந்து பழகுவ தற்குத் தூண்டவேண்டும்.

## தேன்மொழி

வைய கத்தில் இணையி லாத
வாழ்வு கண்ட தமிழ்மொழி
வான கத்தை நானி லத்தில்
வரவ ழைக்கும் தமிழ்மொழி

* * *

தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை வழியாகும்
அன்பே அவனுடை மொழியாகும்!

* * *

அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியே!

* * *

தமிழன் என்பதை மறக்காதே
தாய்மொழிப் பெருமையைத்
துறக்காதே
"அமிழ்தம் தமிழ்மொழி" ஐயமில்லை
அகிலம் நுகர்ந்திடச் செய்திடுவோம்!

—நாமக்கல் கவிஞர்
வெ. இராமலிங்கம்பிள்ளை

☆ எவ்விதமான மிகுந்த கட்டுப் பாடுகள் சொல்லியும் அக் குழந்தையைத் தனிமைப் படுத்தி விடக்கூடாது.

☆ மற்ற குழந்தைகள் போலவே வலிப்பு நோயுள்ள குழந்தை யும் மிகவும் நன்றாகப் படிக்க முடியும்.

☆ அவர்களிடம் தாழ்வு மனப் பான்மை ஏற்படா வண்ணம் காக்கவேண்டும்; அக் குழந்தை களாலும் திறமையும் தேர்ச்சி யும் பெறமுடியும்.

☆ வகுப்பில் உள்ள ஆசிரி யரிடம், குழந்தையின் நோய் குறித்து முன்கூட்டியே தெரியப்படுத்தி, இந்நோய் வந்தால் எவ்வாறு முதலுதவி சிகிச்சை போல் குழந்தைக்கு உதவ வேண்டும் எனக் கூற வேண்டும்.

☆ சிலர் கூறுவதுபோல், இந் நோய் 'முன்னால் செய்த தவறுகளின் பலன்தான்' என்ற தவறான எண்ணத்தை ஏற்படுத்தி விடாமல் இதுவும் மற்றவைகள் போல் ஒரு நோய்; அவ்வளவு தான். இதை எளிமையாகக் குணப்படுத்த முடியும்; மற்றவர் களைப் போல் நல்லபடி வாழ முடியும் என்ற எண்ணத்தை அவர்களிடம் நாம் ஏற்படுத்த வேண்டும்.



# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை:**

மேல்மலையனூர் கிராமத்தில் உள்ள ஜனத்தொகைக்கேற்ப போதுமான குடிநீர், சப்ளை செய்ய இயலாத மேல்நிலைக் குடிநீர் தேக்கத் தொட்டியால், கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கும் சேர்த்து எப்படி குடிநீர் வழங்க இயலும்? அதோடு மேல்நிலைத் தொட்டியையும் சரிவரப் பாதுகாப்பதில்லை. அதன் விளைவாகப் பொதுமக்களுக்கு, குறிப்பாகக் குழந்தை களுக்கு வயிற்றுப் போக்கும், காய்ச்சலும், மஞ்சள் காமாலை நோயும் நிறைய ஏற்படு கிறது. எனவே மேற்படி தொட்டியைச் சுத்தம் செய்து, தக்க பாதுகாப்பு பவுடர் களால், அதாவது பிளீச்சிங் பவுடரினால் கழுவி சுத்தம் செய்தால் மிக நன்றாக இருக்கும்.

இது குறித்து, மேல்மலையனூர் வட்டார வளர்ச்சி அலுவலரைப் பலமுறை அணுகி நேரிடையாய் அழைத்துக் காட்டியும், அவர்களும் ஏதும் முயற்சித்ததாய் தெரிய வில்லை. எனவே மேற்குறிப்பிட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினையை உடனடியாய் நிவர்த்தி செய்து தருமாறு கோருகிறோம்.

அமாவாசை தினங்களில் குறைந்தது ஒரு இலட்சம் மக்கள் மொத்தம் மூன்று நாட்கள் இங்கு வந்து தங்குகின்றார்கள். ஆனால், அவர்கள் தங்குவதற்கேதுவாய் எந்தவொரு வசதியும் அரசோ அல்லது கோயில் நிர்வாகமோ அல்லது சுகாதாரத் துறையோ ஏதும் செய்து முன்வரவில்லை. அடிப்படை முக்கிய வசதியாகப் பொது மக்கள் கழிப்பிடம் கூட செய்து தரப்பட வில்லை என்பதுதான் பெருங்கொடுமை. இதனால் கோயிலைச் சுற்றியுள்ள பொங்கல் வைக்கும் இடங்களிலும், பொது மக்கள் கால் வைத்து நடமாடும் மற்ற பிற இடங்களிலும், ஊரின் அனைத்துத் தெருக் களிலும் இந்த அறிவற்ற அசிங்கச் செயலால் ஊரே நான்கைந்து நாட்களுக்குப் பெரும் நாற்றமெடுத்துவிடுகிறது. இதனால் பொதுமக்களுக்குப் பலவித நோய்களும் ஏற்பட வாய்ப்புள்ளது.

கோவிலுக்கு வந்து குவியும் பொது மக்களால் பெருந்தொகை வருமானம் கோயிலுக்குக் கிடைக்கிறது. அப்படி வரும் வருமானத்தில் சில விழுக்காடு இப் பணிக்குச் செலவிட்டாலே போதுமானது. அதாவது துப்புரவுத் தொழிலாளர்களை மேலும் அதிகப்படுத்துவது. கோயில் தவிர ஊரின் அனைத்துத் தெருக்களையும் சீர் செய்ய வேண்டுகிறோம். இக்கோயில் அரசு பதிவு பெற்றிருந்தாலும், தனியார் பராமரிப்பில் இருப்பதினால் இப்படி சில சீர்கேடுகளால் அழிவுறுகிறது. காலம், காலமாகக் கட்டிப் பாதுகாத்து வந்த பழந்தமிழர் பண்பாடும் சிதைந்து போனது. கோயிலுக்கு E.O. அவர்களிலிருந்து, அவர் களுக்கு மேலதிகாரிகள் A.C. மற்றும் D.C. போன்ற கோயில் பராமரிப்பு உயர் அதிகாரிகளும் இக்கோயிலுக்கு அடிக்கடி வருகை தந்தும் வழியேதும் வாய்க்கவில்லை.

மேற்படி கோயிலுக்கு வரும் பக்தர் களுக்கும் பொதுமக்களுக்கும் இனியும் தொல்லை தராவண்ணம் ஏற்ற அலுவலர் களைக் கண்டித்து உடனடியாகப் பொதுக் கழிப்பிடம், மற்ற பிற வசதிகளையும் போதிய அளவிற்கு அமைத்துத் தருமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

-மேல்மலையனூர் இளைஞர் மன்றங்கள்
விழுப்புரம் மாவட்டம்.

**தீர்வு:**

மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோயில் ஒரு முக்கியப் பிரார்த்தனை ஸ்தலம் மற்றும் வளர்ந்து வரும் திருக்கோயில் ஆகும். தற்போது இக்கோவிலுக்கு ஒவ்வொரு அமாவாசையின்போதும் பல்வேறு ஊர்களிலிருந்து பக்தர்கள் வருகை தருகின்றனர். விசேஷ தினங்களில் போதுமான அளவு பினாயில் மற்றும் பிளீச்சிங் பவுடர் தெளித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சுற்றுப் புறத்தைத் தினசரி சுத்தம் செய்யப் பணியாளர்கள் நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெண்கள் குளிப்பதற்காகத் தனியாகக் குளியலறை கட்டப்பட்டு, பணி முடியும் தருவாயில் உள்ளது. கழிவு அறை வசதிகள் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுகாதாரம் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

-கே.ஆர். மாரிமுத்து
ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம், மேல்மலையனூர்.

**பிரச்சினை:**

**மன்னர் திருமலை மாவட்டத்தில் பழனி தாலுக்காவில், கீரனூர் கிராமம் அமைந்துள்ளது. இங்கு சுமார் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அமைந்துள்ளன. இங்கு கழிப்பிடம் வேண்டி எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ. ஆகியோரிடம் மனுச் செய்தும் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. கழிப்பிட வசதி இல்லாமல் ஆண், பெண் இருபாலரும் மிகமிக அவதிப்படுகின்றனர். அடிப்படை வசதி செய்து தருவோம் என்று கூறிய தமிழக அரசு எங்கள் ஊர் கழிப்பிட வசதி வேண்டி நடவடிக்கை எடுக்குமா?**

-எம். நாகராஜன்
கீரனூர்.

**தீர்வு:**

கீரனூர் பேரூராட்சியில் கீழ்க்கண்ட 3 இடங்களில் பெண்களுக்கான கழிப்பிடம் கட்ட திண்டுக்கல் பேரூராட்சியின் உதவி இயக்குநர் அவர்களின் ந.க.எண்.5148/96 டி.பி.1, நாள் 25.10.96 கடிதத்தில் கேட்கப்பட்டு இதற்கான மேற்படி தேதியில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

1. கிழக்குத் தெரு சர்வே எண்.1131/16 கீரனூர்

2. ஆதிதிராவிடர் நடுத் தெரு 1121/9 கீரனூர்

3. இராஜ வாய்க்கால்அருகில் 131/231 ஏ2 கீரனூர்

இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு பெற்றபின் இவ்வேலைகள் மூன்றும் செய்து முடிக்கப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

-சி. சாரங்கபாணி
நிர்வாக அலுவலர்,
கீரனூர் பேரூராட்சி
மன்னர் திருமலை மாவட்டம்.

**பிரச்சினை:**

**எங்கள் ஊர் ஒட்டப்பிடாரம் தாலுகா, கொத்தாளி. ஒரு சிறிய கிராமம். இது கயத்தாறுக்கு அருகில் 6 மைல் தொலைவில் அதாவது 10 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு சரியான ரோடு வசதி கிடையாது. இங்கு பஸ் போக்குவரத்து இல்லாமையால் மக்கள் மிகவும் அவதியுறுகின்றனர். அதனால் தயவு செய்து கயத்தாறிலிருந்து எங்கள் ஊருக்குச் சாலைப் போக்குவரத்து வசதி செய்து தருமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.**

-எம். ராமலக்ஷ்மி
கொத்தாளி

**தீர்வு:**

கொத்தாளி கிராமத்திற்கு 4 சுற்றுக்கள் தடம் எண்.158ஏ திருநெல்வேலி – கோவில்பட்டி மூலம் இயக்கப்பட்டு வருகிறது. கொத்தாளி – கயத்தாறு சாலை பேருந்து இயக்கத் தக்க அளவு செப்பனிடப் பட்டு தகவல் தந்த பின்பு பேருந்து இயக்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

-கோட்ட மேலாளர்
கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்
தூத்துக்குடி.



**பிரச்சினை:**

**மேல்நாரியப்பனூர் கிராமம், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் இருக்கும் ஒரு அழகிய கிராமம். இக்கிராமத்தில் சுமார் 5,000 மக்கள் வசிக்கின்றனர். இதில் 80 சதவிகிதத்திற்கும் அதிகமானவர்கள் படித்தவர்கள் ஆவர். இவ்வளவு பெரிய கிராமத்திற்கு ஒரு பொது நூலகம் இல்லாதது கண்களை இழந்த மிகப் பெரிய பலசாலியின் நிலை என்னவோ? அது போன்றுதான் எங்கள் நிலையும். படித்து வேலையில்லாத இளைஞர்கள் தங்கள் நேரங்களைப் பயனுள்ள வழியில் பயன்படுத்திக் கொள்ளப் பொது நூலகம் மிகவும் இன்றியமையாததாகும். எனவே, எங்கள் கிராமத்திற்குக் கிளை நூலகம் ஒன்று அமைத்துக் கொடுத்து உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.**

-இரா. அருள்பாரதி
மேல்நாரியப்பனூர்.

**தீர்வு:**

5000க்கும் மேற்பட்ட மக்கட்தொகை கொண்ட கிராமங்களில் ஊர்ப்புற நூலகம் திறக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால் இவ்வரசாணையில் மேற்குறிப்பிட்ட மேல்நாரியப்பனூர் கிராமம் இடம் பெறவில்லை.

எனினும் அவ்வூர்ப் பொதுமக்கள் கீழ்க் காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து தரும் பட்சத்தில், பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும்.

1. நூலகம் உடனடியாகத் திறக்க வாடகையற்ற இலவசக் கட்டடம்.

2. பிற்காலத்தில் இந்நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டக் குறைந்தபட்சம் 5 சென்ட் காலிமனை.

3. குறைந்தபட்சம் 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. குறைந்தபட்சம் ரூ.2000 மதிப்புள்ள தளவாடங்கள் தரப்பட வேண்டும்.

5. குறைந்தபட்சம் ரூ.1000 செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

மேற்கூறிய நிபந்தனைகளை மேல்நாரியப்பனூர் ஊர்ப் பொதுமக்கள் நிறைவேற்றித் தரும் பட்சத்தில், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்ட நூலக அலுவலருடன் தொடர்பு கொண்டால், பகுதி நேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

-இரா. கண்ணன்,
பொது நூலக இயக்குநர்
சென்னை - 2

**பிரச்சினை:**

**எங்கள் கிராமம் சாத்தம்பாக்கம், வடார்க்காடு அம்பேத்கர் மாவட்டம் வாலாஜா வட்டத்தைச் சார்ந்தது. இங்கு சுமார் 3000க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இங்கு போதிய போக்குவரத்து வசதி இல்லை. இதனால் பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள், தொழிலாளர்கள், நோயால் அவதிப்படுபவர், முதியோர் போன்றோர் பெருந்தொல்லைக்கு ஆளாகின்றனர். எனவே, குடிமல்லூர் ஊரில் செல்லாமல் '7ஏஏ' நேராக வாலாஜா சாத்தம்பாக்கம் செல்ல ஆணைபிறப்பிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம். குடிமல்லூர் ஊருக்கும் தனியாகப் பேருந்து வசதி செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

-கிராமப் பொதுமக்கள்
சாத்தம்பாக்கம்.

**தீர்வு:**

சாத்தம்பாக்கம் கிராமத்திற்குத் தற்பொழுது நகரத் தடம் எண்.7ஏஏ/ஏ'

ஆர்க்காடு - வேலூர் - 10 நடைகள்

ஆர்க்காடு - சாத்தம்பாக்கம் - 6 நடைகள்

ஆர்க்காடு - திமிரி - 4 நடைகள்

என மும்முனைத் திட்டத்தில் இயக்கப்பட்டு வருகின்றது. மேலும், சாத்தம்பாக்கம் கிராமத்திற்கு இது தவிர தனியார் பேருந்து ஒன்றும் இயக்கப்பட்டு வருகின்றது.

மேலும் இத்தடத்தில் குடிமல்லூர் கிராமம் பிரதான சாலையிலிருந்து 2 கி.மீ. தூரத்தில்

உள்ளே உள்ளது. எனவே, அவ்வழியாக இயக்கப்படும் '7 ஏஏ' இத்தடத்தினை உள்ளே சென்று வரும்படி (ரீட்ரேஸ்) இயக்கப்பட்டு வருகிறது.

எனவே, நகரத் தடம் '7ஏஏ/ஏ' யில் கொடுக்கப்பட்டுள்ள குடிமல்லூர் கிராமத்தினை ரத்து செய்தால் குடிமல்லூர் கிராம மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**-மேலாண் இயக்குநர்**
**பட்டுக்கோட்டை அழகிரி**
**போக்குவரத்துக் கழகம், வேலூர்.**



## கேரளம் தமிழ்நாடு வனவளம்

கேரள மாநில வனத்துறை, போக்குவரத்து மற்றும் கோவில்கள் அமைப்பின் மாண்புமிகு அமைச்சர் திரு. பி.ஆர்.குருப், கேரள முதன்மை வனத்துறைத் தலைவர் திரு. பி.எம். சுரேந்திரன், இ.வ.ப. மற்றும் அதிகாரிகள் மாண்புமிகு தமிழக வனத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. பொங்கலூர் என். பழனிச்சாமி அவர்களையும், முதன்மை வனத்துறைத் தலைவர் திரு. வி.ஆர். சித்ரபு, இ.வ.ப., அவர்களையும் சென்னையில் 5.12.96 அன்று சந்தித்தனர். தொடர்ந்து இரு மாநில அமைச்சர்கள் மற்றும் இரு மாநில வன அலுவலர்களும் கொண்ட கூட்டம் நடைபெற்றது.

எல்லைப் பகுதிகளை ஒட்டிய வனப் பகுதியில் காணப்படும் வனப் பராமரிப்பு மற்றும் வனத்துறையில் வனங்களைப் பாதுகாக்கின்ற நேரத்தில் ஏற்படக் கூடிய பல்வேறு பிரச்சினைகள் போன்றவை இக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. இந்தக் கூட்டத்தில் தமிழகக் கேரள எல்லையை ஒட்டியுள்ள பகுதியில் அதிக அளவு சந்தன மரக் கடத்தல் குறித்து சுட்டிக்காட்டப்பட்டது. இந்த சந்தன மரக் கடத்தலைத் தடுப்பதற்கு இரு மாநிலங்களின் ஒருங்கிணைந்த முயற்சி தேவை. மேலும் ஒரே மாதிரியான ஒருங்கிணைந்த வனச்சட்டம் தேவைப்படுகிறது என்பது தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தின் முடிவில் இரு மாநில அமைச்சர்களும் ஒருங்கிணைந்து முயற்சி எடுத்து வனச் செல்வ அழிவை- குறிப்பாக வன உயிரின வேட்டை, வனப்பொருட்கள் கொள்ளை அடித்தல் போன்றவற்றைத் தடுப்பதற்கு ஏதுவாகவும், அதே சமயத்தில் வனத்தின் செழுமையைப் பாதுகாக்கவும் இயலும் என்பதைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்றும் முடிவெடுக்கப் பட்டது.





# பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

**கல்லூரி, பல்கலைக் கழகங்களில், பணிபுரிய விரிவுரையாளர்கள் தேவை.**

தமிழ்நாட்டில் கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களில் விரிவுரையாளர்களாகப் (Lecturers) பணிபுரிய விரும்புவோர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்வு (State Level Educational Testing (SLET)) நடத்த பல்கலைக்கழக மானியக் குழுவும், தமிழ்நாடு அரசும், திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தை நியமித்துள்ளன.

இந்தத் தேர்வுகள் 9.3.1997 அன்று, சென்னை, சிதம்பரம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய தேர்வு மையங்களில் நடைபெறும்.

**விண்ணப்பதாரருக்குரிய கல்வித் தகுதிகள்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து முதுநிலை பட்டத் தேர்வு அல்லது அதற்கு சமமான தேர்வில் 55 சதவீதம் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

ஏப்ரல் 97 அன்று தேர்வு எழுதவுள்ள முதுநிலைப் பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களும் இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால், அவர்கள் எழுதப் போகும் தேர்வில் குறைந்தபட்சம் 55 சதவீத மதிப்பெண்கள் பெறுதல் வேண்டும்.

1994 டிசம்பர் 31ஆம் நாளுக்கு முன்னர் எம்ஃபில் பட்டத்துக்கான ஆய்வேடுகள் சமர்ப்பித்தவர்கள் இந்தத் தேர்வு எழுத வேண்டியதில்லை. மற்றவர்கள் எம்ஃபில்/பி.எச்.டி. பட்டம் பெற்றிருந்தாலும், அவர்களும் இந்தத் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர்.

**பாடப் பகுதிகள்**

**கலைபுலம் (Faculty of Arts/Humanities)**

அரபி, கூட்டுறவு, (Co-operation) பொருளியல், கல்வி, ஆங்கிலம், நிறுவனச் செயலியல் (Corporate Secretaryship) பிரெஞ்சு, இந்தி, வரலாறு, இதழியல், வேளாண்மை, இசை, தத்துவம், அரசியல், அரசியல் விஞ்ஞானம் (Political Science) உளவியல், பொது நிர்வாகம், சமஸ்கிருதம், சமூகப்பணி (Social Work) சமூகவியல், தமிழ்.

**வணிகவியல் புலம் (Faculty of Commerce)**

வணிகவியல்.

**சட்ட புலம் (Faculty of Law)**

சட்டம்

**அறிவியல் புலம் (Faculty of Science)**

தாவரவியல், வேதியியல், கணனி அறிவியல் (Computer Science) மின்னணுவியல் (Electronics) பூகோளவியல், மண்ணியல் (Geology), நூலக விஞ்ஞானம், கணிதம், நுண்ணுயிரியல் (Microbiology), உயிர்வேதியியல் (Biochemistry), உடற்கல்வி, இயற்பியல், மறுவாழ்வியல் (Rehabilitation) விலங்கியல், புள்ளியல் (Statistics).

விண்ணப்பப் படிவம், விதிமுறைகள், பாடப்பகுதிகள் (Syllabus) மாதிரி வினாக்கள் போன்றவைகளை ரூ.100 (நூறுக்கான) கோடிட்ட கேட்போலை (Demand Draft)யினை Dr. S. Nagarajan, Member Secretary, State Level Educational Testing, Bharathidasan University, Tiruchirappali - 620 024.

என்ற முகவரிக்குத் தாங்கள் எந்தப் பாடத்தில் தேர்வு எழுத விருப்பமோ அதனைத் தெரிவித்து அனுப்பிப் பெறலாம். கேட்போலையினைப் **பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி** என்ற முகவரிக்கு எடுக்க வேண்டும். கேட்போலையில், பெயர், முகவரி மற்றும் எதற்காக விண்ணப்பிக்கிறார் என்ற விவரம் மட்டுமே தெரிவிக்கப்படவேண்டும். வேறு எந்த வகையான முறையிலும் பணம் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 20.1.1997 அன்றோ அல்லது அத்தேதிக்கு முன்னதாகவோ மேற்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

திருச்சிராப்பள்ளி

**டாக்டர் சி.தங்கமுத்து**
பதிவாளர்

**குறிப்பு**

மேலும் கூடுதலான விவரங்கள் அறிய விரும்புவோர் எம்ப்ளாய்மென்ட் நியூஸ் (டிச.28 - ஜன.3 1997) இதழைப் பார்க்கவும்.

## அரசு உதவிகள் பெற...

# யாரை அணுக வேண்டும்?

## -வேளாண்மைப் பொறியியல் துறை-

| வ.எண். திட்டத்தின் பெயர் | விவரங்கள் தகுதிகள் நிபந்தனைகள் | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 1. உழுவை வாடகைத் திட்டம் | இப்பணிக்குப் புல்டோசர்கள் வாடகைக்கு வழங்கப்படுகிறது. | அனைத்து மாவட்டங்களிலும் உள்ள உதவி செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) (இயந்திரம்) (ஆய்வு) (உழுவை வாடகை திட்டம்) (விரைவு திட்டம்) அலுவலகங்கள். |
| அ. நிலம் சமன் செய்தல். | வாடகை விபரம்<br><br>ஒரு மணிக்கு ரூ.500<br><br>குறைந்தபட்சம் 4 மணி நேரத்திற்கு வாடகை செலுத்த வேண்டும்.<br><br>இந்து ஆதிதிராவிட விவசாயிகளுக்கு வாடகையில் 50 சதவீத மானியம் வழங்கப்படும். | |
| ஆ. நிலம் உழுதல் | இப்பணிக்கு டிராக்டர்கள் வாடகைக்கு வழங்கப்படுகிறது.<br><br>வாடகை விபரம்:<br><br>ஒரு மணிக்கு ரூ.110-(நூற்றுப்பத்து ரூபாய்) குறைந்தபட்சம் 4 மணி நேரத்திற்கு வாடகை செலுத்துதல் வேண்டும்.<br><br>இந்து ஆதிதிராவிட விவசாயிகளுக்கு வாடகையில் 50 சதவீத மானியம் வழங்கப்படும். | |
| 2. சிறுபாசனத் திட்டம் | | |
| அ. குழாய்க் கிணறு, வடிமுனைக் குழாய்க் கிணறு அமைத்தல்.<br>ஆ. கிணறுகள் அபிவிருத்தித் திட்டம் | இத்திட்டங்களில் குழாய்க் கிணறு, வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கவும், கிணறுகளை ஆழப்படுத்தவும், கிணறுகளில் பக்கவாட்டில் துளையிடவும் ரோட்டரி பொர்குசன், இன்வெல் ஹாமர் துளைக் கருவிகளும், பாறைவெடிக் கருவிகளும், நீள்துளைக் கருவிகளும், காற்றழுத்தக் கருவிகளும் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படுகிறது. இந்து ஆதி திராவிட விவசாயிகளுக்கு வாடகையில் 50 சதவிகித மானியமும், மேற்காணும் பணிகளை முடிப்பதற்கு ஆகும் செலவினங்களில் 50 சதவிகித மானியமும் வழங்கப்படுகிறது. | அனைத்து மாவட்டங்களிலும் உள்ள உதவி செயற் பொறியாளர் வேளாண்மைப் பொறியியல், இயந்திரம் ஆய்வு குழாய்க் கிணறு, திட்டம், விரைவு திட்டம், அலுவலகங்கள். |
| 3. மண்வளப் பாதுகாப்புத் திட்டம் | உயிர்சத்துமிக்க மேல்மண், அடித்துச் செல்லாமல் காக்க சமஉயர வரப்பிடுதல் தடுப்பணைகள் கட்டுதல், ஆழ உழுதல் புல்வெரப்பு அமைத்தல், காடு வளர்த்தல் பணிகளை மேற்கொள்வது. இத்திட்டத்தில் சாதாரண விவசாயிகளுக்கு 25 சதவீத மானியம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படும். | அனைத்து மாவட்டங்களிலும் உள்ள உதவி செயற் பொறியாளர் (வே.பொ) மண்வள பாதுகாப்புத் திட்டம் அலுவலகங்கள். |
| 4. நுண்ணிய நீர்ப்பாசன முறைகள் | இத்திட்டத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் சொட்டுநீர்ப் பாசனம் அமைத்துத் தரப்படுகிறது. அனைத்து விவசாயிகளுக்கும் ஒரு எக்டேருக்கு அதிகபட்சமாக ரூ.25,000 (இருபத்தையாயிரம் ரூபாய்) மானியம் வழங்கப்படுகிறது.<br><br>பெருவிவசாயிகளுக்கு 70 சதவிகித மானியமும் சிறு/குறு/தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கு 90 சதவிகித மானியமும் வழங்கப்படுகிறது. | அனைத்து மாவட்டங்களிலும் உள்ள உதவி செயற் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அலுவலகங்கள். |
| 5. மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் | இத்திட்டத்தில் மலைவாழ் மக்களுக்கு 100 சதவீதமானியத்தில் கிணறுகள் ஆழப்படுத்தப்படுகின்றன. தடுப்பணைகள் அமைக்கப்படுகின்றன. நிலம் சமன்படுத்திப் பாத்திகள் அமைக்கப்படுகிறது. பெரிய தடுப்பணைகளிலிருந்து குழாய் பதித்துப் பாசன வசதி செய்து தரப்படுகிறது. | உதவி செயற்பொறியாளர் வேளாண்மைப் பொறியியல் மண்வளப் பாதுகாப்புத் திட்டம், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம், தர்மபுரி மற்றும் திருச்சி. |



ஆசிரியரும் வெளியிடுபவரும்: என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
துணை இயக்குநர்: ஆர். அண்ணாதுரை, உதவி இயக்குநர்: எம்.அண்ணாமலை
ஆசிரியர் குழு: கே.டி. புகழேந்தி, ஜி. லோகநாதன், எம்.வி.எம். அசோகன், அமுதிமாறன்,
பி.எல். ராஜேந்திரன், ஜி.பாஸ்கரன், எஸ். ஜெயமாலினி
ஓவியர்கள்: என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண்: [illegible]

# ஆசிரியர் மடல்

புதிய ஆட்சி மலர்ந்தபின்னர் பூத்திருக்கும் முதலாவது பொங்கல் நாள் இந்நாள்; 'பொங்கலோ பொங்கல்' என்று தமிழகத்தார் மனநிறைவோடு மகிழ்ந்து கொண்டாட வேண்டிய நாள். ஆனால், இந்தத் தமிழர் திருநாள், அண்மையில் ஏற்பட்ட வரம்பு கடந்த மழை வெள்ளத்தால் நம்மில் பலரைக் கண்கலங்கவும் - கைபிசைந்து திகைத்து நிற்கவும் அல்லவா செய்துவிட்டது!

அந்தக் கொடூரத்தால் பெரும் சேதத்திற்குள்ளான பகுதிகளைச் செம்மைப்படுத்தவும், பேரிழப்புக்கு ஆளானோருக்கு நேரிட்ட துயர் துடைக்கவும் என அரசு அரும்பாடுபட்டு வருகிறது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் - வெள்ள நிவாரணத்திற்காக முதல் கட்டமாக 20 கோடி ரூபாயும், இரண்டாம் கட்டமாக 50 கோடி ரூபாயும், மூன்றாம் கட்டமாக 125 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்.

வெள்ள நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசு அறிவித்த நிவாரணத் தொகை எதிர்பார்க்கப்படுகிறது; எனினும், மாநில அரசால் இழப்பீடுகள் தரப்பட்டு வருகின்றன.

அடடா! இந்த நிலையில் அல்லவா வந்திருக்கிறது உழவர் திருநாளாம் பொங்கல் திருநாள்!

குடியரசுத் திருநாளில், சென்னையில் மேதகு ஆளுநர் அவர்களும், மாவட்டத் தலைநகர்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் தேசியக்கொடி ஏற்றுவது, என முன்பு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் பெற்றிட்ட உரிமை, இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஆண்டு சிறப்புறச் செயல்படுத்தப்பட உள்ளது.

இந்திய விடுதலைநாள் பொன்விழாக் குழு மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

துன்பம் நேர்கையில் இன்பம் சேர்க்கும் இத்தகைய செய்திகளை எண்ணியாவது, பொங்கல் திருநாளை நாமெல்லாம் பூரிப்போடு கொண்டாடுவோம்!

-ஆசிரியர்




தூய
பட்டு

தூய
சரிகை





Licence No.TNA




மல்லிகை
1-2-1997 ம







## இந்த இதழில் ...


2 "அடிப்படை வசதிகளை மேம்படுத்திட புதிய மாநில நிதி நிறுவனம் ஏற்படுத்தப்படும்"
- மேதகு ஆளுநர் திரு. கிருஷ்ண் காந்த்

17 முதுகுவலி - மருத்துவக் கட்டுரை

21 எங்கள் ஊர் பிரச்சினை

24 எழுத்தாளர் அசோகமித்திரனுடன் நேர்காணல்

26 மௌனம் - சிறுகதை

32 நாயக்கர் காலத்து நாணயங்கள்

33 விளையாட்டு விடுதிகள்
- மாணவர் பக்கம்

36 தமிழுக்கு முதல் மரியாதை

38 சென்னையில் தென்னை -
விவசாயக் கட்டுரை - சிவசூரியன், இ.ஆ.ப.

41 அறிவியல் துளிகள்

44 அரசு உதவி பெற யாரை அணுக வேண்டும்? - மறுவாழ்வுத்துறை

48 ஆசிரியர் மடல்



**தமிழரசு**

திருவள்ளுவராண்டு: 2028
தைத் திங்கள் : 19
மலர்: 27 இதழ்: 15
1.2.1997
விலை: ரூ. 3



# “அடிப்படை வசதிகளை மேம்படுத்திட புதிய மாநில நிதி நிறுவனம் ஏற்படுத்தப்படும்”

## – மேதகு ஆளுநர் திரு. கிருஷ்ணகாந்த் அறிவிப்பு

**மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களே!**

நாடு விடுதலை பெற்ற பொன்விழா ஆண்டில் நடைபெறும் இந்தப் பதினோராவது சட்டப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடரில் கலந்து கொள்ளும் உங்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கிறேன். பரவலாக்கப்பட்ட ஜனநாயக அமைப்பின் மூலமும், உள்ளாட்சி அமைப்புகளின் எல்லா நிலைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தியதன் மூலமும், நம் மாநிலத்தின் அதிகாரக் கட்டமைப்பில் கடந்த எட்டு மாத காலத்தில் மிக முக்கியமான மாறுதல்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

2. சென்ற ஆண்டு இந்த மாமன்றத்தில் உங்களிடையே உரையாற்றிய டாக்டர் எம். சென்னாரெட்டி அவர்கள் இன்று நம்மிடையே இல்லை என்பதை மிகுந்த துயரத்துடன் நாம் நினைவு கூர்கிறோம். டாக்டர் எம். சென்னாரெட்டி அவர்கள் இருமுறை ஆந்திர மாநில முதலமைச்சராகவும், மத்தியில் திருமதி இந்திராகாந்தி அமைச்சரவையில் அமைச்சராகவும், பஞ்சாப், உத்திரப்பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் ஆளுநராக இருந்தபின் தமிழகத்து ஆளுநராகவும் இருந்து, மிகச் சிறந்த பொதுத் தொண்டாற்றிய தலைவர் ஆவார். பொதுவாழ்வில் எளிமைக்கு எடுத்துக்காட்டாகவும், பொறுமையின் உறைவிடமாகவும் அனுபவச் சுரங்கமாகவும், ஆற்றலின் இருப்பிடமாகவும் விளங்கிய அவரது மறைவு தமிழகத்துக்கும் ஆந்திரத்துக்கும் மட்டுமின்றி இந்திய நாட்டுக்கே ஒரு பேரிழப்பாகும். நமது நாட்டின் கீர்த்திமிக்க புதல்வரான அவருக்கு நெஞ்சம் நிறைந்த புகழஞ்சலி செலுத்துவதோடு, அவர்தம் குடும்பத்தினருக்கு நம் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

3. 1996ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முற்பகுதியில் பெய்த பெருமழையினாலும், பெருகிய வெள்ளத்தினாலும், தமிழகத்தின் வடக்குக் கடலோர மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இதனால் 151 பேர் உயிரிழந்தனர்; 3,738 கால்நடைகள் உயிரிழந்தன; 58 ஆயிரத்து 313 குடிசைகள் முழுவதுமாகவும், 6 இலட்சத்து 29 ஆயிரத்து 987 குடிசைகள் பகுதியாகவும் பழுதடைந்தன; 3 இலட்சத்து 8 ஆயிரத்து 112 எக்டேர் நிலங்களில் முழுமையாகவும், 2 இலட்சத்து 20 ஆயிரத்து 903 எக்டேர் நிலங்களில் பகுதியாகவும் பயிர்ச்சேதம் ஏற்பட்டது. இதுதவிர, தோட்டக்கலைப் பயிர்கள் 15 ஆயிரத்து 437 எக்டேர் நிலங்களில் முழுமையாகவும், 6 ஆயிரத்து 626 எக்டேர் நிலங்களில் பகுதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டங்களிலெல்லாம், பெரும்பாலான சாலைகள் மிக மோசமாகப் பழுதுபட்டதோடு, ஏராளமான பாசனக் கண்மாய்களிலும், கால்வாய்களிலும் உடைப்பேற்பட்டன. முதலமைச்சரின் நேரடி மேற்பார்வையில், அரசு இயந்திரம் முடுக்கிவிடப்பட்டு, வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரண உதவிகள் மிக விரைவாக வழங்கப்பட்டன. மிகப் பெரும்பாலான உடனடி நிவாரண நடவடிக்கைகள் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்ட 12 நாட்களுக்குள்ளாகவே முடிக்கப்பட்டன.

4. இந்த வெள்ளச் சீற்றத்தினால் பயிர்களுக்கும் உடமைகளுக்கும் ஏற்பட்ட பாதிப்பு ரூபாய் ஆயிரம் கோடிக்கும் மேல் என மதிப்பிடப்பட்டுள்ளது. உடனடி வெள்ள நிவாரண நடவடிக்கைகளுக்காக இந்த அரசு ஏற்கெனவே ரூ.195 கோடி அனுமதித்துள்ளது. மேலும் ரூ.150 கோடி மதிப்பில் சாலை பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகள் செலுத்த வேண்டிய

30.6.1997 முடிய உள்ள நடப்புக் குத்தகைத் தொகை மற்றும் குத்தகை பாக்கித் தொகையைச் செலுத்துவதை இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திப் போடவும் குத்தகை பாக்கிக்காக குத்தகை விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படாமல் பாதுகாக்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் செலுத்தவேண்டிய குறுகிய கால கூட்டுறவுக் கடன்களை மத்தியகாலக் கடன்களாக மாற்றவும் மத்திய கால கடன்களை நீண்டகால கடன்களாக மாற்றவும் அரசு முடிவு செய்துள்ளது. இவ்வளவு பெரிய அளவிலான வெள்ளச் சேதத்தை ஈடு கட்டுவதற்கு மத்திய அரசிடமிருந்து நிதி உதவி கோரப்பட்டுள்ளது. வெள்ளப் பாதிப்புக்குப்பின் உடனடியாக மைய வேளாண்மை அமைச்சர் தமிழகத்துக்கு வருகை தந்து பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார். பின்பு மைய அரசு அலுவலர்கள் அடங்கிய குழுவினை அனுப்பி வெள்ளச் சேதப் பகுதிகளைப் பார்வையிட்டு, பாதிப்பு மற்றும் இழப்பின் அளவை மதிப்பிட ஏற்பாடு செய்தார். இதையடுத்து, மைய அரசிடமிருந்து கணிசமான நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வெள்ள நிவாரணப் பணிகளில் கட்சி சார்பற்ற முறையில் பொது மக்கள் ஆற்றியுள்ள தொண்டும், முதலமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க இதுவரை வெள்ள நிவாரண நிதி 14.42 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கியுள்ள செயலும் பாராட்டத்தக்கதாகும்.

5. நீண்டகாலமாகத் தள்ளிப் போடப்பட்டுவந்த உள்ளாட்சி அமைப்புகளின் எல்லா நிலைகளுக்குமான தேர்தலை மாநிலத்தில் அடித்தளத்து ஜனநாயக அமைப்புகளுக்குப் புத்துயிரூட்டி, உத்வேகம் அளிக்க வேண்டும் என்ற வாக்குறுதிக்கிணங்க, இந்த அரசு ஒரே நேரத்தில் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது. இந்தத் தேர்தல்கள் சுமுகமாகவும், சுதந்திரமாகவும், பாரபட்சமின்றியும் நடத்தி முடிக்கப்பட்டிருப்பது பெரிதும் மன நிறைவளிக்கக்கூடிய ஒன்றாகும். இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் பொறுப்பேற்றவுடன், அவர்கள் அனைவரையும் கொண்ட ஒரு கருத்தரங்கை நடத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டது. இக்கருத்தரங்கில், திறன் வாய்ந்த, மக்களின் எதிர்பார்ப்புகளுக்கேற்பப் பணியாற்றும் தன்மை கொண்ட உள்ளாட்சி நிர்வாகத்தை அளிப்பது பற்றியும், அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பது பற்றியும் அந்தத் தலைவர்களின் கருத்தறியப்பட்டது.







6. உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரங்களையும் பொறுப்புகளையும் அளிப்பதற்கும், அந்தப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான உரிய நிதி ஆதாரங்களை அளிப்பதற்கும் அரசு உறுதி பூண்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் பொறுப்புகளை ஒப்படைப்பது தொடர்பான சட்ட, நிர்வாக, நிதி அடிப்படையிலான கூறுகளை ஆராயும்படி மாநில திட்டக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் பரிந்துரைகள் அண்மையில் பெறப்பட்டுள்ளன. இந்தப் பரிந்துரைகள் மீது அரசு விரைவில் உரிய முடிவெடுத்து, அவற்றை வரும் நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடரின்போது அறிவிக்கும்.

7. அரசியல் சட்டப்படி, 1994ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மாநில நிதிக்குழு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில அரசிடமிருந்து நிதிப்பகிர்வு அளித்தல், அவை தங்கள் சொந்த வருவாயை அதிகரித்துக் கொள்ளுதல், அவை மக்களுக்கு ஆற்றும் பணிகளின் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவை தொடர்பான கூறுகள் பற்றிய தன் அறிக்கையை அரசுக்கு அண்மையில் அளித்துள்ளது. இந்தப் பரிந்துரைகள் அரசால் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இவற்றின் மீதான அரசின் முடிவுகள் விரைவில் எடுக்கப்படும். அடுத்த திங்களில் சட்டப் பேரவையின் முன் வைக்கப்பட இருக்கும் நிதிநிலை அறிக்கையில் உரிய நிதிஒதுக்கீடுகள் சேர்க்கப்படும். கூடுதல் பொறுப்புகள் அளித்தல், கூடுதல் நிதி ஆதாரத்தை அளித்தல் ஆகியவை தொடர்பான அரசின் முடிவுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான சட்டமுன் வடிவுகள் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும். அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும், இப்போது நடைமுறையில் இருக்கும் சட்டங்களுக்குப் பதிலாக, பொதுவான ஒரு தனிச் சட்டம் கொண்டு வருவதும் இந்த அரசின் திட்டமாகும்.

8. சென்ற ஐந்தாண்டுகாலமாக தள்ளிப் போடப்பட்டுவந்த தொடக்கக் கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தலை இந்த அரசு நடத்தி முடித்து தன் வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளது. பதினான்காயிரத்துக்கும் மேற்பட்ட தொடக்கக் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல்கள் நடந்து முடிந்துள்ளன. பால்வளக் கூட்டுறவுச்

சங்கங்களுக்கும், வரும் மார்ச் திங்கள் 31-ஆம் நாளுக்குள் தேர்தல் நடத்தப்படும். எஞ்சியுள்ள தொடக்கக் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் நீதிமன்றங்களால் தடை செய்யப்பட்டுள்ளது. இக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு நீதிமன்ற ஆணைக்கு ஏற்ப தேர்தல் நடத்தப்படும்.

9. நிர்வாக இயந்திரத்தின் திறனை வளர்ப்பதற்கும், களப்பணியினைப் பயனுள்ள வகையில் கண்காணிக்கவும், நிர்வாகத்தை மக்கள் எளிதில் அணுகக்கூடிய வகையில் அமைக்கவும், இந்த அரசு சிறிய மாவட்ட அலகுகளை உருவாக்க முடிவு செய்துள்ளது. அந்த அடிப்படையில் திருவாரூரைத் தலைமையிடமாகக் கொண்டு திருவாரூர் ஏ.டி. பன்னீர் செல்வம் மாவட்டம், தேனியைத் தலைமையிடமாகக் கொண்டு வைகை வீரன் அழகுமுத்து மாவட்டம், நாமக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு இராஜாஜி மாவட்டம், திருவள்ளுரைத் தலைமையிடமாகக் கொண்டு எம்.ஜி.ஆர் மாவட்டம் என்று நான்கு புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த நான்கு மாவட்டங்களும் 1.1.1997 முதல் இயங்கத் துவங்கியுள்ளன. இத்தன்னியில், காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்கு அறிஞர் அண்ணாவின் பெயரும், திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்கு மன்னர் திருமலை பெயரும் சூட்டப்பட்டது பொருத்தமுடையதாகும்.

10. தமிழக மக்கள், ஊழலற்ற, வெளிப்படையான நிர்வாகத்தைத் தரவேண்டுமென்று இந்த அரசுக்கு மிகப் பெரிய பொறுப்பை வழங்கியுள்ளனர். வரலாறு படைத்துள்ள இந்தப் பொறுப்பை இந்த அரசு உணர்ந்து, ஏற்கெனவே அறிவித்தபடி, அரசு நிர்வாகத்தில் நடைமுறைகளை எளிதாக்கவும் ஊழலைத் தடுப்பதற்காகவும் தேவையான நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்காக நீதிபதி திரு இராமானுஜம் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழுவை நியமித்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப் பெற்றவுடன், அவற்றை ஆய்வு செய்து அதற்கேற்ப நிர்வாக சீர்திருத்தங்களைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், ஒப்பந்தம் மற்றும் கொள்முதல் நடைமுறைகளில் வெளிப்படையான - நேர்மையான முறையைக் கொண்டுவர, சட்டரீதியான, நிர்வாக ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அரசு சிந்தித்து வருகின்றது. அரசு விவகாரங்களில் ஊழலை ஒழிக்க பல்வேறு நடவடிக்கைகளைப் பரிசீலித்துவரும் அதே வேளையில், ஊழல் புகார்கள் மீது முழு முயற்சியோடு விசாரணை செய்து, நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க இந்த அரசு தீவிர நடவடிக்கை எடுத்துள்ளது.

11. மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு இன்றியமையாத தேவைகள் பொது அமைதியும், சமாதானமான சூழ்நிலையும்தான் என்பதை உணர்ந்த இந்த அரசு, தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பராமரிப்புக்குத் தலையாய முன்னுரிமை அளிக்கின்றது. இந்த அரசின் இடையறாத முயற்சியின் பலனாக, சமுதாய நல்லிணக்கம் பெரும்பாலான அளவில் மீண்டும் நிலை நாட்டப்பட்டுள்ளது. பொது மக்களின் எதிர்பார்ப்புகளுக்கும் கவலைகளுக்கும் பரிவோடு நடவடிக்கை எடுக்கக் கூடிய, தொழில் நுட்பத்திறன் கொண்டதொரு புதிய அமைப்பாக நம் காவல் துறை வடிவம் பெற்றுக் கொண்டு வருகிறது. மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து வரும் புகார்களை விசாரிப்பதற்கு மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைப்பதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

12. இப்போது நாம், ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தை தயாரிக்கும் பணியைத் துவக்கியுள்ளோம். இந்த அரசு, நிறைந்த அனுபவமும், புகழும் மிக்கவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு மாநிலத் திட்டக் குழுவைத் திருத்தி அமைத்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் எல்லா மட்டத்திலும் ஆங்காங்கே பொறுப்பேற்றுள்ள நிலையில், அவற்றின் ஆலோசனைகளையும், முன்னுரிமைகளையும் கருத்தில் கொண்டு, பரவலாக்கப்பட்ட முறையில் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கும் பணி நடக்கும். மாநிலத்தில் எல்லா மக்களுக்கும் தேவையான குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை அளித்தல், வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்குதல், வறுமையை ஒழித்தல், மாநிலத்தை விரைவாகத் தொழில்மயமாக்குதல் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் ஆகியவற்றிற்கு ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின்போது முன்னுரிமை அளிக்கப்படும்.

13. மாநிலத்தின் வேகமான வளர்ச்சிக்கும், வறுமைக் குறைப்புக்கும் பொருளாதார சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த இந்த அரசு, வரிச்சீரமைப்பில் தன் முயற்சிகளைத் தொடரும். சென்ற நிதி நிலை அறிக்கையில் வணிகவரி கட்டமைப்பில் மிக முக்கியமான சீர்திருத்தங்கள் அறிவிக்கப்பட்டன. அது இனியும் தொடரும் என்பதுடன், இந்த ஆண்டு முத்திரைக் கட்டணம், பத்திரப்பதிவு ஆகியவற்றில் சீர்திருத்தத்தைக் கொண்டுவரவும் அரசு உத்தேசித்துள்ளது. பொது மக்களுக்கான சேவையை மேம்படுத்துவதும், கட்டண விகிதங்களையும் வரி விதிப்புக் கட்டமைப்பையும் எளிமைப்படுத்துவதும் இந்த சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கங்களாக இருக்கும்.

14. நம் மாநிலப் பொருளாதாரத்தின் ஒரு முக்கியமான பகுதியாக பொதுத்துறை நிறுவனங்கள் விளங்குகின்றன. இதை உணர்ந்து, இந்த அரசு அவற்றின் செயலாக்கத்தை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும். இதற்காக, ஒவ்வொரு நிறுவனத்துக்குமான தனி ஆய்வுகளை மேற்கொண்டு, நிர்வாகத்திறனை மேம்படுத்துதல், நிதி

மற்றும் நிறுவன அமைப்பை சீரமைத்தல் போன்ற உத்திகளை இந்த அரசு கையாளும். இதற்கான உரிய நடவடிக்கைகளைப் பரிந்துரைக்க, சிறந்த நிபுணர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்துள்ளது.

15. அடிப்படைக்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மின்சாரம், குடிநீர் வசதி, சுகாதாரம், துறைமுகங்கள் போன்றவற்றில் பெருமளவில் முதலீடு செய்வதன் முக்கியத்துவத்தை இந்த அரசு உணர்ந்துள்ளது. எனவே தனியார் துறையானது பொதுத்துறையுடன் சேர்ந்து இந்த வசதிகளை உருவாக்கி, பராமரிக்க ஏற்றதொரு சூழ்நிலையை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் நடுத்தர மற்றும் சிறு துறைமுகங்களை மேம்படுத்தும் திட்டத்தில் தனியாரைப் பங்கு கொள்ளச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாநில கடல்சார் வாரியம் (State Maritime Board) மேற்கொள்ளும்.



மின்சாரத் துறையிலும், பெரிய அளவிலான மின் உற்பத்தித் திட்டங்கள் தனியார் துறையில் நிறுவப்பட உள்ளன. இவை உற்பத்தி செய்யும் மின்சாரத்தை வாங்கி, தமிழ்நாடு மின்சார வாரியம் விநியோகிக்கும். இதுபோன்ற முயற்சியை மற்ற துறைகளிலும் மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. நகராட்சிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளில் முதலீடு செய்வதற்கு தேவையான நிதி ஆதாரத்தைத் திரட்ட, அனைத்திந்திய அளவிலான நிதி நிறுவனங்களுடன் இணைந்து தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதி நிதிப் பணிகள் நிறுவனம் என்ற ஒரு புதிய மாநில நிதி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

16. சமுதாயத்தில் நலிவடைந்த மக்களின் முன்னேற்றத்திற்கான வழி பெண்கள் முன்னேற்றமும் அவர்கள் சக்திமிக்கவர்களாக விளங்குவதுமே ஆகும். பெண்கள் முன்னேற்றத்திற்கான ஒரு மாபெரும் திட்டத்தை மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. திறன் மிக்க, ஒற்றுமை நிறைந்த, தன்னிறைவுக் குழுக்களாக பெண்களை ஒருங்கிணைத்து அவர்களின் வருவாய் ஈட்டும் திறனை மேம்படுத்துவதும், அதன் விளைவாக அவர்களுடையவும் அவர்களின் குடும்பத்தினருடையவுமான வாழ்க்கை நிலையை உயர்த்துவதும் இந்தத் திட்டத்தின் நோக்கங்களாகும்.

17. கல்வி மேம்பாட்டுக்கு இந்த அரசு மிக முக்கியமான இடத்தை அளிக்கின்றது. இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் அனைவர்க்கும் இலவசமாகத் தொடக்கக் கல்வி அளிப்பது என்ற இலக்கை அடைவதை ஒரு அறைகூவலாக ஏற்றுக் கொண்டு, பள்ளி வயது அடைந்த சிறார்கள் அனைவரையும் தொடக்கப் பள்ளிகளில் சேர்த்து, அவர்களைத் தொடர்ந்து கல்வி பயிலச் செய்வதற்கான திட்டம் ஒன்றை செயல்படுத்த இருக்கிறோம். மேலும், பள்ளிகளில் கட்டிடங்கள், கற்பிக்கும் உபகரணங்கள் போன்ற அடிப்படைத் தேவைகளை அதிகரிப்பதிலும், சிறார்களுக்கு அளிக்கப்படும் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்தப்படும். உலக வங்கி உதவியுடனான மாவட்டத் தொடக்கக் கல்வி திட்டம் இந்த ஆண்டு மேலும் மூன்று மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு, மாநிலத்தில் ஏழு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தில் பள்ளிக்கல்விக்கு அதிக கவனம் செலுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன், தலைமைச்செயலகத்தில் உள்ள கல்வித்துறை, பள்ளிக்கல்வித்துறை உயர்கல்வித்துறை என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

18. சென்ற ஆண்டின் வறட்சியும் அதைத் தொடர்ந்து இந்த ஆண்டில் ஏற்பட்ட வெள்ளமும்

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கோவையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக வெள்ளி விழா நிகழ்ச்சியில் பல்வேறு கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி சேரன், ஜீவா மற்றும் மகாகவி பாரதியார் போக்குவரத்துக் கழகங்களின் 40 புதிய பேருந்துகளை தொடக்கி வைத்து வெள்ளி விழா பேருரையாற்றினார் (12.1.97)



மாநிலத்தின் மொத்த வேளாண் உற்பத்தியை, குறிப்பாக மொத்த உணவு தானிய உற்பத்தியை, மிகவும் பாதித்துள்ளன. தமிழகத்தில் வேளாண்மை முன்னேற்றத்தை, நிலைத்து நீடிக்கத்தக்கவாறு கொண்டுவரும் நோக்கத்துடன், நீர்ப்பாசன திட்டங்களில் பெருமளவில் முதலீடு செய்யப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு நீர் வளத் தொகுப்புத் திட்டத்தின்கீழ், ரூ.807 கோடி மதிப்பில் தமிழகத்திலுள்ள பல குறு மற்றும் பெரும்பாசனத்திட்ட மேம்பாட்டுப் பணிகள் செயலாக்கப்பட உள்ளன. பன்னாட்டு நிதி உதவி அமைப்புகளின் உதவியோடு மாநிலத்தில் உள்ள பாசன ஏரிகளையும் குளங்களையும் பழுதுபார்த்து நிலைநிறுத்தும் பணி படிப்படியாக எடுத்துக் கொள்ளப்படும். பாசன ஆதாரங்களுக்கு வரும் நீர்வரத்துக்கால்வாய்களைத் தூர்வாரி ஒழுங்குபடுத்தும் ஒரு விரைவுத் திட்டத்தை செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

19. வேளாண்மை அடிப்படையிலான தொழிற்சாலைகளை தமிழகத்தில் உருவாக்கும் நோக்கத்துடன், வணிகரீதியிலான மலர் உற்பத்தி, தோட்டக்கலை மற்றும் அறுவடைக்குப் பின்னான செய்முறைப் பணிகள் முதலியவற்றை ஊக்குவிப்பதற்காக, 'நபார்டு நிறுவனம்' அமைக்க உள்ள அதிநுட்ப வேளாண்மை நிதி நிறுவனத்தில், நிதி முதலீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

20. அனைவருக்கும் அடிப்படை சுகாதாரம் அளித்தல், கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை உறுதி செய்யும் நோக்கத்துடன், வட்ட மருத்துவமனைகளுக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தேவையான கருவிகளையும் பிற வசதிகளையும் பெருமளவில் அளித்துள்ளோம். ஏற்கெனவே அறிவித்தபடி, 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.18கோடி செலவில் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 1997-98 ஆம் ஆண்டில் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்படும். கிராமப்புற மக்களுக்கு நாள் முழுவதும் மருத்துவ வசதி கிடைக்கும் வகையில், மாநிலம் முழுவதும் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருபத்திநான்கு மணி நேரமும் இயங்கும்படி ஆணையிடப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் ஒரு மாபெரும் போலியோ தடுப்புத் திட்டம் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. "அனைவருக்கும் மருத்துவ வசதி" என்ற இலக்கை கி.பி.2000 ஆம் ஆண்டுக்குள் அடைந்துவிடவேண்டும் என்பதில் அரசு உறுதி பூண்டுள்ளது.

21. இந்த அரசு மேற்கொண்ட சீரிய தொடர் முயற்சியின் பலனாக கிருஷ்ணா நதி நீர், குடி தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ள சென்னை மாநகருக்கு இறுதியாக 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் வந்து சேர்ந்துவிட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த முயற்சியின் பலனாக, சென்னை மாநகரில் தினசரி குடிநீர் விநியோகம் முன் எப்போதும் இருந்திராத வகையில் 440 மில்லியன் லிட்டர் அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. அத்துடன் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் அனைத்து நீர்த்தேக்கங்களும் நிறைந்திருக்கின்ற நிலையில், தற்போது உள்ள குடிநீர் வழங்கும் அளவை, வரும் கோடைக்காலத்திலும் தொடர முடியும் என அரசு நம்புகிறது. நகராட்சிப் பகுதிகளில் ரூ.50 இலட்சம் மதிப்பு வரையிலான குடிநீர் வழங்கும் திட்டங்களை அந்தந்த நகராட்சிகளே நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் அரசு அனைத்து நகராட்சிகளுக்கும் அதிகாரத்தை வழங்க முடிவெடுத்துள்ளது. அடுத்த மூன்றாண்டுகளில் மாநிலத்திலுள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் போதுமான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்படும்.

22. இந்தியாவின் தொழில் வரைபடத்தில் தமிழ்நாட்டை உரிய சிறப்பிடத்தில் மீண்டும் நிலை நிறுத்த அரசு உறுதிபூண்டுள்ளது. பொறுப்பேற்றுக் கொண்ட சிறிது காலத்திற்குள்ளேயே, தமிழ்நாடு ஒரு தன் முயற்சி நிறைந்ததும், ஒளிவு மறைவற்றதும், தொழில் முனைவோரிடையே நேயப்பண்பு கொண்டதுமான மாநிலம் என்ற நற்பெயரை ஈட்டியுள்ளது. உலகப் புகழ்பெற்ற பெருந் தொழில் நிறுவனங்களான ஹூண்டாய் நிறுவனம் மோட்டார் வாகனத் தயாரிப்புத் துறையிலும், பில்கிங்டன் மற்றும் செயின்ட் கோபெயின் நிறுவனங்கள் கண்ணாடி வகைகள் தயாரிப்புத் துறையிலும் தமிழ்நாட்டில் பெரும் முதலீடு செய்வது இந்த நற்பெயருக்குச் சான்றாக விளங்குகின்றன. புதிய தொழில்கள் எளிதில் துவக்கப்படுவதற்கு ஏதுவாக, தொழில் வளாகங்கள் அமைப்பதற்கு அதிக அளவில் நிலங்களைக் கையகப்படுத்தும் பணி அயர்வின்றி நடைபெற்று வருகிறது. மோட்டார் வாகனத் தயாரிப்புத் துறையில் பல துணைத் தொழில்கள் உருவாவதற்கும், ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதற்கும் பெரும் வாய்ப்பு இருப்பதால், மோட்டார் வாகனத் தயாரிப்புத் தொழிலை முன்னணித் தொழிலாகக் கருத இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதையொட்டி தமிழகத்தில் இந்தத் தொழிலுக்கு சிறப்புச் சலுகைகளை இந்த அரசு அளிக்கும். இதன் மூலமாக சென்னைப்பகுதி இந்தியாவின் "டெட்ராயிட்டாக" மாறும் நிலை மலர்ந்திருக்கிறது.

23. தமிழகத்தை விரைவாகத் தொழில் மயமாக்குவதற்கு, தேவையான அறிவுரை நல்கவும், தொழிலதிபர்களுடன் சீரான கருத்துப் பரிமாற்றத்துக்கு வழி வகுக்கவும் முதலமைச்சர் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழுவை இந்த அரசு அமைத்துள்ளது. அறிவிக்கப்பட்ட தொழில் மயப்பகுதிகளில் தொழிற்சாலைகள் விரைவில் வருவதை ஊக்குவிப்பதற்காக தொழில்மயப்பகுதி வளர்ச்சி உயர்மட்டக் குழுமங்கள் அமைக்கப்பட்டு

216439
JL
V21lm1 N70rA.
N98

இப்பகுதிகளில் ஒரு முனைத் தீர்வு முனையம் செயல்பட வழிவகை செய்ய ஒரு சட்ட முன் வடிவை இந்த அரசு நடப்புக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவரும்.

24. மாநிலத்தின் தீவிர தொழில் வளர்ச்சிக்கு மின்சார உற்பத்தி மிக முக்கியமானது என்பதை அறிந்துள்ள அரசு, மின்சார உற்பத்தியில் தனியார்துறை பங்கு கொள்வதை ஊக்குவிக்கும் கொள்கையை தொடர்ந்து பின்பற்றி வருகின்றது. இந்த இனத்தில் கடந்த காலத்தில் சிற்சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், மனநிறைவான முன்னேற்றம் ஏற்படவில்லை. இந்த அரசு மேற்கொண்ட தீவிர தொடர் முயற்சிகளின் பலனாக நான்கு தனியார் தொழில் முனைவோருடன் மின்சாரம் வாங்குவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. தமிழகத்தில் 20 இடங்களில் குறுகிய கால மின் உற்பத்தித் திட்டங்களில் தனியார் பங்கு கொள்வது சம்பந்தமாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) விடுத்த ஒப்பந்தப்புள்ளி அழைப்புக்கு மிக நல்ல வரவேற்பு கிடைத்து 73 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இவற்றின் மீது அரசு விரைவில் முடிவெடுக்கும்.

**அட்டைப்பட விளக்கம்**

முதலாம் அட்டை:

மேதகு தமிழக ஆளுநர் திரு. கிருஷ்ணகாந்த் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை (22.1.97)

இரண்டாம் அட்டை:

சென்னைத் தீவுத்திடலில் அகில இந்திய சுற்றுலாப் பொருட்காட்சியினை மாண்புமிகு முதல்வர் கலைஞர் திறந்து வைத்தார்.

நான்காம் அட்டை:

சேலம் பெங்களூர் அகல இரயில் பாதை துவக்க விழாவில் மாண்புமிகு பிரதமர் திரு. தேவேகௌடா, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் (11.1.97)

25. சென்னை மாநகருக்குள் உள்ள நீர் வழிகளை தூய்மைப்படுத்த ஒரு திட்டத்தை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. இதனால் சென்னை மாநகருக்குள் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்குவதைக் குறைக்கவும், சுற்றுப்புற சூழலின் தரத்தை உயர்த்தவும் முடியும். முதல் கட்டமாக, கூவம் ஆற்றிலும், பக்கிங்காம் கால்வாயிலும் ஏற்படும் தூய்மைக் கேட்டைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கான திட்டத்தை விரைந்து செயல்படுத்த உயர்மட்டக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

26. மாநிலத்தில் காடு வளத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன், இந்த அரசு ஜப்பான் நாட்டு நிதிஉதவி அமைப்புடன் வெற்றிகரமாக பேச்சு வார்த்தை நடத்தி, ரூ424 கோடி கடனுதவியுடன் ஐந்தாண்டு காலத்தில் நிறைவேற்றும் வகையில் ஒரு மாபெரும் வனவளத்



சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாளில் முனைவர் கு. மோகனராசு விற்கு திருவள்ளுவர் விருதினை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் வழங்கினார் (14.1.97).

திட்டத்துக்கு ஒப்புதல் பெற்றுள்ளது. சந்தனமரக் கடத்தலை இந்த அரசு தீவிரமாகத் தடுத்துள்ளது. மேலும், சந்தனமர ஏலத்தின் மூலம் இந்த ஆண்டு, இதுவரை இல்லாத அளவுக்கு, ரூ.47 கோடி வருவாய் அரசுக்குக் கிடைத்துள்ளது.

27. காவிரி நதிநீர்ப் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்குத் தேவையான எல்லா முயற்சிகளையும் இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. உச்ச நீதிமன்றத்தின் விருப்பத்திற்கிணங்க, ஓர் இடைக்கால ஏற்பாடாக, நடப்பு ஆண்டு சாகுபடிக்கான நீரை கர்நாடகத்திலிருந்து பெறுவதற்காக தமிழ்நாடு கர்நாடக முதலமைச்சர்கள் இதுவரை ஐந்து சுற்றுப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர். சென்ற 5.1.1997 அன்று நடந்த இறுதிச் சுற்றுப் பேச்சு வார்த்தை வெற்றியடையாததால், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பினைப் பெற ஆவன செய்ய இந்த அரசு முடிவெடுத்துள்ளது. காவிரி நடுவர்மன்றத்தின் தலைவர் விலகியதால் நடுவர்மன்றப் பணிகள் 1.7.1996 முதல் தடைப்பட்டன. இது குறித்து தமிழக முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு பாரதப் பிரதமருடன் பேசியதையடுத்து, மைய அரசு உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. என். பி. சிங் அவர்களைக் காவிரி நடுவர்மன்றத் தலைவர் பதவிக்கு நியமித்தது. இந்த அரசு காவிரி பாசனப் பகுதிக்குத் தேவையான

தண்ணீரை, முறைப்படி கர்நாடகத்திலிருந்து பெறுவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

28. தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மாதாந்திர அரிசித் தேவை 2.25 லட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. மைய அரசு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு மட்டும்தான் மையத் தொகுப்பிலிருந்து மான்ய விலை அரிசி வழங்கப்படும் என்ற புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. இதனால் மையத் தொகுப்பிலிருந்து நமக்குக் கிடைத்துவரும் அரிசி ஒதுக்கீட்டின் அளவு கணிசமாகக் குறையுமோ என்ற ஐயப்பாட்டினை எழுப்பி, எப்போதும் தரப்படும் அளவு தரப்படவேண்டுமென மைய அரசிடம் நமது முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார். எனவே நிலைமையை சமாளிக்க, போதுமான கையிருப்பை வைத்திருக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த முயற்சிகளில் ஒன்றாக, காவிரி பாசனப்பகுதியில் ஏகபோகக் கொள்முதல் முறை கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் காவிரி பாசனப்பகுதி விவசாயிகளின் நலன் பாதிக்கப்படக் கூடாது என்ற நல்லெண்ணத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் உற்பத்தி ஊக்கத் தொகையை குவிண்டாலுக்கு ரூ.50 ஆக உயர்த்தியும், தரவெட்டுத் தொகையை (Grade cut) குவிண்டாலுக்கு ரூ.15லிருந்து ரூ.5 ஆகக் குறைத்தும் ஆணையிடப்பட்டுள்ளது.

29. பொது விநியோகத் திட்டத்தின் பலன்கள் ஏழை எளிய மக்களுக்கு முழுமையாகச் சென்றடையும் வகையில் திட்டம் சீரமைக்கப்படும். அதன்படி, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு சிவப்பு நிற அட்டை வழங்கப்படும். அவர்களுக்கு தற்போது பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அனைத்து பொருட்களும் வழங்கப்படும். பொதுவிநியோகத் திட்டத்தை உபயோகிக்காத வசதியுள்ள மக்கள் ( Affluent Sections) பலர் உள்ளனர். அவர்களுக்கு பச்சை நிற அட்டைகள் வழங்கப்படும். இப்பிரிவைச் சார்ந்த மக்களுக்கு அரிசியைத் தவிர மற்ற பொருட்கள் வழங்கப்படும். இந்த இரண்டு வகையிலும் சேராத ஒரு பிரிவினர் அரிசிக்குப் பதிலாக, கூடுதலாக சர்க்கரை அல்லது மண்ணெண்ணெய் வேண்டும் என்று கோருகிறார்கள். அவர்களது தேவையை நிறைவேற்றும் வகையில், அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் அரிசிக்குப் பதிலாக 3 கிலோ சர்க்கரையோ அல்லது 5 லிட்டர் மண்ணெண்ணெயோ வழங்கப்படும். அவர்களுக்கு வழங்கப்படும் அட்டை மஞ்சள் நிறமுடையதாக இருக்கும். அனைத்து மாநகராட்சிப் பகுதிகளிலும் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் பணி துவங்கி, இந்தப் பணி மாநிலம் முழுவதிலும் அடுத்த சுதந்திர நாளுக்கு முன்பாக முடிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

30. பொது விநியோகத் திட்டத்தில் முறைகேடுகளைத் தவிர்க்கவும், திட்டத்தின் செயல்பாட்டை மேம்படுத்தவும், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதி ஆகியோர் அடங்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டு, அந்தக்குழு பிற மாநிலங்கள் சிலவற்றில் பொது விநியோகத் திட்டம் செயல்படும் முறையை ஆராய்ந்து, நம் மாநிலத் திட்டத்தை மேம்படுத்தத் தக்க பரிந்துரைகளை 9.1.1997 அன்று முதல்வரிடம் அளித்துள்ளது.

31. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் நல்வாழ்வுக்கு, குறிப்பாக அவர்களுக்கு கல்வி, பொருளாதார முன்னேற்றம், அடிப்படை வசதிகளை அளித்தல் ஆகியவற்றில் சீரிய தொடர்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை இந்த அரசு கணிசமாக உயர்த்தியுள்ளது. இந்தத் திட்டங்களின் சாதனை இலக்குகளை அடைவதில் அக்கறை காட்டுவது மட்டுமின்றி, இத்திட்டங்களின் தரத்தை உயர்த்துவதிலும், அவை உரியவர்களுக்கு முறைப்படி சேர்வதிலும் இந்த அரசு கவனம் செலுத்தும்.

32. மீனவர்களின் நலனில் அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. சென்ற ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ளபடி, மீனவர்களுக்கு ஆண்டுதோறும் 4000 குடியிருப்புகள் கட்டும் மாபெரும் திட்டம் இந்த ஆண்டும் தொடரப்படும். இந்தக் குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கு அரசு முயற்சி மேற்கொள்ளும். புயல் போன்ற காலங்களில் ஆழ் கடல் நடுவே சிக்கித் தவிக்கும் மீனவர்களுக்கு உதவும் முகத்தான், 25 சதவீத மான்யத்தில் 1500 மீன்பிடி படகுகளில் "வாக்கி டாக்கி" கருவி வழங்கப்படும். நம் மாநில அப்பாவி மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது இலங்கை இராணுவம் அடிக்கடி தாக்குதல் நடத்துவதுபற்றி இந்த அரசு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. அண்மையில் நடந்த வன்முறை தாக்குதல்கள் பற்றி மைய அரசின் கவனத்திற்கு இந்த அரசு கொண்டு சென்றுள்ளது. 1974இல் கச்சத் தீவு ஒப்பந்தம் ஏற்பட்டபோது, கச்சத்தீவிற்கு அருகில் தமிழ்நாடு மீனவர்களுக்கு மீன் பிடிக்கின்ற உரிமையும், கச்சத் தீவுக்கு தமிழ்நாட்டிலிருந்து யாத்திரைசெல்கின்ற உரிமையும் உண்டு என்ற ஷரத்து அந்த ஒப்பந்தத்தில் இடம் பெற்றிருந்தது. பின்னர் 1976இல் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு என்ன காரணத்தாலோ அந்த ஷரத்து செயல்படாமல் ஆக்கப்பட்டுவிட்டது. மீண்டும் அந்த ஷரத்தை செயல்படுத்தி, பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று மைய அரசை தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தும். நம்மாநில மீனவர்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காண எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதாக மைய அரசு உறுதி அளித்துள்ளது. இத்திங்கள் 17ஆம் நாள் டெல்லியில் மாநில அரசு அதிகாரிகளும், மத்திய அரசு அதிகாரிகளும் கலந்து கொண்ட கூட்டத்தில்,

2116439

தமிழக முதலமைச்சர் அவர்களும், மத்திய வெளி உறவுத் துறை அமைச்சர் அவர்களும் இந்தப் பிரச்சினை குறித்து விவாதித்துள்ளனர்.

33. அரசின் திட்டங்களைத் திறம்பட நிறைவேற்றுவதிலும், திட்டங்களின் பயன்கள் உரியவர்களை அடையச் செய்வதிலும் அரசு அலுவலர்களின் பங்கின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்துள்ளது. எனவே ஐந்தாவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மத்திய அரசுப் பணியாளர்களுக்கு நிர்ணயிக்கப்படும் சம்பள வீதங்கள் மாநில அரசுப் பணியாளர்களுக்கும் வீண் கால தாமதமின்றி வழங்கப்படும் என்பதை இந்த அரசு மீண்டும் உறுதி செய்கிறது.

34. இந்த மாமன்றத்தில் நீங்கள நடத்தப்போகும் விவாதங்களும் கருத்துரைகளும் உங்கள் அனுபவத்தையும், நாட்டு மக்களிடையே உங்களுக்கு உள்ள தொடர்பினையும் பின்னணியாகக் கொண்டு இருக்கும் என்றும், இந்த விவாதங்களின் பலனாக இந்த மன்றத்தில் எடுக்கப்படும் முடிவுகள் தமிழக மக்களுக்கு நன்மை அளித்து, அவர்களின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு விரைவாக வழிவகுக்கும் தன்மையனவாக இருக்கும் என்றும் நம்பிக்கையோடு இந்த உரையை நிறைவு செய்கிறேன்.

**வணக்கம்**

(மேதகு தமிழக ஆளுநர் திரு. கிருஷ்ணகாந்த் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 22.1.97 அன்று ஆற்றிய உரை)



## மாணவர்கள் வரலாற்றை உருவாக்க வேண்டும்!



இன்றைய உலகத்தில் இளைஞர்கள்- அதிலும் குறிப்பாக இந்தியாவில், அதிலும் சிறப்பாகத் தமிழகத்தில் எப்படி வளர்ந்திட வேண்டும், எப்படி தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதிலே அதிக ஆர்வம் கொண்டவனாக, அக்கறை கொண்டவனாக இருக்கின்ற காரணத்தால், அந்த இளைஞர்களுடைய எழுச்சிக்கு நீங்கள் முன்வந்து, அந்த எழுச்சியை உருவாக்க வேண்டுமென்ற அறிவுரையை அன்பாக உங்கள் முன் வைக்க நான் விரும்புகிறேன்.

இளைஞர்கள் தான் இன்றைக்கு உலகத்திலே பல அற்புதங்களை நிகழ்த்துகின்ற ஆற்றலாளர்களாக இருக்கின்றார்கள்; எனவேதான் இளைஞர்களுக்கு அந்த அழைப்பை நான் விடுக்கிறேன்.

இலக்கியங்களை அடிப்படையாக வைத்து, நாமே ஒரு வரலாற்றை இன்றைக்கு உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் உண்மையான வரலாறு தொடர் வரலாறு எழுதப்பட்ட வரலாறு தமிழர்க்கு இல்லை. இனியாவது அதிலே சோடை போகாமல் இருக்க வரலாறு எழுதப்பட வேண்டும்.

அந்த வரலாற்றை வரலாற்றுப் பேராசிரியர்கள் எழுதுகிறார்கள்- எழுதுவார்கள் என்பதல்ல. அந்த வரலாற்றுக்குரிய கதாநாயகர்கள் யார் என்றால் அந்தக் கதாநாயகர்களாகத் தான், மாணவமணிகளே, நீங்கள் எல்லாம் எதிர்காலத்திலே உருவாக வேண்டுமென்று உங்களுக்கெல்லாம் 'அந்த வரலாற்றுக்கு அழைப்பு விடுக்கிறேன்".

**-தாம்பரம் சென்னை கிறித்துவக் கல்லூரி மாணவர் பேரவை தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் (6.1.1997)**

# மருத்துவக்கட்டுரை:



**ந**ம்மில் பெரும்பாலோர் நமது முதுகையே மறந்துவிடுகிறோம். என்றாவது ஒரு நாள் முதுகில் வலி வந்தால் மட்டுமே முதுகைப்பற்றிய நினைப்பே வருகிறது. எப்போது மனிதன் நேராக நிற்கத் தொடங்கி சமூகத்தின் முதுகெலும்பாக மாறினானோ அப்போதே அவனுடைய முதுகு பாதிப்பு அடையத் தொடங்கியது.

நம்முடைய நெருங்கிய உறவினரான மனிதக் குரங்குகளுக்கு இந்த முதுகு வலிப் பிரச்சினை இல்லை. ஏனென்றால், அது நான்கு கால்களால் நடக்கிறது. அதனால் அதன் உடல் பாரம் முழுவதும் முதுகெலும்பை அழுத்துவதில்லை.

கீழ் முதுகுவலி என்பது உலகில் பொதுவாகக் காணப்படுகிறது. அதாவது 10 பேர்களில் எட்டு பேர்களுக்கு இந்த உபாதை இருக்கிறது. முதுகுவலியைப் பற்றிப் பல தவறான செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. முதுகுவலியைக் குணப்படுத்தும் முறைகளிலும் பலவிதக் குழப்பங்கள் இருந்து வருகின்றன. இந்தக் கட்டுரை, சில எளிமையான முறைகளை வகுத்துத்தந்து செயல் படுத்த உதவுகிறது.



**டாக்டர் எஸ். சிவமுருகன்.**
**டாக்டர் எஸ். ரவிசுப்ரமணியன்**
**டாக்டா சவுந்தரபாண்டியன்**



**எப்போதும் நேராக நிமிர்ந்து அமரப் பழகுங்கள், முதுகைக் கூனி வளைத்து உட்காருவதைத் தவிருங்கள்**

நாம் நேராக நிமிர்ந்து நிற்கும்போது நமது தண்டுவடம் இயற்கையாக மூன்று வளைவுகளை மட்டுமே கொண்டிருக்கும். இந்த வளைவுகளைக் கழுத்துப்புறுடியில் உள்ள தசைகள், முதுகுத்தசைகள், வயிற்றுப் பகுதியிலுள்ள தசைகள் தாங்கிப் பிடித்துக் கொள்கின்றன.

நிமிர்ந்து நேராக நிற்கும் செய்கையால் இந்த மூன்று தசைகளும் சரியானபடி செயல்படுகின்றன. சுவர் ஓரத்தில் நின்று, நீங்கள் கூட உங்கள் முதுகைவைத்து இதைச் சோதித்தறியலாம். அப்படி நீங்கள் நிற்கும் போது, உங்கள் முதுகுக்கும் சுவருக்கும் இடையில் குறைந்த அளவே இடைவெளி இருக்கும். அந்த இடைவெளி அதிகமாக இருக்குமேயானால் உங்களுக்குக் 'கூன்முதுகு' வந்துவிட்டது என்று உணரவேண்டும்.

இந்தப் பிரச்சினை பெருவாரியான இளைஞர்களுக்குத் தங்களின் இளமையின் தொடக்க காலத்தில் வந்துவிடுகிறது. இளம் பிராயத்தினருக்கு - குறிப்பாக உயரமான ஆண்கள், பெண்கள் தங்கள் உயரத்தைக் குறுக்கிக் கொண்டு நின்று பழகுவதால் இந்தக் கூன் முதுகு வந்துவிடுகிறது. பொதுவாகக் குள்ளமானவர்கள் நேராக நிமிர்ந்து நின்று தாங்கள் உயரமாக இருப்பதாகக் காட்டிக் கொள்ள முயற்சிப்பதால் அவர்களில் இந்தப் பிரச்சினை மிகவும் குறைவு. நாம் உடம்பை நேராக வைத்துக்கொள்வதன்

மூலம் கூன்முதுகைத் தவிர்க்கலாம்.

**உங்கள் எடையைக் குறையுங்கள்**
**தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள்**

பானை வயிறும், முதுகு வலியும் நெருங்



கிய நண்பர்கள் என்பது பழமொழி. உடற் பயிற்சி செய்யாமல் சோம்பி இருத்தல், அளவுக்கு அதிகமாக உண்ணுதல் ஆகிய இரண்டு செயல்களும் உங்களின் மோசமான எதிரிகளாவர். தொடர்ந்து முறையான உடற்பயிற்சி செய்வதன் மூலம் நமது உடல் எடையைச் சீராக்கிக் கொள்ளலாம். குறிப் பாக முதுகுப் பகுதிகளுக்கெனத் தனியாக ஒரு சில உடற்பயிற்சிகளைச் செய்து வர வேண்டும். படிப்படியாக அந்த உடற் பயிற்சி களை அதிகரித்துக் கொண்டே வரலாம்.

பெரும்பாலோர் முதுகு வலி வந்த பின்னரே இத்தகைய உடற்பயிற்சிகளைச் செய்யத் தொடங்குகின்றனர். இது தவிர்க் கப்பட வேண்டும். அதாவது. வலி எடுக்கும் போது எந்த உடற்பயிற்சியும் செய்யக்கூடாது.

**படுத்து ஓய்வு எடுப்பது முதுகு வலியைக் குறைக்கும்**

படுத்தபடியே இருந்து நல்ல ஓய்வு எடுக்கும்போது முதுகு வலி குறைந்துவிடும். பெருவாரியான நபர்களுக்கு ஒழுங்கற்ற அசைவுகளினால் வலி வருகிறது. இன்னும் சிலர் அசையாமல் இருந்துவிடுவதாலேயே முதுகு வலி வந்துவிடுகிறது. இதற்குக் காரணம் தசைகளின் பிடிப்புதான் என்கிறார்கள். இதற்கு இளஞ்சூட்டு ஒத்தடம் கொடுத்தால் வலி குறைந்துவிடும். அல்லது தசையை 'மசாஜ்' செய்யலாம். அல்லது 'இபுபுருபன்' போன்ற வலிபோக்கும் மாத்திரைகளை எடுத்துக்கொள்ளலாம்.

**டாக்டரை ஏன் அழைக்கவேண்டும்?**

முதுகுவலி கொஞ்சம்கூட குறைய வில்லை என்றால் ஒரு நல்ல டாக்டரிடம் உடம்பைக் காட்டவேண்டும். முதுகுவலி அல்லது மிகவும் கடுமையான எந்த வலியாக இருந்தாலும், மூன்று வாரங்களுக்குள் குறையவேண்டும். அப்படி வலி குறைய வில்லையென்றாலோ, கால்வலி, இருமல் தும்மல் அல்லது வலி அதிகரித்தாலோ நீங்கள் அவசியம் டாக்டரை அணுக வேண்டும். இந்த வலி அறிகுறிகள் உங்கள் முதுகுத் தண்டு உள்ள அடுக்கு எலும்புகள் பிசகி இருக்கலாம் என்பதை அறிவுறுத்தக் கூடியவையேயாகும். தண்டுவடத்தில் ஒன்றின் மேல் ஒன்றாக இவை அடுக்கப்பட்டுள்ளன. அடுக்கு எலும்புகள் அதிர்வுகளைத் தாங்கக் கூடியவை. அவைகளில் மெல்லிய சளி போன்ற ஒரு பொருள் நடுவே இருக்க அதைச் சுற்றிலும் நல்ல உறுதியான எலும் பால் சுற்றி அமைக்கப்பட்ட ஒரு பகுதியும் உள்ளன. நாம் கனமான பொருள்களைத் தாறுமாறாகக் குனிந்து தூக்கும்போது முதுகுவடத்திலுள்ள மெல்லிய சளி போன்ற பொருளை அழுத்துகிறது. அழுத்தம் தாங் காமல் அது பிதுங்கிக் கொண்டு வெளியே வருகிறது. இதனால் அதன் அருகில் உள்ள நரம்பு மண்டலம் தாக்கப்பட்டு கால்களில் வலி உண்டாகிறது.



இன்னொரு வகையிலும் முதுகுவலி உண்டாகிறது. அதாவது, முதுமையினால் தண்டுவடத்தின் மையப் பகுதியிலுள்ள மெல்லிய சளிப்பகுதியிலுள்ள ஈரத்தன்மை காய்ந்துவிடுவதால், எலும்புகள் கடினமாகி முதுகுத் தண்டு குனிய மறுக்கிறது. இதனால் முதுகுவலி ஏற்படுகிறது. இதற்கு ஓஸ்டேோர்த் ராசிஸ் (Ostearthrosis) என்று பெயர்.

**இந்த வலிகளிலிருந்து தீர்வு காண்பது எப்படி?**

**பயிற்சி - 1**

அ) படுக்கையில் இருந்தபடி ஓய்வு எடுத்தல்.

ஆ) ஒத்தடம் கொடுத்தல்.

இ) மருந்துகள் உட்கொள்வதன் மூலம்.

சில நோயாளிகளுக்குப் 'படுக்கை ஓய்வு' கொடுப்பதற்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். நவீன கருவிகள் வந்துவிட்ட இக்காலத்தில் பெரும்பாலான வலிகளைப் போக்கிவிட முடிகிறது.

**பயிற்சி - 2**

எப்போதும் நிமிர்ந்த நேரான நடை, நிமிர்ந்து அமர்தல் போன்றவைகளினாலும், முறையான உடற்பயிற்சியினாலும் முதுகு வலியைப் போக்கமுடியும்.

**பயிற்சி - 3**

வீடு அல்லது பணிபுரியும் இடங்களில் சிறுசிறு மாற்றங்களைத் தொடர்ந்து செய் வதன் மூலம் முதுகுத் தண்டின் பளுவைக் குறைத்து வலியைப் போக்கலாம். தொடர்ந்து உடற்பயிற்சியும் செய்து வரவேண்டும்..

**மேற்சொன்ன எல்லா வழிமுறைகளுமே கைகொடுக்கவில்லை என்றால் அறுவைச் சிகிச்சைதான் வழி**

மேற்சொன்ன எல்லா வழிமுறைகளும் சரிப்பட்டு வரவில்லை என்றால், அறுவைச் சிகிச்சை செய்துகொள்வதைத் தவிர வேறுவழியில்லை. முதுகுவலிக்காக ஒரே ஒரு சதவீத நோயாளிக்கே அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. அதுவும், தண்டுவடத்தில் ஏதாவது கட்டி ஏற்பட்டால் - அல்லது நரம்பு



மண்டலம் பாதிக்கப்பட்டு அதனால், சிறு நீர்ப்பைக் கோளாறு தோன்றினால் எல்லாப் புறமருத்துவ முறைகளும் தோல்வி யுற்றால் மட்டுமே அறுவைச் சிகிச்சை செய்யப்படு கிறது. இந்த அறுவைச் சிகிச்சையால், உடைந்த அடுக்கு எலும்புகள் சரிசெய்யப்படுகின்றன. இது எளிமையான ஒரு அறுவைச் சிகிச்சை தான். இந்தச் சிகிச்சைக்குப் பிறகு, பெரும் பாலான நோயாளிகள் கால் வலி குணமா வதை எதிர்நோக்கலாம். மற்றொரு அறுவைச் சிகிச்சைக்கு ஸ்பாண்டிலோலிதீசிஸ் (Spondy-lolithesis) என்று பெயர்.

அதாவது, முதுகெலும்பில் உள்ள அடுக்கு எலும்புகள் இயல்புக்கு மாறாக நகர்ந்தாலோ அல்லது அசையாமல் இறுகிவிட்டாலோ இந்த அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது.

**மாற்றுச் சிகிச்சை முறைகள்**

முதுகுவலிக்கு வேறு மாற்றுச் சிகிச்சை முறைகளில் தீர்வுகாணமுடியும் என்று சிலர் நம்புகின்றனர். ஆனால் அறிவியல் முறைப் படி அவைகள் நிரூபிக்கப்படவில்லை. இது போன்ற மாற்றுச் சிகிச்சைகள் செய்பவர்கள்



கைதேர்ந்த நிபுணர்களாக இல்லாவிடில் விளைவுகள் விபரீதமாகலாம். பொதுவாகக் கழுத்துப் பகுதிகளில் உள்ள நரம்பு மண்டலத்தை முடுக்கிவிடுவதன் மூலம் இந்தச் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. ஆனால், அதிகமான முதுகெலும்புத் தண்டுவடம் பாழ்படுவது கழுத்துப்புற நரம்புகளில் ஏற்படும் பாதிப்பு களால்தான் என்று கண்டறியப் படுகிறது. இருப்பினும், நிறைய நோயாளிகள் இந்த மருத்துவ முறையில் நல்ல பலனையும் கண்டுள்ளனர்.

பயமே பல நோய்களுக்கு அடிப்படையாக இருக்கிறது. குறிப்பாக முதுகுவலிக்கு இது பெரிதும் காரணமாக இருக்கிறது. இதனால்.



சிலர் தங்களின் அன்றாட நடவடிக்கைகளைக்கூட முடக்கிக்கொண்டு வருகின்றனர். இன்றும் சிலர் ஏதோ வழவழப்பான முட்டையின் மேல் நடைபோடுவது போல் பயந்து நடக்கின்றனர்.

கவலை, மேலும் மேலும் நோயை அதிகப்படுத்துகிறது. உணர்ச்சி மேலீட்டால் ஏற்படும் இறுக்கம், முதுகுத் தசைகளைக் கடுமையாக்குகிறது. இதனால் கழுத்துவலி, முதுகுவலி போன்றவை ஏற்படுகின்றன. உங்களில் பலர் இந்தக் கட்டுரையைப் படிக்கும்போது உடற்பயிற்சிகள் மற்றும் முதுகுவலி வருவதற்கான காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஆனால், எத்தனைப் பேர் அதை அப்படியே கடைப்பிடிக்கப் போகிறோமோ தெரியவில்லை. ஆனால் பெரும்பான்மையானவர்கள் இதை அப்படியே படித்து, பிறகு விட்டுவிடுவார்கள். மற்றவர்கள், தாங்கள் அமர்கிற, நடக்கிற நிலையைச் சரிசெய்து கொண்டு உடற்பயிற்சிக்காக நேரம் ஒதுக்கிச் செய்வதால் அவர்களுக்குக் கழுத்துவலியோ அல்லது முதுகுவலியோ வர வாய்ப்பில்லை. இதில்



எந்தப் பிரிவில் நீங்கள் வருகிறீர்கள்? உங்களுடைய முடிவுக்கே விட்டுவிடுகிறோம்!

**நன்றி: 'இந்து' நாளிதழ்**

□□

## ஒரே வேலை
## ஒரே கூலி

விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண் தொழிலாளிகளுக்கும் ஆண் தொழிலாளிகளுக்கு இணையாக ஊதியம் வழங்க தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று அனைத்து மாநில அரசுகளையும் வலியுறுத்துவோம் என்று மத்திய தொழிலாளர் நலச் செயலாளர் அண்மையில் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் அண்மையில் நடைபெற்ற 90 நாடுகளிலிருந்து வந்து கலந்து கொண்ட பன்னாட்டு அளவிலான மாநாட்டில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள ஆண், பெண் இரு பாலாருக்கும் சமமான ஊதியம் வழங்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.





# எங்கள் ஊர் பிரச்சினை

### பிரச்சினை

எங்கள் ஊரில் ஆரம்ப சுகாதார நிலயக் கட்டிடம் கட்டப்பட்டு 5 வருடங்களுக்கு மேல் திறக்கப்படாமலே உள்ளது. ஊர் மக்கள் அனைவரும் நோய் கண்டுவிட்டால் அதனைக் குணப்படுத்த சுமார் 5 கி.மீ. தூரம் செல்லவேண்டி உள்ளது. மேலும் அப்படி செல்லும்போது பேருந்தில் பயணம் செய்ய வேண்டி உள்ளதால் பேருந்திற்கு காத்து நிற்க வேண்டியுள்ளது. ரோடு சரியில்லாததால் பேருந்து ஒரு சமயம் தவறாமல் போய் விடுகிறது. அல்லது காலம் கடந்து வருகிறது. எனவே சரிவர ஆரம்ப சுகாதார நிலயம் செல்ல முடியாமல் போய்விடுகிறது. எனவே தாங்கள் எங்கள் ஊரில் கட்டப் பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலயம் உடனே திறக்க வழி செய்ய வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள் கிறேன்.

அ.பழனிச்சாமி,
டி.புதுப்பாளையம்
விழுப்புரம்-இராமசாமி
படையாட்சியார் மாவட்டம்.

### தீர்வு

கடிதத்தில் கேட்டுள்ளபடி இடையூர்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உள்ளிட்ட புதுப்பாளையம் துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இந்தத் துணை சுகாதார நிலையத்தில் சுகாதார செவிலியர் திருமதி அலைஸ் கனகமணி அவர்கள் 16.1.90 முதல் தாய்சேய் நலப்பணிகளைச் செய்து வருகிறார்.

துணை சுகாதார நிலையத்திலேயே தங்கி தம் பணிகளைச் செய்ய சுகாதார செவிலியர்களுக்குத் தக்க அறிவுரை வழங்குமாறு விழுப்புரம் துணை இயக்குநர் அவர்கள் ஏற்கனவே கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

இயக்குநர்,
பொது சுகாதாரம் மற்றும்
நோய் தடுப்பு மருந்து
இயக்ககம், சென்னை-6.

### பிரச்சினை

நான் கலசாங்குடி கிராமம், செம்பனூர் பஞ்சாயத்து காளையார் கோவில் ஒன்றியம் பசும்பொன் மாவட்டம், சிவகங்கை வட்டத்தைச் சேர்ந்தவன். எங்கள் ஊரில் சுமார் 250 பேர் வாழ்கின்றனர். எங்களின் முக்கிய கோரிக்கை குடிதண்ணீர் பிரச்சினையாகும். எங்கள் ஊரில் ஒரு அடி குழாய் மட்டுமே உள்ளது. எங்கள் ஊரில் ஒரு பள்ளிக்கூடம் உள்ளது. அந்தப் பள்ளிக்கூடக் குழந்தைகள் மதிய உணவு உண்டு கை கழுவுவதற்கும், குடிப்பதற்கும் ஒரு கிலோ மீட்டர் சென்று அங்குள்ள அடி குழாயைப் பயன்படுத்துகின்றனர். எனவே எங்களின் பள்ளிக்கருகில் ஒரு அடிகுழாய் ஒன்று போட்டுத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம். அதோடு தெரு விளக்குகள் மூன்று சுமார் 4 ஆண்டுகளாக சரி செய்யப் படாமல் உள்ளது. எனவே, தெரு விளக்கைச் சரி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எஸ். நெடுஞ்செழியன்
கலசாங்குடி கிராமம்
சிவகங்கை 630 561

### தீர்வு

செம்பனூர் ஊராட்சி கலசாங்குடி கிராமத்தில் தெருவிளக்கு மூன்று உள்ளன. அதில் 2 தெருவிளக்கு நன்றாக எரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்படி கிராமத்தில் ஒரு அடிகுழாய் நல்ல நிலையில் இயங்குகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம்,
காளையார்கோவில்



## பிரச்சினை

தரங்கை வட்டம், காலமநல்லூரில் மின்சாரம் சரியாக கிடைப்பது இல்லை. காரணம் குறைந்த மின் அழுத்தம். வீட்டில் குழல் விளக்குகள் எரிவதே இல்லை. கம்பி மட்டும் பழுத்து பல்புகள் எரியும். தெரு விளக்குகள் எரிந்து 10 ஆண்டுக்கு மேலாகி விட்டது. தெருக்களில் இருள் சூழ்ந்து தெருக்களில் பல சிரமங்களும், நடக்கக்கூட முடியாத நிலையும் உள்ளது. விஷ ஜந்துக்கள் தொல்லை வேறு. நாங்கள் பல முறை இது பற்றி முறையிட்டும் முறையான நடவடிக்கை இல்லை. எங்கள் பகுதிக்கு சீரான மின்சாரம் கிடைக்க ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஜி. பக்கிரிசாமி,
இளைஞர் நற்பணி மன்றம்
மன்றம், காலமநல்லூர்.

## தீர்வு

**மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள காலமநல்லூர் செல்லும் மின்பாதை 5 கம்பிகளாக மாற்றப்பட்டு மின் சப்ளை சரி செய்யப்பட்டுள்ளது. மேலும் குறைவான மின்னழுத்தக் குறையை நீக்குவதற்காக ஒரு புதிய 63 கே வி ஏ மின்மாற்றி அமைக்க அனுமதி பெறப்பட்டுள்ளது. விரைவில் பணி மேற்கொள்ளப்பட்டு மேற்கண்ட குறை நிவர்த்தி செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.**

பொறிஞர் சி. சுப்ரமணியமன், பி.ஈ.,
எப்.ஐ.ஈ., சி. இன்ஜினியரிங்
மேற்பார்வை பொறியாளர்,
நாகை காயிதே மில்லத் மின்
பகிர்மான வட்டம்
நாகப்பட்டினம்.

## பிரச்சினை

எங்களது ஊரான பாரூர் கிராமம் சுமார் 7000 மக்கட்தொகைக் கொண்டது. அரசு மேல்நிலைப்பள்ளி, அரசு மருத்துவமனை, காவல்நிலையம், சார்பதிவகம், இந்தியன் வங்கி, அஞ்சல் நிலையம், பொதுப்பணித் துறை அலுவலகம் ஆகியவைகளைக் கொண்டதாகும். இருப்பினும் அடிப்படை வசதியான பேருந்து வசதி இதுவரை கிடையாது. மேலும் எங்களது போச்சம் பள்ளி, வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் செல்ல பாரூர், கீழ்குப்பம், புங்கம்பட்டி, மோட்டுப்பட்டி, பண்ணந்தூர் இதர பல கிராம மக்கள் அவதிப்படுகின்றனர். வட்டம் பிரித்து ஓராண்டு ஆகியும் அலுவலகம் சென்றுவர ஒரு பேருந்து வசதிகூட இல்லாத நிலைமையில் உள்ளோம். இதை பலமுறை எடுத்துக்கூறியும் எங்கள் குறை நிறைவேற்றப்படவில்லை. எனவே தாங்கள் மேற்கண்ட வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க உதவிபுரியும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

பாரதியார்
பாரூர் தருமபுரி மாவட்டம்

## தீர்வு

**மனுவில் கோரியுள்ளபடி பாரூர் கிராமத்தின் வழியாக கீழ்க்கண்ட பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.**

| | | |
|---|---|---|
| **1. தருமபுரி - பாரூர்** | **தடம் எண்.23** | **8 நடைகள்** |
| **தருமபுரி மோட்டுப்பட்டி வழி பாரூர்** | | **4 நடைகள்** |
| **2. தருமபுரி - புங்கம்பட்டி** | **தடம் எண். 23ஏ** | |
| **3. கிருஷ்ணகிரி - பாரூர்** | **தடம் எண். 31** | **8 நடைகள்** |
| **4. கிருஷ்ணகிரி - பாரூர்** | **தடம் எண். 47** | **6 நடைகள்** |
| **5. கிருஷ்ணகிரி - பாரூர்** | **தடம் எண். 50** | **4 நடைகள்** |
| **6. ஊத்தங்கரை - பாரூர் வழி கீழ்குப்பம், போச்சம்பள்ளி** | **தடம் எண். 50** | **4 நடைகள்** |
| **7. தருமபுரி திருப்பத்தூர் வழி அரசம்பட்டி, பாரூர், நாகரசம்பட்டி, போச்சம்பள்ளி** | | **6 நடைகள்** |
| **8. தருமபுரி திருப்பத்தூர் வழி அரசம்பட்டி, பாரூர், கீழ்குப்பம், போச்சம்பள்ளி** | | **4 நடைகள்** |

**எனவே பேருந்து வசதி கோரியுள்ள பாரூர், கீழ்குப்பம், புங்கம்பட்டி மற்றும் மோட்டுப்பட்டி கிராமங்களுக்கு பாரூரிலிருந்து வட்டாட்சியர் அலுவலகம் போச்சம்பள்ளிக்கும் அன்னை சத்யா போக்குவரத்துக்கழக பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன என்பதை அன்புடன் தெரிவித்துகொள்கிறோம்.**

மேலாண்மை இயக்குநர்,
அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம்
தருமபுரி.

## பிரச்சினை

எனது கிராமத்தில் சுமார் 10 ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர். இதில் 75 சதவிகிதம் மக்கள் கல்வி அறிவு பெற்றவர்கள். நூல்நிலையம் இல்லாமல் கஷ்டப்பட்டு வருகிறோம். என் போன்ற பல இளைஞர்கள் படித்துவிட்டு வேலைவாய்ப்பைப் பெற இயலாமல் உள்ளது. காரணம் எங்கள் ஊரில் தனியாக மக்கள் அதிகமாக தமிழ்ப் பத்திரிகைதான் வாங்குகிறார்கள். ஆங்கில நாளேடு யாரும் வாங்குவதில்லை. ஆங்கில நாளேட்டில்தான் படித்தவர்களுக்கு அதிக விபரம் கிடைக்க உள்ளது. தயவு செய்து எங்கள் ஊரில் நூல்நிலையம் அமைக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அ. அனந்தவேலு
வாரியங்காவல்
செந்துறை வட்டம்
திருவள்ளூர்

## தீர்வு

**5000க்கும் மேற்பட்ட மக்கட்தொகை கொண்ட கிராமங்களில் ஊர்ப்புற நூலகம் திறக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால் இவ்வரசாணையில் மேற்குறிப்பிட்ட மேல்நாரியப்பனூர் கிராமம் இடம் பெறவில்லை.**

**எனினும் அவ்வூர்ப் பொதுமக்கள் கீழ்க் காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து தரும் பட்சத்தில், பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும்.**

**1. நூலகம் உடனடியாகத் திறக்க வாடகை யற்ற இலவசக் கட்டடம்.**

**2. பிற்காலத்தில் இந்நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டக் குறைந்தபட்சம் 5 செண்ட் காலிமனை.**

**3. குறைந்தபட்சம் 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.**

**4. குறைந்தபட்சம் ரூ.2000 மதிப்புள்ள தளவாடங்கள் தரப்பட வேண்டும்.**

**5. குறைந்தபட்சம் ரூ.1000 செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.**

**மேற்கூறிய நிபந்தனைகளை வாரியங்காவல் கிராமப் பொதுமக்கள் நிறைவேற்றித் தரும் பட்சத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்ட நூலக அலுவலருடன் தொடர்பு கொண்டால், பகுதி நேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இரா. கண்ணன்,
பொது நூலக-இயக்குநர்
சென்னை - 2

## பிரச்சினை

பழனி நகரில் செயல்பட வேண்டிய 'பொதுசுகாதார துறை துணை இயக்குநர் அலுவலகம்' இதுவரை 60 கி.மீ. தொலைவில் உள்ள திண்டுக்கல் நகரில் செயல்பட்டு வருகிறது. பழனி கோட்டத்தில் செயல்பட்டு வரும் 30 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 168 துணை சுகாதார நிலையங்களின் பணிகளை மேற்பார்வையிட்டு, நோய்த் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை கவனிக்க வேண்டிய கடமை இந்த அலுவலகத்திற்கு உண்டு. ஆனால், இந்த முக்கிய அலுவலகம், பழனி கோட்ட எல்லைக்குள் செயல்படாமல் தொலைவிலிருந்து செயல்படுவதால், சரியான முறையில் ஆரம்ப சுகாதார நிலையங்களும் துணை சுகாதார நிலையங்களும் பணியாற்றுவதில்லை. இது குறித்து இப்பகுதி மக்களின் பல முறையீடுகளுக்கு பிறகு, மேற்படி அலுவலகம் பழனிக்கு மாற்றப்பட வேண்டும் என்று 4.1.96 தேதியில் அரசு உத்தரவிட்டது. (G.O. (D) No.15, dated 4.1.1996, Health and Family Welfare Department) அரசாணை பிறப்பிக்கப்பட்டு ஒன்பது மாதங்களுக்குப் பிறகும், இன்னும் அந்த பழனி நகருக்கு மாற்றப்படாமல் தொடர்ந்து திண்டுக்கல் நகரிலேயே இருந்து வருகிறது. சில அரசு அலுவலர்களின் வசதிக்காக, பொதுமக்கள் நலன் புறக்கணிக்கப்பட்டு வருவது வருந்தத்தக்கதாக உள்ளது. எனவே இது குறித்து உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று, அரசு உத்தரவுக்கேற்ப பொது சுகாதாரத்துறை துணை இயக்குநர் அலுவலகத்தைப் பழனி நகருக்கு மாற்றிட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நா. புகழேந்தி, ஜோதி
ஆயக்குடி அஞ்சல், பழனி வட்டம்

## தீர்வு

**பழனி துணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலரின் அலுவலகம் கீழ்கண்ட முகவரியில் 27.11.96 முதல் செயல்பட்டு வருகிறது என தெரிவித்துக் கொள்கிறேன்.**

துணை இயக்குநர்
நலப்பணிகள் அரசு மருத்துவமனை வளாகம்
பழனி, திண்டுக்கல் அண்ணா மாவட்டம்,
**இயக்குநர்:** பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து

## சாகித்ய அகாதமி விருது பெற்ற

# அசோகமித்திரன்

## நேர்காணல்

**தமிழரசு:** பணத்துக்காக எழுதப்படும் இக்காலத்தில் தமிழ் மணத்துக்காக, 1996-ஆம் ஆண்டின் சாகித்ய அகாதமி விருது பெற்ற தங்களுக்குத் தமிழரசு வாசகர்கள் சார்பாக வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களின் எந்த நூலுக்காக அந்த விருது கிடைத்துள்ளது?

**அசோகமித்திரன்:** 'அப்பாவின் சிநேகிதர்' என்ற சிறுகதைத் தொகுப்புக்கென அறிவிப்பு வந்தது. ஆனால், இத்தகைய பரிசுகள் ஆயுட்காலப் பங்களிப்பைக் கவனித்தே தரப்படுகிறது என நாம் கொள்ள வேண்டும்.

**தமிழரசு:** இதற்கு முன் தங்கள் எழுத்துக்கள் அங்கீகரிக்கப்பட்டு பரிசுகள், விருதுகள் பெற்றிருக்கிறீர்களா?

**அசோகமித்திரன்:** கடந்த பத்து ஆண்டுகளில் சில பரிசுகள், விருதுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. சாந்தோம் விருது, நல்லிணக்க விருது, இலக்கியச் சிந்தனை விருது, அட்சர விருது முக்கியமானவை.

**தமிழரசு:** தங்களுக்கும், உங்கள் எழுத்துக்கும் வயது எவ்வளவு ஆகிறது?

**அசோகமித்திரன்:** 1953ல் நான் எழுதிய ஒரு மணி நேர வானொலி நாடகமாகிய 'அன்பின் பரிசு' என் முதல் தமிழ்ப் படைப்பு. முதல் தமிழ்ச் சிறுகதையாகிய 'நாடகத்தின் முடிவு' 1957-ல் வெளிவந்தது. முதல் நாவலாகிய 'கரைந்த நிழல்கள்' 1967-ல் வெளிவந்தது. என் தொடக்க காலத்தில் அகிலன், நா.பா., மு.வ. முதலானோர் பிரதான உரைநடை எழுத்தாளர்களாக விளங்கினார்கள்.

**தமிழரசு:** சிலர் தங்கள் எழுத்துக்கள் வாசகருக்கு ஒரு பாடமாக விளங்க வேண்டும், என்கிற ஒரு நோக்கையோடு எழுதுகிறார்கள். இன்னும் சிலர் போக்கு வேறு மாதிரியாக இருக்கிறது. நீங்கள் எந்த வட்டத்துக்குள் வருகிறீர்கள்?

**அசோகமித்திரன்:** அனைத்து மனிதரும் மதிக்கத்தக்கவர்கள், ஒவ்வொரு மனிதனும் கவனம் பெற வேண்டும் என்பது என் வாழ்க்கை நோக்கு. இச்செய்தி என் கதைகள் மூலம் பிறருக்குச் சென்றடைந்தால் மகிழ்ச்சி அடைவேன்.

**தமிழரசு:** உதாரணமாக, சிலர் எழுதுகிற எழுத்துக்கள் யாருக்குமே புரிவதில்லை. இன்னும் சிலரின் படைப்புகளில் விரசங்கள் மலிந்து கிடக்கின்றன. வேறு சிலர் ஆங்கிலச் சொற்களைக் கலந்தால்தான் தங்கள் எழுத்து நிறைவு பெறுகிறது என்பது போல் எழுதுகிறார்கள். இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**அசோகமித்திரன்:** எழுத்தின் வீச்சு சில ஆயிரம் வாசகர்களுடன் அடங்கி விடுகிறது. கோடிக் கணக்கில் மக்களை எட்டிச் செல்வாக்கு பெற்ற சினிமாத் துறையில் தாங்கள் குறிப்பிட்டிருப்பது போன்ற படைப்பாளிகள் அரசால் பரிசு, விருது, பட்டம், பொற்கிழி தரப்படுகிறார்கள். பத்திரிகைகளாலும் சபாக்களாலும் பாராட்டு விழா எடுக்கப்படுகிறார்கள்.

**தமிழரசு:** இலக்கியத்தின் இன்னொரு வடிவமான இன்றைய சினிமாவின் போக்கு பற்றி உங்கள் கருத்து. உங்களின் ஒரு கதைகூட தொலைக்காட்சியில் படமாக்கப்படு வதாகச்செய்திகள் வந்துள்ளன.



**அசோகமித்திரன்:** உண்மைதான். இரு சிறுகதைகள் தொலைக் காட்சியில் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் சினிமா, இலக்கியத்தின் இன்னொரு வடிவம் அல்ல என்பது என் கருத்து. அந்த வடிவத்துக்கு என் படைப்புகள் ஏற்றதல்ல என்று தான் நான் நினைக்கிறேன்.

**தமிழரசு:** இன்றைய தமிழ் சினிமாப் படங்கள் பல மொழிகளுக்கு மொழி மாற்றம் செய்யப்படுகிற அளவுக்கு வளர்ந்து வருகின்றன. இதுபோல், இலக்கியத்தில் வளர்ச்சி இருக்கிறதா- திருக்குறள், பாரதி, புதுமைப் பித்தன் போன்றவர்களின் படைப்புகளைப் போல்.

**அசோகமித்திரன்:** தமிழ் சினிமாவில் தொழில் நுணுக்கம் வளர்ச்சி பெற்றிருக்கிறது. இந்த வளர்ச்சி மிகச் சிறிய நாடுகளாகிய பிலிப்பைன்ஸ், நியுசிலாந்து,ஹாங் காங் போன்ற இடங்களிலும் இன்னும் அதிக அளவில் காணப்படுகிறது. உதிரியாகப் பல நவீன தமிழ்ச் சிறுகதைகளும், கவிதைகளும் பல அயல் பல்கலைக்கழக வெளியீடுகளில் இடம் பெற்றிருக்கின்றன.

**தமிழரசு:** ஒரு இரவீந்திரநாத் தாகூருக்குப் பிறகு நோபல் பரிசு வாங்கும் அளவுக்கு வேறொருவர் தோன்றவில்லையே, ஏன்?

**அசோகமித்திரன்:** நோபல் பரிசுக் குழுவினர் கணிப்புக்கு ஏற்ற படைப்பு இங்கு தோன்றவில்லை என்று தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**தமிழரசு:** இன்று தமிழகத்தில் மலர்ந்துள்ள புதிய அரசு, இது வரை இல்லாத வகையில் புதிதாய் தமிழ், பண்பாடு வளர்ச்சிக்கென ஒரு புதிய அமைச்சகத்தையே தந்துள்ளது பற்றி?

**அசோகமித்திரன்:** நல்ல முயற்சியே. சோவியத் அரசின் செயல்பாடுகளும், அனுபவங்களும் இவ் விஷயத்தில் நினைவுகூரத்தக்கவை.

**தமிழரசு:** நீங்கள் படைத்த பாத்திரங்களுடன் கைகோர்த்து' உலா போவதுண்டா? அவர்களில் உங்கள் மனதில் தங்கிவிட்ட பாத்திரத்தைப் பற்றிச்சொல்லுங்களேன்?

**அசோகமித்திரன்:** பாத்திரங்களோடு ஒன்றிப்போகும் பழக்கம் எனக்கில்லை. எனக்குப் பிடித்த பாத்திரங்கள் பற்றித்தான் நான் எழுதுகிறேன்.

**தமிழரசு:** வளர்ந்துவரும் எழுத்தாளர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?

**அசோகமித்திரன்:** இலக்கிய மைல் கற்கள் எம்மொழியினுடைய தாயிருந்தாலும் தேடிப்பிடித்துப் படிக்க வேண்டும். 'தமிழரசு' மூலமாகத்தமிழ்நாட்டின் வாசகர்களை எட்டுவதில் மட்டற்ற பெருமை அடைகிறேன். என் படைப்புகள் அவர்களுக்குச் சிறிதளவாவது மகிழ்ச்சி அளிக்குமானால் நான் மனநிறைவு அடைவேன்.

**தமிழரசு:** கடைசியாக, எத்தனையோ வருமானம் தரக் கூடிய தொழில்கள் இருக்கும் போது, சொற்ப அளவே வருமானம் வரக்கூடிய இந்த எழுத்தை பிடித்துக் கொண்ட உங்களுக்கு வீட்டில் எந்த அளவுக்கு வரவேற்பு இருக்கிறது?

**அசோகமித்திரன்:** சில விஷயங்களில் நாம் 'பழங்கணக்கு' பார்க்கக்கூடாது.

**தமிழரசு:** நன்றி. வணக்கம்.

●●

நேர்காணல்: எம்.வி.எம். அசோகன்

சிறுகதை



# மௌனம்

அசோகமித்திரன்

மால்கம் ஸ்காட் அன்றும் எரிச்சல் மிகுந்துதான் இருந்தான். அவன் இந்தியாவுக்கு வந்து இரு மாதங்களுக்குள் நிறைய ஏமாற்றங்கள்.

இங்கிலாந்திலிருந்து கப்பலில் பம்பாய் வந்திறங்கி மதராஸூக்குச் சௌகரியமாகவும், சீக்கிரமாகவும் இரயிலில் போய்ச் சேர்ந்துவிடலாம் என்றிருந்தான். நான்கு வாரக் கப்பல் பயணத்திற்குப் பிறகும் அவனுடைய மனைவியால் உண்ட உணவு வயிற்றில் தக்க வைத்துக்கொள்ள முடியவில்லை. பம்பாயில் பெருவாரி நோய் என்று கப்பல் இலங்கைக்குத் திருப்பப்பட்டது. அங்கிருந்து மதராஸ் வந்தது.

பதவி உத்தரவு பெற்றுக் கொள்ள ஸ்காட் சென்னைக் கோட்டைக்குச் சென்றபோது, கவர்னர் வெளியூர் சென்றிருந்தார். அவர் திரும்பி வந்தபோது, ஸ்காட்டுக்கு டிபுடி கலெக்டர் பதவி தான் தரப்பட்டது. அதுவும் திருநெல்வேலி ஜில்லா. தம்பதியுடன் அங்குப் போய்ச் சேர்ந்தபோது பேய் மழை. முதல் நாளன்றே படுக்கையறையில் ஒரு சடைப் பூராண் தென்பட்டது. அந்தப் பயத்தில் ஸ்காட்டின் மனைவி ஒரு வாரம் சுரமாகப் படுத்துவிட்டாள்.

பதினைந்து நாட்கள் கழித்துக் கிடைத்த சமையற்காரன் மகிம்தாஸ் மூக்கைச் சிந்தி அடுப்பில் போடும் பழக்கம் கொண்டவனாக இருந்தான். அது ஒவ்வொரு முறையும் அடுப்பில்தான் விழும் என்று என்ன நிச்சயம்?

ஊர்த் தெருவெல்லாம் ஒரே புழுதியும், சாணமும் வீட்டில் ஒரு பங்காக் (பழங்கால) கூரை விசிறி தான். படுக்கையறையில் புழுங்கித் த்விக்க வேண்டும். ஒரே திருப்தி கரமான விஷயம் ஸ்காட்டுக்குக் கொடுக்கப்பட்ட மூன்று குதிரைகளும் நல்ல குதிரைகள். இரண்டு சாரட்டு வண்டிக்கு மூன்றாவது டிபுடி கலெக்டர் இன்ஸ்பெக்ஷன் போவதற்கு.

அன்று அவனுக்கு இன்ஸ்பெக்ஷன் முறை. ஐந்து கிராமங்களுக்குத் தண்டோரா போட்டாகி விட்டது. டிபுடி கலெக்டர் தங்க ஏற்பாடு செய்யப்பட்டது. நாகனூர் சாலையில் இருந்த இன்ஸ்பெக்ஷன் பங்களா. அதைச் சுற்றிலும் அத்துவானம்.

மனைவியிடம் "புது இடம்! தூங்கிப் போய்விடாதே!" என்று சொல்லிவிட்டு டவாலி (சீருடை அணிந்த சேவகன்) முன்னால் ஓட குடுமி வைத்த குமாஸ்தா பின் தொடர்ந்து வர, ஸ்காட் குதிரை மீதேறி கிராமத்தை அடைந்தான்.

வெயில் அதிகரித்திருந்ததால், ஸ்காட் குதிரையை மெதுவாக ஓட்டினான். குமாஸ்தா சங்கரலிங்கத்திடம் கூறினான் "இந்த நாடு இவ்வளவு காட்டுமிராண்டி என்று தெரியாது."



அவனைக் கண்டு நாய்கள் குரைத்தன. தெருவோரத்தில் குழந்தைகள் அசுத்தம் செய்திருந்தன. கிராமத்துப் பெரியவர்கள் ஸ்காட்டை வரவேற்றுப் பலாச்சுளையும், இளநீரும் கொடுத்தார்கள். பட்டும் படாதது மாகத் துரைசாணி அம்மாவுக்கு என்று ஒரு முழுச் சவரணையும் டிபுடி கலெக்டரிடம் சேர்ப்பித்தார்கள்.

இந்தியா பற்றி மெக்காலே எழுதிய ஒவ்வொரு வரியையும் ஸ்காட் படித்திருந்தான். முக்கியமாக மகாராஜா நந்தகுமார் என்ற 'ஹிண்டு பிராமின்' பற்றிக் கவனமாகப் படித்திருந்தான். ஸ்காட்டுக்குக் குடுமி வைத்தவர்கள் எல்லோரும் 'பிராமின்'களாகத் தென்பட்டார்கள். தென்னிந்தியா பூராவும் ஒரே குடுமி.

ஐந்து மொழிகள் கற்றறிந்த சங்கரலிங்கம் புன்னகை புரிந்தான். ஸ்காட்டுக்கு உற்சாகம் பொங்கியது. "நடுத்தெருவில் கழியும் இரண்டு கால் பிராணிகளை இங்கேதான் பார்க்க முடிகிறது." என்றான்.

சங்கரலிங்கம் இன்னொரு புன்

**இக்கதை நடந்திருந்தால் சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்திருக்க வேண்டும். இந்தக் கதையில் துரை, துரையின் கைத்தடி, குதிரை, குட்டையில் குளித்துக் கொண்டிருந்த பெண் இப்பகுதிகள் நிஜம்.**

னகை தந்தான்.

“மாட்டை வணங்குவது, ஆட்டை வணங்குவது, மரத்தை வணங்குவது, கல்லை வணங்குவது. இந்த மக்களுக்குக் கதி மோட்சமே கிடையாது”

சங்கரலிங்கத்திடம் இன்னொரு புன்னகை.

“இப்போதுதான் பார்த்தாயே, கிராமத்துப் பெரியவர்களை! ஒருத்தனாவது உடம்பு மூடிக் கொண்டிருந்தானா? நல்லவேளை ஸேம் ஸாப் என் கூட வரவில்லை. வந்திருந்தால் கூக்குரலிட்டிருப்பாள்.”

சங்கரலிங்கத்திடம் மாறாத புன்னகை.

“ஆண்கள் இப்படியென்றால் பெண்கள் இன்னும் மோசம். மூடவேண்டியதை மூடுவதில்லை. எங்கெல்லாமோ துணியைச் சுற்றிக் கொள்வது.”

அப்போது அவர்கள் கிராமத்திலிருந்து மிகவும் தள்ளியிருந்த குளத்தோரமாகச் சென்று கொண்டிருந்தார்கள். “இது என்ன குட்டை?” என்று ஸ்காட் கேட்டான்.

“இது எங்களூர் குளம்.”

“என்ன?”

“இது என் ஊர். இந்தக் குளத்தில்தான் நான் பிறந்ததுமுதல் குளித்து வருகிறேன்.”

“இந்த ஆபாசத் தண்ணீரிலா? ஒரு படித்துறை கூட இல்லையே!” அந்நேரத்தில் ஒரு பெண் அங்கே துணி துவைத்துக் கொண்டிருந்தாள். ஸ்காட்டுக்கு உற்சாகம் பொங்கி வழிந்தது. குதிரையோடு குளத்தில் இறங்கி நேராக அந்தப் பெண்ணிடம் சென்றான்.

“வேண்டாம், மாஸ்டர்,” என்று சங்கரலிங்கம் சொன்னான்.

“இது என்ன ஜந்து? ஆணா, பெண்ணா,?” ஸ்காட் தன் கைத்தடியை நீட்டினான். அந்தப் பெண் பயந்து கொண்டு தண்ணீரில் உட்கார்ந்து கொண்டாள்.

“வேண்டாம், மாஸ்டர் வேண்டாம்,” என்று சங்கரலிங்கம் சொன்னான்.

“இது என்னவென்று பார்த்து விடுகிறேன்” என்று சொல்லியபடி ஸ்காட் அவனுடைய கைத்தடியால் அப்பெண்ணின் புடவை நுனியைத் தூக்கினான். அப்பெண் அலறி எழுந்தாள்.

“இது பெரிய தப்பு” என்று சங்கரலிங்கம் சொன்னான்.

**சமையற்காரன் மகிம்தாஸ் மூக்கைச் சிந்தி அடுப்பில் போடும் பழக்கம் கொண்டவனாக இருந்தான். அது ஒவ்வொரு முறையும் அடுப்பில் தான் விழும் என்று என்ன நிச்சயம்?**



“இதற்கு ஆண், பெண் வெட்கம் அடக்கம் ஒன்றும் வித்தியாசம் தெரியாது. பெண் நாயும் இதுவும் ஒன்று தான்”.

“மாஸ்டர்! மாஸ்டர்!” என்று சங்கரலிங்கம் கத்தினான்.

“இன்ஸ்பெக்ஷன் பங்களாவுக்கு ஓடி வந்துவிடு. நான் போய் சிறிது ஓய்வெடுத்துக் கொள்கிறேன்” என்று கூறிவிட்டு ஸ்காட் குதிரையைத் தட்டிவிட்டான். குதிரை விரைந்தது.

அரை மணிக்குள் இன்ஸ்பெக்ஷன் பங்களாவைச் சுற்றி நிறைய கிராமத்தார்கள். பயங்கர ஆயுதங்கள் ஒன்றும் கிடையாது. தடி, கட்டை போன்றது தான். அவ்வப்போது மிகவும் மிருதுவாகக் கசமுசா சப்தம். அந்தச் சப்தமின்மை அவர்கள் வீட்டைச் சுற்றி நிற்பதைக் காட்டிலும் பயம் எழுப்புவதாக இருந்தது. மிஸஸ் ஸ்காட் ஒரு கதவை சிறிது திறந்து பார்த்துவிட்ட உடனே கதவைச் சாத்தினாள். ஒரே ஒரு கல் அந்தக் கதவு மீது விழுந்தது. அப்போது சங்கரலிங்கம் ஓடி வந்தான்.

அவனுக்காகக் கூட்டம் பாதை விட்டது. அவன் பங்களாக் கதவைத் தட்டினான். “நான்தான் குமாஸ்தா சங்கரலிங்கம்.” கதவு சிறிது திறந்தது. அவன் உள்ளே நுழைந்ததும் மூடிக் கொண்டது.

உள்ளே துரைசானி அம்மாளின் முகம் வெளிறிப் போயிருந்தது. ஸ்காட்டு நிலையும் அதிகம் வித்தியாசம் இல்லை. அவனுடைய கைத்துப்பாக்கியில் தோட்டாக்களை நுழைத்துக் கொண்டிருந்தான்.

“மாஸ்டர், அதை மட்டும் பயன்படுத்திவிடாதீர்கள்.”

“என்ன பயமுறுத்துகிறாய், மேன்?— இந்தக் காட்டுமிராண்டிகளால் என்ன பண்ண முடியும்?”

“அப்போ நான் போகிறேன்.”

“எங்கே போகிறாய், ஸ்கவுண்டிரல்! நான் உன்னைப் போகச் சொல்லவில்லை”

சங்கரலிங்கம் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டான்.

ஒரு கல் வந்து ஜன்னலை



**“மாட்டை வணங்குவது, ஆட்டை வணங்குவது, மரத்தை வணங்குவது, கல்லை வணங்குவது. இந்த மக்களுக்குக் கதி மோட்சமே கிடையாது”**



உடைத்தது. ஸ்காட் துப்பாக்கியோடு அந்த ஜன்னல் பக்கம் ஓடினான். ஆனால், அவனை அவன் மனைவி தடுத்தாள். “வேண்டாம், வேண்டாம்.”

“இந்தக் காட்டுமிராண்டிகளுக்கு ஒரு பாடம் கற்பிக்கவேண்டும்.”

“வேண்டாம். எனக்கு என்னவோ அவர்கள் முகங்களைப் பார்த்தால் பயமாக இருக்கிறது. அவர்கள் மௌனம் மிகவும் பயமாக இருக்கிறது!”

ஸ்காட்டும் உடைந்த சன்னலடியில் குனிந்து கொண்டு கூட்டத்தைப் பார்த்தான். அவர்கள் முகங்கள் கல்லால் செய்யப்பட்டவை போலிருந்தன. அப்படி இருப்பது கருணையைக் குறிக்கலாம். அறியாமையைக் குறிக்கலாம். அக்கறையின்மையைக் குறிக்கலாம். கொலை வெறியைக் குறிக்கலாம்.

“ஏய்!” என்று ஸ்காட் கூப்பிட்டான். இருந்த இடத்திலிருந்தே சங்கரலிங்கம் புருவத்தை உயர்த்தினான்.

“அவர்கள் எதற்கு அங்கு குழுமியிருக்கிறார்கள் என்று கேட்டு வா. அவர்களைச் சுட்டுத் தள்ளி விடுவேன் என்று சொல்.”

சங்கரலிங்கம் வெளியே போனான். கசமுசா சப்தம் சிறிது அதிகரித்தது. அவன் திரும்பப் பங்களாவுக்குள் சென்றவுடன் மீண்டும் நிசப்தம் நிலவியது.

ஸ்காட் பதட்டத்துடன் கேட்டான். “ஏன் அவர்கள் சப்தம் ஒன்றும் செய்யாமல் இருக்கிறார்கள்?”

“அவர்கள் கிராமத்துப் பெண் ஒருத்தியை நீங்கள் அவமதித்து விட்டீர்கள். அதற்குப் பழிவாங்க வந்திருக்கிறார்கள்.”

மிஸஸ் ஸ்காட், “ஐயோ” என்றாள். “பழியா! என்ன பழி?” என்று ஸ்காட் கேட்டான்.

“அவர்கள் வழக்கத்தின்படி அந்த ஆளை அடித்துக் கொன்று விடுவார்கள். சாவின்போது மௌனம் அனுஷ்டிக்க வேண்டுமல்லவா?”

“அவர்களைச் சுட்டுத் தள்ளுகிறேன்.”

“செய்யலாம். அனால், எவ்வளவு பேரை? இருநூறு பேருக்கு எதிராக ஒரு துப்பாக்கியால் என்ன செய்ய முடியும்?”

மிஸஸ் ஸ்காட் கணவனின் முழங்காலைக் கட்டிக்கொண்டாள். “போ! மன்னிப்புக் கேட்டுக் கொள். எனக்கு அவர்கள் மௌனம் பயங்கரமாக இருக்கிறது!”

ஸ்காட் ஜன்னல் வழியாகப் பார்த்தான். அந்த இருநூறு பேரும் கற்சிலைகள் போல நின்று கொண்டிருந்தார்கள். பறவைகள் ஒலியும், இலைகள் சலசலப்பதும் கேட்டது.

ஸ்காட் திரும்பினான். அவன் முகத்தில் இரத்தம் அனைத்தும் கீழிறங்கிச் சவம் போலக் காட்சி அளித்தான்.

“நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.”

“இது அவ்வளவு எளிதில் முடிந்துவிடும் என்று தோன்றவில்லை. எதற்கும் கேட்டு வருகிறேன்” என்று சங்கரலிங்கம் வெளியே சென்றான். சிறிது கசமுசா சப்தம். சங்கரலிங்கம் பங்களாவுக்குத் திரும்பினான். மீண்டும் கூட்டம் உறைந்தது.

“என்ன?” என்று ஸ்காட் கேட்டான்.

“அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை.”

“நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பெண்ணுக்குப் பணம் தருகிறேன்.”

“பயன்படாது.”

“என்னதான் வேண்டும் என்கிறார்கள்?”

சங்கரலிங்கம் ஒரு நிமிஷம் பேசாமல் இருந்தான். பிறகு சொன்னான், “அவர்கள் கிராமத்துப் பெண்ணை அவமதித்ததற்காக உங்கள் இனப் பெண்ணைப் பதிலுக்கு அவமதிக்க வேண்டும் என்கிறார்கள்.”

“இங்கு யார் இருக்கிறாள் வெள்ளைக்காரப் பெண்?”

“உங்கள் மனைவி இருக்கிறாளே?”

மிஸஸ் ஸ்காட் அலறினாள்.

“இந்தக் கிராமத்தையே அழித்து விடுவேன்.” என்று ஸ்காட் சொன்னான்.

"அதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்கள்.... உங்களையும் சேர்த்து இந்தக் கட்டடத்திற்கு இன்னும் ஐந்து நிமிடத்தில் தீ வைப்பதாக இருக்கிறார்கள்."

மிஸஸ் ஸ்காட் மூர்ச்சை போட்டு விழுந்தாள்.

ஸ்காட் கிலி பிடித்து, "நீதான் காப்பாற்றவேண்டும்." என்றான்.

"உங்கள் மனைவியை அவர்கள் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கச் சொல்லுங்கள்".

ஸ்காட், அவனுடைய மனைவி இருவரும் வெளியே வந்து கிராமத்தார் முன்பு மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டார்கள். ஸ்காட் அதன் பிறகு ஓராண்டு காலம் அந்த ஜில்லாவில் இருந்தான். இச்சம்பவம் நடந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. ஒரு வார்த்தை உள்ளூர் மக்களை இகழ்ந்து பேசவில்லை.

ஸ்காட் தம்பதிகள் மன்னிப்புக் கேட்டவுடன் சங்கரலிங்கம் அந்தக் குளத்திற்குச் சென்றான். அந்தப் பெண் இன்னமும் துணிமணிகளைத் துவைத்து முடித்தபாடில்லை.

**முகங்கள் கல்லால் செய்யப்பட்டவை போலிருந்தன. அப்படி இருப்பது கருணையைக் குறிக்கலாம். அறியாமையைக் குறிக்கலாம், அக்கறையின்மையைக் குறிக்கலாம். கொலை வெறியைக் குறிக்கலாம்.**



"நீங்க சொன்ன கதையிலே தப்பு இருக்கு தாத்தா!" என்றேன். அவர் எனக்குக் கொள்ளுத்தாத்தா. அவர் வேலையிலிருந்து ஓய்வு பெற்ற அடுத்த நாள் இந்தியா சுதந்திரம் அடைந்தது. "சங்குத் தாத்தாவுக்குச் சுதந்திரச் சங்கு கேட்கக் கொடுத்து வைக்கவில்லை" என்று கூறிக்கொள்வார்.

"என்ன தப்பு?" என்று கேட்டார்.

"குளம் கிராமத்துக்கு வெளியிலேன்னு சொன்னேள்."

"இவ்வளவு ரகளை நடந்த போதும் அந்த அம்மா குளத்திலே துணி தோய்ச்சிண்டிருந்தான்னு சொன்னேள்."

"ஆமாம்."

"அப்போ கிராமத்துக்காரா கிட்டே யார் போய்ச் சொன்னா? யார் அவாளைத் தூண்டிவிட்டா?"

சம்பவம் நடந்து அறுபது ஆண்டுகளுக்குப் பிறகும் தாத்தா அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டார். பிறகு பேசினார்.

"ஸ்காட் என்னைக் குளத்துக் கிட்டே விட்டுட்டு வேகமாப் போயிட்டான்."

இங்கு தாத்தா ஒரு கணம் நிறுத்தினார்.

"நான் அவன் பின்னாலேதான் போயிருக்கணும் - அப்படித்தான் அவன் உத்தரவு. ஆனா அதுக்குப் பதிலா நான் கிராமத்துப் பக்கம் போனேன்."



## மூளை

நம் உடலின் எடையில் 3 சதவிகிதம் எடை கொண்டுள்ள மூளை, நாம் உட்கொள்ளும் காற்றில் 20 சதவீதம் ஆக்சிஜனை எடுத்துக் கொண்டுவிடுகிறது. நமது இரத்த ஓட்டத்தில் 15 சதவீதம் மூளை எடுத்துக்கொள்கிறது.

15 வயது வரை மூளை அதன் உருவத்தில் பெருகுகிறது. அப்போது, கிட்டத்தட்ட 1.4 கிலோ வரை எடை இருக்கும். மூளையின் எடைக்கும் அறிவாற்றலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

70 லிருந்து 80 வயதுக்குள் பெரும்பாலான நியூரான்கள் இறந்துவிடுவதால் பொதுவாக நினைவாற்றலும், படைப்பாற்றலும் குறைந்துவிடுகிறது.

நாம் சிந்திக்காமல் இருக்கும்போதும், மூளை சக்தியை எடுத்துக்கொள்ளும். ஏனென்றால், அதன் நரம்புத் திசுக்களையும், நரம்புக் கட்டமைப்புகளையும் சுறுசுறுப்பாக வைத்திருக்கவே.

நாம் படுத்திருக்கும்போது மனம் நிலை கொள்ளாமல் திரியும். ஆனால் நிற்கும்போது மனம் கட்டுக்குள் வந்து ஒரு நிலைப்பாட்டில் செயல்படும் என்கிறார்கள். அமர்ந்திருக்கும்போது இரண்டு நிலைகளுக்கும் இடைப்பட்டே மனம் இருக்குமாம்.



GOVERNMENT OF TAMIL NADU 1996

# FINANCE (PENSION) DEPARTMENT

**G.O. No. 464, Dated 31st July 1996**
**(Thadhu, Aadi 16, Thiruvalluvar Aandu 2027)**

MEDICAL ALLOWANCE to pensioners/family pensioners-Enhancement of medical allowance to the State Government pensioners/family pensioners including pensioners/family pensioners of local bodies and aided educational Institutions-Orders-Issued.

**READ the following:-**

1. G.O. Ms.No. 314, Finance (Pension) Department, dated 8-4-1994.
2. G.O. Ms.No. 110, Finance (Pension) Department, dated 16-2-1995.

**ORDER:**

1. In the Government Order first read above, orders have been issued enhancing the rate of medical allowance from Rs. 15/- per mensem to Rs. 30/-per mensem to the State Government pensioners/ family pensioners with effect from 1-4-1994. In the Government Order second read above, orders have been issued enhancing the rate of medical allowance from Rs. 15/-per mensem to Rs. 30/- per mensem to the pensioners/family pensioners of local bodies and aided educational Institutions with effect from 1-1-1995.

2. The Government have now decided to enhance the medical allowance of Rs. 30/-per mensem now paid to the State Government pensioners/family pensioners including the pensioners/family pensioners of local bodies and aided educational Institutions to Rs. 50/- per mensem with effect from 1-12-1995. Accordingly, the Government direct that the medical allowance of Rs. 30/- be enhanced to Rs. 50/- (Rupees fifty only) per mensem to the pensioners/family pensioners including the pensioners/family pensioners of local bodies and aided educational Institutions with effect from 1-12-1995.

3. In respect of pensioners/family pensioners for whom expenditure is met from State funds the expenditure shall be debited under relevant minor sub-heads under the major head "2071. Pensions and Other Retirement Benefits". In respect of pensioners/family pensioners of local bodies for whom expenditure is met from the funds maintained by the Director of Local Fund Audit or Municipal Fund as the case may be the expenditure shall be met from the respective funds referred to above.

4. The Government also direct that the family pensioners whose spouses died in harness and who wish to draw medical allowance till the normal date of retirement of the deceased employees are permitted to exercise option for drawal of this medical allowance within three months from the date of this order. The Pension Disbursing Officers are responsible for obtaining the above option from such family pensioners whose spouses had died in harness and who wish to draw medical allowance. Future family pensioners shall exercise such option within three months from the date of receipt of family pension.

. These orders shall also apply to All India Service pensioners and family pensioners who opt for State Medical Reimbursement Scheme.

(BY ORDER OF THE GOVERNOR)

S.GURUMURTHI,
SECRETARY TO GOVERNMENT.

# நாயக்கர் காலத்து நாணயங்கள் கண்டுபிடிப்பு



வேடசந்தூர் அருகே உள்ள காளனம் பட்டியில் ஒரு தோட்டத்தில் உரக்குழி வெட்டும்போது தங்கக்காசுப் புதையல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இப் பொற்காசுகள் விஜயநகரப் பேரரசர்கள் காலத்து நா்ணயங் களாக இருக்கலாம் என்று கருதப் படுகிறது.

காளனம்பட்டியில் இருந்து கிலோமீட்டர் தொலைவில் தாடிக்கொம்பு எனும் ஒரு கிராமம் உள்ளது. மதுரையில் நாயக்கர்கள் ஆண்டபோது, அவர்கள் தாடிக் கொம்பிற்கு வந்து சென்றதாக ஆவணங்கள் உள்ளன. தாடிக்கொம்பில் உள்ள சௌந்தரராஜப் பெருமாள் கோயில், 450 ஆண்டுகளுக்கு முன் விஜயநகரப் பேரரசர்களால் கட்டப்பட்டது. அதன் சிற்பங்கள் மிகவும் புகழ் பெற்றவை. தாடிக் கொம்பு என்ற வார்த்தைக்குத் தெலுங்கில் "பனைமரக் கூட்டம்" என்று பொருளாகும். பனைமரங்கள் அதிகமாக இருப்பதால் இப்பெயர் வந்திருக்கலாம் என்று கருதப் படுகிறது. தாடிக் கொம்பிற்கு வந்துசென்ற அரசர்கள் காளனம்பட்டியைச் சேர்ந்த நபர்களுக்குத் தானமாகப் பொற்காசுகளை வழங்கியிருக்கலாம் என்று தெரிகிறது.

அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதையலில் 340 பொற்காசுகள் இருந்தன. ஒவ்வொரு காசும் 350 மில்லிகிராம் எடை உடையதாக இருக்கின்றன. மொத்தக் காசுகளின் எடை 125 கிராம் ஆகும். ஒவ்வொரு காசும் ஒரு சென்டிமீட்டர் விட்டம் கொண்ட வட்ட வடிவிலான அமைப்பைக் கொண்டுள்ளதாக இருக்கிறது. தங்கக் காசின் இருபுறமும் புள்ளிகள் வைக்கப் பட்டுள்ளன. ஒரு "நாமம்" போன்ற வடிவமும் பொறிக்கப்பட்டுள்ளது. இக் காசுகளில் 3:1 என்ற விகிதத்தில் தங்கமும், செம்பும் சேர்க்கப்பட்டுள்ளது. தங்கக் காசுகள் சென்னை தொல்பொருள் அகழ் வாராய்ச்சித் துறையினரிடம் ஒப்படைக்கப் படவுள்ளன.





# தமிழக அரசு விளையாட்டுப் பள்ளிகள்–விளையாட்டு விடுதிகளில் மாணவ/மாணவியர் சேர்க்கை பற்றிய விவரங்கள்

தமிழக அரசு, 1979ஆம் ஆண்டு விளையாட்டுத் துறைக்கென்று தனியாக "இளைஞர் மற்றும் விளையாட்டுப் பயிற்சித்துறை இயக்குநரகத்தை" ஏற்படுத்தியது.

தமிழ் நாட்டில் விளையாட்டுத் துறையை மேம்படுத்த எடுக்கப்பட்ட பல திட்டங்களில் பள்ளிகளில் படிக்கும் மாணவ/மாணவியரின் விளையாட்டுத் திறனை வளர்க்கத் "தமிழ்நாட்டில் விளையாட்டுப் பள்ளிகள்/விளையாட்டு விடுதிகளை" அரசே நிறுவியது.

அப்படி நிறுவப்பட்ட விளையாட்டுப் பள்ளிகள்/விடுதிகள் "தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்" மேற்பார்வையில் சிறப்பாக இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் நடத்தப்படும் விளையாட்டுப் பள்ளிகள்/விடுதிகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றில் எட்டு, ஒன்பது மற்றும் பதினோராம் வகுப்புகளில் சேர விளையாட்டுத் திறமை மிக்க மாணவ, மாணவிகள் இட எண்ணிக்கையைப் பொறுத்துத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### மாணவர்களுக்கான விளையாட்டுப் பள்ளிகள், பயிற்று மொழி விளையாட்டுகள்

| | | |
|---|---|---|
| 1. ஒய்.எம்.சி.ஏ. கல்லூரி விளையாட்டுப் பள்ளி, நந்தனம், சென்னை - 35 | ஆங்கிலம் மற்றும் தமிழ் | தடகளம், ஹாக்கி |
| 2. எஸ்.ஆர்.கே. மாருதி கல்லூரி விளையாட்டுப் பள்ளி, பெரியநாயக்கன் பாளையம், கோயம்புத்தூர். | தமிழ் | தடகளம், கூடைப்பந்து, வாலிபால் |
| 3. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி | தமிழ் மற்றும் ஆங்கிலம் | தடகளம், கால்பந்து, கிரிக்கெட் |

### மாணவர்களுக்கான விளையாட்டு விடுதிகள்

| | | |
|---|---|---|
| விளையாட்டு விடுதி, அண்ணா விளையாட்டரங்கம் திருச்சி | ஆங்கிலம் மற்றும் தமிழ் | தடகளம், கால்பந்து, வாலிபால் |
| விளையாட்டு விடுதி, அண்ணா விளையாட்டரங்கம், புனித தாமஸ் ரோடு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி | ஆங்கிலம் மற்றும் தமிழ் | தடகளம், ஹாக்கி, வாலிபால் |
| விளையாட்டு விடுதி. புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். விளையாட்டரங்கம், மதுரை | ஆங்கிலம் மற்றும் தமிழ் | தடகளம், கால்பந்து, கூடைப்பந்து |

### மாணவியருக்கான விளையாட்டு விடுதிகள்

| | | |
|---|---|---|
| விளையாட்டு விடுதி, விளையாட்டரங்கம், தருமபுரி, (உயர்நிலைப்பள்ளி மட்டும்) | ஆங்கிலம் மற்றும் தமிழ் | தடகளம் வாலிபால் |

| | | |
|---|---|---|
| விளையாட்டு விடுதி, வ.உ.சி. விளையாட்டரங்கம், ஈரோடு | தமிழ் மற்றும் ஆங்கிலம் | தடகளம், கூடைப்பந்து, வாலிபால் |

### வழங்கப்படும் இலவச உதவிகள்

தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து மாணவ/மாணவியர்களுக்கு உறைவிடமும் மற்றும் உணவுக்காக ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ.450/ அரசால் செலவிடப்படும். விளையாட்டிற்கான சீருடைகள் மற்றும் உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து மாணவ/மாணவியர்களுக்கு என்.ஐ.எஸ். பயிற்சி பெற்ற பயிற்றுநர் மூலம் தீவிர பயிற்சி அளிக்கப்படும்.

**குறிப்பு:**

கல்வி சம்பந்தப்பட்ட கட்டணங்களை மாணவ, மாணவியரே தமது சொந்தச் செலவில் செலுத்தவேண்டும்.

### சேருவதற்கான தகுதிகள்

**1997ம் ஆண்டு ஜூலை 1ம் தேதி அன்று**

| வகுப்பு | கல்வித்தகுதி | வயது வரம்பு |
|---|---|---|
| 8ம் வகுப்பு | 7ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். | 15 வயதிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |
| 9ம் வகுப்பு | 8ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் | 16 வயதிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |
| 11ம் வகுப்பு | 10ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். | 18 வயதிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |

### தேர்வு முறைகள்:

#### மாவட்ட அளவிலான தேர்வு

மாணவ மாணவியருக்கு மாவட்ட அளவில் உடல்திறன் குறித்த தேர்வு ஒன்று நடைபெறும். மாவட்ட அளவிலான தேர்வு நடைபெறும் இடம், தேதி முதலானவை அந்தந்த மாவட்ட விளையாட்டு அலுவலரால் விண்ணப்பதாரருக்கு அஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும்.

#### மாநில அளவிலான தேர்வு

மாவட்ட அளவில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டுமே மாநில அளவில் தேர்வு நடைபெறும். அப்போது குறிப்பிட்ட விளையாட்டில் தகுதிகளின் கீழ் ஆய்வு செய்யப்படுவார்கள். மாநில அளவிலான தேர்வு நடைபெறும் இடம், தேதி முதலான விவரங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை84ல் இருந்து அஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும்.

விளையாட்டுப் பள்ளி/விளையாட்டு விடுதியில் பயிலும் மாணவ/மாணவியர் அவர்களுடைய விளையாட்டுத்திறனைப் படிப்படியாக வளர்த்துக்கொள்ள வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. அவ்வாறு திறனை வளர்த்துக்கொண்ட விளையாட்டுப் பள்ளி/விளையாட்டு விடுதி மாணவ மாணவியர் மாவட்ட, மாநில மற்றும் தேசிய போட்டிகளில் வெற்றி வாகை சூடியுள்ளார்கள்.

விளையாட்டுப் பள்ளி/விடுதியை விட்டுப் பல்கலைக்கழக மேற்படிப்பிற்காக வெளியே சென்ற மாணவ மாணவியர்களில் பலர் இந்திய அணிக்காகப் பன்னாட்டுப் போட்டிகளில் வெற்றி வாகையும் சூடியுள்ளார்கள்.

### வேலைவாய்ப்புகள்

விளையாட்டு விடுதிகளில் பயின்ற மாணவ, மாணவியரில் பலர், வங்கி, தென்னக ரயில்வே,



வருமானவரித்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், சுங்கவரி இலாக்கா, ஆயுள் இன்சூரன்ஸ் காப்பீட்டுக் கழகம், துறைமுகம், இந்தியக் கப்பற்படை இந்தியத் தரைப்படை முதலிய பல நிறுவனங்களில் விளையாட்டுத் திறனுக்காக வேலை வாய்ப்பினைப் பெற்றுப் பணிபுரிந்துவருகிறார்கள்.

### மாணவ/மாணவியர் சேர விண்ணப்பிக்கும் முறை

தமிழ்நாட்டில் இயங்கும் விளையாட்டுப் பள்ளிகள்/விடுதிகள் சேர்க்கைக்கான விளம்பரம் தமிழ் செய்தித்தாளில், பொதுவாக, ஏப்ரல் இரண்டாம் வாரத்தில் வெளிவரும். விளம்பரம் வெளிவந்த பின்னர், விண்ணப்பப் படிவங்களை அந்தந்த மாவட்ட விளையாட்டு அலுவலரிடமிருந்து, விண்ணப்பப் படிவக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்று, விண்ணப்பப் படிவத்தை நிரப்பி, குறிப்பிட்ட கடைசி தினத்துக்குள் அந்தந்த மாவட்ட விளையாட்டு அலுவலர் அலுவலகத்தில் சேர்ப்பிக்கவேண்டும்.

மாவட்ட அளவிலான உடல்திறன் குறித்த தேர்வு (Physical Efficiency Test) அந்தந்த மாவட்டத் தலைநகரில் உத்தேசமாக மே மாதம 10 முதல் 15க்குள் நடைபெறும். மாவட்ட அளவிலான தேர்வு செய்யும் (Skills of the Game & Game Situation) மே மாதம் கடைசி வாரத்தில், பொதுவாக 25 முதல் 28 தேதிகளில் நடைபெறும். விளையாட்டுப் பள்ளி/விடுதிகளில் தேர்வு செய்யப்படும் மாணவ/மாணவியர்க்கான தேர்வு முடிவுகள் ஜூன் முதல் வாரத்தில் அறிவிக்கப்படும்.

விளையாட்டுத் திறனை மேம்படுத்த விளையாட்டுப் பள்ளி/விடுதிகளில் சேருங்கள்! பயன்பெறுங்கள்!







## வணிக நிறுவனங்களின் பெயர்ப்பலகை

# தமிழுக்கு முதல் மரியாதை

193. Fibre-Glass Products .. நாரிழை - ஆடி உருவாக்க விளையகம், நாரிழை - ஆடி தயாரிப்புப் பொருள்கள்
194. Fibre Pipes .. நாரிழைக் குழாய்கள்
195. Filter .. வடிகலம்
196. Filter Cigarette .. வடிமுனை வெண்சுருட்டு
197. Finance .. நிதியகம், நிதி
198. Fire Engine .. தீயணைப்பு எந்திரம், தீயணைப்பு வண்டி
199. Fisheries .. மீனகம்
200. Fitter .. பொருத்துநர்
201. Flats .. அடுக்குமனை, அடுக்கு வீடுகள்
202. Flasks .. குடுவைகள், சேமச்செப்பு, சேமக் குடுவை
203. Florist .. பூ விற்போர், மலர் விற்பனையாளர்
204. Floodlight .. ஒளிவெள்ளம்
205. Flour Mill .. மாவாலை
206. Fluorescent Lamp .. பாதரச ஆவி விளக்கு
207. Fluorescence .. ஒளி வண்ணம், ஒளிர் வண்ணம்
208. Foam Pillow .. நுரையணை, நுரைத் தலையணை
209. Folding Furnitures .. மடக்கு அறைகலன்கள்
210. Footwears .. தோலணிகள், தோலணியகம், மிதியடியகம், காலணியகம்
211. Foundation .. நிறுவனம்
212. Foundry .. வார்ப்பகம், வார்ப்படச் சாலை
213. Frame Works .. படச்சட்டப் பணிமனை, படச்சட்டக் கடை
214. Framer .. படச் சட்டமிடுபவர்
215. Furniture Mart .. அறைகலன் அங்காடி, வீட்டு வசதிப் பொருள்கள்
216. Garments .. உடை வகைகள் (ஆடை)
217. Gas .. எரி ஆவி
218. Gas Welding .. ஆவிப் பற்றவைப்பு
219. General Stores .. பல்பொருள் அங்காடி
220. Gift House .. பரிசுப் பொருளகம் (இல்லம்)
221. Ginning Factory .. பஞ்சாலை, பஞ்சுப் பிரிப்பகம்
222. Godown .. கிடங்கு, கிட்டங்கி
223. Gold Refineries .. தங்கத் தூய்மையாலை, தங்கத்தூய்மை ஆலை
224. Granites .. கருங்கற்கள், கிரானைட் கற்கள்
225. Graphics .. எழுத்து வரைகலை
226. Grille Works .. இரும்புக் கிராதிகள்

227. Grinder .. திரிகைக்கல், அரைப்பான், இயந்திர ஆட்டுக்கல்
228. Grindery .. சாணை பிடிக்கும் இடம்
229. Groceries .. பலசரக்கு
230. Group of Companies .. குழுமத் தொகுதி, வணிக நிறுவனத் தொகுதி
231. Guest House .. விருந்தகம், விருந்தில்லம், விருந்து மனை, விருந்தினர் மாளிகை / இல்லம்
232. Hair Dresser .. முடி திருத்துபவர்
233. Hair Stylist .. முடி ஒப்பனையாளர்
234. Hall .. மன்றம், கூடம், அரங்கம்
235. Handicrafts .. கைத்திறவினைகள், கைவினைப் பொருள்கள், கைத்திறவினையகம்
236. Handloom .. கைத்தறி
237. Hardwares .. வன்மாழைகள், வன்மாழையகம், வன்சரக்கு, இரும்புக் கடை
238. Hatchery .. குஞ்சுபொரிப்பகம்
239. Headlight .. முகப்பு விளக்கு
240. Health Centre .. நல மையம், நல்வாழ்வு நிலையம்
241. Hire .. வாடகை
For Hire .. வாடகைக்கானது / வாடகைக்கு
242. Hi-tech Industries .. உயர் - தொழில்நுட்பத் தொழிலகம் (தொழில் நுட்பம்)
243. Holiday resort .. விடுமுறை ஓய்வகம்
244. Home .. அகம், இல்லம், வீடு
245. Home Appliance .. இல்லப் பயன்பொருள்கள், வீட்டுவசதிப் பொருள்
246. Hose-pipes .. நெளிவுக் குழாய்கள்
247. Hosiery .. உள்ளாடை
248. Hotel .. உணவகம்
249. House .. மனை, இல்லம்
250. Housing Developers .. வீட்டு வசதி மேம்பாடு, வீடுகட்டுவோர்
251. Ice-Creams .. பனிக்குழைவு, பனிப்பாலேடு
252. Industrial Corporation .. தொழிற் கூட்டிணையம், தொழில் கூட்டு நிறுவனம்
253. Industry .. தொழிலகம், தொழில்கள்
254. Initial .. முன்னெழுத்து
255. Institute .. நிறுவகம், நிலையம், நிறுவனம்
256. Institution .. நிறுவனம்
257. Interact Club .. இடைவினை மன்றம், இணைந்தியங்கு மன்றம், கலந்துறவாடு மன்றம்



258. Interest .. வட்டி
259. Investment .. முதலீடு
260. Invisible Darning .. தோன்றாத் தையலீடு
261. Iron Box .. சலவைப் பெட்டி, தேய்ப்புப் பெட்டி
262. Iron Works .. இரும்புச்சார் பணிகள், இரும்புத் தொழில்கள்
263. Jail .. சிறை
264. Jailer .. சிறை அலுவலர்
265. Jeweller .. நகை வணிகர்
266. Jewellery .. நகை வணிகம், நகை மாளிகை, அணிகல அங்காடி, அணிமணிப் பொற்சாலை
267. Job-Works .. அச்சுத் தனிப்பணிகள், சிறு அச்சுப்பணிகள்
268. Juices .. சாறுகள், பழச்சாறுகள்
269. Jubilee .. பெரு விழா, விழா
Silver Jubilee .. வெள்ளி விழா
Golden Jubilee .. பொன் விழா
Diamond Jubilee .. வைர விழா
Platinum Jubilee .. பவள விழா
270. Kiddies Corner .. குழந்தைகள் ஆடையகம்
271. Kinder Garten .. மழலையர் பள்ளி
272. Laboratory .. ஆய்வகம், ஆய்வுக்கூடம்
273. Lamination .. பளிச்சீடு, பளபளப்பு, ஒளிச்சுடர்
274. Laser Printing .. ஒளியச்சு
275. Laundry .. வெளுப்பகம், சலவையகம்
276. Lavatory .. கழிப்பறை
277. Litho Press .. கல்லச்சகம், பல்வண்ண அச்சகம்
278. Locker .. பெட்டகம்
279. Lodge .. தங்ககம், தங்குமனை, தங்கும் விடுதி
280. Lorry .. சரக்குந்து
281. Lorry Booking Office .. சரக்குந்துப் பதிவிட்டலுவலகம், சரக்குந்து முகவர், சரக்குந்துப் பதிவு அலுவலகம்
282. Lottery .. பரிசுச்சீட்டு
283. Lottery Centre .. பரிசகம், பரிசுச்சீட்டகம், பரிசுச் சீட்டு விற்பனை நிலையம்
284. Lubricant Oil .. மசகுப் பொருள், உராய்வு காப்புப் பொருள், மசகு எண்ணெய்
285. Lunch Home .. உணவகம்
286. Machine-Tools .. பொறி-வினைக் கருவிகள், இயந்திரக் கருவிகள்
287. Mahal .. மண்டபம்
288. Maintenance .. பேணுதல்
289. Makers .. உருவாக்குநர், தயாரிப்பாளர்
290. Mansion .. மாளிகை, தங்குமனை
291. Manufacturers .. உருவாக்கிகள், உற்பத்தியாளர்கள்
292. Manufacturing .. உருவாக்கம், தயாரித்தல்
293. Marbles .. சலவைக் கல்
294. Market .. சந்தை, அங்காடி
295. Marketing .. சந்தைப் பொருள் விற்பனை

296. Market Complex .. அங்காடி ஒன்றகம், அங்காடி வளாகம்
297. Mart .. அங்காடி, கடை
298. Meat Mart .. இறைச்சிக் கடை
299. Medicals .. மருந்தகம், மருந்துக் கடை, மருந்து விற்பனையகம்
300. Medical Union .. மருத்துவ ஒன்றியம்
301. Mess .. உண்பகம்
302. Metal Mart .. உலோக அங்காடி, மாழை அங்காடி, உலோகக் கடை
303. Metal Works .. உலோகத் தொழில்கள், பொன்ம வேலைகள்
304. Metropolitan .. பெருநகர்
305. Milk Dairy .. பால்பண்ணை
306. Model .. மாதிரி
307. Modelling .. விளம்பரத் தோற்றம் காட்டல்
308. Modern .. புதுமை, நாகரிக, நவீன
309. Motorcycle .. விசையுந்து, மிதியுந்து
310. Mosaic .. பல்வண்ணக் கல், வண்ண வழுவழுப்புக் கல், பளபளப்புக் கல்
311. Moulding Works .. வார்ப்படப் பணியகம், வார்ப்படப் பணிகள்
312. Movies .. இயங்குபடங்கள், திரைப்படங்கள்
313. Musical Centre, Musicals .. இசையகம்
314. Mutton Stall .. கறிக்கடை, ஆட்டிறைச்சிக் கடை
315. Nail Polish .. உகிர்நெய், உகிரிப்பூச்சு, நகப்பூச்சு
316. Novelties .. புதுமைகள்
317. Nurse .. செவிலியர்
318. Nursery .. நாற்றங்கால், செடி வளர்ப்புப் பண்ணை, செடி வளர் பண்ணை
319. Nursery School .. மழலையர் பள்ளி
320. Nursing Home .. நலம் பேணகம்
321. Nutrition .. ஊட்டச்சத்து
322. Nylon .. நொசிவிழை
323. Offset .. எதிரீடு அச்சு / மறுதோன்றி
324. Oil Company .. எண்ணெய்க் குழுமம், எண்ணெய் நிறுவனம்
325. Oil Stores .. எண்ணெய்ப் பண்டகம், எண்ணெய்க் கடை
326. Omni Bus .. சொகுசுப் பேருந்து, ஒப்பந்தப் பேருந்து
327. Operation .. அறுவை மருத்துவம்
328. Ophthalmologist .. கண் மருத்துவர்
329. Opticals .. கண்ணாடியகம், மூக்குக் கண்ணாடியகம்
330. Optician .. கண்ணாடியாளர், மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்
331. Orchids .. பட்டு மலரகம், வண்ணக் கொத்து மலரகம்



# சென்னையில் தென்னை


சிவ. சூரியன், இ.ஆ.ப.
கூடுதல் வேளாண்மை இயக்குநர் (ப.மே)


தென்னை ஒரு கற்பக விருட்சம். இதன் ஒவ்வொரு பாகமும் சுவைமிக்க நீராக, எண்ணெயாக, நாராக, எரிபொருளாக, தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருளாக, வீடுகட்ட, பானங்கள் தயாரிக்க மற்றும் பல பொருட்கள் தயாரிக்கவும் உதவுகின்றது. உலகில் தென்னை சாகுபடி பரப்பில், நம் இந்திய நாடு பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேஷியா நாடுகளுக்கு அடுத்தபடியாக மூன்றாம் இடத்தை வகிக்கிறது. நமது இந்திய நாட்டில் சுமார் 1.2 மில்லியன் எக்டரில் தென்னை சாகுபடி செய்யப் படுகிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஒரு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரம் எக்டரில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. உற்பத்தித் திறனைப் பொறுத்த வரையில் மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடு முதலிடத்தை வகிக்கிறது. தமிழகத்தின் ஒரு எக்டர் உற்பத்தித் திறன் 10,651 தேங்காய்கள் ஆகும். இந்த அதிக உற்பத்தித் திறனுக்கு முக்கியக் காரணம் நாம் தேர்வு செய்யும் இரகங்கள்தான்.

தென்னையின் இரகங்களைப் பொறுத்தவரை இரண்டே இரண்டு இரகங்கள்தான் உண்டு.

1. நெட்டை 2. குட்டை

**நெட்டை:**

இந்த இரகம் 80, 90 ஆண்டுகள் வரை பலன் கொடுக்கும். 15 முதல் 18 மீட்டர் உயரம் வரை வளரக் கூடியது. 6 மீட்டர் நீளமுடைய 25 முதல் 40 இலைகளுடன் மரம் உறுதியாக இருக்கும். வறட்சியும் தாங்கும். 6 முதல் 7 ஆண்டுகளில் காய்ப்பிற்கு வரும். ஆண்டிற்கு 80 முதல் 100 காய்கள் வரை காய்க்கக் கூடியது.

**குட்டை:**

குட்டையாக வளரும் தன்மையுடைய இந்த இரகம் 4 மீட்டர் நீளமுடைய முட்டைகளுடன், மிக விரைவில் வளரக்கூடியது. 3 முதல் 4 ஆண்டுகளில் காய்ப்பிற்கு வரும். 25 ஆண்டுகள் வரை மட்டுமே காய்க்கும்.

**வீரிய ஒட்டுத் தென்னை:**

இவ்விரண்டு நெட்டை, குட்டை இரகங்களை இணைத்து உருவாக்கப்பட்டது வீரிய ஒட்டுத் தென்னை நெட்டை & குட்டை ரகமாகும்.



குட்டை, நெட்டை ரகங்களை இணைத்து உருவாக்கப்பட்டது வீரிய ஒட்டுத் தென்னை குட்டை & நெட்டை ரகமாகும்.

நெட்டை & குட்டை இரகம் 4 முதல் 5 ஆண்டுகளில் காய்ப்புக்கு வரும். ஆண்டிற்குச் சராசரியாக 200 முதல் 250 காய்கள் வரை காய்க்கும். ஒவ்வொரு காயிலும் 180 கிராம் அளவு கொப்பரை கிடைக்கும். இது 70% எண்ணெய் கொண்டது.

குட்டை & நெட்டை இரகம் 4 முதல் 5 ஆண்டுகளில் காய்ப்பிற்கு வரும். ஆண்டிற்கு சராசரியாக 250 காய்கள் வரை காய்க்கும். ஒவ்வொரு காயிலும் சுமார் 200 கிராம் கொப்பரை கிடைக்கும். இந்த இரகமும் 70%எண்ணெய் கொண்டது.

**உங்கள் தென்னையிலும் ஆண்டிற்கு 200 முதல் 250 காய்கள் வரை பெற வேண்டுமா?**

**உங்கள் தென்னையில் ஏதாவது பூச்சி, நோய்ப் பிரச்சினையா?**

**உங்கள் வீட்டுத் தோட்டத்தில் வீரிய ஒட்டுத் தென்னை நட வேண்டுமா?**

**இவை அனைத்திற்கும் நீங்கள் அணுக வேண்டிய இடம்:**

**சென்னை மாநகர தென்னை புனரமைப்புத் திட்டம்!**

ஆம். இத்திட்டம் தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறையின் கீழ் சென்னை நகரில் கடந்த 14 ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் ஒரு வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் 4 வேளாண்மை அலுவலர்கள் நகரின் ஒவ்வொரு முக்கிய மையங்களைத் தலைமை இடமாகக் கொண்டு செயல்படுகின்றனர். இவர்களுடன் 18 களப்பணியாளர்களும் உள்ளனர்.

1991ஆம் ஆண்டின் கணக்கெடுப்புப்படி சென்னை மாநகரில் ஆறு இலட்சத்து இருபதாயிரம் தனி வீடுகள் உள்ளன. (அடுக்குமாடிக் கட்டடங்கள் நீங்கலாக) ஒரு வீட்டிற்குச் சராசரியாக இரண்டு மரங்கள் என்று கணக்கெடுத்தாலும், சென்னை மாநகரில் சுமார் 12,40,000 மரங்கள் உள்ளன. இதுவரை இத்திட்டத்தில் 13 இலட்சம் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளது. மேலும் சுமார் 6 இலட்சம் தென்னை மரங்களுக்கு உரமும், 3 இலட்சம் மரங்களுக்குப் பூச்சி, நோய் தாக்குதலுக்கான பயிர்ப் பாதுகாப்பும் செய்யப்பட்டுள்ளது. மகசூலும் கணிசமான அளவு உயர்ந்துள்ளது!

இத்திட்டத்திற்கு வீரிய ஒட்டுத் தென்னங்கன்றுகள் விநியோகிக்க மாதவரம் பால் பண்ணைக்கு அருகில் அரசு தென்னை நாற்றுப் பண்ணை செயல்பட்டு வருகிறது. இங்கு தமிழகத்தின் பல்வேறு ஒட்டுச் சேர்க்கை நிலையங்களிலிருந்து பெறப்பட்ட வீரிய ஒட்டு விதை நெற்றுக்கள் முறைப்படி நடப்பட்டு கன்றுகளாக்கி விநியோகம் செய்யப்படுகிறது. ஒரு கன்றின் விலை ரூ.15/ ஆகும். இந்தப் பண்ணையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் வீரிய ஒட்டுத் தென்னங்கன்றுகள் சென்னை மாநகரத்திலும், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலும் உள்ள வேளாண் பெருமக்களுக்காக விநியோகம் செய்யப்படுகிறது.

மாநகர தென்னை புனரமைப்புத் திட்டத்தில் வீடுகள் தோறும் தொடர்பு கொள்ளுதல், தென்னைக்கு உரமிடல் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு, தென்னங்கன்றுகள் விநியோகம் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை மாநகரில் வீடுகள்தோறும் தொடர்பு கொள்ள களப்பணியாளர்கள் உரிய பதிவேட்டுடன் தங்கள் பகுதிக்கு வருகை புரிவார்கள். வீட்டில் ஏற்கெனவே உள்ள தென்னங்கன்றுகள் பற்றிய விவரங்கள், என்ன இரகம், பயிர்ப் பாதுகாப்பு மற்றும் உரமிடும் பணி செய்யப்பட்டதா? போன்ற விவரங்களைச் சேகரித்துக் குறித்துக் கொள்வார்கள். இதுமட்டுமல்லாது வைத்திருக்கும் தென்னைக்கும் மேலாக இன்னும் கன்றுகள் நட வாய்ப்பு உள்ளதா என்பதையும் அறிந்து அதைப் பரிந்துரை செய்வார்கள். கன்றுகள் நடுவதாக இருந்தால் அதனை நட்டுப் பராமரிக்கும் முறையையும் கூறி வருகின்றனர். தேவையறிந்து கன்றுகளையும் தருவார்கள்.

எனவே சென்னை மாநகரம் வாழ் மக்கள் அனைவரும் களப்பணியாளர்கள் சர்வே பணிக்கு வரும்பொழுது அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு அளித்து தங்கள் வீட்டில் வைத்திருக்கும் தென்னைக்குத் தக்க ஆலோசனைகள் பெற்று பலன் பெறக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.



மேலும் ஏற்கெனவே, வைத் திருக்கும் தென்னைக்குப் பூச்சி, நோய்த் தாக்குதல் தென்பட்டுப் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கை செய்ய வேண்டும் என்று விரும் பினாலோ, அல்லது குறும்பைகள் கொட்டி விடுவது, உரமிடுவது போன்ற ஆலோசனைகளுக்கு 456563 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தங்கள் பிரச்சினைகளைக் கூறினால், உடன் களப்பணியாளர்கள் உங்கள் இல்லத்திற்கு வந்து இலவச ஆலோசனைகள் வழங்குவார்கள்.

தாங்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தங்கள் விலாசத்தைக் கூறினால், அந்த விலாசங்கள் முகவரிப் பதிவேடு என்று அலுவலகத்தில் பராமரிக்கப் படும் பதிவேட்டில் பதிவு செய்யப் பட்டு அப்பகுதி வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை உதவி அலுவலரிடம் ஒப்படைக்கப்படும். விலாசம் கிடைத்த ஓரிரு தினத் திற்குள் மூதுரிமை அடிப்படையில் களப் பணியாளர்கள் உங்கள் வீட்டிற்கு வருவார்கள். உங்கள் தேவையைக் கேட்டறிந்து கன்றுகள் தருவதோ, வீட்டில் உள்ள தென்னைக்கு உரமிடப்பரிந்துரையோ அல்லது பயிர்ப் பாதுகாப்புப் பரிந்துரையோ செய்வார்கள். இது தவிர ஆடி மாதங்களில் ஒவ்வொரு களப் பணியாளர்களும் தங்கள் பகுதியில் ஒரு ஆடிப்பட்ட முனைப்பு இயக் கங்கள் ஏற்பாடு செய்து அவ் விழாவில் குறைந்தது 100 பேரை பங்கேற்க வைத்து, தென்னை சாகுபடி பற்றிய விவரங்களைக் கூறுவதுடன் செயல் விளக்க மாகவும் செய்து காட்டி வரு கின்றனர்.

சென்னை மாநகர மக்களுக் கோர் வரப்பிரசாதமாக உள்ள இது மாநகர தென்னை அபிவிருத்தித் திட்டம்,

[illegible] டவர் பிளாக்,
நந்தனம், சென்னை-[illegible]

456563 என்ற தொலைபேசியில் செயல்படுகிறது. சென்னை மாநகர மக்கள், தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.

மேற்படி அனைத்துப் பணி களையும் செய்ய நீங்கள் அணுக வேண்டிய முகவரி:

வேளாண்மை உதவி இயக்குநர்
மாநகரத் தென்னை
அபிவிருத்தித் திட்டம்,
நந்தனம், சென்னை-35

தொலைபேசி எண்: 456563

## மன்றமா, மண்டபமா?

வாதம் எதிர்வாதத்தோடு நடைபெறுகின்ற சொற்போர் பாட்டாக இருக்குமானால் லாவணிக் கச்சேரி என்கிறோம். அதுவே சொற்பொழிவாக இருக்குமானால்- பட்டி மன்றம், அல்லது பட்டிமண்டபம் என்கிறோம்.

பட்டிமன்றமா, பட்டிமண்டபமா - எது சரி?

கலைக் களஞ்சியத்தில் பார்த்தோமானால், 'பட்டி' என்ற சொல்லுக்கு... சிற்றூர், கிடை, துண்டுச் சீட்டு, அட்டவணை, Hall for the Meeting of Scholars என்றெல்லாம் ஏதேதோ பொருள் தரப்பட்டிருக்கிறது.

தொல்காப்பியம் செய்யுள் அதிகாரத்தில்- 'பட்டிமண்டபம்' என்ற சொல்லே காணப் படுகிறது.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்க்கப்பட்ட காலத்தில், புலவர் பெருமக்கள் கூடியிருந்து தமிழாராய்ச்சி செய்வதற்காகப் பாண்டிய மன்னனால் கட்டப்பட்ட மண்டபமே பட்டி மண்டபம் என்கிறது வரலாறு.

'பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்' என்ற பாடலடிகள் மணிமேகலையில் காணப் படுகின்றன.

'பகைபுறத்துக் கொடுத்த பட்டிமண்டபமும்'... என்று சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகிறது.

'பட்டி மண்டப மேற்றினை ஏற்றினை' என்று திருவருட்பா தெரிவிக்கிறது.

'பன்னலங் கலைதெரி பட்டி மண்டபம்' என்கிறது இராமாயணம்.

தேவாரத்திலோ- 'பட்டிமன் றன்ன...! என்ற சொற்கள் காணப்படுகின்றன.

'வரம்பு கடந்து நடக்கும் இருபாலரைக் குறிக்கும் சொல்லாகி விட்டது இது' என்று தமிழ்த் தாத்தா உ.வே.சா. கூறியிருக்கிறார்.

'இந்திரன்'



# அறிவியல் துளிகள்

மலேசியக்காடுகளில் ஹார்ன்பில்ஸ் எனும் பெரிய பறவைகள் வசிக்கின்றன. பெண் பறவைகள் முட்டையிட்டு அடை காக்கும் போது வெளியில் சென்று உணவு தேட முடியாது. அதனால், அதன் ஆண் பறவைகள் அலைந்து திரிந்து பழங்கள், இலைகள் போன்றவற்றைச் சேகரித்து அவற்றைத் தன்னுடைய வயிற்றிலுள்ள ஓர் மெல்லிய சவ்வை எடுத்து மூட்டையாகக் கட்டிக் கொண்டு வருகிறது. பெண் பறவைகள் அதை மகிழ்ச்சியாக உண்டு, முட்டைகளை அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும். தினந் தோறும் அதன் வயிற்றிலிருந்து மெல்லிய சவ்வை எடுத்துவிடுவதால் ஆண்பறவைகள் நாளடைவில் மிகவும் இளைத்துவிடும். சமயங்களில் தன் மனைவிக்காக உயிரையே விட்டும் விடுகிற அபாயமும் இருக்கிறது.





நியூசிலாந்து நாட்டில் உள்ள கிவி பறவைகள், உருவில் நமது நாட்டுக்கோழிகள் அளவுக்குத்தான் இருக்கின்றன. ஆனால் அவை இடும் முட்டையின் அளவு சாதாரணக் கோழிமுட்டையை விட எட்டுமடங்குப் பெரிதாக இருக்கும்.

உலகில் அதிவிரைவாக வளரும் தாவரம் பிரேசில் நாட்டிலுள்ள ஒரு வகைக் காளான்கள். இவை பிரேசில் காளான் என்றே அழைக்கப்படுகின்றன. இதன் விதைகள் நிலத்தில் விழுந்தவுடன் நிமிடத்திற்கு 5 மி.மீ. அளவுக்கு வளரத் தொடங்கும். 20 நிமிடத் திற்கு முழு உருவத்தையும் அடைந்து விடும். ஏராளமான தண்ணீரை உறிஞ்சிப் பருகுவது தான் இதன் காரணம்.



இரண்டு கைகள் ஒரே மாதிரி இருப்பதில்லை என்று கைரேகை ஜோதிடரி லிருந்து, ஃபாரன்சிக் நிபுணர்கள் வரை சொல்கிறார்கள். அதேபோல், ஒரே தாவரத் தில் உள்ள இரண்டு இலைகளும் ஒன்றுபோல இருப்பதில்லை. அவைகளிலும் சிறு சிறு வேறுபாடுகள் உண்டு.

வேண்டியவர்களுக்கு ஒன்றும், வேண்டாதவர்களுக்கு மற்றொன்றும் செய்வது மனிதர்கள் மட்டுமல்ல. தாவரங்கள் கூட இந்த வேலையைச் செய்கின்றன. ஒரு தாவரம் தன்னுடைய பக்கத்தில் தனக்கு வேண்டிய தாவரங்கள் மட்டும் வளர ஒருவித வேதியியல் பொருளைத் தூவி அனுமதிக்கும். பிடிக்காதவைகளை அதுபோல் வேறொரு வேதியியல் பொருளைப் பரப்பி வளரவிடாமல் செய்து விடும். இந்த உயிரியல் செயல்பாடுகளுக்கு விஞ்ஞானிகள் அல்லெலோபதி என்று பெயர் வைத்துள்ளனர்.





வேப்பமரப்பட்டைகளும், அதன் இலைகளும் மருந்தாகப் பயன்படுவதை நாம் அறிவோம். ஆனால், அவைகள் குடும்பக் கட்டுப்பாடு சாதனங்களாகவும் பயன் படுகின்றன என்று விஞ்ஞானிகள் ஆராய்ந்து சொல்லியுள்ளார்கள்.

எட்டுக்கால் பூச்சி (Spiders)களின் கால் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு 'ரோபாட்ஸ்' தயாரிக்கப்படுகிறது. எட்டுக் கால் அசைவுகளைக் கொண்டு எந்தவிதமான தரையிலும், திசையிலும் இதனால் நகர முடியுமாம்.





பெரும்பாலும் எட்டுக்கால் பூச்சிகளைப் பறவைகள் பிடித்து உணவாக உண்ணும். ஆனால் தென் அமெரிக்காவில் உள்ள ஒரு எட்டுக்கால் பூச்சி இனம் மட்டும் சிறுசிறு பறவைகளைப் பிடித்து உணவாக உட்கொள் கிறதாம். அந்தப் பூச்சிகளின் கால்கள் 3 முதல் 8 அங்குலம் நீளம் வரை பரவி நீண்டு உறுதியாக இருக்கின்றன. தங்கள் வலையில் மாட்டிக் கொண்ட பறவை, சிறு விலங்குகளைக் கடித்துத் தின்ன முடியவில்லை என்றால் அப்படியே வைத்து அதன் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டு மற்றவற்றை விட்டுவிடுகிறதாம்.

நாம் பொதுவாக இனிப்பு, கரிப்பு, உப்பு, புளிப்பு சுவைகளைச் சுவைத்து உணர்கிறோம். இவைகளை உணர நம் நாக்கில் 3000 உணர்வு மொட்டுகள் இருக்கின்றன. நம்மைவிட விலங்குகளுக்கு இவை அதிகம். பாருங்கள்-பன்றிக்கு 5,500 மொட்டுகள், பசுவுக்கு 3,500 மொட்டுகள், மானுக்கு 50,000 மொட்டுகள்.





ஒரு கிலோ தேனைச் சேகரிக்க ஒரு தேனீ 50 இலட்சம் மலர்களைத் தேடி ஓட வேண்டி யிருக்கிறது. இதற்காக அது சுமார் 1 இலட்சம் கிலோமீட்டர் தூரம் பறக்க வேண்டியிருக் கிறது. இப்படி அரும்பாடுபட்டு சம்பாதித்த தேனைத்தான் மனிதன் அவைகளை விரட்டிவிட்டு இலகுவாகக் கொண்டுவந்து விடுகிறான்.





இடத்துக்கு இடம், மனிதனுக்கு மனிதன், நேரத்துக்கு ஒரு பேச்சுப் பேசுபவர்களை அவர்கள் தங்கள் நிறத்தை அடிக்கடி மாற்றிக் கொள்கிறார்கள் என்பதால் பச்சோந்தி என்று அழைக்கிறோம். ஆனால் பச்சோந்திகள் தங்கள் சுற்றுப்புறத்தை ஒட்டி நிறம் மாறுவதில்லை. பச்சோந்திகளின் உடம்புக்குப் பின் அடிப்பாகத்தில் உள்ள மெல்லிய தோல் ஒளி ஊடுருவக்கூடியது. அதில் மஞ்சள், கருப்பு, சிவப்பு நிறமிச் செல்கள் நிறைந்துள்ளன. இந்த நிறமிச் செல்களை நீட்டி குறுக்குவதால் அதன் விளைவாகப் பல நிறங்கள் உருவாகின்றன. இது பச்சோந்திகளின் மனநிலையைப் பொறுத்து மாறுபடுகின்றன. கருமையாகவும், பய உணர்ச்சியின் போது வெளுமையுடன் மஞ்சள் புள்ளிகளும், கடுமையான வெயில் சூட்டின்போது பச்சை நிறத்தையும் கொண்டு மாறுகின்றன.

மனித உயிரின் எடை எவ்வளவு தெரியுமா? வெறும் 21 கிராம்தான். மனிதன் உயிர் பிரிவிற்கு முன்னும், பிரிந்த பின்னும் உடலை எடை போட்டுப் பார்த்த விஞ்ஞானிகள் இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள்.





மனித உடம்பில் உள்ள பாஸ்பரசை எல்லாம் திரட்டினால் 2000 தீக்குச்சிகள் தயாரிக்கலாம். கொழுப்பை எடுத்தால் 7 பார் சோப்புகள் தயாரிக்க முடியும். இரும்புச் சத்தைப் பிழிந்தால் ஒரு ஆணி செய்து விடலாம்.

ஆண்களைவிட பெண்களுக்குத்தான் கொழுப்பு அதிகம். ஆண்கள் உடம்பில் 15 சதவிகிதமும், பெண்கள் உடம்பில் 28 ச்தவிகிதமும் கொழுப்பு நிறைந்திருப்பதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.



## அரசு உதவிகளைப் பெற யாரை அணுக வேண்டும்?

## மறுவாழ்வுத்துறை

| திட்டத்தின் பெயர் | தகுதிகள் - நிபந்தனைகள் | அணுகவேண்டிய அலுவலர் |
|---|---|---|
| உடல் ஊனமுற்றோர் சுயவேலைவாய்ப்புத் திட்டம் | ஊனத்தின் தன்மை 40 சதவீதத்திற்கு மேல் இருக்க வேண்டும். 18 வயதுக்கு மேல் இருக்க வேண்டும். கடன்தொகை ரூ.7000 வரை மானியம் 1/3 பங்கு அதிகபட்சம் ரூ.1000. | சம்பந்தப்பட்ட மாவட்ட மறுவாழ்வு அலுவலர் |
| மூன்று சக்கர வண்டி | 12 வயதுக்கு மேலுள்ளவர்கள் இருகால்களும் இயங்காதவர்கள். | |
| மூன்று சக்கர வண்டி (சிறியது) | 12 வயதுக்குட்பட்டவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இரண்டு கால்களும் இயங்காதவர்கள். வருட வருமானம் 30,000க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். ஊனத்தின் தன்மையும் 60 சதவீதம் ஆக இருக்க வேண்டும். | |
| உடல் ஊனமுற்றோர்களுக்கு உபகார சம்பளம் 1 முதல் 8ம் வகுப்பு வரை | உடல் ஊனமுற்றவர்களாக இருக்க வேண்டும். மாணவர்கள் தொடர்ச்சியாக தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகாமல் இருக்க வேண்டும். ரூ.25 முதல் ரூ.100 வரை உதவித்தொகை அளிக்கப்படுகிறது. | |
| ஒன்பதாம் வகுப்பும் அதற்கு மேல் பயிலும் மாணவர்களுக்கு மாதம் • ரூ. 85 - 100 உதவித்தொகை | ஆண்டு வருமானம் ரூ.24,000க்குக் குறைவாக. | |
| விழி இழந்தோர்களை மணக்கும் ஆண், பெண்களுக்கு அளிக்கப்படும் ஊக்கத்தொகை | மணமகனோ, மணமகளோ முற்றும் கண் தெரியாமல் இருக்க வேண்டும். புதிய திருமணமாக இருக்க வேண்டும். அரசின் இதர சலுகைகளைப் பெறாதவராக இருக்க வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.1200க்குக் குறைவாக இருக்க வேண்டும். அரசின் ஊக்கத்தொகை ரூ.10,000த்தில் 7,000க்கு தேசிய சேமிப்புப் பத்திரமாகவும், ரூ.3,000 ரொக்கமும் வழங்கப்படும். | |
| பார்வையற்றோர்களுக்கு ஊன்றுகோல் மற்றும் கருப்பு மூக்குக் கண்ணாடி வழங்கும் திட்டம் | முற்றிலும் பார்வையற்றவர்களுக்கு ஊன்றுகோல் மற்றும் கருப்பு மூக்குக் கண்ணாடி வழங்கப்படும். இதன் மதிப்பு ரூ.150. | மாவட்ட மறுவாழ்வு அலுவலர் |
| காதொலிக் கருவி வழங்கும் திட்டம் | ஊனத்தின் தன்மையைப் பொறுத்து காது கேட்கும் கருவி இலவசமாக வழங்கப்படும். ஆண்டு வருமானம் ரூ.12,000க்குத் இருக்க வேண்டும். இதன் மதிப்பு ரூ.1,000. | |
| உடல் ஊனமுற்றவர்களுக்கு பெட்ரோல் மானியம் | உடல் ஊனமுற்றோர்களுக்கு இச் சலுகை அளிக்கப்படுகிறது. மாத வருமானம் ரூ.2,500க்கு மிகாமல் இருக்க வேண்டும். இவர்கள் பணிபுரியும் துறையிலிருந்து எந்த போக்குவரத்துப் படியோ, உதவியோ பெற்றிருத்தல் கூடாது. 2 குதிரை திறனுக்கு மிகாமல் உள்ள வாகனத்திற்கு மாதம் 15 லிட்டர் பெட்ரோல் விலையில் 50 சதவிகித மானியம் அளிக்கப்படுகிறது. 2.5 குதிரைத்திறனுக்கு அதிகமாகவுள்ள வாகனத்திற்கு மாதம் ஒன்றுக்கு 25 லிட்டர் பெட்ரோல் விலைக்கு 50 சதவீத மானியம் அளிக்கப்படும். | |
| ஆப்ரேஷன் போலியோ திட்டம் | இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறுவைச் சிகிச்சை மூலம் சரிசெய்தல், ஊன்றுகோல் வழங்குதல், முடநீக்குக் கருவிகள் வழங்குதல், தசை பயிற்சி அளித்தல், வங்கிக் கடனுதவி, பள்ளிச் சேர்க்கை, கல்வி உதவித் தொகை வழங்குதல், மூன்று சக்கர வண்டி, சக்கர நாற்காலி வழங்குதல் போன்ற மறுவாழ்வு உதவிகள் வழங்கப்படுகின்றன. | |
| உடல் ஊனமுற்றவர்களுக்கு 100 கி.மீ. வரை செல்ல இலவச பேருந்துச் சலுகை | ஊனமுற்றவர்கள் அனைவருக்கும் வேலைபயிற்சி கல்வி மற்றும் மருத்துவ சிகிச்சை பெற இச்சலுகை அளிக்கப்படுகிறது. மூளை வளர்ச்சி இல்லாத நபர்களுக்கு உடன் செல்லும் ஒரு நபருக்கும் சேர்த்து இலவச பயணச் சலுகை வழங்கப்படும். உடல் ஊனமுற்றோருக்கு மாதத்தில் 46 தடவைகள் செல்ல இயலும். | |

| | | |
|---|---|---|
| அடையாள அட்டை வழங்குதல் | ஊனத்தின் தன்மை 40 சதவீதமாக இருக்க வேண்டும். மருத்துவச் சான்று, இருப்பிடச் சான்று, புகைப்படத்தின் நகலுடன் விண்ணப்பிக்க வேண்டும். | மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள் |
| உடல் ஊனத்திற்கு பராமரிப்புத் தொகை வழங்குதல் | முற்றிலும் உடல் ஊனமுற்றவர்களாக இருக்க வேண்டும். ஊனத்தின் தன்மை 75 சதவீதத்திற்கு மேல் இருக்க வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.12,000க்குக் குறைவாக இருக்க வேண்டும். அரசின் இதர சலுகைகளைப் பெறாதவராக இருக்க வேண்டும். மாதம் ரூ.100 வீதம் 10 ஆண்டுகளுக்கு அல்லது ஆயுட்காலம் வரை இதில் எது குறைவோ அக்காலம் வரை அளிக்கப்படும். | |
| அரசு காது கேளாதோர் பள்ளி | 5 வயது முதல் 10 வயது குழந்தைகள். தங்குமிடம் மற்றும் உணவு இலவசம். நர்சரி பள்ளிக்கும் மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். | |



## சட்டச் சொற்கள் குறைவா?

“பொதுவாக, ‘சட்டம்’ என்று சொல்கின்ற நேரத்தில் சட்டத் துறையிலே தமிழ்மொழி போதிய அளவு வளரவில்லை என்று எனக்கு ஒருகுறை உண்டு. நம் முடைய தமிழில் சட்டத்திற்கான சொற்றொடர்கள் மிகமிகக் குறைவு. ஆங்கிலத்திலே இருப்பதைப் போன்ற தனிச் சொற்றொடர்கள் தமிழிலே இல்லை என்கின்ற குறைபாடு எனக்கு உண்டு.

சட்டமன்றம் என்று தமிழிலே சொல்கிறோம். ஆனால் ஆங்கிலத்தில் ‘Law Council’, (லா கவுன்சில்) என்று சொல்லவில்லை. ‘Legislative Assembly’ (லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி) என்று தனிச்சொல் இருக்கிறது. தமிழில் சட்டம் என்ற அதே சொல்லைத்தான் அங்கேயும் பயன்படுத்துகிறோம். அந்த மன்றத்தில் சட்டங்களை இயற்றுகிறோம். அந்தச் சட்டம் சட்டமாவதற்கு முன்பு ஆங்கிலத்திலே ‘‘Bill’’ (பில்) ஆக இருக்கிறது. தமிழில் தனிச் சொல் இல்லை. தமிழில் “சட்டமுன் வடிவு” என்று சட்டத்துடன் “முன் வடிவை” இணைத்து, சட்டமுன் வடிவு என்று தான் சொல்கிறோம். வேறு தனிச் சொல் தமிழிலே அதற்கு இல்லை.

தமிழிலே, இந்தச் சட்டத் துறையிலே இருக்கின்ற சொற்கள் மிகமிகக் குறைவு. இன்னும் அதிகச் சொற்களைத் தனித்தனிச் சொற்களை, சட்டத்துறையிலே ஆக்க வேண்டிய கடமை சட்ட வல்லுநர்களுக்கு, சட்டத்துறையிலே இருப்பவர்களுக்கு, நீதியரசர் உட்பட அனைவருக்கும் அந்தப் பொறுப்பு இருக்கிறது- கடமை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்”.

**-உலகத் திருக்குறள் மையம் நடத்திய முதல் திருக்குறள் சட்டவியல் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் (4.1.1997).**



# வாசகர் இதயம்

## அற்புதம் போங்கள்!

அரசியல் மேதைகளின் பொன்மொழிகள், செய்திச்சரம், கவிதை, கதை, வேலைவாய்ப்புச் செய்திகள் எல்லாம் தாங்கி தனிச் சிறப்புடன் வெளிவருகிறது தமிழரசு; ஆசிரியர் குழுவினர்க்குப் பாராட்டுகள்.

-டி. செல்வம்,
டி. சிங்காரவேல்,
எஸ். திவ்யா - கரும்பியூர்

அரசு உதவி பெற யாரை அணுக வேண்டும் என்ற தகவல்களும், அரசு ஆணைகளும் பயனுள்ளவையாக இருக்கின்றன; அரசு ஆணைகளைத் தமிழிலும் வெளியிடுவது நல்லது.

-அ. கந்தசுவாமி,
க. பத்மாவதி
திருப்பூர் - 4

அறிவியல் துளிகள் பகுதி அற்புதம் போங்கள்!

-க. பழனி முருகன்,
தேவர்கண்டநல்லூர்

‘பொன்மலர் நாற்றம் பெற்றாங்கு’ தலைசிறந்து விளங்குகிறது தமிழரசு. தொடர்க இத்தொண்டு.

-புலவர் பெ. இராஜசுந்தரம்,
சென்னை - 77.

மழைக்கால நோய்கள் பற்றிய மருத்துவக் கட்டுரை ‘காலத்தால் செய்த நன்றி’.

-சோலைப்பிரியன்
திருப்பத்தூர்

‘கலைஞரின் நெஞ்சுக்கு நீதி’ முக்கியப் பகுதிகளை அவ்வப்போது வெளியிட்டால், மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

-எம். ஏகாம்பரம்
பாகலா, சித்தூர்

தற்போது வரும் தமிழரசு, படிக்கப்பட வேண்டியதாக மட்டுமல்ல; பாதுகாக்கப்படவேண்டிய ஆவணமாகவும் இருக்கிறது. பாராட்டுக்கள்.

-கே. கனகசபை,
வேதாரண்யம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர்: ஆர். அண்ணாதுரை, உதவி இயக்குநர்: எம். [illegible]
ஆசிரியர் குழு: கே.டி. புகழேந்தி, ஜி. லோகநாதன், எம்.வி.எம். அசோகன், அமதிமாறன்,
பி.எஸ். ராஜேந்திரன், ஜி.பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள்: என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
[illegible] அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# ஆசிரியர் மடல்

இந்திய நாடு சுதந்திரம் அடைந்திடு முன்பே, அதாவது 1938லேயே நம் தமிழ்நாட்டில் இந்தி மொழி ஆதிக்கம் பற்றி மூண்டுவிட்ட அச்சம், இன்னமும் இலைமறை காயாகவே இருக்கிறது எனலாம்.

கயல், வில், புலி பொறித்த கொடியேந்தி- அன்றைய தினம் மாணவப் பருவத்தினராயிருந்த முதல்வர் கலைஞர் அவர்கள் ஆரூர் வீதிகளிலே இளைஞர்கள் பலரோடும் இந்தியை எதிர்த்து எழுச்சி முழக்கம் செய்தார். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா முதலானோர், மொழிப்போரில் ஈடுபட்டுச் சிறை புகுந்தனர். அதன் பிறகு 1948, 1952, 1965, 1983 என்று அன்னைத் தமிழ் காக்கும்- இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கும் மொழிப்போர் தமிழகமெங்கும் தொடர்ந்தது. அதன் விளைவு?...

ஏராளமானோர் இரத்தம் சிந்தினர்; எண்ணற்றோர் சிறை புகுந்தனர்; 'வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என முழங்கி ஏறத்தாழ ஐம்பது இளஞ்சிங்கங்கள் துப்பாக்கிக் குண்டேந்தியும், தீக்குளித்தும் இன்னுயிர் ஈந்தனர்!

குறிப்பாக 1965 ஜனவரி 25ஆம் நாள், 'இந்தியே நாட்டின் ஆட்சிமொழி', என்கிற 17வது அரசியல் சட்டப் பிரிவைத் தீயிட்டு, அன்று மூண்ட மொழிப் போரில் தம்முயிரைத் தியாகம் செய்தோர், உலக ஏடுகளாலெல்லாம் வியந்தெழுதப் பட்டு வரலாற்றுச் சிறப்படைந்தார்கள். 1967ல் ஆட்சிப் பொறுப்பேற்ற தமிழ் நாட்டரசு இந்தித் திணிப்பிற்கு இடமின்றிப் பண்டித நேருவின் வாக்குறுதியை நிறை வேற்றிடும் வகையில், இருமொழிக் கொள்கையை அறிவித்தது. அண்ணாவை அடுத்து முதல்வரான கலைஞர் அவர்கள், மொழிப் போர்த் தியாகிகளுக்கு அரசு நிதி வழங்கும் என்று அறிவித்தார். இப்போது தமிழ் வளர்ச்சிக்கெனத் தனியே ஓர் அமைச்சரே நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மொழிப் போர் நடந்த நாட்களில் மறக்க முடியாததாகத் திகழ்ந்திடும் 1996 ஜனவரி 25ஆம் நாள், ஆண்டுதோறும் வீரவணக்க நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. 'வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றித் தோள்கள்' என்கிற புரட்சிக் கவிஞரின் வைர வரிகளுக்கு எடுத்துக்காட்டான அந்த வீர மறவர்களுக்குத் "தமிழரசு"ம் தமது வீர வணக்கத்தைச் செலுத்துகிறது.






# தமிழரசு

16-2-1997 ரூ. 3







தமிழரசு
திருவள்ளுவராண்டு: 2028
மாசித் திங்கள் : 5
மலர்: 27 இதழ்: 16
16.2.1997
விலை: ரூ. 3

## இந்த இதழில் ...

2 மேதகு தமிழக ஆளுநர்
3 தமிழர் வரலாறு
6 செய்திச் சரம்
9 அண்ணாவின் சிறுகதை
11 இலக்கியச் சிந்தனை
- மா. செங்குட்டுவன்
17 தெரிந்து கொள்ளுங்கள்
19 தமிழுக்கு முதல் மரியாதை
22 வேளாண் பொருட்கள்
23 சட்டப்பேரவையில் முதல்வர் பதிலுரை
33 இன்பக் கடல் (நாடகம்)
- புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்
40 மாணவர் பக்கம்
41 சொல்லுங்கள் பார்க்கலாம்
42 அறிவியல் துளிகள்
43 எங்கள் ஊர் பிரச்சினை
46 நூல்நயம்
47 'ஈ-மெயில்'



# மேதகு தமிழக ஆளுநர்

கடந்த குடியரசு நாள்முதல், தமிழகத்தின் புதிய ஆளுநராக மேதகு பாத்திமாபீவி அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

உச்ச நீதிமன்றத்தின் முதலாவது பெண் நீதிபதியாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பெருமை இவருடையது. தமிழ்நாட்டின் முதல் பெண் ஆளுநராகவும், முதல் முஸ்லிம் ஆளுநராகவும் பதவியேற்றுள்ள இவர் 30.4.1927ல் பிறந்தது கேரள மாநிலத்திலுள்ள பதினம்திட்டா என்ற ஊராகும். எனவே தமிழ் நன்கு பேச வருகிறது.

"இந்தியாவிலேயே கேரளம்தான் கல்வி சிறந்த முதல் மாநிலமாகத் திகழ்கிறது. அதேபோல் தமிழகத்தையும் ஆக்கப்பாடுபடுவேன். எல்லோருக்கும் இனியவளாக இருப்பேன்" என்றெல்லாம் அவர் தெரிவித்திருப்பது, நம்மையெல்லாம் பெருமிதம் அடையச்செய்கிறது.

அறிவியலில் பட்டப்படிப்பும், சட்டக்கல்வியும் படித்துமுடித்து 1950 நவம்பர் முதல் கேரள மாநிலத்திலும் சிலவேறு மாநிலங்களிலும் வழக்கறிஞராகப் பணிபுந்திருக்கிறார் பாத்திமாபீவி அவர்கள்.

அதைத்தொடர்ந்து சார்புநிலை நீதித்துறை நடுவர் (முன்சீப்), வருமானவரி மேல் முறையீட்டு உறுப்பினர், கேரள உயர்நீதிமன்ற நீதிபதி என்கிற பதவிகளிலெல்லாம் இருந்துவிட்டு, உச்சநீதிமன்ற நீதிபதி பதவி வகித்து ஓய்வுபெற்றார். 1993ல், தேசிய மனித உரிமைகள் கமிஷன் உறுப்பினர் ஆனார்.

25.1.1997ல், 16வது–மேதகு தமிழக ஆளுநராகப் பதவியேற்றுள்ள இவருக்கு இரண்டு சகோதரர்களும், 5 சகோதரிகளும் உண்டு.

திருமணமாகாத இவர், விருதுகள் பல பெற்றவர். சமூக நலப் பணிகளில் சளைக்காமல் ஈடுபட்டுவருபவர்.

சென்னையில் இந்த ஆண்டு (26.1.1997) நடைபெற்ற இந்தியக் குடியரசு நாள் விழாவில், மேதகு தமிழக ஆளுநர் பாத்திமா பீவி அவர்கள் தேசியக் கொடி ஏற்றி வைத்து ... அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொ...





# தமிழர் வரலாறு

மாண்புமிகு முதல்வர் கலைஞர்

டாக்டர் எஸ்கிருஷ்ணசுவாமி 'ஐயங்காரின்' தமிழ் இலக்கியத்தின்பொற்காலம்' 'தென்னிந்திய வரலாற்றின் தொடக்கம்' என்ற நூல்களும் பி.டி.ஸ்ரீனிவாச ஐயங்காரின் 'தமிழர்வரலாறு' மற்றும் 'ஆரியர்களுக்கு முற்பட்ட தமிழ்ப் பண்பாடு' என்ற நூல்களும் பேராசிரியர் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியின் 'பாண்டிய அரசு,' 'சோழர்கள்' என்ற நூல்களும் டாக்டர் கே.கே.பிள்ளயின், 'தென்னிந்தியாவும் இலங்கையும் மற்றும் தமிழர்களின் 'சமூக வரலாறு'/என்ற நூல்களும் முதன் முதலாக இத்துறையின் அறிஞர் பெருமக்கள் வழங்கிய நுண்மாண் நுழைபுலமுடைய படைப்புகளில் சிலவாகும். இவை, இந்திய வரலாறு குறித்து, அதாவது, பெரிதும் வட இந்திய நோக்கில் எழுதப்பட்ட வரலாறு குறித்து, அப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த கோட்பாட்டிற்குச் சவாலாக அமைந்தன. அறிஞர் பெருமக்களின் இத்தகைய படைப்புகளும் இவற்றைத் தொடாந்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளும், ஆரியர்களுக்கு முற்பட்ட இந்திய வரலாற்றைத் தெளிவாக நிலை நிறுத்தியுள்ளன.

தமிழர் பண்பாடு ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என பி.டி.ஸ்ரீனிவாச ஐயங்கார் கருதுகிறார். எனவே, இதனை ஆரியர்களுக்கு முற்பட்ட தமிழர் பண்பாடு என்றெடுத்துரைத்துள்ளார்.

தமிழர்கள் தத்துவத்தையும் வாழ்க்கை முறையையும்பற்றிய அறிதலில் தனித்தன்மை வாய்ந்தவர்கள். பழங்காலத் தமிழர்கள் மக்கள் வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்ற பூமிப்பகுதியைப் பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று இயல்பாக ஐவகை நிலங்களாகப் பிரித்திட இயலும் என்று கண்டனர். இந்த வகைப் பாட்டின் மிக முக்கிய அம்சம் அவை வெறும் புவியியல் வகைப் பாடாக மட்டுமின்றி மனித



சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சியைக் காட்டுவதாகவும் இருக்கின்றன என்பதேயாகும்.

பாலை, மணல் பரந்து வறண்டு கிடக்கும் நிலப்பகுதி இது மனிதர் நாடோடியாகத் திரிந்த நிலை. குறிஞ்சி, மலையும் மலை சார்ந்த நிலப்பகுதி. இது வேட்டையாடி உயிர் வாழ்ந்த நிலை. முல்லை, காடும் காடு சார்ந்த பகுதிகளும். இது கால்நடைகளைப் பேணிவாழ்ந்த நிலை. மருதம், ஆற்றுப் பள்ளத் தாக்குப்பகுதி இது வேளாண்மையை மேற்கொண்ட நிலை. நேய்தல், ஆறு கடலோடு கலக்கும் பகுதி. இது மனிதகுல வளர்ச்சியில் மீன்பிடித்தல், கலம் செலுத்தல் ஆகிய நிலை.

பிந்தைய நூற்றாண்டுகளில் தமிழர் சமுதாயம், சமூகப் பண்பாட்டு ஒழுக்கத்திற்கு வட நாட்டிலிருந்துவந்த மிகப் பெரிய முதல் அறை கூவலை எதிர் கொள்ள வேண்டியிருந்தது.

அறிவியல் தாகம், திடமான கருத்துகள் (Concrete Ideas), தங்களுக்கே உரிய கற்பனைகள் ஆகியவற்றில் தமிழர்கள் பெருவிருப்பம் கொண்டிருந்தனர். இவற்றின் வெளிப்பாடே அக்காலத் தமிழர்களின் தனித்திறமாக இருந்தது என்று பி.டி.ஸ்ரீனிவாச ஐயங்கார் குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே, ‹அறிவியல் சிந்தனையை வெளிப்படுத்த தமிழ் தனிச்சிறப்புடன் பொருத்தமாக உள்ளது எனலாம். வட மொழியின் தனித்திறமாகத் தத்துவத்தாகமே பெரிதும் காணப்படுகிறது. வடமொழி நூல்கள், பண்பியலான (Abstractions) கருத்துக்களைப் பொதும் சித்திரிக்கின்றன. அவ்வாறான கருத்துகள் தத்துவத்தின் உயிர் மூச்சாக விளங்குபவை.

அண்மையில், மேல்நாட்டுச்

சிந்தனைகள் இந்திய சமூகத்தின் மீது தங்கள் செல்வாக்கைச் செலுத்தவும் மாற்றியமைக்கும் வகையில் அறைகூவல் விடுக்கவும் தொடங்கியுள்ளன. மேலை நாடுகள் நம் நாட்டை நோக்கி விடுத்துள்ள அறை கூவல்களாவன.

அரசியல் அடிப்படையில் சட்டத்தின் ஆட்சி என்ற கோட்பாடு புதுமையான ஜனநாயக அறிவு கட்டுக்கோப்பான அமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட அதிகாரவர்க்கம், பொருளாதார அடிப்படையில், முறைப்படுத்தப்பட்ட வேளாண் சீர்த்திருத்தங்கள் தொழில் பொருளாதாரம் அமைப்பு ரீதியான தொழிலாளர்கள் போக்குவரத்துத் தகவல் தொடர்பு வளர்ச்சி; சமூக அடிப்படையில், சமத்துவச் சிந்தனைகள், குடிமையுரிமைகள்; அனைவருக்கும் கல்வி கற்க சம வாய்ப்புகள் மத அடிப்படையில் இறைவனைத் தந்தையாகவும் மனிதர்கள் அனைவரையும் சகோதரராகளாகவும் பாவிக்கின்ற கிறித்துவத்தின் சிந்தனைகள் மனித நேயத்துடன் ஆற்றப்படும் சமயப் பணிகள்.

அரசியல் அடிப்படையில் ஏதேச்சாதிகாரமும்,பொருளாதார அடிப்படையில் நிலப்பிரபுத்துவ முறையும், சமூக அடிப்படையில் சாதிப் பாகுபாடும், மத அடிப்படையில் வைதீகத்தாக்கமும் கொண்டிருந்த இந்திய சமூகம், 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து படிப்படியாக மேலை நாடுகளின் இத்தகைய தனித்தன்மை வாய்ந்த அறை கூவல்களை எதிர்கொள்ளத் தொடங்கியது.

அனைத்து இந்தியாவிலும் முதன் முதலில் வங்காளம்தான் இம்மாறுதலை ஏற்றுக்கொண்டது





★ **அறிவினாலும், ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை. அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால், வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.**

என்பது ஒப்புக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். வங்காளத்தில் சமூக சீர்த்திருத்தக் கருத்துக்களை இராஜா ராம் மோகன்ராய், பிரம்ம சமாஜம் மூலம் தீவிரமாகச் செயற்படுத்த முனைந்தார்.

ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி இருபதாண்டுகளிலும், 20-ஆம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளிலும் பெரும்பான்மையான இந்தியர்களின் உணர்வுகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. இதற்குப் பின்வரும் மூன்று புதிய கூறுகள் முக்கியமான காரணங்கள் ஆகும்.

மதமாற்றம் குறித்து அரசின் நடவடிக்கைகளில் ஐயப்பாடு.

சமூக சீர்த்திருத்தங்களை மேம்படுத்த பிரிட்டிஷ் அரசு காட்டிய பெருந்தயக்கமும் மிகுந்த எச்சரிக்கையும்.

ஆன்மீக உணர்வையும் தேசிய உணர்வையும் மறுதலிக்கும் நிலையிலிருந்து இந்தியாவை மீட்பதற்குச் சமய இயக்கங்கள் தோன்றின.

பெரும்பாலான இந்து இளைஞர்கள், இந்து மதம் சம்பந்தப்பட்ட அனைத்தையும் பாதுகாத்து, போற்றிப் பெருமைப் படுத்த இச்சூழ்நிலைகள் வழி கோலின. அதன் விளைவாக, தொடக்க கால சமூக சீர்த்திருத்த வாதிகள் மேற்கொண்ட முயற்சிகள் பெருமளவில் பயனற்றுப் போயின.

ஆனால், இந்தியாவின் பொதுவான இப்போக்கிற்கு மாறாக, சென்னை மாகாணத்தில், குறிப்பாகத் தமிழ் பேசும் பகுதிகளில் 1910-ஆம் ஆண்டு முதல் புதியதொரு சூழ்நிலை உருவாகத் தொடங்கியது.

1925ம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரசிலிருந்து பெரியார் பிரிந்து வந்தபோது, இந்தியாவில் சமூக சீர்த்திருத்த இயக்க வரலாற்றில் மாபெரும் மாற்றம் ஏற்பட்டது.

இந்திய சமூகத்தின் இரு பெரும் தீமைகளை, அதாவது சாதிப் பாகுபாடு, பெண்ணடிமை ஆகிய இவ்விரண்டையும் ஒழிப்பதற்குக் புதிய அணுகுமுறையைக் கொண்டுவரும் நோக்குடன், அவர் சுயமரியாதைப் இயக்கத்தைத் தொடங்கினார். இது தனி மனிதனின் சுயமரியாதையைப் பாதிக்கிற, அனைத்துப் பாரம்பரிய அமைப்புகளுக்கும், சமூகப் பழக்க வழக்கங்களுக்கும் எதிரானதாகும். பொதுவாகக் கூறினால். இதில் கற்றறிந்தோர் கூட்டம் மட்டுமின்றி, சென்னை மாகாணத்தின் சமூகப் பிரச்சினைகளில் ஆர்வம் கொண்ட பத்திரிகைகளும், அரசியலைத் தலையாய நோக்கமாகக் கொண்டிருந்த பத்திரிகைளும் மாறுபட்ட கருத்தைக் கொணடிருந்தன.

சங்கரன் நாயர் தெரிவித்துள்ள கருத்துகள், ஆங்கிலேயர் குறித்து நீதிக்கட்சியும் சுயமரியாதை இயக்கமும் கொண்டிருந்த அணுகுமுறைக்குப் பெரிதும் ஆதரவாக உள்ளன. என்பதைக் காணலாம்.

தமிழ்நாட்டின் வரலாற்று ஆய்வு என்பது ஒரு மாகாணம் பற்றிய அல்லது இந்தியாவின் ஒரு மாநிலம் பற்றிய ஆய்வு என்பதோடு மட்டுமல்லாமல், தென்னிந்திய வரலாற்றின் அடிப்படை ஆதாரமாகவும் அது திகழ்கிறது.

அவ்வாறு பார்க்கும்போது இது முழுமையான இந்தியத் துணைக் கண்ட சமுதாயம் மற்றும் பண்பாட்டை உருவாக்க அடித்தளமாக அமைந்த இரு பெரும் கூறுகளில் ஒன்றைப் பற்றிய ஆய்வாக அமைகிறது.

இரண்டாவதாக, தமிழர்களின் வரலாறு என்பது இந்திய வரலாற்றையும் கடந்த ஒன்றாகும், இதனை, பரந்துபட்ட பண்டைய தமிழ்ப் பண்பாட்டின் வரலாறு எனக் கொள்ளலாம். தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியப் பெருநிலப் பகுதியில் பரவியுள்ள நம் தமிழ்ப் பண்பாடு புகழார்ந்த பழம் பெருமையையும் பன்னாட்டிலும் பரவி வாழும் இனம் தமிழினம் எனும் நிலையான வரலாற்றுப் பெருமையையும் கொண்டுள்ளது.

மேலைநாட்டு அறிஞர்கள் பெருமைக்குரிய இந்தியா என்று குறிப்பிட்டுள்ள போதிலும், இந்திய நாட்டு மக்கள் இந்நாட்டை விட்டுக் குடிபெயர்ந்து பிறநாடுகளில் குடியேறியுள்ள முறையை ஆராய்வோமாயின், உலகம் முழுவதும் சென்று புதிய பகுதிகளைத் தங்கள் சொந்த நாடாக ஆக்கிக் கொண்டவர்கள் பெரும்பாலும் தமிழர்களே என்பது நன்கு விளங்கும்.

முக்கியமாகத் தமிழ் இனம் பரவிய காரணத்தினால்தான் பெருமைமிக்க இந்தியா என்ற கருத்தே தோன்றியது.

ஆகவே, இந்தப் புதிய பரிமாணங்களில் தமிழர் வரலாறு குறித்த ஆய்வுப் பணிகளைப் பரந்த அளவில் மேற்கொள்ள வேண்டுமேயல்லாது, அதனை இந்தியாவின் ஒரு மாநிலத்தின் வரலாறு என்ற குறுகிய கண்ணோட்டத்துடன் மேற்கொள்ளலாகாது. அண்மைக் காலத்தில் பல அயல்நாட்டு வரலாற்றறிஞர்கள் தமிழர் அல்லாத இந்திய வரலாற்றறிஞர்களைக் காட்டிலும் உயரிய அளவில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, தமிழர்கள் பற்றியும் தமிழ்ப் பண்பாடு பற்றியும் அறிந்து கொள்வதற்குப் பல்வகை நூல்களைப் படைத்துள்ளனர்.

## தனித்தன்மை

நாட்டின் பிறபகுதிகளைச் சேர்ந்த இந்திய வரலாற்றறிஞர்களும் எவ்விதப் பேதமுமின்றித் தமிழர்கள் பற்றிய ஆய்விற்குத் தங்கள் பங்களிப்பினை ஆற்ற முன்வர வேண்டும். இந்தக் கருத்துக்களைத் தெரிவிப்பதன் மூலம் மொழி சார்ந்த குறுகிய நோக்கத்தையோ, இனவெறியையோ வளர்ப்பதல்ல என் நோக்கம். மாறாக, சில கருத்துக்களை ஆழமாக உள்ளத்தில் பதிய வைப்பதே என்னுடைய நோக்கமாகும்.



முதலாவதாக – தமிழர் சமுதாயம் என்பது ஒரு மாநிலம் சார்ந்ததல்ல. அது உலகளாவியது.

இரண்டாவதாக – தமிழர்கள் புகழ்பெற்ற கடந்த காலத்தையும் அடிப்படையில் வேறுபட்ட தனித்தன்மை வாய்ந்த செவ்விய சமூக பண்பாட்டுப் பண்பு நலன்களையும் கொண்டுள்ளனர்.

மூன்றாவதாக, தமிழர்கள் இந்திய சமுதாயத்தின் அடிப்படை என்ற வகையில் இந்தியப் பண்பாட்டின் பரிணாம வளர்ச்சிக்குப் பல்வேறு வகையிலும் குறிப்பிடத்தக்க வகையில் பங்காற்றியுள்ளனர்.

தமிழர்களின் வரலாறு தொடர்பான இந்த உண்மைகளை இந்தியாவிலுள்ள எந்தவொரு வரலாற்றறிஞரும் பாரபட்சமின்றி அறிந்தேற்க வேண்டும். அவ்வாறு செய்வது இந்திய மக்களின் உண்மையான முழுமையான சிறந்த முறையிலான வரலாற்றை உருவாக்கும் பணியில் பேருதவியாயிருக்க வழிவகுக்கும்.

**(சென்னைப் பல்கலைக் கழகத்தில் டிசம்பர் 27-ம் தேதி நடந்த இந்திய வரலாற்றுப் பேரவையின் 57-வது மாநாட்டில் நிகழ்த்திய ஆங்கில உரையின் தமிழ்ச் சுருக்கம்.)**

# செய்திச்சரம்

## அண்ணா நினைவு இல்லம் புதுப்பொலிவு பெறும்!

**த**மிழக அரசின் சார்பில், காஞ்சிபுரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் இல்லம் மிகப் பொலிவுடன் அமைவதற்கு, பேரறிஞர் பெருந்தகை அண்ணா நினைவு இல்லத்தில் உள்ள புகைப்படக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ள அனைத்துப் புகைப்படங்களும் 'லேமினேசன்' செய்து நவீனப்படுத்தப்படும்; இதற்கும் பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தின் கட்டடப் பகுதிகள் சீரமைத்திடவும், புதிய மின் பணிகள் முதலான பணிகளை ரூ.4.20 இலட்சம் செலவில் மேற்கொள்வதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

## பத்திரிகையாளர் ஓய்வூதியம்!

**ந**லிந்த நிலையில் உள்ள ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் தமிழக அரசின் திட்டப்படி, மாதந்தோறும் வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையை முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 1.8.1996 முதல் ரூ.500/-லிருந்து ரூ.1,000-ஆக உயர்த்தி வழங்கினார். அதன்படி தற்பொழுது 40 பத்திரிகையாளர்கள் பயன் பெற்று வருகிறார்கள்.

இந்நிலையில் நலிந்த நிலையில் வாழும் பத்திரிகையாளர்கள், மற்றும் பல ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்கள் பயன் பெறும் வகையில் அவர்களுக்குரிய ஓய்வூதிய விதிகளைத் தளர்த்தி, முதலமைச்சர் அவர்கள் தற்போது ஆணையிட்டுள்ளார், இந்தப் புதிய ஆணையின்படி-

ஓய்வூதியத்திற்காக விண்ணப்பம் செய்பவரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.5,000த்திற்கு மேல் இருத்தல் கூடாது என்னும் விதி தளர்த்தப்பட்டு ஆண்டு வருமானம் ரூ.12,000 என்று உயர்த்தப்படுகிறது.

விண்ணப்பம் செய்பவர், பணிபுரிந்த நிறுவனங்களிடமிருந்து பணிக்கொடை (கிராஜூட்டி) மற்றும் ஓய்வூதிய மாகப் பெற்ற தொகை ரூ.10,000க்கு மேல் இருத்தல் கூடாது என்னும் விதி தளர்த்தப்பட்டு, ரூ.25,000 வரை என்று உயர்த்தப்படுகிறது.

விண்ணப்பம் செய்பவர் பணியிலிருந்தபோது எந்த ஒரு குறிப்பிட்ட ஆண்டிலும் வருமானம் ரூ.24,000-க்கு மேல் இருந்திருக்கக் கூடாது என்னும் விதியைத். தளர்த்தி ரூ.40,000-க்கு மேல் இருக்கக் கூடாது என்று உயர்த்தப்படுகிறது.

இந்தப் புதிய ஆணையினால் ஏறத்தாழ மேலும் 100 நலிவுற்ற பத்திரிக்கையாளர்கள் பயன் பெறுவார்கள்.

## சென்னையில் புதிய மெட்டல் ஹைலைடு லாம்ப் தொழிற்சாலை

**த**மிழ்நாடு அரசின் 'டிட்கோ' நிறுவனம் அமெரிக்காவைச் சேர்ந்த திருவாளர்கள் 'அட்வான்ஸ்டு லைட்டிங் டெக்னாலஜி' மற்றும் 'ஆக்ஸஸ் டெக்னாலஜி' ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து கூட்டுத் துறையில் இந்தியாவிலேயே முதலாவதாக ரூ.26 கோடி மதிப்பீட்டில் 100 சதவிகித ஏற்றுமதியுடன் கூடிய 'மெட்டல் ஹைலைடு லாம்ப்' தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றைச் சென்னை ஏற்றுமதி வளாகத்தில் 1997 இறுதிக்குள் அமைத்திட, மாண்புமிகு முதல்வா கலைஞர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்.

ஆண்டுக்கு 5,76,000 விளக்குகளைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ள இந்நிறுவனத்தின் மூலம் 150 நபர்கள் வேலை வாய்ப்பைப் பெறுவர்.

## விருது பெற்ற அரும்புகள்

**தீ**ரச் செயல் புரிந்த பொது மக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு ரூ.2,000 மதிப்புள்ள தங்க முலாம் பூசிய அண்ணா வீரப்பதக்கமும், ரூ.2,000க்கான காசோலையும், தமிழ்நாடு அரசு குடியரசு நாள் விழாவின்போது வழங்கி வருகிறது. இவ்வாண்டு தீரச் செயல் புரிந்த பின்கண்ட நான்கு நபர்கட்கு, அண்ணா விருதினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குடியரசு தின விழாவில் வழங்கிச் சிறப்பித்தார்.

1. செல்வன் பெ. சந்தீப், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம்.

2. செல்வன் பெ. கார்த்திக், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம்

3. செல்வி கா. நஸ்ரின் சுல்தானா, சிதம்பரனார் மாவட்டம்

4. செல்வன் ஜெ. தமிழன்பன், செங்கல்பட்டு அண்ணா மாவட்டம் (தற்போது எம்.ஜி.ஆர். மாவட்டம்).



## சட்ட ஆணையம்

**மா**நில சட்ட ஆணையத்தைக் கீழ்கண்டவாறு திருத்தி அமைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

1. தலைவர் நீதி அரசர் எம்.எம். இஸ்மாயில்.

2. முழுநேர உறுப்பினர்கள்: நீதி அரசர் பத்மினி ஜேசுதுரை திரு. எம். முனிராமன்(முன்னாள் சட்டத் துறைச் செயலாளர்).

3. பகுதி நேர உறுப்பினர்கள்: திரு. கே. மோகன் தாஸ் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி.

திரு. சி. ராமகிருஷ்ணன், ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி.

4. முழு நேர உறுப்பினர் செயலர் அரசு கூடுதல் செயலர், சட்டத்துறை, சென்னை-9.

## சரிகை நிறுவன ஈவுத்தொகை

**செ**ங்கை அண்ணா மாவட்டம் காஞ்சிபுரத்தில் உள்ள தமிழ்நாடு சரிகை நிறுவனத்தில் தமிழக அரசு ரூ.13.20 இலட்சம் பங்கு முதலீடு செய்துள்ளது. தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான இந்நிறுவனம் 1973-ல் துவங்கப் பட்டது. இந்நிறுவனம் 1995-96-ஆம் ஆண்டு ஈட்டிய லாபத்தில் அரசின் மூலதனத்திற்கு வரவேண்டிய பங்கு ஈவுத்தொகை ரூ.2.64 இலட்சத்திற்கான காசோலையை மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. என்.கே.கே. பெரியசாமி அவர்கள் மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் கலைஞர் அவர்களிடம் வழங்கினார்.

## மதிப்பிற்குரிய மாணவர்கள்

**டெ**ல்லியில் 26.1.97 நடைபெற்ற குடியரசு நாள் அணிவகுப்பில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலத்தைச் சார்ந்த 104 மாணவர்கள் பங்கேற்றனர். இவர்கள் பெருமைக்குரிய "பிரதமர் பதாகைப் போட்டியில்" கலந்து கொண்டனர். இப்போட்டியில் கலந்து கொண்ட செல்வன் எஸ். விஜயகுமார், செல்வன் பங்கஜ் சர்மா, செல்வி மோகனா அப்பாராவ் ஆகிய மூன்று தேசியப்படை மாணவர்கள் இந்தியாவிலேயே சிறந்த மாணவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தங்கப் பதக்கத்தை வென்றனர்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலத் துணை டைரக்டர் ஜெனரல் கமோடர் ஆர். சுப்பையா இம்மாணவர்களின் சிறப்பான செயலுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

அணிவகுப்பில் கலந்து கொண்ட தமிழ்நாடு, பாண்டிச்சேரி மாநிலம் மற்றும் அந்தமான் மண்டலத்தைச் சேர்ந்த தேசிய மாணவர் படையினர் இந்தியாவிலேயே இரண்டாம் இடம் பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**அரக்கோணத்தில் மத்திய தொழில் பாதுகாப்புப் படையின் பத்தாவது பிரிவின் நிறைவுநாள் விழாவில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ.முல்லைவேந்தன் அவர்கள் கலந்துகொண்டு அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார் (3.2.97).**



## 'நேரு யுவகேந்திரா' நிதியுதவி !

தமிழகத்தில் அண்மையில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளத்தால் அதிக அளவில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களான நாகை காயிதேமில்லத், சர்.ஏ.டி. பன்னீர் செல்வம், தஞ்சை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், வள்ளலார், இராமசாமி படையாட்சி, செங்கை அண்ணா மாவட்டம், செங்கை எம்.ஜி.ஆர்., சென்னை மற்றும் காரைக்கால், பாண்டிச்சேரி ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை மேலும் அளிக்கும் பொருட்டு மத்திய அரசின் நிறுவனமான நேரு யுவகேந்திரா அமைப்பின் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.50 ஆயிரம் வீதம் 12 மாவட்டங்களுக்கு ரூ.6 இலட்சத்திற்கான காசோலைகளை மத்திய இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத் துறை இணை அமைச்சர் திரு. ஆர். தனுஷ்கோடி ஆதித்தன் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்து வழங்கினார்.

## நினைவகங்கள் சீரமைப்புப் பணி

தமிழகத்தில் உள்ள அரசின் பல்வேறு நினைவகங்கள் புதுப் பொலிவுடன் அமைந்திட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க நினைவகங்களின் மேம்பாட்டுப் பணிகளுக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

சென்னையில் உள்ள அண்ணா சதுக்கம், வள்ளுவர் கோட்டம், மகாகவி பாரதியார் இல்லம், சீரணி அரங்கம், காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா இல்லம், கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை, நாகர் கோவில் ஜீவா மணி மண்டபம் அமைத்தல் ஆகிய பணிகளின் மேம்பாட்டினையொட்டி செயலாக்கத்தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு வ. முல்லை வேந்தன் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை திரு நா.ச. பழனியப்பன், இ.ஆ.ப., திரு. பா. செயப்பிரகாசம், இணை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, திரு. இரா.பா. கார்மேகம், துணை இயக்குநர் (நினைவகங்கள்), பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), திரு என். தங்கவேலு, மேற்பார்வை பொறியாளர், செயற்பொறியாளர்கள், மின் செயற்பொறியாளர் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறையைச் சேர்ந்த வள்ளுவர் கோட்டம், மாநிலச் செய்தி நிலையம், கலைவாணர் அரங்கம், இராஜாஜி மண்டபம், அண்ணா சதுக்கம் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் பங்கேற்றார்கள்.

30.1.1997 அன்று நடைபெற்ற இந்தச் செயலாக்க ஆய்வுக் கூட்டத்தில் நினைவகங்களின் மேம்பாட்டுப் பணிகள் விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

## சுய வேலைவாய்ப்புத் திட்டம்

மாண்புமிகு மத்திய தொழில் அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் தமிழகத்தில் "பிரதமரின் சுயவேலை வாய்ப்பு திட்டத்தின்" செயல்பாடு (PRIME MINISTER'S ROZGAR YOJANA) குறித்து, தலைமைச் செயலகத்தில் 1.2.97 அன்று ஆய்வு செய்தார்.

தமிழ் நாட்டில் இத்திட்டத்தின் கீழ் 1996-97-ஆம் ஆண்டிற்கான 21,800 பயனாளிகளுக்குக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 8,708 நபர்களுக்குக் கடன் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் 4,861 நபர்களுக்குத் தொழில் முனைவோர்க்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள், இந்த ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எட்டும் வகையில் அனைவருக்கும் விரைவாகக் கடன் வழங்க வங்கிகள் தக்கநடவடிக்கைஎடுக்கவேண்டும்.

வரும் 9-ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் படித்து வேலை வாய்ப்பற்ற 20 இலட்சம் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் தேவையான அளவிற்கு நிதி ஒதுக்கீடுசெய்யப்பட உள்ளது.

தமிழகத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 28,855 நபர்களுக்கு ரூ.15,814.51 இலட்சம் வரை கடன் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தைப் பொறுத்த வரை கடன் தொகையில் சுமார் 70 விழுக்காடு அளவிற்குத் திரும்பச் செலுத்தப்பட்டு வருகிறது.

தற்போது இலக்கு ஆண்டின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் இந்த இலக்கு ஆண்டின் இறுதியில் தான் எய்தப்படுகிறது.

பயனாளிகள் விரைந்து பயன் பெறும் வகையில் இனி 'காலாண்டு இலக்கு' நிர்ணயித்து அந்தக் காலகட்டத்திற்குள்ளாகவே இலக்கை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.



அறிஞர் அண்ணா நினைவு நாள் பிப்ரவரி-3



# மனைவியும் மரப்பொம்மையும்

அறிஞர் அண்ணா

ஒரு வீட்டில்,
மனைவி ஒரு மரப்
பொம்மை வைத்து
தினந்தோறும் பூஜை
செய்து வந்தாள்.
அவள் அப்படி
மரப்பொம்மையை
வைத்து
எப்பொழுதும் பூஜை
செய்து
கொண்டிருப்பதைக்
காண மாமியாருக்குச்
சகிக்கவில்லையாம்.
அதைத் தன்
மகனிடம் சொல்லி
கண்டிக்கச் செய்தாள்.
அந்த மகன் தன்
மனைவியை
அழைத்து, 'நீ இனி
இந்த
பொம்மைகளைத்
தொடக்கூடாது'
என்று சொல்லி
பொம்மையை
எடுத்து, தெருவில்
வீசி எறிந்தான்.
அதைக் கண்ட அந்த
மனைவி, 'நான்
அந்த பொம்மையை
விட மாட்டேன்.
கணவனைப்
பிரிந்தாலும்
பொம்மையை
விட்டுப்
பிரியமாட்டேன்'
என்று கூறி, அந்தப்
பொம்மையை
எடுத்துக்கொண்டு
வீட்டை விட்டு
வெளியேறினாள்.
போகிற நேரத்தில்,
பொழுது
சாய்ந்துவிட்டது.
வழியிலே காடாக
இருந்ததால்
கொஞ்சம் தாழ்ந்த
ஒரு மரத்திலேறி
உட்கார்ந்து,
பொம்மையையும்
கையில் வைத்துக்
கொண்டு
மரக்கிளையில்
சாய்ந்து
கொண்டிருந்தாள்.
நள்ளிரவு வந்தது.
சில திருடர்கள்
எங்கோ திருடிய
பொருள்களைக்
கொண்டுவந்து அந்த
மரத்துக்குக் கீழே
வைத்துக்கொண்டு,



பங்கு பிரித்துக் கொண்டிருந்தார்கள். மேலே மரக்கிளையில் அமர்ந்திருந்த அந்தப் பெண்மணிக்குத் தூக்கம் வந்துவிட்டதால் அவர் கையிலிருந்த பொம்மை கைநழுவித் திருடர்கள் தலையில் விழுந்தது. உடனே, அவர்கள் திடுக்கிட்டு மேலே ஏதோ குட்டிச்சாத்தான் இருந்து கொண்டுதான் இந்த பொம்மையைப் போடுகிறது, என்ற மூடநம்பிகையால் பயந்து அங்கிருந்து ஓட்டம் எடுத்தார்கள். பொழுது விடிந்ததும், அவள் மரத்திலிருந்து கீழே இறங்கிவந்து பார்த்தாள். அங்கு ஏராளமான தங்க நகைகள் இருப்பதைக்கண்டாள். விட்டிலே இருந்த கணவனுக்கு மனைவி கையிலே இருக்கின்ற பணம் பிடிக்கும் என்ற காரணத்தால், அன்புடன் வரவேற்றான். கோபம் தெளிந்தது. இந்தச் செய்தி மெல்ல அடுத்து வீட்டு மருமகளுக்கும் எப்படியோ எட்டிவிட்டது. அவள் தனக்கும் இப்படி ஏராளமான பொருள் கிடைக்கும் என்ற பேராசையால், தானும் ஒரு பொம்மையை வைத்துப் பூஜை செய்து, தனது மாமியாரிடம் கோபிக்கச் செய்து, தன் கணவனிடம் தன்னை அடித்து, வீட்டை விட்டுத் துரத்தச் சொல்லி, அதன் பிறகு அந்தக் காடு இருந்த

பக்கமாகச் சென்று, இருட்டும் வேளையிலே காட்டிலுள்ள மரம் ஒன்றில் ஏறி சாய்ந்து கொண்டு தூங்குவதற்கு முயற்சி செய்தாள். ஆனால், தூக்கம் மட்டும் வரவில்லை. பணம் கிடைக்கப் போகிறதென்ற சிந்தனையில் இருப்பவளுக்கு எப்படி இயற்கையாகத் தூக்கம் வரும்? நள்ளிரவும் வந்தது. முன்போலவே அந்தத் திருடர்களும் அந்த மரத்தடிக்கு வந்தார்கள். அந்த நேரத்தில் அவள் அந்த பொம்மையைக் கீழே போட்டாள். உடனே அந்தத் திருடர்கள் அந்த பொம்மையை எடுத்துப் பார்த்து, சற்று யோசித்தார்கள். மேலே இருப்பது பேயும் இல்லை. பிசாசும் இல்லை. மனித உருவமாகத்தான் இருக்கமுடியும் என்று



## முதலமைச்சர் வண்ணப் படம்

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் வண்ணப்படம் அந்தந்த மாவட்டங்களில் செய்தி-மக்கள் தொடர்பு அதிகாரி அலுவலகங்களிலெல்லாம் கிடைக்கும். 15" x 12" அளவுள்ள இந்த வண்ணப்படம் ஒன்றின் விலை ரூ.10 ஆகும்.

அரசு அலுவலகங்களில் மட்டுமல்ல; தமது இல்லங்களிலும் அதனை வைத்துக்கொள்ள விரும்புவோர், மேற்கொண்ட அலுவலகத் திலேயே அதனைப் பெற்றுக்கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது.

-ஆசிரியர்

முடிவு செய்து, மரத்தின் மீது ஏறி, அந்தப் பெண்ணைப்

பிடித்துக் கீழே இழுத்து வந்து நன்றாக உதை கொடுத்து அனுப்பி வைத்தார்கள். பணம் கிடைக்கும் என்று சென்ற மருமகள் உதை பெற்றுத் திரும்பி வருவதை அறிந்து மாமியாரும் அவள் கணவனும் ஏமாந்தார்கள்!

-அபிராமி பதிப்பகம்,
307, லிங்கி செட்டித் தெரு,
சென்னை - 600 001.
வெளியிட்ட 'அண்ணா சொன்ன குட்டிக்கதைகள் 100' என்ற நூலிலிருந்து.



# இலக்கியச் சிந்தனை

-'கவிக்கொண்டல்' மா. செங்குட்டுவன்

சிந்தனை ஓட்டத்தையெல்லாம் சிறந்த இலக்கியச் செல்வங்களாக்கி மகிழ்ந்தவன் தமிழன்!

எதையும் இலக்கிய நயத்தோடு சொல்லு கின்ற இயல்பு தமிழனுக்கே உரிய சிறப்பாகும்.

வாழ்க்கையின் ஒவ்வொரு கூறும் இலக் கியமாக்கப்பட்ட வரலாறு தமிழனுக்கு உண்டு.

தெய்வத்தையும், பெரியோர்களையும் குழந்தையாகப் பாவித்து, குழந்தைப் பருவத் தின் கூறுகளையெல்லாம் வருணித்துப்பாடி, அதற்குப் 'பிள்ளைத் தமிழ்' என்று பெயரிட்டான் தமிழன்.

குழந்தையைத் தொட்டிலில் இட்டுப் பாடுவதற்குத் 'தாலாட்டு' என்று பெயரிட்டான்; தாய்மார்கள் பாடுகின்ற பாட்டு நல்ல தாளக்கட்டோடு அமைந்து, செவிக்கு இனிமையாக இருந்து, குழந்தை யையும் கண்ணுறங்க வைப்பதை இன்றும் நாட்டிலே கண்டு வருகிறோம்.

உயர்திணையினரை மட்டுமின்றி அஃறிணை உயிரினங்களையும் அன்பர்பால் தூது அனுப்பும் முறையில் கற்பனையாகப் பாடப்பட்டவை 'தூது இலக்கியங்கள்' ஆயின.

கொடைவள்ளல்களை எளிதில் காண வாய்ப்புப் பெறாத புலவர்கள் ஓர் ஓலை நறுக்கிலேயே தங்களுடைய வறுமை நிலை யையும், தங்கள் தேவையையும் கவிதையாக எழுதி அனுப்பிவைத்தனர். அதற்குச் 'சீட்டுக் கவி' என்று பெயர் கொடுத்தார்கள்.

உழவர்கள் வயலில் நடவு நடுவது போன்ற பணியாற்றுகிறபோது, தங்களுக்கு உழைப்பின் கடுமை தெரியாமல் இருக்கும் வகையில் பாடிக்கொண்டே உழைப்பார்கள். அப்படிப் பாடும் பாட்டு உழவுப் பாட்டு ஆகியது; பறை முழக்கோடு பாடும் பாட்டுக்கு 'பள்ளு' என்று பெயர்.

ஏற்றம் இறைப்பவர்கள் பாடிக் கொண்டே இறைப்பார்கள். 'ஏற்றப்பாட்டுக்கு எதிர்ப்பாட்டு உண்டா?' என்பது பழமொழி. அந்த ஏற்றப்பாட்டு இன்றையவரையில் கிராமப்புறங்களிலே கேட்டு மகிழத்தக்க வகையிலே பாட்டாளிகளால் பாடப்பட்டு வருகின்றது.

திருமண மற்றும் மங்கல நிகழ்ச்சிகளில் வாழ்த்திப் பாடுவது வாழ்த்துப்பா.

### காவடிச் சிந்து

கோயில்களில் காவடி தூக்கிக்கொண்டு 'அரோகரா' 'வேல் வேல்' என்று கூவிக் கொண்டே செல்வார்கள். அவர்கள் பாடுவ தற்கும் ஒருவகைப் பாட்டு உண்டு. அதுதான் காவடிச் சிந்து. அண்ணாமலை ரெட்டியார் என்பவர் பாடிய காவடிச் சிந்து புகழ் பெற்றது. அது இன்று வரையில் நடை முறையில் இருந்து வருகிறது.

தென்புலத்தில் வாழும் மக்களெல்லாம் தாங்கள் மெய்வருந்த உழைக்கும்பொது பாடிக்கொண்டே பணியாற்றுவார்கள். அவர்கள் பாடுகின்ற பாடலுக்குத்தான் 'தென் பாங்கு' என்று பெயர் ஏற்பட்டது. அதுதான் 'தெம்மாங்கு' என்று இன்று மருவி வழங்குகிறது.

பெண்கள் ஆடிப்பாடி மகிழ்வதற்காக 'அம்மாணை' 'கும்மி', 'ஊசல்' 'கோலாட்டம்' என்றெல்லாம் பாடல்கள் அமைத்திருக் கின்றனர்.

ஒருவர் இறந்துவிட்டால் துன்பத்தை ஆற்றிக் கொள்வதற்காகப் பெண்கள் பாடுவது ஒப்பாரியாயிற்று. ஒப்பாரி, கேட்போர் உள்ளத்தை உருக்கக்கூடியதாகும்.

அதே நேரத்தில் இறந்தவர்களைக் குறித்துப் புலவர்கள் பாடுவதற்குக் 'கையறு நிலை' என்றும், 'இரங்கற்பா' என்றும் பெயர்.

ஒரு மன்னன் பிற நாட்டின் மீது படையெடுத்துச் சென்று ஆயிரம் யானைகளைக் கொன்று போரில் வென்று திரும்புவானேயானால், அவனைப் போற்றிப் புகழ்ந்து புலவர்கள் 'பரணி' பாடுவார்கள். அப்படிப் பாடப்பெற்றதுதான் பழம்பெரும் இலக்கியமான கலிங்கத்துப்பரணி. அந்தப் பரணி பாடிய புலவரான செயங்கொண்டாருக்கு ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு 'தங்கத் தேங்காய்' பரிசாக அளித்து மகிழ்ந்தானாம் சோழ மன்னன் குலோத்துங்கன்!

நீண்ட நெடும் வாழ்க்கை நிகழ்ச்சியைக் கற்பனைத் திறத்துடன் பாடுவது காவியமாயிற்று. அப்படிப் பாடப்பெற்றவைதாம் கம்பனின் இராமாயணமும், சேக்கிழாரின் பெரிய புராணமும், ஐம்பெருங்காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவையும் ஆகும்.

## தமிழனின் இலக்கியச் சுவை!

இப்படி எடுத்ததற்கு எல்லாம் கவிதை பாடி இலக்கியத்தை வளர்த்தான் தமிழன். இலக்கியங்களைப் படைத்தும், படித்தும் சுவைத்து மகிழ்ந்தான். எனவேதான் தமிழரிடையே இலக்கியச் சிந்தனை வளர்ந்தது. வேறு எம்மொழிக்கும் இல்லாத அளவுக்குத் தமிழில் இலக்கியங்கள் உண்டு. தொன்மை இலக்கியமான தொல்காப்பியமும், நன்னூலும், யாப்பிலக்கணமாம் காரிகையும் முன்னோர்களால் செய்யுள்களாலேயே பாடப்பட்டு நமக்காக வைக்கப்பட்டிருக்கின்றன.



வளரும் தலைமுறையினருக்கு, எதிர்காலத் தலைமுறையினர்க்கு, வாழ்க்கை இலக்கணம் புகட்டக் கூடிய ஒரு நூல் உண்டு என்றால், அது உலகத்திலேயே தமிழ்நாட்டில் தான் இருக்கிறது. அத்தகைய தனிச் சிறப்புடையதால்தான் திருக்குறள் உலகப் பொதுமறை என்றே உயர்த்திப் பேசப்படுகிறது.

தமிழ்மொழிக்கு இலக்கணம் வகுத்திருக்கின்றார்கள் புலவர்கள். ஆனால் வாழ்க்கை இலக்கணம் மட்டுமன்றி அதற்கேற்ப இலக்கியங்கள் படைத்தவனும் தமிழன்தான்.

ஒரு புலவர், தாம் படும் துயரத்தைக் கூட இலக்கிய நயத்தோடு கூறுகிறார். அப்படிக் கூறுவது தமிழ்நாட்டில் உள்ள புலவர் பெருமக்களுடைய மரபு ஆகும். ஒரு புலவன் ஓர் அரசனை நாடிச்சென்று- அவனிடம், 'எனக்குப் பரிசல் வழங்கி எனது வறுமையைத் தீர்த்துவை' என்று சொல்லுவதைவிட, அந்த நாட்டின் வளமையை, அந்த நாட்டு மக்களின் சிறப்பை, அந்த நாட்டு மன்னனின் கொடைத் திறத்தைப் பாடினாலே, அவனுக்கு உரிய பரிசாகப் பொன்னும் பொருளும் குவியும்; புகழும் சேரும்.

அப்படிப் பாடிப் பரிசில்கள் பெற்று வரும் புலவன், எதிர்கொள்ளும் மற்றொரு புலவனுக்குத் தான் பெற்று வந்த பரிசுப் பொருள்கள் குறித்தும், தனக்கு அவற்றை வழங்கிய மன்னனின் கொடை வளத்தைக் குறித்தும் பாடுகின்ற பாட்டுக்கு 'ஆற்றுப் படை' என்று பெயர்.

### தடைக்கல்

நம்பிக்கையற்ற வர்களின் முன்னேற்றப் பாதையிலே தடைக் கற்களாக இருப்பவை நம்பிக்கை உடையவர்களின் பாதையிலே படிக்கற்களாக அமைகின்றன.

-ஜி.எச். லூயி

அந்தக் காலத்தில் புலவர்கள் பாடிய பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, எல்லாம் படித்து மகிழத்தக்க ஆற்றுப்படை இலக்கியங்கள் ஆகும்.

இதோ ஒரு புலவன் இவன் அரசனை நாடிச்சென்று பாடிடவும் இல்லாமல் தனது துன்பத்தை எப்படிக் கவிதையாக வெளிப் படுத்துகிறான் பாருங்கள்.

## சத்திமுத்தப் புலவரின் துன்பநிலை

'சத்திமுத்தம்' என்பது தஞ்சை மாவட்டம் குடந்தைக்குப் பக்கத்திலே உள்ள ஒரு சிற்றூர். அந்த ஊரைச் சேர்ந்த அந்தப் புலவன், மதுரையம்பதிக்குச் செல்கிறான். மன்னனைக் கண்டு தனது வறுமை நிலையைக் கூறிப் பரிசில் பெறலாம் என்ற எண்ணத்தோடு சென்றிருக்கிறான். ஆனால் அவனை மன்னன் வாழும் அரண்மனையின் உள்ளே விட மறுக்கிறார்கள் காவலாளிகள். அவன் மன்னனைக் காணமுடியாமல் ஏங்கித் தவிக்கிறான். ஒருநாள் இரவு தேரடியில் குளிர்காற்றிலே நடுங்கி ஒடுங்கி ஓர் ஓரத்தில் படுத்துக்கிடக்கிறான்.

அந்தத் துன்ப நிலையிலும் அவன் நெஞ்சத்திலிருந்து பாட்டு வெளிப்படுகிறது.

அப்போது அந்த நள்ளிரவில் பறந்து செல்லும் நாரைகளைப் பார்க்கிறான். அவற்றைப் பார்த்து அவன் பாடுகின்ற துன்பநிலையைப் பாடுகிறான்.

**"நாராய் நாராய் செங்கால் நாராய்!**
**பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன**
**பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!**
**நீயும் நின் பெட்டையும் தென்திசைக் குமரியாடி**
**வடதிசைக்கு ஏகுவீ ராயின், எம்மூர்**
**சத்தி முத்த வாவியுள் தங்கி**
**நனைசுவர்க் கூரைக் கனைகுரல் பல்லி**
**பாடுபார்த் திருக்கும்என் மனைவியைக் கண்டு**
**'எங்கோன் மாறன் வழுதி கூடலில்**
**ஆடை யின்றி வாடையில் மெலிந்து**
**காலது கொண்டு மேல தழுவி**
**பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்.**
**ஏழை யாளனைக் கண்டனம் எனுமே".**

-இவ்வாறு பாடுகிறான் அந்தப் புலவன். ஆடையின்றி வாட்டும் குளிரிலே இருக்கும் நிலையை யாரிடம் சொல்லுகிறான்? நள்ளிரவில் பறக்கும் வெள்ளைநிற நாரையைப் பார்த்துப் பாடுகிறான்.

'நீங்கள் குமரி முனைக்குச் சென்று அங்கு நீராடி வடதிசைக்குச் செல்லும் போது, அங்கே காவிரியின் கரையிலே தான் என்னுடைய ஊரான 'சத்திமுத்தம்' இருக்கிறது. அங்கு என்னுடைய மனைவி எனது வருகையை எதிர்பார்த்து, மழையால் நனைந்த சுவரிலே இருக்கும் பல்லி என்ன சொல்கிறது என்று எதிர்பார்த்து ஏங்கியிருப்பாள். பல்லி சொல்லுவது பலிக்கும் என்பது பழங்காலத்து நம்பிக்கை. நான் இங்கு வாடிக்கொண்டிருக்கிறேன். இந்தச் செய்தியையாவது என்னுடைய மனைவியிடத்தில் சொல்லுங்கள்' என்று நாரைகளைப் பார்த்து சத்தான தமிழிலே பாடுகின்றான் சத்திமுத்தப் புலவர்.

**நாரை விடு தூது!**

நாரை போய்த் தன் மனைவியிடம் அப்படிச் சொல்லும் என்பதற்காக அவன் அப்படிப் பாடவில்லை. தன்னுடைய நிலையை, பாண்டிய மன்னனைக் காண இயலாமல், பரிசுக்காக ஏங்கியிருக்கிறான் என்ற நிலையை இவ்வாறு எடுத்து இயம்புகிறான். அவ்வளவுதான். இந்த ஒரு கவிதை தான் நாரை விடு தூது என்ற பெயரில் அவன் பாடியதாக நமக்குக் கிடைத்துள்ளது.

இந்த ஒரே ஒரு வரி- 'நாராய் நாராய்'! என்று விளித்துப்பாடும் இந்தப் பாடல் வரி, இன்று எல்லோருக்கும் தெரிந்த ஒன்று.

ஒரு சிறிய நிகழ்ச்சியை அவன் எத்துணை அழகாகப் பாடலிலே வைத்திருக்கிறான் பாருங்கள். இதுதான் இலக்கியச் சிந்தனை! இதுதான் இலக்கியச் சுவை! பனங்கிழங்கு பிளந்ததுபோல் நாரையின் கூர்வாய் இருக்கிறது என்று சொல்கிற நயத்தைப் பாருங்கள்!

ஒரு குழந்தை தன் தாயாரின் தாலாட்டுப் பாடலைக் கேட்டு, மயங்கிய நிலையில் தூங்குகிறது. மழலைப் பருவத்திலேயே தமிழ் இலக்கிய உணர்வு தமிழ்க் குழந்தைக்குத்

**காலம் முறைகளை மாற்றுமே தவிர மனப்போக்கையும் உணர்ச்சியையும் மாற்றி விடாது!**

**–அறிஞர் அண்ணா**

தாய்பாலோடு ஊட்டப்பட்டுவருகிறது. சங்க காலத்தில் தமிழ்புலவர்கள் காதலையும் வீரத்தையும் அக வாழ்க்கையையும், புற வாழ்க்கையையும் பாடினர். அரசனைப் பாடினர், அறத்தைப் பாடினர், கொடைத் திறத்தைப் பாடினர்.

அதன் பின் வந்த நாயன்மார்களும், ஆழ்வார்களும், ஆண்டவனைப் பாடிப் பாமாலை சூட்டி மகிழ்ந்தனர்.

சித்தர்களெல்லாம் வாழ்க்கைத் தத்துவங்களைப் பாடிச் சென்றனர். கம்பர் இளங்கோவடிகள், சேக்கிழார் போன்றவர்கள் ஒப்பற்ற காப்பியங்களைப் படைத்தனர். வடலூர் இராமலிங்க வள்ளலார் ஆன்மநேய ஒருமைப்பாட்டை வலியுறுத்திப் பாடினார்.

இந்த நூற்றாண்டில் வாழ்ந்த பாரதியும், பாரதிதாசனும், நாமக்கல் கவிஞரும், தேசிய விநாயகம் பிள்ளையும் நாட்டு விடுதலைக்கும், சமுதாய மறுமலர்ச்சிக்கும் ஏற்ற இலக்கியங்களை வடித்துத் தந்தனர். இப்படி வழி வழியாக இலக்கியச் சிந்தனை வளர்ந்தோங்கி வருகிறது. ஆனால் அதன் வடிவங்கள் காலத்துக்குக காலம் மாறுபட்டு வருகின்றன.

**வருங்காலம் பற்றிய சிந்தனை**

வருங்காலம் பற்றிய இலக்கியச்சிந்தனை இன்றைய தலைமுறையினரிடையே வளர வேண்டும். அந்தக் காலத்திலே, சங்க காலத்திலே பாடிய பாடல்களை நம்மாலே புரிந்துகொள்ள முடியவில்லையே என்று இந்தக் காலத்திலே பலர் ஏங்கினாலும், இந்தக் காலத்திற்கு ஏற்றபடி பாரதியாரும் பாரதிதாசனும் பாடியதைப் போல் பல நூல்களை, பல இலக்கியங்களை இன்றைக்கும் எளிய தமிழிலே படைக்க நாம் கடமைப் பட்டிருக்கிறோம். அவர்களெல்லாம் உருவாக்கிவிட்ட அந்த இலக்கியச் சிந்தனை வளர வழிவகை செய்யவேண்டும்.



அப்படி வளர, நாட்டிலுள்ள நல்லறிவாளர்களையெல்லாம் நாம் ஊக்குவிக்க வேண்டும். நல்ல தமிழ்ப் பற்றாளர்கள், தமிழ் மொழியைக் கற்றுத் தேர்ந்தவர்களெல்லாம் நிரம்ப இன்றைக்கு இருக்கிறார்கள். வழி வழி அவர்களைப் பின்பற்றி, அவர்கள் வளர்த்த சிந்தனையை நாம் தொடர்ந்து வளர்த்து வருவோமானால் நமது எதிர்காலத்திற்கு அந்தச் சிந்தனை வழிகாட்டுவதாக அமையும்

இன்றைக்கு நாமெல்லாம் நாகரிக உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இங்கே, இப்பொழுது இலக்கியத்தைப் படைத்தால், இலக்கியத்தைப் படித்தால், இலக்கியத்தைச் சுவைத்தால், என்ன பயன் என்று பார்ப்பதைவிட, அன்றைக்கு நம் முன்னோர்கள் படைத்த இலக்கியம், நமக்குப் பயன்படுவதைப் போல நாம் படைக்கின்ற, நாம் உருவாக்குகின்ற இலக்கியச் சிந்தனை எதிர்காலத்தில் நாட்டுக்குப் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் புதுப்புதுச் சிந்தனையை, இலக்கியத்தின் வாயிலாக உருவாக்க வேண்டும்.

அதே நேரத்தில் நான் இங்கே மற்றொன்றையும் எடுத்துணர்த்தக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழர்களாகிய நாம் தமிழிலேயே சிந்திக்க வேண்டும். ஆங்கிலத்திலேயோ, பிற மொழியிலோ கல்வி கற்றவர்கள்- சிந்தனையைக் கூடத் தமிழில் செய்யாமல் பிற மொழியில் செய்கிறார்கள். ஆங்கிலத்தில் சிந்தித்துத் தமிழிலே அதைச் சொல்கின்ற ஒரு வழக்கம் இன்றைக்கு எப்படியோ பரவலாக நம்மிடையே ஏற்பட்டு விட்டது. நமது நினைப்பே தமிழில்தான் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் இன்றும் இனியும் தமிழ்மொழி எல்லா வகையிலும் சிறந்து விளங்கும் என்பது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

**தியாகிகள் தினத்தையொட்டி 30.1.1997 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் அமைச்சர்களும், அரசு அலுவலர்களும் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.**



216429

# வாசகர் இதயம்

'கவின்மிகு தமிழகக் கலைகள்' கட்டுரை பல அரிய செய்திகளைத் தெரிவிப்பதாக இருந்தது.

-அ.கந்தசாமி பத்மாவதி,
திருப்பூர்.

அரசு ஆணைகளைத் தமிழில் வெளியிட்டால் நல்லது. மொத்தத்தில், அஞ்சலில் வந்தால் பிரிக்காமலே போட்டுவந்த தமிழரசை எப்போது வரும் என எதிர்பார்க்க வைத்து விட்டீர்கள். நன்றி.

-ஆர். ரெனி,
சென்னை52.

சின்னஞ்சிறார் பயனடையத்தக்க செய்திகளை இன்னும் சேர்க்கலாமே?

-கா.ராஜசேகர்,
மங்களாபுரம்-636202.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் கவிதை வெளியிட்ட முறை சரியில்லை, அது பின்கண்டவாறு அச்சாகியிருக்கவேண்டும்:

'புத்தகம் நூறு புரட்டிக் களைப்புற்றுச்
சித்தம் கலங்கித் திகைப்பதேன்- வித்தகன்
தெய்வப் புலவன் திருவள்ளுவன்
சொன்ன
பொய்யில் மொழியிருக்கும் போது!'

-வ. பரத்வாசன்,
சென்னை67.

பேராசிரியர் இரா.சேது எழுதிய இலக்கியக்கட்டுரை கரும்பாக இருந்தது.

-பாவலர் வைரி.தரளம்,
கோபிபாளையம்.

புற்றுநோய் பற்றிய டாக்டர் ஜெயந்தி சீனிவாஸ் மருத்துவக்கட்டுரை பயனுள்ள ஒன்று. தமிழுக்கு முதல் மரியாதை தொகுப்பும் அவசியமானதாகும்.

-குருசாமிராஜ்,
காசிபாளையம்.

தொடர்ந்து தமிழ்ப்பணி ஆற்றிவரும் தமிழரசுக்குப் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

-சி.அருணாசலம்,
திருவளிப்பட்டி.

(இவ்வாறு ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன.)

கவிதைப்போட்டியில் முதல் பரிசு பெற்ற கவிதை புதுக்கவிதை எனினும், அருமையான கற்பனையின் வெளிப்பாடாக இருந்தது, பாராட்டுகிறேன்.

-கவிஞர் எழிற்பித்தன்,
சென்னை-5.

முதல்வர் கலைஞர் அவர்களின் பொங்கல் வாழ்த்துச் செய்தி, சர்க்கரைப் பொங்கலாக இனித்தது.

-பழனிமுருகன்,
தேவர்கண்ட நல்லூர்.

அமைச்சர்களின் ஊதுகுழலாக இல்லாமல் கதை, கவிதை போன்ற அமைப்புகள் மூலம் சமூக எதார்த்தங்களைத் தாங்கி மணக்கின்ற தமிழரசைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

-ப. முருகேசபாண்டியன்,
கரப்பாடி.



## வணிக நிறுவனங்களின் பெயர்ப்பலகை

## தமிழுக்கு முதல் மரியாதை..

| | | |
|---|---|---|
| 332. Organisation | .. | அமைப்பகம், அமைப்பு |
| 333. Oscillating Fan | .. | சுழல் மின் விசிறி |
| 334. Paging | .. | விளித்தல், அகவி |
| 335. Pager | .. | விளிப்பான், அகவன் |
| 336. Paints | .. | வண்ணெய்கள், வண்ணப் பூச்சு |
| 337. Pan Stall | .. | மடி வெற்றிலைக் கடை |
| 338. Paper Store | .. | தாள்வகைப் பொருளகம், தாள்கடை |
| 339. Passport | .. | கடவுச் சீட்டு, இள்ளாக்கு |
| 340. Paradise | .. | பொன்னுலகம் |
| 341. Parcel Service | .. | சிப்பம் செலுத்தகம், சிப்பம் அனுப்பகம் |
| 342. Partnership | .. | பங்காண்மை |
| 343. Pedestal Fan | .. | தனிகை விசிறி (பீடம்), நிலைமேடை மின்விசிறி |
| 344. Perfumeries | .. | நறுமணப் பொருள்கள் |
| 345. Pesticide | .. | பூச்சிக்கொல்லி மருந்து |
| 346. Petrol | .. | கன்னெய், எரிநெய் |
| 347. Pharmaceutical Manufacturers | .. | மருந்து உருவாக்குநர், மருந்து தயாரிப்பு நிறுவனம், மருந்துருவாக்கிகள், மருந்து தயாரிப்பாளர் |
| 348. Pharmacy | .. | மருந்தகம், மருந்தாக்ககம் |
| 349. Photo Blocks | .. | ஒளிபட அச்சுரு, படக்கட்டை, புகைப்பட அச்சுரு |
| 350. Photo Studio | .. | ஒளிபட மனை, ஒளிப்பட நிலையம் |
| 351. Picture Palace | .. | படமாளிகை |
| 352. Plant | .. | இயந்திரகம் |
| 353. Plastic Industry | .. | நெகிழித் தொழிலகம் |
| 354. Platform | .. | நடைமேடை, நடை பாதை |
| 355. Plaza | .. | அங்காடி, கடைத் தொகுதி |
| 356. Plot | .. | மனையிடம், மனை |
| 357. Plumber | .. | குழாய்ப் பணியாளர் |
| 358. Plywoods | .. | ஒட்டுப்பலகை |
| 359. Polish Works | .. | வழைப்பேற்றப் பணிகள், மெருகூட்டும் பணி, பளபளப்புப் பணிகள் |
| 360. Poly Clinic | .. | பல துறை மருத்துவமனை, பல்துறை மருந்தகம் |
| 361. Polythene | .. | ஈகநார் |
| 362. Polythene Bag | .. | ஈகநார்ப் பை |
| 363. Pork | .. | பன்றி இறைச்சி |
| 364. Postage | .. | அஞ்சற் செலவு, அஞ்சல் கட்டணம் |
| 365. Post Office | .. | அஞ்சலகம் |
| 366. Poultry | .. | கோழிப் பண்ணை |
| 367. Power Loom | .. | விசைத் தறி |
| 368. Power Press | .. | மின் அச்சகம் |
| 369. Press, Printers | .. | அச்சகம், அச்சுக் கலையகம், அச்சுக் கலைஞர் |

| | | |
|---|---|---|
| 370. Private Limited | .. | தனிப்புற மட்டிட்டது, மட்டிட்டது (த) தனியார் (பொறுப்பு வரையறுக்கப்பட்டது) |
| 371. Products | .. | உற்பத்திப் பொருள்கள் |
| 372. Profiles | .. | சிறப்புக் குறிப்பு |
| 373. Promoters | .. | மேம்படுத்துநர், வளர்க்குநர் |
| 374. Provisional Stores | .. | பலசரக்குக் கடை, மளிகைக் கடை |
| 375. Quarry | .. | கற்சுரங்கம், கற்குடைவு |
| 376. Quick Meals | .. | விரைவுணா |
| 377. Quarters | .. | உறையுள், உறைவிடம், குடியிருப்பு |
| 378. Radio Service Centre | .. | வானொலிப் பெட்டி பழுதுபார்ப்பகம் |
| 379. Ration | .. | அளவணம், பங்கீடு |
| 380. Ready-made Dress Centre | .. | அணியப்பாட்டு ஆடை நடுவம், ஆயத்த ஆடையகம் |
| 381. Real Estate | .. | வீடு, மனை விற்பனை |
| 382. Receipts | .. | கைச்சாத்து, பற்றுச்சீட்டு |
| 383. Refrigerator | .. | குளிர்பதனப்பெட்டி |
| 384. Rent | .. | வாடகை |
| 385. Rent Free | .. | வாடகையற்ற |
| 386. Research Centre | .. | ஆராய்ச்சி மையம் |
| 387. Restaurant | .. | தாவளம், துய்வுணவகம், உணவகம் |
| [illegible] | .. | ஓய்வில்லம் |
| [illegible] | .. | மேற்பட்டையிடல், மறுபட்டையிடல் |
| 390. Re-winding | .. | மீளச்சுற்றுதல், மறுதிருகல் |
| 391. Rice Mill | .. | அரிசி அரைவை ஆலை |
| 392. Rolling Shutter | .. | கரந்தியல் சாத்தி, கரந்தியல் கதவு |
| 393. Roofings | .. | கூரையிடுகள், கூரைகள் |
| 394. Rose Milk | .. | முளரிப் பால் |
| 395. Rubber | .. | தொய்வை |
| 396. Rubber Stamp Works | .. | தொய்வை முத்திரைப் பணிகள் |
| 397. Sales Centre | .. | விற்பனை நிலையம் |
| 398. Sales & Service | .. | விற்பனை மற்றும் சேவை |
| 399. Saloon | .. | முடிதிருத்தகம் |
| 400. Sanitary Wears | .. | தூய்மைக்காப்பு, துப்புரவுப் பொருட்கள் |
| 401. Savoury | .. | காரச்சுவையுண்டி |
| 402. Saw Mill | .. | மர அறுப்பு ஆலை, மர அறுவை ஆலை, வாள் பட்டறை |

– அடுத்த இதழில்...



மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை, மிருகங்களைப் பாதுகாக்கும் இயக்கத் தலைவியான திருமதி. மேனகாகாந்தி அவர்கள் சந்தித்து உரையாடினார். (27.1.97)

# அமைதி நிலவ அனைவரும் ஒத்துழைப்பீர்!

## மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆற்றிய உருக்கமிகு பேருரை

**மேதகு தமிழக ஆளுநர் உரை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், சட்டப் பேரவையில் 30.1.1997 அன்று ஒன்றே முக்கால் மணி நேரம் உரையாற்றினார். அதில் குறிப்பிடத்தக்க முக்கியப் பகுதிகள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன!**

ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு இந்த மன்றத்தில் பதில் வழங்கப்பெறுகின்ற இந்த காலகட்டத்தில் நாம் மூன்று ஆளுநர்களை நினைவு கூர வேண்டிய, அவர்களைப் பற்றி முறையே பேச வேண்டிய, அவர்கள் ஆற்றிய உரையைப் பற்றிக் கருத்துக்களைக் கூற வேண்டிய நிலைக்கும் ஆளாகியிருக்கின்றோம். இந்த மன்றத்தின் இந்தத் தொடரை நாம் ஆரம்பிக்கும்போதே, தமிழகத்திலே ஆளுநராகப் பொறுப்பேற்றிருந்து இந்தியாவினுடைய தலைசிறந்த தலைவர்களுள் ஒருவராக விளங்கி, பல பொறுப்புகளை நிர்வாகத் திறனோடு ஆற்றி மறைந்த சென்னாரெட்டி அவர்களுக்கு நம்முடைய அஞ்சலியைச் செலுத்தி, அவருடைய புகழை இங்கே நாம் பேசியிருக்கின்றோம்.

அடுத்து இந்த உரையை இங்கே ஆற்றியவர், ஆந்திரத்தினுடைய கவர்னராகவும், அதே நேரத்தில் இந்த மாநிலத்திற்கும் சேர்த்து தற்காலிகப் பொறுப்பை ஏற்று கவர்னராகவும் விளங்கிய, இன்றைக்கு ஆந்திர மாநில கவர்னராகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற கிருஷ்ணகாந்த் அவர்களுடைய உரை. கிருஷ்ணகாந்த் அவர்கள் ஆற்றிய உரையை விவாதிக்கின்ற நேரத்தில், 25-ஆம் தேதி இந்த மாநிலத்திற்கு ஐந்தாண்டுகளுக்கு ஒரு நிரந்தர கவர்னர் என்ற வகையில், செல்வி பாத்திமா பீவி அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

**அரசின் கொள்கை விளக்கம்**

இந்த கவர்னர் உரை நான் குறிப்பிட்ட இந்த மூன்று கவர்னர்களையும் பின்னிப் பிணைந்திருக்கின்ற ஒரு உரையாக இருந்ததை நீங்கள் எண்ணிப் பார்த்தாலே கவர்னர் உரை என்பது இந்த உரையை யார் ஆற்றுகிறார்களோ அவருடைய உரை அல்ல; இது அரசாங்கத்தினுடைய கொள்கை விளக்க ஏடு என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள இயலும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மீண்டும் 1996-ஆம் ஆண்டு அமைந்த பிறகு ஏழு மாதங்களில் எந்த அளவிற்கு வளர்ச்சி நிலைகளை நோக்கி நாம் சென்றிருக்கிறோம், தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறோம் என்பதை ஆளுநர் அவர்களுடைய உரை நமக்கு நினைவூட்டிக்கொண்டிருக்கிறது.

தொழிலதிபர்கள் அவர்களுடைய குறைகளையும் வேண்டுகோள்களையும் உயர் நிலையில் நேரடியாகத் தெரிவிக்க, ஒரு முறையான அமைப்பு உருவாக்கப்படும். முதலமைச்சரைத் தலைவராகக் கொண்டு தொழில் வளர்ச்சி குறித்து உச்ச நிலைக்குழு ஒன்று உருவாக்கப்படும். இதில் பல்வேறு வர்த்தகத் தொழில் அமைப்புகளின் நியமன தாரர்கள 12 பேர்களும், அரசு நியமிக்கும் 6 முக்கியத் தொழிலதிபர்களும், பல்வேறு துறைகளின் அதிகாரிகளும் உறுப்பினர்களாக இருப்பார்கள் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்து இருந்தேன்.

கடந்த 6,7 மாதங்களில் தொழில் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மனதிற்கு நிறைவு தரக்கூடியதாக இருந்தாலும்கூட, மேலும் உற்சாகத்துடன் செயல்பட்டு இந்தியாவிலேயே முதன்மையான இடத்திற்குத் தமிழகத்தைக் கொண்டுவர உங்களுடைய முழு ஒத்துழைப்பை வேண்டுகிறேன். அதற்கான ஆக்கப்பூர்வமான யோசனைகளை நான் உங்களிடமிருந்து எதிர்நோக்கியிருக்கிறேன்.

மாநிலங்கள் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு அதிகமான சில சலுகைகளை விரும்பத்தகாத வகையில் அளித்து, தொழில் முனைவர்களைக்கவர சில

சலுகைகளைக் காட்டி, தொழில் துறையில் முதலீடு செய்ய வைக்கமுடியுமென்ற நம்பிக்கை எனக்கு இல்லை. தொழில் அதிபர்கள் புத்திசாலிகள். தொலைநோக்கு உள்ளவர்கள். ஏதோ சில ஆண்டுகளுக்கு மட்டும் சலுகைகளை வைத்து தொழில் களைத் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்த முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இல்லை. தொழில் அதிபர்களாகிய அவர்கள், அடிப்படை வசதிகள் அனைத்தும் உறுதியாய் இருக்க வேண்டுமென்றுதான் விரும்புகிறார்கள்.

**ஈடு இணையில்லை**

தமிழகத் தொழிலாளர்களுக்கு ஈடில்லை. இதைப்புரிந்து கொண்ட இந்த அரசு மின்சார வசதி, தண்ணீர்வசதி, செய்தித் தொடர்பு வசதி போன்ற சில அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்வதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றது. நம் தொழிலாளர்கள் மிகவும் திறமைவாய்ந்தவர்கள். சிக்கலான தொழில் நுட்பங்களை எளிதில் புரிந்துகொண்டு திறமையாகப் பணியாற்றி உற்பத்தியையும் உற்பத்தித்திறனையும் பெருக்குவதில் தமிழகத் தொழிலாளர்களுக்கு ஈடு' இணை யாரும் இல்லை.

அடிப்படை வசதிகளைப் பொறுத்தவரை யில் நாம் மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது ஓரளவுக்குத் திருப்திகரமான நிலையில் இருக்கின்றோம்.

அதே நேரத்தில் மின்சாரத் துறையிலே கடந்த 4, 5 வருடத்தில் புதிய திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. சாலைப் பராமரிப்பு முதலிய துறைகளிலும் உண்மையாக வேலை நடைபெறாத சூழ் நிலையில், நமது போக்குவரத்து வசதி மிகவும் தரம் குறைந்துவிட்டது. இந்த நிலைமைகளை எல்லாம் சரி செய்வதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. மேலும் நிலைமையைச் சீர் செய்யப் பல தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, இந்த அரசு சில முக்கியமான முடிவுகளை மேற்கொண் டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் உங்களுடைய ஆக்கப்பூர்வமான யோசனைகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டு, பல புதிய தொழில்களை வடிவமைத்து நடைமுறைப்படுத்தும் வகை யில் தங்களுடைய கருத்துக்களை அறிந்து கொள்ள நான் ஆவலோடு இருக்கிறேன்.

-என்று குறிப்பிட்டு, அவர்களும் நீண்ட தூரம் தங்களுடைய கருத்துக்களை இந்த அரசுக்கு, தொழில் வளரவேண்டும் என்ற நோக்கத்தோடு எடுத்துரைத்திருக்கிறார்கள். இந்தக் குழு அடிக்கடி கூடி தொழில்வளம் தமிழகத்திலே மேலும் உயர்ந்திட முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை—இங்கே பேசிய நம்முடைய நண்பர்கள் தொழில்வளம் சிறக்கவேண்டும் அது மிக முக்கியம் என்று எடுத்துக்காட்டிய அந்தக் கருத்துக்கு அரணாக எடுத்துவைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

தொழில்கள் எந்த அளவிற்கு இந்த 6,7 மாத காலத்திலே வளர்ந்திருக்கின்றன என்பதற்கு ஒரு சிறிய புள்ளி விவரத்தை உங்களுக்கு நான் படித்துக்காட்ட விரும்பு கிறேன். புதிய தொழில்களைத் தொடங்கு வதற்கு வசதியாக 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்படவுள்ளது. இதில் தூத்துக் குடிக்கு அருகே 650 எக்டேர் பரப்பளவு சிப்காட் தொழில் மைய விரிவாக்கத்திற் காகவும், இருங்காட்டுக்கோட்டையிலே 1800 ஏக்கர் நிலப்பரப்பும் அடங்கும்.

மோட்டார் வாகன, ஆட்டோமேட்டிவ் இண்டஸ்ட்ரிஸ் தொழில்களும் மிகுந்த முக் கியத்துவம் வாய்ந்த Thrust area தொழில் களாகக் கருதி, சில சிறப்புச் சலுகைகள் அவைகளுக்கு அளிக்கப்படுகின்றன.



சென்னை புரசவாக்கத்தில் உள்ள 'வேடி எம்.சி.டி. முத்தையா செட்டியார் பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் அறிவியல் பிரிவை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு என். வீராசாமி அவர்கள் திறந்து வைத்தார் (29.1.97)

கிரானைட் போன்ற சிறு கனிமம் குத்தகை வழங்குவதிலே உள்ள முறைகேடுகளைக் களைந்து, சீரான நடைமுறையைப் பின்பற்ற இந்த அரசு ஆணையிட்டுள்ளதும் அதன் காரணமாகக் கடந்த காலத்தைவிட அதிக ஆதாயம் அரசுக்குக் கிட்டியிருப்பதும் உறுப்பினர்கள் அறிந்த ஒன்றாகும்.

புதிய தொழில்களுக்கான ஒப்பந்தங்கள் என்று எடுத்துக் கொண்டால் 2450 கோடி ரூபாய் முதலீட்டில் ஆண்டு ஒன்றுக்கு 1 லட்சம் கார்கள் தயாரிக்கும் ஹூயுண்டாய் தொழிற்சாலை; 550 கோடி ரூபாய் மூதலீட்டில் மறைமலை நகரில் பில்கிங்டன் நிறுவனம் அமைக்கும் மிதவைக் கண்ணாடித் தொழிற்சாலை; 30 கோடி ரூபாய் முதலீட்டில் ஜப்பான் நாட்டு பியூஜிகுரா நிறுவனம் அமைக்கும் கண்ணாடி இழை கேபிள் தொழிற்சாலை; 350 கோடி ரூபாய் முதலீட்டில் கொரியா நாட்டின் கும்கோ டயர்ஸ் கம்பெனி நிறுவும் ரேடியல் டயர் தொழிற்சாலை; 38 கோடி ரூபாய் முதலீட்டில் கல்கத்தாவைச் சேர்ந்த ராவ் சுரானா நிறுவனம் அமைக்கும் தேங்காய்ப் பதப் படுத்தும் தொழிற்சாலை; 450 கோடி ரூபாய் முதலீட்டில் பிரெஞ்சு நாட்டின் செயின்ட் கோபெயின் நிறுவனம் அமைக்கும் மிதவைக் கண்ணாடி தொழிற்சாலை; 630 கோடி ரூபாய் முதலீட்டில் ஆண்டுக்கு 10 ஆயிரம் கார்கோ வாகனம் தயாரிக்க ஹோசூரில் அசோக் லேலண்ட் நிறுவனம் தொடங்கிய விரிவாக்கத் திட்டம்; துபாயைச் சேர்ந்த எம்கே. க்ரூப் நிறுவனம் மாட்டு இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை 125 கோடி ரூபாயிலே அமைக்கும் முயற்சி; 20 கோடி ரூபாய் முதலீட்டில் எல்காட் நிறுவனமும் ஹூயுண்டாய் நிறுவனமும் இணைந்து அமைக்கும் தொழிற்சாலை- இது தவிர, பின் வரும் திட்டங்களும் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

**வாகனத் தொழிற்சாலைகள்**

300 கோடி ரூபாய் முதலீட்டில் இந்துஸ்தான் மோட்டார்ஸ் நிறுவனம் மிட்சுபிஷி நிறுவனத்தோடு இணைந்து திருவள்ளூர் அருகே 30 ஆயிரம் லான்சர் கார்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை; செம்பியத்தில் டிராக்டர்ஸ் மற்றும் பார்ம் எக்யுப்மெண்ட்ஸ் தொழிற்சாலை; ஆண்டு ஒன்றுக்குத்தயாரிக்கும் திறனை 48 ஆயிரத் திலிருந்து 72 ஆயிரமாக உயர்த்த விரிவாக்கம் செய்யும் திட்டம்; 95 கோடி ரூபாய் முதலீட்டில் இத்தாலிய நிறுவனத்தோடு இணைந்து கிரில்ஸ் நிறுவனம் ராணிப் பேட்டையிலே தொடங்கும் டிராக்டர் தொழிற்சாலை.

தொழிற்சாலை வளர்ச்சிக்கு மின்சாரம் மிக இன்றியமையாதது. அடிப்படை வசதி களில் மின்சாரம் மிக முக்கியமான ஒன்று என்பதை இந்த அரசு தக்கபடி உணர்ந்து, நான் நிதிநிலை அறிக்கையிலே எடுத்துக் காட்டியதைப் போலவும், நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே விளக்கிக் கூறியதைப் போலவும் 20 புதிய மின் திட்டங்கள் ஒவ்வொன்றும் 100 மெகாவாட் திறனோடு, தமிழ்நாட்டிலே தொடங்குப்பட இருக்கின்றன.

ஏதோ அறிவித்தோம் அத்துடன் விட்டுவிட்டோம் என்று இல்லாமல், அதற்கு 8000 கோடி முதலீட்டில் அவைகள் அமைக்கப்பட்டுள்ளன. ரூ.8000 கோடி எப்படி வரும் என்று கேட்பீர்களேயானால், ஒரு மெகாவாட் உற்பத்தி செய்ய ரூ.4 கோடி. இப்படி 20 திட்டங்கள். இதுவரையில் இந்த 20 திட்டங்களுக்கும் 73 பேர் டெண்டர் கோரியிருக்கிறார்கள். இது மகிழ்ச்சிகரமான செய்தியாகும். எனவே இந்த டெண்டர்கள் சரிபார்க்கப்பட்டு உரியவர்களுக்கு நியாய மான முறையிலே அவைகள் கொடுக்கப்பட்ட பிறகு, இந்தத் திட்டங்கள் விரைவிலே நிறை வேற இருக்கின்றன.

நம்முடைய நண்பர் தா.கிருஷ்ணன் அவர்கள் கிராஃபைட் தொழிற்சாலையைப் பற்றிக் குறிப்பிட்டார். அதிலே அவருக்கு உள்ள அதே அக்கறை- ஆவல் அங்குள்ள சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு- அந்தப் பகுதியில் உள்ள உறுப்பினர்களுக்கு உள்ள ஆவல், அந்தப் பகுதியின் நாடாளுமன்ற உறுப் பினரும் மத்திய நிதியமைச்சருமான அன்புக் குரிய சிதம்பரம் அவர்களுக்கும் உண்டு. எனவே அவரோடு நான் பலமுறை கலந்து பேசியிருக்கின்றேன். அந்தத் தொழிற்சாலை யைத் தனி கம்பெனியாக ஆக்குவதற்கு வேலைகள் எல்லாம் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற் கான ஒரு அதிகாரியும் நியமிக்கப்பட்டி ருக்கிறார். தனி கம்பெனியாக விரைவிலே ஆக்கப்பட்டுவிடுமேயானால் கிருஷ்ணன் இங்கே குறிப்பிட்டதைப் போல சுத்திகரிப்பு நிலையமும், அந்த நிறுவனம் நடைபெறும் இடம் எல்லாம் அந்தக் கம்பெனிக்கு உரியதாக ஆக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவிக்க வேண்டியவனாக இருக்கின்றேன்.

உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தலை எந்த விதமான குழப்பமும் இல்லாமல் நாம் நடத்தி முடித்திருக்கிறோம்.

அதைப் போலவே ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களையும் வெற்றி கரமாக நாம் நடத்தி முடித்திருக்கிறோம். மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி, சாலை வசதி, பேருந்து வசதி போன்றவைகளை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

ஒவ்வொரு கிராமத்திலும் எங்களுக்கு பேருந்து இல்லை, இருந்த பேருந்து கடந்த ஆட்சியிலே எடுக்கப்பட்டுவிட்டது என்று சொன்ன பொழுதுதான் அதைப்பற்றி ஆராய்ந்து- ஏன் எடுக்கப்பட்டது? எதற்காக எடுக்கப்பட்டது? எந்த நிலையில் எடுக்கப் பட்டது? என்பவைகளை எல்லாம் தெரிந்து இந்த அவையிலே அதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, அவர்களுக்குத் தளர்த்திக் கொடுக்கப்பட்ட அந்தச் சலுகைகளை எல்லாம் திரும்பப் பெற்று, எல்லாக் கிராமங் களுக்கும் பேருந்துகளை இலாப நஷ்டம் பார்க்காமல் விடக்கூடிய அந்த அளவிற்குத் தனியார் பேருந்துக்காரர்கள் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலையையும் இந்த ஆட்சிதான் இந்தக் குறுகிய காலத்திலே ஏற்படுத்தியிருக்கின்றது.

**கிருஷ்ணா நதி நீர்**

கழக ஆட்சி ஏற்பட்ட இந்தக் குறுகிய காலத்தில், சென்னைக்கு கிருஷ்ணா தண்ணீர் கொண்டுவந்தோம் என்று இந்த ஆறு மாத காலத்திலே முதல் முயற்சி தொடங்கி, இடைக்கால முயற்சி தொடங்கி, முற்றுப் பெறுகிற முயற்சியிலே நாங்கள்தான் இதைச் செய்தோம் என்று யாரும் மார்தட்டிக் கொள்ளவில்லை. கிருஷ்ணா தண்ணீரைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டிலே அதிலும் குறிப்பாக சென்னையில் வாழ்ந்த என்.டி.ராம ராவ் அவர்கள் முதலமைச்சராக ஆந்திரத்

## அட்டைப்பட விளக்கம்

**முதலாம் அட்டை:**
**தமிழ்நாட்டின் புதிய ஆளுநராகப் பதவி யேற்ற மேதகு ஆளுநர் செல்வி பாத்திமா பீவி அவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பொன்னாடை போர்த்தி வாழ்த்துகின்றார்.**

**இரண்டாம் அட்டை:**
**சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவையொட்டி நடைபெற்ற கிராமியக் கலை நிகழ்ச்சிகள், அலங்கார ஊர்திகளின் அணி வகுப்பு.**

**நான்காம் அட்டை:**
**தமிழ்நாட்டின் மேதகு புதிய ஆளுநராக செல்வி பாத்திமா பீவி அவர்கள் பதவியேற்பு நிகழ்ச்சி.**

திலே பொறுப்பேற்றிருந்த பொழுது, அருமை நண்பர், எம்.ஜி.ஆர். அவர்கள் இங்கே முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த பொழுது, இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக இருந்தபொழுது, அந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.

தொடங்கப்பட்ட அந்தத் திட்டம் பெரும் தொய்விற்கு உள்ளாகி இடையிலே ஆந்திராவிற்குத் தரப்படவேண்டிய பணம் சரியாகப் போய்ச் சேராத சூழ்நிலையில், அது கிடப்பிலே போடப்பட்டு, விடப்பட்ட ஒரு நிலைக்கு ஆளானது. அதற்குப் பிறகு 1989-90-லே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி முகிழ்த்தபோது, அப்போது சென்னா ரெட்டி அவர்கள் ஆந்திரத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த என்.டி.ஆர் அவர்களிடத்திலேயும், நானும் பொதுப்பணித்துறை அமைச்சரும் பேச்சு வார்த்தை நடத்தி, அதற்குப் பிறகு அந்தத் திட்டம் விரைவுபடுத்தப்பட்டு, இன்றைக்கு இந்த 5 ஆண்டு காலத்திலே அவர்கள் அப்படியே போட்டுவிட்டார்கள் என்று சொல்லமாட்டேன்- ஆனால் போதிய கவனம் செலுத்தாமல், இன்னும் விரைவுபடுத்த முயற்சி மேற்கொள்ளாமல் அது கிடப்பிலே இருந்த காலத்தில்- மீண்டும் இந்த ஆட்சி உருவான பிறகு, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்களிடத்திலே பலமுறை பேசி, கிருஷ்ணா தண்ணீர் சென்னைக்கு வந்தது என்ற அளவிற்கு நாம் ஆறுதல் பெரு மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறோம்.

அந்தத் தண்ணீர் இன்னும் முழுமையாக சென்னை மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பது ஒரு குறையானாலும் கூட, எதிர்பாராமல் ஏற்பட்டுவிட்ட இயற்கையின் சீற்றத்தால், ஆந்திரத்தில் வீசிய புயலால், இந்தத் தண்ணீர் வருவதற்காக வெட்டப்பட்ட வாய்க்கால் பெருமளவுக்குச் சேதமுற்று, இப்பொழுது அந்தச் சேதங்களையெல்லாம் சீரமைக்கின்ற பணியை ஆந்திர அரசே மேற்கொண்டு வருகின்றது. அதற்கான செலவு 5 கோடி ரூபாய்- ஆந்திர அரசே இன்றைக்குப் பொறுப்பேற்றுக்கொண்டு விரைவில் தணணீர் கிடைக்க ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆந்திரா விலிருந்து வருகின்ற கிருஷ்ணா தண்ணீர், நாள்தோறும் சென்னைக்குக் கிடைக்கக் கூடிய அளவுக்கு ஒப்பந்தம் போடப்பட வில்லை.

ஒரு ஆண்டில் எந்தெந்த மாதங்கள் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. அந்தந்த மாதங்களில் தண்ணீர் கிடைப்பதற்கு எந்த விதமான தட்டுப்பாடும் இல்லாமல் இப்போது அங்கே வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படி மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டுவரும் போதுதான் இரண்டு முறை தமிழகத்திலே அதிலும் குறிப்பாக, சில மாவட்டங்களிலே பெருமழை பொழிந்து வெள்ளச்சேத நிவாரணம் அளிக்கக்கூடிய அந்தக் கட்டத் திற்கு நாம் தள்ளப்பட்டோம்.

ஒரு புறத்திலே வெள்ள நிவாரணம், இன்னொரு புறத்திலே வறட்சி நிவாரணம் என்ற அளவுக்கு இருபுறமும் தாக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை இந்த அரசுக்கு ஏற்பட்டது. முதன்முறையாக ஜூன் மாதத்திலே பெரு மழை வந்தபோது, ஏற்கெனவே இருந்த நிவாரண உதவிகளையெல்லாம் அதிகப் படுத்தி, இந்த அரசு பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கியதை நீங்கள் யாரும் மறந்து இருக்க மாட்டீர்கள். முன்பு வெள்ளத்தால் குடிசைகள் பாதிக்கப்பட்டால் 500 ரூபாய் என்று இருந்ததை இந்த அரசு பொறுப்பேற்றவுடன் 1000 ரூபாய் என்று உயர்த்தியது. பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு 250 ரூபாய் என்று இருந்ததை 500 ரூபாய் என்று ஆக்கினோம். இறந்துபோன கால்நடைகளுக்கு எந்த உதவியும் இல்லாத நிலையே முன்பிருந்தது. இப்போதோ இறந்துபோன மாடுகளுக்கு 5,000 ரூபாய், கன்றுகளுக்கு 3000 ரூபாய், ஆடுகளுக்கு 1000 ரூபாய் என்று நிவாரணம் கொடுத்ததே இந்த அரசுதான்.

### வெள்ளத்தால் ஏற்பட்ட சேதமதிப்பு

இந்த இரண்டு முறை வெள்ளம் ஏற்பட்டு பெருமழையினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் சேத மதிப்பு இந்த இரண்டாவது முறை மழையிலே நாம் கணக்கிடும்போது நீர்ப்பாசன ஆதாரங்களைப் பொறுத்தவரையில் 48 கோடி ரூபாய்க்கும், பொதுப்பணித்துறை கட்டிடங்களைப் பொறுத்தவரை 10 கோடி ரூபாய்க்கும் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிச்சாலை பாலங்கள் முதலியவற்றைப் பொறுத்தவரையில் 246 கோடி ரூபாய்க்கும், தேசிய நெடுஞ் சாலையைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 19 கோடி ரூபாய்க்கும், சென்னை மாநகராட்சி யின் சாலைகளைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 67 கோடி ரூபாய்க்கும், வேளாண்மைப் பயிர்களைப் பொறுத்தவரை ஏறத்தாழ 863 கோடி ரூபாய்க்கும், தோட்டப் பயிர்களைப் பொறுத்தவரையிலே ஏறத்தாழ 56 கோடியும், ஊராட்சி, உள்ளாட்சி நிர்வாகத்தின் சேதங்கள் ஏறத்தாழ 50 கோடியும் நகர்ப்புற உள்ளாட்சி நிர்வாகத்தின் சேதங்கள பேரூராட்சியிலே 26 கோடியும் நகராட்சியிலே 39 கோடியும், கைத்தறி உபகரணங்களின் சேதம் 2 கோடியே 40 லட்சமும், ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் நலத்துறை பள்ளி விடுதிக் கட்டிடங்கள் 88 இலட்சமும், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழக கட்டிடங்கள் இயந்திரங்கள் 12 கோடியும், மீன் வளத்துறை வலைகள், கட்டுமரங்கள், வல்லம் முதலியவை 63 இலட்சமும், கால்நடைகள் இழப்பு 60 குடிசைகள் சேதம் 40 கோடியே 60 இலட் சமும் ஆக 1,482 கோடி ரூபாயும் மொத்தத் திலே சேத மதிப்பு.

சேதமதிப்பு என்பது வேறு; அதற்கு அளிக்கப்படுகிற நிவாரணம் என்பது வேறு.

மொத்த சேதத்திற்கும் நிவாரணம் அளித்துவிட முடியாது. நிவாரணம் என்பதே முழுவதுமாகக் கொடுக்கவில்லை. நிவாரண மாக கொடுக்கிறார்கள் என்பதே ஒரு அளவு தான் கொடுக்கிறார்கள் என்ற பொருள்தான். அதை நிவாரண உதவி என்று சொல்லிக் கொண்டு இருக்கிறோம்.

இப்படிப் பார்த்தால், சேதத்திலே ஒரு பங்கைத்தான் நாம் கொடுத்திருக்கிறோம். 1,482 கோடி ரூபாய்க்குச் சேதம் என்பது சேதத்தினுடைய மதிப்பைத்தான் காட்டுகிறது. இந்த இயற்கையின் சீற்றம் உருவானவுடன் அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் பதறி துடித்த நேரத்தில், உடனடியாக 1260 உணவு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு அதிலே 10 நாட்கள்வரையில் 18 லட்சத்து 42 ஆயிரம் பேருக்கு உணவு வழங்கப்பட்டிருக்கிறது.

வெள்ள நிவாரணப் பணிகளில் ஊழல் நடைபெறாமல் அலட்சியம் ஏற்பட்டுவிடாமல் அக்கறை காட்ட வேண்டும் என்பதற்காகப் பல எதிர்க்கட்சித்தலைவர்கள் தோழமைக் கட்சித்தலைவர்கள், அவையிலே உள்ள வர்கள்- இல்லாதவர்கள் இவர்கள் எல்லாம் விடுத்த அறிக்கையை மதித்து ஆங்காங்கே மாவட்ட அளவிலே கிராம அளவிலும் நகர அளவிலும் அனைத்துக் கட்சி பிரதிநிதி களைக் கொண்டு குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்களுடைய முன்னிலையிலேயே நிவாரண உதவிகள் பெரும் பகுதி வழங்கப் பட்டு இருக்கின்றன.

### நிவாரணத் தொகை பற்றிய விவரம்

நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட கண்காணிக்க உடனடியாக மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் பாதிக்கப்பட்ட மாவட்டங் களுக்கு எல்லாம் அரசின் சார்பில் அனுப்பி வைக்கப்பட்டார்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அன்றாடம் தவறாமல் அறிக்கை அனுப்ப வேண்டும் என்று ஆணையிடப் பட்டார்கள். அவ்வாறு அறிக்கைகள் தலைமைச் செயலகத்திற்கு வந்த வண்ணம் இருந்தன.

இந்த வெள்ள நிவாரணத்திற்காக முதல் கட்டமாக 20 கோடி ரூபாய் அரசின் சார்பில் ஒதுக்கப்பட்டது. இரண்டாவது கட்டமாக ஒதுக்கப்பட்ட தொகை 50 கோடி ரூபாய். இதற்கிடையில் வெள்ள நிவாரணப் பணிகள் எப்படி நடைபெறுகின்றன என்று கவனிக்க பலமுறை அமைச்சர் பெருமக்கள், குறிப்பாக நல்வாழ்வுத்துறை அமைச்சர் வருவாய்த் துறை அமைச்சர், சென்னை மாநகர மேயர் இவர்களையெல்லாம் கொண்ட கூட்டம் தலைமைச்செயலகத்திலே, என் தலைமை யிலே நடைபெற்று நடவடிக்கைகள் முடுக்கி விடப்படுவதற்கான ஏற்பாடுகள் நடை பெற்றன. அதற்குப்பிறகு 50 கோடி ரூபாய் இரண்டாவது கட்டமாக வழங்கப்பட்டது.

மூன்றாவது கட்டமாக 125 கோடி ரூபாய் வழங்கப்பட்டபோது அப்போதும் நெற் பயிருக்கு ஆயிரம் ரூபாய் எக்டேர் ஒன்றுக்கு நிவாரணத்தொகை என்றும் பகுதி சேதம் அடைந்த பயிருக்கு 500 ரூபாய் என்றும், நிலக்கடலை முழுமையாகச் சேதப்பட்டால் 2500 ரூபாய் என்றும்,பகுதி சேதமுற்றால் 1250 ரூபாய் என்றும், கேழ்வரகு, எள், சோளம், கம்பு முழுமையாகச் சேதமுற்றால் 400 ரூபாய் என்றும், ஒரு பகுதி சேதமுற்றால் 200 ரூபாய் என்றும், பயிறு வகைகள், சூரியகாந்தி முழு சேதத்திற்கு 600 ரூபாய் என்றும், பகுதி சேதத்திற்கு 300 ரூபாய் என்றும் கரும்பு முழு சேதத்திற்கு 4000 ரூபாய் என்றும், பகுதி சேதமுற்றால் 2000 ரூபாய் என்றும், மக்காச் சோளம் முழு சேதத்திற்கு 500 ரூபாய் என்றும் பகுதிக்கு 250 ரூபாய் என்றும் பருத்தி சேதத்திற்கு 1500 ரூபாய் பகுதி சேதத்திற்கு 750 ரூபாய், இதுதவிர மிளகாய், காய்கறிகள், வெங்காயம், வெற்றிலை, பூக்கள், கொத்த மல்லி, மரவள்ளிக்கிழங்கு, வாழை ஆகிய தோட்டப்பயிர்கள் முழுச்சேதமுற்றால் 4000 ரூபாய் என்றும், பகுதி சேதமுற்றால் 2000 ரூபாய் என்றும் அளிக்கப்பட்டது.



**சென்னையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் கள்ளச் சாராயத்தை அடியோடு ஒழிக்க நடவடிக்கை எடுத்த காவல்துறை அதிகாரிக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தமர் காந்தி விருதினை வழங் கினார் (26.1.97).**

தறிகளுக்கு அவர்களையும் கைவிட்டு விடாமல் அந்தத் தறிகளுக்கு நிவாரண உதவியாக முழுவதுமாகச் சேதமடைந்து பருத்திக் குழி தறி- அதாவது கைத்தறி தறிகளுக்கு நிவாரணம் 2000 ரூபாய் என்றும், பகுதி சேதமடைந்தால் ஆயிரம் ரூபாய் என்றும், முழுச் சேதமடைந்த பட்டுக்குழி என்றால் நிவாரணம் 3500 ரூபாய் என்றும் பகுதி சேதமடைந்த பட்டுக்குழி தறிகளுக்கு நிவாரணம் ஆயிரம் ரூபாய் என்றும் வழங்கப்பட்டது.

**மத்திய அரசிடமிருந்து கேட்டிருப்பது**

ஆந்திராவுக்கு மத்திய அரசு நிதி உதவி வழங்கியது. தமிழ்நாட்டுக்கு இன்னும் வழங்கவில்லை என்ற குறையை இங்கே உறுப்பினர்கள் எடுத்துச்சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஏன் என்றால் அப்படி அவர்கள் குறைகள் சொல்வதன் மூலமாக மத்திய அரசுக்கு இந்த அரசினுடைய வேண்டுகோளை வலியுறுத்துகிறார்கள் என்ற அளவிலே நான் அவைகளை எல்லாம் எடுத்துக்கொள்கிறேன். மத்திய அரசைக் குறை சொல்வதாகவோ, மாநில அரசைக் குறை சொல்வதாகவோ அவர்கள் யாரும் பேசியதாக நான் கருதவில்லை. இது பொதுப் பிரச்சினை. வெள்ள நிவாரணம் என்பது பொதுப் பிரச்சினை. ஆந்திராவில் அந்த முதலமைச்சர் மத்திய அரசைக் கேட்டது 5 ஆயிரம் கோடி ரூபாய். அவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத்தொகை 142 கோடி ரூபாய் தான். நாம் ஏறத்தாழ 600 கோடி ரூபாய்க்கு மேல் கேட்டிருக்கிறோம். எவ்வளவு தருவார்கள் என்று தெரியாது. தராமல் இருந்துவிட மாட்டார்கள் 25 கோடி ரூபாய் அறிவித்ததையே தரவில்லை. எனவே தரப் போகிறார்களா என்ற கேள்விக்கு இடமில்லை என்றே நான் கருதுகிறேன்.

> அறிவு, பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கிறது இயற்கையிலேயே! இருக்கும் அறிவு தெளிவு பெற, பகுத்தறிவு பெருக கல்வி கேள்வி மிகவும் முக்கியம்.
> **- கலைஞர்**

இந்த நிவாரணப் பணிகளைக் கவனிக்க, சேதத்தினைப் பார்வையிட மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வந்து சென்ற பிறகு, ஒரு குழு அனுப்பப்பட்டது. அந்தக் குழுவும் வெள்ளப் பகுதிகளைச் சென்று பார்வையிட்டு, என்னையும் அதிகாரிகளையும் கலந்து பேசிச் சென்றார்கள். அந்தக் குழுவினுடைய அறிக்கை இப்போது அங்கே பரீசீலிக்கப்பட்டு வருவதாக எனக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. நாம் 630 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம். 5 ஆயிரம் கோடி ரூபாய் கேட்ட ஆந்திராவுக்கு 142 கோடி ரூபாய் தான் கிடைத்திருக்கும்போது, 630 கோடி ரூபாய் கேட்டுள்ள நமக்கு எவ்வளவு கிடைக்கும் என்று தெரியாது.

ஆனால் இதுபோன்ற நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசு National Calamity Relief Fund என்ற ஒரு நிதியை வைத்திருக்கிறது. அந்த நிதியிலிருந்து தரும்போது அதை மானியமாகத் தருவார்கள். வேறு இனத்தில் கடனாகவும் தருவார்கள். நமக்குக் தரப் போகின்ற பணம் முழுவதும் மானியமாக வேண்டும் என்று தான் நாம் கேட்க இருக்கிறோம். இதுவரையிலே வரவில்லை என்றாலும்கூட வருகிற 20-ஆம் தேதி அன்று மத்திய திட்டக் குழுவினுடைய கூட்டம் இருக்கிறது.

அதற்குள் அந்த உதவித் தொகை, ஒரு வேளை வந்துவிடக்கூடும். வராவிட்டால், மத்தியத் திட்டக் குழுவிலே இந்தக் கருத்தை எடுத்துவைத்து, உறுப்பினர்களெல்லாம் கட்சி சார்பற்ற முறையில் எடுத்துவைத்துள்ள கருத்துக்களையெல்லாம் அங்கே அவர்களிடத்திலே தொகுத்துக்கூறி நீங்கள் நிதியை வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள இருக்கின்றேன்.

**வெள்ள நிவாரண நிதியும் ஒதுக்கீடும்**

இதற்கிடையிலே நான் விடுத்த வேண்டுகோளை ஏற்று வெள்ள நிவாரண நிதியாகத் தமிழ்நாட்டிலே உள்ள தொழிலதிபர்கள், வணிகப்பெருமக்கள், பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள், தனிப்பட்டவர்கள், ஆளுநர் உரையிலே 14 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருந்தாலும்கூட, இன்று வரையிலே வந்திருக்கிற தொகை 16 கோடியே 79 லட்சம் ரூபாய் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றி.

வெள்ள நிவாரணப் பணிகளிலே பெரும் ஊழல் நடைபெற்றுவிட்டது என்றெல்லாம் இங்கே ஒரு சிலர் சொன்னார்கள். அப்படிச் சொல்லும்பொழுதுகூட நான் கருதுவது, ஊழல் நடைபெறாமல் இருக்கவேண்டும் என்பதற்காக அவர்கள் சொன்னார்கள் என்றுதான் எடுத்துக்கொள்கின்றேன். ஏதோ என்னையோ, இந்த அரசையோ குற்றம் சாட்டியதாக நான் எடுத்துக்கொள்ளவில்லை ஊழல் நடைபெறக்கூடாது எனபதிலே கண்ணும் கருத்துமாக இந்த அரசு இருக்க வேண்டும் என்று அவர்கள் அறிவுரை கூறுவதற்காகச் சொன்னார்கள் என்று எடுத்துக் கொள்கின்றேன்.

இது ஒரு பெரிய பட்டியல் போடுகின்ற அளவிற்கு அதிகாரிகளோ, மற்றவர்களோ நடந்து கொண்டதாக எனக்குத் தெரியவில்லை, ஆனால் ஒரு சில இடங்களில் தவறு நடக்காமலும் இல்லை. அதிலே குறிப்பாகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் வள்ளலார் மாவட்டம் என்று கருதுகிறேன்- அங்கே வெள்ள நிவாரணத்தொகை குறைத்து வழங்கப்பட்டதாகப் புகார் கூறியதின்பேரில் 4 கிராம நிர்வாக அலுவலர்கள் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இது போன்ற குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் நேரடியாக எழுதிக்கொடுத்தாலும் அல்லது அஞ்சல் மூலமாக எழுதி அனுப்பினாலும் விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாவட்டவாரியாக நிதி வழங்கியதிலேகூட ஏதோ பாரபட்சம் இருப்பதைப்போல எங்களை ஏமாற்றிவிட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். மாவட்டவாரியாக இந்த நிதி எப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

சென்னை மாவட்டத்திற்கு 12 கோடியே 66 இலட்சம் அண்ணா மாவட்டத்திற்கு 16 கோடியே 86 இலட்சம், எம்ஜி.ஆர். மாவட்டத்திற்கு 16 கோடியே 89 இலட்சம், வடார்க்காடு அம்பேத்கர் மாவட்டத்திற்கு 4 கோடியே 34 இலட்சம், அம்மாவட்டத்திற்கு இலட்சங்கள் கூட வரவில்லை என்று சொன்னார் ஞானசேகரன். ஆனால் 4 கோடியே 34 இலட்சம் தரப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கு 9 கோடியே 36 இலட்சம் விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்டத்திற்கு 20 கோடியே 70 இலட்சம்.

தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டத்திற்கு 24 கோடியே 80 இலட்சம், சேலம் மாவட்டம் 2 கோடியே 23 இலட்சம், தர்மபுரி மாவட்டம் 3 கோடியே 14 இலட்சம்.

தஞ்சாவூர் மாவட்டம் 11 கோடியே 44 இலட்சம், காயிதே மில்லத் மாவட்டம் 11 கோடியே 31 இலட்சம் திருவாரூர் ஏ.டி.பன்னீர்செல்வம் மாவட்டம் 7 கோடியே 92 இலட்சம், புதுக்கோட்டை மாவட்டம் 2 கோடியே 82 இலட்சம், தீரன் சின்னமலை மாவட்டம் 15 இலட்சம், பெரும்பிடுகு முத்தரையர் திருச்சி மாவட்டம் 1 கோடியே 69 இலட்சம், பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் 9 கோடியே 59 இலட்சம், நீலகிரி மாவட்டம் 1 இலட்சம், இராஜாஜி மாவட்டம் 60 இலட்சம் சென்னை மாநகராட்சிக்கு 15 கோடி.

இப்படி 171 கோடி ரூபாய் மாவட்டவாரியாகத் தரப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையும் இந்த அவைக்கு நான் அளிக்கின்றேன்.

குறிப்பாக, விலைவாசியைப்பற்றி உறுப்பினர்கள் கவலை தெரிவித்தார்கள்.சிலபேர் விலைவாசி உயர்வைப் பற்றி கொஞ்சம் வேகமாகக்கூடப் பேசினார்கள். அவர்கள் வேகமாகப்பேசினாலும்,பத்திரிகையிலே அது வேகமாக வராது.

விலைவாசியை உடனடியாகக் குறைக்க வேண்டும் என்று சப்தம்போட்டுப் பேசலாம். ஆனால் பத்திரிக்கையிலே வரும்பொழுது, விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்றுதான் அச்சாகும். வேறுவிதமாக வராது. சிலபேர் தூண்டிவிடப் பார்க்கிறார்கள். மோதிக் கொள்ள அதற்கு நாங்கள் இடம் தரமாட்டோம் என்பதை இந்தச் சட்டமன்ற கூட்டத்திலேயே நிரூபித்துக்காட்டியிருக்கிறோம்.

திட்டங்களைப் படிப்படியாக நிறைவேற்றுவோம்.

ஒவ்வொரு தொகுதிக்கும் தேவைகள் இங்கே எடுத்துச்சொல்லப்பட்டிருக்கின்றன.

அவைகள் அத்தனையும் நிறைவேற்றப் படாவிட்டாலும் கூட தொடர்ந்து திட்டங்களைப் படிப்படியாக நிறைவேற்றுகிற அந்த நிலையை அரசு எடுக்கும் என்ற நம்பிக்கையைத் திட்டங்களைத் தெரிவித்துள்ள அனைவருக்கும் நான் கூறிக்கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

விலைவாசி உயர்வைப் பொறுத்த வரையில் பொன்னி போன்ற சூப்பர் பைன் மிக உயர்ந்த ரகம்,மிக மிக உயர்ந்த ரக அரிசியினுடைய விலை வெளி மார்க்கெட்டிலே உயர்ந்திருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை; ஆனால் அந்த உயர்வு எதனால் ஏற்பட்டது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இங்கே ஏற்பட்ட வெள்ளம் ஆந்திராவில் ஏற்பட்ட பெரும் புயல், வெள்ளம், இயற்கைச் சீற்றத்தினால் விளைந்த சீரழிவு இவைகள் காரணமாக ஆந்திராவிலிருந்து இங்கே அரிசி வரமுடியாத ஒரு சூழ்நிலை, வருகிற அரிசியைத் தடுக்கின்ற நிலை.

காரணம் அவர்களுடைய மாநிலத்தினுடைய தேவைக்காகத் தடுக்கின்ற நிலை. அதைப் போலத் தமிழகத்திலும் வெள்ளம், பெரும்மழை, பல இடங்களில் உடைப்பு எடுத்த நிலை, பயிர்களுக்கு நாசம், சேதம் அந்தக் காரணத்தினால் நாமும் சங்கடத்திற்கு ஆளாகியிருக்கிறோம்.

**விலைவாசிகள் குறைந்து வருகிறது**

கடந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் அதாவது இந்த ஆட்சி அமைவதற்கு முன்பு புழுங்கல் அரிசி (சன்னம்)யினுடைய விலை ஒரு கிலோ

எண்ணம் என்னும் கழனியில்
என்னென்னவோ விளைகின்றன;
அவற்றின் பயன் யாவும்கண்டறிந்து
சுவை பெறுவதே அறிவுடைமை.
- அறிஞர் அண்ணா

9.33 ரூபாயாக இருந்தது. கடந்த டிசம்பர் மாதம் இது 10.84 ரூபாயாக உயர்ந்து, தற்போது 10.26 அளவிற்குக் குறைந்துள்ளது. புழுங்கல் அரிசி சாதாரண அரசி ஏப்ரல் 96ல் ஒரு கிலோ விலை 7.99 என்று இருந்தது டிசம்பர் மாதம் 9.36 என்ற அளவிற்கு உயர்ந்து, சனவரி 97ல், இப்போது 9.19 ரூபாய் என்ற அளவிற்குக் குறைந்திருக்கின்றது.

பச்சரிசி, சன்ன அரிசி ஏப்ரல் 96ல் ஒரு கிலோ விலை 9.79 ரூபாய் என்று இருந்து, கடந்த ஆண்டு டிசம்பர் 96ல் 11.19 ரூபாய் என்று உயர்ந்து, இந்த மாதம் 10.85 ரூபாய் என்ற அளவிற்குக் குறைந்திருக்கிறது. பச்சரிசி சாதாரண அரிசி, ஏப்ரல் 96ல், 8.66 ரூபாயிலிருந்து டிசம்பர் 96ல் 9.66 ரூபாயாக உயர்ந்து, இப்போது 97 ஜனவரியில் 9.45 ரூபாய் என்ற அளவிற்குக் குறைந்திருக்கிறது. இந்தப் புள்ளிவிவரங்களிலிருந்து அரிசி விலை கடந்த மாதத்தை விட குறைந் திருக்கிறது என்பது புரிகிறது. இதே நிலை தான் கடந்த ஆண்டுகூட இப்படி உயர்ந்து மறுபடியும் குறைந்தது என்ற நிலை இருந்திருக்கிறது.

அரிசியைத் தவிர்த்து மற்ற அத்தியா வசியப் பொருட்களை எடுத்துக்கொண்டால், ஒரு சில பொருட்களினுடைய விலை ஏறியிருந்த போதிலும் எல்லாப் பொருட் களுடைய விலையும் ஏறிவிடவில்லை.

**காய்கறிவிலை உயர்வுக்குக் காரணம்**

காய்கறி விலையுயர்வு பற்றியும் இங்கே கூறப்பட்டது. அதற்கும் நான் ஏற்கெனவே சொன்ன காரணம்தான். மழை பொழிந்ததால் சென்னையை எடுத்துக்கொண்டால், காய்கறி விலை, கோயம்பேடு அங்காடியிலே ஒரு விலை, அங்கிருந்து மெள்ள மெள்ள அந்தக் காய்கறி நகர்ந்து மயிலாப்பூர் வரும் போது இன்னொரு விலை, ஏனென்றால் போக்கு வரத்துச் செலவு, ஆட்டோவில் வந்தால் அந்தச் செலவு பேருந்திலே வந்தால் அந்தச் செலவு, இப்படி பகுதிக்குப் பகுதி மாறி, கோயம்பேட்டிலேயிருந்து மயிலாப்பூர் வருவதற்குள் இரண்டு மடங்கு மூன்று மடங்கு காய்கறி விலை உயர்ந்து விடுகின்றது. அதற்குக் காரணம் போக்குவரத்து வசதி சரியில்லை என்று கூறப்படுகின்றது.

பொது விநியோக முறையிலே, அத் திட்டத்தைச் செம்மைப்படுத்திட, ஒரு உயர்மட்டக்குழு வெளிமாநிலங்களுக்குச் சென்று வந்து, தந்துள்ள அந்தக் கருத்துக் களையும் பரிசீலித்து அவைகளை நடை முறைப்படுத்த இந்த அரசு முன்வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது 3 ரேஷன் கார்டுகள் குடும்ப அட்டைகள், சிவப்பு நிறத்திலே ஒன்று, பச்சை நிறத்திலே ஒன்று, மஞ்சள் நிறத்திலே ஒன்று என்று 3 அட்டைகள் வழங்கப்படவிருக் கின்றன. சிவப்பு நிறத்திலே வழங்கப்படுகின்ற அட்டைகளுக்கு எல்லாப் பொருட்களையும் ரேஷனில் வாங்கிக் கொள்ளலாம். பச்சை நிறத்திலே கொடுக்கின்ற அட்டைகளுக்கு அரிசி நிச்சயமாகத் தரப்படமாட்டாது. ஏனென்றால், 10,000 ரூபாய், 15,000 ரூபாய் மாதந்தோறும் சம்பாதிப்பவர்களுக்கு வசதி படைத்த குடும்பங்களுக்கு அரிசி தரப்பட மாட்டாது. மற்ற பொருள்கள் ரேஷனில் தரப்படும். சிவப்புக் கார்டுகளுக்கு எல்லாப் பொருட்களும் அரிசி உட்பட எல்லாப் பொருட்களும் தரப்படும். இந்த மஞ்சள் கார்டுகளுக்கு அவர்களின் விருப்பத்திற்கு விட்டுவிடுகிறோம். அரிசி வேண்டுமா, வேண்டாமா? அரிசி வேண்டும் என்றால் கொடுக்கிறோம். சிவப்பு கார்டுக்குத் தருகின்ற அதே ரேஷன் தரப்படும். எனக்கு அரிசி வேண்டாம். சர்க்கரையோ, மண்ணெண் ணையோ கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுங்கள் என்று சொன்னால் இரண்டில் ஒன்றை அதிகப்படுத்தி அவர்களுக்குத் தரப்படும்; இதுதான் மஞ்சள்கார்டுக்கு உள்ள இலக்கணம்.

அதிலே ஏதாவது குளறுபடி இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுதி அனுப் பினால் அல்லது நேரிலே சொல்வார்களே யானால், அவைகளையும் சிந்தித்துப் பார்த்து ஏப்ரல்மாதம் 1-ஆம் தேதி அமலுக்கு வருகின்ற இந்தத் திட்டத்தை சிக்கல்களை யெல்லாம் களைந்து எறிந்து நிறைவேற்ற இந்த அரசு முன்வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சி மன்றத் தேர்தலைப் பற்றி யெல்லாம் இங்கே பேசப்பட்டது. அதிலே ஒன்றியத் தலைவர்களை நேரடியாகத் தேர்ந் தெடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தை திருநாவுக்கரசு அவர்கள் இங்கே சொன்னார்.

இந்தக் கருத்தை இந்த அரசு ஏற்றுக் கொள்கிறது. அந்தக் கருத்தை நிலைப்படுத்த அந்தக் கருத்தை நடைமுறைப்படுத்த மத்திய அரசோடு கலந்துபேசி ஆவன செய்வதற்கு அரசு முன்வரும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் சுப்பராயன் அவர்கள், மாநிலத் திலே ஒரு திட்டக்குழு இருப்பதைப்போல, மாவட்டத் திட்டக்குழுக்கள் இருந்திட வேண்டு மென்று சொன்னார். அதிலே யார் யார் இடம் பெற வேண்டுமென்றும் சொன்னார். மாநில திட்டக்குழுவில் 10, 15 பேர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். மாவட்டத் திட்டக்குழு என்று சொன்னால், அவர்கள் சொன்ன கணக்கின்படி பார்த்தால், அது பெரிய குழுவாக ஆகிவிடும். டி.டி.சி. என்று ஏற்கெனவே ஒன்று இருக்கிறது. 'டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில்' என்ற பெயரில் மாவட்ட வளர்ச்சிக் குழுக்கள் உள்ளன. அதிலே நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள், இவர் களெல்லாம் இடம் பெற்றுத் திட்டங்களைத் தீட்டுவார்கள்.

இப்போதும் ஒன்றும் மோசம் போய்விட வில்லை, உள்ளாட்சி மன்றத்தினுடைய தலைவர்கள்,நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், இவர்களெல்லாம் இடம் பெறுவதற்கு எந்த வகையில் எதிர் காலத்திலே உள்ளாட்சிகளுக்கு அதிகாரம் தரப்போகிறோம் என்பதை நிர்ணயித்து, அதை அறிவிக்கிற நேரத்திலே சுப்பராயன் அவர்களுடைய கருத்தும் ஆராயப்பட்டு நடைமுறைப்படுத்தமுடியுமா என்ற செய்தியை இந்த அவையிலே அறிவிப்பேன்.

வருகிற நிதிநிலை அறிக்கையில் என்னென்ன அதிகாரங்கள், என்னென்ன பொறுப்புகள், என்னென்ன நிதி உதவி யெல்லாம் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தரப்பட இருக்கின்றன என்பதை அறிவிக்க இருக்கின்றோம்.

**பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு**

நம்முடைய வல்லரசு அவர்கள் பேசும்போது, விவசாயிகள் எல்லோருக்கும் மின்இணைப்பு வழங்கிவிடுங்கள் என்ற ஒரு கோரிக்கையை வைத்தார்கள். இந்தியா முழுவதும் இன்றைக்கு எடுத்துக்கொண்டால் விவசாய பம்பு செட்டுகளுடைய தொகை 112 லட்சம் ஆகும். 112 லட்சம் இந்தியா முழுவது முள்ள பம்பு செட்டுகளினுடைய எண்ணிக்கை. இதை 25 மாநிலங்களுக்கும் ஏழு யூனியன் பிரதேசங்களுக்கும் என்று வகுத்துப் பார்த்தால் ஒரு மாநிலத்திற்கு சராசரி நான்கு லட்சம் பம்பு செட்டுகளுக்கு இருக்க வேண்டும். ஆனால் நம்முடைய தமிழகத்திலே மாத்திரமுள்ள பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 15 லட்சம் என்பதை நான் பெருமையோடு கூறிக் கொள்கிறேன்.

1967-ஆம் ஆண்டு கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது 2 லட்சம் பம்பு செட்டுகள் தான் இருந்தன. 1933-ஆம் ஆண்டுதான் தமிழகத்தை மின்சாரம் எட்டிப் பார்த்தது. 1933-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுக்கு அறிமுகமான மின்சாரம் 34 ஆண்டுகளுக்குப் பிறகு கூட 2 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு என்ற அளவிலே தான் அது வளர்ந்திருந்தது. திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி 1967-ஆம் ஆண்டு பொறுப்பேற்றதற்குப் பிறகு, அண்ணா அவர்கள் அதிலே காட்டிய அக்கறையின் காரணமாகவும், தொடர்ந்து நாங்கள் அண்ணா வழியிலே அந்த அக் கறையை மேலும் காட்ட முயற்சித்த காரணத் தினாலும் வளர்ந்து, கடந்த ஆட்சிகளிலே மேலும் வளர்ந்து வளர்ந்து, இன்றைக்கு 15 இலட்சம் பம்பு செட்டுகள் தமிழகத்தில் இருக்கின்றன.

1967-ஆம் ஆண்டு இரண்டு இலட்சமாக இருந்த பம்பு செட்டுகள்,197374லே 6 இலட்சம் பம்பு செட்டுகளாகி இன்றைக்கு 15 இலட்சம் பம்பு செட்டுகள் என்ற அளவிற்கு வந்திருக்கிறது. ஆண்டொன்றிற்கு 40 ஆயிரம் பம்பு செட்டுகள்தான் மின் இணைப்பு வழங்கப்படமுடியும். ஒவ்வொரு ஆண்டும் 40 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு இணைப்பு வழங்கப்படுகிறது.

ஆனால் இணைப்புக் கேட்டு வந்திருக்கிற கோரிக்கைகள் எண்ணில் அடங்கா. இலட்சக்கணக்கில் இருக்கின்றன. அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசிடத்திலேயிருக்கின்ற பணத்தையெல்லாம் வாங்கினாலும்கூட அது முடியாத காரியம். எனவே, மெல்ல மெல்ல- ஆனால் படிப் படியாக, உறுதியாக எல்லா பம்புசெட் களுக்கும் இணைப்புத் தருகின்ற ஒரு காரியத்தை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கள்ளச்சாராயத்தை ஒழித்திட....**

கள்ளச் சாராயம் இன்றைக்குப் பெருகி விட்டது. அதை ஒழிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் ஒழிக்கப்படவில்லை. என்றெல்லாம் இங்கே எடுத்துக் காட்டப்பட்டது.

இந்த கள்ளச் சாராயத்திலே மாமூல் பெருகிவிட்டது என்பதை மாண்புமிகு உறுப் பினர்கள் எடுத்துக்காட்டிய காரணத்தால், மாமூலை ஒழிப்பதற்காகக் காவல்துறை/ மதுவிலக்கு தனிப்பிரிவை இந்த ஆட்சி

மனைவிக்குத் தெரியாமல் தவறு செய்கிறவன், தனக்குத் தெரியாமல் அவளும் தவறு செய்ய இடம்கொடுத்தவனாகிறான்!
- காந்தியடிகள்

கலைத்தது. என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களில் கள்ளச்சாராய சோதனைகள் நடைபெற்று, தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதிய அரசு அமைந்த பிறகு 1.6.96 முதல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

கண்டுபிடிக்கப்பட்ட மொத்த வழக்குகள் 2,95,298. எப்படிப் பெருகியுள்ளது என்பதை இந்தக் கணக்கிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்–கைது செய்யப்பட்ட நபர்கள் 2,81,893 பேர். கைப்பற்றி அழிக்கப்பட்ட கள்ளச் சாராயம் 35,47,425 லிட்டர். கைப்பற்றப்பட்ட சாராய பாக்கெட்டுகள் 10,31,914. கைப்பற்றப்பட்ட எரிசாராயம் 2,92,991 லிட்டர். கைப்பற்றப்பட்ட மது கசாயம் 59,755 லிட்டர், கைப்பற்றப்பட்ட போலி மது மற்றும் இரண்டாம் தர மது வகைகள் 1,26,218 லிட்டர். பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் 2,362. குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டோர் 227 பேர். நீதிமன்றங்களில் வசூலிக்கப்பட்ட அபராதத்தொகை ரூபாய் இரண்டு கோடியே 66 லட்சத்து 19 ஆயிரத்து 99. காவல் துறையினரால் வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை 4 கோடியே 49 இலட்சத்து 23 ஆயிரத்து 394 ரூபாய். கள்ளச்சாராயத்திற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் மீது இந்த ஆட்சி நடவடிக்கை எடுத்த வகையில் ஒரு டி.எஸ்.பி. 8 இன்ஸ்பெக்டர்கள், 11 சப்இன்ஸ்பெக்டர்கள், 15 தலைமைக் காவலர்கள் மற்றும் 46 காவலர்கள் தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் 4 டி.எஸ்.பி.கள் 8 இன்ஸ்பெக்டர்கள் 40 சப்இன்ஸ்பெக்டர்கள் 14 தலைமைக் காவலர்கள் 198 காவலர்கள், கள்ளச்சாராயம் காரணமாக வேறு இடங்களுக்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளார்கள்.

ஒரு சப்இன்ஸ்பெக்டர், 4 தலைமைக் காவலர்கள், 12 காவலர்கள் மீது கிரிமினல் வழக்குப் போடப்பட்டிருக்கிறது. ஒரு டி.எஸ்.பி., 41 இன்ஸ்பெக்டர்கள், 46 சப் இன்ஸ்பெக்டர்கள், 14 தலைமைக்காவலர்கள், 104 காவலர்களின்மீது துறையின் சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு நடவடிக்கைகள் எடுத்தும்கூட, இதனால் அறவே கள்ளச்சாராயம் ஒழிந்து விட்டது என்பதை நான் நம்பத் தயாராக இல்லை.

மேலும் இதற்கு யார் யார் ஊக்கம் அளிக்கிறார்களோ அவர்கள் எல்லோரும் தண்டிக்கப்படவேண்டும். அதற்கு மாமன்றத்திலே உள்ள உறுப்பினர்கள், உறுப்பினர்கள் சார்ந்த கட்சியிலே இருக்கிறவர்கள் அத்தனைப் பேரும் இந்த அரசுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். கள்ளச்சாராயப் பேர்வழிகளைப் பிடிப்பதிலும் அவர்களுக்குத் தண்டனை வழங்குவதிலும் குறுக்கே நிற்காமல் இருப்பதிலே இந்த அரசுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**நிதி நிறுவன மோசடி**

இந்தக் கள்ளச்சாராயத்தைப் போல இன்னொரு சுயமைச்செயல். அதைவிட மோசமான செயல், பல ஏழை எளிய நடுத்தர மக்களையும், பாமர மக்களையும், படித்த மக்களையும் ஏமாற்றிய ஒரு மோசடி தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக நடைபெற்று, இந்த அரசு வந்த பிறகு, அந்த மோசடிப் பேர்வழிகள் எல்லாம் கைது செய்யப்பட்டு, சிறைச்சாலைகளிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். 168 கோடி ரூபாய் பொது மக்களுடைய பணம். நிதிநிறுவனங்களின் மூலம் சுரண்டப்பட்டிருக்கிறது. மோசடி செய்த நிறுவனங்களின் பெயர்கள்:

தேவி கோல்டு ஹவுஸ் குரூப் கம்பெனிகள்

ஈஸ்வரி குரூப் கம்பெனிகள்

மேக்ஸிமா குரூப் கம்பெனிகள்

சிநேகம் குரூப் கம்பெனிகள்

திருமகள் குரூப் கம்பெனிகள்

ஒமேகா கமர்ஷியல் கிரடிட்ஸ் அண்டு இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

நியூ இந்தியா நிதி அண்டு முதலீடு

லஷ்மி கோல்டு ஹவுஸ்

ரமேஷ் கார் குரூப்ஸ்

பாரதி ஜெம்ஸ் அண்டு ஜுவெல்ஸ் குரூப்ஸ்

கார் சென்டர், மதுவந்தி நிதி

சூரியா எஸ்டேட் நிதி

எஸ்.கே.எஸ். கோல்டு ஹவுஸ்,

ராமுலு செட்டி ஜுவெல்லரி அண்டு நிதி

சென்னை மோட்டார் நிதி அண்டு

உத்தரவாதம் நிறுவனம், தட்சிணா குரூப்.

-இந்த மோசடி நிதி நிறுவனங்கள் எல்லாம், பத்திரிகைகளில், டி.வி.க்களில் விதவிதமான விளம்பரங்களை வெளியிட்டு, அவர்கள் கூறுகின்ற வட்டியைப் பார்த்து ஏமாந்து போய், பல பேர் இந்த நிறுவனங்களிலே உழைத்து, கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தின் ஒரு பகுதியைக் கொண்டுபோய்க் கொடுத்து, ஏமாந்த நிலையிலே, 168 கோடி ரூபாய் சூறையாடப்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து எங்களுடைய பணத்தைத் திரும்ப வாங்கித் தாருங்கள் என்று கேட்டவண்ணம் பொருளிழந்த மக்கள், கண்ணீரும் கம்பலையுமாகக் கையேந்தி நிற்கிறார்கள். அந்தக் கஷ்டத்தை எப்படித் தீர்ப்பது என்பதற்குச் சட்டபூர்வமான நிலையிலே, அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

அதற்கடையால, நிறுவனங்களையெல்லாம் கட்டுப்படுத்த ஒரு புதிய சட்டத்தை அரசு கொண்டு வர இருக்கிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அந்தச் சட்டமும் வர விருக்கிறது.

அதற்குப் பிறகு, இந்த நிறுவனங்கள் மீது நடைபெறுகின்ற வழக்குகளைக் கூர்மைப் படுத்தி, விரைவுபடுத்த, தொகுத்து ஒன்றாக்கி நடத்திட தனி நீதிமன்றமே அமைக்கப்பட்டு, அந்த நீதிமன்றத்திலே இந்த வழக்குகள் விசாரிக்கப்பட்டு, இழந்த பொருள்களில் ஒரு முக்கால் பகுதியையாவது திரும்பக் கொடுக்கக்கூடிய ஒரு நிலையை அரசு நிச்சயமாக ஏற்படுத்தும் என்ற உறுதியை, பொருளிழந்தவர்களுக்கு எல்லாம் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அதேபோல், சந்தனக் கட்டை கடத்தல் பற்றியும், இங்கே எடுத்துச் சொன்னார்கள். மலைகள் எல்லாம் மொட்டையாக இருக்கின்றது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். எல்லா சந்தன மரங்களும் போய்விட்டன என்று சொன்னார்கள். இந்த ஆட்சி சந்தனக் கட்டை கடத்தல்காரர்களை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை.

சந்தனக் கட்டை விவகாரத்திலே யாரையும் நாம் விட்டு விடவில்லை. கண்டுபிடிக்கப்பட்ட வாகனங்களையும் விட்டுவிடவில்லை. சந்தனக் கட்டைகள் மூலமாக, கிடைக்க வேண்டிய ஏலத் தொகையையும் நாம் விட்டுவிடவில்லை. இதிலே உஷாராக இருக்கிறோம். இன்னும் உஷார் தேவை என்பதை மறந்துவிடாமல் இருக்கிறோம்.

**பலவீனப்படும் ரவுடிகள் ராஜ்யம்**

சில உறுப்பினர்கள், ரவுடிகளைப் பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள்.

கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு 5.7.96ல் எழும்பூர் நீதிமன்றத்திலே நடைபெற்ற கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட மாலைக் கண் செல்வம் மற்றும் நம்பி என்ற ரவுடிகள் அன்றைக்கு இரவே கைது செய்யப்பட்டார்கள். ரவுடித்தனம் நடைபெறலாம்; கொலைகள் நடைபெறலாம். இருந்தாலும் அதை உடனடியாகக் கண்டுபிடித்து தண்டிக்கின்ற அந்தக் காரியங்களே தொடர்ந்து இந்த ஆட்சியில் நடைபெற்று இருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. அதே கலாச்சாரம் தானே இப்போதும் என்று கேட்டு விடக்கூடாது. இப்போது இருந்தாலும்கூட, அந்தக் கொலை நிகழ்ச்சிகள் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும்கூட- உடனடியாக இந்த அரசு, காவல் துறை, நடவடிக்கை எடுத்து அவர்களைக் கைது செய்கிற அந்தப் பொறுப்பு மிகுந்த காரியத்தை நடத்தியிருக்கிறது என்பதற்காகத்தான் இவைகளை எல்லாம் சொல்கிறேன்.

23.7.96 அன்று மாட்டு சேகர் என்ற ஒரு ரவுடியும் அவனது நண்பர்களும் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார்கள். அதை இந்த அவையிலே பலரும் பாராட்டி இருக்கிறார்கள். ரவுடிகளை அடக்குவதற்கு இந்த அரசு மேற்கொண்டிருக்கிற நடவடிக்கையையும், காவல் துறை அதன் காரணமாக

> மற்றவர்களை விமர்சிக்கிறபோது,
> விமர்சிப்பவரின் மனச்சாட்சி
> முணுமுணுப்பதை இந்த விமர்சகர் காது
> கொடுத்துக் கவனிப்பது, அவருக்கும் நல்லது;
> சமுதாயத்திற்கும் நல்லது.
>
> – கலைஞர்

மேற்கொண்டிருக்கிற கடமையையும் இந்த அவையிலேயே பலரும் பாராட்டியிருக்கின்றார்கள்.

27.7.96 அன்று, புரசைவாக்கத்தில் ரவுடிகள் செந்தில் குமார் என்ற குமார், குமர குருபரன், முத்துக்குமார், குமரன் ஆகியோர் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டிருக்கிறார்கள். 31.7.96 அன்று வளசரவாக்கம் சுதாகர் ரெட்டி அவர்களுடைய மகன் சுதீரை கடத்திச் சென்ற ரவுடிகள் ஆசைத்தம்பி, மனோ மற்றும் கோபால் ஆகியோர் காவல் துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அதைப் போல கபிலன் என்ற ஒரு பெரிய ரவுடி காவல்துறையினரால் அடையாறு பக்கத்திலே சுட்டுக்கொல்லப்பட்டான். இவர்கள் எல்லாம் சுட்டுக் கொல்லப்பட்ட போது மகிழ்ச்சி தெரிவித்துப் பாராட்டியவர்கள் பலர் உண்டு.

தினந்தோறும் ரவுடிகளுடைய தொல்லை இன்றைக்கும் இருக்கிறது. ஒரு 5, 6 பேரை சுட்டுக் கொன்றுவிட்ட காரணத்தால் ரவுடி ராஜ்யமே ஒழிந்துவிட்டது என்று சொல்ல முடியாது. ரவுடிகள் ஓரளவுக்கு இன்றைக்கு அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அச்சத்தை ஏற்படுத்தியிருப்பது இந்தக் காவல்துறை, இந்த அரசு. இந்த அரசை ஊக்கப்படுத்தி காவல்துறையை ஊக்கப் படுத்தி இந்த ரவுடி ராஜ்யத்தை ஒழிப்பதற்கு எல்லோரும் முன்வர வேண்டும்.

கொலைகளைப் பற்றி இங்கே பேசுகிற போது நம்முடைய பா.ஜ.க. உறுப்பினர் நண்பர் வேலாயுதன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். கடந்த சில ஆண்டுகளில் அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் 27 பேர் கொல்லப்பட்டிருப்பதாக இங்கே உருக்கமாகச் சொன்னார்கள். பா.ஜ.க.வினுடைய தலைவர்கள் கொடுத்துள்ள அந்தச் செய்தி

இந்த ஆட்சியிலே என்று சில பத்திரிகைகளிலும், கடந்த சில ஆண்டுகளில் என்று சில பத்திரிகைகளிலேயும் வந்திருக்கிறது. எனவே தான், இந்த 27 கொலைகளும் இந்த ஆட்சியில் நடைபெற்றது என்று யாரும் எண்ணிக் கொள்ளக் கூடாது.

1989-ஆம் ஆண்டு, 31.8.89 அன்று கோவையில், கழக ஆட்சியின்போது, வீர கணேஷ் என்ற இந்து முன்னணிக்காரர் படுகொலை செய்யப்பட்டார். 24.3.90 அன்று திண்டுக்கல்லில் நாகராஜ் என்பவர் படு கொலை செய்யப்பட்டார். அந்த இரண்டு நிகழ்ச்சிகளும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெற்றன. அதற்குப் பின்னால் வந்த அதிமுக. ஆட்சிக் காலத்தில் 5.9.91 அன்று கோவையில் வீரசிவா என்ற சிவக்குமார் கொலை செய்யப்பட்டார். 4.12.92 அன்று ராமேஸ்வரத்தில் முனியசாமி என்பவர் கொலை செய்யப்பட்டார். 8.8.93 அன்று சென்னையில் குண்டு வீச்சில் 11 பேர், காசிநாதன், தேசிகன், சேஷாத்திரி, ராம சுப்பிரமணியன், பாலன், ராஜேந்திரன், ராமகிருஷ்ண ரெட்டி, பிரேம்குமார், மோகன பிரேம்குமார், லலிதா, ரவீந்திரன் ஆகிய 11 பேர் கொல்லப்பட்டார்கள். 10.10.94 அன்று மதுரையில் ராஜகோபாலன், இந்து முன்னணித் தலைவர் கொலை செய்யப் பட்டார். 14.4.95 அன்று சென்னையில் டைபிள் சண்முகம் என்பவர், குண்டு வீச்சில் கொலை செய்யப்பட்டார். 15.4.95 அன்று சென்னை புதுப்பேட்டையில் பிரபு என்பவர் கொலை செய்யப்பட்டார். 16.4.95 அன்று கோவையில் ராஜேந்திரன் என்பவர் படுகொலை செய்யப்பட்டார். 3.7.95 அன்று நாகையில் திருமதி தங்கம் என்பவர் குண்டு வீச்சில் கொலை செய்யப்பட்டார். 5.7.95 அன்று நாகையில் முருகன் என்பவர் கொலை செய்யப்பட்டார்.

இவை எல்லாம் முன்பு நடைபெற்றன.

**கொலைகள் பரிகாரம் ஆகுமா?**

பிறகு இந்த ஆட்சியில் என்று எடுத்துக் கொண்டால் 1.12.96 ல் உத்தமபாளையத்திலே ஆறுமுகம், 3.1.97ல் ரங்கநாதன், 10.1.97ல் எஸ்டி. மாணிக்கம் மற்றும் துரைராஜ், இன்று தாம்பரத்தில் ராமச்சந்திரன் என்ற இந்தக் கொலைகள்.

நான் இந்த எண்ணிக்கையை ஒப்பிட்டுக் காட்டி இந்த ஆட்சியை விட அந்த ஆட்சியிலே அதிகக் கொலைகள், அந்த ஆட்சியை விட இந்த ஆட்சியிலே குறைவான கொலைகள் என்று கூறி அந்த விவாதத்திற்கு வர விரும்பவில்லை. இப்படி ஒரு நிலையை, தமிழகத்தில் இந்து முன்னணியினர் மற்றும் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இடையே ஏற்பட்ட நிலையை வரவேற்பதற்கு நாம் யாரும் தயாராக இருக்கமுடியாது.

சொல்லிக்கொண்டே இருக்கிறோம். ஒவ்வொரு முறையும் பேசிக்கொண்டே இருக்கிறோம். இது பெரியார் பிறந்த மண், காமராஜர் பிறந்த மண், பேரறிஞர் அண்ணா பிறந்த மண், காயிதேமில்லத் பிறந்த மண், இங்கே மதவாதங்களுக்கும், சாதிச் சண்டைகளுக்கும் இடமில்லை என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதேநேரத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இத்தகைய வன்முறைச் செயல்கள் மத வெறியின் காரணமாக நடைபெற்று விடுகின்றன. மத வெறி ஆட்டத்திலே ஈடுபடுகின்றவர்கள், இந்து முன்னணி என்ற பெயரால் ஈடுபட்டாலும் அல்லது இஸ்லாமிய சமூகத்தின் பெயரால் ஈடுபட்டாலும் எந்த அமைப்பின் பெயரால் ஈடுபட்டாலும் அவர்கள் எல்லாம் வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியவர்கள் என்பதை நான் இந்த

> வாழ்க்கை என்பது அவனவன் வாழ்வதற்கு என்று மட்டுமே என்று கருதக் கூடாது; மற்றவர்கள் நலனுக்கும் என்று கருத வேண்டும்.
>
> – தந்தை பெரியார்

அவையிலே தெரிவித்துக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

ஒரு கடுமையான நடவடிக்கையின் மூலமாகத்தான் அவர்களை எல்லாம் சீர்திருத்த முடியும் என்றால், அந்தக் கடுமையான நடவடிக்கையை எடுக்கவும் இந்த அரசு தயங்காது என்பதை நான் திட்டவட்டமாக இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

கொலைகள் பிரச்சினைக்குப் பரிகாரம் ஆகாது. கருத்துக்குக் கருத்து, எழுத்துக்கு எழுத்து, பேச்சுக்குப் பேச்சு என்கின்ற அளவில் எண்ணங்களை வெளியிட்டு சிலரைத் திருத்த முற்பட வேண்டுமே அல்லாமல், கொலையினால் எப்படி ஒரு கொள்கையை திணித்துவிட முடியும்? ஒரு கொள்கையை பரப்பி விட முடியும்? என்பதை அவர்கள்- இந்து முன்னணியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இஸ்லாமிய சமுதாயத்தினுடைய மன்றங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எண்ணிப் பார்க்க வேண்டும். இத்தகைய தீவிரவாதிகள் இருதரப்பிலும் இருக்கிறார்கள்.

இஸ்லாமிய சமுதாயத்திலே ஒரு கொலை விழுந்தால், மறுநாள் இந்து சமுதாயத்திலே இந்து முன்னணியைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட வேண்டும் என்று நியதி இல்லை. இதுபோல் தொடர்ந்து நடக்கக் கூடாது என்று பிரதிக்ஞை எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பதிலாக பழிக்குப் பழி என்ற முறையிலே வெட்டிக் கொண்டே போனால் நாடு காடாகி விடும், இரத்தக் களறிதான் மிஞ்சும். இதை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

**பழனிபாபா படுகொலை**

நம்முடைய நண்பர் பழனிபாபா கொல்லப் பட்டு விட்டார். அவர் தமிழ்நாட்டிலே உள்ள எல்லாத் தலைவர்களிடத்திலும் நட்பும் கொண்டிருந்தார், விரோதமும் கொண்டிருந்தார். அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே நண்பராக இருந்தார். பிறகு எம்.ஜி.ஆர். ஆட்சியிலே அவர் கண்டிக்கப்பட்டார். தண்டிக்கப்பட்டார் என்றுகூட கருதுகிறேன். சிறைச்சாலைக்குச் சென்றதாகக் கூட நினைவு.

பிறகு எனக்கு நண்பராக இருந்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளுக்கு ஆதரவாகப் பேசினார். பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிர்ப்பாகவும் பேசினார். அப்துல் சமது அவர்களுக்கும் நண்பராக இருந்தார், லத்தீப் அவர்களுக்கும் நண்பராக இருந்தார். பிறகு இந்த இருவருமே கூட, அவர் மேடைக்கு வராமல் இருப்பது நல்லது என்று சொல்லுகின்ற அளவுக்கு அவருடைய பேச்சு அதிக உஷ்ணத்தோடு, அதிக கொதிப்போடு அமைந்ததையும் எல்லோரும் அறிவீர்கள்.

எனவே, அவர் பேசியது அவருடைய கொலைக்குக் காரணமாக இருக்கக்கூடாது. அதற்குச் சட்டம் இருக்கிறது. அந்தப் பேச்சை எதிர்கொள்ளக்கூடிய வாதங்கள் மற்றொரு முனையில் இருக்கவேண்டுமேயல்லாமல் அது கத்தி முனையில் தீர்மானிக்கக் கூடிய செய்தியாக இருந்துவிடக்கூடாது. பழனி பாபாவினுடைய கொலைக்கு, நானும் இந்த அரசும், ஏன்- இங்கே வீற்றிருக்கின்ற அவையிலுள்ள அத்தனைப் பேரும் தங்களுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ள வேண்டியவர்கள்தான்; தெரிவித்துக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும்கூட, இப்படிப்பட்ட நிகழ்வுகளிலே, எதிரிகள் தப்பித்துவிடாமல், கொலையாளிகள் தப்பித்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமை உணர்வு அரசுக்கும் இருக்கிறது, காவல்துறைக்கும் இருக்கிறது. அந்தப் பொறுப்பை நாங்கள் நிறைவேற்றுவோம்.

உரையினிடையே சுப்பராயன் அவர்கள், கூட்டுறவுத் துறையால் நடத்தப்படும் பொது விநியோகத் திட்ட நியாய விலைக் கடைகளில், விற்பனையாளர்களுடைய பணியைப் பற்றியும், அவர்களுக்கு இந்த அரசு செய்யவேண்டிய சலுகை அல்லது உரிமை அல்லது உதவி, இதைப் பற்றியும் எடுத்துச் சொல்லி, அதற்கு முதல்வர் பதில் அளிப்பார் என்று கருதுகிறேன் என்று எண்ணுவதாகச் சொன்னார்.

நான் அவருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புவது 5 ஆண்டுகள் பணி முடித்த விற்பனையாளர்களுக்கு 430 ரூபாய் அடிப்படைச் சம்பளம் என்றும் 5 ஆண்டுகள் பணி முடிக்காதவர்களுக்கு 800 ரூபாய் தொகுப்பு ஊதியம் என்றும் வழங்கப்பட்டு வந்தது. 800 ரூபாய் தொகுப்பு ஊதியத்தை, இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு, 11.9.96 அன்று 'ரெட்ராஸ்பெக்டிவ்' வுடன் 900 ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. இதனால் 84 இலட்சம் ரூபாய் கூட்டுறவு நிறுவனங்களுக்கு அதிகமாகச் செலவும் ஏற்படும். கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் 3326 பேர் கட்டுனர் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் ரூ.600 தொகுப்பு ஊதியமாகப் பெற்று வந்தார்கள். இந்தத் தொகையை 800 ரூபாயாக 'ரெட்ராஸ்பெக்டிவ்'வுடன் 11.9.96 அன்று உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதனால், கூட்டுறவுச் சங்கங்களுக்கு 80 இலட்ச ரூபாயும், அரசுக்கு ஆண்டு ஒன்றிற்கு 27 இலட்சம் ரூபாயும் கூடுதலாக செலவாகும். இதற்கு மேலும் அவரது கோரிக்கை வளருமேயானால், அதைப்பற்றியெல்லாம் அலட்சியப்படுத்திவிடாமல், நிதிநிலை அறிக்கைக்கு முன்பு அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

தமிழ் ஆட்சி மொழித் துறை கடந்த ஆண்டில் என்ன செய்தது என்று ஞான சேகரன் கேட்டார். கேள்வியிலேயே அவர் அந்தக் கருத்தை வைத்தார். இந்த ஆட்சி பொறுப்பு ஏற்ற பிறகுதான், தமிழ் வளர்ச்சிக் காக, தமிழ் பண்பாட்டுத்துறை வளர்ச்சிக்காக ஒரு தனி அமைச்சகத்தையே உருவாக்கி இருக்கிறது என்பதை அவர் அறியாதவர் அல்ல.

ஆட்சி மொழித்துறையால் தமிழ் வளர வேண்டுமென்பதற்கு உடனடியாக 500 புதிய தமிழ் தட்டச்சுப் பொறிகள் வாங்கப்பட்டிருக்கின்றன. தட்டச்சுப் பொறிக்கும், தமிழுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டு விடக்கூடாது. தமிழில் அடிக்க வேண்டிய செய்திகளை யெல்லாம் தரவேண்டிய செய்திகளை யெல்லாம் அடிப்பதற்கு ஒரு தட்டச்சுப் பொறி தேவை. அதில் 500 பொறிகள் இப்போது வாங்கப்பட்டிருக்கின்றன. அப்படி வாங்கிய காரணத்தினால், தற்போது 874 ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகள் 374ஆகக் குறைக்கப்பட்டுவிட்டன. 304 தமிழ் தட்டச்சுப்பொறிகள் 804ஆகக் கூடியுள்ளது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எடுக்கப் பட்ட 500 ஆங்கில தட்டச்சுப் பொறிகளின் விசைப்பலகை- 'கீபோர்டு' இவைகளெல்லாம் கூட தமிழிலே மாற்றப்பட உள்ளன. அரசு ஆணைகள் அனைத்தும் தமிழிலும் வெளியிடப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆங்கிலத்திலும் ஆணைகள் வரவேண்டும். தமிழிலும் அந்த ஆணைகள் வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தமிழிலே எழுதும் கடிதங்களுக்கு, வேண்டுகோளுக்கு, முறையீடுகளுக்கு, அரசு அதிகாரிகள் தமிழிலேயே அவர்களுக்கு விடை தரவேண்டுமென்றும் அப்படி எழுதாத அலுவலர்கள் குறித்து செய்தி வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற குறிப்பு அவர்களுக்கு இப்போது அனுப்பி வைக்கப்படுகிறது. கோப்புகளிலே கூட கூடுமானவரையில்- நான் முழுவதும் என்று சொல்ல மாட்டேன், கூடுமானவரையிலே, பெரும்பாலும் தமிழிலேயே இன்றைக்குக் கோப்புகள் அமைச்சர்களுக்கு வருகின்றன. ஒரு சில கோப்புகள் பழைய கோப்புகள், தொடர்ந்து எழுதப்பட வேண்டிய கோப்புகள். இவைகள் வேண்டுமானால் ஆங்கிலத்தில் வரலாம். கவர்னருக்கு அனுப்ப வேண்டிய கோப்புகள் இதுவரையில் தமிழிலே வரவில்லை. ஆங்கிலத்திலே மாத்திரம் வந்தன. இனிமேல் தமிழிலும் வரலாம். ஏனென்றால், இப்போது வந்திருக்கிற கவர்னர் தமிழும் தெரிந்திருக்கிற காரணத்தால் – ஆளுநருக்கு அனுப்பக்கூடிய கோப்புகளும் கூட தமிழிலேயே அனுப்பக்கூடிய அளவிற்கு இந்த அரசு தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஆக்குவதிலே அக்கறை கொண்டிருக்கிறது.

கன்னியாகுமரி, நெல்லை கட்டபொம்மன், காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், மதுரை, கோவை, தர்மபுரி, திருச்சி ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் ஆட்சி மொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு, அதிகாரிகளுக்குத் தெளிவான கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன பொதுவாகவும், துறை வாரியாகவும், தனித் தனியாகவும் 84 அகராதிகளை மறு ஆய்வு செய்து, அத்தோடு புது கலைச்சொற்களையும் சேர்த்து, புதிய அகராதி விரைவில் வெளியிடப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வணிகர்கள் தங்கள் வணிக நிறுவனத்தின் பெயர்ப் பலகைகளைத் தமிழில் எழுத வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவர்களும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். வணிகர்கள் பெயர்ப் பலகைகளில் பயன்படுத்திட 515 சொற்களைக் கொண்ட வணிகச் சொற்பட்டியல் ஒன்று வெளியிட்டு அது நாடெங்கும் இன்றைக்குப் பரப்பப்பட்டுள்ளது. இவைகள் தமிழுக்காக, தமிழ் ஆட்சி மொழிக்காக இதுவரை ஆற்றியுள்ள பணிகள்.

நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. வி.கே.லட்சுமணன் அவர்கள் தியாகிகள் மானியத்தைச் சற்று அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். ஓய்வூதியத்தையும் அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார். நிதிநிலை அறிக்கையினுடைய விவாதம் முடிந்து பதில் அளிக்கின்ற நேரத்தில், அல்லது நிதிநிலை அறிக்கையில் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து ஏற்கப்படும் என்ற உறுதியை நான் அவர்களுக்கு வழங்குகின்றேன்.

நம்முடைய உறுப்பினர்கள் சில பேர் இங்கே பேசும்போது ஊழல் பேர்வழிகள் மீது அரசு, எடுத்த நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளையெல்லாம் எடுத்துக் கூறி இருக்கின்றீர்கள். அரசு, ஊழல் புரிந்தவர்கள் மீது நீதிமன்றத்தின் சார்பாக, சட்டத்தின் சார்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் எடுத்து வருகிறது.

நான் அதை விரிவாகப் பேச விரும்பாததற்குக் காரணம், அதிலேயே நம்முடைய பொழுதைக் கழித்து விடக்கூடாது என்பதற்காகத்தான். மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள், மக்கள் பிரச்சினைகள் இவற்றிற்காக நாம் நேரத்தைச் செலவிட வேண்டும். அது ஏதோ ஒரு சைடு. இவைகளையெல்லாம் கெடுக்க வருகின்ற நல்ல திட்டங்களை எல்லாம் பாழ்படுத்த வருகின்ற சில செயல்களைத் தடுக்க வேண்டும். நடந்த செயல்களைத் தடுப்பதன் மூலம், அதைத் தண்டிப்பதன் மூலம் எதிர்காலத்தில் இந்த அரசின் சார்பிலும் அத்தகைய தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று அந்த முறையிலேதான் இப்போது நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம். நீங்கள் ஆட்சிக்கு வந்தால், வராதா என்று கேட்டால், வரட்டும் என்ற அந்த எண்ணத்தோடுதான் நாங்களும் இன்று நடவடிக்கை எடுத்து வருகின்றோம். தாராளமாக அதைச் சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

ஏனென்றால் அப்படிச் சொல்வதற்குக் காரணம், எந்தக் குற்றமும் நடைபெறாமல் பார்த்துக்கொள்வது என்கின்ற சத்தியம் செய்துவிட்டுதான் இந்த ஆட்சிப் பொறுப்பிலே நான் அமர்ந்து இருக்கின்றேன். அப்படி குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும், அது தி.மு.க.வாக இருந்தாலும், தோழமைக் கட்சியாக இருந்தாலும்- யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

நான் சொன்னதைத் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன் அது யாராக இருந்தாலும், என் மகனாக இருந்தாலும், யாராக இருந்தாலும் நிச்சயமாக ஊழல் புரிந்தால் அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை உண்டு என்பதைத் தெரிவித்து இந்த அரசு அந்த நல்ல வழியிலே நடைபோட அனைவரும் ஆதரவு தரவேண்டுமென்று கேட்டு, கவர்னர் உரையிலே கொடுத்துள்ள திருத்தங்கள் அல்லது பிரேரணைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு – உரையாற்றிய நண்பர்கள் அனைவருக்கும் என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன்."



காதுநுகர் நாடகம்

# இளைய கடல்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

## 1. பட்டு வீடு

**பட்டு:** யார்?

**அரச:** அரசப்பன்.

**பட்டு:** ஓ வாருங்கள். உட்காருங்கள் அத்தான்.

**அரச:** என்ன பட்டு, உன் குரலில் இத்தனை தளர்ச்சி?

**பட்டு:** ஒன்றுமில்லை...நமக்குள் ஏற்பட்டுள்ள தொடர்பு ஊர் அறிந்ததாகிவிட்டதாகி விட்டது. நம் திருமணம் விரைவில் நடந்துவிட வேண்டுமென்று என் பெற்றோர் கவலை அடைந்திருக்கிறார்கள்.

**அரச:** நான்தான் சொன்னேனே, என் காதல் பித்துக்காக உன்னையும், திரண்ட சொத்தாக அந்தத் தங்கத்தையும் (நான்) மணந்துகொள்ள வேண்டுமென்று! இதை இனிய முறையில், எடுத்துச் சொல்ல வேண்டாமா, நீ உன் பெற்றோருக்கு?

**பட்டு:** ஒப்புவார்களா?... உம்...ஒப்புவார்கள்... ஒப்பித்தான் தீரவேண்டும் அவர்கள். எதுவும் பேசிக் கொள்ளாமல் என்னைப் பறி கொடுத்தேன் உங்கட்கு! இப்போது இதுவும் சொல்வீர்கள், எதுவும் சொல்வீர்கள். நல்லது அத்தான்! ஆமாம். முதலில் எனக்கும் உங்கட்கும் திருமணமா? அல்லது தங்கத்திற்கும் தங்கட்குமா?

**அரச:** தங்கத்தைத்தான் முதலில் மணந்து கொள்ள வேண்டும்.

**பட்டு:** அத்தான், கேளுங்கள், நான் பட்டு. முதலில் பட்டணிந்துதான், பிறகு தங்கத்தையணிவார்கள்!

**அரச:** இல்லையே, தங்கத்தைப் பெற்றால் தானே பட்டைப் பெற முடியும்? இதில் இன்னொன்று, என்னென்று கேள்.

**பட்டு:** என்ன?

**அரச:** தங்கம் என் தாய் மாமன் மகள், இருந்தாலும் உன் அகமொத்த தோழி. அவளையும் என்னையும் ஒன்றுபடுத்தும் தொல்லை என்னைச் சேர்ந்ததில்லை.

**பட்டு:** ஐயோ அத்தான். தங்கம் அந்த இளவழகன் மேல் உயிரை வைத்திருக்கிறாள். தங்கத்தின் தந்தையோ, மகள் விருப்பத்திற்கு மாறாக நடப்பதில்லை. மேலும் நோயுற்றவர் தந்தை; தாயற்றவள் தங்கம்.

**அரச:** தங்கம் என் மைத்துனி. நினைவிருக்கிறதா?

**பட்டு:** எனக்கு நினைவிருக்கிறது. அவளுக்கு நினைவிருக்க வேண்டும் அத்தான்.

**அரச:** என் கண்ணல்ல. நீ முயன்றால் அவளுக்கு அதை நினைவூட்டலாம். நீ முயன்றால் என்னோடு கூட்டலாம். மனமார முயற்சி செய். என் பங்கில் இரு. உன்னை நம்பி இருக்கிறேன். என்னை நீ நம்பு.

**பட்டு:** நம்பியதின் பயனைத்தானே இதோ அறுவடை செய்கிறேன். இன்னும் நம்ப வேண்டுமா? நம்புகிறேன்.

**அரச:** வருந்தாதே பட்டு. இனிமேலும் நீ வருந்தும்படி நான் நடக்க மாட்டேன்! முகத்தைக் காட்டு என் கருத்தை முடி—என் கண்ணல்ல.

(முத்தத்தின் ஒலி.)

## 2. தங்கம் வீடு

**பட்டு:** தங்கம் எங்கே தங்கம்?

**வேலைக்காரி:** அவுங்கப்பாகிட்ட பேசிக்



கிட்டு இருக்காங்க. அதோ வாராங்களே.

**தங்கம்:**

முல்லைமலர் கேட்டேன்
இல்லை என்று சொல்லாமல்
முடித்துக்கொள் என்றாரடி தோழி.

**பட்டு:** **(பேச்சு)**

**ஓகோ அப்பாவா சொன்னார் தங்கம்? சொந்த மாமனைக் கட்டிக்கொள்ளச் சொல்லவில்லையா?**

**தங்கம்:**

**'சாகும்போது உன் தாய் சொல்லியபடி நீ உன் மாமனை மணந்துகொள்வதுதானே' என்று சொன்னார் தந்தை. நான் சொன்னேன், 'மாமாவின் நடத்தையை, என் தாய் இப்போது இருந்து பார்த்தால், அப்படிச் சொல்ல மாட்டார்கள்' என்றேன். என்றேனா, 'சரியம்மா சரியம்மா, நீ இளவழகனையே மணந்து கொள்ளம்மா' என்று முடித்து விட்டார் வாய்குளிர, மனம் குளிர.**

**பட்டு: திருமணம்?**

**தங்கம்: இன்னும் நாலைந்து நாளில்.**



**பட்டு:** மிக்க மகிழ்ச்சி தங்கம். எனக்கு விடை கொடு.

**தங்கம்:** ஏன் பட்டு?

**பட்டு:** அம்மா விரைவில் வரச் சொன்னார்கள். நீ படித்துக் கொண்டிரு.

**தங்கம்:** சரி.

## 3. தங்கம் வீடு

(காற்செருப்பின் நடை ஓசை)

**தங்கம்:** வேலைக்காரி, வெளியிற் போ, வெளியிற் போ.

**வேலை:** ஏம்மா?

**தங்கம்:** அவர் வருகிறார், போ போ.

**வேலை:** வரலையம்மா.

**தங்கம்:** அதோ காலடி ஓசை.

**வேலை:** ஏம்மா கவுந்து படுத்துகிட்டிங்க கட்டில்லே?

**தங்கம்:** அதெல்லாம் கேளாதே, போ...

**இளவழகன்:**

(நாற்காலி இழுக்கப்படும் ஓசை,
செம்பு—விரலால் தெரிவிக்கப்படும் ஓசை)

தங்கம்! தங்கம்!

(உடம்பில் கையால் தட்டப்படும் ஓசை)

தூக்கமா?

**தங்கம்:** இல்லை அத்தான் இல்லை. நீங்கள் வந்தவுடன் கையால் தொட்டு எழுப்புவதுதானே! என்மேல் கைபட்டால் ஒடிந்தா போகும், தாமரைத்தண்டு சடுக்கென்று ஒடிவது போல?

**இளவழ:** இப்படி என்று தெரிந்தால் தப்படிப்பதுபோல் சாத்தியிருப்பேனே! அது போகட்டும் தங்கம், சேதியைச் சொல்ல மாட்டேன் என்கிறாயே?

**தங்கம்:** சொல்லத்தான் தொடங்குகிறேனே அத்தான்.

**இளவழ:** காயா? பழமா?

**தங்கம்:** எப்படித் தெரிகிறது உங்கட்கு?

**இளவழ:** உன் முகம் என்னமோ முந்தாநாள் பூத்த தாமரை மாதிரி இருக்கிறது.

**தங்கம்:** அப்படியானால் கெட்ட செய்தி தானே? ஆமாம், உங்களை நான் மணந்து கொள்ளக் கூடாதென்று அப்பா சொல்லிவிட்டார்.

**இளவழ:** ஆ, அப்படியா?



**தங்கம்:** இல்லையில்லை! நல்ல செய்திதான்.

**இளவழ:** மெய்தானா தங்கம்?

**தங்கம்:** மெய்தானா, என் முகம் முந்தா நாள் மலர்ந்த தாமரை போலிருப்பது?

**இளவழ:** இந்தா, இன்று இதழ் விரித்த செந்தாமரை உன் முகம்.

**தங்கம்:** 'மாமனை மணந்து கொள்கிறாயா?' என்றார் அப்பா. 'முடியாதப்பா' என்றேன் நான். அம்மா சாகும்போது அப்படித்தானே சொன்னாள் என்றார். இப்போது அம்மா இருந்தால் அப்படிச் சொல்லமாட்டார்கள் என்றேன். யாரை மணந்து கொள்ள நினைக் கிறாய் என்று கேட்டார். சொன்னேன்...

**இளவழ:** என்ன சொன்னாய்?

**தங்கம்:** உங்கள் பேரை.

**இளவழ:** எனக்கு இரண்டு பேர் உண்டு. எதைச் சொன்னாய் என்றால்?

**தங்கம்:** சொன்னேன். அவர் தெரிந்து கொண்டார். அப்புறம் என்ன?

**இளவழ:** அப்பாவிடம் நீ சொல்லியபடி சொல். சொல்லுகிறாயா இல்லையா? நான் போகிறேன்.

**தங்கம்:** "இளவழகனை" என்றேன்.

**இளவழ:** அப்படிச் சொல், காது குளிர.

**தங்கம்:** மனமார ஒப்பினார், சரி என்று செப்பினார். இதில் இன்னொரு மகிழ்ச்சிக் குரிய செய்தி. என்ன என்று கேளுங்கள்?

**இளவழ:** என்ன என்று கேட்க வேண்டும். விரைவில் சொல்ல மாட்டாயா தங்கம்?

**தங்கம்:** இன்னும் இரண்டு மூன்று நாட்களில்

திருமணம். ஏன் என்று கேளுங்கள்.

**இளவழ:** ஏன்?

**தங்கம்:** அப்பாவுக்கு உடல் நலம் இல்லை. சீர்கேடு முற்றிக்கொண்டு வருகிறது அத்தான். இன்றைக்கே மாப்பிள்ளை வீட்டார் அப்பாவைக் கண்டு பெண் கேட்டு, நாளையும் குறித்துவிட வேண்டும். விரைவில் போய் இதைச் சொல்லுங்கள், உங்கள் பெற்றோருக்கு.

**இளவழ:** அப்படியானால், நான் விரைவில் வீட்டிற்குப் போகவா?

**தங்கம்:** உம். பின்னென்ன?

**இளவழ:** சரி, போய் வருகிறேன். (நாற்காலி தள்ளப்படும் ஓசை.)

**தங்கம்:** இன்னும் சிறிது நேரம் இருங்கள் அத்தான். உட்காருங்கள்.

**இளவழ:** இருக்கவும் கூடாது. போகவும் கூடாது.

**தங்கம்:** விரைவில் போனால்தான், அவர்களை விரைவில் அனுப்ப முடியும் என்கிறீர்களா?

**இளவழ:** நானா சொன்னேன்? நீதானே தங்கம் சொன்னாய்! என் கரும்பல்ல, விடை கொடு, போய் வருகிறேன்.

## 4. தங்கம் வீடு

**அரசப்பன் தந்தை:** தெ. செங்கேணி. ஐயா என்ன செய்கிறார்?

**வேலைக்காரி:** ஆரு, தங்கம் அவுங்கப்பா தானே?

**அரசப்பன் தந்தை:** ஆமாம்.

**வேலைக்காரி:** அவுங்களுக்குத்தான் உடம்பு நல்லால்லியே. சும்மா வந்து வந்து தொல்லை குடுத்தா?

**அரசப்பன் தந்தை:** சீ, ஓடிப்போய் ஒங்க மச்சான் வந்திருக்காருண்ணு சொல்லு.

**வேலைக்காரி:** ஐயா...ஐயா...

**தங்கத்தின் தந்தை:** ஏன்?



**வேலைக்காரி:** அரசப்பா அவுங்க அப்பா வந்திருக்காரு. தூங்றார்ண்ணு சொல்லிப் புடட்டுமா?

**தங்கத்தின் தந்தை:** சீச்சி, அனுப்புடி.

**அரசப்பன் தந்தை:** எப்படி இருக்கிறது உடம்பு?

**தங்கத்தின் தந்தை:** சீர்கேடு மிகுதியாகிறது. (இருமல் ஓசை) ஐந்தாந் தேதி தங்கத்தின் திருமணம். (இருமல்) இடையில் மூன்று நாள்தான் இருக்கிறது (இருமல்).

**அரசப்பன் தந்தை:** மாப்பிள்ளை?

**தங்கத்தின் தந்தை:** இரிசப்பன் மகன் இளவழகன், (இருமல்) நல்ல பையன். (இருமல்) படித்த பையன்.

**அரசப்பன் தந்தை:** உரியவன் இருக்கையில் ஏன் அப்படி?

**தங்கத்தின் தந்தை:** அல்ல, அல்ல. (இருமல்) தங்கம் இளவழகனைக் கட்டிக் கொள்வேன் என்னும்போது? வருத்தப்படாதே. இருந்து நடத்து நீ திருமணத்தை. (இருமல்) படுத்த படுக்கையை விட்டு என்னால் நகர முடியாது (இருமல்).

**அரசப்பன் தந்தை:** நம் பையனுக்கு உங்கள் பெண்ணைக் கொடுப்பதால் சொத்து அயலில் போகாதே?



"நீ புகை பிடிப்பாயா?"

"ஊகூம்."

"குடிப் பழக்கம் உண்டா?"

"இல்லை!"

"குதிரைப் பந்தயம்?"

"சேச்சே! பிடிக்காது!"

"அப்ப... ஒரு கெட்ட பழக்கமும் உனக்கு இல்லையா?"

"ஒண்ணே ஒண்ணு உண்டு- பொய் மட்டும் சொல்லுவேன்!"

**தங்கத்தின் தந்தை:** அதெல்லாம் எனக்குத் தெரியும்.

**அரசப்பன் தந்தை:** சரி.

**தங்கத்தின் தந்தை:** கணக்கப்பிள்ளை இருக்கிறார். ஆட்கள் இருக்கிறார்கள். ஆக வேண்டியதைப் பார். தொடங்கு. போ...

## 5. தங்கம் வீடு

**இளவழ:** என்ன ஊன்றிப் படிக்கிறாய்?

**தங்கம்:** வாருங்கள் அத்தான். நல்லவேளை. என் மாமா இருக்கிறாரே? அவர், எழுதுகிறார் காதற் கடிதம், படியுங்கள்.

**இளவழ:** மாமா வண்டு, மைத்துனியாகிய மலர்க்காட்டைக் கேட்கிறது. உன்னிடம் வந்தால் வா என்று வரவேற்பாயா? பதில் எழுது ஒரு பேச்சில், வா என்று சொன்னால், தங்கம் உன் வாய் மலரா கசக்கும்? பதிலா எழுதுகிறாய்? படி தங்கம்.

**தங்கம்:**

செந்தாமரை மலர்க்கும் செவ்விதழ்க்கும் தேனுக்கும்
வந்தால் வரவேற்க ஒண்ணாது செந்தேனை
வீழ்த்துகின்ற தோட்டம் தோட்டக்காரன் மேன்மையினை
வாழ்த்துமணப் பந்தலுக்கு வா.

இதை உங்கள் கையாலேயே அதோ இருக்கும் அவன் ஆளிடம் கொடுத்து அனுப்புங்கள் அத்தான்.

**இளவழ:** இதை எடுத்துப் போய்க் கொடப்பா.

**வேலைக்காரன்:** நல்லதுங்க.

**தங்கம்:** ஏன் அத்தான், விடிந்தால் திருமண மாயிற்றே. உடுப்பெல்லாம் தைத்தாகி விட்டதா?

**இளவழ:** விடிந்தாலா? இன்றிரவுதான் திருமணம், இன்றிரவு நாலு மணிக்கு. இன்னும் சட்டை தைத்து முடியவில்லையாம். சட்டையில்லாவிட்டால் என்ன தங்கம்? நான் போகிறேன். வேலை இருக்கிறது.

**தங்கம்:** சரி அத்தான்.



★ பலமுள்ளவர்களுக்கு உள்ள உரிமைகளையெல்லாம் பலமில்லாதவர்களும் பெற்றிருக்கவேண்டும்; அதுதான் உண்மையான நாடு.

-காந்தியடிகள்

## 6. தங்கம் வீடு

**உறவு1:** மூன்று மணி ஆகிறது. மேளக்காரர் நடையில் படுத்திருங்கிறாங்க, எழுப்புங்க.

**உறவு2:** ஏன் முருகேசு. வாழ மரத்தெ கட்றது எப்போ? எழுந்திருப்பா.

**உறவு3:** அடுப்பு மூட்றதுதானே, சமையல் காரரே?

**உறவு4:** வர வேண்டிய பெரியவர்களுக்கு வண்டி அனுப்பியாச்சா?

(இசை முழக்கம்)

## 7. பட்டு வீடு

**அரசப்ப:** பட்டு, நீ திருமண வீட்டுக்குப் போகாதே. இங்கேயே இருந்துவிடு. ஏன் என்றால், அங்கே கலவரம் ஏற்படும்.

**பட்டு:** என்ன?

**அரசப்ப:** திருமண வேளையில் இளவழகன் இருக்கமாட்டான்.

**பட்டு:** ஏன்?

**அரசப்ப:** அவனை அங்கில்லாமல் செய்து விடுவேன், எப்படியாவது.

**பட்டு:** உயிருக்குக் கெடுதி நேர்ந்துவிடக் கூடாது அத்தான்.

**அரசப்ப:** இல்லை இல்லை. மயக்க மருந்தைக் கொடுத்துக் கடற்பாலத்தின் அடியில் போட்டுவைத்துவிட எண்ணுகிறேன்.

**பட்டு:** இறந்துவிட்டால்?

**அரசப்ப:** இறக்கமாட்டான் பட்டு. வசம்பின் சாற்றையும் எலுமிச்சைச் சாற்றையும் கலந்து கொடுத்தால் உடனே மயக்கம் தீர்ந்துவிடும்.

தாலி கட்டும் வேளைக்கு அவன் இல்லாவிட்டால் நான் தங்கத்திற்குத் தாலி கட்டிவிடுவேன். அப்பாவும் அதுதான் சரி என்றார். இங்கேயே இரு.

**பட்டு:** சரி.

## 8. தெரு

**அரசப்ப:** ராமு! காருக்கு எண்ணெய் ஊற்றியாயிற்றா?

**ராமு:** ஆச்சிங்க.

**அரசப்ப:** மாப்பிள்ளையைக் கூப்பிடு விரைவாக.

**ராமு:** மாப்பிள்ளே, அரசப்பன் கூப்பிடராரு.

**அரசப்ப:** இளவழகரே, ஏறுங்கள் காரில், அந்தப் படவா இன்னும் தைக்கிறான் உடுப்பை. ஒருமுறை போட்டுப் பார்க்க வேண்டுமாம். உம். விடப்பா காரைக் கடற்கரை பக்கம் ஏறுங்கள், ஏறுங்கள், பும்பும்! (கார் ஊதும் ஓசை)

**இளவழ:** திருமணம் முடிப்பதென்றால் எவ்வளவு தொல்லை அரசப்பன்!

**அரசப்ப:** அதை ஏன் கேட்கிறீர்கள் இளவழகரே! காலைச் சிற்றுண்டியோடு சரி. இதுவரைக்கும் பச்சைத் தண்ணீரை வாயில் ஊற்றவில்லை. கேட்டால் கேளுங்கள், விட்டால் விடுங்கள். வானத்தின் கீழேயிருந்து சொல்லுகிறேன். என்னவோ சீமை இலந்தம் பழமாம், சென்னையிலிருந்து வந்தது. வாயிற் போடுங்கள் இதை.

**இளவழ:** நன்றாயிருக்கிறது! (இச் என்று சப்பும் ஓசை)

**அரசப்ப:** ராமு, மாப்பிள்ளையைக் கூப்பிடு இப்போது?

**ராமு:** மயான காண்டந்தானா?

**அரசப்ப:** இல்லை. மாலை வரைக்கும் மாப்பிள்ளைக்கு மழையும் வெயிலும் ஒன்றுதான். நிறுத்து காரை, இவனைத் தூக்கு. நடந்து போ. கடற் பாலத்தின் அடியில் கிடத்து. அப்படித்தான். இந்தா இந்தத் துணியால் மூடு, உச்சி முதல் உள்ளங்கால் வரைக்கும். வா போகலாம். (பும்-பும்).



## 9. தங்கம் வீடு

**ஐயர்:** பொண்ணு மாப்பிள்ளைக்கு வஸ்திரா பரணம் ஆகட்டும், நாழிகை ஆகிறது.

**உறவு1:** வாம்மா தங்கம், இப்படி வா. பொண்ணு தோழி ஆரு தைனாகி?

**உறவு2:** அவத்தான் அயிலாண்டம். அது கூடவா தெரியாது?

**உறவு3:** சித்தப்பா, மாப்பிள்ளை எங்கே சித்தப்பா?

**உறவு4:** இங்கேதான் இருப்பான். நீ வெத்லே கட்டே பிரிச்சி பட்டி கட்டு. ஆரத்தே கொண்டா. சந்தனம் கரை.

**இளவழகன் தாய்:** ஆமாம், நம்ப பையன் இளவழகன் எங்கே?

**இளவழகன் தந்தை:** இங்கேதான் இருப்பான்.

**இளவழகன் தாய்:** எங்கேயும் பார்த்தேனே, இல்லியே!

**ஐயர்:** பொன்னு மாப்பிள்ளை வரனும். வாத்யம், வாத்யம்.

**இளவழகன் தந்தை:** நிறுத்துப்பா வாத்யத்தே. பையன் எங்கே?

**உறவு1:** ஏன் வீராசாமி, பையனே பாத்தியா? குப்புசாமிக்குத் தெரியுமே. ஏன் குப்புசாமி, மாப்பிள்ளை எங்கே?

**உறவு:** நான் பார்க்கவேயில்லை. அதோ வராரே அரசப்பன், அவரெ கேட்டாத் தெரியுமே?

**இளவழகன் தந்தை:** என்னா அரசப்பா, இளவழகன் எங்கேயப்பா?

**ஐயர்:** முகூர்த்த வேளை தப்பிடப்படாது சீக்கிரம்.

**இளவழகன் தாய்:** பிள்ளையை யாராவது எங்கேயாவது இட்டுப் போய்க் கொன்னுட்டாங்களோ என்னமோ தெரியலியே.

**அரசப்ப:** நானும் இத்தனை நேரமாய் அலைந்து விட்டேன். இளவழகன் ஊரிலே இருக்கிறதாத் தெரியவில்லை.

**இளவழகன் தந்தை:** ஐயோ ஏன்?

**அரசப்ப:** இளவழகன் ஒருத்தியை வைப்பாட்டியாய் வைத்துக் கொண்டிருந் தாராம்.

**இளவழகன் தந்தை:** ஐயோ, அப்படிப் பட்டவனல்லவே.

**அரசப்ப:** கேளுங்கள். அவளும், அவளைப் பெற்றவர்களும் இளவழகனை மடக்கி, நீ திருமணம் செய்து கொண்டால் நாங்கள் போகிற வழி என்ன என்று சண்டை போட்டார்களாம். அதன் மேல் இளவழகன் 'நான் தங்கத்தைத் திருமணம் செய்து கொள்ளவில்லை உன்னையே நான் திருமணம் செய்து கொள்ளுகிறேன்; என்று அந்த வைப்பாட்டியையும், வைப்பாட்டியின் உறவினரையும் கூட்டிக்கொண்டு, வெளியூருக்குப் போய் விட்டாராம் என்று கேள்வி.

**இளவழகன் தந்தை:** அடாடா, என்ன மாறுபாடு.

**உறவு1:** பெரிய முட்டாத்தனமால்ல இருக்கு.

**உறவு2:** அப்போ என்னா பண்றது. ஒண்ணும் கெட்டுப்புடலே. இதோ இருக்கார் மலையாட்டம் அரசப்பன். இழுத்துவைத்து மணத்தை முடியுங்கள்.

**உறவு3:** ஆமாமாமாம்.

**உறவு2:** பெத்தவங்களே கேக்கணுமே!

**உறவு1:** மாப்புள்ளையெப் பெத்தவங்க ஒத்துக்கறாங்க, அந்தாண்ட பாத்த பொண்ணு ஒடையவங்க யாரு? அந்த மாப்பிள்ளையே பெத்தவங்கதானே? இது என்ன வெக்கக் கேடாருக்குது!

**உறவு2:** அது சரிதான்.

**உறவு3:** கொண்டா?

**உறவு4:** மாப்பிள்ளையெ தலையிலே தண்ணியே ஊத்திகினு வரச்சொல்லு. அவ்வளவுதான்.

**உறவு5:** ஏன் ஐயரே. முகூர்த்த வேளை இன்னும் இருக்குதில்லே?

**ஐயர்:** நல்லா இருக்குண்ணேன். மணி நாலுதானே ஆச்சி! இருக்கு! இருக்கு!

**உறவு1:** பொண்ணு எங்கே!

**உறவு2:** இதோ வருது. இட்டாங்க பொண்ணு மாப்பிள்ளையெ.

**உறவு3:** பொண்ணு எங்கே?

**உறவு4:** பொண்ணு காணலையே?

**உறவு5:** உம் அங்கே தானிருக்கும். எங்கே பூடும்?

## 10. கடற்கரை

**தங்கம்:**

கடலே! ஆழ்கடலே! உன் நடுவயிற்றில்
என்னை அடக்கிக் கொள்!

**பட்டு:** தங்கம்! தங்கம்!
**தங்கம்:** ஆ, யார்—பட்டா!
**பட்டு:** ஆம் தங்கம், உன் மணவாளன் இதோ.
**தங்கம்:** அத்தான்!

**இளவழ:** கடலில் விழுந்து உயிர் விடவும் துணிந்தாயா? தங்கம், எனக்கு மயக்க மருந்தைக் கொடுத்து இங்கே போட்டுவிட்டுப் போய்விட்டான் அரசப்பன். வசம்பின் சாற்றையும் எலுமிச்சஞ் சாற்றையும் தந்து என்னைக் காத்தனர் உன் தோழியர்.

**பட்டு:** என் அருகில் உட்கார்ந்து கொள்! தங்கம், அருகில் வா. கடலில் வீழ்ந்து உயிர் விடம் துணிந்தாயா?

**தங்கம்:** ஆம் அத்தான், துன்பக் கடலில் தொலைந்திருப்பேன். ஆயினும் இன்பக் கடலில் இதோ நீந்தி விளையாடுகின்றேன்.

**பட்டு:** நீங்களும் இங்கேயே இருங்கள்! நான் அந்தக் குற்றவாளி அரசப்பன் நிலையைப் பார்த்து வருகின்றேன்.

**இளவழ:** பட்டு, கூடுமானால், இதே நேரத்தில் அரசப்பனை நீ மணந்து கொள்ள முயன்று பார்.

**பட்டு:** நல்லது, போகிறேன்.

**தங்கம்:** இளவழகன்.

## 11. தங்கம் வீடு

**மக்கள்:** தங்கமே, இளவழகே வாழ்க!

**தங்கம்:** பட்டு, மணம் முடிந்ததா உனக்கு?

**பட்டு:** ஆம் தங்கம்.

**மக்கள்:** இரு மணமக்களும் வாழ்க!



# உழைப்பே உயர்த்தும்

அவனுக்கு 13 வயதிருக்கும். துறுதுறு வென இருப்பான். இளமையிலே கொடுமை யான வறுமை. படிக்க வேண்டிய அந்த வயது அவனை வேலைக்குத் துரத்தியது. நியூயார்க்கிலுள்ள ஒரு தந்தி அலுவலகத் தில் மிகவும் குறைந்த சம்பளத்துக்கு வேலைக்குச் சேர்ந்தான்.

அவனைப்போல் பல சிறுவர்கள் வேலை செய்தார்கள். வருகின்ற தந்திகளை நகரிலுள்ள முகவரிகளுக்குக் கொண்டு சேர்ப்பதே அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலை. எல்லா சிறுவர்களும் தந்தி வந்தவுடன் அதை எடுத்துக்கொண்டு நாள் முழுக்க முகவரியைத் தேடி அலைவார்கள். ஆனால், இந்தச் சிறுவனோ, ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் நகரிலுள்ள பல இடங்களுக்கும் நேரில் சென்று, எந்தெந்த இடங்களில் எந்தெந்தக் கட்டடங்கள், முக் கியமான இடங்கள், ஆலயங்கள் இருக் கின்றன என்பதைத் தெரிந்துகொள்வான். இரவில் அவைகளை நினைவு கூர்வான். இதனால், மற்ற சிறுவர்களைக் காட்டிலும் இவனால் தந்திகளை விரைவாகக் கொடுக்க முடிந்தது.

சம்பள நாள். எல்லாச் சிறுவர்களும் வரிசையில் வந்தார்கள். ஒவ்வொருவரின் பேரையும் சொல்லி, அவரவருக்குரிய சம்பளத்தை முதலாளி கொடுத்துவந்தார். வரிசையில் இந்தச் சிறுவன் வந்ததும் அவனுக்குச் சம்பளம் கொடுக்காமல், ஓரமாக நிற்கவைத்துவிட்டார். எல்லோரையும் போலவே, இவனும் பயந்துபோனான். தனக்கு இன்றோடு வேலைபோய்விடும் என்று நடுங்கினான்.

கடைசியாக, எல்லோருக்கும் சம்பளத் தைப் பட்டுவாடா செய்துவிட்டு இந்தச் சிறுவனிடம் வந்தார் முதலாளி.

"எல்லாருக்கும் சம்பளமாக ஒரு டாலர்தான் கொடுக்கப்பட்டது. ஆனால், உன் வேலைத் திறமையால் ஒரு நாளைக்குப் பல தந்திகளைக் கொடுத்து உன் தனித்திறமையை வெளிப்படுத்தி வருகிறாய். அதனால் உனக்கு இரண்டரை டாலர் சம்பளம்" என்று பாராட்டி சம்பளத்தைக் கொடுத்தார்.

அந்தச் சிறுவன்தான் பிற்காலத்தில் உலகத்திலேயே மிகப் பெரிய பணக் காரரான ஆன்ட்ரூ கார்னஜி எனும் அமெரிக்கர்.



## சுத்தம் சுகம் தரும்

- கவிஞர். சிவநேசன்

ஈக்கள் மொய்த்த பண்டங்களை
உண்ணக் கூடாது - தெரு
ஓரம் விற்கும் பண்டம் வாங்கித்
தின்னக் கூடாது!

காற்று இல்லா இடங்களிலே
வசிக்கக் கூடாது - வயிறு
பசித்திராத நேரந்தன்னில்
புசிக்கக் கூடாது!

கண்ணில் கண்ட நீரையெல்லாம்
குடிக்கக் கூடாது - குடித்து
காய்ச்சல் சளி நோய்கள் வந்து
துடிக்கக் கூடாது!

ஒதுக்குப் புறம் குப்பைக் குழி
வெட்டிட வேண்டும் - அதில்
ஒழுங்குடனே குப்பைக் கூளம்
கொட்டிட வேண்டும்!

குழிகள் வெட்டி சாக்கடை நீர்
கழித்திட வேண்டும் - தினம்
மருந்தடித்து ஈக் கொசுவை
ஒழித்திட வேண்டும்!



"பள்ளிக்கூடம் போற துன்னா தினமும் ஒரு பென்சில் வேணும்கிறா என் மகள்; என்ன பண்றது?"

"அது பரவாயில்லையே! என்னோட மகன் தினமும் ஒரு பள்ளிக்கூடம் வேணும்கிறானே என்ன பண்றது?"

## சொல்லுங்கள் பார்க்கலாம்

- சு. நஞ்சையன்

1. வால் இல்லாப் பறவை
ஊர் ஊராய்ப் பறக்குது

2. இடுக்கு முடுக்குக்குள்ளே
எண்ணூறு தென்னம்பிள்ளை!
(அது என்ன?)

3. பச்சை பச்சை டாக்டர்
பால்பால் டாக்டர்
குண்டுமணி டாக்டர்
குதிரைவால் டாக்டர்!
(அது என்ன?)

4. தொட்டுக் கெட்டான் ஒருத்தன்
தொடாமல்கெட்டான் ஒருத்தன்
விட்டுக்கெட்டான் ஒருத்தன்
விடாமல் கெட்டான் ஒருத்தன்!
(அது என்ன?)

5. மூடியைத் திறந்தேன்
முருகனைக் கண்டேன்!
(அது என்ன?)

6. வெள்ளைப் பிள்ளையார் கோயிலுக்குப்
பூட்டும் இல்லை திறப்பும் இல்லை!
(அது என்ன?)

7. இரண்டு புடைக்கிறது
நான்கு குத்துகிறது
ஒன்று துழாவுகிறது!
(அது என்ன?)

விடைகள்: 1. வானூர்தி 2. மூக்கு 3. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை

விடைகள்: 4. பத்மாசுரன், கீசகன், மகாபலி, இராவணன் 5. நிலக்கடலை 6. பற்கள் 7. யானை



# அறிவியல் துளிகள்

### உயரமான சிலை!

உலகிலேயே மிக உயரமான சிலை ரஷ்யாவில் உள்ள மமாயெவ் எனும் மலையில் அமைக்கப்பட்டுள்ள மதர்லேண்ட் என்று அழைக்கப்படும் பெண் உருவச்சிலை ஆகும். இது 270 அடி உயரம் கொண்டது. இதை எவ்ஜெனி உச்பிச் எனும் நிபுணர் 1987 ஆம் ஆண்டு அமைத்தார்.

### திட்டவிடம்!

கம்பராமாயணத்தில் கம்பர், பார்வையாலேயே விஷத்தைக்கக்கும் திட்டவிடம் என்ற பாம்பைப்பற்றிக் குறிப்பிடுவார். ஆனால், ஆப்பிரிக்காவைச்சேர்ந்த ஒரு வகை கருநாகம் 8 அடி தூரத்துக்கு விஷத்தைப் பீச்சியடித்து இரையை வலுவிழக்கச் செய்யும் ஆற்றல் உள்ளது.

### எண்ணெயும் தண்ணீரும்!

எண்ணெயும், தண்ணீரும் ஒன்றோடு ஒன்று ஒட்டாது ஆனால் அந்தக் கலவைக்குள் ஒரு சோப்புத்துண்டைப் போட்டுப்பாருங்கள். அவ்வளவுதான் இரண்டும் ஐக்கியமாகிவிடும்.

### நான்கு நோபல் பரிசுகள்!

மேரிகியூரி என்ற விஞ்ஞானியின் குடும்பத்தில் கணவரும் மனைவியும் நோபல்பரிசு பெற்று புகழ்பெற்றது பலருக்கும் தெரியும். ஆனால் அவர்களுடைய மகள் ஐரின் அணுசக்தி சம்பந்தமாக ஆராய்ச்சி செய்து நோபல் பரிசு பெற்றவர். அதுமட்டுமல்ல, ஐரினின் கணவர் ஜோலியட் என்பவரும் அறிவியலில் நோபல்பரிசு பெற்றவர். ஒரே குடும்பத்தில் நான்கு பேர் இத்தகைய பரிசுகளைப் பெற்றமைதான் சிறப்புக் குரியதாகும்.

### முதல் தமிழ் வானொலி!

வெளிநாட்டு வானொலி நிலையங்களில் தமிழுக்கு இடம் கொடுத்த முதல் வானொலி போப்பாண்டவர் இருக்கும் வாடிகன் வானொலி நிலையம் ஆகும்.



### தேள்விஷம்!

தேள் ஒரு விசித்திரமான பிராணி. இது மற்ற பிராணிகளுடன் சேராமல் தனித்து வாழ்வதில் விருப்பம் கொண்டுள்ளது. பெண்தேள் கொடூரமான குணம் கொண்டது. உடலுறவு முடிந்ததும் அந்த ஆண்தேளையே ஈவிரக்கமின்றிக் கொன்று தின்றுவிடும். பசி வந்தால் தன்னுடைய குஞ்சுகளைக்கூட உணவாக சாப்பிட்டுவிடும். தேளின் விஷம் மருந்துவத்துறையில் பெரிதும் பயன்படுகிறது. விலையும் அதிகம்.

### ஒரே ஒரு முறைதான்!

காலில் காதுள்ள உயிரினம் வெட்டுக்கிளி. கொம்பில் கண் உள்ள உயிரினம் நத்தை. தேனீயால் ஒரு முறைதான் தன்வாழ்நாளில் கொட்டமுடியும்.

### நீரிழிவுக்கு மருந்து!

நீரிழிவு நோயாளிகள் அடிக்கடி பப்பாளிப்பழம் அல்லது நாவல் பழம் சாப்பிட்டுவந்தால் நோயின் கடுமை நீங்கும்.

### முகப்பரு நீங்க!

பெண்கள் முகத்திற்குப் பவுடர் போடுவதற்கு முன் பன்னீரால் முகம் மற்றும் கழுத்துப்பகுதிகளைக் கழுவிவிட்டு, ஈரம் உலர்ந்தபின் பவுடர் போட்டால்முகம் அதிகப் பொலிவாகவும், பிரகாசமாகவும் இருக்கும். முகத்தில் பருக்களும் வராது.

### மாரடைப்பைத் தவிர்க்க!

தினமும் நாம் உண்ணும் உணவில் ஓரளவு மீன் சேர்த்துக்கொண்டால் மாரடைப்பு வியாதி வருவதைத் தடுக்கமுடியுமாம். இதை ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.

### தரை மினுமினுக்க!

மொசைக் தரையைச் சுத்தம் செய்கிறீர்களா? ஒரு நிமிடம். சுத்தம் செய்யும் நீரில் சில துளி மண்ணெண்ணெய் விட்டுச் சுத்தம் செய்யுங்கள். தரையும் பளபளக்கும். பூச்சிகளும் வரமாட்டா.





# எங்கள் ஊர் பிரச்சினை

### பிரச்சினை

எங்கள் ஊர்ப் பகுதிக்கு மிகவும் அருகாமையிலுள்ள நெல்லை கட்டப்பொம்மன் மாவட்டத்திலேயே இரண்டாவது பெரிய குளமான மானூர் பெரியகுளம் சுமார் 30 ஆண்டுகளாக வறண்டே காணப்படுகிறது. இக்குளத்துக்கென்று ஒரு அணை கூட நன்றாகக் கட்டப்படவில்லை. இக்குளத்திற்கும் தென்தமிழ் நாட்டின் ஜீவ நதியான தாமிரபரணி நதிக்கும் உள்ள தூரம் சுமார் 22 கி.மீ மட்டுமே! இப்படி மிகவும் அருகாமையில் வற்றாத நதி பாய்ந்து கொண்டிருக்கின்ற போதிலும், எந்த அரசும் எங்களது பகுதி மக்களைப் பற்றியோ, விவசாயத்தைப் பற்றியோ கண்டுகொள்வதே இல்லை.

எங்கள் மானூர் பெரியகுளத்தின் சுற்றளவு 10 சதுர மைல்கள். பயனடையும் நஞ்சையின் பரப்பு சுமார் 3,000 ஏக்கருக்கு மேலாக. நெல் உற்பத்தியின் அளவு சுமார் 4500 மெட்ரிக்டன்கள்.

இப்படிப்பட்ட மானூர் பெரியகுளத்திற்கு வெள்ள நேரங்களில் மட்டுமாவது தாமிரபரணி நீர் வர ஏற்பாடு செய்து தருமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

-ஊர்ப்பொதுமக்கள்,
மானூர்.

### தீர்வு

திருநெல்வேலி வட்டம், மானூர் பெரியகுளத்திற்குத் தாமிரபரணி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு செல்வதற்காக ரூ. 43 கோடிக்குப் பொதுப்பணித் துறையினரால் திட்ட மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பப்பட்டு, இத்திட்ட மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

-டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி கட்டபொம்மன்
மாவட்டம்.

### பிரச்சினை

தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம், சிதம்பரம் தொகுதி கீரப்பாளையம் ஒன்றியம் ஓரத்தூர் காவல் சரகம் வாழைக்கொல்லை கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன் மகன் ராஜாராமன், பழனிவேல் காவலர் மகன் ராஜேந்திரன், முருகன் ஆகிய மூவரும் வாழைக்கொல்லை அங்காளம்மன் கோயில் அருகில் கள்ளச்சாராயம் விற்பனை செய்து கொண்டு எங்கள் ஊர் மக்களுக்குத் தீங்கு விளைவிக்கின்றனர். எங்கள் ஊர்ப் பள்ளி மாணவிகள் சிறுநீர் கழிக்கும் இடத்தில் இந்தக் கொடுமையான செயல் நடைபெறுகின்றது. இந்தச் செயலுக்கு ஓரத்தூர் உதவி ஆய்வாளர் பூமாலைதான் காரணம். இதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

-வாழைக்கொல்லை
பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள்.

### தீர்வு

இம்மனுவில் குறிப்பிட்ட திரு. ராஜாராமன் என்பவர் மீது ஓரத்தூர் காவல் நிலைய கு.எண்.224/96, நாள் 19.7.96 மற்றும் கு.எண்.272/96, நாள் 12.9.96 ஆகியவற்றில் கள்ளச்சாராயம் விற்பனைக்காகத் தமிழ்நாடு மதுவிலக்கு அமல் சட்டப்படி 41-எ பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் கு.எண்.186/96, நாள் 24.6.96ல் திரு. ராஜேந்திரன் என்பவர் மீதும் மேற் குறிப்பிட்ட பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் கள்ளச்சாராய விற்பனை நடைபெறாமல் மேற்படி கிராமத்தில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மனுவில் குறிப்பிட்டுள்ள முருகன் என்பவர் எவரும் வாழைக்கொல்லை கிராமத்தில் சாராய விற்பனை செய்யவில்லை. மேலும் ஓரத்தூர் காவல் நிலையத்திலிருந்த உதவி ஆய்வாளர் திரு. பூமாலை என்பவர் ஏற்கெனவே மாற்றப்பட்டுவிட்டார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

-டி.வி.ரவிச்சந்திரன், இ.கா.ப.
காவல்கண்காணிப்பாளர்,
தென்னார்க்காடு வள்ளலார்
மாவட்டம், கடலூர்.

### பிரச்சினை

புதுக்கோட்டையில் ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி ஒன்று உள்ளது. இது குளம் ஒன்றின் அருகில் உள்ளது. இதன் ஒரு பகுதியில் மட்டும் வீடுகள் உள்ளன. மற்ற பகுதிகளில் குளத்தின் திடல் காணப் படுகிறது. இவ்விடுதி ஆரம்பித்த ஆண்டு முதல் இதற்குப் பாதுகாப்பே கிடையாது. மதில்சுவரில் திருடர்கள் ஏறிக்குதித்து உள்ளே சென்று மாணவிகளைக் களங்கப் படுத்த முயற்சி செய்வதும், திருடிச் செல் வதும் பலமுறை நடந்து வருகின்றது. இவ்வாறு நடந்த மறுநாள் அதிகாரிகள் சென்று இதற்குக் காரணம் மாணவிகள் தான் என்று மாணவிகள் மேல் குற்றம் சுமத்திவிட்டு, நான்கைந்து நாட்களுக்கு மட்டும், காவல்துறைப் பாதுகாப்பு அளிக்கின்றனர். கடந்த நவம்பர் 22ஆம் தேதியன்றும் இவ்வாறு நடந்துள்ளது. மேலும் விடுதியில் காப்பாளர், உதவி யாளர், வாட்ச்மேன்கள் யாரும் தங்குவது இல்லை. எனவே, மாணவிகளும், பெற்றோர் களும் எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற பீதியில் இருக்கின்றனர். இதனால் இரவில் படிக்க முடிவதில்லை. எனவே, இது குறித்து மாண்புமிகு முதல்வரும், ஆட்சித் தலைவரும் தக்க நடவடிக்கை மேற்கொண்டு மாணவிகளுக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

-பொதுமக்கள், மாணவிகள்,
பெற்றோர்கள், புதுக்கோட்டை
மாவட்டம்.

### தீர்வு

புதுக்கோட்டை அரசினர் பள்ளி மாணவியர் விடுதியில் கடந்த 18.11.96 அன்று இரவு 1 மணிக்கு அடையாளம் தெரியாத இரண்டு ஆள்கள் காம்பவுண்டு சுவர் ஏறிக் குதித்து மாணவியர்களைப் பயமுறுத்தியதாகவும், விடுதிக்குப் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கவும், சம்பந்தப்பட்ட விடுதிக்காப்பாளர் மனுச் செய்ததின் பேரில் இச்சம்பவம் குறித்து போலீஸ் துறையினர் மூலம் தனி வட்டாட்சியர் மூலமும் தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் யாவும் மேற்கொள்ளப்பட்டன.

காவல்துறை மூலம் தினசரி இரவு நேரங்களில் ரோந்துப் பணியில் காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் யாவும் எடுக்கப்பட்டு சட்டம் ஒழுங்குப்பிரச்சினை ஏற்படாதவாறு சரிசெய்யப்பட்டன. மேலும் அந்த விடுதிப் பணியாளர்களை விழிப்புடன் செயல் படவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

-மு.கிருஷ்ணன்,
மாவட்ட ஆதி திராவிடர் நல
அலுவலர் (பொ) >
புதுக்கோட்டை.

### பிரச்சினை

எங்கள் கிராமம் சுமார் 3000 மக்கள் தொகை கொண்டது. எங்கள் ஊருக்குப் பகுதிநேர நூலகம் வேண்டும் என்று ஏற்கெனவே மாவட்ட நூலகத் தலைவர் அவர்களுக்கு ஒரு மனு கொடுத்தபோது அவர்கள் ஐந்து நிபந்தனைகள் அளித் தார்கள். அவைகளைப் பூர்த்தி செய்து மீண்டும் மனு அனுப்பிவைத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்தப் பிரச்சினையில் நீங்கள் தலையிட்டு எங்கள் ஊருக்குப் பகுதி நேர நூலகம் அமைத்துத்தர வழி செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

-கோ. முனிரத்தினம்.,
சதுப்பேரிபாளையம்.

### தீர்வு

ஆரணி தாலுக்கா சதுப்பேரிபாளையம் கிராமத்தில் 9.9.96ஆம் நாளன்று பகுதி நேர நூலகம் துவக்கப்பட்டது. பகுதிநேரப் பணியாளராக சதுப்பேரி பாளையம் திரு. ஜெயசிம்மன் என்பவர் எண் 1084/இ/96, நாள்6.9.96ன் படி, நியமனம் செய்யப்பட்டார்.

அவர் நூலகத்தை முறைப்படி திறந்து செயல்படுத்த வில்லை என்று ஆரணி நூலகர் தெரிவித்த தகவலின் பேரில் திரு. ஜெயசிம்மன் பகுதி நேரப் பணியாளர் பணியிலிருந்து நீக்கப்பட்டார். எனவே அப்பகுதி நேர நூலகத்தைத் தொடர்ந்து செயல்படுத்த வேறு பணியாளரை நியமனம் செய்யத்தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

-ல. ஜெயச்சந்திரன்,
மாவட்ட நூலக அலுவலர்,
திருவண்ணாமலை.





### பிரச்சினை

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் வந்தவாசி தாலுக்காவில் உள்ள பெரணமல்லூராகிய எங்கள் ஊர் ஒரு பேரூராட்சியாகும். சட்டமன்றத் தொகுதியின் தலைமையிடமாகவும் ஊராட்சி ஒன்றியத்தின் தலைமையிட மாகவும் உள்ளது. இது கேட்பதற்கு நன்றாக இருக்கலாம். ஆனால், வசதிகள் மிகவும் குறைவு.

பெரணமல்லூரிலிருந்து தாலுக்கா தலைமையிடமாகிய வந்தவாசிக்குச் சென்றுவர போதிய பஸ் வசதி இல்லை. ஒரே ஒரு டவுன்பஸ் மட்டுமே செல்கிறது. மாவட்டத் தலைமையிடமான திருவண்ணா மலைக்கும் ஒரு பஸ் மட்டுமே பெரண மல்லூர் வழியே செல்கிறது. பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகப் பொதுமக்கள் தாலுக்கா அலுவலகம் செல்ல வேண்டு மானால் 3 கி.மீ. தொலைவிலுள்ள சடத் தாங்கல் இணைப்புச் சாலைக்குச் சென்று தான் பஸ் பிடிக்க வேண்டும். ஆரணி வந்த வாசிக்கு இடையிலுள்ளது சடத்தாங்கல்-பெரணமல்லூர் இணைப்புச் சாலை.

இப்பிரச்சினை தீர, பொதுமக்கள் பல முயற்சிகள் மேற்கொண்டும் மாறியது ஆட்சிகளே ஒழிய பிரச்சினை தீரவில்லை. பல அதிகாரிகள் மாறிவிட்டார்கள். பஸ் விட்ட பாடில்லை. எனவே, நம்பிக்கை தரும் புதிய தமிழக அரசு பிரச்சினையின் தன்மையை உணர்ந்து ஆரணி-வந்தவாசி மார்க்கமாகச் செல்லும் பேருந்துகளைப் பெரணமல்லூருக்குள் விட்டு அஸ்தினாபுரம் மார்க்கமாக மீண்டும் ஆரணிவந்தவாசி சாலையை அடைய ஆவன புரிய வேண்டும். இப்படி பஸ் செல்வதால் 0.5 கி.மீ. தான் கூடும். குறைந்தபட்சம் அரசு பேருந்துகளை யாவது ஆரணிபெரணமல்லூர்-வந்தவாசி மார்க்கத்தில் விட ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் திருவண்ணாமலைக்குப் பெரணமல்லூர்-சேத்துப்பட்டு திருவண்ணா மலை மார்க்கீத்தில் தனி பஸ் விட வேண்டும்.

-பெரணமல்லூர் சேகரன்.

### தீர்வு

ஆரணி-வந்தவாசி செல்லும் பேருந்துகளைப் பெரணமல்லூர் அஸ்தினாபுரம் வழியாக இயக்கவும் திருவண்ணாமலை பெரணமல்லூர் வழி சேத்துப்பட்டு தடத்தில் போதிய பேருந்து வசதி ஏற்படுத்தி இயக்கவும் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு, பொது-மேலாளர், பட்டுக் கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம், வேலூர் அவர்கள் அனுமதிச்சீட்டு வேண்டி விண்ணப்பித்த உடன் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவு பெற்று அனுமதிச் சீட்டு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

-தி. சிவசுப்பிரமணியன்
வட்டாரப் போக்குவரத்து அலுவலர்,
திருவண்ணாமலை.

### பிரச்சினை

நாகை காயிதே மில்லத் மாவட்டம் சீர்காழியில் தமிழக அரசின் கிளை நூலகம் உள்ளது. இது இரண்டாம் நிலை நூலக மாகும். அதன்படி நூலகத்தில் மொத்தம் மூன்று நூலக ஊழியர்கள் பணியாற்ற வேண்டும். ஆனால் கடந்த பல ஆண்டு காலமாக சீர்காழி கிளை நூலகத்தில் ஒரே ஒரு நூலகர் மட்டுமே பணிபுரிந்து வருகிறார். இந்த ஒரு நூலகர் தனக்குரிய நீண்ட நாள் விடுமுறை மற்றும் மருத்துவ விடுமுறையில் சென்றுவிட்டால் நூலகம் காலவரம்பின்றிப் பல நாட்கள் இழுத்துப் பூட்டப்படுகிறது. இதனால் பொதுமக்கள், நூலக வாசகர்கள் கிளை நூலகத்திற்கு வந்து நூலகம் பூட்டப் பட்டுள்ளதைக் கண்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்புகிறார்கள். தினசரி நாளிதழ்கள், வார, பருவ இதழ்கள், புத்தகங்களைப் படிக்க முடியாமல் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது.

மேலும், கிளை நூலகத்தில் வாசகர்கள் அமர்ந்து படிக்கப் போதுமான நாற்காலிகள், மேஜைகள் இல்லை. புத்தகங்களை படிக்கும் இடத்தில் இருந்த 'டியூப்லைட்' எரிய வில்லை. புதிய விளக்குப் போடவேண்டும்.

சீர்காழி கிளை நூலகம் இன்னமும் தஞ்சாவூர் மாவட்ட நூலக அலுவலரின் ஆணையின்படியும், கண்காணிப்பின்படியும் இருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து நாகை காயிதேமில்லத் மாவட்டம் என்று தனியாக மாவட்டம் பிரிக்கப்பட்டு 3 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. ஆனாலும், நாகை காயிதேமில்லத் மாவட்டத் தலை

நகரான நாகப்பட்டிணத்தில் மாவட்ட நூலக அலுவலகம் அமைக்கப்படவில்லை. ஏனவே, உடனே மாவட்ட நூலக அலுவலகத்தை நாகப்பட்டிணத்தில் அமைத்து, புதிய மாவட்ட நூலக அலுவலரை நியமனம் செய்யவேண்டும்.

சீர்காழி கிளை நூலகத்திற்கான சொந்த நிலம் இல்லை. கிளை நூலகத்திற்காக சீர்காழி நகராட்சி நிலம் ஒதுக்கிக் கொடுக்க முன் வந்தும் நூலக நிர்வாகம் நிலத்தை வாங்கவில்லை. இதனால், சீர்காழி கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டுவதில் முட்டுக் கட்டை எழுந்துள்ளது. இந்தச் சிக்கலையும் தீர்க்க வேண்டும்.

மேற்கண்ட இந்த சீர்காழி கிளை நூலகப் பிரச்சினைகளை, பொது நூலகத்துறை இயக்குநர் தீர்த்து வைக்க வேண்டுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

-ஆர். ராஜதுரை,
சீர்காழி.

## தீர்வு

1. கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை அரசாணை எண்.1டி110 நாள்.13.9.96இன்படி நாகப்பட்டிணத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு, நாகப்பட்டிணம் காயிதேமில்லத் நூலக ஆணைக்குழு செயல்பட்டு வருகிறது.

2. நாகப்பட்டணம் நூலக ஆணைக் குழுவில் உள்ள சீர்காழி கிளைநூலகம் பி-கிரேடு நூலகமாகும். நூலகம் வாடகைக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது.

3. நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாவட்ட நூலக அலுவலர் நடவடிக்கை எடுத்து நகராட்சி அலுவலகத்துடன் கடிதப் போககுவரத்துள்ளது எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. வாசகர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தருவதற்கு மாவட்ட நூலக அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதெனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

-இரா. கண்ணன்,
பொது நூலக இயக்குநர்.

## பிரச்சினை

எங்கள் ஊர் கரூர் தீரன் சின்ன மலை மாவட்டம் குளித்தலை தாலுக்கா கடவூர் ஊராட்சி ஒன்றியம். இவ்வொன்றியத்தில் அமைந்துள்ள கடவூர் என்ற கிராமம் இவ்வூரைச் சுற்றிலும் 15 சிற்றூர்களுக்கு மேல் உள்ளன. பல்வேறு சிற்றூர்களை ஒன்றாக இணைக்கும் தார்ச்சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இதன் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலங்கள் காட்டாற்றினால் அரிக்கப்பட்டு மிகப் பெரிய குழிகள்; அதில் மழை நீர் தேங்கியுள்ளது. அதில் மண்ணைக் கொட்டி சகதியாக உள்ளது. தார்ச்சாலையில் உள்ள ஜல்லிக் கற்கள் பெயர்ந்து மேடு பள்ளமாக உள்ளது. பள்ளத்தில் மண்ணைக் கொட்டி நடக்க முடியாத நிலையில் வயல் போல் தண்ணீர் தேங்கியுள்ளது. தினசரிப் பயணிகள், பள்ளிக் குழந்தைகள் செல்ல வேண்டியுள்ளது. மேலும் கடவூர் பகுதியில் பொதுக்கழிப்பிடம் இல்லாததால் சாலையின் இருபுறங்களிலும் மலம் கழிக்கின்றனர். இது சுகாதாரக் கேட்டை விளைவிக்கின்றது. இதனால் கொசு, ஈக்கள் மூலம் நோய்கள் பரவுகின்றன. கடவூரரில் அமைந்துள்ள ஆரம்பப் பள்ளியில் குடி தண்ணீர், தோட்டத்திற்கு நீர் இல்லாததால் பள்ளிக் குழந்தைகள் பள்ளியை விட்டு வெளியே சென்று நீர் எடுத்து வரவேண்டியுள்ளது. பள்ளிக்குக் குடிநீர்க் குழாய், ஊர் மக்கள் நலம் கருதி சாலை, கழிப்பிடம் வசதி செய்து தர ஆவன செய்யுமாறு மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்

-ப. கண்மணி,
தரகம்பட்டி வழி,
கரூர் மாவட்டம்

## தீர்வு

கடவூர் கிராமத்தையும் பல சிற்றூர்களையும் இணைக்கும் இத்தார்ச்சாலையில் உள்ள நொடிகள் மூடப்பட்டும், மேடு பள்ளங்கள் சரி செய்யப்பட்டும் போக்குவரத்திற்கு ஏற்றதாகச் செப்பனிடப்பட்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ப. கணேசன்,
உதவி கோட்டப் பொறியாளர், குளித்தலை.

கடவூர் ஆரம்பப் பள்ளிக்கு மத்திய ஊரகக் கழிப்பறைத் திட்டத்தின் கீழ் பெண்களுக்கான கழிப்பிடம் கட்ட ரூ.10,500 திட்ட கருத்துரு தயாரிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் பள்ளிக்குக் குடிநீர் மற்றும் தோட்டத்திற்கென 2 ஆழ்குழாய்க் கிணறு போர்வெல் போட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டு திட்டம்செயல்பட உள்ளதுஎன்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

-ஆ. அம்மையப்பன்,
ஆணையர்,
கடவூர் ஊராட்சி ஒன்றியம், தரகம்பாடி.






செய்தித் தொடர்பில், விஞ்ஞானத்தின் வேகமான வளர்ச்சியில் உருவாகி இருப்பது தான் 'ஈமெயில்', அஞ்சல் தந்தி, டெலக்ஸ், பேஃஸ் வரிசையில் அண்மை ஆண்டுகளில் புதிதாக சேர்ந்துள்ள செய்தித் தொடர்புச் சாதனம் 'ஈமெயில்'.

Electronic Mail என்பதன் சுருக்கமே இந்த 'ஈமெயில்'. கணிப்பொறி வைத்திருக்கும் இருவருக்கிடையே – அல்லது கணிப்பொறியின் இரு முனைகளுக்கிடையே நடக்கும் செய்திப் பரிமாற்றமே 'ஈமெயில்' எனலாம்.

வெளிநாடுகளில் இருக்கின்ற உங்களுடைய உறவினருக்கு நீங்கள் தூங்கப் போகும் முன்பு உங்களுடைய கணிப்பொறி மூலம் செய்தி அனுப்பினால், நீங்கள் உறங்கி விழிக்கும்போது, உங்களுக்கு அதற்காக அவர்கள் தந்த பதில் தயாராக இருக்கும்.

அவ்வளவு வேகமாகக் கணிப்பொறியின் இரு முனைகளுக்கிடையே செய்திகள் பரிமாறப்படும்.

இந்த 'ஈமெயில்' தலைப்பு, கடித உடலமைப்பு என்ற இரு பாகங்களை உடையது ஆகும்.

முதலாவதாக- தலைப்பில் யாரிடமிருந்து யாருக்குச் செய்தி அனுப்பப்படுகிறது என்ற செய்தியும், எழுதப் போகும் விஷயங்களுக்கு ஏற்ப ஒரு சிறிய தலைப்பும் உடையதாக இருக்கும்.

வீட்டின் முகவரி போல் 'ஈமெயில்' வசதி உள்ளவர்களுக்கும் தனி முகவரி இருக்கிறது. ஆனால் அஞ்சலில் எழுதும் வீட்டின் இலக்க எண், தெருப் பெயர் போன்றவை இந்த முகவரியில் இருக்காது. 'ஈமெயிலின்'- முகவரி ஆங்கில எழுத்துக்களைக் கொண்டதாக இருக்கும்.

இரண்டாவதாக, அதன் உடலமைப்பில் நாம் அவருக்குத் தெரிவிக்க விரும்பும் செய்தியைக் கணிப்பொறியில் டைப் செய்து அனுப்பலாம்.

கணிப்பொறி வைத்திருக்கின்ற இரு நபர்களுக்கிடையே மட்டுமே இதுவரையில் நடந்து வந்த இந்தச் செய்திப் பரிவர்த்தனையை, 'டேட்டாபுரோ இன்பர்மேஷன் டெக்னாலஜி லிமிடெட்' என்ற நிறுவனம் 'எஸ்டிடி.பூத்' வைத்திருப்பதுபோல் 'ஈமெயில் பூத்' அமைக்கவும் வழிவகை செய்கிறது.

வேலையில்லாத இளைஞர்கள் முழு நேரத் தொழிலாகவே இதனைச் செய்யலாம். 'டேட்டாபுரோ ஈமெயில்' சேவைத்திட்டம் 'ஸீமெயில்' என்றும் அழைக்கப்படுகிறது. 'ஸீமெயில்' மையங்களை விரும்புமுள்ளவர்கள் யார் வேண்டுமானாலும் துவங்கலாம்.

இதுபோன்ற 'ஸீமெயில்' மையங்களின் மூலம், 'எஸ்.டி.டி.பூத்' போன்ற கணிப்பொறி இல்லாதவர்களும், 'ஈமெயில்' மூலம் செய்திகள் அனுப்பவும், பெறவும் முடியும்!

-ஆர். மகேஷ்



ஆசிரியரும் வெளியிடுபவரும்: என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர்: ஆர். அண்ணாதுரை, உதவி இயக்குநர்: எம்.அண்ணாமலை
ஆசிரியர் குழு: கே.டி. புகழேந்தி, ஜி. லோகநாதன், [illegible] அசோகன், அமுதிமாறன்,
பி.எல். ரவீந்திரன், ஜி.பாஸ்கரன், எஸ். [illegible]
ஓவியர்கள்: என். குமாரசாமி, கி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண்: 568926, 568927

## ஆசிரியர் மடல்

'அச்சம் தவிர்ந்தது வாழ்வு - நல்
அன்பில் விளைவது வாழ்வு!'

- என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்.

ஆனால் பத்துப் பன்னிரண்டாண்டுக் காலமாக, அந்தப் பாடலடிகள் சொல்லும் கருத்து, நாட்டில் பழுதுபட்டு வருவது போல் தோன்றுகிறது.

அதிலும் குறிப்பாக அண்மைக் காலமாக- அரசுக்கு அவப்பெயர் உண்டாக்கும் நோக்கிலேயோ என்னவோ சாதிமதப் பாகுபாடுகள், மதக் கலவரங்கள், அவற்றின் அடிப்படையிலான அடிதடிகள், கொள்ளையிடல் என்று அங்கொன் போய்க் கொலை வரையிலான சம்பவங்கள் அங்கொன் றும் இங்கொன்றுமாக நடந்துவிடுகின்றன!

இந்துவானாலும், முஸ்லீமானாலும், கிறித்துவரா னாலும் சகோதரபாசத்தோடு பழகும் உறவுமுறை சில சமூக விரோத சக்திகளால் திட்டமிட்டே ஊனப்படுத்தப் பட்டு வருவது போல் தெரிகிறது; சட்டமன்றத்தில், சென்ற முதல் தேதியன்று- கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலளித்த மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 'இவைகளையெல்லாம் தடுத்து நிறுத்தவேண்டிய பெரும் பொறுப்பு, அரசுக்கு மாத்திரமல்ல; இந்த அரசை ஒழுங்குற நடத்துகின்ற பொறுப்பை ஏற்றிருக்கும் எதிர்க் கட்சி களுக்கும் உண்டு' என்று அறிவுறுத்தியிருக்கிறார்.

இவ்வித அசம்பாவித நிகழ்ச்சிகளைத் தவிர்க்கும் பொருட்டும், மாவட்டங்களில் சாதிமதக் கலவரங்கள் ஏற்படாவண்ணம் கண்காணிக்கவும் அனைத்து மாவட்டங் களிலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில், மத நல்லிணக்கக் குழு (Peace Committee) ஒன்றினை உடனடியாக அமைக்குமாறும் ஆணையிட்டுள்ளார்.

பேச்சுக்குப் பேச்சு, கொள்கைக்குக் கொள்கை, கருத்துக்குக் கருத்து என்றில்லாமல் - அவரவரும் சட்டத் தைக் கையிலெடுத்துக் கொள்ளுவதை யார்தான் அனுமதிப் பார்கள்? பகுத்தறிவு கொண்ட மனிதர்களாகிய நாம் பண்போடு நடக்கப் பழகுவோம். எங்கும் அமைதி நிலவ உதவுவோம்!




தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.



# தமிழரசு

1-3-1997 ரூ. 3





## இந்த இதழில் ...


வாழ்வுக்குத் தமிழ் - வசதிக்கு ஆங்கிலம் — 2
-முதல்வர் கலைஞர்

சிந்திக்கத் தூண்டும் சிறு கதைகள் — 4

திரு.வி.க.வின் மணிமொழிகள் — 8

பிள்ளைப்பேறு — 9
-டாக்டர் டி. காமராஜ்

வேளாண் பொருள்கள் ஏற்றுமதி வாய்ப்புகள் — 15

1997-98-ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீடு — 17

முத்தமிழ்ப் பேரவை விழாவில் முதல்வர் — 19

பேரிகை முழக்கம் — 20
-ஜெர்கிஸ்தவால்

நீரும் நிழலும் — 29
-கங்கைகொண்டான்

எங்கள் ஊர் பிரச்சினை — 33

சேலம், ராஜாஜி மாவட்டங்கள் ஒரு பார்வை — 37

அரசு உதவிகளைப் பெற யாரை அணுகவேண்டும் — 42



**தமிழரசு**

திருவள்ளுவராண்டு: 2028

மாசித் திங்கள் : 18

மலர்: 27 இதழ்: 17

1.3.1997

விலை: ரூ. 3

# வாழ்வுக்குத் தமிழ் வசதிக்கு ஆங்கிலம்

## — முதல்வர் கலைஞர்

"**த**மிழ்த்தென்றல் திரு.வி.க. என்று சொன்னாலே நான் அடிக்கடி கூறுவதைப் போலத் தூய்மை என்று பொருள்; தொண்டு என்று பொருள்; தமிழ் என்று பொருள்; இனிமை என்று பொருள்; இன்னும் சொல்லப் போனால்- நம்முடைய ஆர்.எம்.வீ. அவர்களுக்குப் பிடித்த மொழியிலே சொல்ல வேண்டுமானால ஆன்மீகம் என்று பொருள். அவர்கள் விரும்பும் ஆன்மீகம், யாரையும் ஏமாற்றுகின்ற ஆன்மீகம் என்று பொருள் அல்ல. அவர் சைவத்தையே தன்னுடைய மதமாகக் கருதினார். சைவத்தைத் தன்னுடைய சித்தாந்தமாகக் கொண்டார். சைவம்தான் மதம். அதுதான் சமயம் என்று சொல்லி, சைவம் என்று சொன்னாலே அது மதத்தைக் குறிக்கும் என்று குறிப்பிட்டார்.

அப்படிப்பட்ட பெருமதிப்புக்குரிய பேரறிஞர் திரு.வி.க. அவர்கள். அவருடைய வாழ்வே போராட்டம்தான். அவர் உருவத்தைப் பார்க்கின்றவர்கள் அவர் ஒரு போராட்ட வீரர் என்று சொல்ல மாட்டார்கள். ஆனால், உள்ளம், போர்த்தன்மை வாய்ந்தது. போர்க்களத்திலே இளமைக் காலம் முதல் முதுமைக்காலம் வரையிலே அவர் நின்றார். சற்றொப்ப நாற்பதுக்கு மேற்பட்ட நூல்கள் எழுதினார். எல்லா நூல்களுமே ஒவ்வொரு பொருளைக் குறித்து எழுதப்பட்ட நூல்களாகும். பெண்மையைப் பற்றி எழுதினார். பெண்ணின் சிறப்பைப் பற்றி எழுதினார். பாட்டாளியைப் பற்றி எழுதினார். கடவுளைப் பற்றி எழுதினார். சமயத்தைப் பற்றி எழுதினார். ராமலிங்கரைப் பற்றி எழுதினார். தந்தை பெரியாரைப் பற்றி எழுதிய கட்டுரைகள், தமிழைப் பற்றி எழுதிய கட்டுரைகள், நாங்கள் படிக்கின்ற நேரத்தில் எங்களுக்



கெல்லாம் பாடமாக அமைந்த அவருடைய அருஞ்சொல் கூட்டு என்று கூறக்கூடிய அரிய பொருள்களை விளக்கக்கூடிய கட்டுரைகள், இவைகள் எல்லாம் தமிழ்த் தென்றல் அவர்களால் இந்தத் தமிழ் நிலத்திற்குக் கிடைத்த அரும்பெரும் சொத்துக்களாகும்.

தகவல் என்றால் செய்தி என்றும் சொல்லலாம் வதந்தி என்றும் சொல்லலாம். தகவல் செய்தியாகவும் வரும் வதந்தியாகவும் வரும். செய்தியாக வரும்போது அது உண்மையான தகவலாக இருக்கும். வதந்தியாக வரும்போது அது பொய்த்தகவலாகவே அமையும்.

ஒரு ஊருக்கும் இன்னொரு ஊருக்கும், ஒரு மாநிலத் தலைநகருக்கும் இன்னொரு மாநிலத் தலைநகருக்கும், ஒரு நாட்டுத் தலைநகருக்கும் இன்னொரு நாட்டுத் தலைநகருக்கும் உலகத்திலே இருக்கின்ற பன்னாட்டு இணைப்புச் சங்கிலியாக இண்டர்நெட் என்ற அளவிற்கு இன்றைக்கு வளர்ந்திருக்கின்ற தகவல் தொடர்பைப் பற்றி பண்ருட்டி ராமச்சந்திரன் பேசி, அதற்குரிய மொழியாக இன்றைக்கு ஆங்கிலம்தான் இருக்கிறது என்பதையும் எடுத்துக்காட்டி அப்படி வளர்த்த ஒரு மொழி, நம்முடைய வசதிக்காக இன்றைக்குப் பயன்படுகிற நேரத்தில், வசதிக்காகப் பயன்படுகிற மொழி வேறு நம்மை வாழ வைக்கின்ற மொழி வேறு, அதுதான் நம்முடைய தாய்மொழி, தமிழ் மொழி என்பதை அவர் இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்.

எனவே வசதிக்காக ஆங்கிலம்; வாழ்வதற்காகத் தமிழ். அந்த வகையில் நாம் இந்த இரண்டு மொழிகளையும் ஏற்றுக்கொண்டாக வேண்டும். இந்த இரண்டு மொழிகளோடும் நாம் இணைந்து வாழ வேண்டும். ஒன்று வசதிக்காக; ஒன்று வாழ்வதற்காக என்ற அந்த நிலையிலே இந்த மொழிப் பிரச்சினையை நாம் அணுகவேண்டும். அப்படி அணுகுகிற காரணத்தினால்தான், இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக எது இருப்பது என்ற கேள்வி எழும்போது அன்றைக்கு இந்தியத் திருநாட்டின் பெருமகன்களில் ஒருவராக விளங்கிய கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் அரசியல் நிர்ணய சபையிலே எடுத்துச்சொன்னார்கள். இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக இருக்கக் கூடிய தகுதி ஒரு மொழிக்குத்தான் உண்டு. அதுதான் தொன்மைச் சிறப்பும் இலக்கிய வளமும், கலைவளமும், கலாச்சார வளமும், பண்பாட்டு வளமும் கொண்ட எங்கள் தமிழ்மொழி ஒன்றுக்குத்தான் அந்தத் தகுதி உண்டு என்று சொன்னார்.

இன்றைக்கு நான் அதை எடுத்து வைத்துக்கொண்டு, தமிழ்மொழி ஒன்றுக்குத்தான் அந்தத் தகுதி உண்டு என்று சொல்லவில்லை. தமிழ்மொழி போல எந்தெந்த மொழிக்குத் தகுதியுண்டோ அந்த எல்லா மொழிகளும் இந்தியாவினுடைய ஆட்சி மொழிகளாக ஆக வேண்டும் என்பதுதான் நான் சார்ந்திருக்கின்ற என்னைத் தலைவனாக ஏற்றுக் கொண்டிருக்கின்ற இயக்கத்தினுடைய குறிக்கோள் என்பதை இந்த மணவழகர் மன்றத்திலே எடுத்துக்காட்டுவது என்னுடைய நீங்காத கடமையாகும்.

திரு.வி.க. போன்றவர்கள் இன்றைக்கு உயிரோடு இருப்பார்களேயானால், இந்திய ஆட்சி மொழிப் பிரச்சினையில் இதே கொள்கையைத்தான் சொல்வார்கள். என் தமிழும், என்னை வாழவைத்த தமிழும், என்னைப் பெற்றெடுத்த தமிழும், என் அன்னைத் தமிழும் இந்தியாவில் ஆட்சி மொழிகளிலே ஒன்றாக இருக்க வேண்டுமென்ற கருத்தை அவர்கள் சொல்லித்தான் தீருவார்கள்.

ஏனென்றால் திரு.வி.க. அவர்கள் எதற்கும் அஞ்சாதவர். நியாயத்தின்பால் நிற்பவர்.

எனவே சமுதாயத் துறையிலே சாதி ஒழிய, பெண்மை நலம் போற்றப்பட, ஆன்மீகத் துறையிலே தூய்மை ஏற்பட, அரசியல் துறையிலே தூய்மை ஏற்பட, தொழிலாளர்களுக்காகப் பாடுபட இப்படி எல்லாத் துறையிலும் பணியாற்றிய ஒரு பெருமகனுடைய விழாவைத்தான் இன்றைக்கு நாற்பதாண்டு நினைவு போற்றும் நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். எனவே, போற்றுவதோடு இல்லாமல், அவரை நெஞ்சில் நிறுத்தி, அவர் தந்த கொள்கைகளை எல்லாம் இதயத்திலே பதிய வைத்துப் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்."

**(சென்னை கோகலே மண்டபத்தில் 15.2.97 அன்று நடைபெற்ற சென்னை மணவழகர் மன்ற முத்தமிழ் விழா அறக்கட்டளையும், ராஜா சர் அண்ணாமலை செட்டியார் நினைவு அறக்கட்டளையும் இணைந்து நடத்திய மணவழகர் மன்றத்தின் நாற்பதாம் ஆண்டு முத்தமிழ் விழாவின் தொடக்க விழாவில் ஆற்றிய உரையிலிருந்து)**



# தெளிவு

முன்பு ஒரு காலத்தில் கல் உடைப்பவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தினமும் மலைக்குச் சென்று கல் உடைப்பான். அவன் ஏழையாக இருந்தாலும் தனக்குக் கிடைப்பதே போதும் என்ற எண்ணம் உடையவன். ஆதலால் எதைப் பற்றியும் கவலைப்படாமல், பாடிக்கொண்டே வேலை செய்வான்.

ஒரு நாள், ஒரு பெரிய பணக்காரரின் மாளிகையில் வேலைக்காக அழைக்கப்பட்டான். அந்த மாளிகையைப் பார்த்தவுடன், அவன் வாழ்க்கையில் முதன் முதலில் ஆசையை உணர்ந்தான். "நான் மட்டும் பணக்காரராக இருந்தால், உணவுக்காக, வெயிலில் வேர்வை சிந்துப் பாடுபட வேண்டியதில்லையே!" என்று எண்ணினான்.

"நீ கேட்ட வரம் கொடுக்கப்பட்டது. இனி மேல் நீ எதற்கு ஆசைப்பட்டாலும் அது உனக்கு வழங்கப்படும்" என்ற ஒரு அசரீரி கேட்டு ஆச்சரியமடைந்தான். அவன் குடிசைக்குச் செல்லும் வரை அந்த வார்த்தைகளின் அர்த்தம் அவனுக்குப் புரியவில்லை. அங்கு சென்றபோது அவ்வன் குடிசைக்குப் பதிலாக அவன் ஆசைப்பட்ட மாளிகையைக் கண்டான். உடனே கல் உடைக்கும் தொழிலை விட்டு விட்டுப் பணக்கார வாழ்க்கையை அனுபவிக்கத் தொடங்கினான்.

ஒரு நாள், வெயில் சுட்டெரிக்கின்ற மதிய வேளையில், ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருக்கையில், மன்னன் தனது பரிவாரங்களுடன் சென்றுகொண்டிருந்ததைப் பார்த்தான். "நான் மன்னனாக இருந்தால் அந்தக் குளிர்ந்த ரதத்தில் அமர்ந்திருப்பேன்" என்று எண்ணியவுடன், அவனின் விருப்பம் நிறைவேற்றப்பட்டு, அவன் அரசரின் ரதத்தில் அமர்ந்திருப்பதை உணர்ந்தான். ஆனால் அவன் எண்ணியது போல் ரதம் அவ்வளவு குளிர்ச்சியாக இல்லை. ஜன்னல் வழியாகச் சூரியனைப் பார்த்து, அதனின் சக்தி ரதத்தினுள் ஊடுருவி வெப்பத்தை உண்டாக்குகிறதே என்று ஆச்சரியப்பட்டான். "நான் அந்தச் சூரியனாக இருந்தால் நன்றாக இருக்கும்" என்று விருப்பப்பட்டான். உடனே அவனது ஆசை நிறைவேற்றப்பட்டு சூரியனாக மாறி, கண்டத்தினுள் வெப்ப அலைகளை அனுப்பிக் கொண்டிருந்தான்.

எல்லாம் நல்லபடியாகச் சில காலம் நடந்தது. ஒரு மழை நாளில், மேகத்தை ஊடுருவிச் செல்ல முடியாமல் போனதால் தன்னை மேகமாக மாற்றிக்கொண்டான். சூரியனின் வெப்பத்தை அண்டவிடாமல் தன் சக்தியை நினைத்து பெருமை கொண்டு சிலகாலம் இருந்து, பின் மழையாக மாறினான். அவன் வெறுப்படையும் விதத்தில் ஒரு பாறை அவன் வழியை மறைத்து அவனை வேறு பாதையில் போகுமாறு நிர்ப்பந்தப்படுத்தியது.

"என்ன! ஒரு பாறை என்னைவிட சக்தி வாய்ந்ததா? நான் ஒரு பாறையாக விரும்புகிறேன்", என்று கூறினான்: ஆகையால், ஒரு மலையின் உச்சியில் பாறையாக நின்று சந்தோஷப்படுவதற்கு முன், அவன் கால்களுக்கும் கீழே உடைக்கும் சத்தம் கேட்டது; குனிந்து பார்த்தான். அங்கு ஒரு சிறிய மனிதன் அமர்ந்து கற்களை உடைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டான்.

"என்ன! ஒரு சிறிய மனிதன், பெரிய பாறையாகக் காட்சி அளிக்கும் என்னைவிட சக்தி வாய்ந்தவனா? நான் மனிதனாக விரும்புகிறேன்!" என்று கத்தினான். அதனால் திரும்பவும் அவன் கல் உடைப்பவனாக மாறி வெயிலில் வியர்வை சிந்தி உழைக்க ஆரம்பித்தான். ஆனால் மனதில் ஒரு குதூகலம், அவன் என்னவாக இருக்கின்றானோ அதில் அவனுக்கு திருப்தி. அதிலிருந்து கிடைப்பதே அவனுக்குப் போதுமானதாக இருந்தது!





## தயக்கமா, குழப்பமா?

சந்தர்ப்பச் சூழ்நிலை காரணமாக ஒரு கழுகின் முட்டை கோழி அடைகாக்கும் முட்டைகளுடன் கலந்துவிட நேர்கிறது. கழுகு முட்டையும் மற்ற கோழிக் குஞ்சுகளோடு சேர்ந்து பொறிக்கின்றது.

நாட்கள் நகர்ந்தோடியது. கழுகின் குஞ்சுக்குப் பறக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது. தன் அன்னைக் கோழியிடம் அது கேட்கும், "பறப்பதற்கு நான் எப்பொழுது கற்றுக் கொள்வேன்?"

பாவம், கோழிக்குப் பறக்க முடியாது என்பது தெரியும். மற்ற பறவைகள் தங்களின் குஞ்சுகளுக்கு எப்படிப் பறக்கப் பயிற்று விக்கின்றன என்பது தெரியாது. தன்னுடைய இயலாமையைச் சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டு குஞ்சிடம் "இப்பொழுது வேண்டாம், நீ தயாரான பின் கற்றுத் தருவேன்" என்றது.

மாதங்கள் ஓடின. அந்தச் சிறிய கழுகு, தன் அம்மாவுக்குப் பறக்கத் தெரியாதோ என்று சந்தேகப்படத் தொடங்கியது. தன்னை அடைகாத்த பறவையின் மேல் ஏற்பட்ட விசுவாசமும், தான் பறக்கவேண்டும் என்ற எண்ணமும் சேர்ந்து குழம்பியதால், அக்கழுகு பிரிந்து சென்று தானாகப் பறந்து செல்ல முடியவில்லை.



## ஆரம்பக் கல்வி

நாய்க்கு மீன் எண்ணெய் கொடுத்தால் அதன் உடலுக்கு நல்லது என்று கேள்விப் பட்ட ஒருவன், தன்னுடைய 'டாபர்மேன்' நாய்க்கு அதைக் கொடுக்கத் தொடங்கினான். தினமும், முரண்டுபண்ணும் தன் நாயின் தலையை இரண்டு முழங்காலுக்கும் இடையில் வைத்து அழுந்தப் பிடித்துக் கொண்டு, வலுக்கட்டாயமாக அதன் வாயைப் பிளந்து மீன் எண்ணெயை ஊற்றி வந்தான்.

ஒரு நாள், அவன் பிடியிலிருந்து அந்த நாய் தப்பிக்கும் பொழுது எண்ணெய் தரையில் கொட்டி விடுகிறது. அவன் ஆச்சரியப்படும் வகையில், அந்த நாய் எண்ணெய்க் கரண்டியை நக்க வந்தது. பிறகுதான் அவன் உணர்ந்தான், தன் நாய்க்கு எண்ணெய் பிடித்திருக்கின்றது. ஆனால் கொடுத்த விதம்தான் பிடிக்கவில்லை என்று!

## புத்தரின் நீதிக்கதை

ஒரு மனிதன் காட்டில் நடந்து செல்லும் போது ஒரு புலி அவனைக் கண்டு விரட்டுகிறது. அவன் ஒரு செங்குத்து பாறையின் மேல் ஓடுகின்றபொழுது தடுக்கி விழுந்து, பாறையின் விளிம்பில் வளர்ந்த பழச் செடியினை (ஸ்ட்ராபெரி) பற்றிக் கொள்கிறான்.

மேலே பாறைமீது பசியுடன் புலி காத்து நிற்க, கீழே அவன் விழுந்து இறக்க இருக்கும் பாதாளம். நடுவில் சில மணித் துளிகள் செடியினைப் பற்றிக் கொண்டு தொங்கினான்.

திடீரென அவன் பிடித்திருந்த செடிகளில் ஒரு சுவை மிகுந்த ஸ்ட்ராபெரி பழத்தைக் காண்கிறான். செடியை ஒரு கையால் பிடித்துத் தொங்கி கொண்டே மற்றொரு கையால் பழத்தைப் பறித்து வாயில் போட்டுக் கொள்கிறான். இதற்குமுன் அவன் வாழ்க்கையில் ஸ்ட்ராபெரியை அவ்வளவு இனிப்பாக உணர்ந்ததில்லை.

அறிவாற்றல் மிகுந்த ஞானிகள் இறக்கும் தருவாயில்கூட வாழ்க்கையின் இனிமையை ரசிப்பார்கள்.

**அட்டைப்பட விளக்கம்**

**முதல் அட்டை:**
வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்.

**இரண்டாம் அட்டை:**
முத்தமிழ்ப் பேரவையின் 22-ஆம் ஆண்டு இசை விழாவில் விருது பெற்றவர்களுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**நான்காம் அட்டை:**
தமிழ்த் தென்றல் திரு.வி.க.



# திரு.வி.க.வின் மணிமொழிகள்

### பகுத்தறிவு

மனிதனுக்கோ ஆறறிவு உண்டு; ஆறாவது அறிவே மன உணர்வு எனப்படும். அது பகுத்தறிவு எனப்படும்.

### சீர்திருத்தம்!

சீர்திருத்தம் இல்லையேல் உலகம் வளர்ச்சியுறாது. வளர்ச்சிக்கு சீர்திருத்தம் இன்றியமையாதது.

### தன்னலமின்மை!

தன்னலமின்மை இல்லாத இடத்தில் சத்தியாக்கிரகம் பயன்தராது. தன்னலமின்மை உணர்வு ஆன்ம சக்தியை எழுப்ப வல்லது.



### புரட்சி

'புரட்சி செய்க புரட்சி செய்க!
அரக்கப் புரட்சி' அணுக விடாதீர்
இரத்தம் சிந்தா இரக்கப் புரட்சி
செய்க அன்பால்; செய்க அறிவால்;

### மனம்!

உள்ளம் வாழ்விற்கு
குரு போலவும், அரசு போலவும்
வழிகாட்டுவதாயிருத்தல்
வேண்டும்.

### நூல்

நல்ல நூல்கள் மன அலையை, எரியை ஒடுக்கும், தணிக்கும். அஃது அமைதியை நிலை பெறுத்தும், குடியைக் காக்கும். நாட்டை பண்படுத்தும். உலகை வழிப்படுத்தும்.

### முன்னேற்றம்!

ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டின் மொழி நிலையை பொறுத்தே. நிற்கும்.

### பெண்!

'இறைமை யெழுவது பெண்ணிடமே இன்பம் பொழிவதும் அவ்விடமே!'

### மொழிப்பற்று!

பெற்றதாயின் அன்புக்கும், பிறந்த நாட்டின்
பற்றுக்கும்
ஊற்றாய் இருப்பது பேசும் மொழியே ஆகும்.
பேசும்
தாய்மொழியின் மாட்டு அன்பில்லா ஒருவன்
தாயையும்
நாட்டையும் பழித்தவனாவான்.





# பிள்ளைப்பேறு

- டாக்டர் டி. காமராஜ்



**'பிள்ளைப்பேற்றைவிடப் பெரியதோர் செல்வம் ஏதும் இல்லை' என்கிறார் திருவள்ளுவர். அந்தப் பேறு சிலருக்கு வாய்க்காமல் போக என்ன காரணம்? அக் குறையைப் போக்குவது எப்படி? மருந்து மாத்திரைகள் மூலமே அக்குறையை நீக்கி விட முடியுமா? என்றெல்லாம் விளக்குகின்றன இங்குள்ள மருத்துவ வினா விடைகள்:**

**ஒரு தம்பதியினரை எப்போது கருத்தரிக்க இயலாதவர் (Infertile) எனக் கூறலாம்?**

ஒரு தம்பதியினர், ஓராண்டு காலம் இடையூறின்றி இல்லற வாழ்வில் ஈடுபட்ட பின்பும் கருத்தறிக்காவிடில் அவர்களைக் குழந்தைப்பேறு இல்லாதவர்கள் (Infertile Couple) என அழைக்கின்றோம்.

திருமணமான தம்பதியினர் இடையூறு இன்றித் தொடர்ந்து தாம்பத்திய உறவு கொண்டிருந்தால், முதல் மாதத்திலேயே 25 சதவீதம் கருவுறுகின்றனர்; முதல் 6ஆம் மாதத்திற்குள் 60 சதவீதமும், முதல் 9ஆம் மாதத்திற்குள் 75 சதவீதமும், முதல் 1 ஆண்டுக்குள் 80 சதவீதமும் கருவுறுகின்றனர். இவ்வாறு ஓராண்டிற்குள் கருத்தரிக்காத தம்பதியினர் அதற்கான காரணத்தை அறிய, தகுந்த மருத்துவ ஆலோசகரை அணுக வேண்டும்.

**கருத்தரிக்க இயலாமைக்கு முக்கியக் காரணம் ஆண்களா அல்லது பெண்களா?**

கருத்தரிக்கும் தன்மை கணவன் மனைவி இருவரின் உடல் தன்மையையும் பொறுத்தே அமைகிறது.

ஆண் போதுமான அளவு நல்ல விந்து உயிரணுக்களை உற்பத்தி செய்து அதைப் பெண்ணுடைய கர்ப்ப வாயிலில் கொண்டு செல்லும் சக்தி அல்லது தன்மை உடையவராக இருக்க வேண்டும். அந்த விந்து உயிரணுக்கள் பெண்ணின் கரு முட்டையைக் கருத்தரிக்கச் செய்யக் கூடியதாக இருக்க வேண்டும்.

பெண்களுக்குக் கருமுட்டை உற்பத்தி சரியாகவும் அது கர்ப்பப்பைக்கு வரும் வழியானது அடைப்பு இல்லாமலும் கர்ப்பப்பை அதனை ஏற்று நல்ல முறையில் கருவை வளரச் செய்யக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

இந்த அடிப்படை நிலையில் ஏதேனும் குறைகள் ஏற்பட்டால் தான், அது இரு பாலரிடையே குழந்தையின்மையை உண்டாக்குகிறது. இவ்வகையில் (Infertile Couple) பிள்ளைப் பேறில்லாத தம்பதியினரை ஆராய்ந்து பார்த்ததில்-

45 சதவீதம் பெண்களிடம் குறைபாடும், 35 சதவீதம் ஆண்களிடம் குறைபாடும் காணப்படுகிறது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, குழந்தையின்மைக்கு ஆணும் பெண்ணும் ஏறக்குறைய சரிபாதி காரணமாக இருக்கிறார்கள்.

இந்த விஷயத்தை உணராமல் இன்றும் நமது நாட்டில் குழந்தையின்மைக்குக் காரணம் பெரும்பாலும் பெண்களே எனக் குற்றம் சாட்டப்பட்டு அதற்கான தண்டனையையும் அவர்கள் பெரிதும் அனுபவித்து வந்தனர். ஆண்கள் மறுமணம் செய்து கொள்வது இதற்கு ஒரு தீர்வாகக் கருதப்பட்டது.

இன்றோ, படித்த தம்பதியினர் அவ்வாறின்றி, இந்த விஷயம் உணர்ந்து இருபாலரும் மருத்துவ ஆலோசனை, பரிசோதனைக்கு உட்படுகிறார்கள். இது ஒரு வரவேற்கத் தக்க நல்ல விஷயமாகும்.

**ஆண்கள் 35 சதவீதம், பெண்கள் 45 சதவீதம் கருத்தரியாமைக்குக் காரணம் என்கிறீர்களே; மீதமுள்ள 20 சதவீதம் என்ன காரணம்?**

மிக நல்ல கேள்வி இது; நம்மிடையே பலருக்கும் இது

பற்றித் தெரிவதில்லை. 20 சதவீதத்தில் 5.5 சதவீதத் தம்பதியினர், தங்களுக்குள் உள்ள 'செக்ஸ்' பிரச்சினைகளால் கர்ப்பம் தரிக்காமல் இருக்கின்றனர். இந்தப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்களைச் சரியானபடி ஆலோசனை பெற்று வைத்தியம் செய்தால் எளிதில் முழுமையாகக் குணப்படுத்த முடியும்.

அந்தப் பிரச்சினைகள் என்னவென்றால்-

1. கணவனும் மனைவியும் பல்வேறு காரணங்களால் (மனவேற்றுமை, செய்யும் வேலை காரணமாக) போதுமான அளவு உடல் உறவில் ஈடுபடாமை.

2. Vaginusmus என்று பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினையினால் உடல் உறவு கொள்ள இயலாத நிலைமை.

3. ஆண்மைக் குறைவு (Impotence) ஆகியவையினாலும்

4. உடல் உறவு கொள்ளு முன்பே விந்து வெளியேறுதல் (Premature ejaculation) ஆகியவைகளாலும் அப்படி ஆகலாம். அனைத்தையும் முறையான Counselling மூலம் எளிதாகக் குணப்படுத்தலாம்.

**ஆண்களின் மலட்டுத் தன்மைக்கான காரணங்கள் என்னென்ன என்று கூறுங்கள்?**

ஆண்களுக்கு உண்டான காரணங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. விந்துவில் உயிரணுக்கள் குறைவாக- அல்லது குறைபாடு உள்ளதாக இருப்பது (Oligispermia, Asthemspermica)

2. விந்துவில் உயிரணுக்களே இல்லாமல் இருப்பது (Azospermia)

விந்துவில் உயிரணுக்கள் குறைந்து இருப்பதற்கான காரணங்களைப் பார்க்கும் போது-

முதலில் உணவில் புரதச்சத்துக் குறைவு, வைட்டமின் E, B comp சத்துக்குறைவு ஆகியவை விந்து உற்பத்தியைக் குறைக்கிறது.

இதனை- அதாவது Vitamin E, B குறைவினால், எலிகளில் மலட்டுத்தன்மை உண்டாவதைக் கண்டுபிடித்து நிரூபிக்கப் பட்டுள்ளது.

இன்று நமது இளைஞரிடையே மிகவும் பிரபலமான சிகரெட் புகைத்தல் பழக்கம் இருக்கிறது. இந்த சிகரெட்டில் இருக்கும் 'நிகோடின்' என்கிற நச்சுப் பொருள் விந்துகளில் உள்ள உயிரணுக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதுடன் அதனுடைய ஊர்ந்து செல்லும் தன்மை, அதன் வடிவம் ஆகியவற்றையும் பாதிக்கச் செய்கிறது.

மது அருந்துவது விந்து உற்பத்தியினைக் குறைக்கிறது. மேலும் abnormal விந்துக்களையும் உண்டாக்குகிறது.

உஷ்ணம் (temperature): விந்து உற்பத்திப் பைகள் (testes) உடலில் வயிற்றினுள் இல்லாமல் கீழே தொடைகளுக்கு நடுவே வைக்கப்பட்டிருப்பதற்குக் காரணமே, அவை உடல் உஷ்ணத்தைவிட குறைந்த குளிர்ந்த நிலையில் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். உடலைவிட 2.2°C அளவு உஷ்ணம் குறைவாக உள்ளது.

அவற்றில் உஷ்ணம் அதிகமானால் விந்து உற்பத்தி குறையும். பாய்லர் வேலை செய்பவர்கள், சமையல்காரர்கள், லாரி, டாக்சி, ட்ரக் ஓட்டுநர்கள், அதிக அளவில் பிரயாணம் செய்யும் சேல்ஸ்மென், சுரங்கங்கள்- பெரிய இயந்திரங்கள் அருகில் வேலை செய்பவர்கள் அடிக்கடி வெந்நீரில் குளிப்பது இறுக்கமான உள்ளாடைகள் அணிவது இவை அனைத்தும் விந்து குறைவிற்கான காரணங்களாகும்.

மேலும் தொற்று நோய்களால் விந்து உற்பத்தி குறையலாம். இவற்றில் முக்கியமான சில வருமாறு:

TB - இது விந்துக் குழாய் அடைப்பை ஏற்படுத்துகிறது.

Mumps or Chits (பொன்னுக்கு வீங்கி) - இதனால் விந்துப்பை சுருங்கி விடலாம், அல்லது விந்தில் உயிரணுக்கள் மிகவும் குறையலாம் அல்லது உயிரணுக்களே இல்லாமல் போகலாம்.





மேலும் சர்க்கரை வியாதியைச் சரியாக வைத்தியம் செய்யாவிட்டால், அதனால் உயிரணுக்கள் எண்ணிக்கை குறைவதோடு retrograde ejaculation விந்துக்கள் முன்நோக்கிச் செல்லாமல், பின்னால் சிறுநீர்ப்பையில் விழும் மற்றும் ஆண்மைக் குறைவும் (impotence) ஏற்படுத்தும்.

இதுதவிர, மற்ற குறைபாடுகளான- Hypospadiagn, Epispadiagn, Phimosn, Varicocode இவற்றினால் ஏற்படும் குழந்தையின்மையும் உண்டு; இதை அறுவை சிகிச்சையினால் எளிதில் குணப்படுத்தலாம்.

இவைமட்டுமல்லாமல் Harmone குறைவு, gene மாறுபாட்டினாலும் குழந்தையின்மை ஏற்படலாம்.

சிலருக்குச் சில மருந்துகள் உட்கொள்வதால்கூட மலட்டுத் தன்மை உண்டாகலாம். இது தவிர இன்னும் பற்பல காரணங்கள் உள்ளன.

**மருந்துகளால் மலட்டுத்தன்மை எவ்வாறு உண்டாகிறது? எந்த வகையான மருந்துகள் அதனை உண்டாக்குகின்றன?**

மருந்துகளில் சாதாரண நோய்களுக்கு உண்டான மருந்துகள்- அதாவது மலேரியா, இரத்தக் கொதிப்புக்கு உண்டான மருந்துகள், சர்க்கரை வியாதிக்கான மருந்துகள் ஆகியவையும், புற்றுநோய்க்கான மருந்து, மனநோய்க்கான மருந்துகள் ஆகியவைகளும் விந்தில் உயிரணுக்களைக் குறைக்கலாம். மேலும் X-ray கதிர்கள் உயிரணுக்களைப் பாதிக்கலாம். இவ்வகையில் ஒரு முக்கியச் செய்தியைக்' கூற விரும்புகிறேன்.

தற்போது மிகவும் பிரபலமாக உள்ள விளையாட்டு வீரர்கள் Androgen மருந்தை ஊசிமூலம் போட்டுக் கொள்வதாகச் சொல்லப்படுகிறது. 1950ல் பளு




தூக்குபவர்களாலும் ஆணழகன் போட்டிக்குச் செல்லுவோராலும் அது உபயோகப்படுத்தப்பட்டு, இன்று ஓட்டப்பந்தய வீரர்கள், கால்பந்தாட்ட வீரர்கள் ஆகிய அனைத்துத் துறைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. இது தசைநார்களைப் பெரிதாக்கவும் அதிக சக்தி கொடுக்கவும் விளையாட்டுத் திறனை அதிகப்படுத்தவும் உபயோகப்படுத்தப்படுகிறது. ஆனால் இந்த வகை மருந்துகள் விந்து உற்பத்தியை_ உயிரணுக்களை மிகவும் பாதிக்கிறது.

இது தவிர சில போலி மருத்துவர்களால் ஆண்மையை அதிகப்படுத்துவதற்காகவும் சில வகை Androgen மருந்து பயன்படுத்தப்படுகிறது. இவற்றால் இந்த நோய்கள் குணமாகாதது மட்டுமன்றி, விந்து எண்ணிக்கைகள் மிகவும் குறையும். உயிரணுக்களே முழுமையாக நிரந்தரமாக இல்லாமல் போகவும் கூடும்!

**ஆண்களுக்கான காரணங்கள் பற்றிக் கூறினீர்கள்; பெண்களுக்கான காரணங்கள் பற்றியும் கூறவும்?**

பெண்களுக்கான குழந்தையின்மைக்கான காரணங்கள் பல உள்ளன. அவற்றில் முக்கியமானவை:

பெண்களிடையே காணப்படும் Vitamin சத்துக்குறைவு, புரதச் சத்துக்குறைவு, இரத்தசோகை முதலியவையாகும்.

மேலும், பிறவியிலேயே பிறப்பு உறுப்புகளாகிய கர்ப்பப்பை, கருக்குழாய், கருமுட்டையில் ஏற்படும் குறைகளால் கருத்தரிக்கும் தன்மை இல்லாமல் போகிறது.

அடுத்தது, தொற்றுநோய் (infection). இவற்றில் கோனோகாக்கல் இன்பெக்ஷன், B நோய் ஆகியவற்றால் கருக்குழாய் அடைப்பு ஏற்பட்டு மலட்டுத் தன்மை உண்டாகிறது. இது தவிர மிக முக்கியமானது பயிற்சி பெற்ற மருத்துவர்களன்றி மற்றவர்களாலே தவறு செய்யப்படும்.

இதுதவிர, கருமுட்டை உற்பத்தியாவதில் அதன் வளர்ச்சியில் ஏற்படும் குறை, மேலும் உற்பத்தியான கருமுட்டை, நல்ல முறையில் வெளிப்படும்தன்மை குறைவதால் குழந்தையின்மை உண்டாகிறது.

இவையன்றி, கருமுட்டையை கர்ப்பப்பைக்குக் கொண்டு செல்லும் கர்ப்பக் குழாயில் ஏற்படும் அடைப்பு, அதன் அசைவுகளில் ஏற்படும் மாற்றங்களினாலும் கருத்தரியாமை ஏற்படுகிறது.

இவையெல்லாம் நல்ல முறையில் இருந்தாலும் Harmone உற்பத்தியில் ஈடுபடும் பிட்யூட்ரி, Thyroid, Adrinal ஆகியவற்றில்

ஏற்படும் குறைகளினாலும் குழந்தையின்மை ஏற்படுகிறது.

Antisperm Antibodies என்பவை நமது உடலிலேயே ஆண் விந்துக் களுக்கு எதிராக ஏற்படும் எதிர் அணுக்கள். இவையும் மலட்டுத் தன்மைக்கு முக்கியக் காரணம்.

இவையனைத்தையும்விட மிக முக்கியமானது stress infertility. அதாவது பெண்களுக்குத் திருமணம், புதுவீடு, கணவன் என்ற அச்சத்தோடு கூடிய பயம் (anxiety) அவர்களிடையே கரு உற்பத்தியைக் குறைக்கிறது.

**குழந்தை இல்லை என்ற கவலையே கருத்தரிக்கும் வாய்ப்பைக் குறைக்கும் என்கிறீர்களா?**

ஆம்; கண்டிப்பாகக் குறைக்கும்!

**இதுவரை காரணங்களைக் கூறி னீர்கள். குழந்தையில்லாத தம்பதியினர் மருத்துவர்களிடம் பலர் வருகிறார்கள். அவர்களிடம் எவ்வாறான பரிசோதனைகள் செய்யப்படும்?**

இருபாலருக்கும் முதலில் 1. உடல் பரிசோதனை - பிறப் புறுப்புகளின் பரிசோதனை, 2. ஆண்களுக்கு i) விந்து பரி சோதனை, ii) sex counselling, iii) Harmoneகள் அளவு, iv) சர்க்கரை வியாதி, நரம்புத் தளர்ச்சி, இரத்தக் கொதிப்பு. மேலும் மருந்துகள் உட்கொள்ளுதல் பற்றிய விவரங்கள், அளவுகள் v) விந்துக் குழாய் அடைப்பு கண்டுபிடித்தல் vi) testes biopsy

-எனப் பல்வேறுபட்ட பரி சோதனைகள் உள்ளன.

பெண்களுக்கும் அதேபோலப் பல பரிசோதனைகள் உள்ளன.

இவையனைத்தும் முறைப்படி செய்தால்தான் சரியான காரணம் கண்டுபிடித்து சிகிச்சை அளிக்க இயலும்.

**சோதனைக் குழாய்க் குழந்தை (TestTubeBaby)என்றால் என்ன?**

1978ல் டாக்டர் எட்வர்ட், ஸ்டெப்டோ ஆகியோர் முதன் முறையாக லூயிஸ் பிரவுன் என்ற சோதனைக் குழாய்க் குழந்தையை உருவாக்கினர். இந்தியாவில் 1986 ஆகஸ்ட் 6ல், டாக்டர் இந்திரா ஹண்டியா வினால் அவ்வாறான குழந்தை உருவாக்கப்பட்டது.

இது, பெண்ணின் கருமுட்டை வளர்ச்சியைக் கண்காணித்து, அதனை லேப்ராஸ்கோப்பி (laproscope) மூலம் வெளியே எடுத்து, அதன்மூலம் ஆணின் உயிரணுக்களுடன் கருத்தரிக்கச் செய்து, பின்பு அதனைப் பெண்ணின் கருப்பையில் செலுத்தி வளரவிட வேண்டும்.

இந்த முறையில் உருவாக்கப் படும் குழந்தைகளைத்தான் சோதனைக் குழாய்க் குழந்தை (Test Tube Baby) என்கிறோம்.

### பரந்த மனத்தோடு பழகுங்கள்!

பரந்த மனத்தோடு பழகுங்கள்
பண்புயர் மனிதராகப் பொலியுங்கள்!
புரட்சிப் புதுக்கருத்தைச் சொல்லுங்கள்
புகழ்சால் வள்ளுவத்தைக் கொள்ளுங்கள்!
சிறந்த நூல்களையே படியுங்கள்
சீர்மிகு கவிதைகளை வடியுங்கள்!
குறைந்த உணவருந்தி வாழுங்கள்
நிறைந்த அறிவோடு திகழுங்கள்!

-கவிஞர் இடிமுரசார்





# வேலைக்கு ஏற்ற நலம்

**வி**ஜயநகரத்தில் ஒரு நாள் அந்திப்பொழுதில் பெய்யத் தொடங்கிய பெருமழை மறுநாள் பொழுது விடிந்த பிறகே நின்றது. உடனே கிருஷ்ணதேவராயரும் அவருடைய அமைச்சர் அப்பாஜியும் ஊர்ப்புறத்தே உள்ள காட்டு வெளிகளில் வெள்ளத்தின் விளைவைக் கண்டு வரலாம் என்று புறப்பட்டுச் சென்றார்கள்.

அப்பொழுது அந்தக் காட்டு வெளியில் ஆடு மேய்க்கும் சிறுவனொருவன் ஆட்டு மந்தையை ஒருபுறம் மேய விட்டுவிட்டுத் தான் ஒருபுறம் தூங்கிக் கொண்டிருந்தான்.

அவன் எவ்வாறு தூங்கினான் தெரியுமா? தலைக்குக் கீழே ஒரு கல்லும், இடுப்புக்கு கீழே ஒரு கல்லும், காலின் கீழே ஒரு கல்லுமாக வைத்துக்கொண்டு மேலே சம்பங் குடையைச் சாய்த்து வைத்த வண்ணம் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான்.

மழை நீர் உருண்டு புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. அவன் தலையிலுள்ள நீண்ட மயிர் நனைந்து நீரோட்டத்தின் பக்கமே சாய்ந்தோடும் நாணல் புல்லைப் போல, நீரில் ஒரு பக்கமாக இழுத்து அலைந்து கொண்டிருந்தது. அவன் எவ்விதக் கவலையும் இல்லாமல் ஆனந்தமாக உறங்கிக்கொண்டிருந்தான்.



இராயர் இக்காட்சியைக் கண்டார்; வியந்தார்; "அப்பாஜி! இந்த நிலையிலே ஒருவன் ஆனந்தமாகத் தூங்க முடியுமா? நமக்குப் பலகணிகளின் கதவு திறந்திருந்தாலேயே உடல் குளிரு கிறது; காய்ச்சல் உண்டாகிறது. இந்த ஆடு மேய்ப்பவனோ, ஓடும் மழை வெள்ளத்தில் ஆனந்தமாகத் தூங்குகிறானே, எவ்வாறு இயலும்?" என்று கேட்டார்.

அதற்கு அப்பாஜி "வேலைக் கேற்ற நலம்; உடலுக்கேற்ற குணம்; உணவிற்கேற்ற உடல். இதுதான் உலக இயல்பு. இந்த ஆடு மேய்ப்ப வனும் அரண்மனையிலேயே பெரிய பதவி ஏற்றுச் சோறும் பாலும் உண்டு மெல்லிய பஞ்சு மெத்தையில் உறங்கி, ஆனந்தமாக வாழ்ந்து உடம்பில் காற்றும், மழையும், பனியும் படாமல் சில காலம் இருந்து வருவானே யானால், இவனுக்குக் காய்ச்சல் உண்டாகும்; நீர்க்கோவையும் ஏற்படும்; இதுதான் உலக நடப்பு!" என்றார்.

உடனே இராயர், அப்பாஜி கூறியது உண்மைதானா என்பதைச் சோதித்துப் பார்க்க விரும்பினார். அப்பாஜி கூறியது போல, அந்த ஆடு மேய்ப்பவனுக்கு அரசாங் கத்தில் வேலை கொடுத்தார்; அரச போகங்களை எல்லாம் சில காலம் துய்க்கச் செய்தார். பிறகு அவனை "உன்து குடிசைக்குத் திரும்பிப் போ!" என்று கூறினார்.

ஆடு மேய்ப்பவனுடைய குடிசையில், மன்னர், அப்பாஜி யினுடைய ஆணைப்படி ஈர வாழை மட்டைப் பட்டைகள் பரப்பப் பட்டிருந்தன. ஆடு மேய்ப்பவன் அவற்றை மிதித்துக் கொண்டே வீட்டினுள் சென்றான். அந்தப் பட்டைகளிலுள்ள குளிர்மையை அவனுடைய திருவடிகளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. மாறாக, காய்ச்சலும், நீர்க்கோவை யும் அவனைப் பிடித்துக்கொண்டன.

ஆடு மேய்ப்பவனுக்குக் காய்ச்சல் கண்டிருக்கிறது என்னும் செய்தியை, அறிந்த இராயர், தமது அரண்மனை வைத்தியர்களை அழைத்துச் சென்று, அந்த ஆடு மேய்ப்பவனைக் குணப்படுத் தினார்.

பிறகு, அப்பாஜி கூறிய உலகியல் நடைமுறை அனுபவம் உண்மைதான் என்பதை உணர்ந் தார்; அப்பாஜியைப் புகழ்ந்து பாராட்டினார்!

**(ராயர் அப்பாஜி கதைகளி லிருந்து)**

## தேர்வுக்குச் செல்லும் மாணவ, மாணவியருக்குச் சில யோசனைகள்

**மா**ணவ, மாணவியருக்குத் தேர்வு காலம் நெருங்கிவிட்டது. தேர்வுக்குச் செல்லும் அவர்களுக் குச் சில யோசனைகள்:

ஆசிரியர், வகுப்பில் பாடம் நடத்தும்போது அவற்றை உன்னிப் பாகக் கவனியுங்கள். அதை மனதில் அப்படியே பதிய வைத்துக் கொள்ளவேண்டும். வகுப்பில். பாடம் நடத்தும்போது கவனம் வேறு எதிலும் செல்லக்கூடாது.

அன்று நடத்திய பாடங்களை வீட்டிற்கும் வந்து மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

படிக்கும் பாடங்களைச் சிறு குறிப்புகளாக எழுதி வைத்துப் படித்துக் கொள்ளலாம்.

சாப்பிட்டுக் கொண்டோ, டி.வி. பார்த்துக்கொண்டோ, படுத்துக்கொண்டோ பாடங்களைப் படித்தல் கூடாது.

அமைதியான, காற்றோட்ட மான இடங்களில் அமர்ந்து கொண்டு மவுனமாகப் பாடங் களைப் படிக்க வேண்டும்.

அதிகாலை- மற்றும் இரவு நேரங்களில் பாடங்களைப் படித்தல் நல்லது.

பாடங்களின் முக்கியக் கருத்துக் களை அடிக்கோடிட்டுப் படியுங்கள்.

படிப்பதற்கு இடையே சிறிது நேரம் ஓய்வெடுத்துவிட்டு மீண்டும் படிப்பது சிறந்தது.

நீங்கள் படித்த பாடங்களை ஒரு பேப்பரில் எழுதிப் பார்த்துக் கொள்ளவும்.

தேர்வு எழுதப் போகும் நாட் களில் படபடப்பு, பயம் ஆகியவற்றை உதறிவிட்டு மன அமைதியுடன் சென்றால் உங்களுக்கு வெற்றி நிச்சயம்.

வினாத்தாளைக் கொடுத்த வுடன் முதலில் எல்லா வினாக் களையும் படித்துவிட்டு உங்களுக் குத் தெரிந்தவற்றை 'டிக்' செய்து கொள்ளவும்.

தெரிந்த விடைகளுக்கான பதில்களை எல்லாம் முதலில் எழுதி விடவும். தெரியாத வினாக்களை விட்டு விடவும்.

தேர்வுக்குச் செல்லும் மாணவ, மாணவியரே! நீங்கள் வெற்றி பெற வாழ்த்துக்கள்!



## வேளாண் பொருள்கள்

**பு**துடில்லியில் உள்ள வேளாண் பொருள்களின் ஏற்றுமதி ஆணையத்தின் ஒத்துழைப்புடன் தமிழ் நாட்டில் செயல்படுத்தப் படும் திட்டங்கள் குறித்து 28.1.97 அன்று தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர் திரு கே.ஏ.நம்பியார் அவர்கள் ஆலோசனை நடத் தினார்.

இந்தக் கூட்டத்தில் வேளாண் விளைபொருள் ஏற்றுமதி ஆணையத்தின் தலைவர் திரு. டி. ராஜகோபாலன், இயக்குநர் திரு. ஜெக்மோகன்சிங் ராஜூ, மற்றும் தமிழ்நாடு அரசு வேளாண் துறைச் செயலர் திரு. என். ஆதிமூலம், தமிழ்நாடு அரசு நிதித்துறைச் செயலர் திரு.பிவி. ராஜாராமன் மற்றும் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை விற்பனைத்துறை, தமிழ்நாடு அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் மற்றும் வேளாண்மை அபிவிருத்தி தொடர்பான துறை அலுவலர் களும் கலந்துகொண்டார்கள்.

வேளாண் விளைபொருள்கள் ஏற்றுமதி செய்யும் நிறுவனத்தின் பிரதிநிதிகளும்,விவசாயிகளும் கலந்துகொண்ட இக்கூட்டத்தில், வேளாண் பொருள்கள் ஏற்றுமதி ஆணையத்தின் தலைவர் திரு. ராஜகோபாலன் ஏற்றுமதிக்காக இந்த ஆணையம் அமல்படுத்தும் திட்டங்களையும் வழங்கும் உதவிகளைப்பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார். தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் வேளாண் பொருள்கள் மற்றும் பதனிடப்பட்ட உணவுப் பொருள் களுக்கு நல்ல ஏற்றுமதி வாய்ப்பு இருப்பதாகத் தெரிவித்தார். தமிழ்நாடு அரசு இதனை ஊக்கு விக்கும் பொருட்டு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திட வாய்ப்பு உள்ளது எனவும் அவர் விளக்கிக்கூறினார்.

குறிப்பாகக் கால்நடைப் பொருள்கள், மாட்டு இறைச்சி, பூக்கள், திராட்சை, மாம்பழங்கள், வாழைப்பழங்கள், காய்கறிகள், வெங்காயம், உணவுக் காளான் ஆகிய விளைப்பொருட்களுக்கு நல்ல ஏற்றுமதி வாய்ப்பு இருப்ப தாகத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சென்னை யில் அமைக்கப்படவுள்ள அகில உலக மலர்கள் ஏற்றுமதி மையத் திற்கான செயல் திட்டம் பற்றி புதுடில்லி வேளாண் பொருள்கள் ஏற்றுமதி வாரியத்திற்கும் தமிழ் நாடு வேளாண் விளைபொருள் விற்பனை வாரியத்திற்குமிடையே ஒப்பந்தம் ஒன்று கையெழுத்து இடப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையம் அருகிலுள்ள பள்ளிக்கரணை கிராமத்தில் 30 ஏக்கர் நிலத்தில் அகில உலக மலர்கள் ஏற்றுமதி மற்றும் விற்பனை அங்காடி அமைத்திட 20 கோடி ரூபாய் செலவில் திட்டம் செயல்படுத்தப் பட உள்ளது. இதற்கான செலவில பாதியைப் புதுடில்லி யிலுள்ள வேளாண் விளை பொருள்கள் ஏற்றுமதி வாரியம் ஏற்றுக்கொள்ள இசைந்துள்ளது. வேளாண்துறைச் செயலர் இந்தக் கூட்டத்தில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட உள்ள இதர வேளாண் பொருட்கள் மற்றும் பதனிடப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி பற்றிய வாய்ப்புக்களை விளக்கி கூறினார். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட மலர்கள் மற்றும் இதர வேளாண் விளை பொருள்கள் விற்பனையாளர்கள் தங்களுக் குள்ள பிரச்சினைகளைப் பற்றி யும் தேவைப்படும் அரசு உதவி களைப் பற்றியும் தெளிவாக எடுத்துக்கூறினார்கள். தமிழ்நாடு அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்ப ரேஷன் லிமிடெட் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. அன்சர்அலி அவர்கள் தங்கள் நிறுவனத்தின் மூலம் செயல் படுத்தப்பட்டுள்ள திட்டங்களை எடுத்துக்கூறினார். வேளாண்மை விற்பனைத்துறை இயக்குநர் திரு.சந்தானம் திருச்சியில் அமைக்க உள்ள வெல்ல விற்பனை வளாகம் மற்றும் மதுரையில் அமைக்கப்பட உள்ள நெல் விற்பனை வளாகத்தின் மூல மாக வெல்லம் மற்றும் அரிசி ஏற்றுமதிக்கான நல்ல சாத்தியக் கூறுகள் இருப்பதாக தெரிவித்தார்.

வேளாண் விளைபொருள்கள் ஏற்றுமதி தொடர்பாக விவசாயி களுக்குத் தேவைப்படும் உதவி களை பெங்களூரில் உள்ள வேளாண் பொருள்கள் ஏற்று மதி வாரியத்தின் பிராந்திய மேலாளர் திரு.டி.விஸ்வநாதன் மூலமாகப் பெற்றுக்கொள்ள லாம் எனவும் இக்கூட்டத்தில் தெரிவித்தார்.

ஏற்றுமதி வாய்ப்புகள்

216439

# வாசகர் இதயம்

'தமிழுக்கு முதல் மரியாதை' பகுதி, வணிக நிறுவனப் பெயர்ப் பலகைகளில் சரியான தமிழில் எழுதப் பெரிதும் உதவியாக இருக்கும்; வாழ்க தமிழரசின் தமிழ்ப்பணி.

**-ரா.ராகவன்**
**திருவரங்கம், திருச்சி.**

முன்போல, இதழ்தோறும் ஒரு திருக்குறளை உரையோடு வெளியிட்டால் நல்லது.

**-எம். பாரதிராஜா**
**எ. சாத்தனூர்.**

'தமிழரசு' வளர்ச்சி, தமிழின் வளர்ச்சி என்று ஒப்புக்கொள்கிறோம்; 'அரசு ஆணைகளை'யும் தமிழில் வெளியிட்டால் இன்னும் சிறப்பாக இருக்குமே!

**-டி. ஜோதி தமிழ்**
**கரும்பியூர்.**

பணத்தை மட்டுமல்ல; இனி தமிழரசையும் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைத்துச் சேமிக்க முடிவு பண்ணிவிட்டேன்.

**-ந.சரவணன்**
**இலுப்பூர்.**

மரங்களின் மகத்துவம் என்று சித்த வைத்திய முறைபற்றி வெளியிட்டிருந்தீர்கள். இவ்வாறான மருத்துவப் பலன்களைத் தொடர்ந்து வெளியிடலாம்.

**-கி. ராமதாஸ்**
**சென்னை.**

'கவிதைச் சோலை' கரும்பாய் இனித்தது; கவிதைப் பயணம் வளரட்டும்.

**-சோலைப்பிரியன்**
**திருப்பத்தூர்.**

'வலிப்புநோய்' மருத்துவக் கட்டுரை எல்லோருக்குமே உதவுவதாகும். கிராமத்துப் பழமொழிகளும் அருமை.

**கே.ஆர். உதயகுமார்**
**சென்னை.**

'சென்னையில் தென்னை' கட்டுரை மூலம் பல செய்திகளைத் தெரிந்து கொண்டோம்; அதேபோல், வேளாண்மை தொடர்பான கட்டுரைகள் எப்போதும் தமிழரசில் இடம்பெறட்டும்.

**-கே.ஜெகந்நாதன்,**
**சேலம்.**

தமிழை அறிந்துகொள்ள மட்டுமல்ல; தமிழக அரசின் திட்டங்களை அறிந்துகொள்ளவும் தமிழரசு பெரிதும் உதவுகிறது.

**-ச. சத்தியசீலன்**
**இராமானுஜபுரம்.**

## 1997-98-ஆம் ஆண்டு

# திட்ட ஒதுக்கீடு

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பங்கேற்ற திட்டக்குழுக் கூட்டம் புதுடெல்லியில் 20.2.97 அன்று நடந்தது. அதில் எடுக்கப்பட்ட முடிவின்படி 1997-98 நிதியாண்டின் திட்டப் பணிகளுக்காக 4,344 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அறிவிக்கப் பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட 17.14 சதவிகிதம் அதிகமாகும்.

தமிழக அரசு 1997-98-ஆம் ஆண்டுக்கான திட்டம் எவ்வளவு என்பதை நிர்ணயிப்ப தற்கான கூட்டம் டெல்லியில் யோஜனா பவனில் நடைபெற்றது. மத்திய திட்டக்குழு துணைத் தலைவர் திரு. மதுதண்டவதே அவர்களும், திட்டக் குழுவின் உறுப்பினர் களும் தமிழக முதலமைச்சர் அவர்களுடன் தமிழக அரசின் ஆண்டுத் திட்டம் குறித்து விவாதித்தனர்.

முதல்வர் அவர்களுடன் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. கே.என். நம்பியார், நிதித்துறைச் செயலாளர் திரு. ராஜாராமன், திட்டத்துறைச் செயலாளர் திரு. மாத்யூ, மாநில அரசின் திட்டக்குழு உறுப் பினர் செயலாளர் திரு. பாண்டா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாகத் தமிழக முதல்வர் அவர்களும் மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்களும் தனியாகப் பேசிய பின்னர் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு விவாதித்ததன் பேரில் எடுக்கப்பட்ட முடிவு வருமாறு:

தமிழ்நாட்டில் 1997-98-ஆம் ஆண்டுத் திட்டத்திற்கான திட்ட ஒதுக்கீடு நான்காயிரம் கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திட்டம் சாராத பிரிவுக்கு ரூ.334.44 கோடி மாற்றப்பட்டதைச் சேர்த்துக் கணக்கிட்டால், தமிழ்நாட்டின் மொத்த திட்ட ஒதுக்கீடு 4,334 கோடி ரூபாய் ஆகும். இது 1996-97-ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீட்டை விட 17.14 விழுக்காடு கூடுதலாகும்.

குடிதண்ணீர் வசதி, சாலை வசதி, சுகாதாரம் போன்ற ஏழு அடிப்படை குறைந்தபட்சப் பணிகளுக்கு இத்திட்டம் முன்னுரிமை அளிப்பதுடன், வேளாண்மை, ஊரக வளர்ச்சி, உள் கட்டமைப்பை வலுப் படுத்துதல். வறுமை ஒழிப்புக்கான சிறப்பு வேலை வாய்ப்புத் திட்டங்கள் ஆகிய இனங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கும்.

உள்கட்டமைப்பு, வளர்ச்சித் திட்டங் களுக்கான மின்சக்தி, தொழில்கள், சாலை



வசதி மற்றும் போக்குவரத்து மேம்பாட்டிற்கு 37.8 விழுக்காடும், இதனைத் தொடர்ந்து சமூகப் பணிகள் திட்டங்களுக்கு 34.4 விழுக்காடும், வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கு 27.8 விழுக்காடும் ஒதுக்கீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் மாநிலத்தின் முன்னுரிமைகள் மற்றும் பிரச்சினைகள் சில

வற்றை மத்தியத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அவைகள் காட்கில் முகர்ஜி, கோட் பாட்டினை மறு ஆய்வு செய்து வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள நிலைமைகளையும், வேலை வாய்ப்பின்மை வீதத்தினையும் கணக்கில் கொண்டு, திட்டத்திற்கான மத்திய அரசு நிதி ஒதுக்கீட்டினை அதிகரிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

தேசிய அனல் மின்சாரக் கழகத்தின் மூலம் மாநிலத்தில் மிகப் பெரிய அளவில் மின் நிலையங்களை அமைத்திடவும், தனியார் மற்றும் கூட்டுறவுத் துறை மூலமாக மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்க மத்திய அரசின் உதவியையும் கோரப்பட்டுள்ளது.

வெகுஜன விரைவு ரயில் போக்குவ ரத்துத் திட்டத்தினைத் துரிதமாக நிறை வேற்றவும் மற்றும் தூத்துக்குடி துறைமுகத் திலிருந்து மங்களூர் துறைமுகத்தினை சென்னை மற்றும் பெங்களூர் வழியாகப் பெருவழிச்சாலை மூலமாக இணைக்கவும் கோரப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தின்போது, மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் மதுதண்டவதே அவர்களும், திட்டக்குழுவின் உறுப்பினர் களும் திட்டப் பணிகளை நிறைவேற்றுவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது என்று குறிப்பிட்டுப் பாராட்டி னார்கள். மேலும், நிதியாதாரங்களைத் திரட்டுவதில் குறியீட்டையும் கடந்து இலக்கை அடைவதற்காகத் தமிழக முதலமைச்சரைப் பெரிதும் பாராட்டினர். வறுமை ஒழிப்புத் திட்டத்தில் நடப்பாண்டில் தமிழகம் பெற்ற வெற்றியை- குறிப்பாக, திட்டக்குழு உறுப் பினர்கள் பெரிதும் பாராட்டினர்.

குழந்தை இறப்பு விகிதம் தமிழ்நாட்டில் மிகவும் குறைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, தமிழக முதலமைச்சருக்குப் பாராட்டுத் தெரிவித்தனர்.

24 மணி நேரமும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்திருப்பதற்காகப் பாராட்டுத் தெரிவித்த திட்டக்குழு உறுப்பினர் ஒருவர், இத்தகைய வசதி பல மாநிலங்களில் மாவட்டத் தலை நகரங்களிலே கூட செய்து தரப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

மேலும், முதலமைச்சர், திட்டக்குழுத் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் ஒரு வேண்டுகோள் என்று கூறி, உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதைத் தான் வரவேற்பதாகவும், ஆனால் அப்படிப்பட்ட பணிகள் திறந்த ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் நிறைவேற்றப்பட்டால்தான் ஊழல் இல்லாமல் பார்த்துக்கொள்ள முடியுமென்றும், ஆனால் மத்திய அரசு அதற்கு இணங்கவில்லை என்றும், திறந்த ஒப்பந்தப் புள்ளி முறை வேண்டாமென்று மத்திய அரசிடமிருந்து கடிதம் வந்திருப்ப தாகவும், திட்டக் குழு மத்திய அரசுக்கு இதுபற்றித் தெரிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இதுபற்றித் திட்டக்குழு உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டு திறந்தவெளி ஒப்பந்தப் புள்ளி முறைதான் சரியானது என்றும், மத்திய அரசின் கவனத்திற்குத் திட்டக்குழு இதனை எடுத்துச்செல்லுமென்றும் தெரிவித் தார்கள்.








# முத்தமிழ்ப் பேரவை விழாவில் முதல்வர்

"ராஜரத்னா" விருதில் ஆற்றல் இசைஞானம் இது மாத்திரம் அடங்கியிருக்கவில்லை சுயமரியா தையும் அடங்கியிருக்கிறது. அதனால்தான் "ராஜரத்னா" விருது நம்முடைய இசை மேதை களுக்கு வழங்கப்படவேண்டும் என நான் ஏற்கெனவே பரிந்துரை செய்தேன்.

அண்மையில் ஒரு நிகழ்ச்சி- நடக்க இருக்கிற நிகழ்ச்சி. கலை மாமணி போன்ற விருதுகள் பல பேருக்கு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பாக வழங்க இருக்கிறோம். அந்த கலைமாமணி விருதைப் பெற இருக்கின்ற ஒருவரில் நாயன இசைக்காகத் திருக்குவளை நவநீத கிருஷ்ணன் அந்த விருதைப் பெற இருக்கிறார். நான் திருக்குவளை என்று சொல் வதற்குக் காரணம் அது என்னு டைய ஊர் என்பது உங்களுக்குத் தெரியும் என்பதால்! அந்தத் திருக்குவளையில், தெற்கு வீதியில் எந்நேரமும் ஒரு காலத்திலே நான் சிறுவனாக இருந்த காலத்தில் நாயன ஒலி, தவில் ஒலி கேட்டுக் கொண்டே இருக்கும். விடியற் காலை ஐந்து மணிக்கெல்லாம் நாயன ஒலி தொடங்கிவிடும். மாலை நேரமும், இரவு நேரமும் ஒலி கேட்டுக் கொண்டே இருக்கும்.

இப்போது இருப்பது நவநீத கிருஷ்ணன் ஒருவர் தான். சொல்லப்போனால் திருக்குவளை யில் தெற்குவீதியில் மிச்சமிருக்கிற ஒரே ஒரு நாதஸ்வர ஒலிக்குச் சொந்தக்காரரர் அந்த நவநீத கிருஷ்ணன்தான். அவரும் இல்லையென்றால் பிறகு திருக் குவளையில் கேட்டுக்கொண்டிருந்த நாதஸ்வர ஒலி இனி கேட்காது. அந்தக் கவலை எனக்கு உண்டு. ஒரு வேளை ஏதோ இது இனப் பற்றின் காரணமாக ஏற்பட்டது என்று யாரும் எண்ணிக் கொள்ளக் கூடாது. இசைப்பற்றின் காரண மாக ஏற்பட்ட கவலையே தவிர வேறு அல்ல.

சில இசைக் கருவிகள் இன்றைக்குப் புழக்கத்தில் இல்லை. அதைப் போல இந்த இசையும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறது. அதற்காகத் தான் நான் அரசின் சார்பாக எண்ணிக் கொண்டிருக்கிறேன்- எந்த இசைக் கலை கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்துவருகிறதோ, மறைந்து வருகிறதோ அந்த இசைக் கலையெல்லாம் வளர்ப்பதற்கும் பரப்புவதற்கும், காலத்துக்கும் [illegible] நிலைத்து நிற்பதற்கும் அரசின் சார்பாக, எதிர் காலத்திலே தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு ஊரிலும் இந்த இசைக் கல்லூரிகள், இசைப்பள்ளிகள் அமைக்கப்பட்டு அதிலே தமிழிசை தாழ்ந்து போகாமல் வளர்க்கப்படக்கூடிய நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதற்கு நிச்சயமாகப் பலன் கிடைக்கும் என்ற நம்பிக் கையைத்தான் இன்றைக்கு நான் இந்த மேடையிலே பெற முடிந்தது.

நான் பிறமொழியை வெறுப் பவன் அல்ல; ஆனால் பிற மொழி என் மொழியை அழிப்பதை அனுமதிக்காதவன். எனவே, பிற மொழிகளும் வளரவேண்டும். அதே நேரத்தில் நம் மொழி தாழ்ந்து விடாமல் நம் மொழியை யும் நாம் தலை தூக்கி விட வேண்டும். அதற்காக அன்றைக்கு அரும்பாடுபட்டவர்கள்- தமிழிசை என்று சொல்கிற காரணத்தால் இவன் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவன். ஆகவே தமிழிசை என்று பேசுகிறான் என யாரும் கருதக்கூடாது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா- இவர்களெல்லாம் தமிழிசை வளர வேண்டும் என்று பாடுபட்டார்கள். நான் சிறுவ னாக மாணவனாக இருந்தபோது தெலுங்கு இசை பாடுகின்ற மண்டபங்களுக்குச் சென்று அந்த இசைவாணர்களுக்குத் துண்டுச் சீட்டு கொடுத்து ஒரு தமிழ்ப் பாட்டாவது பாடுங்கள் என்று கேட்டுக்கொண்ட காலம் இருந்தது.

இன்னும் கேவலம்- ஒரு ஐம்பது தெலுங்குப் பாடல்களை, இந்திப் பாடல்களையெல்லாம் பாடிவிட்டு, கடைசியாக இரண்டு உருப்படி பாடுவார்கள். அதற்கு அந்தத் தமிழ்ப் பாட்டுக்குப் பெயரே உருப்படி. சலவைத் தொழிலாளி யிடத்தில் எண்ணிப் போடுகி றோமே பத்து உருப்படி போட்டேன், பனிரெண்டு உருப்படி போட்டேன் என்று! அது மாதிரி தமிழ்ப் பாட்டுக்கு உருப்படி என்ற கேவல மான பெயர் கொடுக்கப்பட்டது. தமிழ்நாட்டில் தமிழன் தமிழ்ப் பாட்டைப் பாட வேண்டும் என்று கேட்பதைவிட கேவலம் வேறு ஒன்றுமில்லை. அந்த அளவிற்கு நாம் தாழ்ந்து போயிருக்கிறோம். அதனால்தான் அறிஞர் அண்ணா, 'ஏ! தாழ்ந்த தமிழகமே!' என்று அன்றொரு நாள் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் அவலக் குரல் எழுப்பினார். இன்னும் நாம் தாழ்ந்த தமிழகம் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. உயர்ந்துவிட்ட தமிழகம் இது- ஒளி விடுகின்ற தமிழகம் இது என்று சொல்லக் கூடிய நாள் வந்தாக வேண்டும்.

நாம் மற்ற மொழிக்காரர்கள் யாருக்கும் விரோதிகள் அல்ல. மற்ற மொழிகளின் பாடல்களும் பாடப்படலாம். மற்ற மொழி களின் மூலமாக நல்ல இசைக் கலை வளர்ந்திருக்கின்றது. சங்கீத வித்வம் எவ்வளவோ வளர்ந்திருக் கின்றது. நாம் மறுக்கவில்லை. தியாகய்யர், தீட்சிதர் போன்றவர் களெல்லாம் இசையை வளர்த் திருக்கிறார்கள். அவர்கள் இன் றைக்கும் பாராட்டுக்கு உரிய வர்கள். அதற்காக நாம் தமிழிசையை இழந்துவிடலாமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ் இசையையும் வளர்ப்போம்.

**(முத்தமிழ்ப் பேரவையின் 22-ஆம் ஆண்டு இசைவிழாவில் 9.2.97 அன்று சென்னை ரசிக ரஞ்சனி சபாவில் விருதுகள் வழங்கி ஆற்றிய சிறப்புரை யிலிருந்து)**



# பேரிகை முழக்கம்

## நெர்கிஸ் தலால்

**மோ**ட்டார் கரடு முரடான அந்த மணல் ரஸ்தாவில் மெது வாகப் போய்க்கொண்டிருந்தது. எனவே, மிகப் பளபளப்பான அந்த மோட்டார் மீதெல்லாம் படை படையாகப் புழுதி படிந்து, அதன் அழகையே மறைத்திருந்தது.

அது போய்க் கொண்டிருந்த் பிரதேசத்தில் நாற்புறங்களிலும் வயல்கள் தரிசாக வறண்டு கிடந்தன. வெகுதூரத்தில் உள்ள குன்றுகள் வரையில் பரந்து கிடந்த வயல்களின் கரைகள், அனல் திட்டுகளாகக் காட்சியளித்தன. தாங்க முடியாத அந்த உஷ்ணத்தில் குன்றுகளும் நீல நிறமான மெல்விய புகை மண்டலங்களால் மறைக்கப்பட் டிருப்பதுபோல் தோன்றின.

ட்ரியானா துரை மோட்டாரி லிருந்து வெளியே ஆவலுடன் எட்டிப்பார்த்தார். இந்தியாவைச் சுற்றிப் பார்ப்பதற்காக அவர் இங்கிலாந்திலிருந்து வந்தவர் அல்லவா? இந்தியாவின் சகல பாகங்களையும் விடாமல் சுற்றிப் பார்த்துவிட வேண்டும் என்று அவர் உறுதிகொண்டிருந்தார்.

ஏற்கெனவே அவர் நெடிய வயல்களையும் செழுமையான பசும்புல் பிரதேசங்களையும் பார்த்தாகிவிட்டது. பச்சைப் போர்வையுடன் காட்சியளிக்கும் மலைத் தொடர்களையும் ட்ரியானா பார்க்கத் தவறவில்லை. வளம் பொருந்திய தேயிலைத் தோட்டங்களையும் அவர் பார்வை யிட்டார். மற்றும் அவர், காலத் தினால் அழிக்கப்பட்டுக் கிடந்த பண்டைய நகரங்களையும் கட்டடங் களையும் காணத் தவறவில்லை. பிறகு பல கோவில்களையும் சென்று பரிசீலனை செய்தார். புதிதாகக் கட்டப்பட்டுள்ள அணைக் கட்டுகளையும் நுணுக்கமாகக் கவனித்தார்.

கடைசியாக, பஞ்சப் பிரதேசங் களையும் பார்த்து விடவேண்டும் என்று அவர் தீர்மானித்தார். பட்டினி கிடந்து எலும்பும் தோலுமாக நடமாடும் பெண்கள், வயிறு வீங்கி எலும்புக்கூடாக் இருக்கும் குழந்தைகள் இவர் களைப் புகைப்படங்கள் எடுக்க வேண்டும் என்ற ஆர்வ மிகுதியால் தான் அவர் இப்போது மோட்டாரில் சென்றார். இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றதும் அந்தப் படங்களைத் தமது பத்திரிகையில் பிரசுரிக்கவேண்டும் என்பது அவர் அவா.

மோட்டாரில் சென்ற மற்ற வர்களுக்கு, பஞ்சத்தினால் அடி பட்ட மக்களைப் புகைப்படம் எடுப்பதில் உற்சாகம் இல்லை. எனினும் அதற்காக இந்தியாவில் சுற்றுப்பிராயாணம் செய்த ட்ரியானா தமது நோக்கத்தைக் கைவிட விரும்பவில்லை.

வெயில் கடுமையாக இருந்த துடன், புழுதி, மோட்டாருக்கு உள்ளே கூட எல்லா இடங் களிலும் லேசாகப் படிந்திருந்தது.

மோட்டாரில் உட்கார்ந்திருந்த இரண்டு பெண்களில் ஒருத்திக்கு இருபது இருபத்திரண்டு வயது இருக்கும். அவள் தன் அழகான முகத்தை அடிக்கடி துடைத்துக்



கொண்டாள். களைப்பு மேலீட்டால் பின்புறமாகச் சாய்ந்து கொண்டாள். அவளைக் காட்டிலும் சிறிது அதிக வயதான மற்றொருத்தி ட்ரியானாவின் சகோதரிதான். மோட்டாரைப் போலவே அவளுடைய தேகம் முழுவதும், தலை, முகம், கண்கள், புருவங்கள் எங்கும் புழுதி படிந்திருந்ததது. ஆனால், அதை அவள் பொருட்படுத்தவே இல்லை. கண்களை மூடிக் கொண்டு வாயைப் பாதி திறந்த வண்ணம் அரைகுறைத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்.

மோட்டாரில் இருந்தவர்களில் டிரைவர் பிரிதம்சிங் ஒருவர்தான் அந்த உக்ரமான வெய்யிலைச் சிறுதும் லட்சியம் செய்யாமல், வெகு லாவகமாகவும் சிறிதும் களைப்பில்லாமலும் மோட்டாரை ஓட்டிச்சென்றார்.

மோட்டாரில் இருந்தவர்களில் டிரைவர் ஒருவர்தான் இந்தியர். யௌவன வயதுள்ள அவர் ஓர் இராணுவ அதிகாரி. ட்ரியானாவுக்கு உதவியாகவும், வழிகாட்டியாகவும் அதிகாரிகள் அவரை அனுப்பியிருந்தார்கள். அவர் முக்கியமாக ஏதாவது சொல்ல வேண்டியிருந்தாலொழிய மற்றபடி வாயையே திறக்காமல் மௌனமாக மோட்டாரை ஓட்டிச் சென்றார்.

"பிரிதம்சிங், நாங்கள் சாப்பிடுவதற்குத் தகுதியான ஓரிடத்தில் மோட்டாரை நிறுத்துங்கள்" என்றார், ட்ரியானா பிரிதம்சிங்கிடம்.

இதற்கு பிரிதம்சிங் பதில் எதுவும் கூறவில்லை. எனினும் ட்ரியானா கூறிய வார்த்தைகள் தமது காதில் விழுந்தன என்பதற்கு அறிகுறியாக அவர் தலையை மெதுவாக அசைத்தார்.

இதைப் பார்த்த ட்ரியானா தமது முகத்தைச் சுளித்துக் கொண்டார். அவருக்கு இந்தியர்களைக் கண்டாலே பிடிக்காது. அதிலும் அதிகமாகப் பேசாமல் மௌனமாக இருக்கும் இந்தியர்களை அவர் அறவே வெறுத்தார்.

ட்ரியானா பெரிய வாயாடி, குட்டையாக இருப்பார். ஸ்தூலமான தேகம் படைத்தவர். அவரது தோல் கருப்பு நிறமாகத்தான் இருந்தது. எனினும் அவர் தம்மை பிரிட்டிஷ்காரர் என்றே சொல்லிக் கொண்டார். அவரது நிறத்திலிருந்து அவரை ஆங்கிலேயர் என்று யாரும் கூறமுடியாது.

சந்தேகத்துக்கு இடமான தனது வம்சாவழியைப் பற்றி அவர் மௌனமாகவும் இருக்கமாட்டார். உலகத்தில் உள்ள மற்றெந்த நாட்டைக் காட்டிலும் தம்முடைய தேசம்தான், அதாவது இங்கிலாந்துதான் உயர்ந்தது என்று பெருமையடித்துக் கொள்வார். இந்தியர்களை நீக்ரோக்கள் என்று ஏளனம் செய்வார். இந்தியாவில் எதைப் பார்த்தாலும் அவர் குற்றம் குறை சொல்லாமல் விடுவதில்லை. இந்தியாவில் வறண்ட பிரதேசங்களைக் கண்ட ட்ரியானாவில் குரூரமான மனம் மிகவும் ஆனந்தப்பட்டது.

ட்ரியானாவின் மமதையும் திமிரும் பிரிதம்சிங்கிற்கு மிகுந்த ஆத்திரத்தை உண்டாக்கின.

"என் தோலைவிட உன் தோல் கருப்பாகியிருக்கிறதே, நீ எங்கே அப்பா பிறந்தாய்?" என்று கேட்க வேண்டும் போலிருந்தது பிரிதம்சிங்குக்கு.

எனினும் பிரிதம்சிங் கண்ணியம் வாய்ந்தவராதலால் தமது கோபத்தை அடக்கிக் கொண்டார். அற்பபுத்தி படைத்த ட்ரியானாவின் அர்த்தமற்ற தடபுடல் பிரிதம்சிங்குக்கு ஒரு விதத்தில் வேடிக்கையாகவும் இருந்தது.

கடைசியாக அந்தப் பெரிய மோட்டார் ரஸ்தாவிலிருந்து இறங்கி, இடிந்து பாழாகக் கிடந்த ஒரு கட்டிடத்துக்கு அருகில் போய் நின்றது. அது யாருடைய உபயோகத்திலும் இல்லாத ஒரு பழைய கோட்டையாகும். அந்தக் கோட்

## உலகச் சிறுகதைப் போட்டி

அமெரிக்காவில் உள்ள பிரபல பத்திரிகையான 'நியூயார்க் ஹெரால்டு டிரிப்யூன்' உலகச் சிறுகதைப் போட்டி ஒன்றை 1954ஆம் ஆண்டு நடத்தியது. முதன் முதலாக நடத்தப்பட்ட உலகளாவிய இச்சிறுகதைப் போட்டியில் இந்தியா உள்ளிட்ட இருபத்து மூன்று நாடுகள் கலந்து கொண்டன. இந்தியாவில் கதைகள் எழுதி அனுப்ப பன்னிரண்டு மொழிகள் குறிப்பிடப்பட்டன. அவற்றுள் தமிழும் ஒன்று. ஆங்கிலத்தில் புலமையுள்ளவர்கள் ஆங்கிலத்திலேயே எழுதலாம். இந்திய மொழிகளில் போட்டிக்கு வரும் கதைகளைப் பெற்று அனுப்ப டில்லியின் 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பொறுப்பேற்றுக் கொண்டது. இந்திய எழுத்தாளர்களின் சிறந்த எட்டு படைப்புகளுக்கு 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' மொத்தம் ரூ.5,250/ பரிசளித்தது. முதல் பரிசு மட்டும் ரூ.1500/. ஹிந்துஸ்தான் டைம்ஸ் இந்திய மொழி படைப்புகளில் தேர்ந்தெடுத்து பரிசு வழங்கிய எட்டுச் சிறுகதைகளில் முதல் நான்கு கதைகள் உலகச் சிறுகதைப் போட்டிக்கு அனுப்பப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய மொழிக் கதைகளின் எழுத்தாளர்களே அக்கதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத்தர வேண்டும்.

தமிழ்க் கதைகளுக்குப் பிரதிநிதி 'கல்கி'. கதைகளின் கரு எதைப்பற்றி வேண்டுமானாலும் இருக்கலாம் என்றாலும்,



டையில் ஓரிடம் வெய்யிலுக்குப் பாதுகாப்பாகவும் குளிர்ச்சியாகவும் இருந்ததது.

அவர்கள் எல்லோரும் கீழே இறங்கினார்கள். யுவதி கீழே இறங்கியதும் கொட்டாவிவிட்டு இரு கைகளையும் மேலே தூக்கிச் சோம்பல்முறித்தாள். நல்ல தேகக் கட்டும் வனப்பும் வாய்ந்த அந்த யுவதியை விழுங்கிவிடுவதுபோல் பார்த்த ட்ரியானா, அவளுடைய மிருதுவான கையை மெதுவாகப் பிடித்தார்.

"நிழலுக்குப் போய் இளைப்பாறு ஹெலன்" என்று அவள் கையைப் பிடித்த வண்ணம் பரிவுடன் கூறினார் ட்ரியானா.

அந்தப் பெண் அவரிடமிருந்து மெதுவாகக் கையைத் திமிறிக் கொண்டு அப்பால் சென்றுவிட்டாள். ட்ரியானாவின் சகோதரிக்குப் பேச்சுத் துணையாக வந்த அவளுக்கு ட்ரியானாவின் போக்கும் விஷமப் பார்வையும் பிடிக்கவில்லை. தான் ட்ரியானாவுடன் வந்தது பெரும் தவறு என்பதையும் அவள் உணர்ந்தாள். எனினும் அவ்வளவு தூரம் வந்தபின் என்ன செய்வது?

அந்த மோட்டாருக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த 'வாகன்' மோட்டாரும் சில அடி தூரத்தில் நின்றது. அதில் வந்த இரண்டு வேலைக்காரர்கள் வாகனிலிருந்த கம்பளங்களையும் உணவுக் கூடைகளையும் கீழே இறக்கினர். கம்பளங்களை ஒழுங்காகத் தரையில் விரித்து, அவற்றின் மீது உணவுக் கூடைகளை வைத்தனர்.

இதுவரையில் வாயையே திறக்காமல் மௌனமாக இருந்த ட்ரியானாவின் சகோதரி ஸ்ரீமதி ஜார்டனுக்கு உணவுக் கூடைகளைக் கண்டதும் நாக்கில் ஜலம் ஊறத் தொடங்கியது. அவள் அவசரம் அவசரமாக ரொட்டித் துண்டுகளை எடுத்து வாய் கொள்ளாமல் திணித்துக் கொண்டாள்.

ட்ரியானா வழி நெடுகப் பிரிதம்சிங்கை வம்புக்கு இழுக்க முயன்றதை ஹெலன் கவனிக்கத் தவறவில்லை. இந்தியர்களையும் அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் ட்ரியானா எள்ளி நகையாடியதைப் பிரிதம்சிங் லட்சியம் செய்யவே இல்லை. ட்ரியானா ஆத்திரமூட்டத்தக்க விதத்தில் வம்புக்கு இழுத்தும்கூட, பிரிதம்சிங் மிகவும் அமைதியாகவும் நிதானமாகவும் மோட்டாரை ஓட்டிச் சென்றது ஹெலனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அத்தகைய ஏளன வார்த்தைகளை ஒருவர் அவ்வளவு நேரம் பொறுத்துக் கொண்டு பேசாமல் இருக்க முடியுமா? அல்லது பிரிதம்சிங்கின் கம்பீரமான முகத் தோற்றம் உள்ளூறப் பொங்கும் ஆத்திரத்தைப் வெளிக்குத் தெரியாமல் மறைத்துக் கொண்டிருக்கிறதா? என்றெல்லாம் ஹெலன் தனக்குள் எண்ணமிட்டாள்.

தாம் இந்தியர்களை எவ்வளவு தூரம் ஏளனம் செய்தும் பிரிதம்சிங் மௌனமாகவும், மரியாதையாகவும் இருந்தது ட்ரியானாவுக்கு மேன்மேலும் ஆத்திரத்தை உண்டு பண்ணியது. பிரிதம்சிங்கின் பொறுமையும் கண்ணியமும் தம்மை அவமதிப்பது போல் அவருக்குத் தோன்றியது. உணவு அருந்த உட்கார்ந்த இடத்திலும் ட்ரியானா குத்தலான தமது பேச்சை விடவில்லை. கடைசியாக, பாணம் போன்ற வார்த்தைகளைப் பிரயோகித்துப் பிரிதம்சிங்கைத் திக்கு முக்காடச் செய்து விட வேண்டும் என்று எண்ணினார் ட்ரியானா.

"உங்கள் நாடு மிக மிகச் சிறந்த நாடுதான். சுதந்திரத்துக்கு மிகவும் தகுதியான தேசம்தான். இப்போது உங்களுக்குச் சுதந்திரம் கிடைத்து விட்டதால், நீங்கள் யாவரும் உங்கள் இஷ்டப்படி பட்டினி கிடக்கலாம். அன்னியரின் தலையீடின்றி இனிமேல் அமைதியாகச்

காதல், குரோதம், நன்றி, வாஞ்சை, தேசபக்தி, தியாகம், யுத்தம், துணிகரச் செய்கை, திறப்போர், துரோகம், திருமணம், மரணம் ஆகிய எந்தப் பொருளையும் மையமாகக் கொண்டு உணர்ச்சிப் பெருக்கு, அமைப்புத் திறன், வாழ்க்கைப் பண்பு, நடையின் சிறப்பு, கதையின் ஓட்டம் ஆகியவை முக்கியமாகக் கருதப்படும் என்கிறது விதி.

இப்போட்டியில் பங்குபெறும் பத்திரிகைகள் தங்கள் தங்கள் மொழிக் கதைகளுக்குத்தாங்களே பரிசுகள் அளிக்க வேண்டும்.

கதைகள் பிரசுரமாகி முடிந்தபின் அந்தக் கதைகளில் எது சிறந்தது, பரிசுக்குரியது என்பதை போட்டியை நடத்தும் பத்திரிகைகளிடையே ஓட்டு எடுத்து முடிவு செய்வார்கள்.

இதில் முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்படும் சிறு கதைக்கு முதல் பரிசாக ஐந்தாயிரம் டாலர் பரிசு (அப்போது ரூ.23,750/ ) வழங்கப்படும்.

உலகச் சிறுகதைப் போட்டிக்கு அனுப்பத் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு தமிழ்க்கதைகளுக்கு ஒவ்வொன்றுக்கும் கல்கி ரூ.125/ அன்பளிப்பு வழங்கியது.

1954-ஆம் ஆண்டு நடைபெற்ற உலகச் சிறுகதைப் போட்டியில், உலக அளவில் இரண்டாவது பரிசைப் பெற்றவர் ஓர் இந்தியர் தான்.

சாகலாம் அல்லவா!" என்றார் ட்ரியானா ஆத்திரச் சிரிப்புடன்.

இதற்கும் பிரிதம்சிங் பதில் எதுவும் கூறாதது, ட்ரியானாவுக்குக் கோபாவேசத்தை உண்டாக்கியது. தமது பரிகாச வார்த்தைகளைக் கேட்டதும் பிரிதம்சிங் துள்ளி எழுவார், அவரது முகம் சிவந்துவிடும், கண்களில் கோபக் கனல் வீசும் என்றெல்லாம் ட்ரியானா எதிர்பார்த்தார்.

ஆனால் அதற்கும் பிரிதம்சிங் மசியவில்லை. அத்துடன் ட்ரியானாவும் அவரை விட்டுவிட விரும்பவில்லை.

"சுதந்திரம் அடைந்தும் நீங்கள் கண்டபலன் என்ன? வெள்ளக் கொடுமை, வஞ்சம், லஞ்ச ஊழல், பேராசை, அபரிமிதமான ஜன உற்பத்தி இவைதான். நாங்கள் இந்தியாவை விட்டுச் சென்றதிலிருந்து இங்கு ஒழுங்கா முறையா ஒன்றுமில்லை. அதிகார மமதை கொண்ட அரசியல்வாதிகள் அர்த்தமற்ற, பலனில்லாத தடபுடல் பிரசங்கங்களில் ஈடுபட்டிருக்கிறார்களே, அதுதான் நீங்கள் கண்ட பலன். இவ்வளவு கேவலமான நிலையில் உள்ள நீங்கள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் ஸ்தானம் வேண்டும் என்று கேட்கிறீர்களே. உங்கள் துணிச்சலை என்னவென்று சொல்வது? ஊழலும் அசுத்தமும் ஆபாசமும் நிறைந்த இடங்களில் வாழும் நீங்கள் உலகத்துக்கு உபதேசிக்கத் துணிவது கர்வம் பிடித்த செய்கையல்லவா? உலகம் என்ன செய்யவேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், என்றெல்லாம் யோசனை கூற உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது.?"

ட்ரியானாவின் சரமாரியான இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பிரிதம்சிங்கின் தோற்றம் பயங்கரமாக இருந்தது. அவரது கைகள் இறுகின. அவர் தமது இரு கைகளாலும் அப்படியே ட்ரியானாவின் குரல்வளையை இறுகப் பிடித்துவிடுவாரோ என்று தோன்றியது. எனினும் சில விநாடி நேரத்தில் பிரிதம்சிங் தம்மை ஒருவாறு சமாளித்துக் கொண்டார்.

ட்ரியானா கூறியதைச் சிறுதும் லட்சியம் செய்யாதவர்போல், "இரவுக்கு முன் நாம் பங்களா முகாமுக்குச் செல்ல வேண்டுமாயின், இப்போதே இங்கிருந்து புறப்படவேண்டும்" என்று அமைதியாகக் கூறிப் பேச்சை மாற்றினார்.

ட்ரியானா வசைமாரியில் ஈடுபட்டிருந்தபோது ஸ்ரீமதி ஜார்டன் கலக்கத்துடன் இருவருடைய முகங்களையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தாள். கடைசியாக, பிரிதம்சிங்கைச் சமாதானப் படுத்துவதற்காக ஏதாவது சொல்ல வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது.

"இந்தக் கோட்டையைப் பற்றிய வரலாறு மிகவும் விசேஷமாக இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அவ்விஷயமாக நீங்கள் ஏதாவது கூற முடியுமா பிரிதம்சிங்?"என்று இனிமையாகக் கேட்டாள் ஸ்ரீமதி ஜார்டன்.

அவளது அந்தரங்க நோக்கத்தை அறிந்துகொண்ட பிரிதம் சிங் அவளைப் பார்த்துப் புன்முறுவலுடன் சொன்னார்.

"இது ஒரு பண்டைய காலத்துக் கோட்டை, அவ்வளவுதான். ஆனால், இங்கு சுற்றியுள்ள கிராமங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய விசேஷங்கள் இருக்கின்றன. சுற்று வட்டாரத்தில் உள்ள கிராம மக்கள் முன்பெல்லாம் வருண பகவானுக்காக நரபலிகள் கொடுப்பது வழக்கம். ஆனால் இப்போது அவ்வழக்கம் சட்டபூர்வமாகத் தடுக்கப்பட்டிருக்கிறது. எனினும், தங்கள் வழக்கம் போல் நரபலி கொடுத்து வந்திருந்தால் இந்த பிராந்தியத்தில் இவ்வளவு கொடிய பஞ்சம் ஏற்பட்டிராது என்று கிராம மக்களில் பலர் இன்றும் நம்புகின்றனர்" என்று கூறினார் பிரிதம் சிங்.

இவ் விவரங்களைக் கேட்டதும் ஸ்ரீமதி ஜார்டன் அலறிவிட்டாள். அவள் மனத்தில் மிகுந்த பரபரப்பும் பீதியும் உண்டாயின.

"உண்மையில் அவர்கள் மனிதர்களைப் பலி கொடுத்தார்கள் என்றா சொல்கிறீர்கள்?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஜார்டன்.

"அவர்கள் எப்படி நரபலி கொடுத்திருக்க முடியும்?" என்று ஹெலன் பயத்துடன் வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

எல்லோரும் மறுபடியும் மோட்டாரில் ஏறிக்கொண்டு தங்கள் யாத்திரையைத் துவங்கினர்.

"நரபலி என்றதும் ஏன் இவ்வளவு பீதியடைய வேண்டும்? நூற்றுக்கணக்கானவர்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்காக ஒருவருடைய உயிரைப் பலி கொடுக்கலாம் என்பதே இந்தக் கிராமவாசிகளின் சித்தாந்தம். தங்களுக்கு ஒரு விதத்திலும் தீங்கு செய்யாதவர்களைக் கொன்று குவிப்பதற்காக இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குப் படைகளை அனுப்புவதை இங்குள்ள ஜனங்கள் காட்டுமிராண்டித்தனம் என்று கருதுகிறார்கள். அத்துடன் ஒப்பிடும்போது ஒருவரைப் பலி கொடுப்பது அவ்வளவு கோரமான காரியம் அல்ல என்றே தோன்றுகிறது... அதை யெல்லாம் பற்றி இப்போது பேசுவானேன்? இங்கு நரபலி நின்று வெகு காலமாகிவிட்டது."

இவ்விதம் பிரிதம்சிங் மோட்டாரை ஓட்டியவண்ணம் அந்தப் பெண்களின் கேள்விக்குப் பதிலளித்து வந்தார்.





பிரிதம் சிங் அவ்வாறு கூறியதைக் கேட்டதும் ட்ரியானாவுக்குக் கோபவெறி உண்டாகிவிட்டது.

"எழுதப் படிக்கத் தெரியாத மூடர்கள் கூட்டம் செய்யும் காட்டுமிராண்டித்தனமான நரபலிச் சடங்கையும், புத்திசாலித்தனமாகத் தீர்க்காலோசனையுடன் திட்டம் வகுத்து நடத்தும் நவீன யுத்தங்களையும் ஒப்பிட்டுப் பேசுகிறீர்களா?" என்று ஆத்திரத்துடன் கேட்டார் ட்ரியானா.

இதற்கும் பிரிதம் சிங் பதிலளிக்கவில்லை.

எனினும் பிரிதம்சிங்குக்கு ஒரு விஷயம் ஆறுதலளித்தது. புத்தம் புதிதான அந்தச் சிறந்த மோட்டாரை ஓட்டிச் செல்லும் வாய்ப்புக் கிடைத்ததே, அதுதான் அப்போது அவர் மனத்துக்குத் திருப்தியாக இருந்தது.

அதேசமயம் இந்த "தடியன் தன் பத்திரிகையில் என்னவெல்லாம் எழுதப் போகிறானோ" என்று பிரிதம்சிங் சிந்திக்கலானார்.

அவர்கள் போய்க்கொண்டிருந்த இடம் ஓரே பொட்டலாக இருந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் பசுமையான செடி, கொடி எதுவுமே காணக்கிடைக்கவில்லை. இரண்டொரு இடங்களில் தனியாக நின்றுகொண்டிருந்த மரங்களும் காய்ந்து கருகிக் கிடந்தன. ஆங்காங்கு பாழடைந்த சில குடிசைகளும் தென்பட்டன. அப்பிரதேசம் மனித சஞ்சாரமற்ற வனாந்திரத்தைப் போல் காட்சியளித்தது.

கடைசியாக அவர்கள் பங்களாவுக்குப் போய்ச் சேர்ந்தனர்.

பங்களாவின் வராந்தாவிலே அரைத் தூக்கத்துடன் நின்று கொண்டிருந்த கிழவன், அந்தப் புதிய மோட்டாரையும் அதில் இருந்தவர்களையும் ஆச்சரியத்துடன் பார்த்தான். அந்தப் பங்களாவில் எப்போதாவது தான் யாராவது வந்து தங்குவது வழக்கம். எனவே, அதிலிருந்த நாற்காலி, மேஜைகளெல்லாம் புழுதி மயமாகவே இருந்தன. கட்டில்கள் மீது யாராவது உட்கார்ந்தால், அவை 'கிரிச்' என்ற சப்தத்துடன் தள்ளாடித் தன் வயோதிகத்தைப் பறைசாற்றின. சிலந்திப் பூச்சிகளின் வலைகளும் ஏராளமாக இருந்ததிலிருந்து அங்கு வெகு . காலமாக எவரும் வந்து தங்கவில்லை என்பது தெரிந்தது.

பின்புறமாக மோட்டார் வாகனும் வந்து சேர்ந்தது. உடனே அதிலிருந்த வேலைக்காரர்கள் கீழே இறங்கி, புழுதியைத் தட்டி விட்டுக் கம்பளங்களை விரித்தனர். உணவுப் பொருட்களையும் தயாராக எடுத்துவைத்தனர்.

பங்காளாவில் ஒரு நாளும் இல்லாமல் விளக்கு எரிவதைக் கண்ட கிராம ஜனங்களில் சிலர் அருகில் வந்து வேடிக்கை பார்க்கத் தொடங்கினர். அவர்களுடைய குழிவிழுந்த கண்களையும், ஒட்டிய வயிறுகளையும், மிகவும் அசுத்தமான கந்தல் உடைகளையும் பார்த்தபோது, இறந்த ஏழைகளின் ஆவிகள்தான் அப்படி வந்து நிற்கின்றனவோ என்று தோன்றியது.

அவர்களை முதலில் பார்த்த ஹெலன் பயந்து கூக்குரலிட்டுவிட்டாள். உடனே மற்றவர்களும் அவள் பார்த்த திசையை நோக்கினர்.

ஆவிகளைப் போல் நின்று கொண்டிருந்த கிராமவாசிகளிடையே சில குழந்தைகளும் இருந்தன. குச்சிகள் போன்ற அவர்களுடைய கை கால்களையும், சோர்ந்த முகங்களையும், வீங்கிச் சரிந்திருந்த அவர்களுடைய தொந்திகளையும் பார்க்கவே சகிக்க முடியவில்லை.

அவர்களைப் பார்த்த ஹெலன், "ஐயோ, பாவம்" என்று அனுதாபப் பட்டாள்.

அவர்களைப் பார்த்த ட்ரியா

னாவுக்கு சந்தோஷம் தாங்கமுடிய வில்லை.

"இவர்களை நான் நாளைக்குப் புகைப்படம் எடுக்கப் போகிறேன். அந்தப் படங்கள் அபூர்வமானவை யாக இருக்கும் என்பதிலும் சந்தேகம் இல்லை."

இவ்விதம் சொல்லியவண்ணம் ட்ரியானா பிரிதம் சிங்கைப் பார்த்தார்.

"பிரிதம்சிங், நாளைக்கு இவர்களை நான் படம் எடுக்கப் போவதாகச் சொல்லுங்கள். எல்லோரையும்விட அதிகமாக ஒட்டி உலர்ந்த பெண்களையும் குழந்தைகளையும் கொண்டு வரச் சொல்லுங்கள். அவர்களுக்கு நிறைய "இனாம்" கொடுக்கிறேன். என்றும் தெரிவியுங்கள்" என்று சொன்னார் ட்ரியானா குதூகலத்துடன்.

இதைக் கேட்டதும், அங்கு நின்று கொண்டிருந்தவர்களில் வயதான ஒருவனிடம் பிரிதம்சிங் ஏதோ சொன்னார். உடனே அந்தக் கிழவன் ட்ரியானாவை வெறிக்கப் பார்த்தான். அந்தப் பார்வை ட்ரியானாவை என்னவோ செய்தது. எனவே, அவர் தமது முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டார்.

கிழவனும் பதிலுக்குப் பிரிதம் சிங்கிடம் ஏதோ முணுமுணுத்தான்.

உடனே பிரிதம்சிங் ட்ரியானாவைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னார்.

"நாளை சூரியோதயத்துக்குப் பிறகு நீங்கள் அவர்களுடைய குடிசைகள் இருக்குமிடத்துக்குச் சென்றால், நீங்கள் கேட்கும் நபர்களைக் காட்டுவதாக அவன் சொல்லுகிறான். நீங்கள் இன்னும் வேறு எதையாவது பார்க்க விரும்புகிறீர்களா என்று அவன் கேட்கிறான்."

"ஆமாம், ஆமாம். நான் ஒரு நரபலியைப் பார்க்க விரும்புகிறேன் என்று அவனிடம் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டு ட்ரியானா இடி இடியென்று சிரித்தார்.

எனினும், அப்போது பிரிதம் சிங் மௌனமாகப் பார்த்த பார்வையைக் கண்டதும் ட்ரியானாவின் சிரிப்பு நின்றுவிட்டது.

ஆவிகள் மறைவதுபோல் கிராமவாசிகள் ஒவ்வொருவராக இருளில் சென்று மறைந்தார்கள்.

அவர்கள் சென்றதும் ட்ரியானா கோஷ்டியினர் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

அந்தச் சூழ்நிலையில் ஹெலனுக்குச் சாப்பாடு இறங்கவில்லை. அவள் பிரிதம் சிங்கைப் பார்த்தாள். பிரிதம்சிங் காப்பியைத் தவிர வேறு எதையும் தொடவில்லை. ஸ்ரீமதி ஜார்டனும் சரியாகச் சாப்பிடவில்லை. ஏழைக் கிராமவாசிகள் சென்ற திசையில் சூழ்ந்திருந்த இருளையே அவள் மனஅமைதியின்றிக் கலக்கத்துடன் கவனித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது அவர்களில் உணவை ருசித்து வயிறு புடைக்கச் சாப்பிட்டவர் ட்ரியானா ஒருவர் தான்.

மறுநாள் பொழுது விடிந்தது. அன்று சூரியோதயம் ஆகும்போது உஷ்ணம் சகிக்கவில்லை.

காலை ஆகாரம் முடிந்ததும் ட்ரியானா "காமிரா" வைத் தோளில் மாட்டிக் கொண்டு புறப்பட ஆயத்தமானார்.

"வாருங்கள் பிரிதம்சிங், படம் பிடிக்கப் போகலாம்" என்றார்.

"நான் வரவில்லை."

இவ்விதம் பிரிதம்சிங் சாவதானமாகக் கூறியதைக் கேட்ட ட்ரியானாவுக்கு ஆத்திரம் பொங்கியது; முகம் சிவந்தது; நரம்புகள் புடைத்துக் கொண்டன; இரத்தக் குழாய்கள் திடீரென்று வெடித்து விடும்போல் தோன்றின.

"டாமிட்" என்று கத்தினார். "என்னுடன் கூட வருவதற்குத் தானே உங்களுக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள்?" என்று கூக்குரலிட்டார்.

"இல்லை, இல்லை. இப்பிரதேசத்தைச் சுற்றிக் காட்டுவது தான் என் வேலையேயன்றி, துர்ப்பாக்கியசாலிகளான ஏழைகளைப் படம் பிடிப்பதற்காக நான் உங்களுடன் வருவது முடியாத காரியம்" என்றார் பிரிதம்சிங்.

இவ்விதம் பிரிதம்சிங் கோபமின்றியும் நிதானமாகவும் கூறியது ட்ரியானாவின் ஆத்திரத்துக்குத் தூபம் போட்டது போலாகியது. ட்ரியானா மிகவும் கஷ்டப்பட்டுத் தம் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டார். அந்த நிலைமையில் அவர் வேறு என்ன செய்ய முடியும்?

உடனே அவர் மறுபேச்சு எதுவும் பேசாமல் தொப்பியை எடுத்துப் போட்டுக்கொண்டு வெகு வேகமாகப் புறப்பட்டார். "சுள்" என்று எரிக்க ஆரம்பித்து விட்ட வெய்யிலைக்கூட அவர் லட்சியம் செய்யவில்லை. அவரது மனதில் கோபமும் துவேஷமும் பொங்கிக் கொண்டிருந்ததால் அவர் தேகத்தில் வெகு நேரம் வரையில் வெய்யில் உரைக்க வில்லை.

அவர் சென்ற பாதை மேடும் பள்ளமாகவும் கரடு முரடாகவும் இருந்தது. மழையின்றி வயல்களில் பயிர்களெல்லாம் காய்ந்து கருகிக் கிடந்தன. மணல் பாங்கான ஆற்றங் கரையில் வறட்சி உஷ்ணத்தை அதிகப்படுத்தியது. அடிக்கடி அவருக்குத் தடுக்கி விட்டது.



வியர்வையினால் அவரது சட்டைகள் நனையத் தொடங்கின. வெய்யிலின் உக்ரத்தை மறைத்துக் கொள்வதற்காக அவர் தமது கைக் குட்டையை எடுத்து முகத்தின் மீது போட்டுக்கொண்டார்.

அவர் குடிசைகளுக்கு அருகில் சென்றபோது ஆடவர்களும் பெண்களும் அசைவற்றுப் படுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் தேகங்கள் எலும்பும் தோலுமாக இருந்ததால், அவர்களில் யார் இளமையானவர்கள், யார் வயதானவர்கள், யார் வயோதிகர்கள் என்பதையே தெரிந்து கொள்ள முடியவில்லை, ட்ரியானாவால் அவர்கள் எழுந்திருக்கவில்லை. ஏக காலத்தில் அவர்கள் எல்லோருடைய கண்களும் ட்ரியானாவையே ஊடுருவிப் பார்த்தன.

ட்ரியானாவுக்குச் சந்தோஷம் தாங்கமுடியவில்லை. வெகு காலமாக எதிர்பார்த்த அற்புதமான காட்சிகளைப் படங்கள் எடுக்கச் சந்தர்ப்பம் கிடைக்கப் போகிறது அல்லவா?

அங்கே படுத்துக் கொண்டிருந்த ஓர் இளம் பெண்ணை ட்ரியானா தட்டியெழுப்ப விரும்பினார். ஒட்டி உலர்ந்திருந்த அவள் உடல் முழுவதையும் மறைத்துக் கொள்வதற்கும் போதிய கந்தல் துணி கூட இல்லாமல் அவள் படுத்துக்கொணடிருந்தாள். அவள் தன் குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருப்பது போல் தோன்றியது.

ட்ரியானா குனிந்து பார்த்தார். அக்குழந்தை உயிரற்று அவளுக்கு அருகில் கிடப்பது அப்போதுதான் அவளுக்குத் தெரிந்தது. தோலாகக் கிடந்த அவள் தோளில் கை வைத்தார் ட்ரியானா.

அவ்வளவுதான் உடனே அந்த ஜனங்களிடையே ஏதோ மின்சார சக்தி பாய்ந்தது போன்றிருந்தது. அவர் கையைச் சட்டென எடுத்து விட்டு, சுற்றும் முற்றும் பார்த்தார். அவ்விடத்தில் அவ்வளவு ஜனங்கள் இருந்தும் அங்கு நிலவிய பயங்கரமான அமைதி ட்ரியானாவை என்னவோ செய்தது.

அதே சமயம் அங்கு படுத்திருந்த ஆடவர்களும் பெண்களும் ஏக காலத்தில் எழுந்தனர். அவர்கள் யாதொரு சந்தடியுமின்றி ஆவி உருவங்களைப் போல் ட்ரியானாவை நெருங்கி வந்தனர்.

அவர்களுடைய கண்கள் தம்மை ஊடுருவிப் பார்த்துக் கொண்டே நெருங்குவதை கண்ட ட்ரியானா கதிகலங்கிப் போனார். பயத்தினால் அவரது தேகம் முழுவதும் நடுங்கியது. மூன்று புறங்களில் குடிசைகள் தடையாக இருந்தன. எதிர்ப்புறத்தில் அவர்கள் நிமிஷத்துக்கு நிமிஷம் நெருங்கி வந்துகொண்டிருந்தனர். எனவே, ட்ரியானா ஓடித் தப்புவதற்கும் வழியில்லை.

ட்ரியானா பின்தாங்கிக் கொண்டே வந்தார். ஏக காலத்தில் அத்தனைப் பேருடைய கண்களும் ட்ரியானா மீது நிலைத்திருந்தன. அந்த நிலைமையை அவரால் சகிக்க முடியவில்லை.

தமக்கு முடிவு காலம் வந்து விட்டதாக அவருக்குத் தோன்றியது. அவர்களை எதிர்த்து நிற்பதற்குக் கையைத் தூக்கவும் அவருக்குச் சக்தியிராமல் போயிற்று.

திடீரென்று ட்ரியானாவுக்கு ஒரு யோசனை தோன்றியது. உடனே அவர் தமது பையை எடுத்தார். அதிலிருந்த கரன்சி நோட்டுகளைக் கிராம வாசிகளின் முன்னிலையில் வாரி இறைத்தார். "இந்தாருங்கள், இதையெல்லாம் எடுத்துக்கொள்ளுங்கள்" என்று கத்தினார்.



ஆனால் அந்த ஏழைகள் அவ்வளவு பெரிய தொகையையும் லட்சியம் செய்யவில்லை. எனவே, ட்ரியானாவை நோக்கி முன்னேறி வந்து கொண்டிருந்த அக்கிராம வாசிகளின் காலடிகளில் பெரும் தொகை பெறுமானமுள்ள அந்த நோட்டுகள் கேட்பாரற்றுக் கசங்கிச் சின்னா பின்னமாக கிடந்தன.

நம்ப முடியாத அந்தக் காட்சியைக் கண்ட ட்ரியானாவுக்குப் பாதி உயிர் போய்விட்டது.

"ஆபத்து, ஆபத்து! யாராவது உதவிக்கு வாருங்கள், உதவிக்கு வாருங்கள்" என்று பரிதாபகரமாக அலறினார்.

அந்தக் குரல் அவரது காதுக்குக் கூடச் சரியாக கேட்கவில்லை. அவர் வாயிலிருந்து கிளம்பிய வார்த்தைகள் வாய்க்குள்ளேயே மறைந்துவிட்டன.

அதேசமயம் கிராமவாசிகளின் முகங்கள் ட்ரியானாவுக்கு வெகு அருகில் வந்தன. திடீரென்று அவர்களுடைய கைகளில் கத்திகள் பளபளவென்று மின்னின.

'ஆ' வென்று அலறிய வண்ணம் ட்ரியானா கீழே சாய்ந்தார்.

உடனே ஆகாயத்தில் நாற்புறமும் கழுகுகள் வட்டமிடத் தொடங்கின.

ட்ரியானா மத்தியானம் சாப்பாட்டுக்கு வரவில்லை. அவர் வராததைக் குறித்துப் பங்களாவில் இருந்தவர்கள் கவலைப்படவில்லை. எனினும் எங்கிருந்தோ தம்பட்டங்களின் பயங்கரமான சத்தம் கேட்டபோது தான் அவர்களுடைய மனத்தில் கலக்கம் ஏற்பட்டது.

அவர்கள் ட்ரியானாவைத் தேடிச் சென்றபோது அவரது உடல் அடையாளம் தெரியாமல் சின்னா பின்னமாகிக் கழுகுகளுக்கும் காக்கைகளுக்கும் இரையாகிக் கொண்டிருந்தது.

> ## அறிவு ஒன்றுதான்!
>
> மனிதனை உயர்த்துவது பணமன்று; பதவியன்று; குலமன்று; பருமனன்று; உயரமன்று. அறிவு ஒன்றுதான் மனிதனை உயர்த்தும். "அறிவுடையார் எல்லாம் உடையார் என்கின்றார் திருவள்ளுவர்.
>
> - திருமுருக கிருபானந்தவாரியார்

அவர்கள் அந்த உடலைப் போர்த்தித் தூக்கிக் கொண்டு வந்து வாகன் மோட்டாரில் கிடத்தினார்கள்.

ட்ரியானாவுக்கு நேர்ந்த கதியைப் பார்த்து ஸ்ரீமதி ஜார்டன் அழுது புலம்பினாள். பீதி தோய்ந்த ஹெலனின் முகத்தைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. பிரிதம்சிங் மாத்திரம் அமைதியாக மோட்டாரை ஓட்டிக் கொண்டிருந்தார்.

ஹெலன் அடிக்கடி பிரிதம் சிங்கைப் பார்த்தாள். ட்ரியானா மரணத்தைப் பற்றிய மர்மத்தைப் பிரிதம்சிங்கிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் போலிருந்தது ஹெலனுக்கு.

எனினும் அவரைக் கேட்கும் துணிச்சல் அவளுக்கு ஏற்படவில்லை.

அவர்கள் மோட்டார் புறப்பட்ட சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தப் பிராந்தியத்தில் பல வருஷங்களாகப் பெய்து யாரும் கண்டறியாத பெருமழை பிடித்துக் கொண்டது.

மோட்டாரில் இருந்த மூவரும் ஒருவர் முகத்தை ஒருவர் மௌனமாகப் பார்த்தனர். பேரிகை முழக்கத்தைப் போல் அந்தப் பெருமழையின் சத்தம் அவர்களுக்கு இருந்தது.

நூற்றுக்கணக்கான மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் மழைக்காக எதையும் கொடுக்கலாம்'—என்று, வரும்போது பிரிதம்சிங் சொன்ன வார்த்தைகள் ஹெலனின் காதுகளில் இடைவிடாமல் ஒலித்துக் கொண்டிருந்தன.

**('பேரிகை முழக்கம்' என்ற இந்தக் கதை உலகச் சிறுகதைப் போட்டியை நடத்தும் பிரபலமான அமெரிக்கப் பத்திரிகையான நியூயார்க் ஹெரால்டு ட்ரிப்யூனுக்கு' அனுப்பப்பட்ட நான்கு கதைகளில் ஒன்று. இந்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றது. 1954-ல் கல்கி இதழில் வெளியான இக்கதையை ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்தவர் ஜெயமணி.)**



# நீரும் நிழலும்

- 'கங்கைகொண்டான்'

'முத்தொள்ளாயிரம்' பண்டைத் தமிழிலக்கிய வரிசையில் குறிப்பிடத்தக்க சிறப்புடையது.

எதுகை மோனை கெடாத பெருமையோடு, எண்ணும்போதே இனிக்கும் தன்மையோடு கூடிய வெண்பாக்களின் தொகுப்பு நூல் இது. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மூவருமே பாட்டுடைத் தலைவர்களாகப் போற்றப்பட்டிருக்கிறார்கள் இந்நூலில்.

அத்தனை வெண்பாக்களும் ஒரு புலவரே பாடியவை என்றும், வெவ்வேறு புலவர் பெருமக்கள் பாடியவை என்றும் பல்வேறுவிதமான கருத்துக்கள் இன்னும் முற்றுப் பெறாமல் இருக்கின்றன. அந்தப் புலவர் அல்லது புலவர்களின் பெயர்- ஊர்- காலம் எதுவுமே தெரியவில்லை.

'சேரன், சோழன், பாண்டியன் இவர்கள் மீது பாடிய தொள்ளாயிரம் தொள்ளாயிரமான மூன்று தொள்ளாயிரங்களும் சேர்ந்து ஒரு நூலாகி முத்தொள்ளாயிரம் என்ற பெயரோடு வழங்கி வந்தது.... இந்த விதமாக இரண்டாயிரத்து எழுநூறு (2700) பாடல்களை உதவிப் போனார் கவிஞர்' -என்கிறார் ரசிகமணி டி.கே. சிதம்பரநாதனார்.

இந்தப் பெயர்க் காரணத்திலும் ஒரு முரண்பட்ட கருத்து



உண்டு. பேராசிரியர் சு. வையாபுரிப் பிள்ளையவர்கள் மூவேந்தர் ஒவ்வொருவர் மீதும் முந்நூறு (300) செய்யுட்களே இயற்றப்பட்டன என்கிறார்.

இவ்விரண்டு கருத்துகளில் எது சரி என்கிற வினா எழுமேயானால், பின்னவர் கருத்தே சரி என்பர் கற்றறிவாளர்கள். இதற்கு அவர்கள் எடுத்துக்காட்டும் காரணம்- இலக்கண விளக்கப் பாட்டியல் உரையில், இந்த வகையான நூற்களின் செய்யுட் பேரெல்லை ஆயிரத்தை மீறக்கூடாது எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

முத்தொள்ளாயிரத்தில்- முதலாமவர் சொன்னபடி 2,700 பாடல்களோ இரண்டாமவர் சொன்னபடி 300 பாடல்களோ கிடைத்தனவா என்றால் அதுதான் இல்லை. 108 வெண்பாக்கள் மட்டுமே கிடைத்திருக்கின்றன. அவைகளும்கூட, உரையாசிரியர்களின் மேற்கோள்களாலும் யாரோ தொகுத்த புறத்திரட்டின் வழியாகவுமே கிடைத்துள்ளன!

அவைகளில் பாண்டியனைப் பற்றியவை 56 வெண்பாக்கள்; சோழன்மேல் பாடப்பட்டவை 30; சேரன் மீதானவை 21.

முத்தொள்ளாயிரம் பாடல்கள் முத்தான தமிழுக்குச் சத்தான விதத்தில் அமைந்திருப்பவை; இதனை உணர்ந்து நூல் வடிவில், அச்சில் முதன்முதலாக முத்தொள்ளாயிரத்தைப் பதிப்பித்து வெளியிட்ட பெருமையாளர் இரா. இராகவையங்கார் ஆவார். ஆம். அவரால்தான் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் மூலமாக இந்நூல் கி.பி. 1905ல் வெளியிடப்பட்டது; அடுத்த முப்பதாண்டுகளின் பின்னே, அதன் இரண்டாம் பதிப்பு வெளிவந்தது; இவ்விரண்டும் மூலம் மட்டுமே கொண்டவை.

கி.பி. 1938ல் பேராசிரியர் சு. வையாபுரிப் பிள்ளையால் வெளியிடப்பட்ட அதில் ஒரு கடவுள் வாழ்த்துப் பாடலும் இணைக்கப்பட்டிருந்தது.

இதற்கெல்லாம் பிறகுதான் 'முத்தொள்ளாயிரம்' விளக்க உரையோடு டி.கே. சிதம்பரநாத முதலியார், ந.சேதுரகுநாதன், முத்துக்கணேசனார், ந. சுப்பு ரெட்டியார் போன்றோரால் தொகுத்து வெளியிடப்பட்டது.

முத்தொள்ளாயிரத்தில் அந்நாளைய அகமும், புறமும் அப்படியே நமக்குப் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன; அகம் என்றால் பெண்பால் கைக்கிளை மட்டும்; புறம் என்பது மாமன்னர்களின் நாடு, ஆட்சி, வீரம், வெற்றி கொடைச் சிறப்பு போன்றவை.

வெண்பாக்கள் தோறும் எந்த மன்னவன் பெயரும் தனிப்படக் குறிப்பிடப்படவில்லை; குடநாடன், வஞ்சிக்கோ, பூழியர் கோ, கொல்லியர் கோ என்றெல்லாம் சேரன் குறிப்பிடப்படுவான்.

உறந்தையர் கோன், கோழிக் கோன், வளவன், செம்பியன் என்றெல்லாம் சோழன் கூறப்படுவான்.

மாறன், தென்னன், செழியன், கடுங்கோன், பொதியிற்கோமான், வைகையார் போன்றெல்லாம் பாண்டியன் சொல்லப்படுவான்.

ஆனால் ஒன்று; பாடல்களில் வருகின்ற கதாபாத்திரங்கள் யாவும் நாடகத் தமிழுக்கு நயம் சேர்ப்பவைகளாகவே அமைந்திருப்பது ஒரு தனிச் சிறப்பாகும்.

'முத்தொள்ளாயிரம்' இயற்றப்பட்ட காலம் பற்றிய அறிஞர் கருத்துகளும் பலவாகவே இருக்கின்றன. சிலர் இதைச் சங்ககாலத்தியது என்பர்; பலரும் அதில் வரும் சொல்லாட்சிகளை எடுத்துக்காட்டி, சங்க காலத்திற்குப் பிந்தியதே என்பர்.

இப்படிப் பலரும் பலவாறாகக் கருத்தறிவித்துள்ளனர்.

எது எவ்வாறாயினும் என்றும் இளமை, எப்போதும் இனிமை உடைய வெண்பாக்களின் தொகுப்பே முத்தொள்ளாயிரம் என்பதை மறுப்பாரில்லை.

அத்தகு சிறப்பினதாகத் தித்திக்கும் முத்தொள்ளாயிரத்தின், ஒரே ஒரு பாடலைத் தோலுரித்து உங்களுக்குச் சுவைக்கத் தருவதில் நான் மகிழ்கிறேன். எளிய என் தமிழ்நடை உங்கள் இதயத்தை இதமாக வருடும் என்கிற நம்பிக்கை எனக்குப் பெரிதும் உண்டு.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்க்கலாமா?

வாருங்கள் என்னோடு!

தான் பிறந்தபோது... தன்னைத் தொட்டிலில் கிடத்திப் பெயர் சூட்டியபோது... அந்த ஊர் மக்களெல்லாம் உவகை பூக்க வந்திருந்து, கண்டு வாழ்த்திக் கொண்டாடினார்களாம்; பிறர் சொல்லக் கேட்டிருக்கிறாள் அந்தப் பேரழகி!

தான் பள்ளியில் சேர்க்கப்பட்டபோது... பருவமடைந்தபோது... அந்த ஊரே வாழ்த்தியது; இதை நேரில் கண்டு களித்திருக்கிறாள், அந்த நேரிழை!

சின்ன வயதில் தன்னைச் சிங்காரித்தும் சிரிக்கவைத்தும் மகிழ்ந்த அந்த ஊரார், தங்கமேனி கொண்ட மங்கையானபோது-நாணம் பொங்க அவளைக் கேலி செய்து குதூகலிக்கும் அந்த ஊரார்- இப்போது அவளுடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருந்தார்கள்.

காரணம் இதுதான்-

நகர்வலம் வந்த சேர மன்னனைக் கண்ட மாத்திரத்திலேயே தன் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டிருந்தாள் அந்த ஓவியப் பாவை. மணந்தால் அவனையே மணப்பது என்கிற அளவுக்குக் கனிந்துபோயிருந்தது அவள் காதல். காதலால் மட்டுமே கரம்பற்றி இல்லறம் கண்டுவிட முடியுமா?

தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள் அவள்; 'முடியாது' என்றது உள்ளம். அப்போதுதான் அவளுக்கு ஊர்மக்கள் நினைவுக்கு வந்தார்கள்.

தன் நலத்திலும் உவப்பிலும் பெரிதும் நாட்டங்கொண்ட அவ்வூர் மக்கள் இவ்வகையிலும் தனக்கு உதவுவார்கள் என்று நம்பினாள். தன்னைப் பலவகையிலும் கொண்டாடிய அவர்களெல்லாம் தனக்குமுன் இருப்பதாகக் கருதிக்கொண்டு, அத் தையலாள் காதலால் கசிந்துருகிக் கண்ணீர் மல்கிப் பேசலானாள்.

"தீத்திக்குந் தெள்ளமுதாய்த்
தெள்ளமுதின் மேலான
முத்திக்கனியே என் முத்தமிழே!"

- தமிழ்விடுதூது

"எல்விதப் பேதமும் கருதாமல் எல்லார்க்கும் உதவுகின்ற நீரும் நிழலும் போன்ற என் அருள்மிக்க பெருமக்களே! களம் புகும் வெறியோடு காணப்படுகின்ற பெரிய யானை மீது அமர்ந்துவந்த சேர மன்னனின் தோள் சேர்ந்து இன்பம் துய்க்கத் துடிக்கிறேன் நான். அதே நினைவாக அலைமோதும் என் காதல் நெஞ்சில் அமைதி தேங்க உதவி புரியுங்கள்; அவனோடு சேர்ந்து வாழ்ந்தின்புற வகை செய்யுங்கள்; உயிர்வாழ உதவுங்கள்!".

அவளுடைய- காதல் போதைப் புலப்பத்தை நமக்குத் தெரிவிக்கும் கரும்பு நிகர் அப்பாடல் இதுதான்:

'நீரும் நிழலும்போல்
நீண்ட அருளுடைய
ஊரீரே என்னை
உயக்கொண்மின்!- போரிற்(கு)
உழலுங் களியானைப்
பூழியர்கோக் கோதைக்(கு)
அழலும்என் நெஞ்சம்
கிடந்து!'

- அருஞ்சொற் பொருள்:

நீண்ட: பெரு [illegible]. உயக்கொள்மின்: உயிர்வாழ உதவிடுவீர். களியானை: [illegible] யானை. பூழியர் [illegible] சேர நாட்டு [illegible] கோதை. அழலும்: [illegible]

## ஒருமைப்பாடு ஏற்பட...

**தமிழ் மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அது மனங்கவரும் ஓர் இனிய மொழி. தமிழ் மக்களுள் பண்டை நாளிலும் இந்நாளிலுங்கூடப் பல அறிஞர் இருந்தனர் - இருக்கின்றனர் என்பது அம்மொழியின் அமைப்பாலும் பயிற்சியாலும் அறிய முடிந்தது. இந்தியாவில் ஒருமைப்பாடு ஏற்படவேண்டுமானால் சென்னை மாநிலத்திற்கு அப்புறமுள்ளவரும் தமிழ் உணர்தல் வேண்டும்.**

**—அன்னால் காந்தியடிகள்.**

# உண்மை என்பது எது?

- எம்.கே. கோபிநாதன்



எனக்குத் தாய்மொழி தமிழ்தான்
உறவுடன் வளர்ந்தது ஆங்கிலம்!
நீச்சு மொழி என்று நான் அதை
நிராகரிக்கவில்லை;
மொழி அனைத்தும் உலகத்தாய் வயிற்றுப்
பிள்ளைகள் தானே?

நானா எழுதுகின்றேன்
இல்லை-
எனக்குள் ஏதோ ஒன்று
எழுத வைக்கின்றது!

காணாப் பொருளாகி கனலாகி,
என் மூச்சில் இடம் பிடித்து...
மூளையைக் காதலித்து
பேனா முனையிலிருந்து பேசுகின்றது;
அது தான் உண்மை!

இவைகள் கவிதைகள்தான்
என்றால் சுவையுங்கள்-
கானல் நீர் என்றால்
விட்டுவிடுங்கள்;
சொர்க்கம் என்றால்
புகுந்து விடுங்கள்-
நரகம் என்றால்
என்னை மன்னித்து விடுங்கள்!





# எங்கள் ஊர் பிரச்சினை

### பிரச்சினை:

எங்கள் ஊர் சீர்காழி தாலுகாவில் கொள்ளிடம் ஒன்றியத்தில் உள்ள புளியந் துரை.புளியந்துரையையும் புதுப்பட்டிணத் தையும் இணைக்க இடையில் உப்பனாற்றில் ஒரு பாலம் அமைத்துக் கொடுத்தால் இரண்டு ஊர் மக்களுக்கும் நல்லதாக இருக்கும். பழையாற்றில் இருந்து சிதம்பரம் கொள்ளிடம் செல்லவும் 10 கி.மீ. தூரம் குறையும். எனவே உப்பனாரில் ஒரு நல்ல பாலம் அமைத்துத்தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

எஸ். முருகேசன்,
புளியந்துரை

### தீர்வு:

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புளியந்துரை மற்றும் புதுப்பட்டினத்தை இணைத்து உப்பனாற்றில் [ஆற்றின் அகலம் 30 மீ.] பாலம் அமைக்க வேண்டுமாயின் தோராய மதிப்பீடு ரூ.50 இலட்சம் ஆகும். ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ரூ.5 இலட்சத்திற்கு மட்டும் வேலைகள் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளதால் இப்பாலம் கட்டும் பணியினைத் தற்போது செய்ய வாய்ப்பில்லை என்றும், அரசிடமிருந்து ஒதுக்கீடு பெற்று அடுத்துவரும் ஆண்டுகளில் செய்யப்படும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

டாக்டர் க. அருள்மொழி, இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித்தலைவர்,
நாகை காயிதேமில்லத் மாவட்டம்

### பிரச்சினை:

எங்கள் ஊரில் உள்ள தொலைக்காட்சிக் கட்டடம் பாதி கட்டி இடையில் கட்டாமல் இருக்கிறது. எனவே எங்கள் கிராம மக்கள் தொலைக்காட்சி பார்ப்பதற்கு மிகவும் சிரமப் படுகின்றனர். ஏனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனே நடவடிக்கை எடுக்கு மாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கே. கருப்பையா
கொன்னக்காடு
அரசர் குளம் அஞ்சல், அறந்தாங்கி வட்டம்.

### தீர்வு:

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் நாட்டுமங்கலம் ஊராட்சியில் உள்ள கொன்னக்காடு கிராமத்தில் தொலைக்காட்சிப் பெட்டி அறை கட்டும் பணி தற்போது சென்ட்ரிங் வேலை நடைபெற்று வருகிறது. இன்னும் ஒரு வார காலத்தில் முழுமையாக கட்டடம் கட்டும் பணி முடிக்கப்படும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

அ. பழனியாண்டி
ஆணையர் (பொறுப்பு)
ஊராட்சி ஒன்றியம்
அறந்தாங்கி.

### பிரச்சினை:

எங்கள் ஊர் புளியமரத்துக்கோட்டை யில் சுமார் 5000 மக்கள் வசிக்கின்றனர். இதில், குறிப்பாக படித்தவர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் அதிகம் உள்ளனர். எனவே, மாணவ, மாணவிகள் தங்களின் பொது அறிவை வளர்த்துக்கொள்ள ஒரு "கிளை நூலகம்" இங்கு இல்லை. எனவே, ஒரு கிளை நூலகத்தை அமைத்துத் தர வேண்டுகிறோம்.

கு. சக்திவேல்
பொருளாளர்,
இளைஞர் நற்பணி மன்றம்
புளியமரத்துக்கோட்டை அஞ்சல்
வேடசந்தூர் வழி,
திண்டுக்கல் மாவட்டம்

### தீர்வு:

பொது நூலகச் சட்டம், 1948ன் படியும், அரசாணையின் படியும் 5000 மக்கட்தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில் மட்டுமே கிளை நூலகம் திறக்க அரசு வழிவகை செய்துள்ளது, 1991ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி புளியமரத்துக் கோட்டை கிராமத்தின் மக்கட்தொகை 3,937 மட்டுமே. ஆகையால் இக்கிராமத்தில் அரசு விதிமுறைகளின்படி கிளை நூலகம் திறக்க வழிவகையில்லை. இருப்பினும் அவ்வூர் பொதுமக்களின் மிகுந்த ஆர்வத்தைக் கருத்தில் கொண்டு கீழ்க்காணும் நிபந்தனைகளை அவ்வூர் பொதுமக்கள் நிறைவேற்றித் தரும்பட்சத்தில் ஒரு பகுதி நேர நூலகம் திறக்க வாய்ப்பு உள்ளது என்று அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. நூலகம் உடனடியாகத் திறக்க வாடகையில்லாத இலவசக் கட்டடம் தருதல் வேண்டும்.

2. பின்னால் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 5 சென்ட் காலிமனை மாவட்ட நூலக அலுவலரின் பெயருக்குப் பத்திரப்பதிவு செய்து தருதல் வேண்டும்.

3. ரூ.2000 மதிப்புள்ள தளவாடச் சாமான்கள் இலவசமாக அளிக்கப்படுதல் வேண்டும்.

4. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. ரூ.1000 விதம் செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து கொடுக்கும் பட்சத்தில் திண்டுக்கல் மாவட்ட நூலக அலுவலருடன் தொடர்பு கொண்டால் ஒரு பகுதி நேர நூலகம் திறக்க வகை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரா. கண்ணன்,
பொது நூலக இயக்குநர்

## பிரச்சினை:

எங்கள் கிராமத்தில் ஒரு தொலைக் காட்சிப் பெட்டிகூட இல்லை. அதனால் எங்கள் கிராம மக்கள் நாட்டின் நடைமுறைகள் அறியாத ஜீவன்களாக இருக்கின்றனர். ஆதலால் அவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்ட நான் விரும்புகின்றேன். (எங்களது கிராமத்தில் விழிப்புணர்ச்சி பெற்றவர் எவரும் இல்லை) ஆதலால் பொதுத் தொலைக்காட்சிப்பெட்டியைப்பெற்றுத்தரும் படி மிகவும் பணிவன்புடன் நானும் எங்கள் ஊர்ப் பொதுமக்களும் கேட்டுக்கொள்கிறோம்.

எஸ். மணிக்கண்ணன்,
மற்றும் ஊர் பொதுமக்கள்
பெரியாத்துக்குறிச்சி அஞ்சல்.

## தீர்வு:

ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பெரியாத்துக்குறிச்சி கிராமத்திற்கு 24.8.90ல் வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி ஒன்று வழங்கப்பட்டது. தற்பொழுது இந்தத் தொலைக்காட்சிப் பெட்டி பழுதடைந்து அரியலூர் வானொலி மேற்பார்வையாளர் அலுவலகத்திற்குப் பழுது நீக்கம் செய்ய அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விரைவில் தொலைக்காட்சிப்பெட்டியைப்பழுது நீக்கம் செய்து பெரியாத்துக்குறிச்சி ஊராட்சியில் இயங்கச் செய்ய நடவடிக்கை மேற்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சி. ஆரோக்கியசாமி
ஆணையர்
ஊராட்சி ஒன்றியம், ஆண்டிமடம்

## பிரச்சினை:

புளியம்பேட்டை எனும் எங்கள் ஊர் குடந்தையிலிருந்து 5வது கி.மீல் மயிலாடு துறை மார்க்கத்தில் அமைந்துள்ளது. இதில் புதிதாக சுமார் 500 வீடுகள் முன்பு தேப்பெருமாநல்லூர் கிராமத்தில் சேர்க்கப் பட்டிருந்த வயலில் கட்டப்பட்டுள்ளன. பழைய கிராமவாசிகள் சுமார் 500 குடும்பங்கள் உள்ளனர். மொத்தத்தில் ஆயிரம் குடும்பங்கள் இவ்வூரிலிருந்தும் இவ்வூருக்கென்று தனித்த தபால் நிலையம் மற்றும் அரசாங்க நியாயவிலைக்கடை இல்லாததால் நாங்கள் அனைவரும் வெளியில் முகவரி தரும்போது 3 முகவரிகளை ஓரிடத்திலுள்ள வீட்டிற்கு அளிக்க வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகியுள்ளோம்.

எங்கள் பகுதியில் இடம் வழங்கு கின்றோம் என்று கூறியும், முறையீடு செய்தும், தபாலை மதியம் 1 மணிக்கும், அத்தியாவசியப் பண்டங்கள் 2 கி.மீ. சென்றும் வாங்கும் அவலநிலைக்கும்ஆளாகி யுள்ளோம். மேலும் குடும்ப அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியும், அஞ்சல் முகவரியும் பேருந்து நிறுத்த முகவரியும் முற்றிலும் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருப்ப தால் பல இடங்களில் நம்ப மறுத்து கேள்விக்கணைகளைத் தொடுக்கின்றனர். (குறிப்பாக கடன் வழங்கும் வங்கி, வேலை வாய்ப்பு அலுவலகம், இதர அரசு அலுவல கங்கள்).

எனவே, எங்கள் ஊருக்கென்று தனியாக ஓர் அஞ்சல் நிலையம் மற்றும் நியாய விலைக்கடை நிறுவ ஏற்பாடு செய்யுமாறு எல்லோர் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்.சுந்தரவேலு
அரவிந்தன்நகர்

## தீர்வு:

தேப்பெருமாநல்லூர் அங்காடியில் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளில் 147 குடும்ப அட்டைகள் மட்டுமே புளியம்பேட்டைப் பகுதியில் அடங்கியுள்ளது. மற்றவர்கள் ஏற்கெனவே கும்பகோணம் நகராட்சிப் பகுதியில் குடும்ப அட்டை பெற்று வசித்து வந்து தற்பொழுது குடிபெயர்ந்துள்ளனர். அவர்களுக்கு நகராட்சிப் பகுதியில் கூடுதல் மண்ணெண்ணெய் பெறுவதற்கு வாய்ப்பு உள்ளதால் தங்களது குடும்ப அட்டைகளை தேப்பெருமாநல்லூர் அங்காடிக்கு மாற்றிக் கொள்ளவில்லை. இந்த அட்டைகள் அனைத்தும் புதிய கணக்கெடுப்பில்



தேப்பெருமாநல்லூர் அங்காடியில் சேர்க்கப்படும்பொழுது புளியம்பேட்டைக்கு பகுதிநேர அங்காடி துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும். இது தொடர்பாக இவ்வலுவலக ந.க.117966/96 எம்9 பிரிவில் கோப்பு நடவடிக்கையில் உள்ளது.

புளியம்பேட்டை கிராமத்தில் புதிய தபால்நிலையம் திறப்பது பற்றிய ஆய்வை மிகவும் கவனமாக மேற்கொண்டபோது, அவ்வூரின் மக்கள் தொகையும், தூரமும் தபால்துறையும் நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டளவுக்கு எட்டவில்லை. எனவே, புளியம்பேட்டையில் புதிய தபால் நிலையம் திறக்க இயலாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வி.கு. ஜெயக்கொடி, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர்.

## பிரச்சினை:

அரியலூர் நெடுஞ்சாலைப் பிரிவின்கீழ் உள்ள விக்ரமங்கலம் கடம்பூர் நெடுஞ் சாலைத் துறை சாலையில் மருதையாற் றுக்கு குறுக்கே கி.மீ.5/6ல் தரைப்பாலம்கட்ட பரிந்துரை செய்யப்பட்டு, பகுதி 2 திட்டத் தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளதாக அரசு கடித எண் 4774S/9/2/86-87, 7.4.87ல் தெரிவிக்கப் பட்டுள்ளது. இது விஷயமாகப் பலமுறை கோரிக்கைகள் அனுப்பி அரசின் கடித எண் 96013/H/S-1/90-91, 1.10.90 கடிதத்தில் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணித் தொகுப்பு பட்டியலில் இடம் பெற்றுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது.துரதிர்ஷ்டவச மாக 30.1.91ல் ஆட்சி கலைக்கப்பட்டதால் இந்த பாலம் கட்டும் வேலை கடந்த ஐந்து ஆண்டுகளாகச்செயல்படுத்தப்படவில்லை.

இந்த ஆற்றுக்கு வடக்கு தெற்கில் உள்ள 15 கிராம மக்களுக்கு பயன்படும் வகையிலும், இந்த பிற்படுத்தப்பட்ட பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று செயல் படுத்தும் வகையிலும், மருதையாற்றுக்குக் குறுக்கே பாலம் கட்ட, தொழில்நுட்ப அங்கீ காரமும், நிதி ஒதுக்கீடும் செய்து உத்தர விட்டு 1996-97ல் பாலம்கட்டுவதைச்செயல் படுத்தக் கோருகிறேன்.

மு. சோமசுந்தரம்,
முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்,
கோமான் ஊராட்சி,
கடம்பூர் அஞ்சல், (வழி) அம்பாப்பூர்,
திருச்சி மாவட்டம்.

## தீர்வு:

விக்ரமங்கலம் கடம்பூர் சாலை இக்கோட்ட பராமரிப்பில் உள்ள ஒரு அரசு இதர மாவட்ட சாலையாகும். இச்சாலையின் நீளம் கி.மீ.0/05/6 ஆகும். இச்சாலை மருதையாற்றின் வடகரையில் முடிகிறது. தா.பழூர் ஊராட்சி ஒன்றிய எல்லையில் உள்ளது.

இவ்விடத்தில் மருதையாற்றின் அகலம் சுமார் 100 மீட்டர் ஆகும். மருதையாற்றின் தென்கரையில் குருபாடி கடம்பூர் சாலை உள்ளது. இதன் நீளம் 3.60 கி.மீ. இச்சாலை வரையறுக்கப்படாத சாலையாகும். இது திருமானூர் ஒன்றிய எல்லையில் உள்ளது. இவ்விடத்தில் தாம்போதி அமைக்கப்பெற்றால் திருமானூர் மற்றும் தா.பழூர் ஒன்றியத்திற்கு இணைப்புச் சாலையாக அமைவதோடு தஞ்சை செல்வதற்கும் இது முக்கியமாகவும் பயன்படும். மேலும் விக்ரமங்கலம், கடம்பூர், கோமான் குருபாடி அழகிய மணவாளம், தூத்தூர் மற்றும் இதனைச் சுற்றியுள்ள கிராம மக்கள் தங்கள் விளைபொருட்களை அருகிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு எடுத்துச்செல்ல ஏதுவாக இருக்கும். இப்பாலம் அமைக்க தோராயமாக ரூ.150 இலட்சம் தேவைப்படும். 1998-99ம் ஆண்டு பகுதி 2 திட்டத்தில் சேர்த்து அரசுக்குப் பரிந்துரை செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கே. பழநிச்சாமி
கோட்டப்பொறியாளர் (நெஉபை),
திருச்சி-20

## பிரச்சினை:

எங்கள் ஊர் பூவனூர் கிராமம். இது மலைவாழ் மக்கள் மற்றும் ஆதிதிராவிடர் ஆகியோர் வசித்து வரும் கிராமம். எங்கள் ஊரிலிருந்து பஸ் ஸ்டாண்டிற்கு 1 கி.மீ. தூரம் செல்ல வேண்டும். அந்தச் சாலை மிகவும் பழுதடைந்து உள்ளதால் இரவு நேரங்களில் ரோட்டில் வர முடியவில்லை. மழை காரணமாகத் தண்ணீர் நிற்கிறது. எங்கள் பஞ்சாயத்து ஐந்து வருட காலமாக இன்னும் புதுபிக்கவில்லை. இதனால் எங்கள் கிராம மக்கள் மிகவும் அவதிக் குள்ளாகிறார்கள். இந்த நிலைமையைப் போக்க அரசு நடவடிக்கை எடுத்து தீர்த்து வைக்கக்கேட்டுக்கொள்கிறேன்.

பி.ஏ.எஸ். அர்ச்சுனன்,
பூவனூர் அஞ்சல்
சுக்கம்பட்டி வழி,
சேலம்.

## தீர்வு:

அயோத்தியாப் பட்டணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பூவனூர் கிராமமானது சேலம் திருப்பத்தூர் சாலையிலிருந்து 0/6 கி.மீ. தொலைவில், பூவனூர்

வை.தாதனூர் சாலையானது கி.மீ. 0/0 முதல் 2/4 வரையிலான 2.4 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி சாலையாகும்.

இதில் கி.மீ. 0/0 முதல் 0/6 வரையிலான சாலை தார்சாலையாகவும், எஞ்சிய பகுதி ஜல்லி சாலையாகவும் உள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட தார்சாலை அமைக்கப்பட்டு எட்டு ஆண்டுகள் ஆகிறது. ஜல்லிசாலை அமைக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளாகிறது. இச்சாலை பூவனூர் ஊராட்சி சாலையாகும். இதனைத் தார்சாலையாகப் புதுப்பிக்க ஊராட்சியில் போதிய நிதி வசதியில்லை. மேலும், தார்சாலையை புதுப்பிக்க வேறு திட்டங்களிலும் பணி மேற்கொள்ள வழிவகைகள் இல்லை.

இச்சாலையில் ஒருசில இடங்களில் சிறுசிறு குழிகளே உள்ளன. இவற்றால் வாகனப் போக்குவரத்திற்கு எவ்வித இடையூறும் இல்லை. எனினும், எதிர்வரும் ஆண்டு இச்சாலையை ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் தார் சாலையாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

க. முத்துசாமி, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம்

## பிரச்சினை:

ஒட்டன்சத்திரம் தாலுகா விருப்பாட்சி கிராமத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க வாராந்திரச் சந்தை நடைபெற்று வந்தது. தற்சமயம் மேற்படி சந்தை நடைபெற வில்லை.

முன்னாள் மாவட்ட ஆட்சியர் திருமிகு பிச்சாண்டி, ஐ.ஏ.எஸ்., அவர்களின் நிர்வாகத்தில் இந்த வாரச்சந்தையைப் புதுப்பித்து, மீண்டும் நடைபெறச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஊராட்சி மன்றங்களின் தேர்தல்கள் முடிவு பெற்ற நிலையில், ஊராட்சிக்கு நல்ல வருமானமும், மக்களுக்கு வேலை வாய்ப்பும் மீண்டும் இந்த வாரச் சந்தையைப் புதுப்பித்து நடைபெறச் செய்வதால் ஏற்படும். இதற்கு மக்களின் ஒத்துழைப்பும் அதிகம் கிடைக்கும் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

ஜி. ராஜா,
தலைவர்,
தமிழ் மாநிலக் காங்கிரஸ் கிராமக் கமிட்டி
விருப்பாட்சி அஞ்சல்
மன்னர் திருமலை மாவட்டம்.

## தீர்வு:

ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம் விருப்பாட்சி ஊராட்சி விருப்பாட்சியில் ஏற்கெனவே வாராந்திர சந்தை நடைபெற்று வந்த இடம் தற்பொழுது காலியிடமாக உள்ளது. இந்த இடம் சர்வே நம்பர் 136ன் படி 2.86 எக்டேர் 135/2 சர்வே எண்ணின்படி 0.01.0 மற்றும் சர்வே எண்.137/1ந் ன்படி 0.04.5 எக்டேராக 2.91.5 எக்டேராகவும் ஏக்கர் அளவில் 7.2 ஆகவும் உள்ளது. அந்த காலியிடத்தில் பிற்காலத்தில் சந்தைகளில் கடைகள் வைத்து வியாபாரம் செய்வதற்காக 12 கட்டடங்கள் உள்ளது. இவற்றில் ஓடு வேய்ந்துள்ள கட்டடங்கள் ஓடுகள் பலவீனமாக உள்ளது. ஆஸ்பெஸ்டாஸ் சீட் வேய்ந்துள்ள கட்டடங்களில் மேற்கூரை நல்லமுறையில் உள்ளது. இது அண்மையில் இதே இடத்தில் நுழைவாயிலின் கிழக்கு திசையில் கால்நடை மருத்துவமனையில் 1993-94ம் ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு தற்போது கிளைக்கேந்திரா நிலையமாக காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இயங்கி வருகிறது. மற்ற இடங்கள் காலியாக உள்ளது. இதே இடத்தில் மேற்குப்பகுதியில் சமூக நல காடுகள் திட்டத்தின்கீழ் நர்சரி ஒன்று நிர்மாணிக்கப்பட்டு அவற்றில் மரக்கன்றுகளும் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதற்கான ஆழ்துளைக்கிணறு ஒன்றும் போடப்பட்டு மின்மோட்டார் வைத்து நீர் எடுக்கப்பட்டு மேற்சொன்ன நர்சரிக்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இடம் சுற்றிலும் முற்காலத்திலேயே காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டு பாதுகாப்பான முறையில் உள்ளது.

இது முந்தைய மதுரை ஜில்லா போர்டு காலத்தில் கலைக்கப்பட்டபொழுது ஒன்றியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட சந்தையாகும். அப்போது முதல் 1976ஆம் ஆண்டு வரை இங்கு மாவட்ட அளவிலே பெரிய ஒரு சந்தையாக நடத்தப்பட்டு வந்தது. நாளடைவில் ஒட்டன்சத்திரத்தில் காய்கறி மார்க்கெட் மிக பிரபல்யமானதால் 1976ஆம் ஆண்டு முதல் மேற்குறிப்பிட்ட விருப்பாட்சி சந்தை நடைபெறுவதில்லை. பிறகு மேலும் 3 ஆண்டுகள் வாரந்தோறும் வியாழக்கிழமை குறைந்த அளவில் ஆடுகள் மட்டும் வந்து இந்த சந்தையில் வியாபாரம் நடைபெற்று வந்தது. இதுவும் 1979ஆம் ஆண்டு முதல் சந்தை கூடுவதில்லை. ஆதலால் சந்தை நடைபெறவில்லை.

சமீபத்தில் ஆதிதிராவிட நலத்துறையினர் ஆதிதிராவிட பள்ளி மாணவர்களுக்கு விடுதி கட்டுவதற்காக இந்த இடம் பார்த்துவிட்டுச் சென்றுள்ளனர். மேலும், தற்போது இலங்கையிலிருந்து வந்துள்ள அகதிகள் ஒட்டன்சத்திரம் அருகே உள்ள குழந்தை வேலப்பர் கோவில் சத்திரத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தற்காலிகமாக 3 மாதத்திற்கு மேற்படி விருப்பாட்சி சந்தை இருந்த காலி இடத்தில் அமர்த்தலாம் என்று ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் நடவடிக்கை மேற்கொண்டு உள்ளார். இந்த நிலையில் தற்போது ஒட்டன்சத்திரம் டவுனில் இயங்கிவரும் தினசரி காய்கறி மார்க்கெட் [மாநில அளவில் லாரிகள் மூலமாக பெரிய அளவில் காய்கறிகள் அனுப்பப்பட்டு வருகிறது] மீண்டும் விருப்பாட்சி சந்தை இருந்த இடத்திற்கே மாற்றிவிட ஒரு பிரேரணை வருவாய்த்துறை பரிசீலில் இருப்பதாக அறிய வருகிறது. 1979-80 வரை மேற்குறிப்பிட்ட விருப்பாட்சி சந்தை இருந்த இடத்தில் ஏலம் விடப்பட்டு ஏலத்தொகை ஒன்றியத்திற்கு வருமானமாகக்கிடைத்து வந்தது. பிறகு அந்த சந்தை கூடாமையால் வருமானமும் நின்று விட்டது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல். இராஜா
திட்ட அலுவலர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
திண்டுக்கல்.






# சேலம், ராஜாஜி மாவட்டங்கள்: ஒரு பார்வை

**17** சட்டப்பேரவைத் தொகுதிகள் கொண்ட சேலம் மாவட்டம் பெரியதாகும். தற்போது சேலத்தைப் பிரித்து, புதிதாக ராஜாஜி மாவட்டம் உருவாக்கப்பட்டாலும் இன்னும் சேலம் மாவட்டம் அதிகப்பரப்பு, கூடுதல் மக்கள் தொகை கொண்டதாகவே திகழ்கிறது.

சேலம், ராஜாஜி மாவட்டங்கள் குறித்த புள்ளி விவரங்கள் வருமாறு:

சேலம் மாவட்டம் பரப்பளவு 5444.08 சதுர கிலோமீட்டர். மக்கள்தொகை 25.67 இலட்சம். மொத்த கிராமங்கள் 618. ஊராட்சி ஒன்றியங்கள் 19. பிர்காக்கள் 42. பேரூராட்சிகள் 34. நகராட்சிகள் 3, மாநகராட்சி 1, திரையரங்குகள் 136, நகர்ப்புற நிலவரி ரூ.35 இலட்சம், நிலவரி 79 இலட்சம் சிறுசேமிப்பு இலக்கு ரூ.19 கோடி.

சத்துணவு மையங்கள் 1494. நியாய விலைக் கடைகள் 967. திரையரங்குகள் 142. அரசு நில ஆக்கிரமிப்புகள் 50,614. முதியோர் உதவித்தொகை பெறுவோர் 14,685. விதவை உதவித்தொகை பெறுவோர் 10,791. ஊன முற்றோர் உதவித்தொகை 1,652. விவசாயத் தொழிலாளர் உதவித்தொகை 3,176. துயர் நீக்கம் நிவாரணப்பிரிவு நடவடிக்கை எடுக்கப்பட்ட மனுக்கள் 3,456.

**சுற்றுலாத்தலம்:** ஏர்க்காடு, மேட்டூர்.

**கோயில்கள்:** தாரமங்கலம் கைலாசநாதர் கோயில், சேலம் கோட்டைமாரியம்மன், சுகவனேஸ்வரர் கோயில், கந்தாஸ்ரமம், சித்தர்கோவில்.

சட்டமன்றத் தொகுதிகள்: 11

## ராஜாஜி மாவட்டம்

**ரா**ஜாஜி மாவட்டம் 3,205 சதுர கிலோமீட்டர். மக்கள் தொகை 13.29 இலட்சம். மொத்த கிராமங்கள் 436. ஊராட்சி ஒன்றியங்கள் 15. பிர்காக்கள் 30. பேரூராட்சிகள் 20, நகராட்சிகள் 4, நகர்ப்புற நிலவரி ரூ.35 இலட்சம் நிலவரி ரூ.64 இலட்சம்.

சிறுசேமிப்பு இலக்கு 13 கோடி. சத்துணவு மையங்கள் 779. நியாயவிலைக் கடைகள் 603. திரையரங்குகள் 84. அரசு நில ஆக்கிரமிப்புகள் 33,518 முதியோர் உதவித்தொகை பெறுவோர் 8,139. விதவை உதவித்தொகை பெறுவோர் 4,093. ஊனமுற்றோர் உதவித்தொகை 950. விவசாயத் தொழிலாளர் உதவித்தொகை 1,390. துயர்நீக்கம் நிவாரணப் பிரிவு நடவடிக்கை எடுக்கப்பட்ட மனுக்கள் 1,849.

**சுற்றுலாத்தலம்:** கொல்லிமலை, நாமக்கல்.

**கோயில்கள்:** நாமக்கல் ஆஞ்சநேயர், கொல்லிமலை அரப்பளீஸ்வரர், மோகனூர் நலவடியார்கோயில், திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோயில்.

சட்டமன்றத் தொகுதி: 6

தொகுப்பு: தா. மனோகரன்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
(செய்தி)



# நூல் நயம்

## தோகைச்சூரியன்

எழுதியவர்:
கவிஞர் ஓடைப்பட்டி சுப்பையா

வெளியீடு:
சரசுவதி பதிப்பகம்,
17, இரண்டாம்தெரு,
தயாளுநகர்,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

பக்கம்: 96 விலை: ரூ.21

**தி**.மு.கழகம் நடத்திய போராட்டங்கள் சிலவற்றில் ஈடுபட்டுச் சிறைவாசம் கண்ட கவிஞர் இவர். சிறையிலும் வெளியிலும் இவர் எழுதிய கவிதைகளுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களே பாராட்டுரை வழங்கியிருக்கிறார். தமிழைப்போற்றியும், சமுதாயச் சீர்கேடுகளைச் சாடியும், தக்காரை வாழ்த்தியும் ஆசிரியர் எழுதிய மரபுக்கவிதைகளும், புதுக்கவிதைகளும் அழகுபட இந்நூலில் அணி வகுத்துள்ளன.

## தமிழ்நாட்டு மலைவாழ் பழங்குடி மக்கள்

ஆசிரியர்:
தமிழ்நாடன்

வெளியீடு:
சேலம் மாவட்ட ஓவியர்
எழுத்தாளர் மன்றம்
192, மேட்டுத்தெரு,
சேலம் - 636006.

பக்கம்: 105 விலை: ரூ.30

**ம**லைவாழ் மக்களின் கட்டடக் கலை, தெய்வ நம்பிக்கை, சமூக வாழ்வு, பட்டம் கட்டும் விழா, பெண்களின் சடங்குகள், பாடல்கள், திருமணப் பாடல்கள், மதுவிலக்கு, மொழியும் பேச்சுத் தமிழும் ஆகிய பல செய்திகளைப் படம்பிடித்துக் காட்டும் 25 கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது. நிலகிரி சேர்வராயன், கொல்லி, பர்கூர், அந்தமான், ஜவ்வாது, கல்வராயன், கத்திரி, போத மலைவாழ் மக்கள் பற்றியெல்லாம் இந்தப் புத்தகத்தில் விவரிக்கப்படுகிறது.

## அக்கினிக் குஞ்சுகள்

ஆசிரியர்:
உதயை மு.வீரையன்

வெளியீடு:
மக்கள் பதிப்பகம்,
31, வேங்கடேசன் தெரு,
சேப்பாக்கம்,
சென்னை - 600005.

பக்கம்: 112 விலை: ரூ.21

**வ**ரலாறு, குறுங்காவியம், கதம்ப மலர், இனி ஒரு விதி செய்வோம், புதிய உருவங்கள் என நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட நறுந் தமிழ்க் கவிதை நூலாகும் இது. பெரும்பாலான பாடல்களில் பாட்டாளி வர்க்கத்தாரின் கூட்டாளி உணர்வு இழையோடுகிறது. இனிய விருத்தப் பாடல்கள், எளிய புதுக்கவிதைகள் உள்ள இந்நூலினை அறிமுகம் செய்து உவமைக்கவிஞர் சுரதா எழுதியுள்ளார்.

## தமிழ் காட்சி நெறியியல்

ஆசிரியர்:
நிர்மல் செல்வமணி

பக்கம்: 240 விலை: ரூ.46

**இ**ந்த் நூலின் ஆசியர் தேர்ந்து தெளிந்த தமிழாய்வாளர் ஆவார். இருபெரும் பகுதிகள் கொண்டதாக இந்நூல் விளங்குகிறது. தமிழ்க் காட்சியியலை அடையாளம்காணும் விதம் குறித்தும், அதன் இயல்பு பற்றியும் விளக்குகிறது முதல் பகுதி இரண்டாம் பகுதியோ, காண்வினை குறித்தும், தொல்காப்பிய மரபியல் கூறும் காட்சித்துறை உத்திகள் அடிப்படையிலான மரபுகள் பற்றியும் தெளிவுபடுத்துவது. இ.:.தோ அறக்கட்டளைச் சொற்பொழிவாகும்.

## தொல்காப்பிய உரைவளம் பொருளதிகாரம்

பதிப்பாசிரியர்:
ஆசிவலிங்கனார்,

மேலே உள்ளதும் இதுவும்
வெளியிட்டார்:

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
டிடிடிஐ.அஞ்சல், தரமணி,
சென்னை - 600 113.

பக்கம்: 318 விலை: ரூ.65

**பு**றத்திணையியலின் 2-ஆம் பகுதி நூல் இது. தமிழின் பெருமையினை உலகெலாம் பரப்புவதாகத் திகழும் தொல்காப்பியச் சிறப்பைத் தெளிவுபடப் புலப்படுத்தும் வகையில் ஆற்றப்பட்டுவரும் உரைவளத் திட்டப் பணிக்குத் தனி முத்திரை பதிப்பதாக அமைந்துள்ளது இந்நூல். பழம்பெரும் உரையாசியர்களான இளம்பூரனார், நச்சினார்க்கினியர், சோம இளவரசு ஆகியோர் உரையுடன் நூலாசிரியர் உரையும் தொகுக்கப்பட்டுள்ளது மட்டுமல்ல; இதில் முனைவர் சி.இலக்குவனாரின் ஆங்கில மொழிபெயர்ப்பும் உள்ளது.

-இந்திரன்.



# தெரிந்து கொள்ளுங்கள்

### ABSTRACT

FORESTS-Wildlife-Sanction of financial assistance to the victims who are killed/injured by the attack of Wild animals-Pattern of Relief Rationalised - Orders - Issued.

### ENVIRONMENT AND FORESTS (FR.V) DEPARTMENT

G.O. Ms. No.235 Dated:4-10-1996

Read:

1. G.O.Ms.No.17, Food and Agriculture, dt. 2-1-65
2. G.O.Ms.No.3212, Agriculture, dt. 8-12-1970
3. G.O.Ms.No.430, Forests & Fisheries, dt.9-4-83
4. G.O.Ms.No.629, Public (L&O-B), dt.3-5-1991
5. Govt. Ln.No.13551/FR.WL/92-4, dt.22-6-1992
6. G.O.Ms.No.874, Public (L&O-B) dt.8-8-96
7. From the Chief Conservator of Forests (WL) and Chief Wildlife Warden, Ref. No.A4/7908/96, dt.2-8-96

**ORDER:**

In the Government Order first read above, the Government have ordered the payment of compensation to the owners of the Cattle viz. Buffaloes, bulls, oxen and cows that are killed by the Tigers in the vicinity of the Sanctuaries. In the Government Order second read above, the scheme was extended to the animals killed by panthers also (in addition to tiger). In the Government Order third read above, the said scheme was extended to the entire State of Tamil Nadu and the quantum of compensation fixed as Rs.500/- or 50% of the value of the animal killed. Now, the Chief Conservator of Forests (Wildlife) and Chief Wildlife Warden in his letter seventh read above, has suggested to include 'bears, elephants and Hyena in addition to 'Tiger and Panther'.

2. The Chief Conservator of Forests (WL) and Chief Wildlife Warden in his letter last read above has further stated that at present the compensation of Rs.5,000/- is paid for the human death caused by the wild animals to the legal heirs and also there is a provision for ex-gratia payment for the following:-

| | |
|---|---|
| a) Total permanent disablement disqualifying to continue in any avocation | Rs.3,500/- |
| b) Grievous hurt falling within Section 320 of the Indian Penal Code | Rs.3,000/- |
| c) Loss of eye-sight of both the eyes | Rs.1,500/- |
| d) Permanent incapacitation or loss of joint of the body | Rs.1,500/- |
| e) Permanent disfiguration of face or head | Rs. 600/- |

The Chief Conservator of Forests (WL) and Chief Wildlife Warden has added that he has examined the case with reference to other States, that it is found that in Gujarat they have raised the amount of compensation to Rs.1.00 lakh for the loss of life. He has added that the compensation now paid so far is very low and in fact does not have any impact on the protection of Wildlife and it is definitely not adequate to the loss of human life. Hence, he has requested that the relief now given may be revised.

3. The Government have examined the whole issue in detail based on the orders issued in the Government orders fourth and sixth read above and accordingly they have decided to enhance the norms as detailed below for the following categories as noted against each:

1) Relief for the death/injury to human beings due to the attack by the Wildlife elephants, Tiger etc.

| | | |
|---|---|---|
| a) To the legal heirs of the deceased | - | Rs.50,000/- (Rupees fifty thousand only) |
| b) Permanent incapacitation | - | Rs.50,000/- (Rupees fifty thousand only) |
| c) Major injuries | - | Rs.10,000/- (Rupees ten thousand only) |
| d) Partial incapacitation | - | Rs.10,000/- (Rupees ten thousand only) |
| e) Minor injuries | - | Rs.5,000/- (Rupees five thousand only) |

2) Relief for the losses to the houses, shops and crops, other than human death/injury caused by the attack of Wildlife:

| | | Quantum of Relief |
|---|---|---|
| i) Loss of or damage to house | | |
| a) ROC roof or tiles house | - | a) Actual loss or Rs.2,500/- (Rupees Two thousand and |

five hundred only) which ever is less.

b) Thatched house — b) Actual loss or Rs.1,500/- (Rupees One thousand and five hundred only) whichever is lower.

(a) and (b) includes loss of movable property such as grains, clothes and other household effects.

ii) Loss or damage to shops:

| | |
|---|---|
| a) Tiled shops, including loss of goods in the shop | Actual loss or Rs.2,500/- (Rupees Two thousand and five hundred only) whichever is lower. |
| b) Thatched shops or bunks including loss of goods in the shops | Acutal loss or Rs.1,500/- (Rupees One thousand and five hundred only) whichever is lower. |
| iii) Loss of earning assets like vehicles, boat, cattle | Actual loss or Rs.2,000/- (Rupees Two thousand only) whichever is lower. |
| iv) For loss of movable property such as grains, clothes and other household effects without loss of or damage to house, loss of articles in shop without loss or damage to building containing the shop. | Actual loss or Rs.1,000/- (Rupees One thousand only) whichever is lower. |

Relief under Items 2(i) and (ii) will disentitle relief under Item 2 (iv) above.

| | |
|---|---|
| v) Damage to irrigation, drinking water wells, tube wells, electric motor, fittings, fruit bearing trees etc. in the ownership of the victims. | Actual loss or Rs.1,000/- (Rupees One thousand only) whichever is lower. |

4. The Chief Conservator Forests (WL) and Chief Wildlife Warden, Chennai is hereby empowered to issue necessary sanction orders in respect of compensation to the legal heirs of victims who lost his life due to attack by wild animals. For permanent disability and injuries referred to above, the same will be sanctioned by the concerned Wildlife Conservators or Territorials Conservators as the case may be after getting the due certificates from the Medical Officers concerned and payment will be made by the Wildlife Wardens or District Forest Officers.

5. In respect of human loss of life or injury or crop damages etc. due to the attack by the Elephant the same will be paid under the 'Project Elephant'. The expenditure towards relief sanctioned to the victim will be met under the following need of account.

"4406 Capital Outlay on Forestry and Wildlife-02. Environmental, Forestry and Wildlife-110. Wildlife preservation Schemes in the Eighth Five Year Plan - III. Centrally Sponsored Scheme-SD. Project Elephant-Anamalai and Mudumalai-16. Major works (D.P.C.No.4406 02 110 SD 1600)".

6. Similarly, the expenditure towards payment of compensation in case of death by cornivores like Tiger, Leopard, Hyena etc will be met under the following head of account:

"2406. Forestry and Wildlife 02. Environmental, Forestry and Wildlife-110. Wildlife Preservation-VI. Scheme shared between State and Centre-UE. Tiger Reserve Scheme (D.P.C. No.2406 02 110 00 0003)".

Necessary provision of funds will be made in Revised Estimate/Final Modified Appropriation 1996-97.

7. The Chief Conservator of Forests (WL) and Chief Wildlife Warden, Chennai is requested to take necessary action to get the ratification of the Government of India for meeting the expenditure at the enhanced rate now ordered by the Government. He is also requested to take necessary action to provide adequate funds under the above two heads of accounts.

8. For the purpose of paying compensation for the death of cattle, due to attack by wild animals, 'donkey' 'horse' and 'sheep' be included in the list in addition to the existing 'cow', 'ox' and 'buffaloe'.

Similarly, now compensation paid for the death of cattle died due to the attack of tiger and panther. In future, in this list, 'bear' 'hyena' and 'elephant' shall also be included.

9. The rearing of goats within a radius five kilometers in and around the Wildlife Sanctuaries/National Parks/Reserve Forests is thereby banned. The Chief Conservator of Forests (WL) and Chief Wildlife Warden, Chennai is requested to take necessary action to ban the rearing of goats in consultation with the Director of Animal Husbandry, Chennai.

10. The Cheif Conservator of Forests (WL) and Chief Wildlife Warden, Chennai is empowered to sanction the compensation as at present.

11. This order issues with the concurrence of Finance Department vide its U.O. No.326/AH&F/96-1, dt.3-10-96.

(By order of the Governor) **K.S. SRIPATHI,**
Secretary to Government



வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகை

# தமிழுக்கு முதல்மரியாதை

| | |
|---|---|
| 403. Scan | .. ஊடு கதிர்ப்படம் |
| 404. Scooter | .. குதியுந்து |
| 405. Screen Printing | .. திரையச்சீடு |
| 406. Security Services | .. காவல் பணிகள், பாதுகாப்புப் பணிகள் |
| 407. Service | .. பணி |
| 408. Service Centre | .. பணி நடுவம், பணி மையம் |
| 409. Service Station | .. பணி நிலையம் |
| 410. Sewage | .. சாக்கடை |
| 411. Sewers | .. சாக்கடைக் குழாய் |
| 412. Sewing Traders | .. தையல் பொருளகம், தையல் பொறி விற்பனையாளர் |
| 413. Shampoo | .. சியநெய் |
| 414. Shaving | .. மழிப்பு, மழித்தல் |
| 415. Shed | .. கொட்டாரம், கொட்டகை |
| 416. Shell Lime | .. சிப்பிச் சுண்ணம் |
| 417. Sherbet | .. மட்டுநீர் |
| 418. Shoes | .. மூடு காலணி, மூடு காலணியகம் |
| 419. Shop | .. கடை |
| 420. Shopping Complex | .. வணிக வளாகம், விற்பனை வளாகம் |
| 421. Show Case | .. காட்சிப் பேழகம், காட்சிப் பேழை |
| 422. Show Room | .. காட்சிக்கூடம் |
| 423. Signal Light | .. சைகை விளக்கு |
| 424. Silk House | .. பட்டுமாளிகை |
| 425. Slate | .. கல்லேடு, கற்பலகை |
| 426. Snacks | .. நொறுக்குத் தீனி, நொறுவை |
| 427. Soap | .. வழலை, சவலைக்கட்டி |
| 428. Soda Factory | .. வளிநீர்த் தொழில்மனை, காலகம் |
| 429. Sports | .. விளையாட்டுப் பொருளகம் |
| 430. Society | .. சங்கம், கூட்டுக் கழகம், சேவைக் குழு |
| 431. Soft Wear | .. மென் மாழை, மெல்லினம் |
| 432. Spartek | .. பளபளப்புக் கல் |
| 433. Specialist | .. வல்லுநர், தனித் தகுதியர் |
| 434. Spinning Mill | .. நூற்பாலை |
| 435. Sprayer | .. தெளிப்பான் |
| 436. Sprayer House | .. தெளிப்பான் அகம் |
| 437. Stadium | .. ஆடக அரங்கம், விளையாட்டரங்கம் |
| 438. Stainless Steel | .. துருவுறா எஃகிரும்பு |
| 439. Stall | .. நிலையகம், நிலையம் |
| 440. Standard Motor Products | .. செந்தர-இயங்கி-விளைவாக்கப் பொருள்கள் |
| 441. Star Hotel | .. உடுவிடுதி, நட்சத்திர உணவகம் |
| 442. Stationery | .. பலசரக்கு, மளிகை, எழுதுபொருள் |
| 443. Steel | .. எஃகிரும்பு |
| 444. Steel Engineering Works | .. எஃகிரும்புப் பொறியியற் பணிகள் |
| 445. Steel Furnitures | .. எஃகிரும்பு அறைகலன்கள் |
| 446. Stereo | .. இசைத்தூண்டர், இசைப்பிரிப்பு, பிரிப்பிசை, இசைப்பெருக்கு |
| 447. Storage | .. சேமகம் |
| 448. Stores | .. பண்டகம், மளிகை |
| 449. Straw-board | .. வைப்பலகை |

# அரசு உதவிகளைப் பெற யாரை அணுகவேண்டும்?

## முன்னாள் படைவீரர் நலத்துறை
## தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலநிதி

| திட்டத்தின் பெயர் | தகுதிகள்/ நிபந்தனைகள் | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| மாதாந்திர நிதிஉதவி | ஏழ்மை நிலையில் உள்ளவராக இருத்தல் வேண்டும். வயது 60க்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். | மாவட்ட முன்னாள் படைவீரர் நல துணை/உதவி இயக்குநர் அலுவலகம். |
| மொத்த மானிய நிதிஉதவி | 1. மாத வருமானம் ரூ.2000/க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br>2. இந்நிதிஉதவி வாழ்நாளில் ஒருவருக்கு, ஒருமுறை மட்டுமே செய்யும் தொழிலுக்கு ஏற்றவாறு வழங்கப்படும்.<br>3. சம்பந்தப்பட்ட தொழில் செய்ய திறமையோ/முன் அனுபவமோ பெற்றவராக இருத்தல் வேண்டும். | |
| திருமண மானியம் | 1. மாத வருமானம் ரூ.2000க்கு குறைவாக இருத்தல் வேண்டும்.<br>2. முன்னாள் படைவீரர் 10 ஆண்டுகள் ராணுவசேவை செய்திருத்தல் வேண்டும். (இரண்டாம் உலகப்போரின்போது பணிபுரிந்திருந்தால், 10 ஆண்டு சேவைக் காலம் என்ற விதி தளர்த்தப்படும்.)<br>3. மணமகளின் வயது திருமணத்தன்று 20 வயது பூர்த்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>4. மண்மகள் குறைந்தபட்சம் 5ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.<br>5. முன்னாள் படைவீரர்களின் விதவைகள் மகளின் திருமணத்திற்கு, முன்னாள் படைவீரர்களின் பணிக்காலம் கணக்கில் கொள்ளப்படமாட்டாது. | |
| ஈமச்சடங்கு நிதிஉதவி (மானியம் ரூ.1000) | 1. மாத வருமானம் ரூ.2000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br>2. முன்னாள் படைவீரர் இறந்த மூன்று மாதங்களுக்குள் விண்ணப்பம் செய்திடல் வேண்டும். | |
| முதியோர் ஓய்வூதியம் (மாதம் ரூ.150வீதம் ஆயுட்காலம் முழுவதும்) | 1. ஆதரவற்ற முன்னாள் படைவீரர்கள்/விதவைகள்.<br>2. 60 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.<br>3. ஆண் வாரிசு இருத்தல் கூடாது. | |
| புயல், வெள்ளம், தீ விபத்து நிவாரண நிதிஉதவி (மானியம் ரூ.300/-) | 1. மாத வருமானம் ரூ.2000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br>2. வருவாய் துறையிலிருந்து இதற்கான நிதிஉதவி ஏதும் பெறாதவராக இருத்தல் வேண்டும். | மாவட்ட முன்னாள் படைவீரர் நல துணை/உதவி இயக்குநர் அலுவலகம். |
| கண்பார்வை இழந்த முன்னாள் படைவீரர்/விதவைகளுக்கு ஆயுட்கால நிவாரண நிதிஉதவி (மாதம் ரூ.300/ வீதம் ஆயுட்காலம் முழுவதும்) | 1. மாத வருமானம் ரூ.2000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br>2. கண்பார்வை முழுமையாக இழந்தவராக இருத்தல் வேண்டும். அரசு மருத்துவர் பார்வைக்குறைவு சதவீதம் குறித்து சான்றிதழ் வழங்க வேண்டும். | |
| தொழுநோயால் பீடிக்கப்பட்ட முன்னாள் படைவீரர்/ விதவைகளுக்கு நிவாரண நிதிஉதவி (மாதம் ரூ.300வீதம் ஆயுட்காலம் முழுவதும்) | 1. மாத வருமானம் ரூ.2000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br>2. அரசு மருத்துவ மனையில் தொடர்ந்து சிகிச்சை பெறுபவராக இருத்தல் வேண்டும். | |
| புற்றுநோயால் பாதிக்கப்பட்ட முன்னாள் படைவீரர்/ விதவைகளுக்கு நிவாரண நிதிஉதவி (மாதம் ரூ.500/ வீதம் ஆயுட்காலம் முழுவதும்) | 1. மாத வருமானம் ரூ.2000க்குமிகாமல் இருத்தல் வேண்டும்.<br>2. அரசு மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெறுபவராக இருத்தல் வேண்டும். | |
| பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட முன்னாள் படைவீரர்/ விதவையருக்கு ஆயுட்கால நிவாரண நிதிஉதவி (மாதம் ரூ.300வீதம் ஆயுட்காலம் முழுவதும்) | 1. மாத வருமானம் ரூ.2000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br>2. பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும். | |

| | | |
|---|---|---|
| காது கேட்கும் கருவி/ செயற்கை பற்சட்டம்/ மூக்குக் கண்ணாடி போன்ற செயற்கை உபகரணங்கள் பொருத்த நிதிஉதவி. | 1. மாத வருமானம் ரூ.2000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br>2. மருத்துவரின் சான்று மற்றும்விலைப்பட்டியல் சமர்பிக்க வேண்டும். | " " " |
| முதல்/இரண்டாம் உலகப் போரில் பணிபுரிந்த முன்னாள் படைவீரர்/அவர் தம் விதவையருக்கு நிதிஉதவி (மாதம் ரூ.150/ வீதம் ஆயுட்காலம் முழுவதும்) | 1. முதல் இரண்டாம் உலகப் போரின்போது 5 வருடங்களுக்கு குறையாது பணிபுரிந்திருத்தல் வேண்டும்.<br>2. மாத வருமானம் ரூ.500க்குள் இருத்தல் வேண்டும்.<br>3. தமிழ்நாட்டைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.<br>4. எவ்வித ஓய்வூதியமும் பெறாதவராக இருத்தல் வேண்டும். | " " " |
| வீட்டு வரிச் சலுகை | 1. குடும்ப ஓய்வூதியம் பெறும் விதவையராக இருத்தல் வேண்டும்.<br>2. மாத வருமானம் ரூ.2000/க்குள் இருத்தல் வேண்டும்.<br>3. போர் விதவையருக்கு வருமான வரம்பு இல்லை.<br>4. வருமான வரி செலுத்துபவராக இருத்தல் கூடாது. | மாவட்ட முன்னாள் படைவீரர் நல துணை/ உதவி இயக்குநர் அலுவலகம். |
| காசநோய்/ தொழுநோய் சானிட்டோரியத்தில் தங்கி சிகிச்சை பெறும் முன்னாள் படைவீரருக்கு கைச்செலவு பணம் (நாளொன்றுக்கு ரூ.10 வீதம் உள் நோயாளியாக சிகிச்சை பெறும் காலத்திற்கு மட்டும்) | 1. மாத வருமானம் ரூ.2000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br>2. காசநோய்/தொழுநோயால் பாதிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட மருத்துவமனையில்' உள்நோயாளிகளாக சிகிச்சை பெறுதல் வேண்டும். | " " " |

**தொகுப்பு நிதி**

| | | |
|---|---|---|
| 1. வருடாந்திர பராமரிப்புபடி/ வருடாந்திர பராமரிப்பு மானியம். | 1. இந்திய சுதந்திரத்திற்கு பின்னர் நடைபெற்ற அனைத்துப் போர்களிலும் உயிரிழந்த படைவீரர்களில் விதவையர் மற்றும் ஊனமுற்ற முன்னாள் படைவீரர்கள்.<br>2. விதவையருக்கு முதல் 10 ஆண்டுகளுக்கு ரூ.1000 வீதம் அதன் பின் ஆயுட்காலம் முழுமைக்கும் ஆண்டுக்கு ரூ.750 வீதமும்.<br>3. ஊனமுற்ற முன்னாள் படைவீரருக்கு ஆண்டுதோறும் ரூ.750 வீதம் ஆயுட்காலம் முழுவதும். | " " " |
| 2. வீடுகட்டுவதற்கான மானியம். | 1. இந்திய சுதந்திரத்திற்குப் பின்னர் நடைபெற்ற அனைத்துப்போர்களிலும் உயிரிழந்த படைவீரர்களின் விதவையர் மற்றும் ஊனமுற்ற படைவீரர்கள்.<br>2. மானியத் தொகை ரூ.10,000 வரை. | " " " |
| 3. திருமண மானியம் (ரூ.5000/ மட்டும்) | போரில் உயிழந்த/ஊனமுற்ற படைவீரர்களின் மகள்கள் ஒவ்வொருவருக்கும். | மாவட்ட முன்னாள் படைவீரர் நல துணை/உதவி இயக்குநர் அலுவலகம். |
| 4. வங்கிக்கடன் வட்டி மானியத் திட்டம் | 1. வங்கியிலிருந்து சிறுதொழில் அல்லது வியாபாரம் (விவசாயம் தவிர) செய்யும் பொருட்டு கடன் பெறும் முன்னாள் படைவீரர்/அவர்தம் விதவையர்.<br>2. ரூ.75,000வரை பெறும் கடன்களுக்கு வங்கியினால் வதூலிக்கப்படும் வட்டியில் 50% தொகுப்பு நிதியிலிருந்து ஈடு செய்யப்படும்.<br>3. கடன்பெறும் முன்பு இதற்காக விண்ணப்பத்தை மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் சமர்பித்தல் வேண்டும். | " " " |
| 5. முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கு கல்வி நிதிஉதவி | 1. முன்னாள் படைவீரரின் திருமணம் ஆகாத மகள்கள்.<br>2. பள்ளி இறுதி வகுப்புக்குப் பின்னர் தொழில்நுட்ப வேலைவாய்ப்பு மற்றும் வாழ்க்கைக் கல்வி பயிலுவோருக்கு மட்டும்.<br>3. மாத வருமானம் ரூ.1500க்கு கிழ் உள்ளவர்கள் மட்டும் தகுதியுடையவர்கள்.<br>4. செலுத்தப்பட்ட பயிற்சித்தொகை, தேர்வுக்கட்டணம், தனிக்கட்டணம். | " " " |

| | | |
|---|---|---|
| | 5. புத்தகப்படி ஆண்டொன்றுக்கு ரூ.300<br>6. விடுதியில் தங்கிப் படிப்போருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200வீதம் ஆண்டொன்றுக்கு 10 மாதங்களுக்கு !கிகைப்படாமல்.<br>7. தொழில் நுட்பப் பயிற்சி ஒவ்வொன்றுக்கும் ரூ.240<br>8. இதர நிதிகளிலிருந்து கல்வி நிதிஉதவி பெறுவோர், இந்நிதிஉதவி பெற தகுதியற்றவர். | |
| **இதர சலுகைகள்** | | |
| முன்னுரிமையில் பம்பு செட்டிற்கு மின்இணைப்பு வழங்குதல். | ஆண்டுதோறும் 100 முன்னாள் படைவீரர்/விதவைகளுக்கு முன்னுரிமையில் பம்பு செட்டிற்கு மின் இணைப்பு வழங்கப்படுகிறது. முன்னாள் படைவீரர்/விதவைகள் மின் இணைப்பு பெற மின்சார வாரியத்தில் பதிவு செய்து ஓராண்டிற்குப்பின் உரிய விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கலாம். | மாவட்ட முன்னாள் படைவீரர் நல துணை/உதவி இயக்குநர் அலுவலகம். |
| 2. செம்பெக்ஸ் 1 | இத்திட்டத்தின் கீழ் 60 வயதுக்கு உட்பட்டுள்ள முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரது விதவையருக்கு வாகனங்கள் வாங்கிடவும், தொழிற்சாலைகளை நிறுவிடவும், இதர தொழில்களுக்காகவும் ரூ.15 இலட்சங்களுக்கு மேற்படாத திட்டங்களுக்கு கடனுதவிகள் பெற்றுத் தரப்படுகின்றன. | " " " |
| 3. செம்பெக்ஸ் 11. | இத்திட்டத்தில் வயது வரம்பு கிடையாது. முன்னாள் படைவீரர் மற்றும் அவரது விதவையருக்கு விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த தொழில்களுக்கு ரூ.10 இலட்சங்களுக்கு மேற்படாத திட்டங்களுக்கு கடனுதவி பெற்றுத் தரப்படுகிறது. | " " " |
| 4. செம்பெக்ஸ் 111 | காதி மற்றும் கிராமத் தொழில் தொடங்க முன்னாள் படைவீரர் விதவையருக்கு ரூ.10 இலட்சங்களுக்கு மேற்படாத திட்டங்களுக்கு கடனுதவி வழங்கப்படுகிறது. வயது வரம்பு கிடையாது. | " " " |



| | | |
|---|---|---|
| 5. ஓட்டுநர் உரிமம் இலவசமாக புதுப்பித்தலுக்கு சான்று வழங்கப்படுகிறது. | முன்னாள் படைவீரர்கள் ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தவராக இருத்தல் வேண்டும். | " " " |
| 6. வீட்டுவசதி வாரியத்தில் வீடு ஒதுக்கீட்டில் வீடு பெற சான்று வழங்குதல். | 1. முன்னாள் படைவீரர்கள்/விதவைகள்.<br>2. வீடு ஒதுக்கீடு பெற விண்ணப்பித்த பிறகு அலுவலகத்தை அணுகி சான்று பெறலாம். | " " " |
| 7. தொழில் நுட்பக் கல்லூரிகளில் முன்னாள் படைவீரர்களைச் சார்ந்தோர்களுக்கு இட ஒதுக்கீடு. | முன்னாள் படைவீரர்/விதவைகள் சார்ந்தோருக்கு இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் தொழில் நுட்பக்கல்லூரிகளில் இடஒதுக்கிடு பெற உரிய படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும். | மாவட்ட முன்னாள் படைவீரர் நலதுணை/உதவி இயக்குநர் அலுவலகம். |
| 8. முன்னாள் படைவீரருக்கு இருதயமாற்று அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக அறுவை சிகிச்சைக்கு நிதிஉதவி. | 1. இதுபோன்ற அறுவை சிகிச்சைகள் தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகளில் தான் செய்யப்படுதல் வேண்டும்.<br>2. அதிகபட்சமாக ரூ.20000 வரை மானியமாக வழங்கப்படும்.<br>3. மேற்கண்ட அறுவை சிகிச்சைகளுக்கு செலவிடப்பட்ட மருத்துவ பில்கள்/சான்றுகள்மருத்துவ அலுவலரால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். | " " " |

## பெரியாரின் விருந்தோம்பல்



ஒரு சமயம் ஈரோடு வந்த திரு.வி.க. ஈரோட்டில் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் இல்லத்தில் விருந்தினராகத் தங்கினார். அப்பொழுது தினமும் திரு.வி.க. காவிரிக்குச் சென்று குளித்து விட்டு வருவார். திரு.வி.க. குளித்துவிட்டு வந்தவுடன் பெரியார் அவருக்கு நெற்றியில் பூசிக் கொள்ள திருநீறு கொடுத்தார்.

இதைக் கண்டு வியந்த திரு.வி.க. பெரியாரிடம், "நீங்கள்தான் நாத்திகவாதி ஆயிற்றே. எப்படி?" என்றார். பெரியாரோ, "என் கொள்கைக்கு இது எதிரானதுதான். ஆனால் விருந்தினர்களை உபசரிக்கும் போது சொந்த விருப்பு வெறுப்புகளை விட்டு விட்டு விருந்தாளிகளின் மனம் மகிழுமாறு உபசரித்து அனுப்புவதுதான் தமிழர் பண்பாடு" என்றார்.'

(ஆதாரம்: 'சிரித்து மகிழுங்கள்' என்னும் நூல். தகவல்: வ. செயராமன், ஆவணியாபுரம்.)

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வெ. இறையன்பு, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர்: ஆர். அண்ணாதுரை, உதவி இயக்குநர்: எம்.அண்ணாமலை
ஆசிரியர் குழு: கே.டி. புகழேந்தி, ஜி. லோகநாதன், எம்.வி.எம். அசோகன், அமுதிமாறன், பி.எஸ். ராஜேந்திரன், ஜி.பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள்: என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி எண்: 566926, 566927



# ஆசிரியர் மடல்



வேடந்தாங்கலுக்குப் பறவைகள் வந்து குவிய ஆரம்பித்துவிட்டன.
பறவை எவ்வளவு அழகு!
பறவைகளைப் பார்க்கும் போதெல்லாம் பரிணாம வளர்ச்சி
அவற்றோடு நின்று போயிருக்கக் கூடாதா
என்றே நினைக்கத் தோன்றுகிறது!
பறவைகள் அனைத்துமே வியக்கத்தக்கவை!
அழகில் மயில் என்றால்...
கூடி வாழ்வதில் காகம்!
குயில்களுக்கு ஆதரவாய்
அடைகாக்கும் செவிலித்தாயாய்
அந்நிய உயிர்மீதும் அவை அன்புக்குடையை விரிக்கின்றன!
ஒவ்வொரு குயில் கூவும்பொழுதும்
காகத்திற்கும் நாம் நன்றி சொல்ல வேண்டும்.
செயற்கைக் கோடுகளை மனித இனம் பூமியின் முகத்தில்
வலிந்து வரைந்தாலும், பறவைகட்கு அவை முக்கியமில்லை.
சைபீரியாவிலிருந்து செங்கல்பட்டுக்கு
பிறந்த வீட்டுக்குப் பிரசவத்திற்குப் பயணிப்பது போல்
பறந்து வந்து குஞ்சுகளோடு திரும்புகின்றன.
யார் இவற்றிற்குத் திசைகளைத் தெரிவிக்கிறார்கள்?
காற்றின் வேகத்தைக் கற்பிக்கிறார்கள்!
சிலந்தி வலையின்
சின்ன இழைகளாய்
உலகம் செதுக்கப்பட்டிருக்கிறது.
ஒவ்வொரு இழையிலும் உன்னதம் சேமிக்கப்பட்டிருக்கிறது.
சிறகுகளை விரித்து நீலவானில் நீந்தும் அவை
சுற்றுச்சூழல் இன்னும் கொஞ்சம் உயிரோடிருப்பதை உறுதிப்படுத்துகின்றன!
வளைகுடாவில் தீ கனன்றபோது
வேதாரண்யத்திற்கு வந்த பறவைகள் தாமதமாய்த் திரும்பின!
என்றேனும் ஒரு நாள் இப்பறவைகள் வருவது நின்றுவிடுமோ?
கிழக்கிற்கும் மேற்குக்கும்
தொப்புள் கொடியாய்த் தொடரும் இவ்வுறவு துண்டித்துப்போகுமோ?
தொடர்வதும், வளர்வதும் நம் ஒவ்வொருவர் கைகளிலும்தான்!






கோபண்-


தமிழரசு



# இந்த இதழில்..


★ சொன்னதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம் 2

★ மணலும் நுரையும் - கலீல் கிப்ரான் 10

★ மாணவ மணிகளே, வெற்றி நிச்சயம்! 13

★ வாசகர் இதயம் 16

★ 1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை 17

★ தொழுநோய்த் தடுப்பு 49

★ பிரதமரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டம் 51

★ குவியல் - சிறுகதை - சுப்ரபாரதி மணியன் 57

★ பாரதி கண்ட புதுமைப் பெண் - திருமதி ராதாரமணன் 60



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு : 2028

பங்குனித் திங்கள் : 3

மலர் : 27 இதழ் : 18

16.3.1997

விலை ரூ. 3.

# சொன்னதைச் செய்வோம்! செய்வதைச் சொல்வோம்!

## கலைஞர் ஆட்சியின் கடந்த ஆண்டுப் பணிகளில் சில...



### கல்வி

- இடைநிலை ஆசிரியர் தேர்வு முறை சீரக்கப்பட்டு, வேலைவாய்ப்பு அலுவலக முன்னுரிமை அடிப்படையில் இதுவரை சுமார் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் பதவியிலமர்த்தப்பட்டனர்.
- 21 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாகவும், 99 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 80 உயர்நிலைப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டன.




- 30 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ. 1.5 கோடி செலவில் புதிய பள்ளிக் கட்டிடங்கள் கட்டும் பணிகள் நடைபெறுகின்றன.
- உயர்நிலை மற்றும் மேல் நிலைத் தேர்வில் மாநில மற்றும் மாவட்ட அளவில் முதன்மையாக வரும் மூன்று மாணவர்களின் மேற்படிப்புக்கான மொத்தச் செலவையும் அரசு ஏற்றுக்கொள்ளும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.





### சமூக நலம்




- 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்' தொகை ரூ. 5 ஆயிரத்திலிருந்து ரூ. 10 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித்திட்டத்தின்' கீழ் உதவித் தொகை ரூ. 300 லிருந்து ரூ. 500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் மாநிலம் முழுவதும் நீட்டிக்கத் திட்டமிடப்பட்டு முதலில் 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- கலப்புத் திருமணத் தம்பதியருக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ. 5 ஆயிரத்திலிருந்து ரூ. 10 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- பார்வையற்ற மாணவர்கள் தேர்வுஎழுத உதவும் நபருக்கு, ஒரு தேர்வுத் தாளுக்கு ரூ. 6 வீதம் வழங்கப்படும் உதவித் தொகை ரூ. 15 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- ஓயர் பின்னும் வேலையிலுள்ள பார்வையற்றோருக்கு வழங்கப்படும் தொகுப்பு ஊதியம் ரூ. 800 லிருந்து ரூ. 1,200 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- பார்வையற்றோரைத் திருமணம் செய்து கொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவிப் பணம் ரூ.500, சேமிப்புப் பத்திரம் ரூ. 5,500 ஆகியவை முறையே ரொக்கம் ரூ. 3,000 ஆகவும், சேமிப்புப் பத்திரம் ரூ. 7,000 ஆகவும் உயர்த்தப்பட்டு வழங்கப் படுகிறது.

### தொழில்

- 'ஃபோர்டு மகேந்திரா' மற்றும் 'ஹூண்டாய் கார்' தொழிற் சாலைகளின் கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.




- இங்கிலாந்து நாட்டின் பில்கிங்டன் நிறுவனம் துவங்கும் கண்ணாடித் தொழிற்சாலை அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.
- கனிமச் சுரங்கங்களை ஏலம் விடுவதில் நடந்து வந்த முறைகேடுகளை அகற்றி, பொது ஏல முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அரசுக்குப் பலகோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது.
- 100 மெகாவாட் திறன் கொண்ட 20 மின் திட்டங்கள் ரூ. 8 ஆயிரம் கோடி செலவில் செயல்படுத்தப்படவிருக்கிறது.

### வேளாண்மை

- விவசாயிகள் நலன் கருதி 25 புல்டோசர்களும், அதனை ஏற்றிச் செல்ல 5 டிரக் டிரெய்லர்களும் வழங்கப் பட்டுள்ளன.
- 1996-97ல், 7,120 குழாய்க் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன.
- 1996-97ல், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், 261 இடங்களில் கசிவுநீர்க் குட்டைகள் கட்டப்பட்டுள்ளன.






## ஊரக வளர்ச்சி

* சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடரிலேயே ஊராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறும் நாள் அறிவிக்கப்பட்டு, அதன்படி தேர்தல்கள் நடத்தப்பட்டு மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.
* வேலை இழந்த மக்கள் நலப் பணியாளர் திட்டம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு 17,500 ஆண்களுக்கும் 17,500 பெண்களுக்கும் வேலை வாய்ப்பு வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
* 71,597 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டும், 5,000 கி.மீ. நீளத்திற்கும் மேலாக ஊரக மற்றும் ஊரக ஒன்றியச் சாலைகள் அமைக்கப்பட்டும் வருகின்றன.

## உணவு - கூட்டுறவு

- குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகளில் எல்லாப் பொருட்களும் எல்லா நாட்களிலும் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.
- கூட்டுறவு வங்கிகள் வழங்கும் தனி நபர் நகைக்கடன் வரம்பு ரூ. 40 ஆயிரத்திலிருந்து ரூ. 50 ஆயிரமாக உயர்த்தப் பட்டது.



- பதிவு செய்யப்பட்ட கரும்பு விவசாயிக்கு, கரும்புக்கு வழங்கப்படும் பயிர்க்கடன் ரூ. 45 ஆயிரத்திலிருந்து ரூ. 55 ஆயிரமாகவும், இதர பயிர்களுக்கு வழங்கப்படும் கடன் ரூ. 25 ஆயிரத்திலிருந்து ரூ. 35 ஆயிரமாகவும் உயர்த்தப்பட்டது.
- கிராமப் புறங்களில் அத்தியாவசியப் பண்டங்களை விநியோகிப்பதற்குத் தேவையின் அடிப்படையில் புதிய நியாய விலைக் கடைகள், பகுதி நேர நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.
- நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர் களுக்கு வழங்கப்படும் தொகுப்பூதியம் ரூ. 800 லிருந்து ரூ. 900 ஆக உயர்த்தப்பட்டது.

## ஆதிதிராவிடர் நலன்

■ ஆதிதிராவிட மேனிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் ஆய்வுக்கூடக் கட்டிடங்கள் கட்டப்பட்டுவருகின்றன.




■ ஆதிதிராவிட மாணவர்களுக்காகப் புதிதாக 40 விடுதிகள் அனுமதிக்கப்பட்டு, 1,250 மாணவ மாணவிகள் சேர்க்கப் பட்டுள்ளனர்.

■ வாடகைக் கட்டிடங்களில் இயங்கிவரும் அனைத்து ஆதிதிராவிட மாணவியர் விடுதிகளுக்கும் அரசுக் கட்டிடங்களை அடுத்த மூன்றாண்டுகளில் கட்டி முடிக்க சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படுகிறது.

■ ஆதிதிராவிட மாணவர்களுக்கென்று முதன்முறையாகப் பட்ட மேற்படிப்பு மாணவர் விடுதி தொடங்கப் படவுள்ளது.

## பிற்படுத்தப்பட்டோர் நலன்

★ 45 மாணவ, மாணவியர் விடுதிகள் புதிதாகத் தொடங்கப் பட்டுள்ளன.

★ பள்ளிப் படிப்பு உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் 10ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற் படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ மாணவியர் அனைவருக்கும் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

★ 70 மிகப் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளுக்கும் 30 சீர் மரபினர் விடுதிகளுக்கும் புதிய பாத்திரங்கள் வழங்கப் பட்டுள்ளன.

★ சென்னையில் உள்ள இ.ஆ.ப. / இ.கா.ப. தேர்வுகளுக்கான தனிப்பயிற்சி நிலையத்தில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்ட – மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு மாத உதவித்தொகை ரூ.250 லிருந்து ரூ. 500 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

★ பள்ளி, கல்லூரி மாணவர்கள் உதவித் தொகை பெற்றிட நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆண்டு வருமான வரம்பு




ரூ. 12 ஆயிரத்திலிருந்து ரூ. 25 ஆயிரம் ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

★ மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுக்கட்டணம் ரூ. 135 லிருந்து ரூ. 180 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## இந்து அறநிலையத் துறை

✡ ஓதுவார்கள், வேதபாராயணர்கள், கிராமப் பூசாரிகளுக்கான மாத ஓய்வூதியம் ரூ. 300 லிருந்து ரூ. 500 ஆக உயர்த்தப்பட்டது.

## காவல் துறை

◆ காவலர் பணிக்கு மேலும் 5 ஆயிரம் பேர் நியமிக்கப் படவுள்ளனர்.




## சிறு தொழில்கள்

- கடந்த 8 மாத காலத்தில் 22,219 சிறு தொழில் அலகுகள் ஏற்படுத்தப்பட்டு அவற்றின் மூலம் 1,33,744 நபர் களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.
- மகளிர் தொழில் முனைவோருக்கு வழங்கப்படும் மானிய உதவித் திட்டத்தின்படி 250 மகளிருக்குக் கூடுதலாக உதவி வழங்கப்பட்டுள்ளது.
- தொழில் மனை, கூடங்கள் ஒதுக்கீட்டில் மகளிர் தொழில் முனைவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

## தொழிலாளர் நலன்

* 'பி அண்ட் சி' மில் மீண்டும் திறக்கப்பட்டது.
* 1993, 94, 95 ஆகிய ஆண்டுகளில் வேலைவாய்ப்புப் பதிவினைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கி, மீண்டும் புதுப்பிக்க அனுமதிக் கப்பட்டது.
* அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களான கல் உடைப்போர், சுமை தூக்குவோர், கைவண்டி இழுப்போர் போன்றோர், வைப்பு நிதிப் பலனைப் பெறுவதற்கும், இ.எஸ்.ஐ. பலனைப் பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.



## வணிக வரி

❀ பலமுனை வரியை நீக்கி, அனைத்துப் பொருட்களுக்கும் (உள்நாட்டு மது நீங்கலாக) ஒரு முனை வரி விதிக்கவும் - பொதுமக்கள் அன்றாடம் உபயோகிக்கும் பருப்பு, மிளகாய், தனியா, மஞ்சள், புளி, சீரகம், பெருங்காயம், வெல்லம் மற்றும் சிகைக்காய் மீதான வரிகளுக்கு முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

❀ வெள்ளி மெட்டி, கொலுசு, அரைஞாண் கயிறு கையினால் செய்யப்பட்ட தீப்பெட்டிகள், நெல் உமி, குருணை மற்றும் தேங்காய் மட்டை மீது விதிக்கப்படும் வரிக்கு முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

❀ விற்பனை வரி மீதான மேல் வரி மற்றும் கூடுதல் மேல் வரியினை முழுவதுமாக நீக்கவும், சமையல் எரிவாயு மீதான விற்பனை வரியை 11.6 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாகக் குறைக்கவும்பட்டுள்ளது.

## போக்குவரத்து

✤ அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் அளிக்கப் பட்டு வரும் இலவசப் பயணச் சலுகை +2 மாணவர் களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.




✤ நடப்பாண்டில் 2,200 புதிய பேருந்துகள் இயக்கத் திட்டமிடப்பட்டு, அவற்றுள் 848 பேருந்துகள் இதுவரை விடப்பட்டுள்ளன.

## நிதித்துறை

✱ அரசு அலுவலர் குடும்பப் பாதுகாப்பு நிதி ரூ. 60 ஆயிரத்திலிருந்து ரூ. 1 இலட்சமாக உயர்த்தப்பட்டது.

✱ குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கான பணிக்கால வரம்பு 33 லிருந்து 30 ஆண்டாகக் குறைக்கப் பட்டது.




❊ மாநகராட்சி, நகராட்சி, நகரப் பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றிய அலுவலர்களுக்கும் அரசு அலுவலர்களைப் போலவே நல்வாழ்வு நிதித் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

❊ முதலில் வாங்கிய திருமணக் கடன் நிலுவையில் உள்ளபோது இரண்டாவது திருமணக் கடன் வழங்கப்படமாட்டாது என்ற தடை நீக்கப்பட்டது.

## பொதுப் பணித்துறை

✠ அரசின் பல்வேறு துறைகளில் பொதுப்பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரும்பொழுது விதிகளுக்கு முரணாக ஒரு வேலைக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி வழங்கி வந்த நிலை மாற்றித் திறந்தவெளி ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

✠ வட ஆற்காடு - அம்பேத்கர் மாவட்டம் ஆண்டியப்பனூர் ஓடை நீர்த் தேக்கத் திட்டம், திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம் குப்பாத்து ஓடை நீர்த்தேக்கத் திட்டம், திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டம் செண்பகத்தோப்பு நீர்த் தேக்கத் திட்டம் ஆகிய பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.










## மக்கள் நல்வாழ்வு

◆ பட்டதாரிகள் இதுவரை இல்லாத குடும்பத்தைச் சார்ந்த மாணவர்களில், முதல் 10 இடங்களைப் பெறுவோருக்குத் தொழில் நுட்பம், மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்விச் செலவினை அரசு ஏற்க, ஆணை பிறப்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

◆ 300 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்ட ஆணையிடப்பட்டு 200க்கான பணி தொடங்கப் பட்டுள்ளன.

◆ அரசு மருத்துவமனைகளுக்கு 10 ஆயிரம் படுக்கைகளும், 6 ஆயிரம் கட்டில்களும் வாங்க, மருத்துவ / ஊரக நலப் பணிகள் இயக்குநரால் நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது.

◆ 124 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தற்போது 24 மணி நேரமும் செயல்படத் தொடங்கி உள்ளன.

## சட்டத்துறை

★ திருநெல்வேலியில் புதிதாகச் சட்டக்கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டது.




★ டாக்டர் அம்பேத்கர் பெயரில் சட்டப் பல்கலைக்கழகம் ஒன்று நடப்பாண்டில் சென்னையில் தொடங்குவதற்கான சட்ட முன்வடிவு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## மின் துறை

☆ 7.5 மெகாவாட் திறன் கொண்ட சாத்தனூர் புனல் மின் நிலையமும் 8 மெகாவாட் திறன் கொண்ட பவானி புனல் மின் நிலையமும் முறையே 1997-ஆம் ஆண்டு செப்டம்பர், மார்ச் மாதங்களில் இயக்கிவைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

☆ வட சென்னை அனல் மின்திட்டம் மூன்றாம் நிலை 500 மெகாவாட்: பிள்ளைப் பெருமாள் நல்லூர் எரிவாயு சுழல் திட்டம் 330.5 மெகாவாட்: பேசின் பாலம் டீசல் மின் நிலையம் 200 மெகாவாட் - ஆகிய திட்டங்களுக்கு மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.




## செய்தி மக்கள் தொடர்பு

✡ வள்ளுவர் கோட்டத்தைப் புதுப்பித்திட ரூ. 1 கோடி வழங்கப்பட்டுள்ளது.

✡ சென்னையிலுள்ள பாரதியார் நினைவு இல்லத்தில் சிறந்த நூலகம் அமைத்தல், இன்னிசைப் பாடல்களை இசைத்தல் முதலிய பயன்மிகு பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

✡ [illegible] பணிக்குக் கூடமாக [illegible] படுவதற்கு ரூ. 1.5 கோடி அளிக்கப்பட்டுள்ளது.

✡ தரமான திரைப்படங்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மானியத்தொகை ரூ. 3 இலட்சத்திலிருந்து ரூ. 5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.



☆ திரைப்படத் தயாரிப்பாளர்கள் செலுத்திவரும் படப்பிடிப்புக் கட்டணம் ரூ. 5 ஆயிரம் என்பது ரூ. 1000 ஆகவும் ரூ. 2,500 என்பது ரூ. 500 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

✡ தேர்வுக் குழுவினரால் தரமான படம் எனச் சான்றளிக்கப்பட்டு வெளிவரும் படங்களுக்கு அவை வெளிவரும் நாளிலிருந்து 4 வாரங்களுக்குக் கேளிக்கை வரியிலிருந்து விலக்களிக்கப் பட்டுள்ளது.

✡ **பத்திரிக்கையாளருக்கான ஓய்வூதியம் ரூ. 500 லிருந்து ரூ. 1000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.**

## நகராட்சி நிர்வாகம்

❖ சென்னை மாநகரை மேம்படுத்த, பெரம்பூர் சுரங்கப்பாதை இருமருங்கிலும் பாதசாரிகள் நடக்க சுரங்கப்பாதை, பெரம்பூர் குக்ஸ் சாலை மற்றும் பி.பி. சாலை இணைக்கும் இரயில் மேம்பாலம், எழிலகம் அருகில் சுரங்கப்பாதை, நேப்பியர் பாலத்தின் அருகில் இன்னொரு மேம்பாலம், பேசின் பாலம் அருகில் மற்றொரு மேம்பாலம், ஸ்டர்லிங் ரோடு சந்திப்பு அருகில் மேம்பாலம், லஸ் அருகில் சுரங்கப்பாதை, தங்கசாலை மற்றும் பேசின் பாலம் சந்திப்பில் சுரங்கப்பாதை, ஆயிரம் விளக்குப் பகுதியில் அண்ணாசாலையும் திரு.வி.க. சாலையும் சந்திக்கும் இடத்தில் வணிக வளாகம், தியாகராயர் சாலையி லுள்ள பழைய அங்காடிகளைப் புதுப்பித்துப் புதிய அங்காடிகளை உருவாக்குதல், அண்ணாநகர் டாக்டர் விஸ்வேஸ்வரய்யா கோபுரப் பூங்காவில் பொழுதுபோக்கு மையப்பூங்கா, மெரினா நீச்சல் குளம் அருகில் சங்கீத நீரூற்று, சென்னை ஜார்ஜ்டவுன் பிரகாசம் சாலை - லோன்ஸ்கொயர் வாகனம் நிறுத்தும் வசதிக்காக மூன்று மாடிக் கட்டிடம், வெளியூர் ஜார்ஜ்டவுன் பேருந்து நிலையம், பிராட்வே நவீனப்படுத்துதல் ஆகிய 15 திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

## கைத்தறி

● கைத்தறி நெசவாளர்களுக்கான சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை ரூ. 25 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.

● கதர்த் தொழிலில் ஈடுபடுவோரின் குடும்பங்களுக்கு ரூ. 10 ஆயிரம் வழங்கும் காப்பீட்டுத் திட்டம் செயல் படுத்தப்படுகிறது.




## வீட்டு வசதித் திட்டம்

❑ 1996-97ல் ரூ. 247 கோடி செலவில், புறநகர்ப் பகுதிகளில் 20 ஆயிரம் குடியிருப்புகள் கட்டப்படும். 31 நகரங்களை வளரும் மையங்கள் எனத் தேர்ந்தெடுத்து அவற்றுள் 13 மையங்களில் 9 ஆயிரம் குடியிருப்புகள் கட்டப்படுகிறது. இதுவரை 1667 குடியிருப்புகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.











## தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு

❋ தமிழ்மொழிக் காவலர்கள் 1935 பேருக்கு உதவித் தொகை ரூ. 400 லிருந்து ரூ. 1,500 ஆக உயர்த்தியும், அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்கள் 441 பேருக்கும் நலிந்த கலைஞர்கள் 4,267 பேருக்கும் வழங்கப்படும் உதவித்தொகை ரூ. 400 லிருந்து ரூ. 500 ஆக உயர்த்தியும் வழங்கப்பட்டு வருகிறது.

❋ தமிழ் ஆட்சி மொழித் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படுவதன் முதற்கட்டமாக 500 தமிழ் தட்டச்சுப் பொறிகள் தலைமைச் செயலகத் துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

❋ தேவநேயப் பாவாணர் அவர்களின் அரிய நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டு அவரது குடும்பத்தாருக்கு ரூ. 20 இலட்சம் பரிவுத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

## வருவாய்த் துறை

❖ அண்ணா, ராஜாஜி. ஏ.டி. பன்னீர் செல்வம், எம்.ஜி.ஆர்., மன்னர் திருமலை,, வீரன் அழகுமுத்து ஆகியோர் பெயரால் மாவட்டங்கள் அமைக்கப்பட்டன.

❖ மனுநீதித் திட்டம் சீரமைக்கப்பட்டு, மக்கள் பயன்படும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரணத்தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ. 15 ஆயிரம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

❖ நலிவுற்றோர் குடும்பநல நிவாரணத் திட்டத்தின் கீழ் நிவாரணத் தொகை ரூ. 5 ஆயிரத்திலிருந்து ரூ. 7,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

❖ இயற்கைச் சீற்றத்தினால் மரணமடைந்தவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ. 10 ஆயிரத்தி லிருந்து ரூ. 15 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.

## நரகத்தில்...

அந்த மடாலயத்திற்கு ஒருவர் வந்தார்.

குருவை வணங்கிவிட்டு, எதிரில் அமர்ந்தார்.

பிறகு அவரிடம். ''சுவாமி! நீங்கள் நூறு வயது ஆன பின் நீங்கள் என்ன ஆவீர்கள்?'' என்று கேட்டார்.

''குதிரையாக ஆவேன். இல்லாவிட்டால் கழுதையாக ஆவேன்.'' என்றார் குரு.

''அப்புறம் என்ன செய்வீர்கள்?''
'' நரகத்திற்குப் போவேன் ''

''நீங்கள் பெரிய ஞானியாயிற்றே! நரகத்திற்கு ஏன் போவீர்கள் என்று கேட்டார் அந்த மனிதர்.

''அங்கே போனால்தான் உன்னை அங்கே சந்திக்க முடியும்? அப்புறம் உனக்கு உபதேசம் செய்வது யார்?'' என்றார் குரு!



—''சுட்டால் ஆகுமோ? சொல்ல [illegible]
[illegible] நீ!''
— தாயுமானவர்.



# மணலும் நுரையும்

கலில் கிப்ரான்



கடற்கரை மீது
மணலுக்கும் நுரைக்கும் நடுவே
நான் நிரந்தரமாய்
நடந்து கொண்டிருக்கிறேன்!
நெடிய அலைகள்
என் காலடிச் சுவடுகளை அரித்துவிடும்!
காற்று
நுரைக் குமிழ்களை ஊதித் தள்ளிவிடும்!
ஆனால்,
கடலும், நுரையும் கரையும்
என்றும் நிரந்தரமானவை!

**

ஒருமுறை
என் கைகளை மூடிக்குவித்து
மூடுபனியால் நிரப்பினேன்!
திறந்தேன்!
ஓ!
அந்த மூடுபனி
புழுவாக மாறியதை உணர்ந்தேன்!
மறுபடியும்
திறந்து மூடினேன்;
அங்கே
கைக்குள்ளே ஓர் பறவை!
மீண்டும் திறந்து மூடினேன்;
கைக்குள்ளே
சோகம் கப்பிய முகத்துடன்
மெல்ல ஒரு மானுடன்
எழுந்தான்!.........
திரும்பவும்,
மூடிய என்கைகளைத்
திறந்தேன்- உள்ளே
வெறுமை இல்லை; மூடுபனி மட்டும்!





ஆனால்
இனிமை மிளிரும்
ஓர் பாடலை நான்
செவிமடுத்தேன்!
நேற்றுவரை-
வாழ்க்கைக் கோலத்தில்
ஒழுங்கற்ற
ஒரு சிறு துகளாக
இருப்பதாகவே
நான்
நினைத்தேன்!
ஆனால்-
இப்போதோ
நானே அந்தக்
கோளம்
எல்லா உயிர்களும்
ஓர் ஒழுங்கில்
என்னுள்
வட்டமிடுவதை
அறிகிறேன்!

**

ஒரு சிறு
மணல் துகளைச் சுற்றி
வலியால் எழுப்பப்பட்ட
ஓர் ஆலயமே
முத்து!
எந்தத் துகள்களைச்சுற்றி
நெடிய
நம் உடல்கள்
கட்டப்பட்டதோ..

**

தவளைகள்
எருதுகளைவிட
மிகுதியாய்ச் சத்தமிடும்.
ஆனால்-
அவைகளால்
கலப்பையை இழுத்துக்
கழனிகளை உழமுடியாது!
வண்டிகளை இழுக்க முடியாது!
உங்களால் அவற்றின்
தோல்களைக் கொண்டு
காலணிகள் கூட
செய்ய முடியாது!



# பூம்புகார்

## கலை வடிவங்கள்...
## பழமையின் பெருமையை உணர்த்தும் பரவச நேரங்கள்!



சேர, சோழ, பாண்டியர் காலப் புராதன கலை நயங்களைப் பிரதிபலிக்கும் கவின் மிகு கலை அழகுப் பெட்டகங்கள். பூம்புகார் மட்டுமே அதன் வடிவங்களுக்கு உயிரூட்டக் கூடிய உன்னத வேலைப்பாடுகள். தமிழ்நாடு கைத்திறத் தொழில் வளர்ச்சிக் கழகம் என விளங்கும் பூம்புகார் தமிழகத்தின் பெருமையை உலகெங்கும் பறைசாற்றும் ஒரு கலைக் கூடமாக விளங்குகிறது.

கற் சிற்பங்கள், காட்டு மர, நூக்க மர, சந்தன மர வேலைப்பாடுகள், வெண்கலச் சிலைகள், பித்தளை விளக்குகள், தஞ்சாவூர் தட்டு வகைகள், பீங்கான் மற்றும் சுட்டமண் கலைப்படைப்புகள் இன்னும் பலப் பல. பூம்புகாரின் கை வண்ணங்கள் அழகுப் பெட்டகங்கள் மட்டுமல்லாமல் பல்வேறு உபயோகப் பொருட்களும் ஆகும். தமிழகத்தின் புகழைப் பறை சாற்றும் பணியில் தன்னை நாளும் அர்ப்பணித்துள்ள ஒரு நிறுவனம் - பூம்புகார்.

பூம்புகார்

அமைப்பாளர்கள் : தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
759, அண்ணா சாலை, சென்னை - 600 002. ✆ 8521271, 8521325

DIPR/201/DIS/97

விற்பனை நிலையங்கள் : சென்னை ✆ 8520624. புது தில்லி ✆ 3363913. கல்கத்தா ✆ 4730028. பெங்களூர் ✆ 5580582. திருப்பதி ✆ 22775. கோயம்புத்தூர் ✆ 391055. சேலம் ✆ 54767. ஈரோடு ✆ 254885. மாமல்லபுரம் ✆ 42224. திருச்சி ✆ 704895. கன்னியாகுமரி ✆ 71040. திருநெல்வேலி ✆ 23391. தஞ்சாவூர் ✆ 30060. மதுரை ✆ 740517.

25 cms. x 4 col.






# மாணவ மணிகளே! உங்களுக்கு வெற்றி நிச்சயம்!

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தேர்வுகள் நடைபெறும் நேரம் இது; மாணவ-மாணவிகள் பரிபூரண வெற்றி பெற்று ஒளி மய மான எதிர்காலத்தைக் காண என்ன செய்யவேண்டும்? - இந்தக் கேள்விக்கான விடை கீழே விரிவாகத் தரப்பட்டுள்ளது, விளைச்சல் நேர்த்தியாக இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பில்!

புத்தகத்தில் படித்த எல்லாவற்றையும் அப்படியே எழுதித் தீர்ப்பதல்ல தேர்வு.

முதலில், கேள்வி என்ன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்; பிறகு அதற்கான பதிலை மட்டும் எழுதுங்கள் போதும். தேவையானதைத் தெளிவாக எழுதுவதுதான் சரியான விடையாகக் கருதப்படும்.

பள்ளிக்கூடத்திலும், கல்லூரியிலும், என்னென்ன படிக்கவேண்டும் என்றுதான் பெரும்பாலும் சொல்லித்தரப்படுகிறதே தவிர, எப்படித் தேர்வு எழுதுவது என்று முறையான பயிற்சி தரப்படுவதில்லை. எந்த ஒரு மாணவனின் விடைத்தாள் பற்றியும் அவனிடம் விவாதிப்பதும் இல்லை; விடைகளை எப்படி எழுதியிருந்தால் சரியாக அமைந்திருக்கும் என்று அறிவுறுத்துவதும் இல்லை.

நம் மாணவர்கள் திறன் அளவுக்கு அதிகமாக மதிப்பிடப்படுவதும் இதற்கான காரணமாக இருக்கலாம். மேலும், அண்மைக் காலமாக-

நகரப் பேருந்துகளில் நிரப்பப்படுவது போல வகுப்பறைகளில் அளவுக்கதிகமான மாணவர்கள் திணிக்கப்படுகிறார்கள்; அவர்கள் வருகையைச் சரிபார்க்கவும், பாடம் சொல்லித்தரவும், குறிப்புகளை எழுதிக் காட்டவும் மட்டுமே ஓர் ஆசிரியருக்கு நேரம் சரியாக இருக்கும். அதெல்லாம் வகுப்பறையின் முக்கியமான சடங்காக இருக்குமே தவிர, தேர்வுக் காலத்தில் மாணவர்களுக்குச் சங்கடமாக அமைந்துவிடும்.



நிறைய எழுதினால் நிறைய மதிப்பெண் பெற்று விடலாம் என்று, மாணவர்களே! உங்களில் சிலர் நினைக்கலாம்; விடைத்தாளைப் பரிசோதிக்கிற ஆசிரியர், ஒரு பக்கத்தில் பத்துப் பன்னிரண்டு வரிகள் இருந்தால்தான் மகிழ்ச்சியோடு அதிக மதிப்பெண் போடுவார் என்று - திருத்துபவரையே சிலர் எடைபோடுவதும் உண்டு. ஆனால்-

இந்த இரண்டுமே சரியல்ல. எல்லாத் தேர்வுகளின் அடிப்படையும் மாணவரின் திறமையைச் சோதிப்பது தான். இதுதான் தேர்வின் மையக் கருத்து என்பதை நீங்கள் சரியாகப் புரிந்து கொண்டால், உங்கள் விடைத்தாளும் சரியாக அமைந்துவிடும்.



இரண்டு மூன்று வரிகள் மட்டுமே உள்ள வினாத்தாளில், முதல் வரியை மட்டுமே படித்து விட்டு, சிலர் விடையை எழுதி விடுவார்கள்; முழுக் கேள்விக்கும் விடைக்கும் துளிக்கூட சம்பந்தமே இருக்காது.

மாணவர் பக்கம்:

ஆகவே, முழுக்கேள்வியையும் படித்து விட்டுத்தான் எந்த ஒரு வினாவுக்கும் விடை எழுதவேண்டும்; அப்படி எழுதுமுன் வினாவின் தன்மை, அதற்கு எந்த விகிதத்தில், எந்த முறையில் பதில் கொடுப்பது என்பதையும் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

சரியான பதில் தரமுடியும் என்று தெரிகிற வினாவுக்கான விடையை முதலில் எழுத வேண்டும்; அதே நேரத்தில், அதையே விரிவாக எழுதி நேரத்தைச் செலவிட்டு விடாதீர்கள்; சரியாகத் தெரியாத வினாக்களுக்குத் தாறுமாறாகவோ, அரக்கப் பரக்கச் சுருக்கி எழுதியோ முடித்தும் விடாதீர்கள்.

அந்த இரண்டுவிதக் காரியமும் உங்களைத் தோல்வியுறச் செய்துவிடவும் கூடும்.

தேர்வுக்குச் செல்லு முன்பே, முக்கிய வினாக்கள் யாவை என்பதை நீங்களே கணித்துக் கொள்ளுங்கள்; பிறகு, ஒவ்வொரு வினாவிற்குமான விடை எழுத எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ளலாம் என்பதையும் எழுதிப் பார்த்து முடிவு செய்யுங்கள். உங்களுடைய தேர்வு நேரப் படபடப்பை இது தவிர்க்கும்.

வினாத்தாளில் கூட, முன்னதாகவே ஒரு கேள்விக்கு எவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டு விடை எழுதலாம் என்று நேரம் குறித்துக் கொண்டு எழுதுவதும் நல்ல ஆரம்பமாக அமையும். இதற்கும் நீங்கள் குறைந்த நேரமே எடுத்துக் கொள்ளவேண்டும், மறந்துவிடாதீர்கள்.

எல்லாக் கேள்விகளுக்கான விடைகளுமே உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்; அதற்காக, எதையும் வரிசைப்படிதான் எழுதவேண்டும் என்பதில்லை.

அவற்றிலும் மிக நன்றாக விடைதெரிந்த கேள்வி ஒன்று இருக்குமல்லவா? அதற்கு முதலில் விடை எழுதுங்கள். இப்படிச் செய்வது விடைத்தாளைத் திருத்துபவர் மனதில், உங்கள் திறனில் நல்லபிப்பிராயத்தை உண்டாக்குவதாக இருக்கும்.

உங்கள் தலையெழுத்து எப்படியிருந்தாலும், கையெழுத்து அழகாக இருக்க வேண்டும். அந்த எழுத்துத்தான் விடைத்தாள் மதிப்பீட்டாளருக்கு உங்களை அறிமுகப்படுத்துவதாகும் என்பதைச் சிறிதும் மறந்துவிடாதீர்கள்.



அழகிய கையெழுத்து வாசிப்பவருடைய சிரமத்தைக் குறைக்கும்; இது மட்டுமல்ல; தெளிவான அழகான எழுத்து, தேர்வில் உங்கள் வெற்றியின் தூரத்தையும் குறைக்கும்.

நிறைய அடித்தல் திருத்தல் கொண்டதாக உங்கள் விடைத்தாள் இருக்குமானால், சரியான விடைதர முடியாமல் உங்கள் மனம் அலை மோதியதையே அது காட்டும்.

வார்த்தைக்கு வார்த்தை சரியான அளவுடன் போதுமான இடைவெளி உங்கள் எழுத்தில் இருக்கட்டும். அதுதான் உங்கள் மனத் தெளிவையும், திறனையும் பிரகடனப்படுத்துவதாக இருக்கும்.

ஒவ்வொரு விடைத்தாளிலும் சில பகுதிகள், தெரிந்து கொள்ளுவதை அடிப்படையாகவும், சில புரிந்து கொள்ளுவதை ஆதாரமாகக் கொண்டும் அமைக்கப்படுகின்றன.

தெரிந்ததை எழுதுவது மட்டுமல்ல தேர்வு; அதற்கப்பாலும் செல்ல வேண்டும். அப்படி எழுதுவது உங்கள் மனப்பக்குவத்தையே எடுத்துக்காட்டும்.

உங்கள் விடைத்தாளின் ஒரு பக்கத்தில் குறைந்தது 20 வரிகளை நீங்கள் எழுதலாம். ஒரு வரிக்கு 6 அல்லது 7 சொற்கள் அமையலாம். இதைத் தோராயரமாகக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.





இவ்வாறன்றி, மனம் போன போக்கில் எழுதித்தள்ளாதீர்கள்; அதற்காக வரிகளையும், சொற்களையும் ஒவ்வொரு பக்கமும் எண்ணிப் பார்த்தே உங்கள் பொன்னான தேர்வு நேரத்தை வீணாக்கி ஏமாந்துவிடாதீர்கள்.

விடைத்தாளில் நீங்கள் கையாளும் மொழியின் தன்மை மிகவும் முக்கியம்; நேர்த்தியான, ஆடம்பரமில்லாத சொற்களால் உங்கள் விடைகள் நெய்யப்பட வேண்டும். எந்த ஒரு சொல்லும் பயனற்றதாகக் கருதப் படலாகாது.

வாக்கியங்கள் சின்னச் சின்னதாக இருக்கட்டும். ஒரு வாக்கியம் ஐந்தாறு வரிகள் வரை போய் விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இலக்கியம் தவிர, மற்ற விருப்பப் பாடங்களில் தேவையற்ற அடைமொழி, சிலேடை, உதாரணம் எதுவும் இடம்பெறச் செய்யாதீர்கள்.

அவ்வாறு செய்தால், திருத்துபவருக்கு நீங்கள் எரிச்சல் மூட்டியவர்கள் ஆகி விடுவீர்கள்.

முடிந்தால், விடையைச் சிரமப்படி, தகவல் வாரியாக வகைப்படுத்தி எழுத முயலுங்கள். முக்கியத் தகவல்களைச் சாய்வு எழுத்தாக மாற்றி எழுதலாம்; அல்லது அடிக்கோடு போடலாம்.

விடைகளின் இடையே முக்கியச் செய்திகள் தெரிவிக்கப்படும் பத்திகளுக்கு, ஆங்காங்கே துணைத் தலைப்பும் போடலாம். அப்படிச் செய்வது, திருத்துபவருக்குத் திருப்தியளிக்கும்.

தாவரவியல், விலங்கியல், வேளாண்மை, கால்நடை, மருத்துவம் போன்ற விடைத்தாள்களில் படங்கள், கிராஃப் சார்ட் போன்றவற்றைத் தேவையான இடங்களில் பயன்படுத்தலாம்.

இப்படிச் செய்வது உங்கள் விடைக்கு வலுவூட்டும்; கருத்துக்கும் செறிவூட்டி வெற்றிக்கு வழிகாட்டும்.

விடைகளில் புள்ளிவிவரங்களையோ, ஆண்டுகளையோ தெரிவிக்க வேண்டி வருமானால், சரியாகத் தெரிந்தால் எழுதுங்கள்; அதற்கான ஆதாரத்தை அடைப்புக்குறியில் குறிப்பிடுங்கள்.

குறிப்பிட்ட விடைபற்றிய மாறுபட்ட கருத்து எதையேனும் சொல்லுவீர்களானால், அதைச் சொன்னவர் யார் என்றும் தவறாமல் தெரிவியுங்கள்.

தேர்வு 3 மணி நேரம் நடக்கிறதென்றால், கடைசி நிமிஷம் வரை நினைத்து நினைத்து எழுதிக் கொண்டிருக்காதீர்கள்.

5 நிமிஷத்திற்கு முன்னதாகவே நீங்கள் உங்கள் விடைகளை எழுதி முடித்துவிடுங்கள். கடைசி நேரம் - எழுதியவற்றைச் சரிபார்க்கவும், சிறு சிறு பிழைகளை நீக்கவும் உங்களுக்குப் பயன்படும்.

தேர்வு எழுத அறைக்குள் நுழைகிற வரையில் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டே இருக்காதீர்கள்.

ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே அதை மூடி வைத்துவிட்டு மனதை ஒருமுகப்படுத்திக் கொள்ளுங்கள்; வீண் பதட்டத்தைத் தவிர்த்துவிடுங்கள்.

தேர்வுத் தாள்களின் தலைப்பில் உங்கள் குலதெய்வங்களின் பெயரையெல்லாம் எழுதி 'துணை' என்று பெரிதாகப்போட்டு விடைகளை எழுதத் தொடங்குவது முறையல்ல.

ஏனென்றால், அந்தத் தாளைத் திருத்துபவர் கடவுள் நம்பிக்கை அற்றவராகவோ, வேறு மதத்தைச் சேர்ந்தவராகவோ இருந்தால் வம்பாகிவிடும்.

நீங்கள் தயாரித்துக் கொண்டு போனதில், பாதி விடைக்கான கேள்வி கூட இல்லையென்று வைத்துக் கொள்ளுங்கள்; தெரிந்தவற்றுக்கு மட்டும் தெளிவுபட விடை தருவதோடு முடித்துக் கொள்ளுங்கள்.

'நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று விடைத்தாள் பரிசோதகருக்கு விண்ணப்பிப்பதோ - 'என் வாழ்வே உங்கள் கையில்தான் இருக்கிறது' என்று மிரட்டுகிற பாணியில் எழுதுவதோ தவறு, தவறு, தவறு!

– இந்த அளவுக்கு உங்களை நீங்கள் ஆயத்தப்படுத்திக் கொண்டு, தேர்வுக்களத்தில் இறங்குங்கள்; வெற்றி நிச்சயம்!

**அ**றிஞர் அண்ணா எழுதியிருந்த அற்புதமான ஒரு சிறுகதையை (மனைவியும் மரப் பொம்மையும்) வெளியிட்டு எங்களை மகிழ்வித்தீர்கள். நன்றி.

– **சி. இராமசாமி, இலட்சுமணன்,**
வேலப்பநாய்க்கன் பாளையம்.

**'க**ண்ணுபடப் போகுதய்யா தமிழரசுக்கு.. உன்னெ சுத்திப் போடவேணும் ஒவ்வோர் இதழுக்கும்!'

– **தி.சே. அறிவழகன்,**
திருப்புலிவனம்.

**க**விக்கொண்டல் மா. செங்குட்டுவனார் எழுதியிருந்த 'இலக்கியச்சிந்தனை' உயர்வான நற்சிந்தைக்கு விருந்தாக அமைந்தது.

– **கவிஞர் இடிமுரசார்,**
சென்னை - 14.

'**த**மிழரசு' எல்லாவகையிலும் ஒரு நடமாடும் நூலகத்தைப்போலவே திகழ்கின்றது; பாராட்டுகிறேன்.

– **மு. செல்வம்**, கீரப்பாளையம்.

'**த**மிழரசை' வெறும் பொழுதுபோக்குப் புத்தகமாக இல்லாமல், எல்லாவகையிலும் என்போலும் வாசகர்களின் மனதைத் தொடும் வகையில் உருவாக்கிவருகிறீர்கள்; எங்கள் நல்வாழ்த்துகள்.

– **க. இளையராஜா, ஆசனூர்.**

**க**விஞர் மு. மேத்தாவின் கவிதை மிகச் சிறப்பாக இருந்தது; அவ்வாறான கவிதைகளைத் தொடர்ந்து வெளியிடவும்.

– **கி. முருகேசன்,** பென்னாட்டகரம்.

**அ**றிவியல் துளிகள்' தமிழுக்குஏற்றம் அளிப்பவை; விட்டுவிடாதீர்கள்.

– **ம. பிரஷ்நேவ்,** காத்திருப்பு.

**பு**ரட்சிக்கவிஞர் பாரதிதாசனாரை நாடக ஆசிரியராகவும் காட்டி மகிழ்வித்தீர்கள்; நன்றாயிருந்தது.

– **பி.எம். வேலப்பன்,**
ஆலத்தூர்.

'**ஈ** மெயில்' என்ற அரிய கட்டுரை, விஞ்ஞான வளர்ச்சியில், செய்தித் தொடர்பு பெற்றுவரும் சிறப்பை எடுத்துக்காட்டுவதாக இருந்தது.

– **கே.ஆர். உதயகுமார்,** சென்னை -1

'**எ**ங்கள் ஊர் பிரச்சினை' மூலம்தான் ஒவ்வொரு ஊரிலும் புதிய நூலகம் திறக்கும் வழிவகைபற்றி நாங்கள் உணரமுடிந்தது. நல்லதோர் பகுதி அது.

– **இரா. ஜெனமேஜெயன்,**
மேலமணக்குடி.

**அ**ரசு ஆணைகளை முடிந்தவரை தமிழ் விளக்கத்தோடு வெளியிட்டால் நன்றாயிருக்குமே?

– **நா.மு. நாச்சியப்பன்,** ஒக்கூர்.

**அ**ரசு வேலைவாய்ப்புச் செய்திகள், தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் விளம்பரமெல்லாம் தமிழரசில் எப்போதும் இடம்பெறச் செய்தால் மிகவும் உதவியாக இருக்கும்.

– **எஸ். செந்தில்குமார்,** பழநி.




அடுத்த பக்கத்திலிருந்து 1997-98-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை தொடங்குகிறது. பக்கம் 32-ல் உள்ள 'பின்'களில் நடுப்'பின்'னை நீக்கினால் நிதிநிலை அறிக்கை உங்களுக்குத் தனியே கிடைக்கும்.





**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்ற ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை நான் இந்த அவை முன் வைத்து உரை ஆற்றியபோது-

**"மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற**
**இடுக்கண் இடர்ப்பா டுடைத்து"**

எனும் திருவள்ளுவர் வாய்மொழிக்கேற்ப, தடங்கல் நிறைந்த, கரடு முரடான பாதையில் பெரும் பாரத்தை எருது இழுத்துக்கொண்டு போவதுபோல, விடா முயற்சியுடன் செயல்பட்டால் துன்பங்களுக்கு முடிவு ஏற்பட்டு, வெற்றி கிட்டும் என்கிற திடசித்தமுடன் இந்த அரசு செயல்படுவதாகக் குறிப்பிட்டிருந்தேன். கடந்த பத்து திங்களில், மேற்கூறியவாறு செயல்பட்டு, இருமுறை பெரு மழை, பெருகிவந்த வெள்ளம் மற்றும் பல பகுதிகளில் வறட்சி நிலை ஆகியவற்றிற்கும் ஈடுகொடுத்து, இதற்கிடையே ஒரே கட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகள் முழுமைக்குமான தேர்தல்கள், தொடக்கக் கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்கள் ஆகியவற்றையும் வெற்றிகரமாக நடத்தி, மக்களுடைய நல்வாழ்வுக்கும் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குமான பல திட்டங்களைத் துவக்கி இந்த அரசு அரும்பணி ஆற்றி வருகிறது. இந்தப் பயணத்தில் மேலும் விரைவாகச் செல்லும் வகையில் அரசு இயந்திரத்தை முடுக்கிவிட்டு, மக்களின் நல்வாழ்வுக்காகத் தொடர்ந்து செயல்படுவோம் என்ற உறுதியுடன், 1996-97 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளையும், 1997-98 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இந்த அவை முன் வைக்கிறேன்.

## மத்திய - மாநில உறவுகள்

2. அனைத்து மாநிலங்களின் குழுவை (Inter-State Council) அமைக்க அரசியலமைப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்த போதிலும், முதல்முறையாகத் தேசிய முன்னணி அரசுக்குப் பிறகு, 1996 ஆம் ஆண்டில் ஐக்கிய முன்னணி அரசுதான் இந்தக் குழுவின் இரண்டாம் கூட்டத்தைக் கூட்டியது. 15.10.1996 அன்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்க வேண்டுமென்ற நியாயமான கோரிக்கையை நிறைவேற்றிட சர்க்காரியா கமிஷனின் பரிந்துரைகள் போதுமானவையாக இல்லை என்றும், இப்பரிந்துரைகளை மீண்டும் பரிசீலித்து மேம்படுத்த இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளேன்.

3. ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கான அணுகுமுறை அறிக்கை குறித்துப் பரிசீலிப்பதற்காக, இந்தியப் பிரதமர் தலைமையில், மாநில முதல்வர்கள் பங்கேற்ற தேசிய வளர்ச்சிக் குழு 16.1.1997 அன்று கூடியபோது, உத்தேசிக்கப்பட்டுள்ள உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி ஆண்டுக்குச் சராசரி ஏழு சதவீதம் என்பதை வரவேற்று, அதற்கேற்ப மைய அரசு, மாநிலங்களுக்குப் போதிய நிதி ஆதாரங்களை வழங்கவேண்டும் என்பதை நான் வற்புறுத்தியுள்ளேன். ஒன்பதாம் திட்டக்காலத்தில், மைய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் நிதியுதவியில் மானியத்தின் அளவை 30 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்தவேண்டுமென்று எடுத்துரைத்தேன்.

4. மைய-மாநில அரசுகளிடையே பகிர்ந்து கொள்ளத்தக்க தொகுப்பில் மைய அரசு விதிக்கும் வரிகள் அனைத்தையும் சேர்க்க வேண்டுமென்ற பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளை விரைந்து செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து முதலமைச்சர்கள் கூட்டத்தில் வலியுறுத்தியதை மத்திய நிதி அமைச்சர் அவர்கள் ஏற்று அறிவித்துள்ளது மாநில உரிமைகளை மைய அரசு மதிப்பதற்கான துவக்கம் என்ற அளவில் வரவேற்கிறேன்.

## உள்ளாட்சி மன்றங்கள்

5. உள்ளாட்சி மன்றங்களுக்குப் படிப்படியாக அதிகப் பொறுப்புகளையும், அதிகாரங்களையும், நிதி ஆதாரங்களையும் வழங்க இந்த அரசு முன் வந்துள்ளது.

6. ஏற்கெனவே தமிழகத்தில் இருந்த முறைப்படி, கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுவின் அலுவல்முறையிலான உறுப்பினர்களாக இருக்கும் வகையிலும், ஊராட்சி ஒன்றியத் தலைவர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் வகையிலும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட

மாண்புமிகு முதலமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்கள், 1997-98 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை சட்டமன்றப் பேரவை முன்வைத்து 1997 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 5 ஆம் நாளன்று ஆற்றிய உரை








வேண்டும் என்று மைய அரசை இந்த அரசு கேட்டுக் கொள்ளும்.

7. மாவட்ட ஊராட்சி மன்றங்கள் ஊரகப் பகுதிகளில் அரசுத் துறைகளின் வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடு பற்றி விவாதித்து, அவற்றின் மேம்பாட்டுக்குத் தக்க பரிந்துரைகள் அளிக்கும். மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டினை, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, உரிய பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யும்.

8. தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் கீழ் கிராம ஊராட்சிகள் நிலையிலும், ஊராட்சி ஒன்றியங்கள் நிலையிலும் ஆற்ற வேண்டிய கட்டாயமான பணிகளைப் (Mandatory functions) பொறுத்தவரையில், ஊராட்சித் தலைவரை நிர்வாக அதிகாரியாக அறிவிப்பதற்கும், குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள் அமைத்தல், சாலைகளைப் பராமரித்தல், பொதுச் சுகாதாரம், தூய்மை ஆகியவற்றைப் பேணுதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காக அவர்களுக்குத் தேவையான நிதி ஆதாரங்களையும் பணியாளர்களையும் அளிப்பதற்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், சிறு பாசன ஏரிகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள், கட்டடங்கள் ஆகியவற்றின் பராமரிப்பு போன்ற முக்கியப் பணிகள் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்புக்கு உட்பட்டவையாகும்.

9. மேலும் கூடுதல் பொறுப்புகளை உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிப்பது குறித்து, மாநில திட்டக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் வறுமை ஒழிப்புத் திட்டங்கள், குடிநீர் வழங்கல், பொது விநியோக முறை, சாலைகளும், தகவல் தொடர்பும், கதர்த் தொழில்கள், கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி, நூலகங்கள், ஊரக மின் வசதி, நவீன எரிசக்தி ஆதாரங்கள் ஆகிய முக்கியத் துறைகளில் திட்டங்களைச் செயற்படுத்துவதிலும் கண்காணிப்பதிலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய பொறுப்புகளை ஒப்படைத்து அரசு ஆணை பிறப்பிக்க முடிவு செய்துள்ளது. இத்துடன் கிராமப்புறங்களில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளை மேற்பார்வையிடும் பொறுப்பைக் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

10. உள்ளாட்சி அமைப்புகளே அவற்றுக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்புகள் குறித்த முடிவுகளை எடுக்கும் என்றும், அதிகாரிகள் அம்முடிவுகளைச் செயற்படுத்தும் பொறுப்பை மட்டுமே வகிப்பார்கள் என்றும் நான் திட்டவட்டமாக அறிவிக்கிறேன்.

11. உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதலாக நிதி அளித்திட மாநில நிதிக்குழுவின்

பரிந்துரைகளைப் பரிசீலித்து அரசு பின்வரும் முடிவுகளை எடுத்துள்ளது:-

அ) மொத்த கேளிக்கை வரியில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த, 60 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையிலான பங்கீட்டை, 1997-98ம் ஆண்டு முதல், 90 சதவீதம் என உயர்த்தி அளிக்கப்படும்.

ஆ) நமது மாநிலத்தில் முதல் தடவையாக, கேளிக்கை வரி நீங்கலாக அனைத்து வரி வருவாயில் 8 சதவீதம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும்.

இ) இந்த 8 சதவீத நிதி ஒதுக்கீடு சில வரைமுறைகளுக்குட்பட்டு அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பிரித்தளிக்கப்படும். இவ்வாறு பிரித்தளிக்கும் முறையைச் செயல்படுத்துவதனால் உள்ளாட்சி அமைப்புகளிடையே ஏற்படக்கூடிய ஏற்றத்தாழ்வுகளை ஓரளவு சரி செய்ய ஊக்க மானியங்களைத் தொடர்ந்து அளிப்பதற்காக, இந்த எட்டு சதவீத ஒதுக்கீட்டுத் தொகையில் 15 சதவீதம் ஊக்கம் மற்றும் சமன்பாட்டு நிதி என்ற தலைப்பில் வைக்கப்பட்டு அதில் ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு 60 சதவீதமும் நகர உள்ளாட்சி மன்றங்களுக்கு 40 சதவீதமும் பகிர்ந்து அளிக்கப்படும்.

ஈ) எட்டு சதவீத நிதி ஒதுக்கீட்டில், மீதமுள்ள தொகையை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 55 சதவீதமும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 45 சதவீதமும் அளிக்கப்படும்.

12. இவற்றின் வாயிலாக இந்த ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய்க் கணக்கில் அளிக்கும் மானியம் ரூ.646 கோடியிலிருந்து 1997-98ல் ரூ. 1174 கோடியாக அதிகரிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

13. அனைத்து மாநகராட்சிகளின் மேயர்களுக்கும், மன்றங்களுக்கும், ஆணையாளர்களுக்கும் கூடுதல் நிதி அதிகாரங்களை அளிக்க மாநகராட்சிச் சட்டங்களுக்குத் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் உள்ள மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி அமைப்புகள் அனைத்திற்கும் பொதுவான சட்டம் ஒன்றும் இக்கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

## நிர்வாகச் சீர்திருத்தங்கள்

14. வருவாய்த் துறை பொது மக்களின் அன்றாட வாழ்க்கையில் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. அதன் பொறுப்புக்களைத் தெளிவாக வரையறுப்பதற்கும், நிருவாகத்தில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கும், கீழ் நிலையிலுள்ள அதிகாரிகளுக்குத் தேவையான அதிகாரங்களை வழங்குவதற்கும் இந்த அரசு முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. சபாநாயகம் தலைமையில் அமைத்துள்ள வருவாய்க் குழு ஆய்வுசெய்து வருகிறது. பல்வேறு சான்றிதழ்கள், உரிமங்கள் வழங்குவதற்கான தற்போதைய நடைமுறைகளை எளிதாக்குவது பற்றியும், கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு பற்றியும் இக்குழு தனது கருத்தைத் தெரிவிக்கும்.

15. 'ஆம்புட்ஸ்மென்' என்ற விசாரணை அமைப்பு ஒன்றை உருவாக்கும் கருத்தை இந்த அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. பிற மாநிலங்களிலுள்ள சட்டங்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் அண்மையில் கொண்டு வரப்பட்ட சட்ட முன்வடிவு ஆகியவற்றை ஆய்வு செய்து, நமது மாநிலத்திலும் விசாரணை அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான சட்ட முன்வடிவு குறித்து கருத்து தெரிவிக்கும்படி நீதிபதி திரு. இராமானுஜம் தலைமையிலான உயர்நிலைக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. நிருவாகத்தில் நிரந்தரமாக ஊழலற்ற நிலையைக் கொண்டு வருவதற்குத் தேவையான சீர்திருத்தங்களை இக்குழு விரைவில் பரிந்துரைக்கும்.

16. ஒப்பந்தப்புள்ளி (டெண்டர்) நடைமுறையில் நிர்வாகம் தலையிட்டு, அதன் அடிப்படை செயலமைப்பையே சட்டமன்றத்தின் ஒப்புதலின்றி மாற்றிய முந்தைய ஆட்சியின் முறைகேடுகள் இனி நடைபெறாமலிருக்க, ஒப்பந்தப்புள்ளி வழங்குவதில் ஒளிவு மறைவில்லாத, நேர்மையான வழிமுறைகளைக் கையாளுவதற்கு ஒரு சட்டமியற்றப்படும். கடந்தகால நிகழ்ச்சிகளால் அரசின் ஒப்பந்த நடைமுறையின் மீதே நம்பிக்கை இழந்திருந்த மக்களிடையே, இச்சட்டத்தினால் மீண்டும் நம்பிக்கை உதயமாகும்.

17. பல நிலைகளில் உள்ள அலுவலர்கள் எடுக்கும் முடிவுகள் பற்றிய தகவல் பொதுமக்களுக்குக் கிடைக்காததுதான், நிர்வாகத்தில் நடைபெறும் முறைகேடுகளுக்கு ஒரு முக்கியக் காரணமாக உள்ளது. எனவே, மக்களுக்கு நிர்வாகம் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்ளும் உரிமையை வழங்க "தகவல் பெறும் உரிமைச் சட்டம்" (Right to Information Act) ஒன்றை இயற்ற அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் அரசின் திட்டங்கள் - பல்வேறு துறை மூலமாகச் செய்யப்படும் பணிகள் - பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கடைக்கும் அனுப்பப்பட்ட அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் அளவு கையிருப்பு போன்ற விவரங்கள் மக்களுக்குக் கிடைக்கவும் தவறுகள் தட்டிக் கேட்கப்படவும் வழிபிறக்கும்.





## நமக்கு நாமே...

18. இந்தியாவிலேயே முதன் முதலாக மக்கள் குறை கேட்கும் மனுநீதித் திட்டம் தமிழகத்தில்தான் கழக அரசால் கொண்டு வரப்பட்டது. அதிகாரிகள் கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து, அவற்றின் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வகை செய்யும் இந்தத் திட்ட நடைமுறையில் இடைக்காலத்தில் ஏற்பட்ட தொய்வைப் போக்கி, சீரமைத்து, மக்கள் "நமக்கு நாமே" என்ற உணர்வின் அடிப்படையில் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ள முன்வரும் மனப்பான்மையை வளர்த்திடும் நிலைக்கு வழிகோலப்படும்.

## ஊரக வளர்ச்சி

19. 1997-98 ஆம் ஆண்டுக்கு மைய, மாநில அரசுகளின் நிதியுடன் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ. 44.38 கோடியும், அதனோடு தொடர்புடைய "டிரைசம்" பயிற்சித் திட்டத்துக்காக ரூ. 5.01 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், வரும் ஆண்டின் ஒதுக்கீடு ரூ. 46.78 கோடியாக இருக்கும். இந்திரா வீடுகட்டும் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு கட்டப்பட இருக்கும் 71,597 வீடுகளில் 61,428 வீடுகள் ஆதி திராவிடர்களுக்காகக் கட்டப்படும். ரூ. 7.85 கோடி செலவில் விவசாயிகளுக்கு ஜீவன்தாரா கிணறுகள் வெட்ட உதவி செய்யப்படும். ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் போன்ற திட்டங்களினால் கிராமப் புறங்களில் 643.62 இலட்சம் மனித நாட்கள் வேலை வாய்ப்புக் கூடுதலாக உருவாக்கப்படும்.

20. மத்திய ஊரகத் துப்புரவுத் திட்டத்தின் கீழ் 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 3.35 கோடி செலவில் 26,136 தனிநபர் கழிப்பறைகளும், பள்ளிகளில் 353 கழிப்பறைகளும் அமைக்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக வரும் நிதியாண்டிலும் ரூ. 7.26 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

21. தென்னார்க்காடு வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டங்களில் ரூ. 43 கோடி செலவில், டென்மார்க் அரசின் நிதியுதவியுடன் "ஊரகக் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம்" 1996 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

22. கிராமப்புறங்களில் சிறார் படிப்பை ஊக்கப்படுத்துதல் முதியோர் கல்வித்திட்டம், நூலகங்கள் நடத்துதல், கிராமப் பொதுச் சொத்துக்களை பேணிக்காத்திடத்துணை புரிதல், மதுவிலக்குப் பிரச்சாரம் போன்ற பணிகளுக்காக மக்கள் நலப் பணியாளர்கள் ஊராட்சி தோறும் அமர்த்தப்படுவார்கள் என்று சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். 1989 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டம், 1991 ஆம் ஆண்டில் முந்தைய அரசால் கைவிடப்பட்டது. இதில் பணி இழந்தவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் இத்திட்டத்தை நிறைவேற்றுவது பற்றிய விரிவான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதில் 17,500 ஆண்களும் 17,500 பெண்களும் இடம் பெறுவார்கள்.

23. இந்தியாவின் முதுகெலும்பாகத் திகழும் கிராமங்கள் படிப்படியாக முன்னேற்றம் காணும் வகையில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒவ்வோராண்டும் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, அதனை அனைத்து வசதிகளும் கொண்ட நவீன கிராமமாக அமைத்திடும் வகையில் வரும் நிதியாண்டு முதல் ஒரு திட்டம் செயல்படுத்தப்படும். இந்தக் கிராமப்புறத் திட்டத்திற்கு, "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்று பெயர் சூட்டப்படும்.

## அடிப்படை வசதிகள்

24. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, அடிப்படை மருத்துவ வசதி, வீடற்ற ஏழைகளுக்கு வீட்டு வசதி, ஏழைக் குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு, ஒவ்வொரு கிராமத்துக்கும் நியாய விலைக்கடை, கட்டாய ஆரம்பக்கல்வி, கிராமங்கள் அனைத்துக்கும் சாலை வசதி ஆகிய குறைந்தபட்ச ஏழு அடிப்படை வசதிகளை மக்களுக்கு அளிப்பதே எங்களின் தலையாய குறிக்கோள்.

## ஊரகக் குடிநீர்

25. தமிழகத்திலுள்ள 66,631 ஊரகக் குடியிருப்புகளில் 34,459 குடியிருப்புகள் நாள்தோறும் ஒருவருக்கு 40 லிட்டர் என்ற அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியைப் பெற்றுள்ளன. பாதுக்காக்கப்பட்ட குடிநீரே இல்லாமல் 154 குடியிருப்புகள் உள்ளன. இந்த 154 குடியிருப்புகளுக்கும் இம்மாத இறுதிக்குள் குடிநீர் வசதி செய்யப்படும். நபருக்கு நாள் தோறும் 10 லிட்டருக்கும் குறைவாகக் குடிநீர் பெறுகின்ற 10,000 குடியிருப்புகளுக்கு முன்னுரிமையளித்து, வரும் இரண்டு ஆண்டு

களில் அவற்றுக்குக் குறைந்தபட்சம் சராசரி 40 லிட்டர் குடிநீர் பெறக்கூடிய வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும். எஞ்சியுள்ள 20,000 குடியிருப்புகளுக்கு, அடுத்த மூன்றாண்டு காலத்திற்குள் தேவையான குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படும். இவ்வாறு வரும் ஐந்தாண்டு திட்டக் கால இறுதிக்குள், தமிழகத்திலுள்ள அனைத்து ஊரகக் குடியிருப்புகளுக்கும் குறைந்தபட்சம் நபர் ஒருவருக்குச் சராசரி 40 லிட்டர் அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கச் செய்து, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி பெறாத கிராமங்களே தமிழகத்தில் இல்லை என்ற நிலையை உருவாக்குவோம். இதற்காக 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 250 கோடி கணிசமான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## நகர்ப்புறக் குடிநீர் வழங்கல்

26. 1997-98 ஆம் ஆண்டிற்கு நகராட்சி, பேரூராட்சி குடிநீர்த்திட்டங்களுக்காக ரூ. 31.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில் 5 நகராட்சி குடிநீர்த் திட்டங்களும், 18 பேரூராட்சி குடிநீர்த் திட்டங்களும் முழுமையாக நிறைவேற்றப்படுவதுடன் மேலும் 4 நகராட்சிகள் மற்றும் 7 பேரூராட்சிகள் பயன் பெறும் வகையில் 11 புதிய குடிநீர் திட்டப் பணிகள் தொடங்கப்படும்.

27. சென்னை மாநகருக்குத் தற்போது தினமும் 44 கோடி லிட்டர் குடிநீர் வழங்கப் படுகிறது. நீர்த்தேக்கங்களில் நீரளவு திருப்திகர மாக இருப்பதால், தற்போது வழங்கும் குடிநீர் அளவைத் தொடர்ந்து நீடிக்க இயலும். இவ்வரசின் பெரு முயற்சியால் கிருஷ்ணா நதி நீர் சென்னை மாநகருக்கு 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதியில் வந்து சேர்ந்ததென்றாலும் உடனடியாக அக்டோபர் திங்களில் பெய்த பெருமழையின் காரணமாகக் கால்வாயில் உடைப்புகள் ஏற்பட்டன. ஆந்திர அரசு இவ்வுடைப்புகளைச் செப்பனிடும் பணிகளை விரைந்து மேற்கொண்டுள்ளது. இப்பணிகள் ஜுன் திங்களுக்குள் முடிவடைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்போது மூன்று டி.எம்.சி ஆகவும் 1999-2000 ஆண்டில் 12 டி.எம்.சி. ஆகவும் கிடைக்க இருக்கிற கிருஷ்ணாநதி நீரை வழங்குவதற்காகப் பின்வரும் இரண்டு பெரிய திட்டங்கள் செயல்படுத்தப்படும். ரூ. 513.90 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ. 80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக ரூ. 1533 கோடி மதிப்பீட்டில் மற்றொரு திட்டம் தீட்டப்பட்டு உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

28. ரூ. 572 கோடி செலவில் ஜப்பான் வெளிநாட்டுப் பொருளாதாரக் கூட்டுறவு நிதி









உதவியுடன், கழிவு நீர் சுத்திகரிப்புத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சென்னையில் கழிவுநீரின் ஒரு பகுதியைச் சுத்திகரித்துத்தொழிற்சாலைகளுக்கு விநியோகிக் கப்படும்.

## நகர்ப்புற வளர்ச்சி

29. சென்னைப் பெருநகரில் ரூ. 326 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் கோயம்பேட்டில் ரூ. 98 கோடி மதிப்பீட்டில் சென்னை புறநகர் பேருந்து நிலையம் மற்றும் மேம்பாலம், பெரம்பூர் மற்றும் நுங்கம்பாக்கத்தில் ரூ. 44 கோடி மதிப்பீட்டில் மேம்பாலங்கள், ஈக்காட்டுத்தாங்கல் மற்றும் சூளைமேட்டில் ரூ. 21 கோடி மதிப் பீட்டில் மேல்நிலை குடிநீர்த் தொட்டிகள் மற்றும் நீரேற்று நிலையங்கள் ஆகியவை அடங்கும். 1997-98 ஆம் ஆண்டில் மேலும் ரூ. 200 கோடி அளவிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப் படும்.

30. 1996-97 ஆம் ஆண்டினைப் போலவே வரும் நிதியாண்டிலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக, சென்னையைத் தவிர மற்ற மாநகராட்சிகளுக்கு ரூ. 25 கோடி யும், நகராட்சிகளுக்கு ரூ. 10 கோடியும், பேரூராட்சிகளுக்கு ரூ. 25 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

31. தமிழகத்திலுள்ள அனைத்து நகர்ப்புற அமைப்புகளில் குடிநீர் மற்றும் கழிவுநீர்த் திட்டங்கள், வணிக வளாகங்கள், போக்குவரத்து போன்ற வசதிகளைப் பெருக்க தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிதியில் அரசின் பங்கு ரூ. 120 கோடியாகவும் அகில இந்திய நிதி நிறுவனங்களின் பங்கு ரூ. 51 கோடியாகவும் இருக்கும். இதன் மூலம் 1997-98 ஆம் ஆண்டு நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங் களுக்கு ரூ. 60 கோடி கடன் வழங்கப்படும். இது தவிர, ரூ. 30 கோடி அளவில் ஒரு மானிய நிதி உருவாக்கப்பட்டு நகர்ப்புற ஏழைமக்கள் பயன் பெறக் கூடிய திட்டங்களுக்கு உதவி அளிக்கப் படும்.

32. சென்னை விரைவு ரயில் போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிக்கு மைய அரசின் 1997-98 இரயில்வே நிதி நிலை அறிக்கை யில் ரூ. 50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நாமும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ. 50 கோடி ஒதுக்கியுள்ளோம். எனவே, லஸ் முதல் வேளச்சேரி வரையிலான இரண்டாம் கட்டப் பணி தொடங்கப்பெறும்.

## பொது விநியோகமும் விலைவாசியும்

33. அத்தியாவசியப் பண்டங்களின் விலை யைக் குறைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன்

சென்ற நிதி நிலை அறிக்கையில் வணிக வரிகளில் பல சலுகைகள் வழங்கப்பட்டன. இதன் பலனாகவும், வேறுபல முனைப்பான நடவடிக்கைகளினாலும் பருப்பு, மிளகாய், சமையல் எண்ணெய் போன்ற சில இன்றியமையாப் பொருட்களின் விலை குறைந்துள்ள போதிலும், தமிழகத்தில் ஏற்பட்ட பெருமழை, வெள்ளம், ஆந்திராவில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றம் இவைகளின் காரணமாக வெளிச் சந்தையில் அரிசி விலை ஏறி இப்போது ஓரளவு குறைந்திருக்கிறது. எனினும் ஏழை நடுத்தர மக்கள் வாங்கிப் பயன்படுத்துகிற அரிசி போன்ற உணவுப் பண்டங்களின் விலை கட்டுப்பாட்டில் இருப்பதற்காக நியாயவிலைக் கடைகளில் அரிசி விலையை உயர்த்தாமலும் அளவைக் குறைக்காமலும் விநியோக முறையை ஒழுங்குபடுத்தும் முயற்சியில் அரசு ஈடுபட்டு இருக்கிறது.

34. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம் (Targeted Public Distribution System) என்ற புதிய திட்டத்தை மத்திய அரசு அண்மையில் அறிவித்துள்ளது. இதன்படி வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ அரிசி அல்லது கோதுமை பாதி விலையில் வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு கிலோ 4 ரூபாய் வரை விலையையும் அனுமதித்துள்ளது. ஏற்கெனவே தமிழ்நாட்டில் அரிசிக்கு கிலோ 3.75 ரூபாய் வரையிலான விலைதான் இருப்பதாலும் - அளவு 20 கிலோ வரையில் என்று இருப்பதாலும் இந்த அடிப்படை மாறாமல் பொது விநியோக முறையில் போலி குடும்ப அட்டைகளை நீக்கி உண்மையான பயனாளிகளுக்கு வழங்கப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. மத்திய அரசின் திட்டப்படி ரூ. 15,000க்கு மேல் ஆண்டு வருமானம் பெறுபவர்களுக்கு அரிசி விலை கிலோ 7.50 ரூபாய் என்று அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் நமது மாநில அரசு ரூ. 15,000க்குக்குறைவான ஆண்டு வருமானம் உள்ள வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்களுக்கும், ரூ. 15,000க்கு மேல் ஆண்டு வருமானம் உள்ள நடுத்தர வர்க்கத்தினருக்கும் கிலோ ரூ. 3.75 விலையிலேயே அரிசி வழங்குவதைத் தொடர்ந்து நிறைவேற்ற இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

35. பொதுவிநியோகத் திட்டத்தைச் சீரமைக்கும் பொருட்டு அமைக்கப்பட்ட குழு, பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று ஆய்வு செய்து அளித்த அறிக்கையைப் பரிசீலித்து அதன் அடிப்படையில் மூன்று நிறத்தில் குடும்ப அட்டைகள் வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. ரூ. 15,000க்குக் கீழ் ஆண்டு வருமானம் உள்ள குடும்பங்களுக்கு சிவப்பு வண்ண அட்டைகள் தரப்பட்டு அரிசியும் மற்றப் பொருள்களும் நியாய விலையில் வழங்கப்படும். மாதம் ஒன்றுக்கு ரூ. 10,000க்கு அதிகமாக வருமானம் பெறும் வசதி படைத்த குடும்பங்களுக்குப் பச்சை வண்ண அட்டைகள் வழங்கப்படும். அந்தக் குடும்பங்களுக்கு ஏற்கெனவே அறிவித்தவாறு அரிசி வழங்காமல் மற்ற பொருள்கள் மட்டுமே வழங்கப்படும். இந்த இரண்டு பிரிவிலும் சேராத நடுத்தரக் குடும்பங்களுக்கு மஞ்சள் வண்ண அட்டைகள் வழங்கப்படும். அந்த குடும்பங்களின் விருப்பத்திற்கேற்ப அரிசியோ அல்லது அரிசிக்குப் பதிலாக மூன்று கிலோ சக்கரையோ அல்லது ஐந்து லிட்டர் மண்ணெண்ணெயோ வழங்கப்படும்.

## வேளாண்மை

36. உலக வ்ங்கி உதவியுடன் செயல் படுத்தப்படும் தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்காக 1997-98ல் ரூ. 103.79 கோடி ஒதுக்கீட்டில் வேளாண்மை விரிவாக்கம், விதை உற்பத்தி நீர்ப்பிடிப்புப் பகுதிகள் மேம்பாடு, ஊரகச் சாலைகள், கிராமப்புற குடிநீர் வசதி போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

37. வணிக ரீதியான வேளாண்மையைச் சார்ந்த தொழில்களான மலர், காய்கறி, காளான் வளர்ப்பு மற்றம் அவற்றின் ஏற்றுமதி ஆகியவற்றிற்குக் கடனுதவி வழங்க, 'நபார்டு' நிறுவனம் தமிழ்நாட்டில் ஒரு அதிநுட்ப வேளாண்மை நிதி நிறுவனத்தை அமைத்துள்ளது. இந்நிதி நிறுவனத்தின் பங்கு மூலதனம் ரூ. 20 கோடியாக இருக்கும். இந்தியாவிலேயே முதன்முதலாக இந்தத் திட்டம் தொடங்கப்படுகிற மூன்று மாநிலங்களில் தமிழகமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

38. முக்கிய நகரங்களின் மையப்பகுதிகளில் நெருக்கடியான சூழ்நிலையில் செயல்படும் தானிய அங்காடிகள் புறநகர்ப் பகுதியில் தேவையான வசதியுடன் இயங்கிட முன்னோடித் திட்டமாக மதுரை மாநகரின் புறநகர்ப் பகுதியில் நெல் வணிக அங்காடி ரூ. 9.80 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

39. இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்கும் நோக்கத்துடன், தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி தரிசு மற்றும் மானாவாரி நிலங்களை மேம்படுத்த, டாக்டர் வி.சி. குழந்தைசாமி





அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு தன் பணிகளை முடிக்கும் தருவாயில் உள்ளது. குழுவின் விரிவான பரிந்துரைகள் கிடைத்த பின்னர், அவற்றின் அடிப்படையில் அரசு விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

40. வேளாண்மைக் கல்லூரியில் சேர முனையும் மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பாகப் பள்ளிக் கல்வியில் வேளாண்மையை ஒரு பாடமாக அமைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.



## கால்நடை

41. புதுக்கோட்டை மாவட்டத்தில் டென்மார்க் நாட்டு நிதி உதவியுடன் இயங்கும் கால்நடை வளர்ப்புத் திட்டம், மேலும் காமராசர், சிதம்பரனார், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இராமநாதபுரம் ஆகிய தென் மாவட்டங்களுக்கும் ரூ. 27.50 கோடி செலவில் விரிவுபடுத்தப்படும்.

## மீனவர் நலம்

42. மீனவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 4,000 இலவச வீடுகளும் இதர அடிப்படை வசதிகளும் செய்து தருவதற்காக 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 6.73 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்படும் என்று சென்ற நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். கடந்த ஆட்சியில் கட்டி முடிக்கப் படவேண்டிய பல வீடுகள் கட்டி முடிக்கப் படாமல் இருக்கின்றன என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதால், அவற்றையும் இந்த ஆண்டே கட்டி முடிப்பதற்கு, கூடுதலாக ரூ. 3.56 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், 1997-98 ஆம் ஆண்டுக்கு, மேலும் 4,000 வீடுகள் கட்டி முடிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

43. தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாவது கட்டம் ரூ. 48 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிக் கலங்களும் பல்வேறு விதமான மீன்பிடி வலைகளும் 16,350 மீனவர்களுக்கு வழங்கப்படும்.

44. மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு விபத்து ஏற்படும் நேரங்களில் உடனடியாகத் தொடர்பு கொள்வதற்காக "வாக்கி-டாக்கி" மானிய உதவியுடன் அரசு வழங்கும்.

## பாசனம்

45. பெரியாறு அணையிலிருந்து கூடுதலாகக் கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு, மதுரை

மாவட்டம் உசிலம்பட்டி பகுதியில் 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளித்திட ஆரம்பப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் செண்பகத் தோப்புத் திட்டம், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் வரட்டாறு குப்பத்து ஓடைத் திட்டம், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் ஆண்டியப்பனூர் ஓடைத்திட்டம் ஆகியவற்றுக்கான பணிகள் தொடங்கப் பட்டுள்ளன.

46. பாசனத்துறையில் ஒரு பெருந்திட்டமாக ரூ. 1140 கோடி மதிப்பீட்டில் ''தமிழ்நாடு நீர்வளத் தொகுப்புத் திட்டம்'' உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1997-98 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 173 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களை நவீனமயமாக்குதலும் பாசனத்திறனை உயர்த்துதலும், பராமரித்தலில் விவசாயிகளைப் பங்கேற்கச் செய்தலும், நிறைவடையாமல் இருக்கும் 9 நீர்த்தேக்கத் திட்டங்களை விரைவாக முடித்தலும் இதன் முக்கிய நோக்கங்களாகும்.

47. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் அடவிநயினார்கோவில், கொடுமுடியாறு, நம்பியாறு, மற்றும் வடக்குப் பச்சையாறு ஆகிய நான்கு திட்டங்களும், காமராசர் மாவட்டத்தில் கிருதமால் அணைக் கட்டுத் திட்டம், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் மொரதானா திட்டம், ராஜாதோப்பு கிணறு திட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் பொய்கையாறு திட்டம், மதுரை மாவட்டத்தில் சோத்துப்பாறைத் திட்டம் ஆகிய ஐந்து திட்டங்களும் இந்தத் தமிழ்நாடு நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவற்றில் ஆறு திட்டங்கள் 1989-90 ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்டு பின்னர் வந்த ஆட்சியில் தொடரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

48. பாசன மராமத்துப் பணிகளை விவசாயிகளே மேற்கொள்ளும் குடிமராமத்து முறை செயலற்றுப்போய், நீர்ப் பாசனப் பராமரிப்புப் பணிகளுக்கு அரசையே சார்ந்திருக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மராமத்துப் பணிகளில் படிப்படியாகப் பங்கேற்கக்கூடிய வகையில் தமிழ்நாடு நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் விவசாயிகள் அமைப்புகள் உருவாக்கப்படும். இவ்வமைப்புகளுக்குப்பொதுப்பணித் துறை அலுவலர்கள் தக்க தொழில் நுட்ப உதவிகளை வழங்குவார்கள்.

49. தமிழ்நாட்டில் சுமார் 40,000 ஏரிகள் உள்ளன. ஐரோப்பியப்பொருளாதாரக் குழுவின் நிதியுதவியுடன் ரூ. 115 கோடி மதிப்பீட்டில் ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்திற்கு 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 17.12 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. மேலும் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான சிறு ஏரிகளைப் புதுப்பிக்கும் திட்டம் ரூ. 270 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு ஜப்பான் நாட்டு நிதியுதவி பெறுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

50. வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம், குடியாத்தம் வட்டத்திலுள்ள மலட்டாற்றின் குறுக்கே பத்தரப்பள்ளி அருகே புதிய நீர்த்தேக்கம் ஒன்று ரூ. 25.49 கோடி செலவில் வரும் மூன்றாண்டுகளில் கட்டப்படும். திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டம் செங்கம் வட்டத்தில் செய்யாற்றின் குறுக்கே குப்பநத்தம் கிராமத்தின் அருகே ரூ. 35.46 கோடி செலவில் ஒரு நீர்த்தேக்கம் அடுத்த 3 ஆண்டுகளில் உருவாக்கப்படும். தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டத்தில் வள்ளி மதுரை கிராமத்தின் அருகே வரட்டாற்றின் குறுக்கே ரூ. 19.20 கோடி செலவில் ஒரு நீர்த் தேக்கம் மூன்றாண்டுகளில் கட்டி முடிக்கப்படும். சிதம்பரனார் மாவட்டத்தில் சாத்தான்குளம் வட்டத்தில் சடையநேரி கால்வாய் ரூ. 12.33 கோடி செலவில் அகலப்படுத்தப்பட்டு, புத்தம்தருவை வரை நீட்டிக்கப்படும். திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டத்தில் நாயோடைத் திட்டமும், நிலக்கோட்டையில் சிறுமலை நீர்ப் பாசனத் திட்டமும் உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு விரைவில் ஏற்ற முடிவெடுக்கப்படும்.

## வனவளம் மற்றும் சுற்றுப்புறச் சூழல்

51. ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ரூ. 463.20 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வனவளத்திட்டம் என்ற மாபெரும் திட்டம் 1997-98ல் தொடங்கி ஐந்தாண்டுகளில் செயல்படுத்தப்படும் என்று சென்ற நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். அத்திட்டத்திற்கு ஜப்பான் நாட்டின் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனத்திடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டுவிட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.







52. சந்தன மரக் கடத்தலைத் தடுத்திட தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, கூடுதலாக 452 வனக் காப்பாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். சந்தன மர ஏலங்களில் நடந்துள்ள ஊழல்களும் களையப்பட்டு, சராசரியாக டன் ஒன்றுக்குச் சற்றேறக்குறைய இரண்டு மடங்கு வருவாய் கிடைத்துள்ளது.

53. தேசிய நதி நீர் செயல் திட்டத்தின் கீழ், ரூ. 38.20 கோடி செலவில் பவானி, குமாரபாளையம், ஈரோடு, பள்ளிப்பாளையம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களின்கழிவுநீரைக் காவிரி ஆற்றில் கலக்காதவாறு தடுத்து, நீர் மாசுபடாமல் பாதுகாக்கப்படும். வரும் நிதியாண்டில் காவிரி நதி நீர் மாசு கட்டுப்படுத்தும் திட்டத்திற்காக ரூ. 10 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. மேலும் அபாயகரமான கழிவுகளைப் பாதுகாப்பான முறையில் சுத்திகரிப்பு செய்து வெளியேற்ற, தமிழ்நாடு மாசுக் கட்டுப் பாடு வாரியம் உலக வங்கி நிதி உதவியுடன் ரூ. 11.60 கோடிக்கு ஒரு திட்டத்தைச் செயல்படுத்தும்.

## சாலைகள்

54. தொழில் வளம் பெருக்கிடுவதற்குத் துணையாக, மாநிலத்திலுள்ள அனைத்து சாலைகளையும் மேம்படுத்த பெருமளவுக்கு நிதி தேவைப்படுகிறது. இதனை முழு அளவுக்கு அரசே ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில், மைய அரசு, தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களில் தனியார் துறை பங்கேற்கும் கொள்கையை வகுத்துள்ளது. அதற்கேற்ப தமிழ்நாட்டிலும் தேசிய நெடுஞ்சாலைகளை, தனியார் துறை மற்றும் அரசின் கூட்டு முயற்சி மூலம் அகலப்படுத்தி, தரமுயர்த்திப் பராமரிக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். கோவை அருகே தேசிய நெடுஞ்சாலையில் புறவழிச்சாலை அமைத்தல், சென்னை - கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் காரனோடையில் புதிய பாலம் கட்டுதல் ஆகியவற்றைத் தனியார் துறை மூலம் நிறைவேற்ற அரசு கருதியுள்ளது. ரூ. 950 கோடி மதிப்பீட்டில் அதிகப் போக்குவரத்து உள்ள சாலைகளை அகலப் படுத்தி தரமுயர்த்தும் திட்டம் ஒன்று உலக வங்கி நிதியுதவி பெறுவதற்காக வகுக்கப் பட்டுள்ளது.

55. திண்டிவனம் - பாண்டிச்சேரி - கிருஷ்ணகிரி சாலையில் ரூ. 19.89 கோடி செலவில் ஒரு கீழ்ப்பாலம் மற்றும் ஒரு வழிமாற்றம் (Interchange) கட்டும்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. விழுப்புரம் நகரில் கீழ்ப்பெரும்பாக்கம் இரயில் நிலையம் அருகில் ரூ. 5 கோடி செலவில் மேம்பாலம் கட்டும் பணியை 1997-98 ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைத் துறையும் தென்னக இரயில்வேயும் மேற்கொள்ளும். கன்னியாகுமரி மாவட்டத்தில் பழையாற்றின் குறுக்கே மேல

மணக்குடி - கீழமணக்குடி இணைப்புப் பாலம் ஒன்று சுமார் ரூ. 6 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

56. 1972 ஆம் ஆண்டிலேயே கழக அரசு பொறுப்பில் இருந்தபோது 1,500க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்கள் அனைத்தையும் முக்கிய சாலைகளோடு இணைக்கின்ற முதற்கட்ட முயற்சி தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. அடுத்த கட்ட முயற்சியாக 1,000 பேருக்கு மேற்பட்ட மக்கட் தொகை கொண்ட கிராமங்களுக்கான இணைப்புச் சாலைகளை அமைக்கவும் 1990 ஆம் ஆண்டு கழக அரசு முயற்சிகளை மேற்கொண்டது. இவற்றில் மீதமிருந்த 517 கிராமங்களில், 108 கிராமங்களுக்கு வரும் ஆண்டிலும் எஞ்சிய 409 கிராமங்களுக்கு 1998-99 ஆம் ஆண்டிலும் இணைப்புச் சாலை வசதிகள் செய்து கொடுக்கப்படும். அதைத் தொடர்ந்து 500 லிருந்து 1,000 பேர் வரை மக்கட் தொகை கொண்ட 4,986 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி அளிக்க திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. எனவே இந்த ஐந்தாண்டுகளில் ''சாலை வசதி இல்லாத கிராமங்களே தமிழகத்தில் இல்லை'' என்ற நிலையை உருவாக்குவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

57. அடிப்படை வசதிகளுக்காக ''நபார்டு'' நிறுவனம் நிதியுதவி செய்ய முன்வந்தபோதிலும் முந்தைய ஆட்சி அதனைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. தற்போது அந்த நிறுவனத்திடமிருந்து சாலைகள் மேம்பாட்டிற்காக ரூ. 250 கோடிக்கும், நீர்ப்பாசன வசதிக்காக ரூ. 22 கோடிக்கும் இந்த அரசு ஒப்புதல் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த ஆண்டிலும் இதே அளவிற்கான நிதியுதவியைப் பெற்று, சாலைகளை மேம்படுத்தும் பணிகளைத் தொடருவோம்.

## சாலைப் பராமரிப்புப் பணி

58. சாலைகளின் பராமரிப்பு மற்றும் தரம் உயர்த்துதல் ஆகியவற்றிற்காக ''சாலை பராமரிப்பு நிதி'' ஒன்றை அரசு ஏற்படுத்தும். மோட்டார் வாகன வரி வசூலின் ஒரு குறிப்பிட்ட பங்கு இந்நிதியில் சேர்க்கப்படும். இந்நிதியை நிர்வகிப்பதில் சாலைகளைப் பயன்படுத்தும் அமைப்புகளின் கருத்துக்களைப் பெற்று, அதற்கேற்ப, பணிகள் மேற்கொள்ளப்படும். சாலைப் பராமரிப்புக்காக ரூ. 287 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

59. 1977ஆம் ஆண்டிற்குப் பிறகு சாலைப் பணியாளர்களின் புதிய நியமனம் தடை செய்யப்பட்டு விட்ட காரணத்தால், தற்போது 4,975 பேர்களே இந்தப் பணியில் உள்ளனர் அந்தத் தடையை நீக்கி, இப்பணியை விரிவுபடுத்தி, முன்பு இருந்ததைப் போல 8 கிலோ மீட்டருக்கு இருவர் என்ற அடிப்படையில் 10,000 பேர் சாலைப் பணியாளர்களாக இந்த அரசினால் நியமிக்கப்பட இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## போக்குவரத்து

60. நடப்பாண்டில் ரூ.150 கோடி செலவில் 2,200 பேருந்துகள் போக்குவரத்துக் கழகங்களுக்காக வாங்கப்படுவதுடன் வரும் ஆண்டிற்கு மேலும் ரூ.292 கோடி செலவில் 3,600 பேருந்துகள் புதிதாக வாங்கப்பட இருக்கின்றன எனும் செய்தி, நலிவுற்ற பேருந்துகளால் அவதிப்படுவோர்க்கு இனிப்பு வழங்கும் செய்தியாகும்.

61. பேருந்துகள் கட்டுமானத்திற்காக (Body Building) வெளிநாட்டுத் தொழில்நுட்ப உறவுடன் நமது மாநிலத்தில் நான்கு இடங்களில் நவீன தொழில்நுட்பத்துடன் தொழிற்கூடங்கள் நிறுவப்படும்.

62. கிராமங்கள் நாட்டின் முதுகெலும்பென்றால் குக்கிராமங்கள் நாடி நரம்புகளாக இருக்கின்றன என்பதை மறந்துவிடாமல் அவர்களுடைய அடிப்படைத் தேவைகளோடு போக்குவரத்து வசதியையும் செய்து கொடுப்பதில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு பேருந்துகள் இயக்கப்படாத ஊரக உட்பகுதிகளுக்குத் தனியார் நிறுவனங்களின் சிறிய பேருந்துகளை (Van) இயக்க அனுமதிக்கலாம் என்று முடிவு செய்துள்ளது. 16 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேற்படாத உரிய வழித்தடங்களில் மட்டும் அவை இயங்குவதற்கு அனுமதி வழங்கப்படும்.

## மின் வசதி

63. வேளாண்மைக்கும், தொழிலுக்கும் மின் வசதி தங்குதடையின்றி வழங்கப்பட வேண்டும். இதற்குத் தேவையான பெருமளவு மூலதனத்தை முழுமையாக அரசே ஏற்க இயலாது என்பதால் தனியார் துறையில் மின் உற்பத்தி நிலையங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

64. 5 தனியார் நிறுவனங்களுடன் 2,280 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய, மின்சாரம் வாங்கும் ஒப்பந்தத்தில் (Power Purchase Agreement) கையெழுத்திடப்பட்டுள்ளது. இவற்றில் சென்னை பேசின் பிரிட்ஜில் திட்டப்பணி தொடங்கப்பட்டு விட்டது. கோயில்களப்பால், பெருங்குளம் ஆகிய





இடங்களில் 30 மெகாவாட் திறன் கொண்ட எரிவாயு மின் உற்பத்தித் திட்டங்களையும், சென்னை பேசின் பிரிட்ஜ் எரிவாயு மின் உற்பத்தித் திட்டத்தின் உற்பத்தித் திறனை 120 மெகாவாட்டிலிருந்து 180 மெகாவாட்டாக உயர்த்தும் பணியினையும் தமிழ்நாடு மின் வாரியம் மேற்கொண்டுள்ளது.

65. 1989-90ஆம் ஆண்டுகளில் இந்த அரசுதான் வடசென்னை அனல் மின் நிலையத் திட்டத்தைத் தொடங்கியது. ஆனால், அதற்குப் பின்னர் பெரும் மின் உற்பத்தித் திட்டம் எதுவும்



எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனவே வரும் இரண்டாண்டுகளில் கூடுதல் மின் உற்பத்தியை எதிர்பார்க்க இயலாது என்பதைக் கருத்திற்கொண்டு, குறைந்தகாலத் திரவ எரிபொருள் மின்திட்டங்கள் தனியார் துறையில் செயல்படுத்தப்பட உள்ளன. 17 இடங்களில் 1,788 மெகாவாட் மின்சக்தி உற்பத்தி செய்யும் வகையில் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்படவுள்ளன.

66. மின் உற்பத்தியில் கணிசமான அளவு தனியார் முதலீடு செய்யப்பட்டாலும், மின் அனுப்புகை மற்றும் விநியோகப் பணிகளைத் தமிழ்நாடு மின் வாரியமே ரூ.[illegible] கோடி செலவில் இந்த ஆண்டு செயல்படுத்தி வருகிறது. அடுத்த நிதியாண்டில், தமிழ்நாடு மின் வாரியத்தின் மொத்த திட்ட ஒதுக்கீடு ரூ.870.39 கோடியாக உயர்த்தப்படும். இதற்காக மாநில அரசு மின்வாரியத்துக்கு ரூ.250 கோடி மூலதனப் பங்குத் தொகையினை வழங்கும். மீதமுள்ள தொகையினை நிதி நிறுவனங்களிடமிருந்து மின்வாரியம் கடனாகப்பெறும்.

## கட்டமைப்பு வசதி நிதி

67. அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தவும் வரவு-செல்வுத் திட்டத்திற்குட்படாத நிதி ஆதாரங்களைப் போதிய அளவுக்குத் திரட்டுவது மிகவும் அவசியமாகிறது. வங்கிகள், காப்பீட்டு நிதிகள், மூலதனச்சந்தை, சிறு சேமிப்பு, ஓய்வூதிய மற்றும் வைப்புநிதிகள் போன்றவை இத்திட்டங்களுக்கு உகந்த முக்கியமான நிதி ஆதாரங்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, இவற்றைப் பயன்படுத்தி நிதி திரட்டுவது குறித்து அரசுக்குத் தக்க பரிந்துரைகள் செய்ய ஒரு வல்லுநர் குழு அமைக்கப்படும்.

68. அனைத்திந்திய வளர்ச்சி நிதிநிறுவனங்களில் ஏதேனும் ஒரு நிறுவனத்தையாவது சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு நிறுவ வேண்டும் என்று மைய அரசை வலியுறுத்தி வந்துள்ளேன். நமது வேண்டுகோளை ஏற்று, மைய அரசு இந்தியக் கட்டமைப்பு வசதி நிதி

நிறுவனத்தை, சென்னையைத் தலைமை யிடமாகக் கொண்டு பதிவு செய்துள்ளது குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

## தொழிலும் வேலை வாய்ப்பும்

69. தமிழகம் தொழில் துறையில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ வேண்டுமென்பது நமது குறிக்கோளாகும். இவ்வரசு பதவியேற்ற பிறகு தொழில் துறை வளர்ச்சிக்காக ஒளிவு மறைவற்ற (transparent) பல சிறப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளதால், பன்னாட்டு நிறுவனங்கள் விரும்பி வந்து தமிழகத்தில் பெருமளவில் புதிய தொழில்களை நிறுவக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஃபோர்டு மஹேந்திரா கார் தொழிற்சாலை
ஹுண்டாய் கார் தொழிற்சாலை
லான்சர் கார் தொழிற்சாலை
பில்கிங்டன் மிதக்கும் கண்ணாடி தொழிற்சாலை
(மறைமலை நகர்)

செயின்ட் கோபெய்ன் கண்ணாடி தொழிற்சாலை
(இருங்காட்டுக்கோட்டை)

பொள்ளாச்சியில் நவீன இறைச்சிக்கூடம்
கும்மிடிப்பூண்டியில் நைலான் தொழிற்சாலை
பொள்ளாச்சியில் தேங்காய் பதப்படுத்தும் தொழிற்சாலை

– போன்ற தொழிற்சாலைகள் தமிழகத்திலே உருவாகத் திட்டங்கள் தொடங்கப்பட்டுவிட்டன. மேலும் பல தொழிற்சாலைகளை அமைத்து வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்கான முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

70. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) எண்ணூரில் 7000 ஏக்கர் பரப்பளவில் பெட்ரோலிய இரசாயனத் தொழிற் பூங்கா ஒன்றை நிறுவும். இப்பூங்காவில் பெட்ரோலிய இரசாயனத் தொழிற்சாலைகளும், இயற்கை வாயுவை எரிபொருளாகப் பயன்படுத்தும் மின் சக்தி நிலையமும் அமைக்கப்படும்.

71. ஜப்பானிய நிறுவனங்கள் தமிழகத்தில் தொழிற்பேட்டைகளை அமைக்க முன் வந்துள்ளன. தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகமும் (SIPCOT) தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனமும் (TACID) நடப்பாண்டில் 10,000 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, தொழிற்பேட்டைகளை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றன. இத்திட்டத் திற்காக வரவு செலவுத் திட்டத்தில் இந்நிறுவ னங்களுக்கு ரூ.40 கோடி பங்கு முதலீடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் சென்னைக்கருகில் 200 ஏக்கர் பரப்பளவில் ஒரு கணினி (Computer) தொழில் நகரத்தையும், கோவையில் ஒரு கணினி தகவல் சாதனப் பூங்காவையும் (Software Park) உருவாக்கும்.










72. சிறு தொழில்கள், தம் தொழில் நுட்பத் திறமையை வளர்த்துக் கொள்ளவும், சந்தைப் போட்டியில் இலாபகரமாக இயங்கக்கூடிய வகையில் வலிவு பெறவும், தேவையான அடிப்படை வசதிகளை அளிக்க அரசு உதவும். சிறு தொழிற்சாலைகள் ISO 9000 தரச் சான்று பெறத்தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) நிதியுதவி வழங்கும். மேலும், தேவையான நிதி வசதியில்லாத, தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் முதல் தலைமுறை தொழில் முனைவோர் சிறுதொழில் தொடங்க உதவும் வகையில், குறைந்த வட்டியிலான கடன் (Soft Loan) வழங்கும் திட்டத்தைத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் செயல்படுத்தும்.

### கல்வி

73. கல்விக்கான மொத்த நிதி ஒதுக்கீடு 1997-98ஆம் ஆண்டுக்கு ரூ.2938 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளிகளில் சேரும் மாணவர்கள் இடையிலேயே நின்று விடுவதைத் தடுத்து, அவர்களைத் தொடர்ந்து கல்வி பயிலச் செய்யவும், அனைவருக்கும் கட்டாயத் தொடக்கக் கல்வி என்ற இலக்கை எய்தவும் தேவையான ஊக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். மக்கள் நலப்பணியாளர்கள், தங்கள் பணிகளோடு, பள்ளிகளில் மாணவர் களைச் சேர்த்தல், அவர்களைத் தொடர்ந்து பள்ளிகளில் பயில்வதற்கு ஊக்கமளித்தல் போன்றவற்றையும் கவனிப்பார்கள்.

74. சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, 1996-97 ஆம் ஆண்டில் 85 புதிய தொடக்கப்பள்ளிகள் தொடங்கப்பட்டன. மேலும் 21 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளி களாகவும், 99 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 81 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலையுயர்த் தப்பட்டன. வரும் நிதியாண்டில் 168 தொடக்கப் பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்படும். 41 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளி களாகவும், 60 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 75 உயர்நிலைப்பள்ளிகள் மேல் நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும்.

75. பட்டதாரிகள் யாருமே இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த முதல் மதிப்பெண் பெறும் 10 மாணவர்கள் ஆண்டுதோறும் தொழிற்கல்வி படிக்க ஆகும் செலவை அரசு ஏற்றுக் கொள்ளும் என்று கடந்த ஆண்டு அறிவித்த திட்டத்தைச் செயல்படுத்தி வருவதோடு, படிப்பில் ஆர்வ முள்ள மாணவர்களை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு, மாவட்ட அளவில் பிளஸ் 2 வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர் களுக்கும் எஸ்.எஸ்.எல்.சி தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கும் அவர் கள் தொடர்ந்து மேல்படிப்பு படிப்பதற்காகும்

செலவை அரசே ஏற்றுக்கொள்ளும் திட்டத்தை வரும் கல்வி ஆண்டு முதல் செயல் படுத்துவோம்.

76. விளையாட்டு மேம்பாட்டுக்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளது. ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது, விளையாட்டு அரங்கம் இல்லாத 12 மாவட்டங்களில் விளையாட்டரங்கங்கள் கட்டப்படும். கோவை, மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் உள்விளையாட்டு அரங்கங்கள் (Indoor Stadia) அமைக்கப்படும். பொதுமக்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் நன்கொடைத் தொகையுடன் விளையாட்டு மேம்பாட்டுக்காக ரூ. 10 கோடி அளவில் ஒரு நிதியம் ஏற்படுத்தப் படும். மாநில அரசு இந்த நன்கொடைத் தொகைக்கு ஈடான தொகையை இந்த நிதிக்கு வழங்கும்.

77. சுய நிதிக் கல்லூரிகளில் போதிய இடவசதி, கட்டட வசதி, நூலகம் முதலிய கட்டமைப்பு வசதிகள் உள்ளனவா என்பது பற்றியும், உரிய கல்வித் த்குதி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு பணிபுரிகின்றார்களா என்பது பற்றியும் இவை குறித்த முறைகேடுகளைக்களைவது பற்றியும் ஆய்வு செய்து அறிக்கை தருவதற்காக அமைக்கப்பட்ட டாக்டர் எம். அனந்த கிருஷ்ணன் தலைமையிலான உயர்மட்டக் குழு, தன் அறிக்கையை இரண்டு கட்டமாகத் தர முடிவு செய்துள்ளது. வரும் கல்வியாண்டுக்கு முன்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அந்தக் குழுவுடன் விவாதித்துள்ளோம். அது பற்றிய முதல் கட்ட அறிக்கையைக் குழு விரைவில் தர இருக்கிறது. நிர்வாகத்தைச் சீரமைக்கும் வகையிலான இரண்டாம் கட்ட அறிக்கை பின்னர் தரப்படும். இந்தப் பரிந்துரைகளை ஆய்வு செய்து அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

78. தகவல் தொழில் நுட்பம் (Information Technology) நமது மாநிலத்தின் விரைவான வளர்ச்சிக்குத் திறவுகோல் என்று கருதப்படுகிறது. தகவல் தொடர்புகளில் ஏற்பட்டு வரும் புரட்சிகரமான மாற்றங்கள் காரணமாக இந்த பூமிப் பந்தே குக்கிராமம் போல (Global Village) குறுகிக் கொண்டு வருகிறது. அந்தத் துறையில் ஒவ்வொரு ஆண்டும் - ஒவ்வொரு மாதமும் - ஒவ்வொரு வாரமும், குறிப்பிடும் மாற்றங்கள் தோன்றி, நேற்றைய தொழில் நுட்பத்தைப் பத்தாம் பசலியாக (Obsolete) மாற்றிவிடுகின்றன. அடுத்த நூற்றாண்டு ''தகவல் துறை தொழில் நுட்ப'' நூற்றாண்டாகும். அதற்கேற்ற அடிப்படையை உருவாக்கும் வகையிலும் 21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ற தகவல்துறை தொழில் நுட்பத்துறையில் உலகத்தின் முன்னோடியாக இருக்கும் விதத்திலும் இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னையில் Information Technology Institute of Tamil Nadu (ITIT) என்கிற அமைப்பு நிறுவப்படும். முதலில் பதிவு செய்யப்பட்ட சுயநிதி அமைப்பாக (Registered Society) துவக்கப்பட்டு, படிப்படியாக அது ஒரு சுயநிதிப் பல்கலைக்கழகமாக மாற்றப்படும். இத்துறையில் முன்னணியில் இருக்கும் அமெரிக்கப் பல்கலைக் கழகங்களுடனும் புகழ்பெற்ற தனியார் அமைப்புகளுடனும் வெளி நாடுகளில் வாழும் நமது நிபுணர்களுடனும் இந்த அமைப்பு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு Computer Graphics, Software Engineering and Hardware Systems, Multimedia, Telecommunications, Information Technology, Digital Technology போன்ற தகவல் தொழில் நுட்பத் துறையின் அனைத்து அம்சங்களிலும் தன்னிகரற்று விளங்கும் இளைஞர்கள் தயாரிக்கப்படுவர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக வரும் ஆண்டு ரூ. 10 கோடி ஒதுக்கப்படும்.

79. திருநெல்வேலியில் புதிய சட்டக் கல்லூரிக்கான இடத்தைத் தேர்வு செய்து ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும். சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தை அமைப்பதற்கான சட்டமுன் வடிவு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

80. சேலம் மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, பகுத்தறிவுப் பகலவன், சிந்தனைச் சிற்பி, தந்தை பெரியார் அவர்களின் பெயரால் புதிய பல்கலைக் கழகம் 1997-98 ஆம் ஆண்டில் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தொழிற்பயிற்சி

81. இன்று தமிழ்நாடு தொழில்மயமாகிக் கொண்டுவரும் சூழ்நிலையில், தேவைக்கேற்ப திறன்மிக்க தொழிலாளர்களைப் பயிற்றுவிப்பது மிக முக்கியமான ஒன்றாகும் இதற்காக, உலக வங்கி உதவியுடன் 31 தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூ. 38 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. மற்றும் 21 தொழிற்பயிற்சி நிலையங்கள் அடுத்த இரண்டாண்டுகளில் மேம் படுத்தப்படும்.





## தமிழ் ஆட்சி மொழி மற்றும் பண்பாடு

82. 1974 ஆம் ஆண்டு இந்த அரசு தொடங்கிய செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தைத் தீவிரமாகச் செயல் படுத்துவதற்குக் கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டு வரலாற்றை எழுதி வெளியிட இந்த அரசு 1970 ஆம் ஆண்டு தொடக்கம் செய்தது. இதுவரை மூன்று தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் நான்கு தொகுதிகளை விரைவில் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

83. தமிழ்மொழியின் சிறப்பை, இலக்கியத்தின் பெருமையை உலகளாவிய நிலைக்கு உயர்த்தவும், உலகெங்கிலுமுள்ள தமிழர்களோடு தொடர்பு கொள்ளவும் தமிழுடன் தொடர்புடைய பிற துறைகளுடனும், மொழிகளுடனும் ஆய்வு மேற்கொள்ளவும், வழி வகுத்தளிப்பது என்ற அடிப்படைக் கொள்கையுடன் 1968-இல் பேரறிஞர் அண்ணா அவர்களால் நிறுவப்பட்டு 1970 ஆம் ஆண்டில் கழக அரசு காலத்தில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பதிவு செய்யப்பட்டது. பிற்காலத்தில் இதற்கான போதிய கவனம் செலுத்தப்படவில்லை. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்துக்குப் புத்துயிரூட்டி, அது ஏற்படுத்தப் பட்டதற்கான நோக்கங்களை எய்தும் வகையில் திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்த ஆவன செய்யப்படும்.

84. ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதல் பாகமாகத் (Part-I) தமிழ் கட்டாயப் பாடமாகவும், 2-வது பாகமாக (Part-II) ஆங்கிலம் கட்டாயப் பாடமாகவும் இருக்கும். மொழிச் சிறுபான்மையர் தங்கள் தாய் மொழியைக் கற்க விரும்பும் நிலையில் 15 மாணவர்களுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால் அதற்குரிய மொழி ஆசிரியரை நியமிக்க வழி வகை செய்யப்படும். இதனால் சிறுபான்மையரது மொழி நலம் காக்கப்படுவதுடன் தமிழைப் படிக்காமலேயே தமிழ் நாட்டில் ஒருவர் பட்டம் பெறமுடியும் எனும் நிலையும் நீங்கும்.

85. சிறுவயதிலேயே இசை ஆர்வம் மிக்கவர்களை ஊக்குவித்து அவர்களைப் புகழ் மிக்க இசைக் கலைஞர்களாக உருவாக்கும் நோக்கத்துடன் ஒரு புது முயற்சியாக 5 மாவட்டங்களில் இசைப்பள்ளிகள் தொடங்கப் படும். இதற்கென ரூ. 25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த இசைப் பள்ளிகளில் தமிழிசைக்கு முன்னுரிமை அளிக்கப்படும். நாதஸ்வரம், மிருதங்கம், புல்லாங்குழல், வீணை, கோட்டு வாத்தியம் போன்ற தொன்மையான இசைக் கருவிகளில் தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, இவ்வகை இசைக்கும் புத்துயிரூட்டி இந்தப் பள்ளிகளில் இந்த இசையைப் பயிற்றுவிக்க ஆவன செய்யப்படும்: இசைக் கல்லூரிகளில் தமிழ்ப் பண் ஆராய்ச்சி மேற்கொள்ள வகை செய்யப்படும்.

86. நமது பண்பாட்டுப் பெருமையை நானிலமீது நிலை நாட்டிய பெருமகனார் விவேகானந்தர், சென்னையில் தங்கியிருந்த கடற்கரை மாளிகையைக் கலாச்சாரக் கண்காட்சி ஒன்றினை நடத்திக் கொள்ள ராமகிருஷ்ண மடத்தினருக்கு ஓர் ஒப்பந்தம் அடிப்படையில் ஆரம்பக்கட்டமாக மூன்றாண்டு காலத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

87. நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலாவாகத் தமிழ் வானில் ஒளிவிட்டவரும் நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே எனச் சீறியெழுந்த செந்நாப்புலவருமான செந்தமிழ் வித்தகர் - இனமான ஏந்தல் தமிழறிஞர் மறை மலையடிகளார் அவர்கள் தமிழுக்கு அளித்துள்ள படைப்புகள் அனைத்தையும் அரசுடைமையாக்கவும், அவரது குடும்பத்தினருக்குக் காப்புநிதி வழங்கவும், ரூபாய் இருபது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலன்

88. தொற்றுநோய்த் தடுப்பு நடவடிக்கைகளிலும், தரமான மருத்துவ வசதி அளிப்பதிலும் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடத்தையும், மக்கட்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் இரண்டாவது இடத்தையும், சிறு குழந்தைகள் இறப்பு விகிதத்தைக் குறைத்தலில் மூன்றாவது இடத்தையும் வகிக்கிறது.

89. அரசு மருத்துவமனைகளில் வெளி நோயாளிகளுக்கான சிகிச்சை நேரம் பகல் 12 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனால் அரசு மருத்துவமனைகளில் வெளி நோயாளிகளின் வருகை 20 சதவீதம் அதிகரித்துள்ளது. அதேபோல அனைத்து ஊராட்சி ஒன்றிய தொடக்கச் சுகாதார நிலையங்களும் 24 மணி நேரமும் இயங்கி பொதுமக்களுக்கு அவசரச் சிகிச்சை முதலியன செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

90. அரசின் சார்பான தமிழ்நாடு எயிட்ஸ் தடுப்புச் சங்கம் ரூ. 20 கோடி செலவில்

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து விழிப்புணர்ச்சி மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்த நடவடிக்கைகளை மத்திய அரசும் உலக வங்கியும் பாராட்டியுள்ளன.

91. நாங்கள் 1971 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, தொழுநோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதி அளித்து, அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் மாவட்டங்களில் மறுவாழ்வு இல்லங்களை நிறுவினோம். பின்பு 1989 ஆம் ஆண்டு தொழு நோயை அறவே ஒழிப்பதற்காகக் கூட்டு மருந்து சிகிச்சை என்னும் சிறப்புத் திட்டத்தையும் தீவிரமாகச் செயல்படுத்தினோம். இந்த நடவடிக்கைகளினால் தமிழ்நாட்டில் தொழு நோய் கண்டவர்களின் எண்ணிக்கை 1983 இல், பத்தாயிரம் பேர்களுக்கு 120 பேர் என்ற நிலையி லிருந்து 1996 இல் 7 பேர் என்ற அளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளது. தொழுநோயைத் தமிழ் நாட்டிலிருந்து அறவே ஒழிக்கும் நோக்கத்துடன் ரூ. 4 கோடி மதிப்பிலான ஒரு திட்டம் 1997 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

92. 1972-73 ஆம் ஆண்டில் தமிழகத்தில் கண்ணொளி வழங்கும் திட்டம் பெருமளவில் கழக அரசினால் தொடங்கப்பட்டு செயல் படுத்தப்பட்டது. கண்புரைநோய் சிகிச்சை அளிப்பதைச் சிறப்பாகவும், விரிவாகவும் செயல் படுத்த மாவட்ட அளவில் கண்சிகிச்சை அமைப்பு கள் ஏற்படுத்தப்பட்டன. உலக வங்கி உதவியுடன் கண்புரை நோய்ச் சிகிச்சை அளிக்கும் திட்டம் ரூ. 64 கோடி மதிப்பீட்டில் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

93. 1996-97 ஆம் ஆண்டில் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டு வதற்கு ஒப்புதலளிக்கப்பட்டது. அதில் 200 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும். ரூ. 21 கோடி செலவில் 1997-98 ஆம் ஆண்டிலும் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்டப் படும். இந்திய முறை மருத்துவ வளர்ச்சிக்காக ரூ. 57.13 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வயது முதிர்ந்த பரம்பரை சித்த மருத்துவர் களுக்கான மாத உதவித் தொகை ரூ. 150-லிருந்து ரூ. 500 ஆக உயர்த்தப்படும்.

94. பல இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தத்து எடுத்துக்கொண்டு நல்ல முறையில் பராமரிக்க, அப்பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்கள் முன்வந்துள்ளன. அவற்றிடம் ஒப்படைப்பது மூலம் ஆரம்ப சுகாதார நிலையங்களில், கட்டடம், உபகரணங்கள் வசதிகளை அதிகரிக்க இயலும்.







## சத்துணவு

95. இளஞ்சிறார் கல்வியில் ஊக்கம் பெற மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட சத்துணவுத் திட்டத்திற்கு 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 401.44 கோடியளவிற்கு அதிகரித்து ஒதுக்கினோம். 1997-98 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 405.56 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

96. சத்துணவு ஊழியர்களின் கோரிக்கை களை எந்த அளவிற்கு நிறைவேற்ற முடியும் என்பதை மத்திய அரசின் ஐந்தாவது நிதிக் குழுவின் அறிக்கை அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு - மாநில அரசின் அலுவலர்களின் ஊதிய விகிதங்கள் மாற்றி அமைக்கப்படும்போது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## ஆதிதிராவிடர் - பழங்குடியினர் நலன்

97. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் திட்டங்கள், கல்வி நிலையை உயர்த்தும் திட்டங்கள், அடிப்படை வசதிகளை அளிக்கும் திட்டங்கள் என மூன்று வகையாகத் திட்டங்கள் தீட்டப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. இதைக் கருத்தில் கொண்டு, இந்தத் துறைக்கான ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 208.10 கோடி ஒதுக்கீடு செய்திருக்க, 1996-97 ஆம் ஆண்டில் இது ரூ. 267.39 கோடியாக உயர்த்தப்பட்டது. வரும் ஆண்டில் இது ரூ. 334 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

98. ஆதிதிராவிட, பழங்குடி மக்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கும் திட்டத்திற்காக 1997-98 ஆம் ஆண்டுக்கு ரூ. 15.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுதவிர, இந்திரா குடியிருப்புத் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு வரும் ஆண்டில் ஏறக்குறைய 61,000 இலவசக் குடியிருப்புகள் கட்டப்படும்.

99. ஆதிதிராவிட மாணவர்களுக்காக 40 புதிய மாணவர் இல்லங்கள் இந்த ஆண்டு தொடங்கப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டிலும் ரூ. 1.70 கோடி செலவில் மேலும் 40 புதிய மாணவர் இல்லங்கள் தொடங்கப்படும். ஐந்து நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளா கவும், ஐந்து உயர்நிலைப் பள்ளிகள் மேல் நிலைப்பள்ளிகளாகவும் உயர்த்தப்படும்.

100. இதுவரை அரசுத்துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் நிரப்பப்படாமல் இருக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கான காலியிடங்கள் அனைத்தும் 1997 ஜூன் திங்களுக்குள் நிரப்பப்பட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன்

101. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக நடப்பு ஆண்டில் ரூ. 54.31 கோடி ஒதுக்கப்பட்டது. இது வரும் ஆண்டில் ரூ. 63.10 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் 40 பிற்படுத்தப்பட்ட மாணவ விடுதிகளும், 22 மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர் இல்லங் களும் தொடங்கப்பட உள்ளன. 13 மாணவர் இல்லங்களுக்காக அனைத்து வசதிகளும் கொண்ட புதிய கட்டடங்கள் கட்டப்பட உள்ளன.

102. பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஆகிய கல்வித் துறையிலும் சமுதாயத்துறையிலும் பின்தங்கியுள்ள மக்கள் 69 சதவிகித இட ஒதுக்கீட்டின் பயன் முழுவதையும் பெறு வதற்கான முறையில், சட்ட ரீதியான நடவடிக்கை களைத் தொடர்ந்து மேற்கொள்ளவும் தேவையான முயற்சிகள் எடுக்கவும் இந்த அரசு ஏற்றுக் கொண்ட உறுதியிலிருந்து நிச்சயம் பின்வாங்காது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

103. நாங்கள் 1990 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதுதான், முதன் முதலாக, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தை வறுமைக் கோட்டின்கீழ் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பிரிவைச் சேர்ந்த அனைத்து வகுப்பினருக்கும் விரிவுபடுத்தினோம். அதற்கு முன்புவரை சலவைத் தொழிலாளர், முடிதிருத்துவோர் போன்ற ஒரு சில குறிப்பிட்ட வகுப்பினர்க்கு மட்டுமே இத்திட்டம் பொருந்துவதாக இருந்தது. விரிவுபடுத்தப்பட்ட இந்தத் திட்டத்துக்கு, சென்ற ஆண்டு ரூ. 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. வரும் ஆண்டு இந்த ஒதுக்கீடு ரூ. 10 கோடியாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு எடுத் துள்ள மேலும் ஒரு முக்கிய முடிவையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கும் திட்டத்தை, கிராமப்புறங்களில் வாழும் இதர பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்



களுக்கும் விரிவுபடுத்த முடிவு செய்யப் பட்டுள்ளது. இதற்காக மட்டும் 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 5 கோடி ஒதுக்கப்படும்.

104. அதுமட்டுமல்ல, வீட்டு வசதியைப் பொறுத்தவரை, அனைத்து ஏழை எளியவர் களுக்கும் பொதுவான அணுகுமுறை தேவை என்ற அடிப்படையில், இந்த இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம் முன்னேறிய வகுப்பைச் சேர்ந்த வறுமைக் கோட்டுக்குக் கீழ் கிராமப்புறங்களில் வாழும் குடும்பங்களுக்கும் விரிவு படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 3 கோடி ஒதுக்கப்படும்.

## கைத்தறி நெசவாளர் நலன்

105. சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, கைத்தறி நெசவாளர்களுக்கான சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் (Insurance) தொகையை ரூ. 15,000 லிருந்து ரூ. 25,000 ஆக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

106. ஜவுளித் துறையில் தமிழகம், சிறப்பான இடத்தை நீடித்து வகிப்பது அவசியம். இதன் பொருட்டு, பருத்தி உற்பத்தித்திறனை அதிகரித் தல், கைத்தறி, விசைத்தறி, மில்துறை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக விரைவில் ஒரு கொள்கையை வகுத்துச் செயல்படுவதற்கு அரசு முன்வந்துள்ளது. தமிழகத்தில் இப்போதுதான் முதல் தடவையாக ஜவுளிக் கொள்கை (Textile Policy) அறிமுகப் படுத்தப்பட இருக்கிறது.

## இலங்கைத் தமிழ் அகதிகள் நலன்

107. தமிழ்நாட்டுக்குப் புகலிடம் தேடிவந்த ஈழத் தமிழ் அகதிகளில், திரும்பிச் சென்றவர்கள் போக இன்னும் 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட வர்கள், மாவட்டங்களில் உள்ள பல்வேறு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். திங்கள் ஒன்றுக்கு இவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ. 150 என்பதை மேலும் உயர்த்தித் தரும்படி நாம் கேட்டதை மைய அரசு இதுவரை ஏற்கவில்லை. மைய அரசு ஏற்கும் வரையில் மாநில அரசின் சார்பாக அவர்களுக்குக் கூடுதலாக மாதம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் அளிக்கப்படும்.

108. இந்த அகதிகளின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த உதவும் வகையில், இவர்கள் முகாமுக்கு வெளியில் சென்று வேலை பார்த்துச் சம்பாதித்துக் கொள்ளவும், இவர்களின் குழந்தைகள் அருகில் உள்ள கல்வி நிலையங் களில் கல்வி பயிலவும் அரசு அனுமதித்துள்ளது.





109. இவர்கள் தங்கியிருக்கும் குடியிருப்பு முகாம்களை 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 5.63 கோடி செலவில் புதுப்பிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த அகதிகள் குடும்பங் களுக்கும் இந்த ஆண்டு இலவசமாக வேட்டி, சேலை தரும் திட்டம் விரிவு படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

110. இலங்கையில் தொடர்ந்து வரும் பிரச்சினைகளினால் அங்கு வாழும் தமிழர்கள் இலங்கைக்குள்ளேயே அகதிகளாக வாழும் அவல நிலைக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பது ஆறாத்துயரம் அளிக்கிறது. இவர்களின் பிரச்சினையை மனிதாபிமான அடிப்படையில் அணுகி உதவுமாறு இலங்கை அரசுக்கு எடுத் துரைக்கும்படி இந்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

## மகளிர் நலன்

111. மகளிர் மேம்பாட்டுக்கென 1996-97 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 49.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதை 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 54.70 கோடியாக உயர்த்தியுள்ளோம்.

112. சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி தமிழ்நாடு மகளிர் நல மேம் பாட்டுத் திட்டத்தைச்செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரூ. 1420 கோடி மதிப்பீட்டில் ஐந்தாண்டுகளில் பத்து இலட்சம் பெண்கள் தன்னிறைவுக் குழுக்களாக இணைந்து அவர் களின் வருவாய் ஈட்டும் திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும். இதற்கான நிர்வாகக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த, தமிழ்நாடு மகளிர் மேம் பாட்டுக் கழகம் நடவடிக்கை மேற் கொண்டுள்ளது. 1996 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை 61,540 பெண்கள் 3,077 குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர். 1997-98 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் பெண்கள், குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டு ரூ. 125.80 கோடி கடன் உதவி பெறுவர்.

113. கிராமப்புறங்களில் பெண்கள் சுகாதாரம், சத்துணவு, குடும்பநலம், சுய வேலைவாய்ப்புப் பயிற்சி, அறிவொளி, வாழ்க் கைக் கல்வி போன்றவற்றைப் பற்றி அறிந்து கொள்வதற்கு வழிவகை செய்ய, மகளிர் நல மையங்களை உருவாக்க இந்த அரசு திட்ட மிட்டுள்ளது. சோதனை அடிப்படையில் இந்த ஆண்டு 50 சத்துணவுக் கூடங்களில் இந்த மையங்கள் தொடங்கப்படும்.

114. சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தொடரில், மகளிர் தொழில் முனை வோருக்குத் தொழில் தொடங்க நிதி உதவி அளிக்கும் புதிய திட்டம் ஒன்றை அறிவித்தோம்.



அதன்படி, குடும்பத்தில் முதல் தலைமுறையாகத் தொழில் முனையும் மகளிர் 250 பேருக்குத் தேவையான முதலீட்டில் ரூ. 50,000 வரம்புக்குள் பத்து சதவீதத் தொகை மானியமாக வழங்கப்பட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

115. மத்திய அரசின் உதவியுடனான வாணிபம் சார்ந்த பெண் தொழில் முனைவோர் உதவி மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், (TREAD எனப்படும் திட்டம்) முதற்கட்டமாகச் சென்னையில் 5000 பெண்களைத் தேர்ந்தெடுத்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் அவர்களுக்குத் தேவையான நிர்வாகம் மற்றும் தொழில் நுணுக்கப் பயிற்சி அளித்து அவர்கள் தொழில் மற்றும் வாணிபத்தினைத் துவங்க உதவி செய்யப்படும். துவக்கத்தில் இத்திட்டத்தின்கீழ், சென்னைப் பகுதியில் உணவு பதப்படுத்துதல், தயாரிக்கப்பட்ட ஆடைகள், தோல் பொருள்கள் உற்பத்தி ஆகிய தொழில்களைத் துவங்க பயிற்சியும் நிதி உதவியும் அளிக்கப்படும். இந்த நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மானியமாகவும், இரண்டு பங்கு கடனாகவும் அளிக்கப்படும்.

116. கழக ஆட்சியில் தமிழகத்தில் முதன் முதலாகப் பெண் காவலர்கள் 1973 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்கள். இப்போது அவர்களின் எண்ணிக்கை 2,800 ஆக இருக்கிறது. மொத்தக் காவலர்கள் அளவில் 30 சதவீதம் பெண் காவலர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற இந்த அரசின் குறிக்கோள் நிறைவேறிட இன்னும் மூன்று நான்கு ஆண்டுகள் ஆகும் எனினும், இப்போது முதல் கட்டமாக வரும் ஆண்டில் கூடுதலாக 5,000 பெண் காவலர்கள் பணிக்கு நியமிக்கப்படுவார்கள் என்பதைப் பெருமிதத்துடன் அறிவித்திடுகின்றேன்.

## சமூகக் காப்பீட்டுத் திட்டங்கள்

117. பல்வேறு சமூகக் காப்பீட்டுத் திட்டங்களுக்காக அரசு ரூ. 108 கோடி 1996-97ல் செலவிட்டுள்ளது. 1997-98ல் இதற்காக ரூ. 113 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. காத்திருப்போர் பட்டியலில் அதிகம் பேர் உள்ளதைக் கருத்தில் கொண்டும், மக்களிடமிருந்து முறையீடுகள் வந்துள்ளதைக் கருத்தில் கொண்டும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ் 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டதற்கு மாறாக 1997-98 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 20 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். இதனால் 20,000 தம்பதியர் பயனடைவர்.

118. இருதய அறுவை சிகிச்சை, மாற்றுச் சிறுநீரக அறுவை சிகிச்சை, அவை தொடர்பான மருத்துவச் சிகிச்சை ஆகியவற்றிற்கு அதிக அளவு செலவு ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் தேவையான சான்றிதழ்களுடன் விண்ணப்பித்தால் அவர்களுக்கு இன்று முதல், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 25,000 நிதியுதவி அளிக்கப்படும். அதேபோன்று, வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள, ஊன்முற்றவர்களுக்கு, செயற்கைக் கால் அல்லது கைகள் பொருத்துவதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000 அளிக்கப்படும்.

119. ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு, இருப்பிடம், கல்வி கலைப்பயிற்சி முதலியன அளிக்கும் நோக்கத்துடன் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் இயங்கும் கோயில்களில் கருணை இல்லங்கள் 1975 இல் துவக்கப்பட்டன. இந்த இல்லங்களை நடத்துவதற்காகும் செலவில் அப்போது 25 சதவீதத்தை அரசு வழங்க வகை செய்யப்பட்டது. ஆனால், 1977-78 ஆம் ஆண்டிற்கும் அதற்குப் பிறகும் அரசு மான்யம் வழங்கப்படவில்லை. தற்போது 22 கோயில்களில் 735 ஆதரவற்ற குழந்தைகளுடன் திருக்கோயில்களின் முழுச் செலவில் கருணை இல்லங்கள் செயல்படுகின்றன. இந்தக் கருணை இல்லங்களின் செயல்பாட்டை மேம்படுத்தவும், கூடுதலாகத் தேவைக்கேற்ப கருணை இல்லங்களைக் கோயில்களில் துவக்கவும் நடவடிக்கை மேற்கொள்வதுடன் அதற்காகும் செலவில் 50 சதவீதத்தை இனிமேல் அரசு ஏற்கும்.

120. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்து அண்மையில் உச்சநீதி மன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை நிறைவேற்றுமுகத்தான் இவ்வரசு "குழந்தைத் தொழிலாளர் மறு சீரமைப்பு மற்றும் நலநிதி" ஒன்றினை உருவாக்கிட முடிவெடுத்துள்ளது.

121. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மத்திய அரசு அளிக்கும் ஓய்வூதியம் பெறுபவர்களின் நீண்டநாளைய கோரிக்கையைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு மாநில அரசு அளிக்கும் ஓய்வூதியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ. 250 லிருந்து ரூ. 500 ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

## ஊனமுற்றோர் நலன்

122. உடல் ஊனமுற்றோர் நலனில் இவ்வரசு எப்போதுமே தனிப்பட்ட கவனம் செலுத்தி வந்துள்ளது. இளம்பிள்ளைவாத நோயை அறவே





ஒழிக்கவும், இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் ஒரு பெரும் திட்டத்தைக் கழக அரசு 1989-90 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. தற்போது அண்ணா மாவட்டத்தில் உடல் ஊனமுற்றோரை சமூகத்தில் பயனுள்ள குடிமக்களாகச் செயல்பட வழிவகை செய்ய ஒரு மாவட்ட மறு வாழ்வு மையம் சிறப்பாக இயங்கி வருகின்றது. அதுபோன்று தமிழ்நாட்டில், வரும் ஆண்டில் எல்லா மாவட்டங்களிலும் மறு வாழ்வு மையங்கள் தொடங்கப்படும். இம்மையங்கள் மூலம் கிராமப்புறங்களிலுள்ள ஊனமுற்றோர்களைக் கண்டறிந்து, தேவைப்படுபவர்களுக்கு மாவட்ட மருத்துவ மனையில் மருத்துவ சிகிச்சை வழங்கப்படும். அவர்களுக்குத் தேவையான உபகரணங்களை அளித்து, அவற்றைப் பயன்படுத்த அவர்களுக்குப் பயிற்சியும் அளித்து, உபகரணங்கள் பழுது அடைந்தால் அவர் சீர் செய்யப்பட்டு அவர்களுக்கு அளிக்கப்படும். அரசு அளிக்கும் ஊனமுற்றோர்க்கான நலத் திட்ட உதவிகள் இவர்களுக்கு முறைப்படி உடனே கிடைப்பதற்கும் இந்த மறு வாழ்வு மையங்கள் உதவி புரியும்.

123. பேருந்துகளில் சாதாரண வழித்தடங்களில் மாத்திரமல்லாமல் விரைவுப் பேருந்து வழித்தடங்களிலும் கண்ணற்றோர், கால்முடமானோர் ஆகிய ஊனமுற்றோருக்கு இலவசப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

## தொழிலாளர் நலன்

124. கட்டிடத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழிலாளர் பிரச்சினைகளை ஆய்ந்தறிந்து அவற்றிற்குத் தீர்வு காண்பதற்கான பரிந்துரைகளை அரசுக்கு அளிப்பதற்குத் தனித்தனியே குழுக்கள் விரைவில் அமைக்கப்படும்.

125. விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. அறுவடைக்கூலி பணமாகவோ அல்லது அறுவடை செய்யப்பட்ட தானியத்தில் எட்டில் ஒரு பங்காகவோ அளிக்கப்படும். குறைந்தபட்ச ஊதிய உயர்வு பற்றிய அறிவிக்கை அடுத்த சில நாட்களில் வெளியிடப்படும்.

## இந்து சமய அறநிலைய நிர்வாகம்

126. திருக்கோயில்களின் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த 1996 ஆம் ஆண்டு இந்த அரசு



நடவடிக்கை எடுத்து இந்து சமய அறநிலையச் சட்டம் திருத்தப்பட்டது. அச்சட்டத்தின் கீழ் முதலமைச்சர் தலைமையில் அறநிலையத்துறை அமைச்சரைத் துணைத் தலைவராகக் கொண்டு, சமயச் சான்றோர்கள், தமிழறிஞர்கள் என எட்டு உறுப்பினர்களைக் கொண்ட ஓர் ஆலோசனைக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழுவின் முதல் கூட்டம் நடைபெற்று, திருக்கோயில் நிர்வாகத்தை மேம்படுத்துதல் அவற்றின் வருவாயைப் பெருக்குதல் தொடர்பான சில முக்கிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

127. நாளும் இன்னிசையால் தமிழ் முழங்கும் இலக்கியங்களும், நன்னெறி நூல்களும் நிரம்பவே உள்ளன. இன்றைய இளைய தலைமுறையினரும் பிறரும் இவற்றின் அருமையையும் பெருமையையும் அறியும் வண்ணம் திருக்குறள், தேவாரம், திருவாசகம், திருப்பாவை, திருவெம்பாவை, நாலடியார் போன்ற நூல்களைத் திருக்கோயில்களில் பயில்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படும். தேவைக்கேற்ப இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

## செய்தித் துறை

128. இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டபின்பு தமிழ்ப் பெருந்தகைகளின் நினைவகங்களைப் பராமரிப்பதில் அதிக அக்கறை செலுத்தப்படுகின்றது. கன்னியாகுமாரியில், திருவள்ளுவருக்கு 133 அடி உயர



சிலை அமைக்க 1990 ஆம் ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டு பணி தொடங்கப்பட்டது. இந்த சிலை அமைக்கும் பணி கணபதி ஸ்தபதி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. திருவள்ளுவர் சிலையை விரைவில் அமைத்திட அரசு தீவிர நடவடிக்கை எடுக்கும். இந்தப் பணிக்காக ரூ.2.46 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. சென்னைக் கடற்கரை காமராஜர் சாலையில் உள்ள அண்ணா சதுக்க மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.1.50 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அதே போல, காஞ்சிபுரத்தில் உள்ள அண்ணா நினைவக மேம்பாட்டுப் பணிக்கு ரூ.4.20 இலட்சமும், நாகர்கோவிலில் ஜீவா நினைவுச் சின்னம் அமைக்க ரூ. 15.50 இலட்சமும், சென்னையில் மகாகவி பாரதியார் நினைவகத்துக்கு ரூ. 8.30 இலட்சமும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

129. உத்தமர் காந்தியடிகள் மண்டப முகப்பில் அவரது மார்பளவுச் சிலையும், மூதறிஞர் ராஜாஜி நினைவாலயத்தில் அவரது மார்பளவுச் சிலையும் இருப்பது போலப் பெருந்தலைவர் காமராஜர் நினைவிட முகப்பிலும், பேரறிஞர் அண்ணா நினைவிட முகப்பிலும், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் நினைவிட முகப்பிலும் அவர்களது மார்பளவுச் சிலைகள் வரும் ஆண்டில் அமைக்கப்படும்.

130. நேதாஜி நூற்றாண்டு விழாவினையொட்டி, நேதாஜியின் முழு உருவச் சிலை சென்னையில் அமைக்கப்பட்டு நூற்றாண்டு விழா கொண்டாடப்படும்.

131. விடுதலை நாள் பொன்விழா ஆண்டைச் சிறப்பாகக் கொண்டாட அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான ஏற்பாடுகளை முடிவு செய்யவும், அரசுக்கு ஆலோசனை நல்கவும் முதலமைச்சர் தலைமையில் பொன் விழாக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

132. தமிழக சட்டமன்றப் பேரவை நீண்ட புகழும் பாரம்பரியமும் மிக்கதாகும். 1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தின்படி, சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளின் பிரதிநிதிகளான மொத்தம் 215 உறுப்பினர்கள் கொண்ட சட்டமன்றப்பேரவை அமைக்கப் பட்டது. இச்சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டம் 14.07.1937 அன்று காலை 11.00 மணிக்கு, சேப்பாக்கத்தில் உள்ள செனட் இல்லத்தில் நடைபெற்றது. அந்நாளே நம் மாநிலத்தில் சட்டமன்றப் பேரவை உருவான நாளாகும். வரும் 14.07.1997 அன்று தமிழக சட்டமன்றப் பேரவை 60 ஆண்டுகளை முடிக்கும் நிலையில், சட்டமன்றப் பேரவையின் வைரவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவது என்று இந்த அரசு முடிவு செய்துள்ளது.

133. மக்களாட்சி அமைப்பின் உயிர்நாடி தேர்தல்களாகும். தமிழ்நாட்டில், நாடு விடுதலை பெற்ற பின்பு 11 பொதுத் தேர்தல்களும், விடுதலை பெறுவதற்கு முன்பு 7 பொதுத் தேர்தல்களும் நடந்துள்ளன. முதல் தேர்தல் 30.11.1920 அன்று தமிழ்நாட்டில் நடந்து, ஏ. சுப்பராயலு ரெட்டியார் தலைமையில் நீதிக் கட்சி ஆட்சி அமைந்தது. அதன் பிறகு 75 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, தமிழகத்







தேர்தல் பவளவிழா சிறப்பாக இந்த ஆண்டு நடத்தப்படும்.

134. திரைப்படத் துறையிலே சண்டைக் காட்சிகளின் போது நடிக்கும் ஸ்டண்ட் நடிகர்கள் உயிரிழக்க நேரிட்டால் ஒரு இலட்சம் ரூபாயும், செயல்பட முடியாத அளவிற்கு ஊனமுற்றால் ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று நான் ஏற்கெனவே அறிவித்ததையொட்டி, அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## அண்ணல் அம்பேத்கர் திரைப்படம்

135. கடந்த நிதிநிலை அறிக்கையில் திரைப்படத் துறையினர் மகிழத்தக்கஅளவுக்குப் பல வசதிகளும், சலுகைகளும் வழங்கப் பட்டுள்ளதை அனைவரும் அறிவார்கள். அண்ணல் அம்பேத்கர் வாழ்க்கையின் வரலாற்றினைப் புகழ் பெற்ற குணச்சித்திர நடிகர் மம்முட்டி நடிப்பில் ஆங்கில மொழியில் திரைப் படமாக எடுக்கிற முயற்சிக்குத் தமிழக அரசின் சார்பில் வாழ்த்துக் கூறுவதுடன், அந்தப்படம் தமிழாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்படுமேயானால் தமிழக அரசின் பரிசுத் தொகையாக அதன் தயாரிப்பாளருக்குத் பத்து இலட்ச ரூபாய் வழங்கப்படுமெனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி

136. பத்திரிகைத் துறையில் தொடர்ந்து இருபதாண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், நிருபர்கள், இயற்கை எய்தினால் அவர்கள் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ. 25.000 நிதி வழங்கப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## அரசு அலுவலர் நலன்

137. சென்ற நிதிநிலை அறிக்கையில் அரசு அலுவலருக்காக இதுவரை மத்திய மற்றும் இதர மாநில அரசுகள் செயல்படுத்தாத பல புதிய திட்டங்களை அறிவித்திருந்தேன். அவை அனைத்தும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

138. சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி முன்னாள் கிராம அதிகாரிகளின் பிரச்சினைகளை முழுவதுமாகத் தீர்க்கும் வகையில் 5.12.1986 முதல் மாதந்தோறும் ரூ. 175 ஓய்வூதியம் வழங்கவும், அவர்களில் சிலர் இறந்துவிட்ட நிலையில் அவர்களின் குடும்பத்திற்கு மாதந்தோறும் ரூ. 100 குடும்ப ஓய்வூதியம் வழங்கவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

139. ஐந்தாவது மத்திய ஊதியக் குழு, தனது பரிந்துரைகளை, மைய அரசிடம் அளித்துள்ளது. மைய அரசு அதன் முடிவுகளை அறிவித்தவுடன் ஆளுநரின் உரையில் குறிப்பிட்டவாறு அதனை இவ்வரசு விரைவாகப் பரிசீலித்து, மாநில அரசுப் பணியாளர்களுக்கும் பயன்கள் கிடைக்க ஆவன செய்யப்படும்.

## மதுரையில் உயர்நீதிமன்றக் கிளை

140. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததற்கு ஏற்ப, மதுரை மாநகரில் சென்னை உயர்நீதிமன்றக் கிளையினை அமைக்கும் பணி தீவிரப் படுத்தப்பட்டு நீதிமன்றத்திற்குத் தேவையான நிலத்தினைக் கையகப் படுத்தும் பணி விரைவு படுத்தப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றக் கிளையினை அமைத்திட நிதியும் உள்ளது. 1973 ஆம் ஆண்டு முதல் பரிசீலனையில் உள்ள இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதில் இனியும் காலதாமதம் இராது.

## தென்மாவட்டங்களில் வறட்சி

141. தென் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலையை அந்தந்த மாவட்டங்களில் உள்ள அமைச்சர்கள், மக்களின் பிரதிநிதிகள், அதிகாரிகளுடன் சென்று உள்ளாட்சித் துறை அமைச்சரும், பொதுப்பணித் துறை அமைச்சரும் ஒருவாரகாலம் நேரில் கண்டு, அறிக்கையொன்றைத் தந்துள்ளனர். அதன் அடிப்படையில் தென் மாவட்டங்களில் வறட்சித் துயர் துடைத்திடவும், முக்கியமாக வேலைவாய்ப்புப் பணிகளை உருவாக்கிடவும் பரிந்துரைக்கப்பட்ட தொகை ரூ. 42 கோடி ஒதுக்கப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## மத நல்லிணக்கம்

142. நமது நாட்டில் பெரும்பான்மை சமுதாயம் என்பது கிளைகள் நிரம்பிய ஒரு மரம் போலவும் சிறுபான்மைச் சமுதாயமென்பது அம்மரத்தில் படரும் கொடி போலவும் அமைந்து மரம், கொடி படர்வதை மறுக்காமல் இருப்பதற்கொப்பவும், கொடி மரக்கிளைகளை அறுக்காமல் இருப்பதற்கொப்பவும், பெரும் பான்மையினரும் சிறுபான்மையினரும் மத நல்லிணக்க மனித நேய உணர்வுடன் வாழ வேண்டும் என்பது இந்த அரசின் கொள்கை யாகும். அந்த உணர்வுகளுக்கு



ஊறு நேரா வண்ணம் தடுத்திடவும் – ஊறுநேர்ந்த இடத்து ஓடிச் சென்று அமைதிப்படுத்திடவும் நல்லெண்ணமுடைய கட்சிகளின் தலைவர்கள் ஒன்று சேர்ந்து செயல்படவுள்ளனர் என்றாலும் கூட, அவர்கள் செயலாக்கத்திற்குத் துணைபுரியும் வண்ணம் அதி விரைவுப் படையொன்று (Swift Action Force) காவல் துறையின் ஒரு பிரிவாக அமைக்கப்படுகிறது. இந்தப் படையினர் சென்னை, கோவை, மதுரை, திருச்சி, நெல்லை ஆகிய இடங்களில் மொத்தம் ஆயிரம் பேர் இருப்பர். இந்த ஆண்டு, முதல் கட்டமாகக் கோவையில் இருநூறு பேருடன் இப்பிரிவு தொடங்கப்படும்.

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

143. மைய அரசு செயல்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தைப் போல நமது மாநிலத்திலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் தேவை என்று சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் உறுப்பினர்கள் அனைவரும் கோரினர். அக்கோரிக்கையை ஏற்று ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தமது தொகுதியில் செயல்படுத்த விரும்பும் பணிகளுக்கு ஆண்டுக்கு ரூ. 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய பணிகளின் பட்டியலை, சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அளித்தால், இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து இப்பணிகள் செயல்படுத்தப்படும். இதற்கான ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும்.

## ஆண்டுத் திட்டம்

144. 1997-98 ஆம் ஆண்டு, ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டு ஆகும். ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்காக, துறைவாரியாகத் திட்டங்களை வகுக்க, நமது மாநிலத் திட்டக் குழுவில் பல்வேறு துறைகளுக்காக 56 பணிக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. இந்தக்குழுக்களின் அறிக்கைகள், 1997 ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்குள் வழங்கப் படும். தமிழகத்தின் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட நிர்ணய அளவு ரூ. 10,200 கோடி ஆகும். ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்ட நிர்ணய அளவு ரூ. 20,000 கோடிக்கு மேல் இருக்கும்.

145. தொழில் மற்றும் பணித் துறைகளின் வளர்ச்சி மூலம்தான் வேலைவாய்ப்பின்மையைக்





குறைக்க இயலும். எனவேதான், அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டிற்கு, இந்த அரசு, அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிலையான விலைகளின் அடிப்படையில் 6 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்த மாநிலத்தின் மொத்த நிகர உற்பத்தி வளர்ச்சி, ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 7 சதவீதத்திற்குமேல் அதிகரிக்க இந்த அரசு முனைப்பான முயற்சிகளில் ஈடுபடும். இந்தக் குறிக்கோளை எய்தும் நோக்கத்துடன், 1997-98 ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 4000 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நடப் பாண்டில் திட்டச் செலவினமான ரூ. 334 கோடி அடுத்த ஆண்டு திட்டம் சேராத செலவினத்திற்கு மாற்றப்படுகிறது. இதையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் அடுத்த ஆண்டு திட்ட ஒதுக்கீடு இந்த ஆண்டின் ஒதுக்கீட்டைவிட 17.4 சதவீதம் கூடுதலாக இருக்கும்.

## நிதி நிலைமை

146. 1996-97 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை 1996 ஜூலைத் திங்களில் தாக்கல் செய்தபோது, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ. 11,068.07 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ. 12,106.70 கோடியாகவும் இருந்தது. இதனால் வருவாய்ப் பற்றாக்குறை ரூ. 1038.63 கோடியாகும். 1996-97 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீட்டில், வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ. 11,760.33 கோடியாகும். வருவாய்க் கணக்கில் செலவு ரூ. 13,047.20 கோடியாகவும் உயர்ந்துள்ளது. இதனால் வருவாய்ப் பற்றாக்குறை ரூ. 1,286.87 கோடியாகவும் உயர்ந்துள்ளது. இவ்வுயர்விற்கு வெள்ள நிவாரணப் பணிகளுக்காக, ரூ. 195 கோடி கூடுதலாகச் செலவு செய்தது, அரசுப் பணியாளர்களுக்குக் கூடுதல் இடைக்கால நிவாரணத் தொகையைக் கொடுக்க ரூ. 203 கோடி ஒதுக்கியது, பொங்கல் பண்டிகைக்கான கருணைத் தொகை மற்றும் ஊதியக் கொடையை அதிகமாகக் கொடுத்த வகையில் ரூ. 40 கோடி செலவிட்டது ஆகியவைகளே முக்கியக் காரணங்களாகும்.

147. 1996-97 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்தப்பற்றாக்குறை ரூ. 334.89 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டது. ஆனால் 1996-97 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் அப் பற்றாக்குறை ரூ. 156.22 கோடியாகக் குறைந்துள்ளது. வரவு செலவுத் திட்டத்தில் கணக்கிடப்பட்ட அளவைவிட நிகரக் கடன் வரவுகள் அதிகமானதும் மூலதனச் செலவு குறைந்ததும் இதற்குக் காரணமாகும்.

148. 1997-98 ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ. 12,641.05 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ. 14,377.62 கோடியாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூ. 1,736.57 கோடியாக உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஐந்தாவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் அரசுப் பணியாளர்களின் சம்பள உயர்விற்காகவும், உள்ளாட்சி மன்றங் களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்காகவும், ஓய்வூதியத் தொகை கொடுக்கும் வகையிலும் கூடுதலாக நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளதே இவ்வுயர்விற்குக் காரணங்களாகும்.

149. 1997-98 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் அனைத்துக் கணக்குகளின் நிகரப் பற்றாக்குறை, ரூ. 498.38 கோடியாக அதிகரித் துள்ளது.

150. வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை, வெகுவாக அதிகரித்து உள்ளது. மாநிலத்தின் திட்டங்களை முறையாகச் செயல்படுத்த இதனைக் குறைப்பது அவசியம். இந்தப் பற்றாக் குறையை ஓரளவிற்குக் குறைக்கத் தக்க வரி விதிப்பு மற்றும் செலவு நிர்வாக நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டியது இன்றி யமையாததாகும்.

## முத்திரைத் தாள்களும் பத்திரப் பதிவும்

151. நூற்று முப்பது ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த பதிவுத் துறை, மக்களுக்கு ஆற்றும் பணியினை மேம்படுத்தவும், வரி ஏய்ப்பினைக் குறைக்கவும் வழிவகை செய்ய நிர்வாக மாற்றங்களும் சட்டத் திருத்தங்களும் கொண்டு வரப்படும். அரசு நடவடிக்கை எடுக்கும். இத்துறையில் கணிப்பொறிகளைப் பயன்படுத்தி, மக்களுக்கு வசதிகளை அதிகரிக்க வரும் நிதி ஆண்டில் ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

152. மற்ற மாநிலங்களில் தமிழகத்திலுள்ள சொத்துக்களைப் பதிவு செய்வதன் மூலம் ஏற்படும் வரி இழப்பினைத் தவிர்க்க, பத்திரப் பதிவுச் சட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

153. முத்திரை வரி 13 சதவீதத்திலிருந்து 0.1 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதால், வீட்டு வசதி நிதி நிறுவனங்கள் அதிக நிதி ஆதாரங்களைத் திரட்டி வீடு கட்டுபவர்களுக்குக் கடன் வசதி அளிக்க இயலும்.

## மோட்டார் வாகன வரி

154. இந்தியாவில் தயாராகும் எடை குறைவான வாகனங்களுக்கு (Light Motor Vehicles) விதிக்கப்படும் மோட்டார் வாகன வரி 1.4.1994 லிருந்து உயர்த்தப்பட்டது. இந்த வாகனங்களுக்கு விதிக்கப்படும் ஆண்டு வரி பின்வருமாறு மாற்றி அமைக்கப்படும்.

| சுமையில்லாத எடை | இந்தியாவில் தயாராகும் வாகனங்கள் ஆண்டுவரி | | | |
|---|---|---|---|---|
| | தனிப்பட்டோர் | | மற்றவை | |
| | தற்போதைய | மாற்றப்பட்ட | தற்போதைய | மாற்றப்பட்ட |
| | | | ரூபாய் | |
| அ) 700 கிலோ வரை எடை | 500 | 600 | 1000 | 1200 |
| ஆ) 701 கிலோவுக்கு மேல் 1500 கிலோ வரை எடை | 650 | 800 | 1300 | 1600 |
| இ) 1501 கிலோவுக்கு மேல் 2000 கிலோ வரை எடை | 750 | 1000 | 1500 | 2000 |
| ஈ) 2001 கிலோவுக்கு மேல் 3000 கிலோ வரை எடை | 800 | 1100 | 1600 | 2200 |
| உ) 3001 கிலோவுக்கு மேல் எடை | 900 | 1250 | 1800 | 2500 |

155. ஒப்பந்த ஊர்திகளுக்கு விதிக்கப்படும் ஆண்டு வரி பின்வருமாறு மாற்றி அமைக்கப் படும்.

| | ஆண்டு வரி | |
|---|---|---|
| | தற்போதைய வரி | மாற்றப்பட்ட வரி |
| | | (ரூபாய்) |
| அ) ஆட்டோ ரிக்ஷா | 240 | 280 |
| ஆ) சாதாரண வாடகைச் சிருந்து | 600 | 700 |
| இ) சுற்றுலாப் பயணிகள் வாடகைச் சிருந்து | 800 | 1000 |

ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு, கடைசியாக மோட்டார் வாகன வரி 1983 ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்டது.

156. மோட்டார் வாகனவரி செலுத்தும்போது சந்திக்கின்ற இடர்ப்பாடுகளையும் அல்லல் களையும் கருத்தில் கொண்டு, வரி செலுத்து வதற்காக வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டியதன் அவசியத்தைக் குறைக்க வேண்டுமென்று பரிந்துரைகள் வந்துள்ளன. இதைக் கருத்தில் கொண்டு ஒப்பந்த ஊர்திகளுக்கு விதிக்கப்படும் மோட்டார் வாகன வரி உரிமக் கட்டணத்தோடு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வசூலிக்கப்படும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. புதிய ஆட்டோ ரிக்ஷாக்கள், சாதாரண வாடகைச் சிருந்துகள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வாடகைச் சிருந்துகள் போன்ற வாகனங்கள் உரிமம் பெறும்போது உரிம கால மான ஐந்தாண்டுக்கான மோட்டார் வாகன வரி செலுத்தவேண்டும். கட்ட வேண்டிய ஐந்தாண்டு கால வரி ஆட்டோ ரிக்ஷாவிற்கு ரூபாய் 1400, சாதாரணச் சிருந்திற்கு ரூபாய் 3500, சுற்றுலாப் பயணிகள் வாடகைச் சிருந்திற்கு ரூபாய் 5000 ஆகும். தற்போதுள்ள உரிமதாரர்கள் உரிமம் புதுப் பிக்கும் வரையில் இவ் வரியை ஆண்டுதோறும் செலுத்த வேண்டும். உரிமம் புதுப்பிக்கப்படும்போது உரி மக் காலத்திற்கான வரியை உரிமக் கட்டணத்தோடு செலுத்தப்பட வேண்டும். இதன் மூலம் உரிமம் பெறுபவர்கள் உரிமக் காலத்தின்போது மோட்டார் வாகன வரி செலுத்துவதற்காக வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் செல்ல வேண்டிய அவசியம் இராது.

157. மோட்டார் சைக்கிள்களுக்கு விதிக்கப்படும் ஆண்டு வரி பின்வருமாறு மாற்றி அமைக்கப்படும்:-

| மோட்டார் சைக்கிள் | ஆண்டு வரி | |
|---|---|---|
| | தற்போதைய வரி | மாற்றப்பட்ட வரி |
| | | (ரூபாயில்) |
| 50 சி.சி. வரை | விலக்கப்பட்டது | |
| 51 முதல் 75 சி.சி. வரை | 125 | 135 |
| 76 முதல் 170 சி.சி. வரை | 180 | 200 |
| 170 சி.சி. க்கு மேல் | 210 | 240 |

மோட்டார் சைக்கிள்களுக்கான ஆயுட்கால வரி இதே விகிதாசாரத்தில் மாற்றியமைக்கப் படும்.





158. மாற்றியமைக்கப்பட்ட மோட்டார் வாகன வரி விகிதங்கள் 1.4.1997 முதல் அமலுக்கு வரும்.

## விற்பனை வரி

159. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தொழில் வளர்ச்சியும் வணிகமும் தழைத்தோங்க, நிலையான, குழப்பமற்ற, நேயமான ஒரு சூழ்நிலை உருவாக்குவதற்கு ஒரு தொலை நோக்கு வரிக்கொள்கையை அறிவித்தேன். அதன்படி வணிகவரி அமைப்பில் பல சீர்திருத்தங் கள் செய்யப்பட்டன. பல இனங்களில் வரிகள் குறைக்கப்பட்டன. இவற்றை வணிக சமுதாயமும் தொழில் முனைவோரும் வரவேற்றுள்ளனர். இதனைத் தொடர்ந்து வணிக வரிகளில் மேலும் தேவையான மாற்றங்களை அரசுக்குப் பரிந் துரைக்க திரு. தங்கராசு, இ.ஆ.ப. (ஓய்வு) தலைமையில் நியமிக்கப்பட்ட விற்பனைவரிச் சீரமைப்புக் குழுவின் அறிக்கையைப் பரிசீலித்து, விற்பனைவரி விதிப்பில் பின்வரும் மாற்றங் களைச் செய்ய முடிவு செய்யப் பட்டுள்ளது. இதன்மூலம் நமது மாநிலத்தில் வேளாண்மை, தொழில் மற்றும் வணிக வளர்ச்சிக்கு மேலும் ஊக்கம் அளிக்கப்படும் என்று நம்புகிறேன்.

160. விவசாயிகள் பயன்படுத்தும் யூரியா உரத்துக்கு விற்பனைவரி 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்படும். இதன் மூலம் அண்மையில் மத்திய அரசு அறிவித்த கூடுதல் விலை அதிகரிப்பு ஓரளவு குறைக்கப்பட்டு விவசாயிகள் பயன்பெறுவர். மேலும் சொட்டுநீர்ப் பாசன சாதனங்கள் போன்ற நீர்ப்பாசனச் சாதனங்களுக்கு வரி 11 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்படும். மீன் மற்றும் கால்நடைத் தீவனத்திற்கு முழு வரி விலக்கு அளிக்கப்படும்.

161. மூங்கிலால் செய்யப்பட்ட தட்டி, முறம், கூடைகள், தேங்காய் ஓடுகள், நிலக்கடலைத் தோல், சீயக்காய்பொடி, தொன்னை, சாம்பிராணி, சம்மட்டி, கடல் சிப்பி மற்றும் சிப்பியினால் செய்யப்பட்ட பொருள்கள், தயிர், பஞ்சாமிர்தம், நாட்டு மருந்துகள் 39 மற்றும் புற்றுநோய், தொழுநோய், காசநோய்களுக்கான உயிர்காக்கும் மருந்துகள், ஊனமுற்றோர் பயன்படுத்தும் சைக்கிள் வாகனங்கள், கல்வி அட்டவணைகள், வரைபடங்கள், சுற்றுலாக் கையேடு - வரை படங்கள், சூரிய ஒளி மின் கலங்கள் (Solar Cell), செங்கல் மற்றும் ஓடு செய்யப்பயன்படும் களிமண், அவுரி இலை மற்றும் காய், நிலவாகை செடி இலை, மரவள்ளிக் கிழங்கின் கப்பி மற்றும் திப்பி, பழைய வெள்ளியினால் ஆன மெட்டி, கொலுசு, அரைஞாண் கயிறு, ரூபாய் 50க்குக் குறைவான காலணிகள், தங்க நகைகள் செய்து ஏற்றுமதி செய்வோர்க்கு மத்திய அரசு நிறுவனமான எம்.எம்.டி.சி. விற்கும் தங்கம் ஆகிய இனங்களுக்கு 11 சதவீதம், 8 சதவீதம், 4 சதவீதம் மற்றும் 2 சதவீதம் என்று இருந்த வரிகள் ரத்து செய்யப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

162. கைப்பெட்டிகள், ஆயில் இஞ்ஜின் பாகங்கள், மேஜை, நாற்காலி போன்ற அறைக் கலன்கள், வணிகர் சின்னம் உள்ள (Branded) வெண்ணை, நெய் ஆகியவற்றிற்கு வரி 11 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகக் குறைக்கப் பட்டுள்ளது.

163. தற்போது மூக்குக்கண்ணாடி மற்றும் தட்டச்சுப் பொறிகளுக்கு 20 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. அது 8 சதவீதமாகக் குறைக் கப்படுகிறது.

164. காகிதப் பைகள், குடைகள், கைவினைப் பொருட்கள், 30 அடிசரக்குப் பொருட்கள் மற்றும் தார்ப்பாய் போன்ற இனங் களுக்கு விதிக்கப்படும் வரி 11 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

165. தமிழ்த் தட்டச்சுகளுக்கு வரி 20 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப் படுகிறது.

166. கண்ணாடி மணிகள், கண்ணாடிகோலிக் குண்டுகள், கொசு விரட்டிகள் மற்றும் அழிப் பான்கள் அதற்குப் பயன்படும் வில்லைகள் முதலியவற்றிற்கு வரி 16 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

167. வறுத்த வேர்க்கடலை, தலைக் கவசங்கள், தாவரக் கழிவுக் கட்டிகள், ஜல்லி, பொம்மைகள், மின்னணுப் பொருட்களின் பாகங்கள் மற்றும் துணைப் பொருட்கள், (Electronic parts and accessories) மாணவர்கள் ஓவியத் திற்குப் பயன்படுத்தும் எழுது பொருள்களுக்கு வரி 11 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக் கப்படுகிறது.

168. வணிகச் சின்னம் இல்லாத காலணிகள், செப்பு, எவர்சில்வர் மற்றும் பித்தளையால் செய்யப்பட்ட வீட்டு உபயோகப் பாத்திரங்கள், சுவையூட்டப்பட்ட பால், கழிவுக் காகிதங்கள், கல்வி நிலையங்களுக்கு விற்கப்படும் விஞ் ஞானக் கருவிகள், தையல் மற்றும் சித்திரத்

தையல் இயந்திர பாகங்கள் மற்றும் அதன் ஊசிகள் ஆகியவற்றிற்கு வரி விகிதம் 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக் கப்படுகிறது.

169. மாநிலத்திற்குள் விற்பனை செய்யப் படும் தேங்காய், கொப்பரை போன்றவற்றிற்கு வரி 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது. அதேசமயம் மற்ற மாநிலங் களுக்கு விற்பனை செய்யப்படும் தேங்காய், கொப்பரைகளுக்கு 2 சதவீதம் வரி விதிக்கப்படும். இதனால் நம் மாநிலத்தின் தொழில் வளர வாய்ப்பு ஏற்படும்.

170. பனியன் உள்ளிட்ட பின்ன லாடைகளுக்கு வரி 4 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

171. வணிக வரி சீரமைப்புக் குழு தற்போது சில பொருட்களில் பரவலாக உள்ள வரி ஏய்ப்பினைக் குறைக்கவும் நமது மாநிலத்திற்குள் விற்பனையைப் பெருக்கவும் வரி வீதங்களில் சில மாறுதல்களைப் பரிந்துரைத்துள்ளது. அவற்றின் அடிப்படையில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

- ✧ பருத்திக்குக் கொள்முதல் வரி 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.
- ✧ சரிகைக்கு விற்பனை வரி 8 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.
- ✧ செயற்கை இழை, நூல் மற்றும் செயற்கை இழைகளுக்குப் பிற மாநில முகவர்களுக்குக் கிளை மாற்றமாகவோ அல்லது முகவர் விற்பனையாகவோ செய்யக்கூடாது என்ற நிபந்தனை பேரில் விற்பனை வரி 8 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்படும்.
- ✧ தங்கம், வெள்ளி நகைகள் போன்றவைகளுக்கு வரி பின்வரும் படிமுறை (Slab system) வீதத்தில் ஒவ்வொரு மாதத்திற்கும் பின்வருமாறு விதிக்கப்படும்.

1. ஆண்டுக்கு மொத்த விற்பனைத் தொகை ரூ 3 இலட்சத்துக்கு மேலும் ரூ. 5 இலட்சத்துக்குக் குறைவாகவும். — ரூ. 500/-

2. ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ. 5 இலட்சத்துக்கு மேலும் ரூ. 10. இலட்சத்துக்குக் குறைவாகவும். — ரூ. 1000/-

3. ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ. 10 இலட்சத்துக்கு மேலும் ரூ. 20 இலட்சத்துக்குக் குறைவாகவும். — ரூ. 2000/-

4. ஆண்டு மொத்த விற்பன்னைத் தொகை ரூ. 20 இலட்சத்துக்கு மேலும் ரூ. 30 இலட்சத்துக்குக் குறைவாகவும். — ரூ. 4000/-

5. ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ. 30 இலட்சத்துக்கு மேலும் ரூ. 40 இலட்சத்துக்குக் குறைவாகவும். — ரூ. 6000/-

6. ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ. 40 இலட்சத்துக்கு மேலும் ரூ. 50 இலட்சத்துக்குக் குறைவாகவும். — ரூ. 7000/-

7. மொத்த விற்பனைத் தொகை ரூ. 50 இலட்சத்துக்கு மேல் — நடைமுறையில் உள்ள வரிவீதம் பொருந்தும்.

✧ விண்மீன் குறியிட்ட இந்த வரிக்குறைப்பு முடிவுகள், குழு பரிந்துரை செய்தவாறு ஆறு மாதத்திற்குப் பின் பரிசீலிக்கப்பட்டு எதிர்பார்த்த கூடுதல் வரி வசூல் கிடைக்கவில்லை என்றால் இந்த முடிவுகளில் தக்க மாற்றம் செய்யப்படும்.

172. உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்களுக்கு விற்பனை வரி சில ஆண்டுகளுக்கு முன்பு விலக்கிக் கொள்ளப் பட்டது. வணிகவரி சீர்திருத்தக் குழு படிமுறை வீதத்தில் வரி விதிக்கப் பரிந்துரைத்துள்ளது. இந்த வரி விதிப்பால் உணவு விடுதிகளில் உணவுப் பொருள்களின் விலை அதிகரிக்கக் கூடாது என்ற கருத்தினைக் கொண்டு குழு பரிந் துரைத்ததை விட, குறைந்த விகிதத்தில் பின் வருமாறு படிமுறை வீதத்தில் வரி விதிக்கப் படுகிறது.

1. ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ. 25 இலட்சம் வரை - — வரியில்லை

2. ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ. 25 இலட்சத்துக்கு மேலும் ரூ. 30 இலட்சத்துக்குக் குறைவாகவும். — ரூ. 2000/- மாதம் ஒன்றுக்கு

3. ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ. 30 இலட்சத்துக்கு மேலும் ரூ. 40 இலட்சத்துக்குக் குறைவாகவும். — ரூ. 3000/- மாதம் ஒன்றுக்கு

4. ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ. 40 இலட்சத்துக்கு மேலும் ரூ. 50 இலட்சத்துக்கு குறைவாகவும். — ரூ. 4000/- மாதம் ஒன்றுக்கு

5. ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ. 50 இலட்சத்துக்கு மேற்படின் — 2 சதவீதம் வரி





173. பான்மசாலாவுக்கு விற்பனை வரி 11 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக அதிகரிக்கப் படுகிறது.

174. பரிசுச் சீட்டு விற்பனை மீது தற்பொழுது நடைமுறையில் உள்ள இணக்க வரி விதிப்பின் வீதங்கள் பின்வருமாறு மாற்றி அமைக்கப் படுகிறது:

| | தற்போதைய வரி | மாற்றியமைக் கப்பட்ட வரி |
|---|---|---|
| வாராந்திரக் குலுக்கல் | ரூ. 6000/- | ரூ. 10.000/- |
| மாதமிரு முறை குலுக்கல் | இணக்கவரி முறை இல்லை | ரூ. 15,000/- |
| மாதாந்திரக் குலுக்கல் | ரூ. 15,000/- | ரூ. 25,000/- |
| மாதாந்திரச் சிறப்புக் குலுக்கல் | ரூ. 15,000/- | ரூ. 40,000/- |
| விழாக்காலச் சிறப்புக்குலுக்கல் | ரூ. 20,000/- | ரூ. 60,000/- |

175. விற்பனை வரி சீர்திருத்தக்குழு அளித் துள்ள பரிந்துரைகளில் நமது நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு ஒரு பகுதிதான் தற்போது ஏற்றுக்கொள்ள இயலும். இவற்றைச் செயல் படுத்துவதினால் ஏற்படும் விளைவுகள், அரசுக் குக் கிடைக்கும் வருவாய் போன்றவைகளைப் பரிசீலித்து மீதமுள்ள பரிந்துரைகளைச் செயல் படுத்துவது பற்றி அடுத்த நிதியாண்டில் முடிவெடுக்கப்படும்.

## மதிப்புக் கூட்டுவரி

176. சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கை யில் மறு விற்பனையாளர்களுக்கு மதிப்புக் கூட்டுவரி முறையைச் செயல்படுத்த அறிவிக்கப் பட்டது. பின்னர், வணிகர்களின் கோரிக்கையை ஏற்று மறு பரிசீலனை செய்யும் வரை இந்த வரி விதிப்பு முறையை அமல்படுத்துவது ஒத்திவைக் கப்பட்டது. விற்பனை வரி சீரமைப்புக் குழு இம்முறையைச் செயல்படுத்தும் முன், வணிகர் களுக்கு இது பற்றி நன்கு விளக்கிக் கூறுவதும், வணிகவரி அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப் பதும் அவசியம் என்று வலியுறுத்தியுள்ளது. இதன் படி தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்ட பின்னர் மதிப்புக் கூட்டுவரி விதிப்பதுபற்றித் தக்க முடிவுகள் எடுக்கப்படும்.

## சோதனைச் சாவடிகள்

177. மாநிலத்தின் எல்லைகளில் உள்ள சோதனைச் சாவடிகளைத் தவிர மாநிலத்திற்குள் உள்ள பிற தேவையற்ற சோதனைச் சாவடிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகச் சுழற்படைகளை அமைக்க குழு பரிந்துரை செய்துள்ளது. இப்பரிந் துரையை ஏற்று, படிப்படியாகச் செயல் படுத்தப்படும்.

178. வணிகவரித் துறையின் செயல்பாட்டை மேம்படுத்தவும், சோதனைச் சாவடிகளில் உள்ள நடைமுறை சிக்கல்களைக் களைந்து நிர்வாக முறையை எளிமையாக்கவும், வரி ஏய்ப்பினை உடனுக்குடன் கண்டுபிடிக்கும் வகையில் புலன் ஆய்வு மேற்கொள்ளவும், கணிப்பொறி மயமாக் கவும் ஒரு திட்டத்தை அரசு விரைவில் செயல்படுத்த உள்ளது. இதற்காக 1997-98ல் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

179. விற்பனை வரி சீரமைப்புக் குழு விற்பனை வரி விதிப்பு முறையை (Procedure) எளிமையாக்குவது தொடர்பாகப் பரிந்துரைகள் செய்துள்ளது. இவை பரிசீலிக்கப்பட்டு அரசின் முடிவுகள் வணிகவரித் துறையின் மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்படும்.

## கேபிள் டி.வி.

180. கேபிள் டி.வி.க்கான கேளிக்கை வரி தற்போது மொத்த வசூலில் 20 சதவீதமாக உள்ளது. இனி சந்தாதாரர் ஒருவருக்கு மாதம் ரூபாய் 20 என்று மாற்றியமைக்கப்படும். தற்போது கேபிள் டி.வி. உரிமத்தில் உள்ள 100 சந்தாதாரர் என்ற வரம்பு 500 ஆக உயர்த்தப்படும்.

## ஆயத் தீர்வை

181. மது வகையறாக்கள் மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வை 1994 ஆம் ஆண்டிலிருந்து மாற்றப் படாமல் உள்ளது. இந்த நிதி நிலை அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள விற்பனை வரிச்சலுகைகளால் ஏற்படும் நிதி இழப்புக்கு ஈடுகட்டவும் வளர்ச்சிப் பணிகளுக்குத் தேவையான கூடுதல் நிதி ஒதுக்கவும் மது இனங்கள் மீது உள்ள ஆயத்தீர்வையை புருப் லிட்டர் (Proof litre) ஒன்றுக்கு ரூபாய் 15 வீதம் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பொழுது பெட்டி (Case) ஒன்றுக்கு ரூ. 95 ஆக உள்ள விற்பனைக் கட்டணம் (Vend Fee) ரூ. 165 ஆக உயர்த்தப்படும். இவற்றின் மூலம் ரூ. 210 கோடி கூடுதல் வருவாய் பெறப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

182. இந்த வரவு-செலவுத் திட்டத்திலும், இதற்கு முன்பும் அறிவிக்கப்பட்ட வளர்ச்சிப் பணிகளும், வேலைவாய்ப்புப் பணிகளும், நல்வாழ்வுத் திட்டங்களும், மற்றும் மாவட்டங்

களில் தொடர்ந்து நடைபெற்று வரும் அனைத்து அமைச்சகங்களின் எல்லாப் பணிகளும் திட்டமிட்டபடியும் அறிவித்தபடியும் நடைபெறு கிறதா என்பதைக் கவனித்திட ஆற்றல் மிகு அதிகாரிகளைக் கொண்ட ''வளர்ச்சிப் பணி கண்காணிப்புக் குழு'' ஒன்று (Cell for Monitoring Development Programmes) முதலமைச்சர் அலுவலகத்தில் அமைக்கப்படும். ஒவ்வொரு அமைச்சரும் மாதந்தோறும் தம் துறையின் திட்டங்களையும் அவற்றின் செயல்பாடுகளையும் துறை அதிகாரிகளுடன் அமர்ந்து விவாதித்து அதன் விபரங்களை இந்தக் குழுவுக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

*183.* இதன் மூலம் மக்களுக்கான பணிகளின் பயன்கள் திட்டமிட்டபடி காலதாமதமின்றி உரிய நேரத்தில் மக்களைச் சென்றடைவது விரைவு படுத்தப்படும், உறுதி செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் நாங்கள் சொல்வதைச் செய்வோம் - செய்வதைச் சொல்வோம்.

*184.* இந்த நிதி நிலை அறிக்கை தயாரிக்கும் பணியில் என்னுடன் இணைந்து நின்று கருத் தறிவித்தும் கண் விழித்து ஒத்துழைத்தும் உதவிய அரசுத் துறை அலுவல் ஆர்வலர்களுக்கும் - குறிப்பாக நிதித் துறைச் செயலாளர் திரு ராஜாராமன், ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும் என் இதய நன்றியை உரித்தாக்குகிறேன்.

*185.* பேரவைத் தலைவர் அவர்களே! இந்தியத் திருநாட்டின் தென்கோடி முனையில், சோழ சாம்ராஜ்யத்தின் புலிக் கொடி பட்டொளி வீசிப் பறந்த தஞ்சைத் தரணியில், திருக்குவளை என்ற கிராமத்தில் வேளாண் தொழில் ஈடுபாடும், இசைத் திறனும் கொண்ட மிகவும் பிற்படுத்தப் பட்ட ஒரு குடும்பத்தில் பிறந்து, இளம்வயதிலேயே தன்மான உணர்வும், தமிழ் மொழிப்பற்றும் மிகக் கொண்டு, தந்தை பெரியாருக்குத் தொண்டனாகவும், அறிஞர் அண்ணாவுக்குத் தம்பியாகவும், தமிழ்ப் பெருங்குடி மக்களுக்காக உழைக்கும் உடன் பிறப்பாகவும் என்னை ஆக்கிக் கொண்டுள்ள இந்த அறுபதாண்டு காலப் பொதுவாழ்வில் எழுபத்தி மூன்று வயதுடைய நான் ''வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக் கட்டும்'' என்ற சூளுரையுடனும், கடலில் தூக்கி எறிந்தாலும் தமிழ் மக்கள் ஏறிச் சவாரி செய்யும் கட்டுமரமாக மிதப்பேன் என்ற கடமை உணர் வுடனும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட அடக்கப்பட்ட மக்களின் உரிமை வாழ்வு ஒன்றையே அல்லும்



பகலும் நினைவிற் கொண்டு - அவர்களின் அணி வகுப்பில் ஒரு சிப்பாயாகப் பணியாற்றும் பேறு பெற்று, அவர்களின் உயர்வுக்கும் உரிமைக்கும் வழிவகுக்கும் ஆற்றலும் அக்கறையும் உள்ளவர்கள் முன்னேறிய பிரிவினரில் இருப்பின் அவர்களையும் அடையாளம் கண்டு அரவணைத்து, அவர்தம் துணையுடன் ஒடுக்கப்பட்டோர் உன்னத வாழ்வுக்காகவும், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் எனும் சபதம் என்றைக்கு நிறைவேறும் என்ற என் ஏக்கத்தை, தூக்கத்திலும் கனவாகக் கண்டு, அக்கனவை நனவாக்க வேண்டுமென்பதற் காகவும், என் காலத்தில் அமைதியானதும், அரிய வளம் கொழிப்பதும், அறிவாற்றல் சிறந் தோங்குவதுமான தமிழ்ச் சமுதாயத்தைக் காண வேண்டுமென்பதில் தணியாத ஆர்வத்தின் காரணமாகத் தயாரிக்கப்பட்டதே இந்த நிதி நிலை அறிக்கை. இதனை நாட்டு மக்களும், கட்சித் தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் விமர்சிக்கும்போது,

***''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்***
***மெய்ப்பொருள் காண்ப தறிவு''***

– எனும் குறளுக்கேற்ப வரவேற்று மகிழ்ந்து, குறை திருத்தி, நிறை தோன்றப் பாடுபடுவேன் என்று உறுதி கூறி இந்த நிதி நிலை அறிக்கையை அவைமுன் வைக்கிறேன்.

**வணக்கம்.**





மருத்துவம்



# தொழுநோய்த் தடுப்பு

தேசிய தொழுநோய் ஒழிப்புத்திட்டத்தில் நோயாளிகளுக்கு ஊனம் வராமல் தடுப்பது மிகவும் முக்கியப் பணிகளில் ஒன்றாகும். ஏனெனில், தொழுநோய் என்றாலே மக்களின் கண்முன் தெரிவது, கை கால் ஊனமுற்ற நோயாளிகள் தான்.

தொழுநோயால் கைகால் ஊனம் என்பது தொழுநோயின் ஆரம்பநிலையில் ஏற்படுவதில்லை. தொழுநோயாளிகளின் தவறான எண்ணத்தாலும், ஆரம்பநிலையில் சிகிச்சையை எடுத்துக் கொள்ளாததாலும், தொழுநோயாளிகளின் கவனக் குறைவாலும்தான் அவர்கள் உடல் ஊனமடைகிற நிலைக்கு ஆளாகிறார்கள்.

ஆகையால், நம்முடைய முதன்மையான பணி நோயாளிகளை, நோய் ஆரம்ப நிலையில் உள்ளபோதே கண்டறிய வேண்டும் என்பதுதான்.

கண்டுபிடிக்கப்பட்ட நோயாளிகளின் நரம்புகள் பாதிக்கப்பட்டுள்ளனவா என்பதை நன்கு சோதித்துக் கண்டு பிடித்தல் வேண்டும். தொழுநோய்க் கிருமிகள் நரம்புகளைத் தாக்கும் பொழுதுதான் உடல் ஊனம் ஏற்படச் சந்தர்ப்பம் உண்டாகிறது.

## குறைகளைச் சரிசெய்தல்

தொழுநோய் ஒழிப்புத்திட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள கட்டுப்பாட்டு நிலையங்களிலும் மற்றும் உள்சேர்க்கைத் தொழுநோய் நோயாளிப் பிரிவிலும் நரம்புகளைப் பரிசோதனை செய்வதற்கு என்றே 'முடநீக்குப் பயிற்சியாளர்' நியமனம் செய்யப்பட்டு, இந்தப் பணியைச் சிறப்பாகச் செய்துவருகின்றனர். இவர்கள் நோயாளிகளின் உடல் நரம்புகளின் தசைகளின் வீரியம் ஆகியவற்றைப் பரிசோதனை செய்து அவர்களுக்கு ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், அவற்றைச் சரிசெய்யப் பயிற்சியும் கொடுக்கப்படுகிறது.

பயிற்சி பெற்ற நோயாளிகளால் மற்ற நோயாளிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும் தொழுநோயாளிகளின் கைகால்கள் ஊனமாவது மட்டுமின்றி, கைகால்களில் புண்கள், கொப்பளங்கள் உண்டாகி, அதன் மூலமும் உடல் ஊனம் ஏற்படலாம். இது தொழுநோயாளிகளின் கவனக்குறைவால் ஏற்படுவதேயாகும். காலணி அணியாது நடப்பதாலும், புண்கள் அதிகமாகி உடல் ஊனம் ஏற்படச் சந்தர்ப்பமாகிறது.

**டாக்டர் ஆண்ட்ரூஸ் தீனபந்து**
*மாவட்டத் தொழுநோய் அலுவலர், சென்னை*

★ *1991 ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்புப்படி, தமிழ்நாட்டின் மக்கள் தொகை 55.6 மில்லியன். இவற்றில் 33.6 மில்லியன் மக்கள் கிராமங்களிலும் 19 மில்லியன் மக்கள் நகரங்களிலும் வசிக்கிறார்கள். இந்தியாவில் தொழுநோய்த் தன்மை அதிகம் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும்.*

★ *1983 ஆம் ஆண்டின்படி தமிழ்நாட்டில் நோய்த் தன்மை ஆயிரத்திற்கு 11.8 ஆகும்; மொத்த நோயாளிகள் 5.8 இலட்சம் பேர். தொழுநோய்க்கான கூட்டு மருந்து சிகிச்சை முறை 1983 ஆம் ஆண்டு முதன் முதலாக வட ஆர்காடு மாவட்டத்தில் தொடங்கப்பட்டு, பிறகுதான் மற்ற மாவட்டங்களுக்கு விரிவாக்கப்பட்டது.*

★ *தமிழகத்தில் 31.1.97 வரையான தொழுநோயாளிகள் எண்ணிக்கை 51,824. அதில் தொற்றுத்தன்மை நோயாளிகள் 13,312 பேர்; 38,512 பேர் தொற்றாத தன்மை நோயாளிகள்.*

★ *கடந்த பதின்மூன்றாண்டுக்காலத்தில் இந்த நோய்த்தன்மை ஆயிரத்துக்கு 11.8 லிருந்து 0.9 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.*

### வெறும்கால் வேண்டாம்

இந்தத் திட்டத்தில் தொழுநோயாளிகளுக்கு பொருத்தப்பட்ட காலணிகள் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன ஆகையால், தொழுநோயாளிகள் வெறும் கால்களுடன் நடப்பதைத் தவிர்க்க வேண்டும். இந்த நோயின் தன்மையால் உணர்ச்சியை உணரமுடியாத நிலையில் இருப்பதால், அவர்கள் சூடான பாத்திரங்களைத் தொடுவதைத் தவிர்க்க வேண்டும். ஊனத் தடுப்பு என்பது நோயாளிகள், அவர்களைச் சார்ந்த குடும்பத்தினர், பொதுமக்கள் அனைவரின் பொறுப்பே என இந்தத் திட்டத்தால் உணர்த்தப்பட்டு வருகிறது.

ஊனத்தடுப்பில், முக்கியமாக நோயாளியின் குடும்பத்தாரின் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமாகும். அவரைக் குடும்பத்திலேயே ஊக்குவித்து கால் கைகளில் உள்ள புண்களுக்குச் சிகிச்சை பெறச்செய்ய வேண்டும். ஆரம்ப நிலையில் உள்ள ஊனத்தை அறுவை சிகிச்சையின் மூலம் முழுமையாகக் குணப்படுத்த முடியும். மேலும் நரம்புகள் மட்டும் பாதிக்கப்பட்டிருந்தால், பாதிக்கப்பட்ட தன்மைக்கேற்ப வைத்தியத்தின் மூலம் குணப்படுத்தப் படுகின்றது.

### புதிய தமிழகம்

ஆகையால், உடல் ஊனம் ஏற்படாமல் தடுக்கவேண்டும் என்றால், வியாதியின் ஆரம்ப நிலையிலேயே நோயாளிகளைக் கண்டறிய வேண்டும்.

> **தொழுநோயாளிகளின் தவறான எண்ணத்தாலும், ஆரம்பநிலையில் சிகிச்சையை எடுத்துக் கொள்ளாததாலும், தொழுநோயாளிகளின் கவனக் குறைவாலும்தான் அவர்கள் உடல் ஊனமடைகிற நிலைக்கு ஆளாகிறார்கள்.**

இத்தகைய முயற்சியில்தான் நம்முடைய தமிழ்நாடு அரசு தொழுநோய்க் கண்டுபிடிப்பு இயக்கத்தை ஆண்டுதோறும் பிப்ரவரி மாதத்தில் தொடர்ந்து நடத்திக்கொண்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், வீடு தேடிவரும் பணியாளர்களுக்குப் பொது மக்கள் உங்களுடைய முழு ஒத்துழைப்பைக் கொடுத்து, தொழுநோயாளிகளை ஆரம்ப நிலையில் கண்டுபிடித்து முழுமையாகச் சிகிச்சை பெறச்செய்து, தொழுநோய் இல்லாத தமிழகம் உருவாகிடவும் அதிலும் தொழுநோயால் ஊனம் அடைந்தவர்கள் இனி வருங்காலங்களில் இல்லை என்கிற நிலையை அடைந்திடவும் உதவிபுரிந்திட வேண்டும். ●





# பிரதமரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டம்



நகர்ப்புற வறுமையை ஒழிப்பதற்காக எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டது தான் பிரதமரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டம்; இத்திட்டம் நீண்ட காலப் பல்நோக்குத் திட்டமாகும். மத்திய-மாநில அரசுகளால் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு 1991-92ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி, 50,000-லிருந்து 1,00,000 வரை மக்கள் தொகை கொண்ட சிறிய 345 இரண்டாம் பிரிவு நகர்ப்புற ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வாய்ப்பான சூழ்நிலைகளை உருவாக்குவதன் மூலம், நகர்ப்புற வறுமையை அகற்றுவதுவே இந்தத் திட்டம். உள்ளாட்சி அமைப்புகளையும் நகரவை அமைப்புகளையும் பலப்படுத்துதல் மிக முக்கியமாகும். நகர் நலச் சங்கங்கள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் நகரின் பல்வேறு பிரிவுகளை ஒருங்கிணைத்துப் போதிய பொருத்தமான ஒருங்கமைந்த செயல்திட்டங்களை உருவாக்கி, அதன் மூலம் தற்போது நடப்பில் உள்ள நகர ஏழைகளுக்கான திட்டங்களை முழுவீச்சில் முடுக்கிவிடுவதும் அதன் முழுப் பலனும் அவர்களைச் சென்றடையுமாறு செயல்படுவதுமே இந்த அணுகுமுறையின் முக்கிய அம்சங்களாகும்.

### பொது நோக்கம்

தமிழ்நாட்டினைப் பொறுத்தளவில் 38 நகராட்சிகளும் 3 நகரப் பஞ்சாயத்துக்களும், இந்த வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்டுச் சொல்லுவதானால் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள், குறியீட்டில் உள்ள நகரங்களின் வறுமையை முற்றுமாய் ஒழிப்பதே இத்திட்டத்தின் பொது நோக்கம். மத்திய மாநில அரசுகளின் பல்வேறு பிரிவுகளிடமிருந்தும் கிடைக்கும் ஆதார வளங்களை ஒன்றுதிரட்டி, பொறுத்தமான செயல்திட்டங்களைத் தீட்டி, ஒருங்கிணைந்த முறையில் செயல்பட்டு நகர்ப்புற வறுமையை வேரோடும், வேரடி மண்ணோடும் தோண்டிவீசும் அறிவைப் பொது நோக்கமாகக் கொண்டது இத்திட்டம். 1992-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 74-வது அரசியல் சாசன சட்டத்திருத்த விதிக்கிணங்க, வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகளில் சமூக நலச் சங்கங்கள் மற்றும் நகர நல அமைப்புகளை முழுவீச்சில் ஈடுபடுத்துவது.



216439




மிகவும் நலிவுற்ற, மிகவும் குறைந்த வருவாயுள்ள நகர்ப்புற மக்களைக் குறியீடாகக் கொண்டும், குழந்தைகளுக்கான தேசிய செயல்திட்டக் குறியீட்டு மக்களை உள்ளடக்கியும் மேற்கொள்ளப்பெறும் வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் சமூக உயர் இலட்சியங்களை வென்றெடுக்கும் வகையில் வலுவான தளம் அமைத்துக்கொடுப்பது, சமுதாய அடிப்படையிலான தற்சார்புடைய மகளிர் மன்றங்களை, நலப் பணி மன்றங்களைத் தோற்றுவித்து, சமுதாய வளர்ச்சிக்கான செயல்திட்டங்களில் திட்டமிடல், செயல்படுத்துதல், நெறிப்படுத்துதல் போன்ற முக்கியப் பணிகளில் இம்மன்றங்கள் முழுவீச்சில் ஈடுபட ஊக்கமேற்றுதல், நீடித்த ஒத்துழைப்பு மூலம் பணிகளை ஒருமுகப்படுத்துதல், சிறுதொழில் வளர்ச்சி மற்றும் பிற நடவடிக்கைகள் மூலமாகக் குறைந்த வருவாய் பெறும் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்புச் சூழ்நிலையை உருவாக்கித் தருதல், தொழில் நுட்பத்திறன் பெறவும், செயல்திறனை வளர்க்கவும் அடிப்படைத் தொழில் பயிற்சி அளித்தல் மற்றும் குடிசைப் பகுதிகளின் சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்துதல், குடியிருப்பு வீடு மற்றும் குடிசைகளை மேம்படுத்துதல், நகரம் முழுமைக்குமான அடிப்படையில் பயனுள்ள, நீடித்த பொதுஊழிய நிறுவனங்களுக்கான வசதிகளை அதிகரித்தல் ஆகியவை இத்திட்டத்தின் பொதுவான சில முக்கிய அம்சங்களாகும்.

**நகர ஏழைகள்**

வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளவர்கள் என வரையறுக்கப்பட்ட குடும்ப ஆண்டு வருவாய் ரூ. 11,850/-க்குக் குறைவாய் உள்ள நகர ஏழைமக்கள் அனைவரும் இத்திட்டத்தில் குறியீட்டு மக்கள் பிரிவினர் ஆவர்.

வரையறுக்கப்பட்ட, இறுக்கமான பொருளாதார அளவுகோல்களைத் தவிர்த்து, வீடுவீடாகச் சென்று திரட்டப்பட்ட நிலைமைகளை நேரில் கண்டு, சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு நகர ஏழைகளின் எண்ணிக்கை சரியாகக் கணிக்கப்படும்.

நகர ஏழைகள் என்ற வகையில் குடிசைவாசிகள், சிறிய தாறுமாறாக அமைந்த குடியிருப்புப் பகுதிகளில் வாழும் குடும்பங்கள், நடைபாதை வாசிகள் தெருவில் சுற்றித்திரியும் அனைத்துக் குழந்தைகள் ஆகியோர் அடங்குவர். இத்திட்டத்தில் பெண்கள், ஊனமுற்றோர் மற்றும் தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியின மக்களுக்குத் தனிக்கவனமும் முக்கியத்துவமும் அளிக்கப்படும்.

சிறு தொழில்கள் மற்றும் திறன் வளர்ப்பு மூலம் சுய வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல் வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள 9-ஆம் வகுப்புவரை படித்துள்ள இளைஞர்களுக்குத் தொழில் முயற்சிக்கான முதலீட்டுத் தொகை ரூ. 1,00,000/-க்கு மிகாமலும் ரூ. 75,000க்கு மேற்படாத 15% மானியத்தொகை அமையுமாறும் சுயவேலை வாய்ப்புக்கான கடன் உதவி அளிக்கப்படும். மேலும் இத்திட்டத்தினால் பயனடைவோர், தொழில் திட்ட மொத்த முதலீட்டில் 5% சொந்தப் பணத்தை முதலீடு செய்யவேண்டும். தொழில் செய்திறன் வளர்ப்பு என்பது இத்திட்டத்தின் மற்றொரு முக்கிய அம்சமாகும். உள்ளூர் மக்களின் செயல்திறன் மற்றும் உள்ளூர் கைத்தொழில்களை ஊக்குவிக்கும் வகையில் நகர ஏழைகளுக்கு உடல் உழைப்புப்பணி மற்றும் உற்பத்தி சார்ந்த தொழில்களில் பலவிதப் பயிற்சிகள் அளிக்கவே இத்திட்டம் முயல்கிறது.





இதனால், நகர்ப்புற ஏழைகள், கூடுதல் வருவாய்தரும் வேலைகளைத் தேடவோ சுயதொழில் முயற்சிகள் மேற்கொள்ளவோ முடியும். அத்துடன்கட்டிட கட்டுமானப் பணியிலும், அதனோடு தொடர்புடைய தச்சுவேலை, குடிநீர்க்குழாய் பொருத்தும் பணி, குறைந்த செலவில் செய்யக்கூடிய கட்டுமான கட்டிடப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழில்களில் பயிற்சி அளிப்பது பொருத்தமானதாகவும் அவசியமானதாகவும் கருதப்படுகிறது.

தொழில் நுட்பப் பள்ளி, கல்லூரி / தொழில் கல்விக்கூடங்கள், பொறியியல் கல்லூரி, அரசால் நடத்தப்படும் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனங்கள் அனைத்தும் தேவைக்கேற்பப் பயன்படுத்தப்படும். மேலும், HUDCO மூலம் நிறைவேற்றப்படும் கட்டிட மையத்திட்டமும் செயல்பாடும் இந்நோக்கத்தின் தேவைக்கேற்பப் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

செய்திறன் வளர்ப்புப் பயிற்சி பெறும் ஒரு நபருக்கு ரூ. 2,000/- வீதம் செலவிடப்படும். இத்தொகையில் பயிற்சி அளிப்போருக்கான சிறப்பு ஊதியம், பயிற்சி பெறுவோருக்கான மாத உதவித்தொகை, பயிற்சிக்கான தளவாட சாமான்கள், பயிற்சி நிறுவனத்தின் இதர செலவினங்களும் அடங்கும்.

**மக்கள் பெறும் பயன்**

இப்பயிற்சி 2 மாதங்களிலிருந்து 6 மாத காலம் வரை அமையலாம். ஒரு பயிற்சி முகாமானது குறைந்தது 3 மணி நேரப்பயிற்சியாவது கொண்டிருக்க வேண்டியது அவசியம்.

இத்திட்டத்தின் கீழ், சிறுதொழில் தொடங்கி செயல்படும் நபருக்கு உற்பத்திப் பொருளை, விற்றுத்தரும் வகையில் வியாபாரக் கூடங்கள் ஆங்காங்கு அமைத்தும், நகரமன்றச் சேவை மையங்கள் மூலமாகத் தச்சர்கள், குழாய்வேலை செய்பவர்கள், மின்தொழிலாளிகள், தொலைக்காட்சி, வானொலி, குளிர்சாதனப்பெட்டி உறுப்புகள் செப்பனிடுதல் போன்ற வேலைக்கு வரக்கூடியவர்களைப் பயன்படுத்திக் கொண்டு வாராந்திரச்சந்தை போன்றவைகளை நகரமன்றத்திடல்களிலோ, சாலைப்புறங்களிலோ அமைத்தும் அங்காடி மேற்பார்வைகள் மற்றும் விளம்பரவழிகளிலும் மக்களுக்குப் பயனளிக்கலாம்.

தொழில் திறமையை வளர்த்துக் கொண்டவர்களுக்கு, சமுதாய மேம்பாட்டுக்குழு அளவில் மையம் அமைக்கவும் பிரேரணை செய்யப்படுகிறது.

குடிசைப்பகுதிகளில் நேரடியாகக் கிடைக்கக்கூடிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு குடிநீர்வழங்குதல், சுகாதாரம், மழைக்கால நீர்க்கழிவுகள், சாலை விளக்குகள், குப்பைக் கூலங்கள் அகற்றுதல், சிறு





அமைத்தல், விளையாட்டுப் பூங்கா அமைத்தல், நகர்ப்புற வனவளம், கட்டணக் கழிப்பிடங்கள் அமைத்துத் தரப்படும்.

இதுபோன்ற பொது நன்மைகளை உருவாக்கும்போது, குறைந்த வருவாய் சமூகத்திற்கு நெருக்கமாகச் சார்ந்துள்ள பகுதிகளுக்கு முன்னுரிமை தருவதுடன், அங்கு வாழும் மக்களின் சந்துகளை அமைத்தல் முதலியன செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் சுற்றுப்புறச் சூழல் மேம்பாடு முழுவதும் மாநில அரசால் செய்யப்படுகிறது.

நிலையான நகர்ப்பகுதிகளிலோ, அங்கீகரிக்கப்பட்ட பகுதிகளிலோ அடிப்படை வசதிகளைப் பயன்படுத்திச் சுற்றுப்புறச் சூழல் மேம்பாடு தொடர்பான செலவுகள் மத்திய - மாநில அரசுக்கிடையே 60-40 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது.

**சமூகச் சொத்து**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைக்குள் பயன்தரும் சமுதாய செயல் திட்டங்களை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நிலையாகப் புதிய உருவாக்கம் பெற்ற பகுதிகளிலோ, தற்பொழுதுள்ள குறைந்த வருவாய் உள்ள குடியிருப்புக்களில் சிறிய அளவிலான சமூக சொத்து என்ற முறையில் அந்தப் பகுதியில் வசிப்பவர்களுக்கு மனைப்பட்டா வழங்கப்படும். இந்த ஆக்கக் கூறில் குடிநீர் வழங்குதல், குறைந்த செலவிலான துப்புரவு வசதிகள், முறையான கழிவு நீர்த்திட்டங்கள், தொழில் நுட்பத்திறன் அடிப்படையில் குப்பைக் கூளங்களை அகற்றுதல் போன்றவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையில் நகரப்பூங்கா

திறமையும் உழைப்பும், இயன்ற அளவு சமுதாயப் பொது நன்மைகளை உருவாக்கும்போது பயன்படுத்திக் கொள்ளப்படும்.

குறைந்த வருவாய் உள்ள பகுதிகளில் சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் மூலம் (C.B.O.) சமூகத்தாலேயே செயலாக்கப்படும். அந்தந்த நகராட்சிகள் நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டம் மற்றும் பிரதமரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வறுமை ஒழிப்பு திட்டத் துறையினரின் ஆலோசனையோடு நடைமுறைப்படுத்தப்படும். எனினும், குறைந்த வருவாய் இல்லாத மற்ற பகுதிகளில் முழுநேர அடிப்படையில் இதனை நகர்ப்புற வறுமை





ஒழிப்புத் துறையின் மூலம் செயல்படுத்தும் மாநில மாவட்ட அளவில் தொழில் நுட்பச் செயல்திட்டங்களை இந்தத் திட்டங்களின் மூலமாக நடைமுறைப்படுத்தும் முகவாண்மை மூலம் பெற்றுக் கொள்ளப்படும். மத்திய மாநில அரசுகளின் நிதி அளிப்பு 60:40 என்ற விகிதமாகும்.

பிரதமரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டம் நகர்ப்புற ஏழைகளின் உறைவிட மேம்பாட்டிற்காக HUDCO அல்லது மற்ற நிதி நிறுவனங்களின் மூலம் பயனாளிகள் நிலத்திற்குப் பட்டா உடையவராக இருந்தால் ரூ. 10,000 வரை கடன் பெறும் வசதி அளிக்க எதிர்நோக்குகிறது. ஒவ்வொரு அலகளவுக்கும் (UNIT) அதிக அளவு ரூ. 2,500 வரை 25% உதவித்தொகையாகப் பெறலாம். இந்தத் திட்டத்தின் ஆக்கப்பூர்வமான பணிக்காக மத்திய மாநில அரசுகள் 60:40 என்ற விகிதத்தில் நிதி வழங்கும்.

பெண்கள் உள்ளடங்கிய சார்பு நிலை மேம்பாட்டுக் குழுக்கள் (NDC) சமுதாய அடிப்படையிலான அமைப்புகள், நகர்ப்புற அடிப்படை ஏழைகளுக்கான சேவைத்திட்டம் மேற்கொண்டுள்ள திட்டங்கள் மூலம் எதிர்நோக்கி உள்ளபடி, குறைந்த வருவாய் சார்புக் குழுக்களின் பகுதியில் ஒருங்கிணைந்த வறுமை ஒழிப்புத்திட்டத்தின் அடிப்படையில் பிற்சேர்க்கை 8-ல் உள்ளபடி அமைக்கப்படும். அதே நேரத்தில், சமுதாயத்தின் அளவிலோ, தொண்டு நிறுவனத்தின் மூலமாகவோ சமுதாய அமைப்பிலான நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்களோடு இணைத்து, இவையனைத்தும் ஒன்று சேர்ந்து ஆற்றலைத் திரட்டிக்கொள்ள சமூக நடவடிக்கைகளில் ஈடுபட்டுப் பணிகளை இணைந்து செய்யும். இதுபோன்ற நடவடிக்கைகளுக்குத் தனி நபர் தொகையாக (Per Capita) முதலாண்டு ரூபாய் 100-ம் தொடரும் ஆண்டுகளில் ரூபாய் 75 ஆகவும் இருக்கும்.

சமூக அடிப்படையிலான வடிவ அமைப்புக்களின் விதிமுறைகளை வகுக்கத் திருத்தப்பட்ட நகர்ப்புற அடிப்படை சேவைத் திட்டத்தின் விளக்கக் கையேட்டின் துணையோடு அமைத்துக் கொண்டு திட்டமிடுதல், செயல் படுத்தல், பொறுப்புகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்களிலிருந்து நிதியைப் பெற்றுக்கொள்ள வகை செய்யப்படுகிறது.

**மக்கள் நல்வாழ்வு**

இரண்டாம் நிலை நகரத் தொகுப்புகளில் சமூக அடிப்படையிலான சமுதாய மேம்பாட்டுக் குழுக்களின் (CDS) கூட்டமைப்பாக இயங்கும். இந்த ஆக்கக்கூறின் அடிப்படையில், தாய்சேய் நலத்தில் கவனம் செலுத்தி மக்களுடைய நல்வாழ்வு குறித்து அதிகம் வலியுறுத்த வேண்டும். மற்றும் அறியாமையை அகற்றி, முறைசாராக்கல்வி பள்ளிச் சேர்க்கைக்கு முன்னதான கல்வி, வீதியில் வாழும் குழந்தைகளின் துன்பங்களைக் கருத்தில் கொண்டு, நலவாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

இதுபோன்ற சமூக செயலாக்கத் திட்டங்களை எளிதில் பயனுறச் செய்ய நகர்ப்புற ஏழைகளைக் குறியீடாகக் கொண்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் (ICDS), குன்றைந்த செலவிலான சுகாதார வசதிகள் முறைசாராக்கல்வி, நகர்ப்புற சுகாதாரத் திட்டங்கள், குழந்தைகள் காப்பகம் தாய்க் காப்பகம், போன்ற (CSSM) குடும்பநல அமைச்சரகத்தின் திட்டங்களின் மூலம் எளிதாக்க வேண்டும். இரண்டாம் நிலைநகர்ப்புறத் தொகுப்புகளில் ஒருங்கிணைந்த சமுதாய மேம்பாட்டுக்குழுக்கள் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

நகர்ப்புற அடிப்படை சேவைத்திட்டத்தின் (UBSP) அமைப்பின்படி மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின்படி, நகர்ப்புற ஏழைப் பெண்களின் மற்றும் சார்பு நிலை மேம்பாட்டுக்குழுக்கள் (NDC)

மூலம் சிக்கனம் மற்றும் கடன் வழங்கும் குழுக்களை இந்தத் திட்டம் (PMI UPEP) எதிர் நோக்கி உள்ளது. இது போன்ற குழுக்கள் சமுதாயம் வழங்கும் மாதாந்திர நிதிகளில் இருந்து சுழல்முறையில்,அவசரத் தேவை கருதி நகர்ப்புற ஏழைகளுக்கு உதவி செய்யும் சார்புக் குழுக்கள் அளவில் சிக்கனம் மற்றும் கடன் வழங்கும் சங்கங்கள் செயல்பட ரூ. 5,000 வரை அனுமதிக்கப்படலாம். மேற்கண்ட குழுக்களை எளிமையாகப் பயனுறச் செய்ய அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் ஈடுபடலாம்.

**அரும் பணிகள் ஆறு**

அ) அவசரத் தேவைகளுக்கும், முதுமைக்காலத் தேவைகளுக்கும் சீரான வழியில் சிக்கன முறையில் திரட்டுதல்.

ஆ) குறிப்பிட்ட நோக்கங்களுக்காக மற்ற சேமிப்பு முறைகளிலும் ஒருமுகப்படுத்துதல்.

இ) உற்பத்தி, நுகர்வு, சுகாதாரம் போன்ற தேவைகளுக்காகக் கடன் வழங்க ஏற்பாடு செய்தல்.

ஈ) நிதி ஆலோசனைகள்.

உ) எழுத்தறிவையும், எண் அறிவையும் வளர்த்தல்.

ஊ) புத்தகங்கள் மற்றும் கணக்கேடுகள் நிர்வகித்தல்.

மேலும் பெண்களின் மேம்பாட்டிற்காகச் செயல்படும் தேசிய மாதர் நிதி போன்ற அமைப்புகளில் இருந்து இதுபோன்ற பணிகளில் இணைந்து செயலாற்றலாம். நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டப் பிரிவின் ஒத்துழைப்போடு சார்புக் குழுக்களின் பொறுப்புக்குட்பட்ட சமுதாய மேம்பாட்டுக்குழுக்கள், நிதி பெறுவதிலும் செலவழிப்பதிலும் கண்காணிப்போடு செயல்படும்.

> மத்திய மாநில அரசுகளின் பல்வேறு பிரிவுகளிடமிருந்தும் கிடைக்கும் ஆதார வளங்களை ஒன்றுதிரட்டி, பொறுத்தமான செயல்திட்டங்களைத் தீட்டி, ஒருங்கிணைந்த முறையில் செயல்பட்டு நகர்ப்புற வறுமையை வேரோடும், வேரடி மண்ணோடும் தோண்டிவீசும் அறிவைப் பொது நோக்கமாகக் கொண்டது இத்திட்டம்.

நகர்ப்புற ஏழைகளின் பகுதியில் 100 நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்காக 300 சதுர அடிப்பரப்பில் பல நோக்குச் சமுதாய மையங்கள் கட்டப்படும். இந்தப் பணிக்கு உள்ளூர் மக்களின் ஆற்றலும், மனிதசக்தியும் பயன்படுத்தப்படும். இந்த மையத்தின் கட்டுமான செலவிற்கு ஆகும் தொகையை மத்திய மாநில யூனியன் பிரதேச அரசுகள் 50:50 என்ற விகிதத்தில் அளிக்கும். இந்தச் சமுதாய மையங்கள் பள்ளிக்குச் செல்லுமுன் கல்வி/ஆரம்ப எழுத்தறிவு, முறைசாராக் கல்வி, முதியோர் கல்வி, ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் கலாச்சார மையங்கள் செயல்படத் துணைநிற்கும்.

மேம்பாட்டுக்குழு கண்காணிப்பு

சமூகத்தின் முழுப்பங்கேற்பினைப் பெற நகர அளவில் சமுதாய மேம்பாட்டுக் குழுக்களின் மேற்பார்வையில் மையங்கள் இயங்கும்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்களை வலிவுடையதாக இந்தத் திட்டத்தின் கீழ் நகர்ப்புற வறுமை ஒழிப்புச் சரகம் (UPE Cell) உருவாக்கப்பட வேண்டும். இந்த அமைப்பின் தலைமைப் பொறுப்பில் பயிற்சி பெற்ற நகரத்திட்ட அதிகாரியும் பொருத்தமான தொழில் நுட்பத்தகுதி படைத்த அலுவலர்களைக் கொண்டு சமுதாயத்தின் ஒத்துழைப்போடு உள்ளாட்சி அமைப்புக்களின் செயலாட்சி அதிகாரியின் பொறுப்பில் இவ்வமைப்பு செயல்படும்.

இத்திட்டங்களுக்காக 1995-96ஆம் ஆண்டு மத்திய மாநில அரசு 2011.12 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 1996-97 ஆம் ஆண்டு மத்திய மாநில அரசு 1792.00 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.





# குவியல்

*சுப்ரபாரதி மணியன்*

சத்யம்மா குடித்துவிட்டுத்தான் தினமும் வேலைக்கு வருகிறாள் என்ற செய்தி பெரிதாய் அதிர்ச்சி தரவில்லை எனக்கு. அவளது முகபாவமும், பேச்சும் ஏனோ குடியோடு வெகுவாகச் சம்பந்தப்படுத்தி மனதுள் அவள் குடிக்கிறவள் தான் என்கிற கருத்தை உறுதிசெய்து இருந்தது முன்னமே. ஆனால், வீட்டில் மற்றவர்கள் அதிர்ந்துதான் போனார்கள் என்று சொல்லலாம். வீட்டில் என்றால் - மனைவிதான்.

''குடித்துவிட்டு வேலைக்கு வருகிறவளை வேலைக்கு வைத்திருக்க முடியுமா?'' என்ற கேள்வி அவளுள் இம்சைப்படுத்திக் கொண்டே இருந்திருக்க வேண்டும். தினமும் அதை என்னிடம் சொல்லிக் கொண்டே இருந் தாள். சத்யம்மாவிடம் நேரடியாகச் சொல்வதற்கு ஏனோ பயப்பட்டவள் போலத் தெரிந்தது. அல்லது அவளிடம் நேரிடையாகச் சொல்லப் போக, நான் அப்படித்தான் என்று நிமிர்ந்த கோடு மாதிரி உடம்பை நிமிர்த்தி ஒரு பார்வை பார்த்துவிட்டால் என்ன செய்ய - என்ற கற்பனை அதிர்ச்சி அவளுள் பரவி இருக்க வேண்டும் என நான் நினைத்துக்கொண்டேன்.

தினமும் சத்யம்மாவுடனான எங்கள் உறவு அதிக பட்சம் நாற்பத்தைந்து நிமிடங்களிலிருந்து ஒரு மணி நேரம் வரைக்குமானதாகச் சொல்லலாம். ராப்பிச்சையின் குரல் போல், அம்மா என்று கதவருகில் அவள் நின்று சப்தம் போடும்போது ஜன்னல் வழியே அவள் தானா என்று நிச்சயப்படுத்திக்கொண்டு கதவைத் திறப்போம். உடம்பைக் குறுக்கிக்கொண்டு அவள் உள் நுழைவது போலிருக்கும். அவளின் குட்டையான உருவம் இன்னும் சிறுத்துப் போவது போலத் தென்படும். வெளுப்பான பிய்ந்த தோல்களை ஒன்று சேர்த்து அடிப்பாகத்தில் கட்டி விட்டது போல அவளின் கால்கள் இருக்கும். தண்ணீரில் நெடுநேரம் மூழ்க வைத்து எடுத்த தொழுநோயாளியின் கை, கால்கள் போல அவை வெளுத்துத் தென்படும். கூர்ந்து பார்க்கிற போது அருவருப்புடன் முகத்தைத் திருப்பிக் கொள்ளச் செய்யும்.

சத்யம்மா எத்தனை வீடுகளில் பாத்திரம் [illegible] துணி துவைக்கும் வேலையைச் செய்கிறாள் [illegible] எப் போதும் சரியான கணக்கிற்கு உட்படாத விஷயமாகவே இருந்திருக்கிறது. ஆனால் இரட்டை இலக்கத்திலிருந்து அவை சட்டென ஒற்றை இலக்கத்திற்கு மாறி வருவதும் உண்டாம். தொடர்ச்சியாகச் சில தினங்கள் வராதபோது சில வீடுகளில் எரிச்சல்பட்டு, வேண்டாம் என்று சொல்லி விடுவதுண்டு. அப்போது தற்காலிகமாய் அந்த வீடுகளை அவள் இழக்க வேண்டியிருக்கும். பத்துப் பதினைந்து தினங்களுக்குப்பின், அந்த வீடுகளில் அம்மா என்ற ராப்பிச்சைக்குரல் போல் நிற்கிறபோது, அந்த இடை வெளியில் வீட்டு வேலைகளில் அலுத்துப்போனவர்கள் அவளை மறுபடியும் சேர்த்துக் கொள்வதுண்டு. என் வீட்டிலும் அதுதான் நடப்பது வழக்கம்.

வீட்டு முன் அறையில் இருக்கும் தண்ணீர் தொட்டியி லிருந்து அவள் முதல் வேலையாய் தண்ணீர் எடுத்து நிரப்பு வாள். கனமான பக்கெட்டுகளின் விசை தாங்காமலேயே அவள் சிறுத்துப்போய் விட்டது போலிருக்கும். துணிகளைத் துவைக்கும்போதும், அலசும்போதும் அவள் ஏதாவது முணுமுணுத்துக்கொண்டே இருப் பாள். கூர்ந்து கவனித்தால், பற் களை இறுகக் கடித்துக் கொண்டு நெறிப்பது முகத்தில் பிரதிபலிக் கும். அவளின் முணுமுணுப்பின் அர்த்தம் தெரிந்து கொள்ள முடிந் ததில்லை.

சில சமயம் புடைசூழ வரு வாள். அவளுக்கு இருபெண்கள் இருப்பது நன்கு தெரிந்திருந்தது. அவள் வராத நாட்களில், பதி லாக அவர்கள் ராப்பிச்சைக்குரல் போல 'அம்மா' என்றழைத்து ஜன்னலில் எங்களைப் பார்க்கச் செய்துவிடுவர். ராப்பிச்சைக் குரலை அவர்கள் மாற்றிக் கொள்ளாதவரை ஜன்னலில் பார்க்கும் பழக்கத்தைவிடப் போவதில்லை என்று பலமுறை நான் சொல்லியிருக்கிறேன்.

'செரி... எப்பிடித்தா கூப்பிடறது?...''

'உன்னிஷ்டம்.''

''மகாராஜான்னு கூப்பிடட்டுமா... இந்தி மனுஷங்க கூப்பிடற மாதிரி 'சாப்'புன்னு-[illegible] பாஷைக்கார மாடிவீட்டு அம்மா புருஷனைக் [illegible] மாதிரி 'தேவரே'ன்னு கூப்பிடட்டுமா...''

''வேலைக்காரி புருஷனை தேவரே[illegible] கூப்புட ஆரம்பிச்சா என் பொண்டாட்டி என்ன [illegible]?

''உத்[illegible] பேரைச் சொல்லட்டுமா?''

''[illegible] அதெல்லாம் நல்ல [illegible] பேல்லை [illegible] போதும்''

[illegible] என்ன பயம்

[illegible] வாறுமனே கதவைத் தட்[illegible]''

அதற்குப் பின்னால் கதவைத் தட்டுகிற போதெல் லாம் இணையாக ராப்பிச்சைக் குரலும் இருந்து கொண்டே இருந்தது. 'இருந்துட்டுதா போகட்டுமே' என்று சொல்லி விட்டாள் சத்யம்மா சிரிப்புடன்.

அவளின் பையனை ஒருதரம் கூட்டி வந்திருந்தாள். அவன் நிற்கவே வெகுவாகக் கூச்சப்பட்டவன் போல நெளிந்துகொண்டு நின்றிருந்தான். நாலாவது படிப்பதாகச் சொன்னாள் சத்யம்மா. அவன் மதிய உணவிற்காகத்தான் பள்ளிக் கூடமே போவதாகச் சொன்னாள்.

சில ஞாயிறுகளில் அவனை பேரேட் கிரவுண்ட்டில் பார்த்திருக்கிறேன். பேரேட் கிரவுண்ட்டை ஒட்டின பகுதியில் பாறைகள் சற்று இடைவெளிகளில் இருக்கும், பெரிய பாறைகளும், சின்னப் பாறைகளுமாக. பெரிய பாறைகளின் மீது ஆட்டுக்குட்டிகளோ, மனிதர்களோ இருப்பது எனக்கு மிகவும் பிடித்த காட்சியாக எப்போதும் தென்படும். பெரிய பாறைகளின் மேல் ஏறி உட்கார வேண்டும் என்ற ஆசை, பாறைகளை நெருங்கும்போது சிதறிவிடும். தூரத்திலிருந்து பார்க்கையில் சுலபமாக ஏறிப் போய் விடுவதற்கு உபாயங்கள் இருப்பதாக எண்ண வைக்கும். நெருங்கிப் பார்க்கையில், செங்குத்தான கோடு களைச் சேர்த்துக் கட்டிவிட்ட மாதிரி திமிறிக்கொண்டு நிற்கும்.

உயரம் குறைந்த - தரையோடு நெருங்கின பாறை களில் உட்கார்ந்து வானம் பார்த்துக் கொண்டிருப்பேன் பல சமயங்களில்; பெரும்பாலும் ஞாயிற்றுக்கிழமை சாயங் காலங்களின் கொஞ்ச நேரத்தைப் பாறைகளின் மீதமர்ந்து வானம் பார்ப்பதற்கென்று ஒதுக்குவதுண்டு.

அரைவட்ட வானத்துள் எல்லாவற்றையும் அடைபட வைத்து, உலகம் தொடுவானத்துள்தான் என்ற நினைப்பைக் கொண்டு வருகிறபோது, ஒவ்வொரு முறையும் சாவு பற்றின எண்ணங்கள் மனதில் மிகும். இந்த உலகத்தின் போட்டிகள், பொறாமைகள், சிதைவுகள் மனதில் வந்து நிற்கும். சாவு என்பதை முன் நிறுத்திப் பார்த்துக் கொண்டு தங்கள் நடவடிக்கைகளை மனிதர்கள் சீர்படுத்திக் கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்பதை நினைத்துக் கொள்வேன்.

பாறைகள் மறைவிடங்களாகவும் அமைந்திருந்தன. சிறு பாறைகளின் மேல் உட்கார்ந்திருப்பவர்கள் சட்டெனச் சரிந்து விழுந்தது போல் பாறைகளின் ஓரங்களில் அமர்ந்து கொள்வர். சற்று இருட்ட ஆரம்பித்ததும் பாட்டில்கள் பாறை களின் மீது தென்படும். பாட்டில்களை உயர்த்துவதும் தாழ்த்துவதுமான காட்சி பாறைகளோடு ஒன்றிப்போய் விட்டது போலிருக்கும். பாட்டில்களின் இருப்பை உணர்ந் ததுபோலக் கலகலப்பாய் பேச்சு வந்துகொண்டே இருக்கும். காலி பாட்டில்களைக் கெஞ்சி எடுத்துச் செல்லவென்று சில பையன்களும் வந்து போவார்கள். சத்யம்மாவின் பையன் அப்படித்தான் பாட்டில்களுக்காகத் திரிபவனாக இருந்ததைப் பார்த்திருக்கிறேன்.

''பேரேட் கிரவுண்ட்லே இவனைப் பார்த்திருக்கேன் சத்யம்மா.''

நான் சொன்னதும் கனமான பக்கெட்டைத் தூக்கிக் கொண்டிருந்தவள் சட்டென வைத்துவிட்டு என்னைப் பார்த்தாள். கரகரவென்று கண்களில் நீர் வழிந்தது.

''அதுதா எனக்குத் துக்கமா இருக்குது சாரே. ஞாயிற்றுக்கிழமையில் அங்கியே படுத்துக்கெடக்கிறான். அந்த பாட்டில்களை யாரு குடிச்சிட்டுப் போடுவாங்கன்னு பிச்சைக்காரன் மாதிரி நிக்கறது. கெஞ்சி வாங்கிட்டுப் போயி பழைய பேப்பர், பாட்டில் கடையிலே போட்டு காசு பண்றதுன்னு அலையறான்.''







''காசு பண்றானே!''

''இவன் பண்ற காசுதா சாப்பாடு போடுதாக்கும்? எந்தப் பாட்டில்லே மிச்சமிருக்கும்ன்னு பார்த்து நாக்கைச் சப்பு கொட்டிட்டு குடிச்சுப் பாக்கறான். இருக்கற ஒரு பையன் இந்த வயசிலே இப்படித் திரியணுமா''ன்னு, சத்யம்மாவிற்கு அது பெரிய துக்கமாகத்தான் இருந் திருக்கிறது.

அவளின் பன்னிரண்டு பதிமூன்று வயசுப் பெண்கள் அவள் வராத நாட்களில் வந்துபோவர். அவர்களிடம் வேலை சொல்வதற்கும் உறுத்தலாக இருக்கும். அவர்கள் பாத்திரங்களைத் தூக்கித் திரிவது வீட்டில் உள்ள குழந்தை கள் அல்லாடுவதுபோலச் சங்கடமளிக்கும். எனவே சத்யம்மா வராத நாட்களில் அப்பெண்கள் வராமல் இருப் பது நல்லதென்று என் மனைவி பிரார்த்தித்திருப்பாள். தப்பித் தவறி வந்து விடுகிறபோது சத்யம்மாவின் சேமம், வீட்டிலுள்ளவர்களின் சேமத்தை விசாரித்து என் மனைவி அனுப்பிவிடுகிறதுண்டு.

அப்போதெல்லாம் முக்கியமான பாத்திரங்களை மட்டும் துலக்கி விட்டு மற்றதை சத்யம்மாவிற்காக ரிசர்வில் வைத்திருப்பாள் மனைவி. நாலு நாட்களென்றாலும் அப்படி துலக்காத பாத்திரங்கள் அப்படியேதான் கிடக்கும். சத்யம்மா துவைத்துப்போட்ட துணிகள் முன்பே இருந்தால் அவள் வராத நாட்களில் ஆறுதலாகத்தான் இருக்கும்.

குவிந்து கிடக்கும் பாத்திரங்களின் கழிவுகளிலிருந்து உற்பத்தியாகும் வெவ்வேறு விதமான ஜந்துக்கள் பற்றின கற்பனை எனக்கு எப்போதும் அதிர்ச்சிதரும். பாத்திரக் குவியல்களைப் பார்த்தால்போதும்; சுலபமாகத்தூக்கம் விடு படுவதாக இருக்கும். பக்கெட்டுகளில் நனைந்து கிடக்கும் துணிகள் கூடத்தான். சத்யம்மா வந்தபின் பக்கெட்டுகளில் துணியை நனைக்கிற பழக்கம் எதுவும் இல்லை. அழுக் கென்று புலப்பட்டதும் பக்கெட்டுகளில் தஞ்சமாகிவிடும். துணிகள் நனைந்து நனைந்து இற்றுப் போய்விடும் என நினைப்பேன். ஆனால், அதிர்ஷ்டவசமாக அவை பிறகு துவைத்துப் போடப்பட்ட பின் மெருகுடன் இருக்கும்.

சத்யம்மா தினமும் வந்துபோகிற போது, சுற்றுச்சூழல் சுகாதாரம் பற்றின எண்ணங்கள் எதுவும் மனதில் வராது. அவள் வராத தினங்களில் இந்த வகை எண்ணங்களால் அலைக்கழிவேன். நான்கு நாட்களுக்கு ஒருமுறை வந்து இவற்றைச் சுத்தம் செய்துவிட்டுப் போகிற போது பாத்திரங் களிலிருந்தும், துணிகளிலிருந்தும் வரும் நெடியை அவள் எப்படித் தாங்கிக்கொள்கிறாள் என்பது அதிசயமான விஷய மாகத்தான் எனக்குத் தோன்றியிருக்கிறது.

அவள் குடித்துவிட்டுத் தான் வருகிறாள் என்பதைக் கேள்விப்பட்ட போது ஏதோ எதிர்பார்த்த செய்திதான் என்பதை மனதில் நிறுத்திக்கொண்டேன். பல வீடுகளில் வேலை செய்பவளுக்கு வெவ்வேறு கறைபடிந்த சமைய லறை மூலைகளும், நெடிகள், வீசும் அழுக்குகளும் சிரமத்தைத்தான் தந்திருக்க வேண்டும். வேறு வழி



யில்லாமல் குடிக்க ஆரம்பித்திருக்கிறாள் என்பது வருத்த மாகத்தான் இருந்தது.

நாலைந்து நாட்களாய் சத்யம்மா வராத ஒருமுறை, சமையல் பாத்திரங்களுடன் மனைவி அல்லாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். அழுக்கு அழுக்கான கலவையான ஏதேதோ அவளைச் சூழ்ந்து கொண்டிருந்தன. நின்று ஒரு நிமிடம் கூர்ந்துபார்க்கச் சிரமமாகத்தான் இருந் தது. சத்யம்மாவை நம்பிப் பயன் இல்லை என்று மனைவியே கோதாவில் இறங்கிவிட்டதுபோல் இருந்தது.

ஏதோவொரு வகையான நெடி தொடர்ந்து என்னைத் தாக்கிக் கொண்டே இருந்தது. நெடிகளின் தாக்குதலால் சிரமப்பட்டு ஏதோவொரு வியாதிக்குள் நான் அகப்பட்டுக் கொள்வேன் என்பது உறுதியாகத்தான் தெரிந்தது. கடைசி யாக - டெட்டால், பினாயில் நெடியுடன் மனைவி வந்து நின்றாள். அவள் கைகள் வெளுத்து தொழு நோயாளியின் கைகள் நீரில் நெடு நேரம் வைத்து எடுத்ததுபோல இருந் தன. கால்களைப் பார்க்கத் தைரியமற்று எங்கோ பார்த்துக் கொண்டிருந்தேன்.

''குமட்டுது. அஞ்சு நாள் வேலை. வாந்திகூட எடுத் தாச்சு. இன்னும் குமட்டல் குடலைப் புரட்டிப் புரட்டிப் போடுது. ஏதாச்சும் குடிச்சா இந்த குமட்டல் நிக்குமுன்னு தோணுது. என்ன குடிச்சா நிக்கும்? - ஏதாச்சும் வாங்கிட்டு வாங்க. வேஸ்ட் பண்ணாம நீங்களும் சேந்து குடிச்சிடலாம்!''

சத்யம்மா தினமும் சரியாக வந்து போக வேண்டும் எனப் பிரார்த்தனை செய்துகொண்டேன். [illegible] வேறு வேலைக்காரியைத் தீவிரமாகத் [illegible] தேடி [illegible] வேண்டிய பெரிய பொறுப்பு எனக்கு இருப்ப[illegible] அல்லது சத்யம்மா வராத தின[illegible] துலக்கும் வேலையில் நானும் [illegible] கொண்டு சுற்றுச்சூழல் சுகாதா[illegible] உபகாரத்தைச் செய்து ஆகவேண்டும் [illegible] சங்கல்ப[illegible] செய்து கொண்டேன்.

- [illegible]

[illegible] : [illegible] (பி) [illegible] - 623 [illegible]

மார்ச் 8, உலக மகளிர் தினம்

# பாரதி கண்ட புதுமைப் பெண்

– திருமதி ராதா ரமணன்

**நா**ட்டு விடுதலையைத் தன் முழுமூச்சாகக் கருதி, வீர சுதந்திரம் ஒன்றை வேண்டி, வேறொன்றும் கொள்ளாது நின்ற பாரதி, அவ்விடுதலையை அந்நியரிடமிருந்து பெறுமுன், இந்திய இனம் தன் பெண்மைக்கு விடுதலை அளிக்க வேண்டுமென விரும்பினார். எனவே, அவரது பெண் விடுதலை இயக்கம் முழங்கியது.

**பெண்மையின் பெருமை**

பாரதியார் பெண்மை வெல்கவெனக் கூத்திட்டார்.

**'பெண்ணறத்தினை ஆண்மக்கள் வீரந்தான்**

**பேணுமாயின் பிறிதொரு தாழ்வில்லை'**

– என்று எடுத்துக் கூறினார். ''மானத்தைக் காப்பது மனைவியின் வார்த்தைகள்;'' கலியினை மாற்றவல்லது, அழிப்பது அறமேயாகும்.

பெண்ணொருத்திக்காகச் செய்யும் பணியெனில் நூற்றிரண்டு மலைகளைச் சாடவல்ல திறத்தை ஆணினம் பெறமுடியும்.

காற்றிலே பறந்து விண்ணைச் சாடவல்ல ஊக்கத்தை அளிப்பது காதலியின் கடைக்கண் பார்வையன்றோ! தீராத துன்பங்களைத் தீர்க்கவல்லது பெண்மையன்றோ!

**'சிறுமை தீர நந்தாய்த் திருநாட்டைத் திரும்ப வெல்லவும்**
**சேர்ந்திங்குழைப்போம்'**

– என உறுதி கூறி, சக்தியும் சிவமும் இணைந்து செயல்பட்டாலே வெற்றி பெறுவது திண்ணம் என்பதை உணர்ந்து சுதந்திரப் போராட்ட வேள்வியிலே பெண்ணினத்தை ஈடுபடுத்த வேண்டினார் பாரதியார்.



'ஆணுக்குப் பெண் விலங்கு' எனும் பண்டை வழக்கத்தை ஒழித்து, குறைவிலா அறிவு பெற்று ஆண்களோடு நிகராக வாழவல்லார் தமை துணைக்கொண்டு கடமை செய்வீர் – நம் தேசத்து வீரக்காரிகையின் துயர் தீர்த்துத் துணிவு கொள்வீர்' –என அறிவுறுத்தினார் மகாகவி.

பெண்களின் விடுதலையைக் கனவு கண்டு பாரதி எழுதிய பாடலும், விடுதலை பெற்ற பெண்ணினம் கும்மியடித்து மகிழ்வதாக அவர் காணும் கற்பனைக் கும்மிப்பாடலும், பாரதியின் உள்ளம் பெண்ணினத்திற்காக முன்னின்று வாதமிட்டுப் போராடி சாதனைகளை வண்ணமுற உரைக்கின்றன.

**பெண்களின் களிப்பு**

பாரதியின் பெண் விடுதலைப் போராட்டக் கொடி உயர்த்தப்பட்டதால் விளைந்த பயனான விடுதலை கருதி அந்த வெற்றிக் களிப்பில் கைகொட்டிக் கும்மியடித்துப் பாடுவதாக அமைந்த பாடல், பெண் விடுதலைக் கும்மிப்பாடல். விடுதலையால் விளையவிருக்கும் நன்மையைப் பலவாறு கூறிக் கும்மி கொட்டி மகிழ்கின்றனர் பெண்கள்.





பெண்ணடிமை செய்தவர்கள் வெட்கித் தலை குனிந்தார். மூடப்பழக்கத்தைப் புகுத்தியதை வெட்டி விட்டோம் என்றார். கற்புநிலை என்பது இனி இருகட்சிக்கும் பொதுவாக அமையும். மேலும் பெண்கள் விருப்பமின்றி கட்டாயத் திருமணம் செய்யும் வழக்கத்தைத் தள்ளி மிதித்திடும் திறன் படைத்தோம் – என்றெல்லாம் கூறிக் கும்மி கொட்டி மகிழ்ந்தனர் பெண்கள்.

விடுதலை பெற்ற பெண்டிர் களிப்புறுவது மட்டுமல்ல. நாங்கள் நல்லறங்கள் பல செய்ய வல்லவர் என்பதையும் விளக்குகின்றனர். பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் இனிப் பாரினில் பெண்டிரால் நடத்த முடியும். அறிவு எட்டும் அளவுக்குப் பல துறையிலும் ஆண்களோடு பெண்ணினமும் போட்டியிட்டு வெற்றி பெறும். அதில் அவர்கள் சளைத்தவர்கள் இல்லை. விடுதலை பெற்ற பெண்கள் வேதத்திற்கு நிகரான நூல்களைப் படைக்கவும், நீதித் துறையினை ஆளவும் வேண்டி விரும்பி வந்தவர்கள் எனக் கூறுகின்றார் பாரதியார்.

**இல்லறப் பயன்**

விடுதலை பெற்ற பெண்ணினம் தன் பெண்மையை மறந்து, தாய்மைக்குரிய கடமையை மறந்து, பெண்ணுடல் கொண்ட ஆண்மையாய்த் திரியத் துணிந்து விட்டதோ என ஐயுற வேண்டாம். அவள் தன் புதிய உலகிலே தன் கடமையை மறந்தோ துறந்தோ விடவில்லை.

**'மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு'**

– என்ற தெய்வ மாக்கவியின் வழியிலே இல்லத்தரசிகளாய் நல்லறம் நடத்துவார்கள்.

**'சாதம் படைக்கவும் செய்திடுவோம் – தெய்வச்**
**சாதி படைக்கவும் செய்திடுவோம்.'**

– எனக் கூறி அதனை உறுதிப்படுத்துகின்றனர்.

காதலொருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவிலும் அறிவுறுத்தும் அமைச்சராக இருந்து, கை கொடுத்து, துணைவியாய், அன்னையாய், சேவகனாய், மருத்துவனாய் உதவி, மாண்புடையவளாக வீற்றிருந்து, 'இல்லது என் இல்லவள் மாண்பானால்' என்ற வகையில் இல்லறப் பண்பை வளர்ப்போம்; வாழ்க்கையில் விருந்தோம்பல், நன்மக்கட் பேறு, கற்புநலம், பொதுநலம் போன்ற மாதர்க்குரிய அறங்கள் அனைத்தையும் வழி வழி வந்த பழைமைப் பெண்டிர் தம் சிறப்பினைக் காட்டிலும் சிறப்பாகச் செய்ய வல்லோம் எனப் பெண்கள் சூளுரைக்கின்றனர்.

**புதுமைப் பெண் உருவாதல்**

விடுதலை வேட்கை கொண்ட மகளிரெல்லாம் வெல்லுவோம் எனத் தம் மனத்தின் மீது செய்து கொண்ட உறுதிப் பாட்டினால் விடுதலை கண்டு களிக்கும் நேரத்தில் பாரதி ஓர் புதுமைப் பெண்ணைப் படைக்க விரும்புகிறார்.

ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டு, மாசு படிந்த ஓவியமாகக் கிடக்கும் அவள் உள்ளத்தைத் தூண்டி விடுகிறார்; பாரத நாட்டுக்குப் பயன்தர வல்ல புதுமைப் பெண்ணை, அவள், தன்மையை, செயலை, அவளால் விளையும் பயனைத் தன் கற்பனைக் கண்களால் கண்டு, அதன் விளைவையும் தன் நெடுநோக்கால் உணர்ந்து மகிழ்ந்துள்ளார் பாரதி.

**புதுமைப் பெண்ணின் தன்மை**

விடுதலை பெற்ற பெண்ணினம் சுதந்திர நாட்டின் அறிவு வேட்கையை அறநிலையை, அன்பு நெறியைப் போற்றி வளர்க்கும் சுடர் விளக்காய் அமைய வேண்டுமென்பது பாரதியின் இன்பக்கனவு. அக்கனவிலே உருவாகிறாள் பாரதியின் புதுமைப் பெண்.

அப் புதுமைப் பெண்ணின் சொற்களும் செய்கையும் பொய்மை நிறைந்த கலியுகத்தில் புதிதாகத் தோன்றக்கூடும். ஆனால் நான்மறை மேன்முறைப்படி மாந்தர் நெறியுடன் வாழ்ந்த நாட்களில் அவை பொதுவான - இயல்பான வழக்கங்களாகவே இருந்தன. மங்கையர் மாதவப் பெரியாரோடு வேதங்கள் பேசியிருந்த காலத்தில் அவை புதுமையாகத் தோன்றவில்லை.



**அட்டைப்பட விளக்கம்**

முதல் அட்டை : மாண்புமிகு முதல்வர் அவர்கள், சட்டப்பேரவையில், 1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை முன் வைத்து உரையாற்றுகிறார்.

இரண்டாம் அட்டை : மாண்புமிகு முதல்வர் அவர்கள், சமூகநலத் துறையின் உதவிகளை ஊனமுற்றவர்களுக்கு வழங்குகிறார் (28.2.97).

நான்காம் அட்டை : கோடையில் இளைப்பாறிக் கொள்ளும் வகைகிடைத்த தமிழகச் சுற்றுலாத்தலங்களில் சில.

**புதுமைப் பெண் யார்?**

***"நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும்***
***நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்***
***திமிர்ந்த ஞானச் செருக்கும்"***

உடையவளாகத் திகழ்கின்றள், அவள். அஞ்சித் தலை குனிந்து செல்வதில்லை. உள்ளத்தில் நேர்மை அரசு செய்வதால் அவள் பார்வை நேராக உள்ளது. அதிலே கள்ள மில்லை; சிறந்த நெறிகளைப் பின்பற்றி அவள் நடப்பதால் நிலத்தில் அவள் யாருக்கும் அஞ்ச வேண்டுவதில்லை. கல்வியினால் வரும் செருக்கும் பெருமிதமும் அவளிடம் நிரம்பி வழிகிறது.

மேலும், இந்நன்னெறியால் அவள் செம்மை மாதர் எனும் நெறியினின்றும் திறம்புவ தில்லை.

ஞானமும் நல்லறமும் வீர சுதந்திரம் பேணும் நற்குடிப் பெண்ணாக அவள் திகழ் கின்றாள். அவளுக்குக் கற்பு என்பது இயல்பான ஒன்று.

மனிதர்களை அமரர்களாக்கவல்ல ஆற்றல் கொண்ட பராசக்தியே தன்னருளால் கன்னிகை யாகி வையத்தை மாற்றிப் புதுமை பொலியச் செய்ய வந்திருக்கிறாள். என்றால் அது மிகையல்ல.

ஆழ்வார்களும், அடியார்களும், நாயன் மார்களும் பெண்மையை மகா சக்தியின் உருவமாகக் கண்டு வணங்கிய பாரம் பரியத்தின் தொடர், பாரதியின் கவிதையிலும் பாய்ந்து, அவர்தம் 'புதுமைப் பெண்'ணிலும் தெய்வத் தன்மையைக் காண வைக்கின்றது அன்றோ!

**செயலும் நன்மையும்**

பேரிருளாகிய அறியாமையில் மூழ்கி அவலமடைந்து வாழ்க்கையில் கலை உணர் வின்றி வாழ்வதை உமிழ்ந்து தள்ளுதல் பெண் ணின் நல்லறமாகும் என்று பாரதியின் உதயக் கன்னி கூறுகின்றாள்...(?) அறிவு கொண்ட மனித உயிர்களை அடிமையாக்க முயல்பவ ராவார் என அந்நங்கை நல்லாள் நவில் கின்றாள்.

உலக வாழ்க்கையின் நுட்பங்களை யெல்லாம் தேடி அறிந்து தேர்ச்சி பெறுவாள் இப் புதுமைப் பெண்! பற்பல நூற்களைக் கற்பாள். தாய் நாட்டில் மட்டுமல்லாது சீர் மிகு நாற்றிசை நாடுகளுக்கும் சென்று அங்கு காணும் புதுமைதனை இவ்வானுதலார் கொணர்ந்து அவற்றைப் பாரதநாடு ஓங்குவதற்காகப் பயன்படுத்தி உழைக்க வல்லவர்கள்.

'நமக்கேன் இப்பணி' என வீட்டில் ஓர் பொந்தில் ஒதுங்கி வாழ்வதை இவ்வீரப் பெண்டிர் ஒழித்துவிடுவார்கள்.

சாத்திரங்கள் பலவற்றையும் கற்று அதன் மூலம் தம் விஞ்ஞான அறிவையும் பெருக்குவர். அந்த அறிவியல் ஆற்றலால் தமது அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளை எளிதாக அமைத்துக் கொள்ள வல்லவர் ஆவர்.

இங்கே மண்டிக் கிடக்கும் மூத்த பொய்மைகளை அழித்து, மூடக் கட்டுகளைத் தகர்த்து எறிந்து விடுவர். மானிடர்களின் பல்வேறு செயல்களையும் காத்துநிற்பார்கள். அச்செயல்களைக் கடவுளின் மனம் மகிழுமாறு இனிமையாகச் செய்வார்கள். அன்பும் அருளும் அறமும் அவர்கள் செயல்களில் ஓடும். ஆண்மக்கள் புகழ்ந்து கொண்டாடும் வகையில் அவர் செயல்கள் அமையும்.

இவையெல்லாம் இளநங்கையின் எண்ணங் களாகப் பாரதியின் சொல் வழியே வெளிப் படுகின்றன.





அவள் கற்பு இயல்பானது. அவள் இரத்தத்துடன் ஊறியது. 'நிலத்தின் தன்மை பயிர்க்குள தாகுமாம்'. எனவே அவள் பெறும் மக்கள் மாண்பிலே உயர்ந்தவராவர்.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள் வதால் இவ்வையம் அறிவிலோங்கித் தழைக் கும். ஏனெனில் நல்லறத்தைத் தன் அணியாகப் பூண்டு பெண்ணுருவில் நிற்பவள் தாய் சிவசக்தியன்றோ!

அறிவுடைய மக்களை அடிமை கொள்ள நினைக்கும் பித்தர்களை நாணம் அச்சம் எனும் பொய் மாயை காட்டிப் பிதற்றும் அறிவிலி களின் கோட்பாடுகளைத் தீயிலிட்டுப் பொசுக் கிட வேண்டும் என அப்பெண் தெய்வம் பேசுவாள்.

***'திறமையால் இங்கு மேனிலை சேர்வோம்;***
***தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம்***
***குறையிலாது முழுநிகர் நம்மைக் கொள்வார்'***

– என வீரமுடன் பேசுவாள்.

'பெண்ணென்றால் பேயுமிரங்காதோ? மாதரன்பு
கூறினால் மனமிளகார் இங்குளரோ?'

– என்ற வகையில் வீண் இரக்கத்தை மட்டும் அவள் எதிர்பார்ப்பதில்லை. தன் திறமைக்கே முதலிடம் வைத்து, தன் பண்பின் திறமறிந்து செயலின் பயனறிந்து போற்ற வேண்டும்; போற்றுவர் என்று புதுமைப் பெண் வியப்புடன் கூறுகின்றாள்.

**புதுமைப் பெண்ணைப் போற்றுதல்**

இங்ஙனம் தாம் படைத்த புதுமைப் பெண் பாரினில் தோன்றி நல்லறங்கள் நடத்தி, வையகத்தை வாழ வைத்து, வெற்றிமுரசு கொட்டவிருக்கும் நன்னாளைத் தம் எதிரில் கண்டு அவ்வெற்றியைப் போற்றுகின்றார், பாரதி.

***'போற்றி தாய் என்று தாளங்கள் கொட்டடா!***
***போற்றி தாய் என்று பொற்குழ லூதடா'***

– எனத் தன் சோதரரையும் உடன் அழைக் கின்றார். பெண்மை வெல்கவெனக் கூத்திடு மாறும் தாளங்கள் கொட்டி, திசைகள் அதிர கொம்புகள் ஊதி இவ்வெற்றியினைக் கொண் டாட அவர் அழைக்கின்றார்.

பெண்மையின் அன்பு வாழ்கவென அமைதியாக ஆடியும், ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்தியும், காதற்கிளியிடம் புகழ்ச்சி கூறியும், கண்ணினைக் காக்கும் இமைபோலக் காதலின்பத்தைக் காத்தும், அவர்களோடு கைகோத்துக் களித்து நின்றாடு வோம் என்று பாரதி அழைக்கின்றார்.

***'போற்றி போற்றி! ஜெயஜெய போற்றி! – இப்***
***புதுமைப் பெண்ணொளி வாழிபல்லாண்டிங்கே!'***

– எனப் பல்லாண்டு பாடிப் போற்று கின்றார்.

'புதுமைப் பெண்ணே! நீ சுதந்திர பேரிகை சாற்றி வந்தனை; மாதரசே எங்கள் சாதி செய்த தவப்பயன் வாழிநீ' என்றும், 'காதல் முத்தம் கொடுக்கும் அமிழ்தமாக' அவளை எண்ணி, 'தையலே வாழ்க பல்லாண்டு' என் வாழ்த்துகின்றார்.

திரௌபதியின் சேலை - துகிலுரியப் புகுந்த கௌரவர் சபையில் கார்மேகக் கண்ணன் அருளால் வளருவதைக் கூற வந்த பாரதியின் மனதில், பெண்ணின் பெருமை தான் முன்வந்து நிற்கிறது. எனவேதான அச்சேலை,...

'தையலார் கருணையைப் போலும் பெண்ணொளி வாழ்த்திடும் பெருமக்கள் செல்வம் பெருகுதல் போலவும்'

வளர்ந்தது எனக் கூறுகின்றார். பெண்மையைக் கண்ணெனப் போற்ற வேண்டியதன் தேவையைத் தன் கவிஞுரும் கவிதையில் வடித்துச் சென்றுள்ள பாரதியின் கனவு நினைவாயிற்று!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : வெ. இறையன்பு, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு [illegible]
தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர் : ஆர். அண்ணாதுரை, உதவி இயக்குநர் : எம். அண்ணாமலை
ஆசிரியர் குழு : கே.டி. புகழேந்தி, ஜி. சேரநாதன், எம்.வி.எம். அசோகன், [illegible] மதிமாறன்,
பி.எல். ராஜேந்திரன், ஜி. பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள் : என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், [illegible]
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், [illegible], சென்னை - 600 002. தொலைபேசி எண் : [illegible]

# ஆசிரியர் மடல்

தமிழக நிதிநிலையறிக்கை வாசிக்கப்படும்போது,
தொலைக் காட்சியில் அது ஒளிபரப்பப்பட்டு,அதை
மாநிலம் முழுவதுமே வியந்து பார்த்து மகிழ்ந்திருக்கிறது.
'சட்ட மன்றம் என்றால் எப்படியிருக்கும்!
'யார் யார் எங்கிருந்து பேசுவார்கள்?'
'இருக்கைகளின் வரிசைகள் எப்படி அமைந்திருக்கும்?'
-என்கிற வியப்புக் குறிகளும்,
வினாக் குறிகளும்,
வாக்களிக்கும் ஒவ்வொரு குடிமகனுடைய இதயத்திலும் குடியிருப்பது
உண்மை.

சட்டமன்றத் தொடர் நடக்கும் போதெல்லாம் மலைப்பாம்பாய் நீளும்
மக்கள் வரிசை, அனுமதிகேட்டுக் காத்திருப்பதைக் காணமுடியும்.
முதலமைச்சர் நிதிநிலையறிக்கையை வாசிக்கும்போது,அந்த நேரத்திலேயே
அதோடு தொடர்புடைய அத்தனைப் பேரும் கண்டும் கேட்டும்
தெரியப்பெற்றிருப்பது, உன்னதமான உற்சாகத்தை
விநியோகித்திருக்கிறது.

நிதிநிலையறிக்கையை வாசிக்கும்போது ஏற்ற இறக்கங்கள் இருந்தன;
ஆனால், நிதிநிலையறிக்கையில் தமிழ்நாட்டின் ஏற்றம் மட்டுமே இருந்தது
என்பதை அதைத் தொலைக்காட்சிப் பெட்டியில் கண்டவர்கள் விழிகள்
வியப்பால் விரிந்தது மூலமே தெரிந்தது!

வாசிக்க முடியாதவர்களும் அறிக்கையைக் கேட்பதற்கொரு வாய்ப்பு;
ஒளி வெள்ளத்தில் மூழ்கிய சட்டமன்றத்தைக் காண்பதற்கொரு வாய்ப்பு;
வாசிக்கப்படுகிற வரிகளை
முதலமைச்சர் உச்சரிப்பிலேயே உணர்கிற சூழல்
சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமே தெரிந்துகொள்ளமுடியும் என்றிருந்த
அதே நேரத்தில், அனைத்து மக்களும் அறிந்திடும் வண்ணம்
பகிர்ந்தளிக்கப்பட்ட பயன்பாடு....

என்கிற வகையில்,தகவல் தருவதிலும் புதுமையான நிகழ்வாக
அமைந்திருந்தது; இந்த நிதிநிலை அறிக்கையை
மாண்புமிகு முதல்வர் தாக்கல் செய்திருந்த பாங்கு !
'தகவல் பெறும் உரிமை' குறித்த உறுதிமொழியைக் கொண்ட
நிதிநிலையறிக்கையைத் தெரிந்துகொள்ள அளித்த வாய்ப்பே அதற்கு
முன்னோட்டமாய்,பழம் மரத்திற்குச் சான்றளிப்பதாய்ப் பரிமளித்தது;
எல்லோருக்கும் பல சன்னல்களைத் திறந்திருக்கிறது;
இனி காற்றும் வரும்: நறுமணமும் வரும் !




ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்ப[illegible] டங்கா
அற்புத வ[illegible]ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.



தூய பட்டு

தூய சரிகை

